
தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி

இரண்டாம் தொகுதி

ட - ஹே



Published by
SANTI SADHANA
(Charitable Trust)
125, Chamiers Road
Chennai - 600 028.

GLOSSARY OF TAMIL INSCRIPTIONS

தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி

VOLUME - II

இரண்டாம் தொகுதி

ட - ஹே

Published by
SANTI SADHANA
(Charitable Trust)
125, Chamiers Road
Chennai - 600 028.

Tamil Dictionary/Glossary on Historical Principles project

முதற் பதிப்பு - 2003 AD
உரிமை பதிவு செய்யப் பெற்றது

First Edition - 2003 AD
Copy right Reserved

Design & Printing:
Sudarsan Graphics
27, Neelakanta Mehta Street
T.Nagar, Chennai - 17.

கிடைக்கும் இடம்
சாந்தி சாதனா
125, சேமியர்ஸ் சாலை
சென்னை - 600 028.
தொலைபேசி: 2435 2745

Books are available at
SANTI SADHANA
125, Chamiers Road
Chennai - 600 028.
Phone:2435 2745

நூன்முகம்

தமிழை வளர்ப்பதையே தம் மூச்சாகக் கொண்ட சான்றோர்கள் பலராவர். அவர்களுள் அமரர் மர்ரே எஸ். இராஜம் செய்துள்ள தமிழ்ப் பணியைப் பாராட்டாதார் யாருமிலர். அவரது அரிய முயற்சியால் புதிய முறையில் 'வரலாற்று முறைத் தமிழிலக்கியப் பேரகராதி' உருவாக்கப்பட்டுத் தமிழுலகின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

அம்முறையில் தமிழ்க் கல்வெட்டுக்களிற் காணப்பெறும் சொல் அகராதித் துறையில் **'அ முதல் ஞெ வரை'யிலான 6814 சொற்களைக்** கொண்ட **முதல் தொகுதி** அண்மையில் வெளியிடப் பெற்றது. அதனைத் தொடர்ந்து **'ட முதல் ஹே வரை'யிலான 7959 சொற்களைக்** கொண்ட **இரண்டாம் தொகுதி** தற்போது வெளியிடப் பெறுகின்றது.

இதுவரை வெளிவந்தவற்றைவிட விரிவான இவ் வகராதியில் கி.பி.400 முதல் 1800 வரையிலான கல்வெட்டுக்களில் காணப்படும் சிறப்புப் பெயர், இடப்பெயர் தவிர்ந்த அனைத்துப் பெயர்களும் முக்கியச் சொற்றொடர்களும் இடம் பெற்றுள்ளன. தமிழ்நாடு, கேரளம், கருநாடகம், ஆந்திரம், இலங்கை, ஒரு சில தென் கிழக்கு ஆசிய நாடுகளில் கிடைத்துள்ள தமிழ்க் கல்வெட்டுக்களில் காணப்படும் பொதுவான சொற்களும் இங்குப் பயன்படுத்தப் பெற்றுள்ளன.

கல்வெட்டுப் **பேரறிஞர் திரு. ஐராவதம் மகாதேவன்** அவர்கள் அண்மையில் வெளியிட்ட மிகப் பழங்கால முதல் கி.பி. 6ஆம் நூற்றுண்டு வரையிலான **தொன்மைத் தமிழ்க் கல்வெட்டுக்கள்** என்ற நூலிலிருந்து அவர் அனுமதியுடன் சில சொற்கள், இடங்களுடன் இணைப்பு 1 ம், கூடுதலான சில சொற்களைக் கொண்ட இணைப்பு 2 ம் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.

இச் சீரிய பணியில் நெடுங்காலமாகத் தம்மை அர்ப்பணித்துக் கொண்டு பணியாற்றி இந் நூல் தற்போது வெளிவரத் துணை புரிந்த தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக் கல்வெட்டுத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள அறிஞர் திரு. Y. சுப்பராயலு அவர்களுக்கும் அவருடன் சேர்ந்து செயலாற்றிய புலவர் கா. சண்முகம், திரு. ஆர். ஆளவந்தார் அவர்களுக்கும் சாந்தி சாதனா நிறுவனத்தின் நன்றி என்றென்றும் உரித்தாகுக. இந் நூல் அச்சாகுங்கால் பிழை திருத்தம் செய்து உதவிய அனைவருக்கும் இந் நிறுவனம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

சாந்தி சாதனா
125(64), சேமியர்ஸ் சாலை
சென்னை - 600 028.

கிரந்த எழுத்து ஒலிபெயர்ப்பு முறை
(Transliteration scheme for Grantha letters)

கிரந்தம்	தமிழ்	Roman
𑌕	க	ka
𑌖	க$_2$	kha
𑌗	க$_3$	ga
𑌘	க$_4$	gha
𑌚	ச	cha
𑌛	ச$_2$	chha
𑌜	ஜ	ja
𑌝	ஜ$_2$	jha
𑌟	ட	ṭa
𑌠	ட$_2$	ṭha
𑌡	ட$_3$	ḍa
𑌢	ட$_4$	ḍha

கிரந்தம்	தமிழ்	Roman
𑌤	த	ta
𑌥	த$_2$	tha
𑌦	த$_3$	da
𑌧	த$_4$	dha
𑌪	ப	pa
𑌫	ப$_2$	pha
𑌬	ப$_3$	ba
𑌭	ப$_4$	bha
𑌶	ச$_0$	śa
𑌷	ஷ	sha
𑌸	ஸ	sa

ட$_3$

ட$_3$மருகம் (பெ) உடுக்கை (1014) *கபாலமும் யாசமும் ட$_3$மருகமும்* (SII,ii,1.)

த்

த்யாக$_3$ம் (பெ) பிறர் பொருட்டு தன்நலம் இழத்தல்; (991) *தேவருடை ஸ்ரீ கார்யத்துக்காகத் தன்னை ஆன்மத்யாக$_3$ம் செய்த இவனுக்காக* (SII,xiii,131.)

த்ராஸம் (பெ) மாணிக்கத் தன்மைகளுள் ஒன்று (1015) *மாணிக்கம் குழிவும் ப்ரஹரமும் வெஜ்ஜமும் லசுநியும் த்ராஸமும் கற்பற்றும் இடையன* (SII,ii,7.)

த்ரி சரம் (பெ) ஒரு நகை (1514) *பொற்கட்டு 160ம் உட்பட தூக்கம் 250க்கு வன்னசர த்ரிசரம் 1ம் மாணிக்கம் 100ம்* (TDI,iii,66.)

த்ரிஸந்தி (பெ) காலை உச்சி அந்தி என்னும் மூன்று பொழுதுகள் (997) *இத்த்ரிஸந்தியூந் திருவமுது காட்டுவுதாகவும்* (SII,vii,32.)

த்ரிஸர வடம் (பெ) ஒரு நகை (1573) *கிரீடம் 1க்கு தூக்கம் 3308 த்ரிஸரவடம் 1க்கு முத்து 1370* (TDI,iii,35.)

த்ருப்தி (பெ) மன நிறைவு (894) *இவர்களுக்கு த்ருப்தியாமளவும்* (SII,iii,1.)

த்ரைராஜ்யம் (பெ) சேர சோழ மற்றும் பாண்டிய அரசுகள் (866) *த்ரைராஜ்ய வ்யவஹாரத்துக்கு* (TAS,i,p.1-14.)

த்வாரஸ்த$_2$ன்மார் (பெ) வாயில் காவலர் (1607) *கல்மண்டபமும் த்வாரஸ்த$_2$ன்மாரும் விளக்கு மாட மும் வேலிக்கல்ப்பிரையும் கூட* (TAS,i,p.175-80.)

த

தக்க (வி) ஏற்ற (832) *தக்க சீர் நன் னாமந்தான் பெற்ற எட்டி* (SII,xiv,44.)

தக்கது (வி) உகந்தது (1237) *மீன் பொங்கச் சாந்திய ஆபரணந் தக்க தென வழங்கி* (SII,v,431;EI,xxii,10.)

தக்கவர் (பெ) தகுதியுடையவர் (1014) *அவ்வவர் நியாயங்களுக்குத் தக்கவரில் அவ்வவர் நியாயங்களிலாரே* (SII,ii,66.)

தக்கோன் (பெ) தகுதி வாய்ந்தவன் (905) *சாத்தம் படாரனெனப் பியரிய தக்கோனு மிக்கோங்கு* (TASSI,1962-65,p.1-31.)

தகட்டுக்குழை (பெ) ஒரு நகை உறுப்பு (1010) *முத்தில் கோத்த மாங்காய் இரண்டும் அரசிலை ஒன்றும் தகட்டுக்குழை நாலும்* (SII,viii,234.)

தகடு (பெ) உலோகத் தகடு (991) *செம்பிநாற் செய்த பாத பீடத்திந் மேற் போர்த்த தகடு நாலு மணியும் உட்படப் பொன் நிறை* (SII,xiii,144.)

தகத்தும் (வி) உடைத்தும் (1168) *இவை தண்டுமிடத்து வெண்கலம் பறித்தும் மண்கலம் தகத்தும் கொள்ள* (SII,viii,291.)

தகர் (பெ) ஆட்டுக் கிடா (953) *சாவாமூவாபேராடு 96ம் தகர் 1ம் கொண்டு* (SII,xiii,60.)

தகர்க் கிடாய் (பெ) பொலிக்காக விட்ட ஆட்டுக்கிடா (1134) *செவ்வரி ஆடு தொண்ணூறும் தகர்க் கிடாய் ஒன்றும்* (SII,v,645.)

தகற்று வரி (பெ) ஒரு வரி (1344) *நல்லெருது நற்கிடா தகற்றுவரி விலக்கடைப்பு* (ARE,1905,424)

தகும் (வி) தக்கது (1012) *நெஞ்சத்துள்ளத் தகும்* (SII,vii,863.)

தகைமை (பெ) பெருமை (1044) *தந் குலத்தவநிவர் நந்கு தரு தகைமையில் அரசியலுரிமை* (SII,v,633.)

தங்கள் (பெ) உங்கள் (789) *நறையூர் நாட்டு நாட்டார் காண்க தங்கணாட்டுத் தண்டத்தோட்டத்துக்கு* (SII,ii,99.)

தங்காத (வி) தடைப்படாத (1024) *கோவிந்தசந்தன் மாவிழிந்தோடத் தங்காத சாரல் வங்காள தேசமும்* (SII,i,68.)

தங்கேதம் (பெ) உடன்படிக்கை (1100) *திருவடி நாடு வாணருளிய நாள் எழுதிச்ச தங்கேதமாவது* (TAS,viii,p.39.)

தங்கை (பெ) இளைய சகோதரி (807) *இவள் தங்கை இரையானாச்சிய்* (SII,xiv,38.)

தச்ச (வி) சேர்த்த (944) *தீபமாலை ஒன்றினுள் தச்ச விளக்கு பதினேழு* (SII,xxiii,227.)

தச்ச (வி) பதித்த (991) *பள்ளித் தொங்கல் 1 இதில் தச்ச மொட்டொன்று பறளை 1* (SII,xiii,144.)

தச்சக் கூலி (பெ) தச்சர்களுக்கு இறுக்கும் கூலி (1251) *திருமதிள் திருப்பணிக்கு தச்சக் கூலிக்கும் உடலாக விட்ட* (SII,viii,88.)

தச்சத் துலாம் (பெ) நிறுத்தல் விற்பனை பேரில் ஒரு வரி (?) (1329) *காணிக்கை வேண்டு கோள் வரி மலை அமஞ்சியும் அமஞ்சி தச்சத்துலாம் வெட்டியும் இருப்புக் கட்டி பத்திவரி இவை நாலுவரியும்* (SII,iv,287.)

தச்சர் (பெ) மரவேலை செய்பவர்கள் (885) *ஒரு குடி தச்சரும்* (TAS,ii,p.80-82.); (700) *அரிகேசரிநல்லூர் தச்சன் சடயன் பூதன்* (AVNM,7,p.13-14)

தச்ச ஆசாரி (பெ) (கல்) தச்சு வேலை செய்பவன் (1014) *சிலாலேகை கல்லில் வெட்டிநேந் இவூர் தச்ச ஆசாரியாந முந்நூற்றுவ கருணாகர ஆசாரியநேந்* (EC,ix,Cp.88.)

தச்சாசார்ய்யம் (பெ) தலைமைத் தச்சன் பணி (1014) *தச்சாசார்ய்யம் ஒன்றுக்குப் பங்கு ஒன்றரையும்* (SII,ii,66.)

தச்சு (பெ) தச்சர் செய்யும் ஊழியம் (1388) *ஊழியமாகக்கொள்ளும் எடுத்தளவு விகுதி தாப்படியும் வெட்டி வீடாரம் நிமந்தம் தச்சு ஆளமஞ்சி* (SII,viii,156)

தச்சு (பெ) தச்சு வேலை (1014) *தச்சு ஒன்றுக்குக் குணவன் மதுராந்தகனான நித்தவினோதப் பெருந்தச்சனுக்குப் பங்கு* (SII,ii,66.)

தச்சுத் தாழ்வு (பெ) தச்சர் மீதான ஒரு வரி (1265) *பழத்தேவை வெட்டி நிலையாள் தச்சுத்தாழ்வு ஆள் அமஞ்சி நாட்டு விநியோகம்* (SII,xvii,143.)

தச்சுத் தேவை (பெ) (=தச்சுத் தாழ்வு): தச்சர் செய்யும் கட்டாய ஊழியம் (1300) *ஆட்த்தேவை மதிட்தேவை தச்சுத் தேவை ஆனைச்சாலை குதிரைப்பந்தி* (SII,iv,369.)

தச்சுமை (பெ) (=தச்சுத் தேவை) (1523) *ஆயம் தலையாரிக்கம் தமை தச்சுமை தோல்லும் குசமும்* (AVNM,4,p.41-42)

தசவந்தம் (பெ) ஒரு வரி (1066) *தறிப்புடவையும் தசவந்தமும் வேலிக்காசும் சேவகக்காசும்* (SII,v,976.)

தஞ்சம் (பெ) புகலிடம் (1066) *தோளரியேறு தஞ்ச மாரிதற்குந் தலைமகளே* (SII,iv,167.)

தஞ்சிற்றப்படிகள் (பெ) தன் தந்தையின் தம்பி (637) *கோவலூர் மேல் வந்து தஞ்சிற்றப்படிகளை* (CHHS,1971/69.)

தஞ்சிற்றப்பனார் (பெ) தன் தந்தைக்குத் தம்பி (771) *தஞ் சிற்றப்பனார் மக்களுக்கு ஆறும்* (CHHS,1971/63.)

தட்டக் காணம் (பெ) தட்டார்கள் செலுத்தும் வரி (750) *தறியும் கூலமும் (த்) தட்டக் காணமும்* (EI,v,8.)

தட்டம் (பெ) நிலத்தில் வீழ்ந்து வணங்குகை (?) (731) *ரக்ஷித்தாரடி என்றலை மேலன கால் கடு தட்டம்* (SII,viii,331.)

தட்டம் (பெ) ஒரு பாத்திரம் (921) *தண்ணீரமுது செய்ய வைத்த வெள்ளித் தட்டம்* (SII,xix,354.)

தட்டம் (பெ) தாம்பாளம் (1014) *ராஜராஜ தேவர் சிறுதநத்துக் குடுத்த பொன்னின் தட்டம்* (SII,ii,1.)

தட்டர் (வி) களவாடியவர் (745) *இப்பொன் றட்டர்க் குலம் படாது* (TAMIZ,1970, p.122.)

தட்டழி (பெ) தப்பட்டை வாத்தியம் (866) *தட்டழி மத்தளி கரடிகை தாளம்* (TAS,i,p.1-14.)

தட்டழி கொட்டி (பெ) தட்டழி வாத்தியம் வாசிப்பவர் (789) *தட்டழிகொட்டிகளுக்குப் பங்கொன்றும்* (SII,ii,99.)

தட்டழி புறம் (பெ) தட்டழி வாத்தியம் வாசிப்பவர்களுக்குக் கொடுத்த நிலம் (930) *தட்டழி புறம் உவச்சர்க்கு பூதி ஆதித்த பிடாரியார் சேதுகுடுத்தது* (SII,viii,629.)

தட்டளி கொட்டி (பெ) (= தட்டழி கொட்டி) (887) *தட்டளி கொட்டிகளுக்குக் கொற்று நெல்லு* (SII,xiv,164.)

தட்டற (வி) முட்டின்றி (1261) *பாலும் பணியுந் தேவைத் தட்டறச் செய்யக் கடவர்கள்ளாகவும்* (SII,xii,213.)

தட்டாணி (பெ) நகையின் ஓர் உறுப்பு (1500) *வன் படையார் தேவியர் தம் மங்கலனாண் தட்டாணிக்கன் புரியப் வோடாணியாகுமேயின்* (IPS,679.)

தட்டா பாட்டம் (பெ) பொற்கொல்லர்கள் மீதான வரி (928) *தறிதர(கு) தட்டாபாட்டமும்* (SII,xix,414;IPS,63.)

தட்டார்ப் பணி (பெ) பொன் வேலை (1016) *ஒலோக மஹாதேவி ஈச்வரத்து தட்டார்ப் பணிசெய் காணி* (SII,v,515.)

தட்டார்ப் பாட்டம் (பெ) பொற்கொல்லர் செலுத்தும் வரி (1008) *தரகுந் தட்டார்ப் பாட்டமும்* (EI,xxii,34.)

தட்டார் பேரில் வரும் ஊசிவாசி (பெ) எழுத்துப்பொறிக்கும் தட்டார் பொருட்டுச் செலுத்தும் வரி (1344) *ஊர்கணக்கர் தட்டார் பேரில் வரும் ஊசிவாசி வழிநடைக்கிடும் பணம்* (ARE,1905,424)

தட்டாரக் காணி (பெ) பொற் கொல்லத் தொழில் செய்வோரின் உரிமை நிலம் (1016) *செம்பியன் மாதேவிப் பெருந் தட்டானுக்கு ஒலோகமஹாதேவி ஈச்வரம் சுட்டிய தட்டாரக் காணியாக வெட்டிச்சு* (SII,v,515.)

தட்டான் (பெ) பொற்கொல்லன் (793) *தட்டான் மாதந் மகந் அரிதீரன்* (SII,iii,42.)

தட்டான்மை (பெ) பொற்கொல்லத் தொழில் (1014) *கண்காணித் தட்டான்மை செய்ய* (SII,ii,66.)

தட்டிறை (பெ) செலுத்தாமல் நின்றுபோன வரி (1114) *யாண்டு 43 ஆவது கடைமையில் தட்டிறைக் குடலாக வாங்கிக் கடமைக்கு வைத்து* (SII,viii,324.)

தட்டு (பெ) செலுத்தாத தொகை (1124) *கடமைத் தட்டுப் போக்கறுக்க வேணுமென்று* (SII,viii,303.)

தட்டு (வி) தொடும் (1300) *தேவர்பதி தட்டோங்கு மாடவீதிப் பதிநெட்டு பட்டணமும்* (AVNM,6,p.36-40)

தட்டு (பெ) ஒரு பாத்திரம் (898) *பாழி நக்கன் குடுத்த பள்ளக் குழித்தட்டு இரண்டு* (SII,viii,560.)

தட்டுக் கடமை (பெ) ஒரு வரி (1547) *தட்டுக்கடமை யாயுள்ளதும் இடங்கைப் பணமும்* (TAS,ix, p.16-18.)

தட்டுக்காயம் (பெ) தட்டார்கள் செலுத்தும் வரி (789) *குசக்காணமும் தட்டுக்காயமும்* (SII,11,99.)

தட்டு திருத்த (வி) தட்டுக்களைச் சுத்தஞ் செய்ய (1544) *பந்தம் குடை பிடிக்கிற கூலிக்கு பணம்3 தட்டு திருத்த பணம் 1/2* (TDI,v,19.)

தட்டு புழுகு (பெ) (=புழுகு) (1578) *இந்த படி நெய்வேத்தியமும் தட்டு புழுகும் சாத்தி* (SII,viii,341.)

தட்டும் (வி) தாளம் போடுகையும் (1120) *செழுநில மேத்தக் கொட்டுந் தட்டுங் குலவி நிலவிய விருப்பு மடியார் மேவி முன் சிறக்க* (EC,x,sd.9.)

தட்டுள்ளவை (பெ) குறைபாடுகள் (1205) *ஊராரைக் கேட்ட இடத்துத் தட்டுள்ளவை பரிசரித்துக் கொண்டருளுமென்று* (IPS,159.)

தட்டொலி (பெ) ஒரு வரி (1300) *தறி இறை செக்கு இறை தட்டொலி தட்டார்ப் பாட்டம் ஏர்வரி இனவரி* (IPS,559.)

தட்டோடு (பெ) தட்டையான கூரை ஓடு (984) *தட்டோட்டால் மாடமாளிகை எடுக்கப் பெறுவதாகவும்* (SII,xix,344.)

தட (உ) நீண்ட (771) *சிலைத்தடக்கைக் கொலைக் களிறு* (EI,xvii,16.)

தட (உ) மிக்க (1012) *தருத் தண்டலைத் தட நீர்* (SII,vii,863.)

தடம் (உ) பரந்த (1220) *தடங்கரைப் பாற்கடல் பிரிந்த* (CHEN,xiv,p.362-64.)

தடம் (பெ) பானை (886) *தடமிரண்டு கடாரம் மூன்று* (SII,xiii,255.)

தடம் (உ) பெரிய (921) *தடம் பூதம் பணி கொண்டு தடாகங்கள் பல திருத்திஉம்* (SII,iii,206a.)

தடமலர் (பெ) தாமரை (1012) *தடமலர்ப் பொய்கைப் போதகர் பழனப் புதுமலர்ச் சோலை* (SII,vii,863.)

தடமார (வி) மாற்ற (1043) *இதினகத்து ஊராளர் தடுக்கவுந் தடமாரவும் பீடிகை கெட்டிலும்* (TAS,viii,p.39-40.)

தடவல் பளிங்கு (பெ) பளிங்கு வகை (1232) *சிலந்தி 1 விதரம் 69 தடவல் பளிங்கு 1ம் ஆக* (SII,viii,103.)

தடவி (வி) பதித்து (970) *வாஹு வலையம் 2க்கு தடவிக் கட்டின மாணிக்கம் 2ம்* (TDI,i,8.)

தடவி (வி) பதித்து (1014) *சங்கிட்டு அடைத்த கற்கண்டு ஒன்றில்த் தடவிக் கட்டின பளிங்கு இரண்டும்* (SII,ii,89.)

தடவிட்டு (வி) எல்லை குறித்து (1600) *நஞ்சை புஞ்சை நாற்பாற் கெல்லையும் தடவிட்டு சந்திராதித்த வரையும் நடத்த சீமை பல பட்டடையும் கூடி* (SII,vi,65.)

தடவு (வி) தொடும் (811) *சோலை திகழ் வானந் தடவு* (SII,xiv,41.)

தடாகம் (பெ) குளம் (697) *இவ்வூர் பரமேச்சுர தடாகத்துக்கு* (SII,i,151;EI,xvii,22.)

தடி (பெ) நான்கு வரம்புகளுக்கு உள்பட்ட வயல் துண்டு (809) *கருமத்துடவை தடி 2* (SII,xiv,40.)

தடிந்து (வி) வெட்டி (1036) *கதிர் முடித்தலை தடிந்து முனைவயிற் பகைத்து* (SII,iv,223.)

தடிவழி வாரிய பெருமக்கள் (பெ) வயல் கணக்கை நிர்வகிக்கும் குழு (959) *தடிவழி வாரிய பெருமக்களும் பட்டர்களும்* (SII,iii,156.)

தடுக்கவும் (வி) இடையூறு செய்யவும் (1043) *இதினகத்து ஊராளர் தடுக்கவுந் தடமாரவும் பீடிகை கெட்டிலும்* (TAS,viii,p.39-40.)

தடுக்கில் (வி) தடை செய்தால் (982) *பெருமக்கள் தடுக்கில் இருநூறு பொன்...* (SII,iii,90.)

தடுத்தார் (பெ) இடையூறு செய்தார் (873) *தனிப் புருஷராயும் தடுத்தாரை* (SII,xix,90.)

தடுத்தும் (வி) தடை செய்தும் (885) *துலாக் கூலி தடுத்தும்* (TAS,ii,p.80-82.)

தடுப்பார் (பெ) இடையூறு செய்வார் (946) *தண்ட மறுத்துத் தனிச்சுத் தடுப்பாரையும்* (SII,iii,110.)

தடுமாற (வி) தண்டிக்க (849) *பிழை சொல்லியும் மிவகளைத் தடுமாறப் பெறார்* (TAS,ii,p.67-68.)

தடை கிடந்து (வி) செயலற்று (1245) *பிணங்கி நெடுங்கால் தடை கிடந்து கீழாண்டு உள்ள நாளில் இடையில் பயிரேறின ஆண்டுகளில்* (IPS,340.)

தடை இடை (பெ) இடையூறு (1646) *இதுகள்க்கு தடை இடை விலக்கு வீரபதம் வரும் காலம்* (TAS,iv,p.152-60.)

தண் (இ) குளிர்ந்த (771) *தண்ணாகம் மலர்ச் சோலை* (EI,xvii,16.)

தண்ட (வி) வசூல் செய்ய (1000) *இருபத்தைங் கழஞ்சு பொன் தண்ட அறுநூற்றுவர்க்கு* (SII,v,784.)

தண்டக் குற்றம் (பெ) அபராதத் தொகை மூலம் வரும் வருவாய் (1003) *இவ்வூர்த் தண்டக் குற்றமும் பீடிலிகை வரியும் கொண்டு* (SII,xvii,243.)

தண்டங்குற்றம் (பெ) (=தண்டக்குற்றம்) (966) *தண்டங்குற்ற முள்ளது* (SII,iii,212ab.)

தண்டநாயகக் கண்காணி (பெ) சோழர் படைத் தலைமை அலுவல்களில் ஒன்று (1055) *பசு நடை உரு அறுபத்து மூன்றும் தண்ட நாயக கண்காணி*

சோழ மண்டலத்து பாண்டிகுலாசனி வளநாட்டு (EC,x,Kl.107.)

தண்ட நாயகம் (பெ) படைத் தலைமை (1001) *தண்ட நாயகஞ் செய்கின்ற சோழ வேளார்* (SII,xvii,323.)

தண்டப்பட்டும் (வி) அபராதம் செலுத்தியும் (878) *இத்தண்டப்பட்டும் மேற்ப்பட்ட பலிசை வழுவாமே* (SII,xii,100.)

தண்டப்படுவது (வி) அபராதம் செலுத்த வேண்டியது (844) *நூறு திநாரந் தண்டப்படுவது* (TAS,ii,p.13-14.); (889) *அன்றாள் கோவுக்கு காற்ப் பொன் றண்டப் படுவார்* (SII,xii,106.); (793) *கோயிலுக்கு ஆயிரம் காணம் தண்டப் படுவோம்* (SII,iii,42.)

தண்டப்பொன் (பெ) அபராதமாகச் செலுத்தப்படும் பொன் (932) *நகரவாரிய கூட்டஞ் சாற்ற வாராவிட்டாரை வர கொண்ட தண்டப்பொன்* (SII,v,588.)

தண்டம் (பெ) படை (700) *கோசரும் மழுவரும் வடமா தண்டத்தோடு ஊரன் இருக்கை ஏறி* (AVNM,10,p.07)

தண்டம் (பெ) அபராதம் (745) *கோஇற்கு நாள்வாயொரு காடி நெற்றண்டம்* (TAMIZ,1970,p.122.)

தண்டம் கொண்ட (வி) அபராதம் பெற்ற (1005) *நம்பிராட்டி வாராவிட்ட குற்றத்தால் தண்டம் கொண்ட பொன்* (SII,iv,391.)

தண்டம் படுவிது (பெ) அபராதம் செலுத்துவது (1000) *சாந்தியடிகள் குறவாகில் தண்டம் படுவிது* (TAS,ii,p.173-207.)

தண்டருளி (வி) படையைச் செலுத்தி (1012) *மண்டலந் தொழ வீழ மண்டலமுங் கொண்டு தண்டருளிப் பண்டு* (SII,vii,863.)

தண்டல் தொகை (பெ) ஒரு வரி (1449) *நெல்முதல் பொன்முதல் செக்கிறை தண்டல் தொகை நல் எருது மாதவழிமுறி புறக்குடிகாரியம்* (IPS,791)

தண்டலில் கடமை (பெ) வசூலிப்பவர் பொருட்டு செலுத்தும் ஒரு வரி (1069) *வேலிக்காசும் தண்டலில் கடமையும் வலங்கை இடங்கை மகண்மை யுள்ளிட்ட அந்தராயத்துக்கு* (SII,viii,4.)

தண்டல் இலக்கை (பெ) வரி வசூலிப்போர் தங்க வசதி செய்யும் பொருட்டு வாங்கும் வரி (1289) *கூற்றிலக்கை கடைக்கூட்டிலக்கை தண்டல் இலக்கை விடைப்பேர் மாதப்படி உள்ளிட்ட அனைத்தாய வற்கமும் உட்பட* (SII,vii,793.)

தண்டலை (பெ) சோலை (1012) *மென் கருப்பாலைத் தலைத் தருத் தண்டலைத் தடநீர்* (SII,vii,863.)

தண்டவந்தார் (பெ) வசூலிக்க வந்தவர்கள் (938) *இவ்வெண்ணை தண்டவந்தார்க்கு நிசதம் இரண்டு சோறு குடுப்போமானோம்* (EI,xxvi,29a.)

தண்டவாணி (பெ) பொன்னின் மாற்று அறிய உதவும் ஆணி (1014) *தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன் பதின் கழஞ்சே* (SII,ii,3.)

தண்ட₃முண்டிகை (பெ) அபராதம் (?) (1282) *தண்ட₃முண்டிகைய் ஸந்தாநமற்ற வஸ்துக்கள் தாங்களே வாங்கி* (EC,ix,Dv.28.)

தண்டி (வி) வசூலித்து (985) *இவ்விருவரையும் திங்கள் தோறும் தண்டி அட்டுவிச்சு* (SII,xix,116.)

தண்டிக்கப்படுவாராக (வி) தண்டனைக்கு உட்படுவாராக (765) *கோவினாற் றண்டிக்கப் படுவாராகவும்* (EI,xxxvi,20.)

தண்டிக் கொள்ள (வி) வசூலித்துக் கொள்ள (871) *பந்மாஹேச்வரர் தண்டிக் கொள்ள ஒட்டிக் குடுத்தோம்* (SII,xii,61.)

தண்டிகைக் கொம்பு (பெ) ஒரு வரி (1541) *கஸ்தூரி கற்பூரம் பட்டு நூல் இரச குடுக்கை வெள்ளாட்டி தண்டிகைக் கொம்பு சல்லீசவரம் ... இவையெல்லாம் கூடின தீர்வையில்* (SII,vii,21.)

தண்டிகை மானியம் (பெ) பல்லக்குப் பயன் படுத்த விட்ட மானிய நிலம் (1549) *தொண்டைமானார் தண்டிகையும் குடுத்து தண்டிகை மானியமாக* (ARE,1922,005)

தண்டிப்பார் (வி) தண்டனை விதிப்பார் (877) *மூலப்பட்டாரயைரே தண்டிப்பாராக ஒட்டிக்குடுத்தோம்* (SII,vi,370.)

தண்டிப்பித்து (வி) தண்டனை வசூலிக்கச் செய்து (923) *இச்சுட்டப்பட்ட தண்டிப்பித்து பின்னையும் இரு நிலஞ் சுட்டி வந்தது* (SII,xix,408.)

தண்டிப்புகுந்த (வி) வசூல் செய்த (1300) *சமயக்கணக்கனும் பல வட்டைகளிலும் தண்டிப்புகுந்த முதல் கொண்டு* (AVNM,6,p.36-40)

தண்டிறை (பெ) ஒரு வரி (1222) *தண்டிறை தறி இறை தட்டார்ப் பாட்டம்* (EC,x,Mb.212.)

தண்டீச்$_0$வரர் (பெ) சண்டிகேசுவரர் (973) *தண்டீச்$_0$வர ரக்ஷை* (SII,xiii,271.)

தண்டு (பெ) வசூலிப்பவன் (1300) *பணியால் உள்ளூர் தண்டு செல்கலுடையான் உத்தமபிரியனெழுத்து* (SII,vi,56.)

தண்டு (பெ) ஊன்று கோல் (805) *நைய்யாதேய் தண்டார் மூப்பு வந்து* (SII,xii,40;EI,xi,15.)

தண்டு (பெ) வரி வசூல் (927) *சோழகோனார் தர நின்ற தண்டுக்குப் போக ஒடத்தட்டின நானூற்று கலத்தால் 12 வண்ணத்தால் பொன் ஆக* (SII,xvii,643.)

தண்டு (பெ) படையெடுப்பு (995) *கொல்லமும் கலிங்கமும் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளர் ஊழியில்* (CHEN,xxv,p.34-42.)

தண்டுக்காணிக்கை (பெ) ஒரு வரி (1485) *குதிரைக் காணிக்கை தண்டுக்காணிக்கை னாட்டு வினியோகம்* (ARE,1916,238)

தண்டுக (வி) வசூலிக்க (1002) *வரிசை விட்டபடி விற்றுக் காசு தண்டுக வென்றருளிச்செய்து* (SII,v,1409.)

தண்டுகிற (வி) (1300) *வன்னியர் பற்றி கடமை குடிமை தண்டுகிற இடத்து* (AVNM,3,p.27-28)

தண்டு நிக்க (வி) போரிட (879) *மியறு நாட்டுக் காவன்னூர் பிருதிகங்கரையர் தண்டு நிக்க வாணரையர் படை* (EI,xxiii,22.)

தண்டுவார் (பெ) வசூல் செய்பவர் (967) *இந்நெல் தண்டுவார்க்கு மெக்கண்டு சோறு குடுப்போமானோம்* (EI,vii,20h.)

தண்டெடுப்பார் (பெ) பல்லக்குச் சுமப்பவர் (1453) *நம் வீட்டில் குடவர் கோவணர் பூவிடுவார் தழையிடுவார் தண்ணீர் சுமப்பார் தண்டெடுப்பார் அனுக்கர் கணக்கர் மற்றும்* (CHEN,v,p.437-41.)

தண்டேச்$_0$வர விலை (பெ) சிவன் கோயிலுக்கு சேரவேண்டிய விலை முதல் (1197) *இவ்வூர்க்குத் தண்டேச்$_0$வர விலையாக நிச்சயித்த அன்றாடு நற்பழங்காசு 200* (SII,v,1359.)

தண்ணளி (பெ) கருணை (771) *தண்ணளிச் செங்கோற்றென்ன வானவன்* (EI,xvii,16.)

தண்ணாகம் (பெ) குளிர்ந்த புன்னை மரம் (771) *காவிரியின் றென்கரை மேற் றண்ணாகம் மலர்ச் சோலை* (EI,xvii,16.)

தண்ணாயக்கர் மகமை (பெ) கோட்டைத் தலைவரான தண்ணாயக்கர் பொருட்டு வாங்கும் ஒரு வரி (1388) *தலையாரி மேர்வை தண்ணாயக்கர் மகமை வெட்டி வரி நல்லெருது* (ARE,1934,63)

தண்ணிப்பட்டி (பெ) குடி தண்ணீர் வழங்கக் கொடுத்த நிலம் (965) *இவ்வூர் அம்பலம் எடுத்துத் தண்ணிப்பட்டி ஆக யாங்கள் விற்றுக்குடுத்த* (SII,iii,188.)

தண்ணிய (வி) மதிப்பில் குறைந்த (1014) *தண்டவாணிக்குக் கால் மாற்றுத் தண்ணிய பொன்* (SII,ii,3.)

தண்ணிழல் (பெ) குளிர்ந்த நிழல் (905) *மேகஜாலி விதானத்தின் றண்ணிழற் கீழ் ஸஹஸ்ரப$_2$ண மணி கிரணம் விளக்கிமைப்ப* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

தண்ணீர் (பெ) நீர் (691) *கூரத்து மண்டகத்துக்கு தண்ணீர்க்குந் தீக்கும்* (SII,i,151;EI,xvii,22.)

தண்ணீர் கலம் (பெ) நீர்ப்பானை (1036) *தண்ணீர் கலம் கொடு வருவானுக்கு நெல் நானாழியும்* (SII,iv,223.)

தண்ணீர்ப் பந்தல் (பெ) வழிச் செல்வோருக்குக் குடிநீர் வழங்கும் அறச்சாலை (898) *தண்ணீர்ப் பந்தல் வைத்தட்டுவதாக* (SII,vi,360.)

தண்ணீர் யடுப்பான் (பெ) தண்ணீர் ஊற்றுபவன் (1188) *அய்யன் கோயில்க்கலத் தண்ணீர் யடுப்பானும்* (TAS,iv,p.22-65.)

தண்ணீர் அட்டுவார் (பெ) நீர் வார்ப்பவர் (789) *அம்பலந் தண்ணீரட்டுவார்க்கும்* (SII,ii,99.)

தண்ணீர் அமுது வழி திருத்து நாள் (பெ) திருவிழாக்களில் ஒன்று (1520) *திருத்தேர்க்கு கிடைப்படி 1 தண்ணீர் அமுதுவழி திருத்துநாள் ஆழ்வார் திருமாளிகைக்கரை மண்டபத்தில் கிடைப்படி 1* (TDI,iii,142.)

தண்பொருநம் (பெ) தாம்பிரபரணி ஆறு (950) *வாழைக் கோட்டுப் பொழிபூடேய் தண்பொருநம் எய்த வந்து* (TASSI,1962-65,p.32-52.)

தணந்த (வி) பிரிந்த (950) *செய்புகத் தணந்த காலின் செந்நடுவேய் வடக்கு நோக்கி* (TASSI,1962-65,p.32-52.)

தணல் (பெ) நெருப்பு (1147) *வீசு தணலும் மேதினி வளமும்* (SII,v,643.)

தணியாதது (வி) அடங்காதது (1200) *பதி கொண்ட வாணாதிபர் தணியாத தென் கொல்* (SII,vii,123.)

தணியும் (வி) தாழும் (833) *நெடுமாடம் பொலிந்திலங்க முகிறணியும்* (SII,xiv,44.)

தத்தமக்கு (பெ) அவர் அவர்க்கு (1100) *பதினாழிச் சைய்து மோரும் கொண்டு வந்து தத்தமக்கு பட்ட நாள் கொண்டு வந்து* (TAS,v,p.34-37.)

தத்து (வி) தாவிச் செல்லுகின்ற (1068) *குசை கொள் தத்து மாபுரவி* (EI,xxi,38.)

தத்துவ நெறி (பெ) முறைப்படி (1012) *ராஜராஜன் றன்னவை முன்னற் றத்துவ நெறியிலறங்கள் யாவையும்* (SII,vii,863.)

தத்துவன் (பெ) கடவுள் (1000) *தயங்கிய சோதியுந் தானாந் திருமலைத் தத்துவன்றாள்* (SII,iv,167.)

ததைந்த (வி) நிறைந்த (1012) *தந்தன குறுணி முற்றதைந்த நானாழியு* (SII,vii,863.)

தந்ததி (பெ) சந்ததி (951) *இப்பூமி எல்லாம் உழவுமங்கலத்தவகள் தந்ததியில்* (TAS,ip.288-89;TAS,v,p.6-7.)

தந்தம் (பெ) யானைக்கொம்பு (1008) *தந்தக்கால் பள்ளிக் கட்டில் 1ம்* (SII,v,638.)

தந்தமை (வி) கொடுத்தமை (929) *தேவகாரியமுள்ளதுஞ் செய்து தந்தமைஇல்* (SII,xiv,74.)

தந்தயார் (பெ) அப்பா (900) *தேவஞ் சேந்தன் தந்தயார் காவிதி தேவனாரை* (SII,v,387.)

தந்தாம் (பெ) அவரவர்கள் (1250) *தேசாந்திரங் களிற் போன இவர்கள் தந்தாம் ஊர்களும் காணிகளும் மனைகளும்* (SII,xii,129.)

தந்திரச்சிலவு (பெ) அர்ச்சனைச் செலவு (?) (1619) *நம்பிமார் தந்திரச்சிலவுக்கு பணம்* (TAS,vii,p.88-91.)

தந்திரம் (பெ) வீரர் தொகுதி; படை (1084) *திருவுளத்தடைத்து பொறி கரித்தலங்களும் தந்திரவாரியும் உடைச்சாய்* (SII,iii,69.); (1150) *வேள் ஆடினவரை வீரகொடித் தந்திரத்துக்கு காட்டிக்குடுத்து* (AVNM,9,p.37-39.)

தந்திரி (பெ) சேர நாட்டுக் கோயில் பூசாரி (1188) *தந்திரிகள்க்கு விருத்தி குவையூர்க் கல்லில் கழுத்தறு மண்ணால்க் கொள்ளுந் நெல் இருபதுபற* (TAS,iv,p.22-65.)

தந்திரிமார் (பெ) படை வீரர் கொண்ட சாதி (1430) *கரைப்போக்கு நாட்டு நாட்டார் தந்திரிமாரோம்* (AVNM,4,p.18)

தந்தை (பெ) அப்பா (930) *எருமைதொறு கள்ளர் கொள்ள போகாமைப் பட்டார் தந்தையு மகனும்* (CHHS,1971/75.)

தந்தோந் (பெ) கொடுத்தவன் (852) *இது பாடித் தந்தோந் பெருங்காவிதி சடையன் பள்ளி* (SII,xii,48.)

தங்ம கட்டளை (பெ) ஒரு பொன் நிறுவைக்கல் (880) *ஸபையார் கொண்ட தங்மகட்டளையால்* (SII,xii,64.)

தந்ம வாணியர் (பெ) ஒரு வாணிகர் ஜாதி (1075) *திருக்கொடிப் பிடவை சந்திராதித்தவரை இடக்கடவோம் தந்ம வாணியரோம்* (SII,viii,141.)

தநிசு (பெ) கடன் (966) *நகரத்தார் தேவர்க்கு தநிசு ஒழிய இப்பொன்* (SII,v,720.)

தநிசு (பெ) வரிக் கடன் (1015) *கோயில் வாசலாற் போந்த குடிமைகளும் ஊர்த் தநிசுகளும்* (SII,xvii,741.)

தநித்தாக (வி) தனித் தனிப் பேராக (867) *பந்மாஹேச்வரரே ஸபையாகவும் தநித்தாகவும் நிலைக்களமுள்ளிட்ட தான் வேண்டு கோவினுக்கு புக்க* (SII,xiv,12a.)

தநிவடம் (பெ) (=தனிவடம்) (1009) *மேற்படியார் சார்த்தும் தநிவடம் ஒன்றும் முத்து முப்பத்தொன்றும்* (SII,v,521.)

தப்பாதிருக்க (வி) ஒருவருக்கொருவர் உண்மையுள்ளவராக இருக்க (1198) *நாநு மிவருமுள்ளதனையும் எங்களிலே தப்பாதிருக்கக் கடவோமாகவும்* (SII,vii,127.)

தப்பாமை (வி) தவறாமை (1110) *இப்படி தப்பாமைச் செலுத்துவித்துக் கொள்ளக் கடவோம்* (SII,vi,182.)

தப்பினார் (பெ) தவறு செய்பவர் (1159) *இதுக்கு வந்த அதிகாரிகள் தப்பினாருண்டாகில்* (EC,xiv,md,32.)

தப்பினோம் (பெ) தவறு செய்தோம் (1419) *திருப்பெருமானாண்டார் சீபாதம் தப்பினோம் ஆவதாகவும்* (IPS,698.)

தப்பை பழம் (பெ) பழ வகை (1547) *மண்டபம் அலங்கரிக்க னாறத்தை எலிம்பிச்சை தப்பை பழம் 1500க்கு ரேகை பொன் 1* (TDI,v,92.)

தப (பெ) ஒதுங்கிக்கொள்ள (796) *தாம்தாம் தபப் பல்லவமல்லநாந* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

தபஸ்பி (பெ) தவம் செய்வோர்; துறவி (941) *ஆறு ஸமயத்துத் தபஸ்பிகளும்* (SII,viii,529.)

தபஸ்யர் (பெ) துறவிகள் (992) *பல்லவபுராண புரத்து இதேவர் மடவிளாகத் திருக்குந் தபஸ்யர் மூவர்க்கு* (SII,xiii,170.)

தபஸ்வி (பெ) துறவி (991) *நிசதம் ஒரு தபஸ்வி உண்ண வைத்த* (SII,xiii,131.)

தபஸ்ஸி (பெ) துறவி (1124) *இக்கோயில் செய்விச்ச தபஸ்ஸி பொயிக்குடையாந் திரிச்சிற்றம்பலப் பிச்சநும்* (SII,v,673.)

தபிலம் (பெ) கூட்டெண்ணை (1088) *அடைக்காயமுது நூற்றிருபதும் கற்பூர தபிலம் ஒரு செவிடரையும்* (SII,iii,70.)

தம் (பெ) உங்களுடைய (550) *பெருநகர நாட்டு நாட்டார் காண்க தந்நாட்டு அமண்சேர்க்கை* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

தம்பம் (பெ) தூண் (1137) *உம்பரியானை யோரெட்டினுக்குந் தம்ப மென்னத் தனித்தனி திசை தொறும் விஜைய ஸ்தம்பமும் நிற்ப* (SII,viii,30.)

தம்பலம் (பெ) தாம்பூல எச்சில் (1198) *என் னொட்டையான் யெடுத்தத் தம்பலமுங் கலச் சோறுந் தின்றேன்னாவேன்* (SII,vii,127.)

தம்பான் (பெ) ஒரு வகைப் படகு (?) (1524) *ஏற்று இறக்கு உரு ஒன்றுக்கு பணம் ஒன்றாகவும் விலைவிற்ற தம்பானுக்கு பணம் ஒன்றாகவும்* (TAS,vi,128.)

தம்பி (பெ) இளைய சகோதரன் (805) *ஆலம்பாக்க விசையநல்லூழான் தம்பி கம்பன் அரையன்* (SII,xii,40;EI,xi,15.)

தம்பிமார் (பெ) இளைய சகோதரர்கள் (771) *தம்பிமார்க்கு நான்கும்* (EI,xvii,16.)

தம்பியார் (பெ) இளைய சகோதரர் (889) *இவர் தம்பியார் அய்யக்குட்டியார்* (SII,xii,80.)

தம்பிரான் (பெ) தலைவன் (1243) *திரிபுவனத் திராசாக்கள் தம்பிரானே* (EI,xxiii,27.)

தம்பிரானார் (பெ) சுவாமி (1570) *மதுரை நாயகனார் தம்பிரானார்க்கு காசிவகோத்திரத்து* (AVNM,7,p.68-70)

தம்பெருமாட்டியார் (பெ) ஆளும் அரசனின் மனைவி (954) *தம்பெருமாட்டியார் அமைச்ச நந்தாவிளக்கொன்று* (TAS,vii,p.169-71.)

தம்மை (பெ) தங்களை (1047) *நெறியுணர் தந்திருப்புதல்வர் தம்மையும்* (SII,v,978.)

தம்மை (பெ) தன் தாய் (1014) *ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் தம்மையாக எழுந்தருளுவித்த திருமேனிக்கும்* (SII,ii,6.)

தம்ராதி$_3$ (பெ) மருந்து வகை (1068) *தம்ராதி$_3$ யிரண்டாயிரமும் வஜ்ரகல்பந் தூணிப் பதக்கும்* (EI,xxi,38.)

தமக்கு (பெ) தன் சார்பாக (802) *தமக்கு விடைபோய்ப் பட்ட உதாரடியையும்* (SII,xii,42.)

தமக்கையார் (பெ) அக்கா (1014) *ஸ்ரீ ராஜராஜதேவர் திருத் தமக்கையார்* (SII,ii,2.)

தமப்பன் (பெ) அப்பா (921) *தன் தமப்பனையும் தன் மகனையும்* (ARASI,1904-05,p.131.); (877) *மகுட கட்டித சரணந் தமப்பனாரைப் பள்ளி படுத்தவிடத்து* (EI,vii,26a.)

தமர் (பெ) அரசச் சுற்றத்தார் அல்லது அலுவலர் (885) *நந் தமர் எப்பேர்ப்பட்டாரும் எப்பிழை சொல்லியும்* (TAS,ii,p.80-82.)

தமராலயன் (பெ) சுற்றத்தைக் காப்பவன் (800) *ஸ்ரீ தமராலயன் ஸ்ரீ அபிமாநதீரன்* (EI,xiii,10.)

தமனகம் (பெ) மருக்கொழுந்து (765) *செங்கழுநீருந் தமனகமும் இடப்பெறுவாராகவும்* (EI,xxxvi,20.)

தமனியம் (பெ) பொன் (1068) *ராஜராஜனெனத் தராபதியராகத் தமனியத் தியற்றி அப்படி மந்தனரடி தொழு தென* (EI,xxi,38.)

தமிழ் (பெ) தமிழ் இலக்கியம் (815) *தீந்தமிழிற் செவி கழுவியும்* (SII,iii,206b.)

தமிழ் (வி) தமிழ் மொழி (905) *அகத்தியனொடு தமிழாந்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

தமிழ்க் கூடல் (பெ) மதுரை (833) *சொன்மா தண்டமிழ்க் கூடற் கன்மாத் திண் பலகை மிசை* (SII,xiv,44.)

தமிழ்க் கோன் (பெ) பாண்டியன் (905) *மற்றிதனுக்காணத்தி வண்டமிழ்க்கோன் அதிகாரி பொற்றடம் பூண்மணி மார்பன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

தமிழ்கள் மூன்று (பெ) இயல், இசை, நாடகம் ஆன முத்தமிழ் (966) *மறைபொருட்டரிசனம் ஆறுந் தமிழ்கள் மூன்றும்* (SII,xiv,87.)

தமிழ் நாடன் (பெ) தமிழ் நாட்டின் தலைவன் (1012) *போற்றிருந் தண்டமிழ் நாடன் சண்ட பராக்கிரமன்* (SII,vii,863.)

தமிழ் நாவலர் (பெ) தமிழ்ப் புலவர் (1012) *முத்தமிழ் நாவலர் நாற்கவி நவின்றது* (SII,vii,863.)

தமிழ்ப் படுத்து (வி) தமிழில் மொழி பெயர்த்து (921) *மஹாபாராதந் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்* (SII,iii,206a.)

தமிழ்ப் பாகம் (பெ) தமிழர் வாழும் பகுதி (1453) *வெள்ள நாடர் தமிழ்ப் பாகத்துப் பெண்ணை கேட்டருதென்றும் கைய்யாளுரு தென்றும்* (TAS,v,p.90-92.)

தமிழ் பாட (வி) தமிழ்ப் பாடல்களை ஓத (1014) *தமிழ் பாட ஒருவனுக்குப் பட்டாலகன் காமரப் பேரையனுக்குப் பங்கு ஒன்றரையும்* (SII,ii,66.)

தமிழதிஅரையன் (பெ) தமிழ் என்ற குலத்தைச் சேர்ந்த உயர் அலுவலர்க்கு கொடுக்கப்பட்ட ஒரு பட்டம் (800) *மல்லன் விடுமன் ஆயின தெந்நவன் தமிழதிஅரையன் புதுக்கு* (IPS (trans),11a.)

தமிழப்பேரரையன் (பெ) உயர் அலுவலர்க்குக் கொடுக்கப்பட்ட ஒரு பட்டம் (950) *ராஜ ஸிம்ஹனென்னும் பியர் உடைச் சீர்திகள் தமிழப்பேரையன்* (TASSI,1962-65,p.32-52.)

தமிழர் (பெ) தமிழ் மொழியைத் தாய்மொழி யாகக் கொண்டவர் (1100) *நான்கு நாட்டுத் தமிழரிலு மிழ நாட்டு....* (SII,iv,1405.)

தமிழவேள் (பெ) அரச உயர் அலுவலர்க்கு வழங்கப்பட்ட ஒரு பட்டம் (871) *செம்பியன் றமிழவேள்* (SII,iii,89.)

தமிழாபரணன் (பெ) ஒரு பட்டப்பெயர் (905) *பாண்டித் தமிழாபரணன் என்னும் பல சிறப்பும் பெயரெய்திய* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

தமிழோர் (பெ) தமிழ் இனத்தவர் (1236) *அருந் தமிழோர் கிளைவாழ...* (TMPL,vi,265-67.)

தமிள்க் கணக்கு (பெ) கொல்லம் ஆண்டு (1776) *தமிள்க்கணக்கில் 952 வருஷம் வைகாசி மாதம் 22 தேதி நாயிற்றுக் கிளமை* (TAS,vi,38.)

தமிளர் (பெ) இந்து சமயத்தைச் சேர்ந்த தமிழர் (1800) *இத்தற்ம்மதுக்கு தமிளரிலே ஆதாமொருவர்ப் பிசகு பண்ணினால் ... துலுக்கரிலே யாதா ஒருவர்ப் பிசகு பண்ணினால்* (IPS,978.)

தமையன்மார் (பெ) அண்ணன்மார் (986) *கொற்றன் மாதிருதத்தனும் தம்பிமாருந் தமையன்மார் மக்களும் நிலத்துக்குத் தெற்கும் ஆக* (SII,xix,404.)

தமையன்னார் (பெ) அண்ணன் (946) *மஹா தேவடிகள் தமையன்னார் அரையர்* (EI,vii,19b.)

தய்யான் (பெ) தையற்காரன் (1014) *தய்யான் ஒருவனுக்குத் தேவன் கவாலியான வீரசோழப் பெருந்தய்யானுக்குப் பங்கு ஒன்றும்* (SII,ii,66.)

தயங்கு (வி) திகைக்கச் செய்கின்ற (1000) *நெறியம் பொறி போர்க்குந் தயங்கிருளே* (SII,iv,167.)

தயித்திரியக் கிடைப்புறம் (பெ) யஜுர் வேத ஆசிரியர்க்குக் கொடுக்கப்பட்ட நிலம் (1016) *தயித்திரியக் கிடைப்புறத்து வைத்த பூமி* (SII,iv,316.)

தயிர் (பெ) பால் உறைகுத்திப் பெறும் கட்டியான பொருள் (869) *நெய் பால் தயிர் ஐஞாழி சேதும்* (SII,vii,523.)

தயிர் ஒகரை (பெ) தயிர்ச் சோறு (1547) *கலசோகரை வகை தயிரோகரை வகை 12 புளி ஒகரை 12* (TDI,v,92.)

தர்ம்ம கர்ம்ம பராயணன் (பெ) அறச் செயல்களைக் குறிக்கோளாக உடையான் (905) *ப்ரதி₂வியின் கண்ணிலை பெறுத்து த₄ர்ம்ம கர்ம்ம பராயணனாகிய த₄ராபதி கொடுத்தருளிப் பின்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

தர்ம்மபங்நி (பெ) மனைவி (774) *மற்றவற்கு தர்ம்மபந்நி ஆகிய நக்கங் கொற்றியாற் செய்யப்பட்டது* (SII,xiv,3; EI,xxxvi,15b.)

தர்ம்மம் (பெ) அறம் (833) *மூன்றன்னும் பயன் மற்றுண் முதலாகிய தர்ம்மத்தை* (SII,xiv,44.)

தர்ம்மஸ்தா₂பந ஸமயபத்ரம் (பெ) பலர் கூடி அறச்செயல் குறித்து செய்த ஆவணம் (1425) *அகர்க புஷ்கரணி கோ₂பிநாத₂ ஸந்நதி₄யிலே த₄ர்ம்ம ஸ்தா₂பந ஸமயபத்ரம் பண்ணி குடுத்தபடி* (SII,i,56.)

தர்ம்மிகள் (பெ) கோயில் பணி புரிபவர்களில் ஒரு வகை (985) *ஆராதிக்கக்கடவ பணிசேமகன் வைகா₂னஸரும் தர்ம்மிகளும் மற்றும் பணி செய்யும் பணி மக்களும்* (SII,vi,376.)

தர்ம்மி யூதி (வி) முறையாகக் காளம் ஊதி அறிவித்து (1118) *குலோத்துங்க சோழ விண்ணகராழ்வார் கோயிலில் முந்தில் மாவிந் கீழேய் தர்ம்மியூதி பெருங்குறி கொட்டி* (SII,vi,57.)

தரக் கடவியர் (வி) கொடுக்கக் கடமைப்பட்ட வராவார் (1000) *சந்தனந் தரக் கடவியர்* (TAS,ii,p.173-207.)

தரகு (பெ) வரியின் ஒரு பொதுப்பெயர் (691) *தறியும் கூலமும் தரகும்* (SII,i,151;EI,xvii,22.)

தரகு கூலி (பெ) ஒரு வரி (1056) *தரகு கூலியும் உ... அந்தராயங்கள்* (TAS,i,p.164-68.)

தரகு பாட்டம் (பெ) ஊர்க்குள் இறக்குமதியாகும் பொருள்கள் மீதான வரி (789) *கூலமும் தரகு பாட்டமும்* (SII,ii,99.)

தரஞ் செய் (வி) வரிக்காக நிலத்தைத் தரம் பிரித்தல் (985) *தரஞ் செய்யும் போது இருபத்தைய்ங் கழஞ்சும் அல்லது ஏற்கத் தரஞ் செய்யாததாகவும்* (SII,xix,378.)

தரணி (பெ) பூமி (771) *துலாபா₄ரமுந் தரணி மிசைப் பல செய்து* (EI,xvii,16.)

தரணிபர் (பெ) அரசர் (1120) *புகழ் மங்கை கமலரத் தந்நடி யிரண்டு தரணிபர் சூட்ட* (EI,xxxii,22 (a).)

தரப்பட்டது (பெ) கொடுக்கப்பட்டது (771) *கேள்வியிற் றரப்பட்டதனைத் துளக்கமில்லா கடற்றானை* (EI,xvii,16.)

தர பணம் (பெ) வரி (1429) *சுற்று மரத்துக்கு தரபணம் இறுக்கக்கடவது* (ARE,1914,59)

தரம் (பெ) நிலத்தின் தீர்வைத் தரம் (946) *நில முதல் ஆறு தரமும் உட்பட பாழும் வாழும் நாம் இறை...* (SII,vii,35.)

தரம் (பெ) தரம் பிரிக்கப்பட்ட நிலம் (969) *செய் யாலும் தரத்தால் வந்த நிலம் ஆறுமாக்காணி அரைக்காணி நிலமும்* (SII,xix,27.)

தரம் (பெ) விளை நிலத்தின் பாகுபாடு (வரி விதிக்கும் பொருட்டு) (987) *நிலமாவது பல தடியான் தன்தரத்து மடக்கி வந்த* (SII,xiii,76.)

தரம் பூட்டி (வி) வரிவிதிக்க நிலத்தைத் தரம் செய்து (1238) *ஒழுகல் மாட்டெறிந்து வருகிற குளங்கள் உள்ளிட்ட தரமிலி நிலத்து பல பேரிலும் தரம்பூட்டி ஊர்க்குடலான மடக்கிலே கூட்டிக் கொள்ளவும்* (SII,viii,206.)

தரம் பெற்ற (வி) வரிவிதிப்புக்காக தரப் பாகுபாடு செய்யப்பட்ட (1068) *திருவச்சிறுபாக்கம் தரம் பெற்ற நீர்நிலம் பாடகம் எண்பத்தொன்றினால்* (SII,vii,467.)

தரமிலிகள் (பெ) வரி விதிப்புக்கு உட்படாத நிலங்கள் (1152) *மூன்றாங் கண்ணாற்று மூன்றாஞ் சதிரத்து தரமிலிகள் நீக்கி நிலம்* (SII,vi,440.)

தரம் ஏற்றும் (வி) தரம் வகுக்கும் (1074) *இந்நிலம் சந்த்ராதிதவற் பதிலாந்தரத்திலே தரம் (ம்)ஏற்றும் நிலத்தால் எப்பேற்பட்ட இறையும்* (SII,viii,701.)

தர வரிசை (பெ) தரமிடப்பட்ட நிலங்கள் செலுத்தும் வரி விழுக்காடு (1260) *அரைக்காணியினால் தரவரிசைப் படியும் அகர ஒட்டுப்படியும்* (SII,viii,56.)

தர விட்டு (வி) பற்றுச்சீட்டு கொடுத்து (1235) *ஸ்ரீ பண்டார கண்காணி செய்வார்கள் தரவிட்டுக் கொள்ள இத்தன்மம் சந்திராதித்தவரை செல்லக் கடவதாகச் சொன்னோம்* (TDI,i,40.)

தரவிட (வி) பற்றுச்சீட்டு எழுதி (985) *பட்டி காடி கொள்விதாக ஸபையில் பணித்தல் தரவிட சொல்லுதல் செய்தாரை* (SII,vi,345.)

தரவீடு (பெ) செலவு (?) (1222) *ஒரு கூறு நெல்லு நிமந்தக்காறர்க்கு தரவீடு நெல்லாக இறுக்கவும் ஒரு கூறும் திருப்படிமாற்றுக்கு எடுத்தளக்கவும்* (SII,vii,1028.)

தரவு (பெ) உத்தரவு (1439) *அகரப்பற்றாக கைய்யாண்டு கொண்டு செல்லுமாறு கற்பிற்றகைக்கு இது தரவாகும்* (TAS,viii,p.3-5.)

தரவு (பெ) அனுமதிச் சீட்டு (1519) *தாங்களும் இன்னாள் முதல் இத் தரவு பிடிபாடாக ஆசந்திர தாரவற் செல்வதாக* (TAS,vi,118.)

தரவு (வி) கொடை (?) (800) *நந்தவானக் குடிகள் மூவர் பாதசிவன் முருகன் படுகன் தரவின்னால் உண்ணகடவ நெல் 75* (SII,vi,448.)

தரவு (பெ) செலுத்தியதற்குப் பற்றுச் சீட்டு (969) *கார் பாதியும் பிசானம் பாதியும் வாடாக் கடன் எங்கள் தரவினாலேயே பசுங் குளத்துலேய் அளப்பதாகவும்* (SII,xiii,236.)

தரவு (பெ) பற்றுச் சீட்டு; ரசீது (997) *சிவ பண்டாரிகள் வசமும் ஆட்டாண்டுதோறும் அறவளந்து தரவு கொள்வோமானோம்* (SII,i,146.)

தர வேண்டும் (வி) கொடுக்க வேண்டும் (989) *பொன் கொண்டு இறையிழிச்சித்தர வேண்டுமென்று இவர் விண்ணப்பம் செய்ய* (SII,xiii,83.)

தர ஒபாதி (பெ) தரம் பிரிக்கப்பட்ட நிலத்தின் மீதான வரி (1189) *இந்நிலத்துக்குத் தண்ட நிச்சயித்த நில ஒபாதி தர ஒபாதி மடக்கால் வந்த காசு* (SII,iii,87.)

தரா (பெ) செம்பும் காரீயமுஞ் சேர்ந்த உலோகக் கலவை (888) *நிலைவிளக்கு தரா ஒன்று* (SII,v,543.)

தராதிபர் (பெ) அரசர் (1068) *ராஜாதி, ராஜராஜந் நெனத்தராதிபராக* (SII,iii,30.)

தராதிவர் (பெ) அரசர் (1074) *தந்கழல் தராதிவர் சுழல* (SII,viii,701.)

தரா மண்டலம் (பெ) உலகம் (950) *சந்திரனது வழித் தோன்றி இத்தராமண்டல முழுதாண்டு* (TASSI,1962-65,p.32-52.)

தரிச்சிருக்கில் (வி) முடங்கி விட்டால் (?) (1000) *இப்படாரக் கடுத்த தேவகாரியவுந் தரிச் சிருக்கில் பொதுவாள் சென்று சென்றது வீட்டிக் கொடுக்ககடவர்* (SII,v,784.)

தரிசனம் (பெ) காணுதல் (862) *தைவதரிசனத் தருந்தவ முனிவனை* (SII,xiv,45.)

தரிசனம் (பெ) தத்துவநூல்களாகிய சாங்கியம் முதலியன (966) *மறைபொருட் டரிசனம் ஆறுந் தமிழ்கள் மூன்றும்* (SII,xiv,87.)

தரிசு (பெ) பயிரிடப்படாத நிலம் (1132) *தரிசு வசக்கிப் பயிர் செய்யலாகு நிலத்து நிலம்* (SII,xiv,229.)

தரித்தனன் (வி) அணிந்து கொண்டான் (1446) *நிருபர் பதந்தனைத் தாழ்ந்திறைஞ்சித் தலைமீதியானுந் தரித்தநனே* (TAS,i,p.95-98.)

தரித்தார் (பெ) அணிந்தார் (1190) *கங்கை தரித்தார்க்கு* (SII,xvii,626.)

தரிப்பற்று (வி) வாழ வகையில்லாமல் (1300) *இப்படி செய்கையாலே தரிப்பற்று பயிரேற்றி...* (AVNM,3,p.27-28)

தரிப்பறுதி (வி) நிலைத்து வாழ இயலாமை (1239) *எங்களுக்குத் தரிப்பறுதியாலே வெள்ளாமை செய்து குடியிருக்கப்போகுதில்லை* (SII,vi,50.)

தரியலர் (பெ) பகைவர் (771) *தரியலராய்த் தறித்தவரை* (EI,xvii,16.)

தரியாது (வி) பொறுக்காது (1036) *பார்த்திவர் ரானார் முன்னருஞ் செயிதறியாது பின்னருஞ் செய்தும் என்றெண்ணி தரியாது* (SII,iv,223.)

தரில் (வி) கொடுத்தால் (1300) *குடி நீங்காத் தேவதாநமாக தரில் கொள்வேநென்று பிற்கூற* (IPS,479.)

தரு (பெ) கற்பக மரம் (1120) *காலிங்கன் காசினிக்குத் தண்டருப் போல் தின்றளிப்பான்* (CHEN,xxiii,p.93-96.)

தரு (பெ) மரம் (1542) *மாவடை மரவடை ஜலதரு பாஷாணம்* (TDI,iv,189.)

தருக்கின (வி) கூட்டின (1009) *செம்பின் மேலும் பந்தத்தில் மேலும் தருக்கின பொன்* (SII,v,521.)

தருக்கு (பெ) கர்வம் (1120) *திண்மைக் கலியிந் தருக் கொடுங்க* (SII,iv,225.)

தருகிறோம் (வி) கொடுப்போம் (1196) *சீபீடம் சார்த்தின படிக்கு இறையிலியாக நிலமும் தருகிறோமென்று* (SII,vii,1041.)

தருசு (பெ) விளையாத நிலம் (1313) *பதினாலடிக் கோலால் நிலமளந்து தருசுஞ் சாவியும் நீக்கி* (SII,viii,173.)

தருதும் (வி) கொடுப்போம் (976) *பேராவூர் நிலத்தில்...க்கித் தருதும் கொண்டு விலை தருவிர்* (SII,xix,162.)

தருப்பணம் (பெ) கண்ணாடி (985) *தருப்பணம் ...கலசக்கயிறும் அதிவாஸனைக்கு* (SII,xix,380.)

தருப்பணம் (பெ) அவல் (1003) *பால் நானாழியும் தயிர் நானாழியும் தருப்பண நானாழியும் எள்ளு நானாழியும்* (SII,vii,156.)

தரும நெறி (பெ) அற ஒழுக்கம் (1062) *ஒருகுடை நிழற் கீழ் இநிதிநிற்ப புணர்ந்து தரும நெறி நிற்ப* (SII,iii,56.)

தருமம் (பெ) அறம் (1074) *புலியுந் திசைதொறு நடாத்தி புகழுந் தருமமும் புவி தொறும்* (SII,viii,701.)

தருமிகள் (பெ) துறவிகள் (500) *விருமச்சாரி கள்ளுந் தருமிகளு மூர்காவல் கொண்டாரு* (AVNM,1,p.67-69)

தருவதான அச்சு (பெ) ஒரு வரி (1242) *விநியோகமும் தருவதான அச்சும் காரிய வாராட்சியும் வெட்டி பாட்டமும்* (SII,viii,404.)

தருவதின்னு (வி) தருவதற்கு (961) *தளி யதிகாரரும் இந்நெல் தருவதின்னு இருகாப் புறையும்* (TAS,viii,p.43-44.)

தருவது (வி) கொடுப்பது (967) *பண்டை நந்திபுர மற்றாதியே கொண்டு தருவது என்று விண்ணப்பஞ் செய்ய* (SII,xiii,215.)

தருவித்தருளின (வி) கொடுத்தருளின (1219) *நீரும் வார்த்துத் தருவித்தருளின ப்ரஸாதஞ் செய்தருளின திருமுகப்படி* (IPS,250.)

தருவிர் (வி) கொடுப்பீர் (976) *விலை தருவிர் இல்லையோவென்று முற்க்கூற* (SII,xix,162.)

தலச்சமாடு (பெ) (=தலைச்சமாடு); பொறுப்பு (731) *தலைச்சமாடாக நெல் அஞ்பதின் காடிக்கும்* (SII,viii,331.)

தலம் (பெ) உலகம் (1446) *வழுதிகண்ட தென்காசி தன்னிலன்றியுண்டோ தலத்து* (TAS,i,p.95-98.)

தலம் (பெ) தளவரிசை (1800) *கோயில் கெற்பக்கிரகத்து தலஞ் செய்தான் இந்நகரத்து பரம்பையுடையான்* (IPS,1017.)

தலம் (பெ) கோயில் (935) *இத்தல மஹாதேவர் மகன்* (SII,v,1372.)

தலவகாரம் (பெ) சாமவேதப் பிரிவுகளுள் ஒன்று (866) *தலவகார சரணத்தார்* (TAS,i,p.1-14.)

தலவுகார சாமவேதம் (பெ) சாமவேதப் பிரிவுகளுள் ஒன்று (992) *இத்தேவற்கு தலவுகார சாமவேதமும் தைத்ரிய வேதமும் சந்தோக ஸாமவேதமும்* (SII,xiii,170.)

தலெவாய் (பெ) (=தலைவாய்); கால்வாய் ஆற்றிலிருந்து பிரியும் இடத்தில் உள்ள தலை மடை (691) *தலெவாயும் தலெப்பேழையும்* (SII,i,151;EI,xvii,22.)

தலை (பெ) இடம் (1500) *பருமதின் பொலிந்து மலர்தலை நாலத்து மன்னுக மலிந்தேய்* (TAS,ix,p.19.)

தலை (பெ) ஓர் உடல் உறுப்பு (550) *திருமுகங் கண்டு தொழுது தலைக்கு வைத்து* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

தலை (இ) பேரில் (731) *மேலை பிராய செறுவின் றலை உடைய கலம் நெல் முப்பதின் காடி* (SII,viii,331.)

தலை (இ) ஏழாம் வேற்றுமை உருபு (891) *இவற்றின் தலைக் கரையும் புலையும்* (TAS,i,p.17.)

தலை (பெ) பக்கம் (950) *மாயான் பதக்கெந்நுஞ் செய்யின் வட தலைத் துலாசெய்க் கிறைக்கும்* (TASSI,1962-65,p.32-52.)

தலை (பெ) முதல் (1014) *தெற்குத் தளிச்சேரித் தென் சிறகு தலை வீடு* (SII,ii,66.)

தலை (பெ) முதல் தரம் (1007) *நின்ற நீர் நிலத்திலே தலை நடுவு கடை கலக்க விரிவு இரு வேலி நிலம் இரண்டு* (IPS,85.)

தலைக் கட்ட (வி) தலையில் தேய்த்துக் கொள்ள (1068) *கிடைகளுக்குஞ் சாத்திரர்க்குந் தலைக்கட்டச் சனி யொன்றுக் கெண்ணை* (EI,xxi,38.)

தலைக்கட்டு (பெ) ஒரு குடும்பம் (1605) *தலைக் கட்டுக்கு மாதம் ஒன்றுக்கு பணம் ஒன்று காலும்* (SII,v,Appx,52 (a).)

தலைக் கடுப்பு (பெ) தலைப்பாகை (?) (1464) *அடைகாய் அமுது 250 இலையமுது 500 வெள்ளை சேலை 8 தலைக்கடுப்பு ஒன்றும் பவித்ரத்துக்கு பட்டுனூல் 20* (TDI,ii,18.)

தலைக் காசு (பெ) தலைக்கட்டின் பேரில் காசாகச் செலுத்தும் வரி (1268) *ஊற் கீழ் இன்னத்தத்தில் இருக்குமவர்களுக்குத் தலைக் காசும் இன்னிலத்துக்கு மாக்காசும்* (IPS,376.)

தலைக்குறி (பெ) அடையாளம் (1679) *பாட்டதினும் தன்னாண்டைக் குறியும் தலைக் குறியும் காட்டி ஒப்பிச்சுக் கொள்ளுமாறும்* (KANDT,1968/26.)

தலைக்கோலி (பெ) ஆடல் மகளிரான தேவதாசிகளுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பட்டம் (911) *தேவனார் மகள் நக்கனாச்சி நங்கை ஆன இரண்டாயிரத் தலைக்கோலியார்* (SII,xix,92.)

தலை கண்ட (வி) விளைந்த (1287) *தெங்கு கமுகு இலுப்பையும் வச்சாக்கித் தேவ கந்மிகள் இவை தலை கண்ட முதல் கொண்டு* (SII,v,251.)

தலை கண்டு (வி) உண்டாக்கி (905) *ஆறு பல தலை கண்டும் அமராலையம் பல செய்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP, p.95-115.)

தலை காக்க (வி) உயிர்காக்க (1176) *தேவி யர்கள் அணி மங்கலம் பெற்றருள வாளரசர் தலைகாக்க யாதவர் குலமரபில் வந்த* (SII,xvii,585.)

தலை கொண்ட (வி) வெற்றிச் செருக்கில் எதிரியின் தலையைக் காலால் மிதித்து அவமதித்து (959) *வீர பாண்டியனைத்*

தலைகொண்ட பார்த்திவேந்த்ராதிபதி (SII,iii,163.)

தலை கொண்ட (வி) வென்ற (988) *பாண்டி யனைத் தலைகொண்ட கரிகால சோழனைக் கொன்று* (EI,xxi,27.)

தலைச்சமாடு (பெ) ஒன்றுக்குப் பொறுப்பு (934) *இப்பொன் பத்தொன்பதின் கழஞ்சரையே அரைக்கால்லுக்குந் தலைச்சமாடாக வைத்த பூவாஞ் செய்* (SII,v,590.)

தலைச் சிறை (பெ) முதல் அணைக்கட்டு (1264) *பெரிய குளத்து தலைச்சிறையும் மடைகாலும் கல்படுத்த* (TAS,vii,p.31.)

தலைச்செமாடு (பெ) (=தலைச்சமாடு) (880) *குடோமாயில் இப் பொன்னுக்குத் தலைச்செமாடு சோமதேவன் பிர...தாயப் பாட்ட நெல் நாற்பதின் காடியும்* (SII,xii,103.)

தலைத்தரம் (பெ) முதல் தரம் (958) *தலைத்தரங் குழி ஐஞ்ஞூற்று அறுபதும்* (SII,iii,152.)

தலைத்தாவது (பெ) முதலாவது (670) *பரமேச்வர வரும்மற்க்கு யாண்டு தலைத்தாவது* (EI,xxxii,23.)

தலைதலை (இ) மேன்மேலும் (1122) *வேதமும் மெய்ம்மையும் ஆதியுகம் போலத் தலைதலை சிறப்ப வந்தருளி* (SII,v,986.)

தலை நீர் (பெ) முதன் முறையாகப் பாயும் நீர் (984) *எங்கள் ஏரியில் தலை நீரும் கடை நீரும் பாச்சிக் கொள்ளக் கடவனாகவும்* (SII,iii,141.)

தலைநீர் பாடுகால் (பெ) தலை நீர் பாயும் கால்வாய் (815) *ஊர் குளத்துக் கீழ் தலைநீர் பாடுகால்...* (SII,xiv,26.)

தலைப்படுவார் (பெ) முன்வருவார் (1102) *இது நாந் கட்டுவேநென்று தலைப்படுவார் இல்லாமையில் கட்டுவித்தான்* (EC,xiv,sr196.)

தலைப்பறை (பெ) முதல் வரிசையில் கொட்டப்படும் பறை (978) *பூங்குடியில் அறுமாமுக்காணி உவச்சர் தலைப்பறை இரண்டுக்கும் மத்தள நாலுக்கும் தாளம் ஒரணைக்கும்* (SII,iii,151-151a.)

தலைப்பிறை (பெ) வளர் பிறையில் முதல் நாள் (894) *யாண்டு இருபத்து நாலாவது ஆனித் தலைப்பிறையால் தீண்டின ஸூர்யக்ரஹணத்தி நான்று* (SII,v,1368.)

தலை பெற்ற (வி) தொடங்கிய (1220) *முமுடி சோழப் பேட்டையில் தலைபெற்ற கடை கானகமான கரிகால சோழப் பேராற்று* (SII,iv,394.)

தலைமகன் (பெ) ஊர்க்கிழவன் (978) *பரகேசரி மூவேந்தவேளானும் ஆணத்தியாலும் புரவுவரி இரையான்குடித் தலைமகன் தண்டி பூதியான செம்பியன் உத்தரமந்த்ரியும்* (SII,iii,151-151a.)

தலைமகன் (பெ) கணவன் (1012) *முழுங்கெரி நடுவணுந் தலைமகற் பிரியாத் தையல்* (SII,vii,863.)

தலை மடை (பெ) முதல் மடை (1100) *தலை மடை வேலியும் இதனுக்கு தரிப்பிட்ட நிலம் எழுமாவும்* (SII,xvii,496.)

தலைமாடு (பெ) ஓரம் (?) (1089) *மேல் சிறகிற் தெந் தலை மாட்டும்* (ALB,viii,p.95-97.)

தலைமாறு (பெ) ஒன்றுக்கு மாற்றானது; பதில் (974) *அல்லூர் ஊரார்க்குக் குடுத்து அதின் தலைமாறு ஊராரிடைப் பரிவத்தனை செய்து கொண்டு* (SII,viii,692.)

தலைமேலன (வி) தலைமேல் வைக்கத்தக்கன (731) *இத்தர்ம்மம் ரக்ஷித்தாரடி என்றலை மேலன* (SII,viii,331.)

தலையகம் (பெ) அரச ஆணை (?) (1222) *நாட்டுக்கு இட்ட தலையகப்படி காத்த நாளிலே ஒடுக்கவும்* (SII,vii,1028.)

தலையரை (பெ) ஒரு வரி (962) *தலையரையும் ஆணெல்லும் திங்கட்சோறும்* (SII,vi,324.)

தலையறுத்து (வி) கொன்று (999) *மலையாளர் தலையறுத்து* (SII,v,722.)

தலையாக (பெ) முதலாக (864) *குதிரைச் சேரியார்க்குக் கருப்பூரந் தலையாக* (MCCM,viii,p.98-104.)

தலையார் (பெ) பிரிவினர் (885) *இவருளிரண்டு தலையாரும்* (TAS,ii,p.80-82.)

தலையாரி (பெ) காவற்காரன் (பட்டம்) (1461) *அயிலு நாயக்கர் தம்பியார் தலையாரி வயிச்சய நாயக்கர்* (IPS,710.)

தலையாரிக்கம் (பெ) காவலுக்குச் செலுத்தும் வரி (1523) *ஆயம் தலையாரிக்கம் தமை தச்சுமை தோல்லும் குசமும்* (AVNM,4,p.41-42)

தலையாரி சம்மாதம் (பெ) (=தலையாரிக்கம்) (1524) *ஆய்யம் தலையாரி சம்மாதம் மற்றும்* (ARE,1918,115)

தலையாரி மேர்வை (பெ) (=தலையாரிக்கம்) (1374) *காத்திகைப் பச்சை திருப்புதியிது தலையாரி மேர்வை சந்தை முதல்* (ARE,1911,324)

தலையிட (வி) பிறர்செயலில் பங்கேற்க (1000) *உற்றார் தலையிட வொன்னார் முகந்த உண்டு மிக்க* (SII,iv,167.)

தலை யுவா (பெ) அமாவாசை (863) *திருவாதிரையுந் தலையுவாவும்* (SII,xii,53.)

தலை யெடுப்ப (வி) நன்கு வளர (1176) *சமைய மாறுந்தலை யெடுப்ப* (SII,xvii,585.)

தலையேர் (பெ) ஒரு வரி (1260) *தறியிறை செக்கிறை தலையேர் பட வேண்டுகோள் வினியோக...* (SII,v,303.)

தலையொப்பு (பெ) ஒரு வரி (?) (1400) *மர இறை தலையொப்பு மதி மாதவரி* (SII,viii,403.)

தலை வரிசைப் பற்று (பெ) முதல் தரத்தைச் சேர்ந்த நிலம் (1237) *வெண்குன்றக் கோட்டத்துச் சோற்றுப் பாக்கத்து தலை வரிசைப் பற்றிற் திரு மார்பனும் தினைச் செறுவும்* (SII,vii,92.)

தலைவன் (பெ) முதன்மையானவன் (833) *இருஞ்சோழ நாட்டவர் தலைவன் பெருஞ்சாந்திக்குல மன்னவன்* (SII,xiv,44.)

தலைவாய்ச் சேரி (பெ) வாய்க்கால் மதகுகளைப் பேணும் குடிகள் இருக்கும் ஊர்ப்பகுதி (1014) *வெள்ளான் சுடுகாடும் கொட்டகாரங்களும் தலைவாய்ச் சேரியும் ஈழச்சேரியும் கம்மாண சேரியும் பறைச் சேரியும்* (SII,ii,5.)

தலைவாய்ப் பேறு (பெ) வாய்க்கால் மதகுகளைப் பராமரிப்பவருக்குக் கொடுக்கப்பட்ட நிலம் (1000) *சாக்கியப் பள்ளித் தலைவாய்ப் பேற்றின் கீழ்வரம்பேய் வடக்கு நோக்கிச் சென்று* (TASSI,1958-59,p.84.)

தலைவாயர் (பெ) வாய்க்கால் மதகுகளைப் பேணுபவர்கள் (974) *பிடாரியார் துடைவைக்கும் சிறியான் புல்லன் அல்லூர்த் தலைவாயரிடை விலை கொண்ட நிலம்* (SII,viii,692.)

தலை விரித்து (வி) தலைமுடியைக் கட்டாது (1047) *தன் முடி விழத் தலை விரித்தடி தளர்ந்தோட* (SII,iii,28.)

தலை அரிந்து (வி) கொன்று (1197) *கொற்றவர் தங்கொடி பணியத் தென்னவனைத் தலை அரிந்து* (SII,v,1359.)

தலை அழிய (வி) முழுதும் கெட (815) *ஸமர முக₂த் தஸ°ரக₂ணந் தலை அழியச் சிலை குனித்து* (SII,iii,206b.)

தலை ஈடு (பெ) முதல் தரம் (1293) *தோட்டக் கூற்றில் குழி 8 தலை ஈடு இரண்டாமீடு மூன்று ஈடு நாலாமீடு* (EC,x,Kl.102.)

தவ்வை (பெ) தன் அக்கா (1047) *கவ்வையிறனடிக் காதலியோடுந் தன்றவ்வையைப் பிடித்து தாயை மூக்கரிய* (SII,iii,28.)

தவச பொதி (பெ) தானிய மூட்டை (1330) *உப்பு பொதி ஒன்றுக்கு ஆழாக்கும் தவச பொதி ஒன்றுக்கு உரியும் அடிமை ஒன்றுக்கு காசு இரண்டு* (EC,x,Kl.70.)

தவசம் (பெ) தானியம் (1550) *சாலையிலும் தவசம் விடுவித்துக் கொள்ளுகிற பேற்கு வருஷம் 1க்கு ரேகை பொன் 1* (TDI,v,125.)

தவசி (பெ) துறவி (745) *இப்பள்ளி உடைஆரை நீக்கி இருந்த தவசிகளுக்குப் பிச்சை எழு கழஞ்சு பொன்* (TAMIZ,1970,p.122.)

தவணை (பெ) நிலக்கணக்கு (1267) *நிலம் ஆறுமாவும் ஆகத் தவணைப்படி நிலம் எட்டு மாவுக்கும் கடமை அந்தராயம்* (SII,v,737.)

தவணை (பெ) செலுத்தும் கெடு அல்லது முறை (1575) *...மாதத் தவணை கொஞ்ச ... முட்டினால் முதல் நிலம்* (KANDT,1968/294.)

தவணைக்காடி (பெ) ஒரு வரி (1085) *இவூர் பிடாகை ஓபாதி இறை என்றும் நீர் விலை என்றும் தவணைக் காடி என்றும்* (SII,v,1003.)

தவத்தோர் (பெ) முனிவர் (1279) *சோதி நன் மணி வீதிகள் யிலங்கக் கலையயில் தவத்தோர் நிலை பெற விருக்க* (SII,viii,69.)

தவத்தோன் (பெ) முனிவன் (905) *சிறுமேனி உயர் தவத்தோன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

தவப்பழி (பெ) புண்ணியச் செயலை அவமதித்ததால் ஏற்பட்ட பழி (1388) *வடபாற் கெல்லை ஊரவருடன் தலையாய்த் தவப்பழி விழுகையில் தவப்பழி பழித்த இத்திருனாமத்துக்காணிக்கு* (SII,vi,68.)

தவம் (பெ) மனத்தை ஒருமுகப்படுத்துதல் (862) *தைவ தரிசனத் தருந்தவ முனிவனை* (SII,xiv,45.)

தவழ்ந்தது (பெ) ஊர்ந்து செல்லும் இடம் (550) *உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம்* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

தவழ்வது (பெ) தவழ்ந்து செல்லும் இடம் (753) *ஆமைதவழ்வதெல்லாம்* (SII,ii,73.); (1003) *மே நோக்கின மரமும் கீணோக்கின கிணறும் உடும்போடி யாமை தவழ்விது உண்ணில மொழிவின்றியே* (TAS,vi,103.)

தவளச் சங்கு (பெ) வெண் சங்கு (1366) *பவளக் குஞ்சவும் தவளச் சங்கும் நீங்கலாக* (TAS,viii,p.20-22.)

தவளைச் சங்கு (பெ) வெள்ளைச் சங்கு (1800) *காணிஆட்சி ஆகத் திருவுளம் பற்றுகையில் இவன் இரண்டு தவளைச் சங்கும் ஒரு தாரையும் திருமுன் காணிக்கை ஆக முதல் இடுகையில்* (IPS,923.)

தவளை வாய் (பெ) ஒரு நகை உறுப்பு (1009) *இடைக்கட்டு நாலும் தவளைவாய் நாலியில் சவக்...ம் பொந்* (SII,v,521.)

தவன மண்டபம் (பெ) வேனில்கால மண்டபம் (1218) *திருக்கோயிலில் தவன மண்டபத்து வடபாரிசத்து செகதியிலும் குமுதகத்திலும்* (IPS,248.)

தவஸம் (பெ) தானியம் (1541) *அப்ப படி 13க்கும் உண்டான தவஸம் ஸ்ரீ பண்டாரத்திலே விட்டுப் போதக் கடவதாகவும்* (TDI,iv,167.)

தவிசு (பெ) பல்லக்கில் செல்லும் ஒரு மரியாதை (871) *தவிசுஞ் சாமரையும்* (SII,iii,89.)

தவிந்து (வி) நீக்கி (1018) *இவ் வூர் இறை கட்டாதே தவிந்து* (SII,iii,205.)

தவிர்க்கும் (வி) நீக்கும் (771) *போர் வந்தவர் மதந் தவிர்க்கும்* (EI,xvii,16.)

தவிர்த்த (வி) நீக்கிய (771) *கூடா மன்னர் குழாந் தவிர்த்த* (EI,xvii,16.)

தவிர்த்து (வி) ஒழித்து (771) *செரு வென்றவர் சினந் தவிர்த்து* (EI,xvii,16.)

தவிர்ந்து (வி) நீக்கி (905) *அவன் குடி நிலனாகைய் தவிர்ந்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

தவிர்மின்கள் (வி) விட்டொழியுங்கள் (1000) *தணிமின்கள் சீற்றந் தவிர்மின்கள் பொய்ம்மை தவம் புகுநாள்* (SII,iv,167.)

தவிர்வது (வி) நீக்குவது (1138) *நாலாட்டை நாளைக்கு அந்தராயந் தவிர்வதாகவுமிட்டு* (SII,xiv,236.)

தவிர (வி) நீக்க (1192) *எப்பேற்பட்ட ஸ்பா,விநியோகமுந் தவிர வேணுமென்று* (SII,v,301.)

தவிருமிடத்து (வி) நீக்குமிடத்து (1223) *இவ் வாண்டு முதல் விநியோகந் தவிருமிடத்து வந்தார் நெற்கடமையும்* (CHEN,xi,p.264-66.)

தவில் (பெ) மேள வகை (1800) *பள்ளற்கு தவிலும் முரொசும் சேமக்கலமும்* (IPS,956.)

தவுக்கைய் (பெ) தட்டுவகை (1014) *தவுக்கைய் ஒன்று* (SII,ii,2.)

தவை (பெ) சபை (1100) *இத் தண்டம் பொனும் பட்டு தவைக்கும் பந்திரு கழைஞ்சு பொன் தண்டம் வைச்சு காட்டப் பெறக் கடவன்* (TAS,v,p.34-37.)

தலைக்கணக்கு (பெ) ஊர்ச்சபைக் கணக்கு எழுதுபவன் (1545) *இற்படிக்கு தலைக்கணக்கு மதிசூதனன் இரவி எழுத்து* (TAS,vi,85.)

தலையார் (பெ) சபையார் (1236) *மேற்படி நில மொழிஞ்ஞு தலையார்க்கும் ஊரார்க்கும் மிக்கும்* (TAS,iii,p.59-63.)

தழல் (பெ) நெருப்பு (1000) *யானைக் கொள்ளித் தழலுடையா நெறியம்* (SII,iv,167.)

தழும்பு (பெ) குற்ற வடு; மனக்குறை (1376) *எங்களுக்குக் கடவழியும் அழிவும் தழும்பும் மற்றும் எற்பெயற்பட்டதுவும்* (IPS,960-61.)

தழுவி (வி) சேர்ந்து (905) *தாதலர் பூம்பொழி றழுவிச் சாலி விளை வய வளத்தால்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

தழைத்தீண்ட (வி) பெருக (1145) *நிதியாளர் தங்கள் செல்வந் தழைத் தீண்ட தா மன்னரை முடிசூட்டுஞ் செங்கை வேதியர்* (SII,vii,1044;Ips,120.)

தழைத்தோங்க (வி) செழித்து வளர (1171) *எடுத்தாதி யுகங் கொழுந்து விட்டுத் தழைத்தோங்க* (SII,xvii,592.)

தழையிடுவார் (பெ) கோயில் பூசைக்கு வில்வம் முதலிய பச்சிலை தருவோர் (1453) *நம் வீட்டில் குடவர் கோவணர் பூவிடுவார் தழையிடுவார் தண்ணீர் சுமப்பார்* (CHEN,v,p.437-41.)

தள்ளுதலையாக (பெ) குறைக்கும் வகையில் (?) (1703) *நம்முடைய உற்பத்திகளைத் தள்ளுதலையாக கல்லுப் போட்டுப் உபத்திரிச்ச படியினாலேயும்* (TAS,v,p.215-16.)

தள்ளை (பெ) தாய் (1000) *தந்தையைக் கொன்று தள்ளையைக் களத்திரம் வைச்சாராவிது* (TAS,ii,p.173-297.)

தளக்கல் (பெ) தரையில் பாவிய கல் (1252) *சிரீகோயில் அதிட்டானம் துடங்கி உத்தரத் தோளமு கெர்ப்ப கிரிகமும் தளக்கல்லும் கூடக் கருங்கல் பணியும்* (TAS,iv,p.151-52.)

தள பாடம் (பெ) படை (1529) *திருவடி ராச்சியத்துக்கு மன்னயரையும் தளபாடமும் அனுப்பியருளி* (SII,vii,52.)

தளம் (பெ) செஞ்சாந்து (1186) *பரிமள தளந்தான் சமைத்த குங்கும பரிவொடு* (SII,xii,263.)

தளம் (பெ) படைகள் (1176) *அதிர் படுவன இடியேறே தளம்படுவன போர் வரம்பே* (SII,xvii,585.)

தளம் (பெ) மாணிக்க வகை (1015) *நீலகந்தி பதிநொன்றும் தளம் பத்தும் ஆக மாணிக்கம் குழிவும் ப்ரஹரமும் வெஜ்ஜமும்* (SII,ii,7.)

தளம்செட்டி (பெ) உள்ளூர்ச் செட்டி (1300) *எங்குள்ள நாட்டுச்செட்டித் தளம்செட்டிகள் நம்மக்கள் அறுபத்து நான்குமுனையும்* (AVNM,6,p.36-40)

தளர்ந்து (வி) வலியிழந்து (1047) *தன்முடி விழத் தலை விரித்தடி தளர்ந்தோட* (SII,iii,28.)

தளர (வி) குறைய (771) *கலி அரைசன் வலி தளர* (EI,xvii,16.)

தளவம் (பெ) முல்லை (800) *வண்டளவங் கார் தோற்றும்* (EI,xiii,10.)

தளவாய் (பெ) படைத்தலைவன் (1723) *தளவாய் ஆள்விட்டு முறிவகைக்குப் பணம் வேண்டின படியினாலேயும்* (TAS,v,p.222-27.)

தளவிசை (பெ) கற்பரப்பு (1607) *திருமடப் பள்ளியும் நீரறையும் அகத்து தளவிசையும்* (TAS,1,p.175-180.)

தளவிபாடன் (பெ) படைவலி யழித்தவன் (1774) *துலுக்கர் தளவிபாடன் துலுக்கர் மோஹந்தவிள்த்தான்* (TAS,v,p.7-17.)

தளறர் (பெ) கோயில் காரியம் பார்ப்போர் ? (1073) *திருக்கோயிலுடையான் வீடும் தளறர் வீடும் சிறு சுங்கத்துக்கு இறுத்த வீடு தவிர* (EC,x,Mb.49 (a).)

தளி (பெ) கோயில் (691) *இத் தளி வழிபாடு செய்வார்க்கு* (SII,i,151;EI,xvii,22.)

தளிக் கணக்கு (பெ) கோயில் கணக்கு (993) *தளிக்கணக்குஞ் சவைக்கணக்கும்* (TAS,p.238.)

தளிகை (பெ) உண்கலம் (911) *அமுது செய்ய வைத்த வெள்ளித் தளிகை* (SII,xix,107.)

தளிகை (பெ) தட்டு (1009) *பொந்நின் தளிகை ஒன்றிநால்* (SII,v,521.)

தளிகைச் சிறப்பு (பெ) ஒரு வகைப் படையல் (1465) *அருளாளப் பெருமாளுக்கு தளிகைச் சிறப்புக்கு பொலி ஊட்டாக திருப்பதியில்* (SII,iv,360.)

தளிகை ஆயுவான் (பெ) உண்கலங்களைக் கழுவுபவன் (1000) *அரிகுத்துவானும் எச்சிலடிப்பானுந் தளிகை ஆயுவானும் அஞ்சு காணம்* (TAS,iii,pp,180-88.)

தளிச்சேரி (பெ) கோயில் பணியாளர் வசிக்குந் தெரு (1014) *கோயிலுந் திருமுற்றமுந் தளிச் சேரியுஞ் சுடுகாடும்* (SII,ii,5.)

திருப்பாட்டுப் பணி (பெ) பாசுரங்களை ஓதும் பணி (1339) *இப்பொன் இரு கழஞ்சுக்கும் பணம் இருபதுக்கும் திருப்பாட்டுப் பணியும் இம்மனையும்* (SII,iv,309.)

திருப்பாலி வலத் திருநாள் (பெ) முளைப்பாலி எடுத்துச்செல்லும் திருவிழா (1273) *சித்தத் துணைப் பெருமாள் உற்ஸவங்களுக்கு திருப் பாலிவலத் திருநாள்க்களுக்கு எழுந்தருளினால்* (SII,viii,43.)

திருப்பாவாடை (பெ) சோற்றைக் கொட்டி வைக்கும் துணி (1014) *திருமேற்க் கட்டி நாலுக்குக் காசு இரண்டுந் திருப்பாவாடை பதினாறுக்குக் காசு நாலும்* (SII,ii,6.)

திருப்பாவாடைப்புறம் (பெ) துணி மேல் படைக்கும் நிவேதனத்துக்காக கொடுத்த நிலம் (1249) *திருப்பாவாடைப்புறத் திருநாமத்துக்காணியும் தில்லைநாயகன் பெரும் பண்டாரத்துக்கு முதலாக* (SII,xii,149.)

திருப்பாவை நாள் (பெ) பெருமாள் முன்பு திருப்பாவை பாடும் நாள் (1390) *கோ₃விந்தப் பெருமாள் திரு வத்₁த்₄யநத்தில் திருப்பாவை நாள் பத்துக்கு* (TDI,i,187.)

திருப்பிண்டி (பெ) பாத்திரம் கழுவ உதவும் மாவு (1000) *புளி ஒரு பலத்துக்கு உரியும் திருப்பிண்டிக்கு உரியும் ஆக* (SII,viii,653.)

திருப்பிருதிட்டை (பெ) தெய்வத்தைக் கோயிலில் புதிதாக நிறுவுகை (1092) *உடையார் கோயிலில் திருப்பிருதிட்டையும் திருப்புதுக்குச் சாந்தும் சேவித்தேன்* (SII,vii,534.)

திருப்பிறை (பெ) பிறை போன்ற அணி (1204) *திருப்பிறை 1னால் 8 3/4 மாறி பொன்* (SII,iii,211.)

திருப்புகை (பெ) கோயிலில் இடும் தூபம் (944) *திருச்சந்தனத்தினுக்குந் திருப்புகைக்குந் திருவிளக்கினுக்கு* (SII,v,783.)

திருப்புத்தரி (பெ) உணவு வகை (1237) *உணக்கலரியும் வெற்றிலையும் அடைக்காயும்...தேவர்க்கு திருப்புத்தரிக்கு நெல் கலமும்* (TAS,vii,p.127.)

திருப்புதல்வர் (பெ) ஆண்மக்கள் (1047) *தந்னிளங்கோக்களையும் நெறியுணர் தந்திருப்புதல்வர் தம்மையும்* (SII,v,978.)

திருப்புதியிது (பெ) ஒரு படையல் உணவு (1140) *எண்ணை உழக்கு சிறப்புத் திருநாள் திருப்புதியிதமுதுக்கு* (SII,vii,485.)

திருப்புதியிது (பெ) குடிமக்கள் முதல் விளைவைக் கோயிலுக்குச் கடமையாகச் செலுத்துதல் (1504) *தைப் பூசத்துனாள் திருப்புதியிது உடன் பெரிய பெருமாள் அமுது செய்தருளும் அதிரஸப்படி ஒன்றும்* (TDI,iii,3.)

திருப்புதுக்குச் சாந்து (பெ) கோயிலைப் புதுப்பித்து வெள்ளையடித்தல் (1092) *உடையார் கோயிலில் திருப்பிருதிட்டையும் திருப் புதுக்குச் சாந்தும் சேவித்தேன்* (SII,vii,534.)

திருப்புறக் குடை (பெ) சுவாமிக்குப் பிடிக்கும் குடை (1014) *உடையார் பண்டாரத்துப் பொன் கொடு செய்த திருபுறக்குடை ஒன்று* (SII,ii,3.)

திருப்பூப்பலகை (பெ) பூ கட்டும் மேடை (1593) *மருதத்தூர் தேவன் கேரளன் எழுந்தருளிவிச்ச திருப்பூப்பலகை* (TAS,v,pp.151-53.)

திருப்பூமண்டபம் (பெ) கோயிலில் மாலை தொடுக்கும் இடம் (1360) *கஸ்தூரிக் காப்பும் குங்குமக் காப்பும் திருப்பூ மண்டபத்துக்குக் கூடை முறம் பெரும் பாயும்* (TDI,i,184.)

திருப்பொற்பூ (பெ) ஒரு நகை (1014) *திருபொற்பூ ஒன்று பொன் பதின் கழஞ்சாக இரண்டினாற் பொன்* (SII,ii,1.)

திருப்போனகம் (பெ) சுவாமிக்கு நிவேதனம் செய்யும் அமுது (1547) *கோ,விந்தராசன் னாள்வழி அமுது செய்தருளும் திருபோனகம்* (TDI,v,92.)

திருமகர குழை (பெ) மகர வடிவில் உள்ள காதணி (1152) *இஷப வாஹந தேவர் திருச்சரி நாலும் திரு அபிஷேகமும் திரு மகர குழையும்* (SII,vi,440.)

திருமகரம் (பெ) சுறாமீனின் வடிவமைந்த காதணி (1014) *திரு மகரம் ஓரணையிநாற் பொன்* (SII,ii,53.)

திருமகள் (பெ) இலக்குமி (833) *எட்டி சாத்தன் றிருமகளும் செந்நன் மாலையுந் செந்நன்மாலையுந் திகழ்ந்து* (SII,xiv,44.)

திருமகனார் (பெ) மகன் (923) *சோழபெருமா னடிகள் திருமகனார் கோதண்டராமர்* (SII,vii,1009.)

திருமங்கல நாண் (பெ) தாலிச்சரடு (1204) *இது மாற்று 8 1/2 இது கோத்த காறை 1னால் வெள்ளி கால் திருமங்கல நாண் 1ம்* (SII,iii,211.)

திருமஞ்சணத் துறை (பெ) நீராடும் துறை (992) *திருமஞ்சணத்துறைக்கு கிழக்கு* (SII,xiii,170.)

திருமஞ்சணம் புக (வி) நீராட்ட (1000) *திருமஞ்சணம் புகவும் பரிகலம் பூசவும் புளி* (SII,viii,653.)

திருமஞ்சனக் குளம் (பெ) சுவாமி நீராடுங் குளம் (1014) *இத்தேவர் திருமஞ்சனக் குளத்தாலும் பறைச் சேரியாலும்* (SII,ii,5.)

திருமஞ்சன நீர் (பெ) விக்கிரகத்தைக் குளிப்பாட்டும் நீர் (934) *அபிஷேகத்திற்கு திருமஞ்சன நீர்* (SII,xxiii,35.)

திருமஞ்சுணக் கிணறு (பெ) நீராடுங் கிணறு (1235) *இன்னாயநாற்கு திருச் சுற்றுள்ளில் திருமஞ்சுணக் கிணறு இட்டேன்* (SII,viii,513.)

திரு மடந்தை (பெ) இலக்குமி (1012) *செம்பியர் பெருமான் செந் திரு மடந்தை மன்* (SII,vii,863.)

திருமடிவளம் (பெ) கோயில் ஊழியர்கள் (1545) *வைஷ்ணவ காரி பணம் 2 திருமடிவளம் பணம் 1 அனு சந்தானம் பணம் 1* (TDI,v,51.)

திருமடிவளவூழியம் (பெ) கோயில் ஊழியம் (1551) *திருப்பதியார் வைஷ்ணவகாரி பணம் 1ம் திருமடிவள வூழியம் பணம் 1 ஆக பணம்* (TDI,v,133.)

திருமடைப்பள்ளி (பெ) கோயிலின் சமையல்கட்டு (1000) *நாளமுர்துக்கு திருமடைப்பள்ளியால் திருநாழி செய்து* (TAS,iii,p.30.)

திருமடை விளாகம் (பெ) கோயிலைச் சுற்றியுள்ள இடம் (1138) *திரு நீற்றுச் சோழன் திருமடை விளாக வென்று வேறு பிறித்து* (SII,vii,407.)

திருமதிணாயகம் (பெ) ஒரு சோழ அரச அலுவலர் (1045) *திருமதிணாயகம் தென்கரை ராஜராஜ வளநாட்டு* (SII,iv,867.)

திருமந்த்ர போநகம் (பெ) சுவாமிக்கு மந்திரம் ஓதியவாறு படைக்கும் படையல் (962) *இத்தேவற்கு திருமந்த்ர போநகத்துக்கு சந்த்ராதித்யவற் செல்வதாக* (EI,xii,15.)

திருமந்தர கொடி (பெ) கோயில் திருவிழாக்களில் வழங்கும் கொடிச் சீலை (1229) *திரு காப்பு நா..க்கு போந்ற பெறவும் திரு மந்தர கொடியும் திரு விளக்கு கெண்ணையும்* (SII,vii,901.)

திருமந்திர ஓலை (பெ) அரசன் உத்தரவுகளைக் கேட்டு எழுதும் அலுவலர் (1006) *திருவாய்மொழிந்தருளிநார் என்று திருமந்திர ஓலை உய்யக்கொண்டார் வளநாட்டுத் திரைமூர் நாட்டுத் திரைமூருடையாந்* (SII,viii,222.)

திருமந்திர ஓலை நாயகந் (பெ) சோழநாட்டில் அரச ஓலை எழுதும் துறையில் தலைமை அலுவலர் (1006) *திருமந்திரஓலைநாயகந் மும்முடி சோழப் பிரம்மாராயநும்* (SII,viii,222.)

திருமருமான் (பெ) மருமகன் (?) (852) *மாமன் பரசிராமன் திருமருமான்* (SII,xii,48.)

திருமாது (பெ) இலக்குமி (1056) *திருமாது புவி எனும் பெரு மாதர் இவர் தன் மாதேவியராக* (SII,iii,29.)

திருமால் (பெ) விஷ்ணு (785) *திருமாலுக் கமர்ந்துறையக் குன்றமன்னதோர் கோஇலாக்கி* (IA,xxii,p.57-75.)

திருமாலை (பெ) சுவாமிக்குச் சாத்தும் பூமாலை (990) *திருமா (ல்)லை கட்ட ஓராட்டை நாள்ளைக்கு இரண்டாக* (SII,xiii,124.)

திருமாலைப் புறம் (பெ) சுவாமிக்கு மாலை கட்டுவதற்காக விட்ட நிலம் (1254) *ஸ்ரீரங்கநாதனுக்குத் திருமாலை சாத்தி அருளத் திருமாலைப் புறமாகத் தன் அர்த்தமும் இட்டு விலை கொண்ட* (SII,iv,512.)

திருமுகக் காணம் (பெ) ஒரு வரி (789) *திருமுகக் காணமும் உப்புக் கோச்செய்கையும்* (SII,ii,99.)

திருமுகத் தேவை (பெ) அரச ஆணை மூலம் வேண்டப்படும் கட்டாய உழைப்பு (1239) *திருமுகத் தேவை செய்யும்மிடத்து காவேரி ஆற்றங்கரை கரைக்குக் குடிப்பற்றான நிலத்தால்* (SII,vi,48.)

திருமுகம் (பெ) ஊர்ச் சபையின் ஆணை ஓலை (959) *ஸபை திருமுகமருளி சேத* (SII,iii,156.)

திருமுகம் (பெ) சுவாமியின் ஆணை ஓலை (1300) *சண்டேசுவர நாயினார் திருமுகம் வைராகிகள் கையிலே* (AVNM,6,p.36-40)

திருமுகம் (பெ) அரச ஆணை கொண்ட ஓலை (550) *நாட்டார்க்குத் திருமுகம் விட* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

திருமுகம் (பெ) குறுநில அரசன் ஆணை கொண்ட ஓலை (953) *குஞ்சர மல்லர்க்கு விண்ணப்பஞ் செய்து திருமுகங் கொண்டு* (SII,viii,694.)

திருமுட்டுகள் (பெ) பூசைத் தட்டு முதலிய பாத்திரங்கள் (1300) *திருவாபரணமும் திருமுட்டுகளும் கணபதிதேவன் வந்த நாளில்* (SII,viii,2.)

திருமுடி (பெ) கிரீடம் (815) *அவன் றிருமுடி மிசை* (SII,iii,206b.)

திருமுத்து வாளி (பெ) முத்துக்களால் ஆகிய ஒரு வகைக் காதணி (1247) *திருமுத்துவாளி 2னால் பொன்னும்* (SII,viii,77.)

திருமுலைத் தடம் (பெ) மார்பில் அணியும் ஓர் அணி (1233) *நாச்சியாற்கு திருவபிசேகம் திருநெற்றிமாலை திருவாரம் திருமுலைத் தடத்துக்கு* (SII,xvii,455.)

திருமுளை (பெ) திருவிழாக் காலங்களில் வளர்க்கும் தானிய முளை (970) *சித்திரை முதலாக திருமுளையட்டி ஒன்பது நாள் திருவிழா வெழுந்தருளிவிக்கவும்* (TDI,i,8.)

திருமுளை விச்சு (பெ) பாலிகைத் தானியம் (1044) *திருமுளை விச்சுக் கழுவப்பால் இருநாழியும்* (SII,i,149.)

திருமுளை னாள் (பெ) திருவிழாத்தொடக்க நாள் (1012) *திருமுளைனாள் பெருந் திருவமிர்துக்கு வயக்கின* (SII,viii,681.)

திருமுற்றம் (பெ) சுவாமி சன்னதி (967) *இருபதின் கல நெல்லும் தூயவாக்கி கூலிப் பரம்பட்டு திருமுற்றத்துக்கே கொடு சென்றளந்து* (EI,vii,20h.)

திருமுன் (பெ) கோயில் முன்புறம் (1474) *திருமுன் பந்தத்துக்கு எண்ணை சாத்துப்படி இலை அமுது அடைக்காய் அமுது* (SII,viii,444.)

திருமுன்பு காழ்ச்சி (பெ) ஒரு வரி (1238) *எங்கள் பேர் காணிக் கடமை புற உடல் பொற்காசு திருமுன்பு காழ்ச்சிக்கும் நினைப்பிட்டுத் தண்டும் காசு* (SII,v,984.)

திருமுன் ஒடுக்கு (பெ) கடவுளுக்குப் படைத்த உணவில் பங்கு (1278) *அபூரித் திருமேனிகளுக்கு குடுக்க திருமுன் ஒடுக்குக்கு* (SII,iv,426.)

திருமூலத் தானத்துப்படாரர் (பெ) மூலவிக்கிரகம் (768) *திருச் சாலைத் துறைத் திருமூலத்தானத்துப் படாரர்க்கு திருநந்தாவிளக்கு* (SII,xiv,27.)

திருமெய் காப்பர் (பெ) கோயில் காவலாட்கள் (1022) *அணுக்க வாசற் திருமெய் காப்பர் காசு எட்டும்* (SII,ii,11.)

திருமெய் காப்பு (பெ) கோயில் காவல் (957) *திருவெறும்பியூராள்வார்க்குத் திருமெய்காப்பாக* (SII,xiii,166.)

திருமெய்ப் பூச்சு (பெ) விக்கிரகங்களுக்கு பூசும் சந்தனம் முதலியவை (850) *திருமெய்ப் பூச்சுக்கும் சிதாரிக்கும்* (SII,iii,43.)

திருமெழுக்கிடுவார் (பெ) கோயிலில் மெழுகித் தூய்மை செய்பவர் (800) *திருமெழுக்கிடுவார் இருவ...க்கும்* (SII,vi,448.)

திருமெழுக்கு (பெ) கோயிலிடத்தைச் சாணத்தால் மெழுகுதல் (921) *திருப்பள்ளித் தாமம் இரண்டுக்குக் காலும் திருமெழுக்கு மூன்றுக்கு எழுமாவரையும்* (SII,iii,139.)

திருமெழுக்கு (பெ) நிவந்தம் (985) *வெம்பற்றான் குடிபட்ட நம்பியும் இருந்து திருமெழுக்குப் பார்த்துத் தெங்கங்கன்று வைத்தும்* (SII,viii,547.)

திருமெழுக்குப் புறம் (பெ) கோயில் மெழுகுவார்க்கு விடப்பட்ட நிலம் (1000) *திருவலஞ்சுழித் தேவர்க்குத் திருமெழுக்குப் புறமாக ஸபையார் பக்கல்* (EI,xxx,19 (iii).)

திருமேழி (பெ) நிலக்கிழார்கள் (1073) *தேசமெல்லாந் திருமேழி கூடி வந்து நிரந்த சோழ மண்டலம்* (EC,x,Mb.49 (a).)

திருமேனி (பெ) விக்கிரகம் (871) *திருமேனி நெய் ஆடுவதற்கு* (SII,viii,581.)

திருமேனி காவல் (பெ) கோயில் காவல் செய்பவர் (1168) *திருமேனி காவல்க்கு நில்க்கும் பிள்ளெற்க்கு முந்நாழி அரிச் சோறும்* (TAS,v,p.63-85.)

திருவட்டணைக் கால் (பெ) வட்டமான இருக்கை (1400) *சூரிய தேவன் இட்ட திருமுட்டு திருவட்டணைக் காலிரண்டினால் இடை நூறும்* (SII,xvii,728.)

திருவட்ட மணி (பெ) ஓர் அணி (1204) *திருவட்ட மணி 24னால் 8 1/2 மாறி பொன் கழஞ்சரை* (SII,iii,211.)

திருவடி (பெ) சுவாமி (1598) *கோயிலுக்கு திருஞ்சனந் திருப்பட்நதாபம் திருவடிவாரம் திரும...* (IPS,863.)

திருவடி (பெ) வேணாட்டு அரசனின் ஒரு மரியாதைப்பெயர் (849) *அய்யனடிகடிருவடியும் மதிகாரரும்* (TAS,ii,p.67-68.)

திருவடி (பெ) பெரியவர்களைக் குறிக்கும் மரியாதைச் சொல் (966) *மாஹாஸபை திருவடி பேரம்பலத்தேய் குறிகூடி இருந்து* (SII,vii,811.)

திருவடி (பெ) இறைவனின் அடிகள் (970) *இத் திருக்கற்றளியிலேய் திருநல்லமுடையாரைத் திருவடித் தொழுகின்றாராக எழுந்தருளுவித்த* (SII,iii,146.)

திருவடி (பெ) கடவுளின் பாதம் (992) *கலைசமாட்டுவிக்க வந்து திருவடி தொழுது நிற்க ஆழ்வார்க்குக் காட்டுகின்ற திருவமுர்தும்* (SII,iii,49.)

திருவடிகள் (பெ) திருமால் (765) *பெருமானடிகள் பங்கு திருவடிகள் பங்கு பகவதியர் பங்கு* (EI,xxxvi,20.)

திருவடிச் சார்த்த (வி) மணஞ் செய்விக்க (891) *முருகஞ் சேந்தியைத் திருவடிச் சார்த்த இவளுக்குக் குடியாக அட்டிக்குடுத்த* (TAS,i,p.17.)

திருவடிநிலை (பெ) விக்கிரக பீடம் (911) *எறிமணி திருவடி நிலை யிருபதின் பலத்தால்* (SII,xix,99.)

திருவடிநிலை (பெ) செருப்பு (1014) *இடத் திருவடி நிலை ஒன்றில் தடவிக்கட்டின பளிங்கு பத்தும்* (SII,ii,93.)

திருவடிப் பிடிக்கும் (வி) கோயில் பூசை செய்யும் (1206) *கோயிற் திருவடிப் பிடிக்கும் ஸ்ரீதரபட்டனும்* (SII,iii,37.)

திருவடிமார் (பெ) பெரியோர் (மரியாதைச் சொல்) (1000) *திருவல்ல வாழப்பன் பிரதிமுகத்து யாக மண்டபத்தில் வச்சு ஊரார் திருவடிமார் அவிரோதத்தால்க் கூடி* (TAS,ii,p.173-207.)

திருவடிவு (பெ) தோற்றம் (1220) *செருவலியில் முருகனென்றும் திருவடிவில் மதனனென்றும்* (CHEN,xiv,p.362-64.)

திருவடைக்காயமிர்து (பெ) பாக்கு (1000) *கைவிளக்குந் திருவடைக்காயமிர்தும் கொடுக்குமவனு முநாழி* (TAS,ii,p.173-207.)

திருவணுக்கத்துடி (பெ) ஒரு வகை முரசு (1196) *ஆதிச்சராமன் திருவாயம் பாடிப் பிள்ளைக்கு கொட்டுவான் வெள்ளித் திரு வணுக்கத் துடியுங் கொடுத்து* (TAS,iii,p.46-52.)

திருவத்த சாமச் சந்தி (பெ) அர்த்த சாம பூசை (1101) *இவ்வாழ்வார்க்குத் திருவத்த சாமச் சந்தி ஒன்றுக்கு அமுதுபடி அரிசி நானாழியும்* (SII,vii,134.)

திருவந்திக்காப்பு (பெ) திருவிழா முடிவிற் கண்ணூறு போகச் செய்யுஞ் சடங்கு (1051) *இத்திருவிளக்கும் இத்திரு வந்திக் காப்பும்* (SII,vii,1046.)

திருவம்ருது (பெ) (= திருவமிது) (808) *திருவடிகட்கு திருவம்ருது முட்ட* (EI,viii,29.)

திருவமிது (பெ) கடவுளுக்குப் படைக்கப்படும் உணவு (800) *அர்த்தயாமத் திருவமிது* (TAS,iii,p.200-03.)

திருவமிருது (பெ) (= திருவமிது) (755) *இரண்டு பொழுதுந் திருவமிருது காட்டுவானாக* (SII,vi,356.)

திருவமுது (பெ) (= திருவமிது) (772) *எம்பெருமானுக்கு திருவமுதுக்கு வைச்ச கழஞ்சு நூற்றிருபதும்* (SII,xiv,19.)

திருவயிறு கருவுயிர்த்த (வி) பெற்ற (905) *மணிமகள் அக்களநிம்மடி திருவயிறு கருவுயிர்த்த ஸ்ரீபராந்தகமஹாராஜன்* (TASSI,1962-65,p.1-31.)

திருவயிறு வாய்த்த (வி) பெற்ற (970) *உத்தம சோழரைத் திருவயிறு வாய்த்த உடைய பிராட்டியார்* (SII,iii,147.)

திருவர்த்த$_3$த$_4$ மண்டபம் (பெ) கருவறையையொட்டி முன்புள்ள சிறு மண்டபம் (1239) *ஸ்ரீ விமானமும் திருவர்த்$_3$த$_4$ மண்டபமும் திரு மண்டபமும்* (SII,vii,437.)

திருவர்த்$_3$த$_4$ யாம பூஜை (பெ) முன் இரவில் செய்யும் வழிபாடு (1134) *திருவர்த்$_3$த$_4$யாம பூஜையும் அமுது படியும்* (SII,vii,67.)

திருவரங்கு (பெ) சுவாமி எழுந்தளுரும் ஓலக்க மண்டபம் (1014) *உமாபரமேச்வரியாருந் திருவிழா எழுந்தருளும் போது ஏறியருளுந் திருவரங்கணியக் குடுத்த பொன்* (SII,ii,6.)

திருவருள் (பெ) கருணை (905) *தென்னவந் திருவருள் சூடிய* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

திருவரை பட்டிகைய் (பெ) இடையில் அணியும் மேகலை (1010) *குந்தவை நங்கையார் இத் தேவர்க்கேய் குடுத்த திருவரை பட்டிகைய் ஒன்றினால்* (SII,viii,234.)

திருவலகிட்டு (வி) பெருக்கி (992) *பழம்படி திருமுற்றந் திருவலகிட்டு திருமெழுகிடக் கடவகளாக* (SII,xiii,170.)

திருவலகிடுவார் (பெ) கோயிலைப் பெருக்குபவர்கள் (959) *திருவலகிடுவார் மூவர்க்குமாக* (EI,xxvii,47.)

திருவலகு (பெ) கோயிலைப் பெருக்குதல் (1001) *திரு அலகும் திரு மெழுக்கும் இட்டு* (SII,xvii,222.)

திருவவதாரம் (பெ) தோன்றுதல் (1012) *திருவெண்காடுடையார்க்கு ...திருவவதாரம் செய்தருளிந* (SII,v,979.)

திருவளர (வி) செல்வம் தழைக்க (771) *வேள்விகுடி என்றப்பதியைச் சீரோடு திருவளரச் செய்தார்* (EI,xvii,16.)

திருவறை (பெ) பாறை (1446) *யோகிப் பரதேசிகளென்று செம்பிலுஞ் சிலையிலுந் திருவறையிலும் காணும் படிக்கு* (TAS,v,p.168-170.)

திருவனந்தல் (பெ) கடவுளின் திருப்பள்ளி எழுச்சிப் பூசனை (1507) *பானகம் கூன் இரண்டுக்கு சக்கரை பலம் 100ம் திருவனந்தலிரண்டுக்கு திருமங்கையாழ்வார் நிலத்தில் கல் மண்டபத்தில் அதிரசப்படி 2ம்* (TDI,iii,11.)

திருவாக் கேழ்வி (பெ) கடவுளின் மொழியைக் கேட்டுச் சொல்பவன் (1012) *கடவுள் தன் திருவாக்கேழ்வித் தஞ்சுடையக் கடிகையன் தனக்கும்* (SII,vii,863.)

திருவாசல் (பெ) கோயில் வாசல் (1000) *திருமண்டபம் இரண்டும் செய்து கீழைத் திருவாசலுந் திறந்து* (SII,vii,1002.)

திருவாசல் மேர்வை (பெ) ஒரு வரி (1350) *காசாய (ங்) வற்கம் ஆயம் திருவாசல் மேர்வை வாசலொட்டு* (ARE,1924,140)

திருவாசலிற் போந்த குடிமை (பெ) அரண்மனைக்காக வசூலிக்கும் குடிமை (978) *இக்காசு நூறுங் கொண்டு இ நிலங்களால் வந்த திருவாசலிற் போந்த குடிமையும் ஊரிடுவரி பல* (SII,iii,151-151a.)

திருவாசிகை (பெ) பிரபை (1204) *இராசாண்டானாந சோழவிச்சாதரப் பல்லவரையர் செய்வித்த திருவாசிகை 1னால் 8 5/16 மாறி பொன்* (SII,iii,211.)

திருவாண்டெழுத்து (பெ) ஆண்டுப்புதுக்கணக்கு (1494) *ஆடி அயனத்து னாள் திருவாண்டெழுத்து இடுகிறபோது அமுது செய்தருளும் அதிரஸப்படி ஒன்றும்* (TDI,ii,115.)

திருவாணை (பெ) அரச ஆணை (796) *விடேல் விடுகென்னுந் திருவாணை நடாவி* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

திருவாணை புறத்தார் (பெ) அரச ஆணைக்கு மாறுபட்டவர் (991) *வெவ்வேற்று வகை திருவாணை புறத்தார் படும் தண்டம் பட தீட்டுக்குடுத்தோம்* (SII,xiii,131.)

திருவாத ஊரார் (பெ) மாணிக்கவாசகர் (1467) *இக்கோயிலுக்கு திருவாத ஊரரை இவர் ஏறியருளப் பண்ணுகையில்* (IPS,803.)

திருவாதிரை (பெ) ஒரு நட்சத்திரம் (849) *விசைஅரையன் றிருவாதிரை நான்று அட்டழிய வைத்த அரிசி* (IPS,15;SII,xii,46.)

திருவாதிரை கணப்பெருமக்கள் (பெ) திருவாதிரை விழாக் குழு (933) *திருச் செங்கோட்டு திருவாதிரை கணப்பெருமக்கள் கைய்யில்* (SII,xix,426.)

திருவாதிரை விழா (பெ) திருவாதிரை நட்சத்திரத்தன்று கொண்டாடப்படும் திருவிழா (985) *புவனிவிடங்கர் திருவாதிரை விழா வெழுந்தருளி புகுந்த கால்* (SII,xix,317.)

திருவாய்க் கேழ்வி (பெ) அரசன் (அல்லது கடவுள்) வாய்மொழியாக இடும் உத்தரவு (1032) *திருவாய் மொழிந்தருளத் திருமந்திர ஓலை செம்பியன் விழுப்பரையந் எழுத்தினால் ...திருவாய்க்கேழ்விப் படி கல்லில் வெட்டித்து* (SII,ii,20.)

திருவாய் மொழிந்தருள (வி) அரசன் வாயால் உத்தரவு கொடுக்க (1002) *திருவாய் மொழிந்தருள நாள் ஐம்பத்திரண்டினால்* (SII,viii,217.); (1006) *திருவாய் மொழிந் தருளினார் எந்று திருமந்திர ஓலை* (SII,viii,222.)

திருவாயுஷ்யார்த₂ம் நீண்ட ஆயுளின் பொருட்டு (1200) *திருவாய்மொழிந்தருளி பெருமாளுக்கு திருவாயுஷ்யார்த₂மாஹ ஸ்ரீ ஸு₂சீந்த்₃ரமுடைய நாயனாற்கு பெருமாள் தா₃நம் பண்ணி* (TAS,ii,p.15-21.)

திருவாரம் (பெ) ஓர் அணி (1204) *திருவாரம் 1னால் பொன் சிரிச் சக்கரம் 1னால்* (SII,iii,211.)

திருவாராத₄னை (பெ) பூசை (947) *சி₃ஷ்ய ப்ரசி₃ஷ்ய வர்க்₃க₃த்து திருவாராத₄னை* (SII,v,531.)

திருவாராதினை (பெ) பூசை (928) *திருவாராதினை செய்யும் யோகியர்க்கு* (SII,xix,414;IPS,63.)

திருவாலத்தி (பெ) விக்கிரகத்துக்கு முன் தீபம் முதலியவற்றைக் காட்டுவது (1208) *கோயில் தேவ அடியார் திருப்பாட்டடைவும் திருவாலத்தி எடுக்கவும் மெய்க்காட்டடைவும்* (IPS,162.)

திருவாலத்தித் தட்டம் (பெ) தீபாராதனைத் தட்டு (1249) *செப்புப்பானை அழித்துச் செய்த திருவாலத்தி தட்டம் 1னால் இடை 16ம் ஆக* (SII,xii,150.)

திருவாலத்தித் தட்டி (பெ) தீபாராதனைத் தட்டு (1205) *திருவாலத்தித்தட்டி இரண்டினாலிடை எழுபதிந் பலமும்* (SII,vii,537.)

திருவாழி (பெ) திருமாலின் சக்கரம் (1149) *திருவாழியும் எழுத்தாணியும்* (TAS,vii,p.5-6.)

திருவாழிக்கல் (பெ) விஷ்ணு கோயிலின் நிலங்களின் எல்லையைக் குறிக்க நடும் சக்கர முத்திரை கொண்ட கல் (1214) *தென்னெல்லையிற் திருவாழிக் கல்லை யிடத்து வைத்துக் கிழக்கு நோக்கியும்* (EI,xxv,11.)

திருவாழி மோதிரம் (பெ) கணையாழி (1394) *குடிக்கு ஒரு ஆடுர வெட்டும் கல்லியாணத்துக்கு ஒரு திருவாழி மோதிரம் ஒரு ஆடுர பணம் ஒன்றும்* (IPS,689.)

திருவாழியாழ்வார் (பெ) சக்கரத்தாழ்வார் என்ற தெய்வம் (1300) *பல்லவராயர் ஏறப் பண்ணின திருவாழி யாழ்வார்க்கு* (AVNM,7,p.50-51)

திருவாளத்தி (பெ) (= திருவாலத்தி) (1024) *மந்திர தீ₃பத்துக்கும் அந்திக்காப்புக்கும் திருவாளத்திக்கும்* (SII,xvii,319.)

திருவாளி (பெ) ஒரு நகை (1014) *திருவாளி ஓரணையினால் பொன்* (SII,ii,2.)

திருவிடைக் கட்டு (பெ) கருவறையை ஒட்டியுள்ள அரை மண்டபம் (1110) *இஷ்டிகை இழிச்சிவித்து திருக் கற்றளியும் திருவிடைக் கட்டும் திரு மண்டபமும் செய்வித்து* (CHEN,xv,p.241.)

திருவிடையாட்டம் (பெ) விஷ்ணு கோயில்களுக்கு அளிக்கப்பெற்ற மானிய நிலம் (1070) *நரஸிம்ஹமங்கலத்து மஹாஸபை₄யோம் திருவிடையாட்டமாக விட்ட எங்கள் ஊர்* (SII,i,42.)

திருவிதிசாநி (பெ) கோயில் தாசி (1575) *மண்டபக் கொத்தர் பணம் 1 திருவிதிசாநிக்கு பணம் 3ஆக பணம்* (TDI,iii,105.)

திருவிராக்கலி (பெ) (= திருவிரையாக்கலி) (1200) *தே₃வரைப் பூஜியாதார் திருவிராக் கலி நாற்பத்தெண்ணாயிரவர் ஆணை* (SII,vi,554.)

திருவிராச்சியம் (பெ) ஆட்சி (700) *திருவிராச்சியஞ்(ச்) செல்லா நின்றது* (ARE,1960,358.)

திருவிருப்பு மனை (பெ) கோயிலின் மனை (1259) *திருவிருப்பு மனை இரண்டும் நீக்கி* (SII,vii,457.)

திருவிரையாக்கலி (பெ) சிவபெருமான் பெயராலிடும் ஆணை (1119) *திருவிரையாக்கலி மறுத்தாரை தேவரடியாராயுள்ள ஆண்டார்கள்ளேய் தெண்டித்து திருவிரையாக்கலி நிலை நிறுத்தக் கடவர்களாகவும்* (SII,vii,785.)

திருவிலைச்சினைப் பேறு (பெ) ஒரு அரச தூதுவரின் பொருட்டு இடும் வரி (1267) *பஞ்சுபீலி சந்துவிக்கிரம் திருவாசல் திருவிலைச்சினைப் பேறு பொன்வரி வினிஓக மற்றும்* (SII,v,737.)

திருவிழா (பெ) கோயிலில் சிறப்பு நிகழ்ச்சிகள் (800) *பெருமானடிகளுக்குத் திருவிழாச் செய்வதற்கு* (IPS,237.)

திருவிழாப்புறம் (பெ) திருவிழா நடத்த விடப்பட்ட நிலம் (880) *திருவிழாப்புறமாக பாங்கிரண்டும்* (SII,xiii,202.)

திருவிழா வீதி (பெ) திருவிழா நாளில் விக்கிரகம் ஊர்வலம் வரும் வீதி (1006) *வடக்கு நோக்கி இரண்டேயரைக் காற் கோல் திருவிழா வீதி விட்டு நாட்டின புள்ளடிக் கல்லேயுற்று* (SII,v,518.)

திருவிள்ளமாய் (வி) இசைந்து (1196) *உலகுடைய நாயநார்க்கும் விண்ணப்பஞ் செய்து திருவிள்ளமாய் சைவச் சக்கரவத்திகளும்* (SII,vii,1041.)

திருவிளக்கிடையர் (பெ) திருவிளக்குக்கு நெய் வழங்கும் இடையர் (1226) *பொலிகிடாய் 2ம் பொலி மோத்தை 2ம் இக்கோயிலில் திருவிளக்கிடையரில்* (SII,iv,644.)

திருவிளக்கு (பெ) கோயிலில் ஏற்றப்படும் தீபம் (770) *ப்ரஹ்மபுரித் தேவர்க்கு வைச்ச திருவிளக்கு ஒன்று* (SII,xiv,18.)

திருவிளக்கு குடி (பெ) கோயிலில் விளக்கு எரிக்கும் கடமைப்பட்ட இடையர் குடிகள் (1462) *திருவேங்கடம் உடையானுக்கு திருவிளக்கு குடியாய் வருஷம் ஒன்றுக்கு அளக்கும்* (TDI,ii,12.)

திருவிளக்குடி (பெ) (= திருவிளக்கு குடி) (1445) *சிங்கபுரம் பெருமா பறி ஆழ்வாற்கு திருவிளக்குடி ஆக விட்ட* (SII,xvii,252.)

திருவிளக்கெண்ணை (பெ) கோயில் விளக்கு எரிக்கும் எண்ணை (1014) *திருவிளக்கெண்ணைக்கும் உள்ளிட்டு வேண்டும் அழிவுக்கு* (SII,ii,6.)

திருவிளத்தடைத்தருளி (பெ) எண்ணி (1090) *பாண்டி மண்டலங் கொள்ள திருவிளத் தடைத் தருளி* (SII,iii,71.)

திருவிளையாட்டம் (பெ) (= திருவிடையாட்டம்) (1539) *லிங்கப்பனாயக்கற்கு மெய்காவல்க் காணிஆழ்ச்சிக்கு திருவிளையாட்டம் சிறுவரம்பூரிலெ சேத்த இறையிலி* (SII,v,1403.)

திருவிளையாட்டு (பெ) (சிவனுடைய) திருவிளையாடல் (1300) *இந்த தன்மத்தை நடத்தினவந் அறுபத்துனாலு திருவிளையாட்டும்* (SII,v,258.)

திருவீதி மடப்புறம் (பெ) திரு வீதியிலுள்ள மடத்துக்கு விடப்பட்ட நிலம் (1106) *உடையார் திருவூறலுடையார்க்குத் திருவீதி மடப்புறமாக விடக் கடவ நிலம் விட்டு* (SII,v,1381.)

திருவுடம்பு (பெ) விக்கிரகம் (1218) *கண்டியூர் மஹாதேவர் திருவுடம்பு ஸ்ரீபீடமும்* (TAS, i, p.289-91.)

திருவுத்தரியம் (பெ) மேலாடை (1204) *திருவுத்தரியம் 1னால் 8 1/2 மாறி பொன் இருகழஞ்சே நாலு மஞ்சாடியும் ஆறுமா* (SII,iii,211.)

திருவுருவான (வி) அளந்த (1125) *பதினறு சாண்கோலால் திருவுருவானபடி அமநயடப்பறுகாலும் உட்பட தடி பலவிநால் குழி* (CHEN,i,p.83-86.)

திருவுலகளந்த கணக்கு (பெ) நாடுமுழுவதும் நிலத்தை அளந்த கணக்கு (1187) *குலோத்துங்க சோழ தேவர்க்கு 16 ஆவது திருவுலகளந்த கணக்குப்படி நீங்கல் நீக்கி* (SII,v,990.)

திருவுழுத்து (பெ) ஓர் அணி (1014) *இரட்டை திருவுழுத்து ஓரணையினால் பொன் பதின் கழஞ்சேய்* (SII,ii,2.)

திருவுஸ்ஸஹம் (பெ) திருவிழா (989) *பெருமானடிகளுக்குத் திருவுஸ்ஸஹஞ்செய்ய* (SII,viii,521.)

திருவெண்ணைக்காப் புறம் (பெ) சுவாமிக்கு எண்ணைய்க் காப்புச் செய்வதற்காக கொடுத்த நிலம் (1161) *கைக்கோள நாயகற்கு திருவெண்ணைக் காப்புறமாக வேளாநேரியில் வயக்கிவிட்டக் கோதண்ட வயக்கல் நிலம்* (IPS,190.)

திருவெழுச்சிக் குடிமை (பெ) திருவிழா பொருட்டு குடிகள் செலுத்தும் ஊழியம் (1068) *ஆள்வரியும் திருவெழுச்சிக் குடிமைய்களும் கூத்திகாலும் மேல்வரி முதலாய்* (SII,vii,467.)

திருவெழுத்திட்டு (வி) பட்டப்பெயர் சூட்டி; முடிசூடி (1090) *ஸ்ரீ ராஜாத்ராஜதேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திரு நாளியாண்டு* (AVNM,7,p.32)

திருவேட்டு வகை (பெ) ஒரு கோயில் பணியாளன் (1496) *சிங்கமுறை யானுக்கு பணம் 2 திருவேட்டுவகை பணம் 1 கைய்க்கோளனுக்கு பணம் 1* (TDI,ii,135.)

திருவேட்டை (வி) சுவாமி வேட்டைக்குச் செல்லல் என்ற சடங்கு (1012) *உடையார் திருவேட்டை யெழுந்தருளத் திருவெணாவல்ப் பூந்தோட்டத்தில்* (SII,viii,681.)

திருவேட்டை தோப்பு (பெ) சுவாமி வேட்டை யாடுவதற்குச் செல்லுந் தோப்பு (1230) *திருநலக்குன்றம் உடைய நாயநாற்க்கு திருவேட்டை தோப்பாக* (IPS,290.)

திருவேளைக்காறத் துரம் (பெ) கோயில் ஊழியத்தில் ஒரு வகை (1453) *இக்கோயிலில் திருவேளைக்காறத்துரமும் குடுத்துத் திருப்பதியிலெ இரண்டு மனையும் குடுத்து* (IPS,793.)

திருவோடை (பெ) பூ வளர்க்கும் நீரோடை (1249) *திருச்செங்கழுநீர்த் திருப்பள்ளித் தாமமாக்க பெருமாள் திருவோடை என்னும் பேரால் செய்கிற திருவோடைக்கு* (SII,viii,52.)

திருவோணக் கணப் பெருமக்கள் (பெ) திருவோணத் திருவிழாவை நிர்வகிக்கும் குழுவினர் (985) *ஊட்டுவதாக என்றோம் திருவோணக் கணப்பெருமக்களோம்* (SII,xix,219.)

திருவோணம் (பெ) திருவோண நட்சத்திரம் (887) *சித்திரைத் திருவோணம் பெருவிழாவாக* (SII,vii,421.)

திருவோலக்கம் (பெ) காட்சிதந்து வீற்றிருத்தல் (1015) *எழுந்தருளி புகுந்து இத் திருவோலக்கத்தில் அமுது செய்ய* (SII,vii,139.)

திருனாள் (பெ) திருவிழா (985) *இப்பிராட்டியார் திருனாளான சித்திரைத் திருக்கேட்டைய் நாள்* (SII,xix,383.)

திருனாள்ப்படி (பெ) திருவிழாச் செலவு (1127) *திருனாள்ப்படிக்குத் திருச் சாந்து சாத்த...* (SII,viii,511.)

திரு அகம்படி (பெ) கோயிலில் காவல் செய்வோர் (?) (1446) *திருஅகம்படிக் கைக்கோளற்கு ப்ரஸாதம் நாழி ஆக ப்ரஸாதம் நாழி மூவழக்கு நீக்கி* (TDI,i,220.)

திரு அமிது (பெ) நைவேத்தியம்; படையல் (731) *திருப்பலி போதவதற்கும் திரு அமிதுக்கும்* (SII,viii,331.)

திரு அரங்கு (பெ) ஒரு வரி (1279) *கோயில் குடிமை திரு அரங்கு வீரபோகம் மட அரிசி உள்ளிட்டன* (SII,viii,44.)

திரு ஆராதனை (பெ) கடவுட் பூசை (800) *திரு விளக்கினுக்கும் திரு ஆராதனை சேவார்க்கும்* (SII,vi,448.)

திரு இருப்பு (பெ) கோயில் கட்டிடம் (1248) *உடையார் புற்றிடங்கொண்ட நாயினார் திரு இருப்புக்கு வடக்கு* (SII,xii,148.)

திரு உடப் பிறந்தார் (பெ) ஒரு தாய் மக்கள் (969) *சோழப்பெருமானடிகள் திரு உடப்பிறந்தார் நங்கை வரகுண பெருமானார்* (SII,xiii,240.)

திரு உத₃ர ப₃ந்த₄நம் (பெ) வயிற்றில் அணியும் பட்டிகை (1014) *திரு உத₃ரப₃ந்த₄நம் ஒன்றில் (த்) தடவிக் கட்டின பளிங்கு* (SII,ii,39.)

திரு உலா (பெ) சுவாமியின் ஊர்வலம் (1191) *தைப்பூசத்திருநாள் ஆட்டத்து வெளியில் திரு உலாச் செய்தருளா நிற்க* (SII,xvii,595.)

திரு ஒலக்கம் (பெ) தெய்வம் அத்தாணியிருப்பு (934) *திருவிடைமருதுடையார்க்கு திரு ஒலக்கத்து மூன்று ஸந்தியும்* (SII,v,721.)

திரை (பெ) திரைச் சீலை (1289) *நாயகரும் ஏறி அருளினால் முற்பாடு திருத்திரை எடுத்தல் பதியிலார் ஆடவும்* (SII,viii,333.)

திரை (பெ) அலை (905) *ஓங்கு திரை வியன் பரப்பில்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

திரைச்சீலை (பெ) ஒரு வரி (1504) *தீவளிகை திரைச்சீலை மகாநவமி முறி நல்லெருது* (ARE,1918,118)

திரையோத₃சி₀ (பெ) பதின் மூன்றாந்திதி (1128) *ஆதித்தவாரத்துத் திருவளர் பதியில் திரயோத₃சி₀ பக்கத்து இன்நன பலவும்* (SII,vii,773.)

தில்லை (பெ) மேடை (?) (1000) *கொடிக்கட்டிய மணிமாளிகைத் தில்லையுட் கொற்ற மன்னர்* (SII,iv,167.)

தில்லை நாயகன் (பெ) நடராசர் (1120) *செம்பொநால் ஏனலென தில்லை நாயகற்கு* (SII,iv,225.)

திலகன் (பெ) நாயகமானவன் (905) *அவநிஸுர குல திலகன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP, p.95-115.)

திலதம் (பெ) (= திலகன்) (808) *பல்லவகுல திலத பா₄ரத்₃வாஜ கோ₃த்ரா* (EI,viii,29.)

தில பர்வ்வதம் (பெ) எள்ளால் செய்யப்பட்ட மலை (1015) *ராஜேந்த்₃ர சோழ தேவர் தில பர்வ்வதம் புக்கருளி* (SII,viii,236.)

திலாங்கம் (பெ) எள் சோறு (1546) *திலாந்நம் 365 திருக்கணாமடை 365* (TDI,v,78.)

திவள (வி) விளங்க (1012) *இரட்டை வெண் கவரி தெற்றிய வனலந் திவள வெற்றியுள் விற்றிருந்தருளிய வேந்தன்* (SII,vii,863.)

திவஸம் (பெ) நாள் (953) *இவகளுக்கு மெய்யால் திவஸம் முன்னாழி நெல்லுப் பெறுவதாக* (SII,v,716.)

திவாகரன் (பெ) சூரியன் (1200) *வேழந்தரு கொடை வாண திவாகரன் விதிமுறை செய்வது மெய்கண்ட* (CHEN,iii,p.423-432.)

திளைக்கும் (வி) களிக்கும் (771) *அறுகாலினம் புடை திளைக்கும்* (EI,xvii,16.)

திளைத்தாட (வி) முழுகியாட (1176) *வாழ முடி சூடி ஆர்த்த வமரரபிஷேகச் சேத்திலரசர் திளைத்தாட* (si,xvii,585.)

திளைத்து (வி) நெருங்கி (771) *தீவாய் அஇலேந்தித் திளைத்தெதிரேய் வந்திறுத்த ஆய்வேளைஉம்* (EI,xvii,16.)

திளைப்ப (வி) நிறைந்திட (1210) *மறைநெறி திகழ சுடர் நெறி சமையங்களறந் திளைப்ப* (CHEN,xi,p.344-46.)

திறத்து (பெ) வகைப்பட்ட (896) *இவ்வம்பலத் தறு திறத்து வாரிகப் பெருமக்களும்* (SII,xiii,312.)

திறந்து (வி) அடைப்பு நீக்கி (1000) *கீழத் திருவாசலுந் திறந்து அத்திருவாசலும் செய்வித்தாந்* (SII,vii,1002.)

திறந்துழவு (பெ) (=திறப்பு): இறை நிலம் (1220) *இவன் காணியாய் திறந்துழவான ஊருணி வடவாய் நிலம்* (AVNM,7,p.57-58)

திறப்பது (பெ) மூடியைத் திறத்தல் (861) *கைச்சப்படியே கவர் திறப்பதாகவும்* (SII,xiv,78.)

திறப்பு (பெ) சார்பு (880) *ஊர் திறப்பில் நாற்பத்தெட்டுக் காணம் தண்டப்படுவதாகவும்* (SII,xii,102.)

திறப்பு (பெ) திறந்த வெளி (1245) *ஸபைப்பொது ஒழுக்கையிலே வழி திறப்பாக கிடப்பதாகவும் மேற்க்கு* (IPS,340.)

திறப்பு (பெ) மானிய நிலம் இறை நிலமாக மாற்றப்படல் (929) *குரங்குணி திறப்பு மீட்டு மற்றுந் தேவகாரியம் உள்ளதுஞ் செய்து* (SII,xiv,74.)

திறம் (பெ) வகை (833) *இத்திறத்தால் ஆள்வினைகளின் னிருஞ்சோழ நன்னாட்டுள் எத்தனையுந் திருத்துவித்தோன்* (SII,xiv,44.)

திறம் (பெ) வழி (771) *எத்திறத்தும் இகலழிக்கும்* (EI,xvii,16.)

திறம் (பெ) மேன்மை (800) *தஞ்சைத் திறம் பாடி நின்றார்* (EI,xiii,10.)

திறம்பச் சொல்லுவான் (பெ) மாறுபடச் சொல்லுபவன் (1113) *திருவேளைக் காறரோம் இப்படி திறம்புவானும் திறம்பச் சொல்லுவானும்* (SII,iv,1396;EI,xviii,38;EZ,ii,p.242-255.)

திறம்பா (வி) மாறாத (1220) *மறை நாலும் உரைதிறம்பா மனுநூலும்* (CHEN,xiv,p.362-64.)

திறம்பாமல் (வி) மாறுபடாமல் (1196) *அறங் காத்தான் பாதந் திறம்பாமல் சென்னிமேல் வைத்து* (SII,vii,1041.)

திறம்பாமை (பெ) மாறுபடாமை; விலகாமை (1079) *அறங்காத்தாந் பாதம் திறம்பாமைச் சென்நி மேற்கொள்க* (SII,vii,484.)

திறம்பிநார் (பெ) மாறுபட்டவர் (993) *இதற்றிறம்பிநார் திருவாணை* (SII,xiii,191.)

திறம்பில் (வி) மாறுபட்டால் (802) *குடுப்போமானோம் இதற் றிறம்பில்* (SII,xii,42.)

திறம்பினார் (பெ) மாறுபட்டார் (1076) *இதில் திறம்பின்னார்ருண்டாகில் உண்டிகைய்யிலும் பட்டிகைய்யிலும் காட்டாதே நிசதம் பன்னிரண்டு காணம் தஂண்டமிடக் கடவோமாக ஒட்டிக் குடுத்தோம்* (SII,xiii,157.)

திறம்பினோம் (வி) மாறுபட்டோம் (871) *விற்றுக்குடுத்தோமிதற்றிறம்பினோம்* (SII,xii,97.)

திறம்புவான் (பெ) மாறுபடுபவன்; மீறுகின்றவன் (1113) *திருவேளைக்காறரோம் இப்படி திறம்புவானும் திறம்பச் சொல்லுவானும்* (SII,iv,1396;EI,xviii,38;EZ,ii,p.242-255.)

திறல் (பெ) வலிமை (833) *பெருந்தெய்வத் திறற் பாண்டியர்* (SII,xiv,44.)

திறல் (பெ) திறமை (905) *கற்றறிந்தோர் திறல் பரவ* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

திறவர் (பெ) தரப்பினர் (1800) *கோட்டையூரிலே குவித்துக் கெட்ட அளவில் இரண்டு திறவரும் பொருந்த வகையறத்து விட்டபடி* (IPS,915.)

திறவர் (பெ) சார்பாளர்; பகுதியைச் சேர்ந்தவர் (985) *இன் நெய்க்கு இவ்விரண்டு திறவர் வழியும் வைத்த பொலியூட்டுக்கு* (SII,viii,720.)

திறவிதின் (பெ) திறமையால் (771) *பிறர்பால் உரிமை திறவிதி னீக்கி* (EI,xvii,16.)

திறவு (பெ) காலாவதி ஆக்கல் (1600) *இப்படி வகை பெற்ற நிலத்துக்கு ஒற்றி சாதனமென்று கொண்டு வந்தால் திறவும் கிழியும் பட்டு அவதாரப் படக்கடவராகவும்* (IPS,894.)

திறன் (பெ) ஆற்றல் (905) *மிக திறனுடை வேந்தழித்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

திருச் சன்னம் (பெ) ஓர் இசைக்கருவி (1140) *சங்கு காளமும் திருச்சன்னமும் ஊதுவார் பேர் இருவற்கு* (SII,vii,485.)

திறை (பெ) கப்பம் (1075) *ஆழ்கடற்றீவாந்தரத்து பூவர் திறை விடுத்த கலன்சொரி களிறு முறை நிற்ப விளங்கிய* (SII,iii,68.)

திறை (பெ) காணிக்கை (?) (1043) *அந்நால்வருஞ் சொன்ற இறையுந் திறையுங் கொள்விது* (TAS,viii,p.39-40.)

திறை (பெ) கப்பம் (1048) *சிங்களர் பங்களர் அந்தர முதலிநர் அரைசிடு திறைகளும் ஆறிலொந்று* (IPS,108.)

தின்ற (வி) உண்ட (1000) *கடைவாய் நிணந்தின்ற பாவி தன் காதற் கரும்பேடையின்* (SII,iv,167.)

தினசரி க்காணிக்கை (பெ) ஒரு வரி (1494) *அவதர வத்தனை ...ணிக்கை தினசரி காணிக்கை பத்துக்கு இரண்டு காணிக்கை* (ARE,1913,074)

தினை (பெ) ஒரு தானியம் (984) *உழுந்து நானாழியுந் தினை நானாழியும்* (SII,xix,341.)

தீ

தீ (பெ) நெருப்பு (691) *கூரத்து மண்டத்துகக்கு தண்ணீர்க்குந் தீக்கும்* (SII,i,151;EI,xvii,22.)

தீக்ஷிதன் (பெ) குருவினிடம் முறையாக வழிபாட்டு முறைகளைக் கற்றவன் (1055) *வேதமும் ஸ்ரீ ஆகமமும் பேர் தீக்ஷிதநாயிருக்கும் ப்ராமணநுக்கு குடுத்து* (SII,iii,55.)

தீங்கு (பெ) கேடு (885) *இதனைத் தீங்கு நினைத்தான்* (SII,iii,92.)

தீங்கு நின்றார் (பெ) தீமை செய்பவர் (1100) *இத்தந்மத்துக்குத் தீங்கு நின்றார் காக்கையும் நாயுமாவ...* (SII,iv,1405.)

தீங்கு நினைத்தான் (பெ) கேடு நினைத்தவன் (974) *இந்த தல்மத்துக்கு ஊன்னம்மாக நின்றோம் இக்கிராமத்தை தீங்கு நினைத்தான் பாவத்து படுவோம்* (SII,xiii,284.)

தீங்கு வேண்டுவான் (பெ) கேடு நினைத்தவன் (985) *இது பன்மாஹேச்வர ரக்ஷை இதுக்கு தீங்கு வேண்டுவான் வழி அறுக* (SII,viii,688.)

தீஞ்சது (பெ) சாவியாகப் போனது (1545) *நிலத்துக்கு வெட்டி வேகரியும் ஈஞ்சதுய் தீஞ்சதுய் தவிர்த்துக் கொடுத்தோம்* (TAS,viii,p.2.)

தீட்டல் (பெ) நன்றாகக் குத்தியது (878) *அரிசி சென்னெற்றீட்டல் நானாழி* (SII,xiv,13.)

தீட்டி (வி) எழுதி (919) *குடவோலைக்குப் பேர் தீட்டி* (ARASI,1904-05,p.131.)

தீட்டியது (வி) எழுதியது (985) *த்ரிபுவநமஹாதேவி வய்த்த நிபந்தப்படி தீட்டியது* (SII,xix,380.)

தீட்டு (பெ) அரச ஆணை ஓலை (1018) *தாமோதிர பட்டனும் ஒப்பிட்டுப்புக்க நந்தீட்டின் படியே வரியிலிட்டுக் கொள்க வென்று* (SII,iii,205.)

தீட்டு (பெ) ஒப்பந்த ஆவணம் (991) *திருவாணை புறத்தார் படும் தண்டம் பட தீட்டுக் குடுத்தோம்* (SII,xiii,131.)

தீட்டுவது (வி) எழுதுவது (921) *வாசித்த அப்பேர் தீட்டுவதாகவும்* (ARASI,1904-05,p1-31.)

தீண்டாச் சேரி (பெ) ஒதுக்கப்பட்ட சாதியார் வசிக்கும் இடம் (1014) *இவ்வூர் ஊர் நத்தமுங் குளங்களும் புலத்தில் குளங்களும் தீண்டாச்சேரியும் பறைச் சேரியும்* (SII,ii,4.)

தீண்டி (வி) முட்டி (887) *மஹாமதமும் கஜத் தீண்டிப்படுத்த* (EI,xxxii,31 (b).)

தீண்டிந (வி) பற்றிய (1195) *நாயற்று கிழமையும் பூசமும் ஆன ஞான்று தீண்டிந ஸூர்ய்ய க்ரஹணத்தின்* (SII,v,1379.)

தீண்டின (வி) பற்றின (894) *ஆனித்தலைப் பிறையால் தீண்டின ஸூர்ய க்ரஹணத்தி நான்று* (SII,v,1368.)

தீத்தக்குளம் (பெ) நீராடும் குளம் (1148) *இத்தேவர் தீத்தக்குளமான தேவனார் கேணியின் கீழ் கரையில்* (SII,vii,944.)

தீத்தம் (பெ) ஆராதனை நீர் வழங்கல் (1521) *திருநாளுக்கு தீத்தம் திருநீறும் முன்னொடுக்கும் பெற்று* (AVNM,10,p.64-66)

தீதில் (வி) குற்றமற்ற (1100) *போதி நிழலமர்ந்த புண்ணியன் போலெவ் வுயிர்க்குந் தீதிலருள்* (SII,iv,1405.)

தீது (பெ) கேடு (800) *தீது கண்டான் றஞ்சைச் செம்புல நாட்டு வெண்கோடல்* (EI,xiii,10.)

தீந்தமிழ் (பெ) இனிய தமிழ் இலக்கியம் (815) *தீங்கபிற்றிற் செவி கழுவியும்* (SII,iii,206b.)

தீங்மை (பெ) இழவு போன்ற அமங்கல நிகழ்வுகள் (1300) *அடிமாத முதல் என்மைத் தீந்மைக்கு இரட்டைச்சங்கும் ஊதிப் பேரிகையுள்ளிட்டன* (SII,v,238.)

தீப்பாஞ்சாள் (பெ) தீப்புகுந்தாள் (உடன்கட்டை ஏறினாள்) (1119) *வசவ காமுண்டர் மகள் சிக்கவை தீப்பாஞ்சாள்* (EC,ix,Kn.12.)

தீப்பாய்கின்றார் (பெ) உடன்கட்டை ஏறுகின்றவர் (973) *இளங்கோவேளார் தேவியார் கங்கமாதேவியார் தீப்பாய்கின்றார் குடுத்தது* (SII,viii,690.)

தீப்போக்கி (வி) புடமிட்டு (941) *சுட்டு வெட்டி சுடுகடுத்து தீப்போக்கி ஊர்க்கற் செமை* (SII,viii,529.)

தீப்போக்குச் செம்பொன் (பெ) புடமிடப் பெற்ற தூய தங்கம் (957) *விலைப்பொருள் தீப்போக்குச் செம்பொன் கழைஞ்சில் பேர்த்து* (SII,xiii,164.)

தீபம் (பெ) விளக்கு (890) *தீப மொன்றுக்குச் செம்பொன் சாம்பிராணிப் பழங்காசினோடு* (SII,v,573.)

தீபமாலை (பெ) விளக்கு வரிசை (887) *தீப மாலை கூட்டப் பசுவி னறுநெய்* (SII,xiv,16a.)

தீபளிகை (பெ) தீபாவளித் திருவிழா (1542) *உகாதி தீபளிகை நாள் அதிரசப்படி 2* (TDI,iv,181.)

தீம்மை (பெ) சாவு முதலிய கெட்ட காரியங்கள் (1523) *மூன்று வலையபற்கும் கல்வெட்டிக் குடுத்தபடி இவர்கள் தீம்மைக்குச் செய்யுந்தொழில் பாடுகளில் நம்முடைய ஊற்குள் பெண்டுகள்* (IPS,847.)

தீய்ந்து (வி) கருகி (1200) *நெடுந் தேர் வாணவர் புருவக்கடை வளையப்போம் தீய்ந்து பொழிலாகா* (SII,8,97.)

தீய் நாட (வி) உடன்கட்டை ஏற (800) *தென்னாடர் காதலியர் தீய்நாட வாய்சிவந்த மின்னாடு* (EI,xiii,10.)

தீய்ப்போக்கு செம்பொன் (பெ) (=தீப்போக்கு செம்பொன்) (856) *நந்தபோத்தரையர் திருவிளக்கு குடுத்த தீய்ப்போக்கு செம்பொன் அறுபதின் கழஞ்சு* (SII,v,609.)

தீயம் (பெ) தீமை (999) *அவர்நல்ஙு விலக்குவார் திருவாணை மறுத்தார் படுந் தீயமும் பட்டு* (TAS,ii,p.173-207.)

தீயமாள்வான் (பெ) சேரநாட்டில் ஓர் அரச அலுவலர் (849) *தீயமாள்வானும் மதினாயகனும்...எப்பிழை சொல்லியும் தடுமாறப்பெறார்* (TAS,ii,p.67-68.)

தீயன (பெ) கெடுதல் (1000) *இடையீடர் சேரிக்கலில்த் தீயன செய்கில்த் திரு வெண்ணைத் தடம் தண்டம்* (TAS,ii,p.173-207.)

தீயிது (பெ) கெட்டது (1000) *இதினுக்கு நல்லிதுந் தீயிதுங் கண்டு செலுத்தக் கடவன்* (SII,v,784.)

தீயும் (வி) அறுக்கும் (1012) *கடையர் பெருங்கைக் கடவாள் பசுந்தாட்டீயுஞ் செந்நெற்பழன* (SII,vii,863.)

தீயெரி (பெ) ஒரு வரி (978) *மன்றுபாடும் மாவிறையும் தீயெரியும் நல்லாவும்* (SII,iii,151-151a.)

தீயெரிப்பான் (பெ) விளக்கிடுபவன் (789) *அம்பலந் தண்ணீர் அட்டுவார்க்கும் தீயெரிப்பானுக்குமாகப் பங்கொன்றும்* (SII,ii,99.)

தீயெறி சோறு (பெ) ஒரு வரி (962) *கண்ணாலக் காணமும் தீயெறி சோறும்* (SII,xiii,151.)

தீர்க்கமாட்டாதன (பெ) செலுத்த முடியாதன (964) *ஸபை$_4$யோமைக் கொண்டு தீர்வாராகவும் தீர்க்கமாட்டாதன ஸபை$_4$யோமைக் கொண்டு த$_3$ண்டங்களிறுத்து* (SII,vi,362.)

தீர்க்கும் (வி) நீக்கும் (811) *எந்தமிடர் தீர்க்கும்...* (SII,xiv,41.)

தீர்கிறபோது (வி) முடிவுசெய்கிறபோது (1300) *நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இசைய பொருந்தி சொல்லி தீர்கிறபோது* (IPS,472.)

தீர்த்தக்கரை (பெ) நீராடும் இடம் (1119) *மஹாதேவர் கோயிலில் சமீபம் தீர்த்தக்கரையில் மேற்படியான் ப்ரதிஷ்டித்த* (SII,iv,1227.)

தீர்த்தக் குளம் (பெ) நீராடும் குளம் (1191) *வீர விச்சாத்திரப் பல்லவரையர் தீர்த்தக் குளத்துக்கு மேல் கரையில்* (SII,xvii,595.)

தீர்த்தத் துறை (பெ) நீராடுந் துறை (1012) *பெண்ணைத் தென்கரையுள்ளது தீர்த்தத் துறையது* (SIi.vii,863.)

தீர்த்தத்து நாள் (பெ) திருவிழாக் கொண்டாடும் நாள் (941) *தீர்த்தத்து நாளால் திருக்காளத்தி ஆள்வார்க்குப் பெருந் திருவமிர்துக்கு* (SII,viii,529.)

தீர்த்தம் ஆட்டுவிப்பது (வி) நீராட்டுவிப்பது (1100) *வைய்யாசி விசாகம் ஏழு நாளும் விழா வெடுத்து தீர்த்தம் ஆட்டுவிப்பதாகவும்* (SII,iv,1412.)

தீர்த்தமை (வி) செலுத்தினமை (898) *வெட்டியெப்பேற்பட்டதும் ஸபை$_4$யாரே பொன் கொண்டு தீர்த்தமைக்கு* (SII,xiii,250.)

தீர்த்த$_2$மாடின (வி) நீராடிய (970) *தே$_3$வர் தீர்த்த$_2$மாடின மார்கழித் திருவாதிரை நான்று* (SII,xiii,250.)

தீர்த்து (வி) காலாவதியாக்கி; புதிய ஒன்றிற்கு மாற்றி (764) *கோவும் பொறியுந் தீர்த்து* (EI,xxxvi,20.)

தீர்த்து (வி) போக்கி (771) *மறை நாவினோர் குறை தீர்த்தும்* (EI,xvii,16.)

தீர்த்து (வி) நீக்கி (1000) *தொலியமலைக் குறவு தீர்த்து செலுத்துவிது* (TAS,ii,p.173-207.)

தீர்த்துக் குடுப்போம் (வி) செலுத்திக்குடுப்போம் (923) *இந்நிலஞ் சுட்டி வந்தது தீர்த்துக் குடுப்போமானோம்* (SII,xix,408.)

தீர்த்துக் கொள்ள (வி) போக்கிக்கொள்ள (885) *தங்கள் அன்ஞாயாந் தீர்த்துக்கொள்ளக் கடவர்* (TAS,ii,p.80-82.)

தீர்ந்து (வி) ஒன்றை நீக்கி; மாற்றி (792) *கோவும் பொறியுந் தீர்ந்து குடிநீக்கி* (EI,xviii,14.)

தீர்ந்து குடுப்பாராக (வி) நீக்கிக் கொடுப்பாராக (986) *இடையுறுள்ளன பதினெட்டு நாடடியாருமே கடைக்கண்டு தீர்ந்து குடுப்பாராகவும்* (SII,iii,128.)

தீர்வார் (வி) செலுத்தி முடிப்பார் (964) *த$_3$ண்டம் அவ்வாண்டு க்$_3$ராமகார்யஞ்...ய்யும் பெருமக்களே ஸபை$_4$யோமைக்கொண்டு தீர்வாராகவும்* (SII,vi,362.)

தீர்வு முறி (பெ) சமாதான ஆவணம் (?) (1400) *ஊராக இசைந்த ஊரவரோம் தீர்வு முறி குடுத்த பரிசாவது* (IPS,600.)

தீர்வுறாதந (பெ) செலுத்தப் பெறாதன (964) *ஸபை₄யோமைக் கொண்டு தீர்வாராகவும் தீர்வுறாதந ஸபை₄யோமையே கொண்டு தண்டம் இறுத்து குடுப்பாராகவும்* (SII,vi,362.)

தீர்வை (பெ) விற்பனை வரி (1533) *மரக்கானத்து வழியிலுண்டான உதிரி நாட்டாயாம் பூர்வ்வம் நடந்து வருகிற தீர்வை நெல்லுப்பொதி அரிசிப்பொதி உள்ளிட்ட பல தானியவற்கத் தீர்வையும்* (SII,xvii,264)

தீரக்கொண்டு (வி) முழுதும் கொண்டு (917) *ஆதிசண்டி₃ச₀ திருகையாற் தீரக்கொண்டு* (SII,viii,646.)

தீருத்தம் (பெ) புண்ணிய நீராட்டு (960) *தீருத்தம் ஆடின பிற்றை நாள்* (SII,iii,202.)

தீவளிகை (பெ) தீபாவளி நாள் பொருட்டு வாங்கும் ஒரு வரி (1504) *தீவளிகை திரைச்சீலை மகாநவமி முறி நல்லெருது* (ARE,1918,118)

தீவிகை (பெ) விளக்கு (934) *பகு விலைக்குந் தீவிகைக்கும் எண்ணுாற்றுவ நாழி* (TAS,viii,p.43-45;EI,xxvii,37.)

தீவித பற்று (பெ) (=சீவிதப் பற்று): வாழ்நாள் முடிய அனுபவிக்கும் நில உரிமை (1223) *சாய்க்களூர் பற்றில் தீவித பற்றாய் உஞ்சேனை கங்கை கொண்ட பெரியரைனுக்கும்* (JOR,xx,Appx,p.19-20.)

தீவு (பெ) நான்கு பக்கமும் நீர் சூழ்ந்த நிலம் (921) *நாவலந்தீ வடிப்படுத்த* (SII,iii,206a.)

தீவு (பெ) நான்கு பக்கமும் கடலாற் சூழப்பட்ட நிலப்பரப்பு (1018) *தொல் பெருங்காவல் பல பழந்தீவும்* (SII,iii,205.)

தீவுகரிவு (பெ) பயிர் முதலியன தீய்ந்து போய்க் கேடுறுதல் (1474) *கோட்டை நாற்பது நீக்கிக் கோட்டை நூற்று நாற்பது இதில் தீவு கரிவுக்குக் கழித்து வைத்த கோட்டை* (SII,viii,444.)

து

துக்கணர் காணிக்கை (பெ) ஒரு வரி (1382) *கொட்டிக்காட்டில் பாதியால் உள்ள கடமை பொன் வரியும் துக்கணர் காணிக்கை* (SII,viii,489.)

துக்கன் வளைப்பு (பெ) மண்டப அலங்காரம் (1583) *கைக்கோளர் திருமுன் காணிக்கை பணம் 1 துக்கன் வளைப்புக்கும் மண்டபத்து பூப்பந்ததுக்கும் பணம் 1* (TDI,vi,3.)

துக்கித்து (வி) வருந்தி (1123) *மாதாவாந ஸுரபி கண்டு துக்கித்து மநுவிந் வாசல்லில்* (SII,v,456.)

துக்கையார் (பெ) துர்கா தேவி (898) *துக்கையார்க்கு இருநாழி* (SII,viii,560.)

துகள் (பெ) தூசு (1044) *கல்யாணபுரம் என்னுந் தொந்நகர் துகளெழத் தகய்ப்பித் தன்நகர்* (SII,v,465.)

துகளமாடி (வி) தூளாக்கி (1212) *கழிக் கோட்டையும் வளைந்து அறுத்து துகளமாடி நெட்டலகை குலமாட* (IPS,166.)

துகுத்து (வி) பெருக்கி (992) *சாலை துகுத்து மெழுகி பண்டி அட்டுவாள் ளொருத்திக்கு நிசதம் நெல்லு* (SII,xix,357.)

துகுந்து (வி) மேடிட்டு (1250) *ஏரிகரை பல இடங்களிலும் உடைந்து ஏரியும் துகுந்து மதகுகளும் முறிந்து கலிங்குகளும் அழிந்து கிடக்கயில்* (SII,xii,126.)

துகை (பெ) கூட்டம் (1066) *புஷ்பகப் பிடியும் பொருகளிற்றிட்டமும் பாய்பரித் துகையோடும் பறித்து* (SII,v,976.)

துங்க (பெ) பெருமை பொருந்திய (1012) *பொங்கு புலிப் போர்த்துப் புதுக்கத் துங்கத் திக்கினிற் சேனை செலுத்தி* (SII,vii,863.)

துச்சிலம் (வி) அழிவு (?) (1000) *ஸ்வமுஞ்சிமாராயர் பெருகூர்த் துச்சிலம் பண்ணியதினு திருவல்ல வாழப்பனு* (TAS,ii,p.173-207.)

துஞ்சல் (பெ) தங்குதல் (785) *முகிறுஞ்சலில் லசும்பறாத* (IA,xxii,p.57-75.)

துஞ்சின (வி) இறந்த (800) *அவர் போரிற் றுஞ்சின பின்னை* (SII,vii,581.)

துஞ்சின (வி) இறந்த (1068) *கல்லியாணபுரமுங் கொல்லாபுரமுங் கொண்டருளி ஆனை மேல்த் துஞ்சிந அண்ணர்க்கு யாண்டு* (SII,iv,529.)

துடக்கம் (பெ) தொடக்கம் (815) *கோ஽ஸஹஸ்ரத் துடக்கத்து* (SII,iii,206b.)

துடக்கோடு (பெ) உத்திரம் (கட்டிட உறுப்பு) (985) *சுப்பிரமணியன் கடவனான துடக்கோட்டாலும் கவற்றாலும் தூணாலும்* (SII,v,584.)

துடங்கி (வி) ஆரம்பித்து (861) *உச்சி அகது பந்தீறடி துடங்கி* (TAS,ii,p.85-86.); (950) *யாண்டு இரண்டு இதனெதிராண்டு துடங்கின கற்கடக ஞாயிற்று* (TAS,iv,p.117.)

துடர் (பெ) சங்கிலி (1000) *துடரிடை யாத்த ஏமலியைப் போலிருந்தேன்* (SII,iv,167.)

துடர்ந்த (வி) துரத்திய; விரட்டிய (1050) *பணிசமக்களை துடர்ந்த வளஞ்செய பகையரை* (AVNM,2,p.6-8)

துடர்ந்து (வி) வழக்கிட்டு; வற்புறுத்தி (985) *பலவாண்டு செல்ல யிவன் மகன் விடங்கனை துடர்ந்து யிவ்விளக்கு வைப்பிதான்* (SII,vii,112.)

துடர்வி (பெ) துணை (916) *ஒருவர்க்கொருவர் துடர்வி ஆக* (EI,xxiii,45c.)

துடர் விளக்கு (பெ) நந்தா விளக்கு (916) *நகரத்தானுக்கு இட்ட துடர் விளக்கொன்றினுக்கு* (EI,xxiii,45c.)

துடர்வோம் (வி) வழக்குத் தொடர்வோம் (1040) *குடிகளை நாங்களே மேலைக் காலங்களில் இந் நிலஞ் சுட்டித் துடர்வோமாகிலும்* (SII,xiv,164.)

துடர (வி) நீட்டிக்க (1139) *விக்கிரம சோழப் பெரியயனைப் பகை துடர இருவர்க்கு முதலிகளான* (ARE,1932-33,p.66.)

துடரப்பெறார் (வி) வழக்கிடப் பெறார் (981) *கொடுத்து இருப்பாருளராயில் படாரரையும் பட்டாரர் அதிகாரரையுந் துடரப்பெறார்* (TAS,iii,p.177-79.)

துடராது (வி) மிகாது (1000) *சிலம்பிற் சுழலும் மலரும் மசோகும் பலாசுந் துடராதெழுந்திட் டழலின் புறத்து வெண்ணீரொத்தன* (SII,iv,167.)

துடரில் (வி) வழக்கிடில் (999) *தனிச்சுத் துடரில் ஸ்வாமிக்கு ஒரு பத்தைங்கழஞ்சு* (TAS,ii,p.1-7.)

துடவர் (பெ) விளை நிலப் பொதுப்பெயர் (866) *துடவர் இரண்டேற்றித் தடி மூன்றும்* (TAS,i,p.1-14.)

துடவல் (பெ) விளை நிலப் பொதுப்பெயர் (800) *பேரறையுந் துடவலும்* (TAS,iii,p.203-05.)

துடவு (பெ) ஒரு முகத்தல் அளவு (861) *துடவினால் ஒரு துடவு நெயும்* (TAS,ii,p.85-86.)

துடவை (பெ) விளை நிலப் பொதுப்பெயர் (800) *காஞ்சிர துடவை அரைமா* (IPS,237.)

துடை (பெ) தடவை (1196) *ஒரு துடை முட்டுகில் முட்டிரட்டி இரண்டு துடை முட்டுகில்* (TAS,iii,p.33-37.)

துடை (பெ) நீராட்டு (932) *நிவேத்஽யமுந் துடையும் நந்தாவிளக்கும்* (SII,vii,173.)

துடை (பெ) ஓர் உடல் உறுப்பு (1056) *செஞ் சரமாரி தன் குஞ்சர முகத்தினுந் தன்றிருத் துடையிலுங் குன்றுறள் புயத்திலும்* (SII,iii,29.)

துடைக்குமவர் (பெ) பெருக்குபவர் (800) *பலி ஸ்வஸ்திஸ்ரீ யரிக்கும் துடைக்குமவர்க்கும்* (TAS,iii,p.203-05.)

துடைத்து (வி) அழித்து (1085) *முதுகு நெளித் தோடி அரணை நப் புக்க காடு துடைத்து* (SII,ii,58.)

துடைத்து களித்து (வி) நீக்கி (1604) *முன்னாள் நடந்து போனபடி வேண்டாமென்று அத்தம் துடைத்துக் களித்து கட்டளை இட்டு* (TAS,v,p.192-93.)

துடையுழக்கு (பெ) ஒரு வகை முகத்தல் கருவி (1125) *புற்றிடங் கொண்டாந் நாழியால் ஒக்கும் துடையுழக்கால் எண்ணை உழக்காக* (SII,xvii,601.)

துண்டப்பிடவைத் தீர்வை (பெ) ஒரு விற்பனை வரி (1532) *மஞ்சிலியிழம் யிஞ்சித் தீர்வையும் தெற்கு வழி துண்டப்பிடவைத் தீர்வையும் மற்றும் சில்லறைச் சரக்கு உண்டான தீர்வையும்* (SII,xvii,264.)

துண்டம் (பெ) பகுதி (1252) *ஊற்பட தன்வரிசை படியில்லே வேலி அறுகல துண்டமும் விட்டோம்* (SII,xvii,714.)

துண்டம் (பெ) சிறிய வயற்பகுதி (955) *சோமாசியார் த்வாதசக்கத்து துண்டங் குறைய்க் காலே அரைமாவும்* (SII,xiii,110.)

துண்டித்து (வி) வெட்டி (1257) *தண்டத் தலைவருந் தானையும் படத் துண்டித்தளவில்* (SII,v,459.)

துண்டிப்புகள் (பெ) துண்டாய்க் கிடக்கும் தரிசு நிலங்கள் (1500) *ப்ரமாணத்துக்குக் கல்வெட்டிக் குடுத்தபடி எங்களூர்த் துண்டிப்புகளும்...* (IPS,596.)

துண்டுபட்டான் (வி) கொல்லப்பட்டான் (867) *சத்தி முற்றத்தேவந் றுண்டு பட்டான்* (SII,xii,56.)

துண்ணெண (வி) திடீர் என (ஒலிக் குறிப்பு) (1050) *களிரைத் துண்ணெனப் பிடிப்பித் தேழரை இலக்கமும்* (SII,v,520.)

துணிஞ்சு (வி) பிரிந்து (921) *உறையூர் கூற்றத்து நின்று துணிஞ்சு போய்* (SII,viii,604.)

துணித்து (வி) வெட்டி (1012) *பந்தற் சுரும்பிடை வெண்பூங் கரும்பிடை துணித்தரத் தாட்டொலியாலை* (SII,vii,863.)

துணிந்து (வி) தைரியங் கொண்டு (800) *நுளம்பன் பலத்தோடே துணிந்து* (SII,vii,581.)

துணிவு (பெ) மனத் திட்பம் (1000) *சேவடிக் கீழ்த் தொழுந்தாரியர் தந்துணிவைப் பணியச் சுடர்ப் பிழம்பாயெழுந்தான்* (SII,iv,167.)

துணை (பெ) பற்றுக்கோடு (936) *அறமறவேல் அறமல்லது துணையில்லை* (SII,vii,954.)

துணை (பெ) அளவு (884) *நிலமும் (ன்) நாயறும் உள்ள துணையும்* (SII,vi,314.)

துணை நிலம் (பெ) சார்ந்த நிலம் (1030) *செப்பேத்தத்துக்குத் துணை நிலமாக இட்ட கிழன் மேலாய்க் கிடக்கும் வரவைக்கும் ...க்கில்* (SII,viii,67.)

துணையும் (இ) வரையும் (1000) *துஞ்சுந் துணையுஞ் சிவனைத் தொழுது துறக்க மெய்தார்* (SII,iv,167.)

துணைவன் (பெ) கணவன் (1179) *திருமகள் துணைவன் ஜயமகள் நாயகந்* (EC,x,Kl.132.)

துணைவியர் (பெ) மனைவியர் (1050) *அவன் றுணைவியரும் வாகை விச்சயர் மகனு மாதாவு மெனுமிவர்* (SII,v,520.)

துத்த (வி) நுகர்ந்த (771) *நீடுபுக்தி துத்த பின்* (EI,xvii,16.)

துத்துரு (பெ) ஓர் அணி (1014) *துத்துரு ஒன்றில் தடவிக் கட்டின பளிங்கு ஒன்றும்* (SII,ii,46.)

துத்துரு (பெ) ஒரு பாத்திரம் (1009) *துத்துரு இரண்டு நிறை பதின்நாற் (ப்)பலம்* (SII,v,521.)

துதி (பெ) போற்றுதல் (1220) *முனிவர்கணந் துதியெடுப்ப* (CHEN,xiv,p.362-64.)

துதிக்கவும் (வி) புகழவும் (1279) *இடையவர் துதிக்கவு மருமணம் பெருகிய வாள்வல பெருமாள்* (SII,viii,69.)

துதிகெழு பாராட்டுதலைப் பெற்ற (1050) *காந்தளூர்ச் சாலை கலமறுப்பித்துத் துதிகெழு ஜயங்கொண்ட சோழன்* (EC,x,Cb.21.)

துந்து₃பி₄ (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1202) *துந்து₃பி₄ ஸம்வச்சர....* (EC,iii,Tn.126.)

துப்பன (பெ) அனுபவிக்கும் பொருள்கள் (966) *இதன்றென்றான் ஸுகித சந்தானம் துப்பன வறுவான்* (SII,iii,212ab.)

துப்பாராக (வி) அனுபவிப்பாராக (765) *இவர்களே துப்பாராகவும்* (EI,xxxvi,20.)

துப்பு (பெ) வலிமை (1066) *மூவேத்தி வென்றார்த்தடு துப்பில் வநேக சாமந்தரை* (SII,v,976.)

தும்பை (பெ) ஒரு பூச்செடி (953) *இந்நந்திகம்பீச்வர தேவர்க்கு நிசதம் உழக்கு தும்டைப்பூவும்* (EI,vii,26d.)

தும்மதி (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1201) *தும்மதி வருசத்தில்* (EC,ix,Ht.27.)

துமிக்க (வி) வதக்க (878) *கறி துமிக்கவும் பொரிக்கவும் பசுவினறு நெய்* (SII,xiv,13.)

துமித்து (வி) வெட்டி (921) *கொலைவாளிற் றலை துமித்து* (SII,iii,206a.)

துய்வாக்கி (வி) சுத்தப்படுத்தி (964) *ஈரமும் பதரும் நீக்கி துய்வாக்கி எண்ணாழிக்காலால் அட்டுவோமாநோம்* (SII,iii,186.)

துயங்கி (வி) ஆட்டங்கண்டு (1000) *கொடும்பற் றுயங்கிக் குழிகண்ணிடுங்கிக் குரணடுங்கி* (SII,iv,167.)

துயர் (பெ) துன்பம் (1000) *நிற்குந் துயர் கொண்டிருக்கும் பொழுதின்றி* (SII,iv,167.)

துயில் (பெ) உறக்கம் (1000) *பள்ளியம் மாதுயில் ஏற்கின்றிலை பாவிப் பிழைத்தாய்* (SII,iv,167.)

துயிற்றியது (வி) தூங்கப்பண்ணியது (1200) *வடுகர் துஞ்சத் துயிற்றியதே மன்னவர் கோன் மாகதர்கோன் வாள்* (SII,vii,123.)

துர்ப்பரம் (பெ) இடைஞ்சல் (1200) *காராண்மை (ம்) கூட கொடுத்ததினு ஒண்டாய துர்ப்பரமுந் தீர்த்து செலவும் பிடிச்சாார்* (TAS,vi,24.)

துர்முகி (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1264) *துர்முகி ஸம்வத்ஸரத்து* (EC,iv,Yl.59.)

துர்வ்வாயகம் (பெ) அவதூறு (1300) *சூத்திரர் பிராமணரைப் துர்வ்வாயகம் பறைகில்* (TAS,iii,p.194-195.)

துரக்க (வி) வெருண்டோட (1209) *தியாகக் கொடித் திசையெட்டிலும் ஏக கலிபகை துரக்க* (IPS,163.)

துரகம் (பெ) குதிரை (921) *கரி துரக பதாதி* (SII,iii,206a.)

துரந்தன (வி) ஓட்டிச் செலுத்தின (1186) *கனலெனை உகந்தான் சுடத்துடங்கிய கலிவலி பெலந்தான் புகத் துரந்தன* (SII,xii,263.)

துரந்து (வி) எய்து (1196) *கான வேங்கையை வில்லுடன் றுரந்து* (SII,v,302.)

துரப்புண்டு (வி) அகற்றப்பட்டு (1168) *அவர்கள் பூசலிலே அறப்பட்டு துரப்புண்டு போம்படிக்கு* (SII,vi,456.)

துரம் (பெ) பணி (1499) *ஞாதியுமில்லாமல் துரமும் முட்டு வருகையில் யிந்த பங்கு* (SII,v,761)

துரவு கிணறு (பெ) பாசனக் கிணறு (789) *துரவுகிண றிழிக்கப்பெறுவதாகவும்* (SII,ii,99.)

துரிசு (பெ) குற்றம் (1012) *கரிசறத் துரிசற* (SII,vii,863.)

துரிஞ்சில் (பெ) ஒரு மரம் (922) *பெரிய துரிஞ்சிலும் மிதன் கிழக்கு நோக்கி யிழிய* (SII,ii,76.)

துரு (பெ) வேதம் ஓதும் சந்த வகை (866) *சூத்திராரணத்திலுந் துருச் சொல்லி* (TAS,i,p.1-14.)

துருக காணிக்கை (பெ) கோட்டைப் பராமரிப்புப் பொருட்டு செலுத்தும் வரி (1552) *தறிக்கடமை காணிக்கை துருக காணிக்கை சாலை வெற்த்தினை* (ARE,1942,107)

துருகல் (பெ) தேங்காய்த் திருவல் (1530) *துருகலுக்கு தேங்காய் 2* (TDI,iii,181.)

துருத்து (பெ) ஆற்றிடைக் குறை (1663) *பறுங்கி அனுபவிச்சிருந்ந பாதிரித்தும் பொட்ட துருத்தும் வெண்டு துருத்தும் உல்ப்பத்திகளும்* (TAS,i,p.31.)

துருதம் (பெ) கெடுதி (1634) *தன்மசாதனப் பட்டையத்துக்கு ஒரு துருதமில்லாமல்* (AVNM,7,p.75-81)

துருவம் (பெ) ஒரு வரி (?) (1550) *செதுங்க நாட்டுத் துருவமும் சிறைவாய்த் துருவமும் உள்பட்ட இலக்ஷாபோக வகையும்* (TAS,ix,p.22-24.)

துல்யம் (பெ) அரசன் சம்மதத்துக்கான ஒப்பம் (1231) *இவை மருதத் துருடையான் எழுத்து இவை மனுமீ கண்ட கோபாலன் எழுத்து துல்யம்* (TMPL,vii,p.31.)

துலங்கு (வி) விளங்கும் (1076) *கொட்டி யானையும் யானு மென்கைய்யில் துலங்கு பொற்ப் படையுமேய்* (SII,vii,137.)

துலா (பெ) ஒரு எடை (887) *துலாச் சந்தனத்துக்கு ஒரு காசாக* (SII,xiv,16a.)

துலாக் கூலி (பெ) நிறுக்கும் சரக்குகள் மீதான வரி (969) *துலாக் கூலி தருத்தும்* (TAS,ii,p.80-82.)

துலாக் கோல் (பெ) தராசு (1007) *ஒலோக விடங்கனெனும் துலாக் கோலால் இட்ட சேகண்டிகை ஒன்று* (TMPL,xviii,p.100-101.)

துலா நாயறு (பெ) ஐப்பசி மாதம் (969) *இப்பொன்னுக்கு இவ்வாட்டை துலா நாயற்று நாயற்றுக் கிழமை பெற்ற* (SII,xix,16.)

துலாபாரம் (பெ) (=துலாபா₄ரம்) (700) *இருகால் பொலங்கருவில் பேர்கலப்பத் தோநிறி ஒருகாற் துலாபாரம் புக்கான்* (AVNM,7,p.13-14)

துலாபார வரி (பெ) அரசருடைய துலாபாரம் பொருட்டு செலுத்தும் வரி (1288) *நினைப்பு வினிவோகம் அவிஷேகக் கைகாணி துலாபார வரி கீற்றுவரி* (SII,vii,795.)

துலாபா₄ரம் (பெ) மஹா தானங்களில் ஒன்று; ஒருவர் தன் எடைக்கு எடை பொருள் தானம் செய்தல் (700) *கோ₃ஸஹஸ்ர துலாபா₄ரத்து மஹாதா₃நங்களாற் கலிகடிந்து* (EI,xxxviii,4.)

துலாபுருஷம் (பெ) ஒருவன் தனது எடையுள்ள பொருளை நிறுத்தல் (1529) *அம்மனவர்கள் வெங்கடாத்திரி சிக்கவுடையருடன் முத்தின் துலாபுருஷம் சொன்ன துலாபுருஷம் ஸஹஸ்ர கோதானம் ... பண்ணியருளி* (SII,vii,52.)

துலாம் (பெ) ஒரு எடை (887) *இருபதின் துலாம் கறி அமிதுனுக்கு* (SII,xiv,16a.)

துலா விறைத்து (வி) ஏற்ற மரத்தால் நீர் இறைத்து (1247) *வீர பாண்டியனால் நெல்லு முக்கலமும் துலாவிறைத்து விளைந்த நிலத்துக்கு இவ்வரிசையில் ஒன்று பாதியும்* (SII,v,446.)

துலுக்கர் (பெ) இசுலாமிய சமயத்தவர் (1316) *இராசராசன் சுந்தரபாண்டிய தேவர் துலுக்கருடன் வந்த நாளிலே ஒக்கூருடையாரும் இவருடைய தம்பிமாரும்* (SII,viii,247.)

துலுக்க வாணம் (பெ) முஸ்லிம்களின் ஆட்சி (1511) *இன்னாயனார் திருக்கோவிலில் திருமடப்பள்ளி துலுக்க வாணத்தில் நாலுபுறமும் சரிந்து கிடக்கையில்* (SII,viii,182.)

துலை (பெ) ஏற்றமரம் (1246) *குளத்தில் கீழ் நீரும் மேல் நீரும் இறைக்க உடைய துலையும் நிலையும்* (SII,viii,709.)

துலை (பெ) நீர் இறைக்கும் ஏற்றம் (985) *கிணற்றுக்கு நிக்குந் துலைக்குங் காலுக்கும் உரித்தாக* (SII,xiii,99.)

துலைக்கும் (வி) அழிக்கும் (785) *மாற்றரைசரை வலி துலைக்கும் வீரமங்கலப் பேரரைசனாகிய* (IA,xxii,57-75.)

துலை யுரிமை (பெ) நீர் இறைக்கும் ஏற்ற மரம் வைத்துக் கொள்ளும் உரிமை (986) *தூரவு கிணற்று நிலவொபாதி நீருரிமையும் துலையுரிமையும் நிலையுரிமையும்* (SII,xix,404.)

துலைவது (பெ) அழிவது (1200) *உதிரவெள்ளத் தொட்டி யென்றேனுந் துலைவதுண்டே* (CHEN,iii,p.423-432.)

துவசம் (பெ) கொடி (1012) *கதிர்நுதித் துவசந் தொடுத்த சுதை மதிற் சூழகழ்* (SII,vii,863.)

துவர் (பெ) சிவப்பு (1000) *துணியாடையு மணிவாய் நன்றுந் துவரூட்டி* (SII,iv,167.)

துவரை (பெ) பருப்பு வகை (1300) *துவரைப் பொதி ஒன்றுக்கு* (SII,viii,442.)

துவலை (பெ) நீர்த்திவலை; மழைத்துளி (1296) *பூந்துவலை வீசும் பொதியிலே* (CHEN,iv,492-94.)

துவாதெ₃சி (பெ) பன்னிரண்டாந் திதி (970) *மார்கழித் திருத்துவாதெ₃சிக்கு முன்பு* (TDI,i,9.)

துழதி (பெ) ஓசை (1012) *பாடக சீறடி பணைமுலைப்பாவையர் நாடகத் துழதி நவின்றது சேடகச் சண்டையுங் கண்டையும்* (SII,vii,863.)

துழாய் (பெ) துளசி மாலை (1000) *கொழுந்தார் துழாய் முடிக் கொற்ற கருடக் கொடித் தேவும்* (SII,iv,167.)

துழாவிய (வி) செறிந்த (1012) *மட்டவிழ் துழாவிய புநல் மாத்துழான் வேலி* (SII,vii,863.)

துளக்கம் (பெ) நடுக்கம் (771) *துளக்கமில்லா கடற்றானை* (EI,xvii,16.)

துளக்கு (பெ) நடுக்கம் (905) *தொண்டியர் கோன் துளக்கில்லி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

துளங்கும் (வி) ஒளிவிடும் (1198) *திருவயிற்றுதித்த துளங்கு மணித் திருமார்பன்* (EC,x,Kl.131.)

துளவம் (பெ) துளசி (1209) *தண்டுளவ மலர் மாலையில்* (IPS,163.)

துளவி (பெ) துளசி (1168) *தேமருவிய பதந் துளவித் திருநெடுமால்* (SII,vii,890.)

நடுவன (பெ) நடப்படுவனவாகிய பயிர்களும் செடிகளும் (885) *நடுவன நட்டு இடுவன இட்டு* (TAS,ii,p.80-82.)

நடுவிட்டு (வி) நடுவாகக் கொண்டு (1000) *செய்களுக்குப் பாயும் வாய்க்காலை நடுவிட்டு வடக்கு நோக்கிச் சென்றேறி* (TASSI,1958-59,p.84f.)

நடுவித்த (வி) ஊன்றச் செய்த (618) *கூடல் இளமக்கள் நடுவித்த கல்* (CHHS,1971/50.)

நடுவிருக்கும் (வி) (= நடுவிருக்கை) (1006) *நடுவிருக்கும் கோடையூர்ப் பூவத்த பட்டரும்* (SII,viii,222.)

நடுவிருக்கை (பெ) சோழ அரசாங்க முக்கிய அலுவலர்களில் ஒருவர் (1014) *ப்ரஹ்மதேயம் காமரவல்லிச் சதுர்வ்வேதி மங்கலத்து நடுவிருக்கை செய்த கோட்டையூர் சுவரபட்டன் பூவத்த பட்டனார்* (SII,ii,64, 95.)

நடுவு (பெ) உள்ளே (772) *நான்கெல்லையுள் நடுவு கிடந்த நிலம் மும்மாவரை* (SII,xiv,19.)

நடுவு (பெ) இடை (1007) *நீர் நிலத்தில் தலை நடுவு கடை கலக்க* (IPS,85.)

நடுவு கொத்து (பெ) படையின் ஒரு பிரிவு (1145) *திருக்கண்ணப்ப தேவர் ஸ்ரீ பாதம் நடுவு கொத்து விற்பிடித்தாந்* (SII,viii,319.)

நடுவுநிலை நன்கு நாயகன் (பெ) பாண்டிய அரசாங்கத்தில் ஓர் அலுவலர் (905) *பெருந்தகை*

சேந்தங்கிழவன் நலமலி சீர் நடுவுநிலை நன்கு நாயகனாகவும் (TASSI,1962-65,pp.1-31; PNDCP, p.95-115.)

நடுவுபட்ட (வி) உட்பட்ட (915) *பெரு நான்கெல்லையில் நடுவுபட்ட தெங்கந் தோட்டம்* (SII,xix,207.)

நடுவு போதிகிற (வி) நடுவே செல்லுகிற (1245) *இரண்டு கோயிலுக்கும் நடுவு போதிகிற திருமதிள் நேருள்ள மரங்கள் வெட்டி போகடுவதாகவும்* (IPS,340.)

நடுவே (இ) ஊடே (992) *கண்டராதித்த நிலத்தி நடுவே போன கண்டராதித்த பெருவரம்பிற்கு* (SII,xiii,167.)

நடுவேய் (இ) ஊடே (780) *இப்பூமியி நடுவேய் தெற்கு நோக்கிப் போயின காலுக்கு* (SII,xiv,17.)

நடை (வி) வழக்கம் (500) *அவற்றுக்குப் பெயப்பட்ட அறப்புறந் நடையாட்டுவதூஞ் செயும்* (AVNM,1,p.67-69)

நடை (பெ) கால் நடை (1333) *திருவண்ணாமலை உடைய நாயநார் பாலாடி அருள சுரவித் திருமேனி வசம் நடை 25 பசு 73 சேங்கன்று 26 ஆக* (SII,viii,73.)

நடை (பெ) கோயில் (1403) *ஸபையிலெவர்கள் விரோதமாய் முட்டுகில் நடையில் அன்னியாயப்பட்டு விரோதமுந் தீற்பித்துக் கொண்டு* (TAS,vi,21.)

நடை (பெ) வழக்கப்படி (946) *இநிலம் இவ்வூர் நடை இரண்டொன்றாய் விளைத்து* (SII,iii,110.)

நடை (பெ) கால் நடை (985) *எருமை நாலும் கிடாக்கன்று ஒன்று ஆக நடை அஞ்சு திருவிளக்கிநுக்கு இம்மாட்டால்* (SII,xix,340.)

நடைச் சக்கரம் (பெ) ஆணைச் சக்கரம் (1171) *பொதியச் சுடற் சக்கர வெற்பிற்றன் நடைச் சக்கரம் வெயிலெறிப்ப* (SII,xvii,592.)

நடை சிலவு (பெ) கோயில் செலவு (1102) *அக்கிரம் பதினாழி இப்பெருமாள் நடை சிலவிற்கு* (TAS,v,p.40-46.)

நடை நீர் (பெ) வழக்கமான நீர் (1274) *குறுவைப் பயிர் செய்ய நிலத்துக்கு நடைநீர்ப் பா...* (SII,iv,371.)

நடைப் பழி (பெ) தவறுக்குப் பொறுப்பு (?) (1382) *அரையன் தம்பியின்பனையும் பறையுடப்பனையும் நடைப் பழியாக வறுதியிட்டுக் குடுத்து* (IPS,683.)

நடை வரம்பு (பெ) சிறிய வரப்பு (1439) *உதிரப்பட்டிக்கு போகிற கிழமேல் நடை வரம்புக்கு வடக்கு* (TAS,viii,p.5-7.)

நடை வாவி (பெ) படியுள்ள கிணறு (1490) *பெரிய திருக் கோபுரத்துக்கும் தென் புறத்தில் நடை வாவி* (TDI,ii,90.)

நண்க (வி) நெருங்க (950) *நாற்றங்கால் புகப்பாய்த புறக்காலை நண்க வந்து* (TASSI,1962-65,p.32-52.)

நண்ண (வி) நெருங்கி (950) *கீழ்த்தலைத் தலைத்துடவைகளின் தென் வரவை நண்ண வந்து* (TASSI,1962-65,32-52.)

நண்ண (வி) அடைய (1000) *சிராமலை நண்ண வெண்ணும் மதியிலம்* (SII,iv,167.)

நண்ணற்கு (வி) நெருங்குவதற்கு (1018) *நண்ணற் கரு முரண் மண்ணைக் கடக்கமும்* (SII,iii,205.)

நண்ணிய (வி) நெருங்கிய (1012) *ஓராண்டினுக்கு நேராண்டாக நண்ணிய நக்ஷத்திர நல்லோ ணண்ணிய திருவிளக் கெண்பதும்* (SII,vii,863.)

நத்தக்காவல் காணி (பெ) குடியிருப்புக்களைக் காத்தல் பொருட்டு விட்ட மானிய நிலம் (1278) *ஆண்டுபோதுகிற நிலக்காணிகளும் நத்தக் காவல்காணிகளும்* (AVNM,6,p.33)

நத்தக் குறை (பெ) நத்தத்தில் சிறு பகுதி (1128) *இப்பொன்னும் இன்நத்தக் குறையும் இன்நிலமும்* (SII,xix,250.)

நத்தக் கூறு (பெ) குடியிருப்புப் பங்கு (985) *பரகேஸரிச் சேரியார்க்கு இட்ட நத்தக்கூறு இரண்டு மாகாணியில்* (SII,xiii,67.)

நத்தப் பச்சை (பெ) ஒரு வரி (1400) *ஊசிவாசி பீலிபஞ்சு ஆயவற்க்கம் நத்தப் பச்சை காத்திகை* (SII,viii,355.)

நத்தப் படப்பை (பெ) நத்தம் சேர்ந்த விளை நிலம் (1128) *ஏகசுரன் வாய்க்காலுக்கு தெற்கும் உள்ளிட்ட நத்தப் படப்பையும் உள்ளூரில் வடக்கடைய நிலங்காலும்* (SII,xix,250.)

நத்தப் பரிப்பு (பெ) நத்தம் சார்ந்த இடம் (1306) *நத்தமும் நத்தப் பரிப்புக்களும் குளமும் பரப்பும்* (IPS,584.)

நத்தப் பால் (பெ) குடியிருப்பைச் சேர்ந்த பகுதி (1439) *இன்னான்கு எல்லைக்கு உட்பட்ட நத்தமும் நத்தப் பாலும் தோட்டமும் தோட்டக் கூறுகளும்* (TAS,viii,p.3-5.)

நத்தப் பாழ் (பெ) ஊர்க்குடியிருப்பு இருந்து அழிந்த இடம் (1125) *குளங்களும் நிலமும் நத்தமும் நத்தப்பாழும்* (SII,xiv,205.)

நத்த புன்சை (பெ) ஊர்க் குடியிருப்புக்குட்பட்ட புஞ்செய் நிலம் (1183) *நன்சை புன்சை நத்தம் நத்த புன்சை கரைப் புன்சை* (SII,viii,279.)

நத்தம் (பெ) குடியிருப்புக்கான நிலம் (765) *சாலை நல்லூர் நத்தத்தின் மேலை* (EI,xxxvi,20.)

நத்த மனை (பெ) குடியிருப்பு மனையிடம் (1225) *பெருநான்கெல்லைக்குட்ப்பட்ட நிலமும் புன்செ நத்தமனை குளமிரண்டும்* (JOR,xx,Appx,p.27-28.)

நத்த ரேகை (பெ) குடியிருப்பு மீது வசூலிக்கப்படும் வரி வருவாய் (1510) *புதுவூர்கு பரம்ஸ்ரீஊர் பற்றுக்கு அற்ற மருவாதி நத்தரேகை பற.கும் வாசல் மனை ஏற்கடமை காணிக்கை ஆளமஞ்சி* (IPS,726.)

நத்த வரி (பெ) குடியிருப்புகள் மீது ஒரு வரி (1340) *ஈழெம் புஞ்சை யணி இடுவான் வரி நத்தவரி பணவாசி கண்கூலி மற்றும்* (SII,iv,415.)

நத்த சே$_0$ஷம் (பெ) (= நத்தப் பரிப்பு) (1321) *இந் நான்கெல்லைக் குட்பட்ட நத்தமும் நத்தசே$_0$ஷமும் குளமும் பிள்ளையார் நோன்பு நந்தவனப் பச்சை எடுத்துக் காட்டும் பச்சை* (SII,v,411.)

நதி (பெ) ஆறு (1000) *கங்கை யென்னுறு நதியிலங்குஞ் சடைநாதன்* (SII,iv,167.)

நதி$_3$ (பெ) ஆறு (796) *பல கிரி நதி$_3$ வந கஹநங்களைக் கழிந்து* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

நங்கு (பெ) இசைவு (1044) *தந்குலத்தவநிவர் நந்கு தரு தகைமையில் அரிசியலுரிமை* (SII,v,633.)

நந்தமர் (பெ) அரசச் சுற்றம் (845) *நந்தமரெப்...பட்டாரும்* (TAS,ii,p.80-82.)

நந்தவனப் பச்சை (பெ) வரிவகை (1300) *பிள்ளையார் நோன்பு நந்தவனப்பச்சை எடுத்துக்காட்டும் பச்சை* (SII,iv,369.)

நந்தவானக் குடி (பெ) கோயில் பூந்தோட்டத்தைப் பயிரிடும் குடிகள் (800) *நந்தவானக்குடிகள் மூவர்* (SII,vi,448.)

நந்தவானந் திருத்துவான் (பெ) பூந்தோட்டம் பண்படுத்துபவன் (1000) *நந்தவானந் திருத்துவானுக்கு* (SII,viii,653.)

நந்தவானப் புறம் (பெ) நந்தவானம் செய்ய விட்ட மானிய நிலம் (884) *இரண்டு மாவும் நந்தவானப்புறமாகக் குடுத்தேன்* (SII,xiii,238.)

நந்தவானம் (பெ) பூந்தோட்டம் (873) *இப்பள்ளியின் கீழை கீழை நந்தவானத்துக்கும்* (SII,iii,91.)

நந்தவான விருத்தி (பெ) (= நந்தவானப்புறம்) (952) *நந்தவான விருத்திக்கும் இதன் வடக்கேத் துடவலுக்கும்* (TAS,iv,p.118.)

நந்தனவனம் (பெ) பூந்தோட்டம் (986) *நந்தனவனம் உழப்பார் இருவர்க்கு நிசத நெல் குறுணியும்* (SII,iii,128.)

நந்தா தீவிகை (பெ) நந்தா விளக்கு (1200) *வீரவலி இளையாழ்வாந் இவந் நந்தா தீவிகை ஒன்று* (EC,iv,Yl.48.)

நந்தியா வத்தம் (பெ) நந்தியா வட்டப்பூ (1217) *நாள் ஒன்றுக்கு அளக்கும் மல்லிகையும் நந்தியாவத்தம் முக்குறுணியும்* (TMPL,vii,p.502-05.)

நந்தில் (வி) குறைந்தால்; நின்று போனால் (865) *இது நந்தில் பன்மாயேச்$_0$வரர் கடைக்கூட்ட பெற்றார்* (SII,xii,55.)

நங்நாலு (பெ) நான்கு நான்காக (1014) *பாதா$_3$திகேசா$_0$ந்தம் பதினால் விரல் உசரத்து*

நந்நாலு ஸ்ரீ ஹஸ்தங்கள் உடையர்களாக (SII,ii,30.)

நம்பி (பெ) பூசாரியின் பட்டப்பெயர் (936) *திருக்குரக்குத்துறை நம்பியான பானச்சன் நாராயஞ் சொக்கன்* (SII,xvii,636.)

நம்பிமார் (பெ) பூசாரிகள் (921) *அன்றுள்ளூரில் இருந்த நம்பிமார் ஒருவரையும்* (ARASI,1904-05,p.1-31.)

நம்பிராட்டியார் (பெ) அரசியின் சிறப்புப்பெயர் (886) *திருவிளக்கினுக்கு நம்பிராட்டியார் கைவழி கொண்ட காசு 200* (SII,v,608.)

நம்பு (பெ) பூசை செய்யும் தொழில் (870) *ஸ்ரீ கோயினம்பு பெற்றார்* (SII,xix,163.)

நம்மக்கள் (பெ) வாணிக்கக்குழுவினரின் வீரர் உட்பட்ட பணியாட்கள் (1050) *திசைசெட்டிகளும் நம்மக்கள் பதினெண்பூமி பணிசைமக்களும்* (AVNM,2,p.6-8)

நமக்காரம் (பெ) காலைப் பூசையில் படைக்கும் பொழுது சிவப்பிராமணர்களுக்கு உணவளிக்கும் முறை (1101) *அட்டில் பேறாய் திருக்கை நனைச்சருளியார் ஆட்டைக் கோள் நமக்காரமும்* (TAS,v,p.37-40; EI,xviii,40.)

நமக்கு (பெ) நம்மிடம் (985) *அனியாயம் இடுகின்றார்கள் என்று நமக்குச் சொல்ல* (SII,iii,142.)

நமந மண்டபம் (பெ) (= நமனமண்டபம்) (885) *நமநமண்டபம் செய்யக் குடுத்தோம்* (SII,xiii,247;SII,v,593.)

நமநிகை (பெ) திரைச்சீலை (930) *பிடாரிமார்க்கு வத்த நமநிகைக்கு* (SII,vi,341.)

நமய்யர் (பெ) தந்தை (1070) *விஜைய ஸிம்ஹாஸனத்து வீற்றிருந்தருளி(ய)ன நமய்யர் திருமுகம்* (SII,xiv,194.)

நமர் (பெ) நம் சுற்றத்தினர் (1015) *கனமாகச் செய்த தத்தா நமரே காண் என்ற மிலாடுடையார் ஒருவர்* (SII,ii,40.)

நமனம் (பெ) அபிஷேகம் (869) *திருநமனத்துக்கு வேண்டும் அவி கொண்டு* (SII,vii,523.)

நமன மண்டபம் (பெ) திருமஞ்சன மண்டபம் (932) *வாசலில் கிழக்கில் நமன மண்டபத்துள்* (SII,v,588.)

நமச்$_0$சி$_0$வாய (பெ) சிவனை வணங்கும் முறை (844) *நமச்$_0$சி$_0$வாய..ஸ்ரீ ராஜராஜாதி$_4$ராஜ பரமேச்$_0$வர* (TAS,ii,p.13-14.)

நமஸ்காரம் (பெ) வழிபாடு (1224) *கணபதிக் கரிநாழி நமஸ்காரத்தின்னரி இருநாழி* (TAS,iii,p.40-43.)

நயக்க (இ) நேராக (950) *கிழக்கு நோக்கி நயக்க வந்து வாழைக் கோட்டின் நாற்றங்கால் புக* (TASSI,1962-65,p.32-52.)

நயந்த (வி) விரும்பிய (1012) *நஞ்சுண்டவருக் கமுதுரை நயந்த வோத்தெண் வழுவா* (SII,vii,863.)

நயநம் (பெ) கண் (1014) *திருநயநம் ஒன்றில் கட்டின நீலம்* (SII,ii,86.)

நயபாளம் (பெ) நல்ல தகட்டு வடிவம் (897) *இருபத்தறு கழஞ்சரைக் கல் பிறையுடைய நயபாளம்* (SII,xiii,319.)

நயினார் காணிக்கை (பெ) குறுநில அரசரான நாயக்கருக்குச் செலுத்தும் ஒரு காணிக்கை வரி (1442) *நயினார் காணிக்கை ஒரு பணமு கொள்ளகடவது* (ARE,1925,429)

நரகம் (பெ) கீழுலகம் (768) *நரகத்தினிற் பானாகவும்* (SII,xii,34.)

நரகு (பெ) கீழுலகம் (1219) *மாற்றினான் ஆற்றனரகாளுமற்றதனைப் போற்றனான்* (EC,ix,Kl.120.)

நரப்பு (பெ) யாழ் (1134) *பெரும் புலவரும் அருங்கவிஞரு நரப்புறு நல்லிசைப் பாணரும் கொடியவரும்* (SII,v,645.)

நரம்பு (பெ) வீணை (905) *தும்புரு நாரதர் பனுவ னரப்பிசை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நரபதி (பெ) அரசன் (921) *நாவலந் தீவடிப்படுத்த நரபதிஉம்* (SII,iii,206a.)

நரிய் பருப்பு (பெ) நரிப்பயறு (986) *சுலநாழியால் பதக்கரிசியும் நரிய் பருப்பின் கும்மாயமு கறிஅமுதும் பொரிக்கறி அமுதும்* (SII,xix,389.)

நரை (பெ) வெண்மை நிறம் (1073) *கங்கை கரையில் கோப்ப்ராம்மணரையும் நரையாம் குராலும்* (EC,x,Mb.49 (a).)

நல் (இ) நல்ல (785) *குலதநமும் நன்நாடும்* (IA,xxii,p.57-75.)

நல்கி (வி) வழங்கி (905) *நாற்கோடி பொன்னியதி நல்கி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நல்கூர் (வி) வறுமையில் வாடும் (765) *ப்ரஹ்மதேயமாகப் பெற்ற நல்கூர் நற்பாப்பார்* (EI,xxxvi,20.)

நல்பசு காணம் (பெ) ஒரு வரி (1300) *ஆள்வரி நல்லெருது நல்பசு காணம் உள்ப்பட்ட இவையும்* (SII,vii,22.)

நல்லதா பரி (பெ) கொத்துமல்லி (?) (976) *கறியமு(து)தொன்றினுக்கு நிச்சயித்த நல்லதாபரியும் தயிரமுது போதுரியாக* (SII,xix,169.)

நல்லது (பெ) நன்மை (768) *இதற்கு நல்லது வேண்டினார்* (SII,xii,34.)

நல்லன் (பெ) பண்பாளன் (613) *மேல்ச் சென்றெறிந்த ஞான்று நல்லனாய் திரிந்து பட்டான்* (CHHS,1971/64.)

நல்லா (பெ) கால்நடை மீது ஒரு வரி (750) *நல்லாவும் நல்லெருதும்* (EI,v,8.)

நல்லாடு (பெ) ஆட்டின் மீது ஒரு வரி (852) *நல்லெருதும் நல்லாடும் நாடுகாவலும்* (SII,ii,98.)

நல்லாராய் இருப்பார் (பெ) நல்ல ஒழுக்கமுடையவர் (1046) *ப்ராஹ்மணர் பரதேசிகளாய் நல்லாராயிருப்பார் பதின்மர்க்கு* (SII,xiv,192.)

நல்லிது (பெ) நன்மையானது (1000) *இதினுக்கு நல்லிதுந் தீயிதுங் கண்டு செலுத்தக் கடவன்* (SII,v,784.)

நல்லியாண்டு (பெ) நல்ல ஆட்சி யாண்டு (1050) *கோக்கலி மூக்கற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு நாலாவது* (SII,iv,413.)

நல்லெருது (பெ) கால்நடை மீது ஒரு வரி (750) *நல்லாவும் நல்லெருதும்* (EI,v,8.)

நல்லோன் (பெ) நல்ல ஒழுக்கம் உடையவன் (1012) *நண்ணிய நக்ஷத்திரமென நல்லோனண்ணிய* (SII,vii,863.)

நலங்கித்து (வி) அழிவுற்றது (1426) *அதிகாரிகள் நாட்டிலே அன்னியாயத்திலே இரட்டிக்க இலக்கம் எடுத்து நாடு நலங்கித் தென்றும்* (SII,xvii,562.)

நலத்த (வி) சிறப்பையுடைய (771) *கைந் நலத்த களிறுந்தி* (EI,xvii,16.)

நலந்தீங்கு (பெ) நன்மை தீமை (1545) *நாலு வரிசையிலும் நலந்தீங்கு உட்பட நிலஞ் சேத்துக் கொள்ளும் படியும்* (TAS,ix,p.38-39.)

நலம்படுத்து (வி) நன்றாகச் செய்து (905) *ஐய்வேள்வி நலம் படுத்து அறு தொழிற்கள்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நலவு (பெ) துன்புறுத்தல் (1207) *பொத்தகப்படி நிலத்துக்கு இறுக்க வேணு மென்று நலவு செய்யா நின்றான்* (SII,viii,263.)

நலன் (பெ) புகழ் (771) *நாமகளுந் நலனேத்த* (EI,xvii,16.)

நலாள் (பெ) நல்லவள் (1120) *அண்ண லதிகையரன் ஆகம் பிரியாத பெண்ணினலாள்* (CHEN,xxiii,p.93-96.)

நலிதல் (பெ) துன்புறுத்தல் (1300) *காலங்களில் நகரத்தை நலிதல் இராக் களவு காணுதல்* (IPS,491.)

நலிவு (பெ) தொல்லை (1229) *கோயிற்றமந் முகத்தால் நலிவுவரில் நாங்களே முன்னின்று போக்கறுப்போமாகவும்* (IPS,288.)

நல் எருமை (பெ) எருமை மீதான வரி (1430) *அரிசிகாணம் நற்பசு நல் எருது நல் எருமை நற்கிடா எடுத்தளவு* (SII,viii,349)

நவக் கண்டம் (பெ) ஒருவன் உயிரைப் போக்க அரிந்து வைக்கும் உடம்பின் ஒன்பது பகுதிகள் (889) *படாரிக்கு நவகண்டங் குடுத்து* (SII,xii,106.)

நவ கருமம் (பெ) புதுப்பித்தல் (691) *இத்தளிக்கு வேண்டுந் தேவகரும நவகருமஞ் செயிவதற்கும் இருபதின்மர் சதுர்ப்பேதிகளுக்குப் பிரமதேயங் கொடுப்பதற்கும்* (SII,i,151;EI,xvii,22.)

நவ கன்மம் (பெ) உடைந்தவைகளைப் பழுது பார்க்கும் காரியம் (850) *கண்டஸ்புடித நவகந்மாதிகளுக்கும்மாக* (SII,iii,43.)

நவகிறக ப்ரதிமை (பெ) நவக்கிரக உருவங்கள் (1545) *நவகிறக ப்ரதிமை 9ம் நக்ஷத்ர ப்ரதிமை 1* (TDI,v,51.)

நவசரங்யாஸ வற்க்கம் (பெ) நறுமணப் பொருள்கள் (1554) *நம்மாழ்வார் ஸ்ரீ ராமானுச கூடத்துக்கு வருகிற நவசரந்யாஸ வற்க்கம் தெப்பாட்டு சரக்குக்கும்* (TDI,v,154.)

நவதலம் (பெ) ஒன்பது இடங்கள் (1461) *சோபானாதி கோபுராந்தமாக நவதல கோபுரங்களும்* (TAS,viii,p.9-11.)

நவதாங்யம் (பெ) கோதுமை, நெல் முதலிய ஒன்பது வகை தானியம் (1539) *னானாழிச் சருவுக்கும் இருநாழிச் சருவுக்கும் ஆழாக்கு 2 மரக்கால் நவதாந்யம் 1 மரக்கால்* (TDI,iv,127.)

நவ தேவதை (பெ) ஒன்பது தெய்வங்கள் (1024) *நவதேவதை 1..க்கு ஸந்தி ஒன்றுக்கு பேரால் திருவமிதரிசி* (EC,x,Kl.112 (a).)

நவ நிதி (பெ) ஒன்பது வகைப்பட்ட செல்வம் (1021) *நவநிதிக் குலப் பெருமலைகளு மாப்பொரு தண்டாற் கொண்ட* (SII,iv,393.)

நவ பிறிதிட்டை (வி) புதிதாக வைத்தல் (1523) *அனாதகாலமாக பூசையிலாதிருந்து நவபிறிதிட்டையாக பூசை நடத்துகையில்* (IPS,741.)

நவமணி (பெ) ஒன்பது வகை அரிய கல்மணிகள் (1061) *சுடர் நவமணி புனைந் தருமுடி சூட்டி* (SII,xvii,579.)

நவமாக்கின (வி) புதுப்பித்த (1430) *கோபுர மண்டப முற்றுங் கண்டா னின்னாளதனை யெல்லாம் நவமாக்கின தெங்கள் கச்சிச் சின்னான் துணைவரைசன்* (SII,xvii,219.)

நவமி (பெ) ஒன்பதாந் திதி (946) *சனிக்கிழமையும் நவமியும் பெற்ற உரோயணி நாள் இராத்ரி* (SII,vii,35.)

நவரத்ந பொற்பூ (பெ) பலவகை மணிகள் பதித்த பொன்னினால் செய்த பூப் போன்ற நகை (994) *நவரத்ந பொற்பூவும் மாத்தோடு பொன் போர்த்த குதம்பையும்* (SII,v,692.)

நவரத்நம் (பெ) ஒன்பது வகை அரிய கல்மணிகள் (1024) *நவரத்ந மோதிரம் ஒன்றில் நவரத்நம் ஒன்பது உட்பட* (SII,ii,93.)

நவ ஹோமம் (பெ) ஒன்பது வகை வேள்விகள் (1024) *நவஹோமத்துக்குச் சரு ஒன்பதுக்கு* (EC,x,Kl.112 (a).)

நவிங்று (வி) ஓதி (1224) *நால் வகை வேதமு நவின்றுடந் வளர* (SII,iv,372.)

நவிரை (பெ) ஒரு வகை நெல் (1225) *சூலக்காலால் நெல் இருகலமும் நவிரை கல நெல்லும்* (IPS,515.)

நவிற்றும் (வி) சொல்லுகின்ற (1066) *வீர ராஜந்திரர்க்காப் புராரிகல நாப்பால் னவிற்றுஞ் சிவலோக நாதனென* (CHEN,xiv,p.365.)

நற்காசு (பெ) செல்லுபடியாகும் நாணயம் (1013) *விற்றுக் குடுத்துக் கொண்ட விலைப் பொருளன்றாடு நற்காசு 5 இக்காசு* (IPS,90.)

நற்கிடா (பெ) கால்நடை மீது ஒரு வரி (1341) *நல்லெருது நற்கிடா தேவைக் கிடும் பணம்* (SII,vii,109.)

நற்சாத யோகம் (பெ) இன்பத்தை விளைக்கும் கருமயோகம் (1218) *பொன்னவன் தின நற்சாத யோகத்தில் உயர்தரும் போதி மாதவற்கு* (UCR,xviii,p.157-162;UCR,xx,p.15-18.)

நற்பசு (பெ) கால்நடை மீது ஒரு வரி (1430) *அரிசி காணம் நற்பசு நலெருது நலெருமை நற்கிடா எடுத்தளவு* (SII,viii,349.)

நற்பணம் (பெ) காசு (1522) *ஸ்ரீ பண்டாரத்துக்கு ஒடுக்கின நற்பணம் 1850* (TDI,iii,152.)

நற்பழங்காசு (பெ) ஒரு நாணயம் (1209) *கைக் கொண்ட நற்பழங்காசு இரண்டு* (SII,vii,396.)

நற்றவம் (பெ) சிறந்த தவம் (1070) *ஒற்றையாழியுலாவ நற்றவத்திருமலற் செல்வியு* (SII,iii,57.)

நற்றாய் (பெ) பெற்றதாய் (1046) *குடிபுறங்காத்துப் பெற்ற குழவிக் குற்ற நற்றாய் போல* (EI,xxx,19 (vi).)

நறுந்துணை (பெ) நல்ல துணை (1134) *மணிமுடி கவித்துப் புவன நறுந்துணை பூங்கொம்பு புவன முழுதுடையாளும்* (SII,v,645.)

நறும் (இ) மணக்கின்ற (771) *கொங்கலருந் நறும் பொழில்* (EI,xvii,16.)

நறை (பெ) மணம் (1012) *பஞ்சாசாரியப் பகுதியோற்கும் நறைப் புதுமலர் விரி நந்தவான மிறைப்புத் தொழில்புரிந்த விருந்தவத் தோற்கும்* (SII,vii,863.)

நன்கனம் (இ) நன்றாக (771) *தன்பால் உரிமை நன்கனம் அமைத்த* (EI,xvii,16.)

நன்கு (இ) நன்றாக (771) *தெற்றென நன்கு கூவி* (EI,xvii,16.)

நன்கு (பெ) நல்லது (953) *இதுக்கு நன்கு வேண்டுவார் அடி என் தலைமேலன* (SII,viii,694.)

நன்கு பாடுவான் (பெ) முதலில் பாடுபவன் (953) *நிவந்தத்திற் நன்கு பாடுவான் 3 கூறும் உடன்பாடுவான் 2 கூறும் உண்ணச் செய்தேந்* (SII,xiii,74.)

நன்செய் (பெ) நெற்பயிர் விளையும் நிலம் (954) *நீர் நிலமும் புன்செயும் நன்செயும்* (SII,xiii,92.)

நன் நாள் (பெ) சிறந்த நாள் (1148) *புகழ் மகள் சிந்தை மகுழ நன்நாளினும் ஒரு குடை நிலவும் பொருபடைத் திகிரி* (SII,xvii,594.)

நன் பகல் (பெ) பட்டப் பகல் (915) *ஈசானமங்கலத்து நன்பகலியன்ற பூமி* (SII,viii,636.)

நன்பகல் ஆவணம் (பெ) பகற்பொழுதில் நடைபெறும் ஆவணக்களம் (956) *ஈசான மங்கலத்து நன்பகலாவணத் தியன்ற பூமி விலையாவணமாவது* (SII,viii,612.)

நன்புலம் (பெ) நன்செய் (709) *புன்புலமும் நன்புலமும்* (EI,iv,22a;SII,i,135.)

நன்மங்கலம் (பெ) மங்கல காரியம் (1156) *ஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க கொலோத்துங்கசோழ தேவர்க்குத் திருவெழுத்திட்டு* (AVNM,7,p.34)

நன் மச்சுனன் (பெ) தந்தையின் சகோதரி மகன் அல்லது தாயின் சகோதரன் மகன் (1014) *இவனுடன் பிறந்த அரட்டன் சந்தநும் அரட்ட நாகனும் நன் மச்சுனன் அண்ணகாமடியனும்* (SII,ii,63,94.)

நன் மருமகன் (பெ) சொந்த மருமகன் (1014) *இவன்னுடன் பிறந்த வேம்பன் கணவதியும் நன் மருமகன் சேரி செருவடையும்* (SII,ii,63,94.)

நன் மாமன் (பெ) தாயுடன் பிறந்தவன் (1014) *பேரப்பன் மகன் அமரன் மூவரையனும் நன்மாமன் அரையன் கடுவூரும்* (SII,ii,63,94.)

நன்மை (பெ) மங்கல காரியம் (1300) *நன்மைத் திந்மைக்கு இரட்டைச் சங்கும்* (SII,v,238.)

நன்றாக (இ) நோய் தீங்க (1219) *உலகுடைய நாயனார் திருமேனிக்கு நன்றாக இலேசு பெற வேணுமென்று* (IPS,250.)

நன்றாகிய (இ) நல்ல (905) *நன்றாகிய சாஸநஞ் செய்து நன்கருள் வேண்டுமென்றும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நன்றான (இ) குற்றமில்லாத (1278) *இம்மாடை இருநூற்று முப்பதுக்கு அன்றாடு மாற்றுப்படி நன்றான வாசிபடாத வராகன் பணம் 1725* (SII,vii,1045.)

நன்று (பெ) நல்ல செயல் (885) *அரிவிஊர்க் கோட்டை அழித்து நன்று செய்து பட்டார்* (SII,xiv,31.)

நன்று (வி) நல்லது (771) *நன்று நன்றென்று முறுவலித்து* (EI,xvii,16.)

நன்னாமம் (பெ) சிறப்புப் பெயர்; பட்டம் (833) *தக்க சீர் நன்னாமந்தான் பெற்ற எட்டி சாத்தன்* (SII,xiv,44.)

நனைச்சருளியாவிது (பெ) நீர் பெய்து தானம் செய்தது (1102) *திருக்கைக் கீழ்க் கூடி யிருக்கத் திருக்கை நனைச்சருளியாவிது அச்சேரிக்கல் காராண்மை சேத* (TAS,v,p.40-46.)

நா

நா (பெ) மணியின் நாக்கு (1121) *கோயில் கொற்றவாசல் மணிநாவொடுங்க* (SII,xvii,605.)

நாகத்தோடு (பெ) யானைக் கூட்டம் (1266) *கண்மணித் தேரும் சீனவடமரும் நாகத்தோடும் நவமணிக்குவையும்* (IPS,366.)

நாக பணம் (பெ) ஒரு நகை (1152) *நாகபணமும் கொய் சகமும்* (SII,vi,440.)

நாகம் (பெ) சுரபுன்னை மரம் (771) *நாக மாமலர்ச் சோலை* (EI,xvii,16.)

நாகம் (பெ) நல்ல பாம்பு (800) *நாகங் கண்டஞ்ச வென்னெஞ்சம்* (EI,xiii,10.)

நாக மாணிக்கம் (பெ) மாணிக்க வகை (1009) *மேற்படி முகத்தில் கட்டிந நாக மாணிக்கம் மொன்று* (SII,v,521.)

நாக வேதிகை (பெ) பாம்பு வடிவுடைய ஒரு கட்டிட உறுப்பு (1184) *திருவிராமீச்வரம் உடையார் ஸோபானத்து தூண் நாலும் நாகவேதிகை நாலும்* (EC,xiv,Yl.116.)

நாகாசுரம் (பெ) ஊது வாத்தியம் (1715) *நாகாசுரம் ஒத்து வகக்கு பணம் 1க்கு* (TAS,v,p.116-119.)

நாகாபரணம் (பெ) ஒரு நகை (1517) *திருவாபரணம் கிருஷ்ணராயன் பதக்கம் நாகாபரணம் பொன்நில்* (SII,viii,165.)

நாகு (பெ) பசுவின் பெண் கன்று (991) *சேங்கன்று ஈன்றால் உள்ளன [நா]குக்கும் பசுவுக்கும் மாறிக் கொள்வதாகவும்* (SII,xiii,132.)

நாகு கன்று (பெ) (=நாகு) (1014) *பசு முப்பத்து நாலினால் ஆடு அறுபத்தெட்டும் நாகு கன்று ஒன்றினால் ஆடு ஒன்றும்* (SII,ii,64,95.)

நாங்கள் (பெ) தன்மைப் பன்மைச் சொல் (873) *மஹாதேவர்க்கு நாங்கள் விற்றுக் குடுத்த எங்களூர்க் கடைத் தெருவில்* (SII,iii,90.)

நான்குதிசை பதினெண்விஷயம் (பெ) (= ஐஞ்ஞூற்றுவர்); வாணிகரின் பெருங்கூட்டமைப்பு (1300) *பல நகரங்களும் நான்குதிசைப் பதினெண்விஷயத்தோமும் பதினெண் விஷயம் பெருநிரவியாரோமும்* (AVNM,6,p.36-40)

நாச்சியார் (பெ) பெண் தெய்வம்; அம்மன் (1270) *மடத்துக்கு மடசேஷமாக நாயகரும் நாச்சியாரும் எழுந்தருளும் நாள்* (SII,iv,624.)

நாசகம் (பெ) நாயகம்; தலைமை (950) *மால் களிற்றின் நாசகம் இனிதியற்றவும்* (TASSI,1962-65,p.32-52.)

நாசகன்மார் (பெ) (= நாயகன்மார்) (811) *இந்நாடாளு நாட்டு நாசகன்மார்* (SII,xiv,41.)

நாசம் (பெ) அழிவு (1264) *புகழும் புத்ரலாபமும் சத்ருநாசமும் மற்றும் எப்பேர்ப்பட்ட ஸமஸ்த உதயங்களையு* (SII,vi,439.)

நாஞ்சி மூலை (பெ) மதிலுறுப்பு (1003) *மதிள் னாஞ்சி மூலையும்* (TAS,vi,103.)

நாஞ்சில் (பெ) கலப்பை (950) *வாழைக்கோடுட் படக்காமருகோல் புறனாஞ்சிலால் இருபூ விளைவது* (TASSI,1962-65,p.32-52.)

நாட் சோற்றுத் திருவமிர்து (பெ) ஒவ்வொரு நாளும் சுவாமிக்குப் படைக்கும் சோற்றுணவு (988) *இறையிழிச்சி நாட் சோற்றுத் திருவமிர்துக்கு வைத்தேன்* (SII,xiii,79.)

நாட்ட (வி) வரி விதிக்க (961) *இறைநாட்டப் பணிச்சாரையும்* (SII,xiii,106-107.)

நாட்டப்பெறுவது (வி) ஊன்றப் பெறுவது (1008) *முப்படித் தோரணம் நாட்டப்பெறுவதாகவும்* (EI,xxii,34.)

நாட்டம் (பெ) கண் (1296) *விக்கிரம பாண்டியன் தனாட்டங் கடை சிவந்த நாள்* (SII,iv,228.)

நாட்டார் காணிக்கை (பெ) ஒரு வரி (1504) *கோழிமுட்டை வட்டம் நாட்டார் காணிக்கை ஓலை எழுத்து வத்தனை* (ARE,1916,247)

நாட்டரசு (பெ) நாட்டின் காவல் பொறுப்பு; அதற்கான பட்டம் (1274) *இவர்களுக்குக் நாட்டரசுங் கட்டி இவர்....தின் கலம் சிற்றூர் ஐங்கலனெல்லும் பெற்று* (IPS,565.)

நாட்டவர் (பெ) நாட்டிலுள்ள மக்கள் (833) *கதிர்ச் செந்நெற் கவரி காட்டு மிருஞ் சோழ நாட்டவர் தலைவன்* (SII,xiv,44.)

நாட்டாண்மை (பெ) நாட்டின் நிர்வாக அதிகாரம் (950) *ஊராண்மையில் வேறு னீக்கி நாட்டாண்மையோடுடன் கூட்டி* (TASSI,1962-65,p.32-52.)

நாட்டாண்மை (பெ) நாட்டிலிருந்து அரசுக்குச் செலுத்தும் நில்வரியை நிர்ணயித்தல் (1162) *வாணகப்பாடி நாட்டு நாட்டோமும் எங்களி லிசைந்து நாட்டாண்மை செய்ய இட்ட கைச்சவோலைப்படி ... வேலி ஒன்றுக்கு ... ஐம்பதின் கல வரிசை நெல்லு அளப்பதாகவும்* (TAMARAI,p.48-49.)

நாட்டாயம் (பெ) ஒரு வரி (1532) *கூனி மேட்டில் னடந்து வருகிற நாட்டாயம் உதிரித்தீர்வை தெற்கு வழி* (SII,xvii,264.)

நாட்டார் (பெ) நாட்டு மன்ற உறுப்பினரான நிலக்கிழார் (550) *பெருநகர நாட்டு நாட்டார் காண்க* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

நாட்டார் வரிவு (பெ) ஒரு வரி (1294) *ஆசுவக்கடமை நாட்டார் வரிவு ஊர்ப்பழச்சம்...மற்றும் எப்பேர்பட்ட வரிவுகளும்* (EC,x,Kl.18.)

நாட்டி (வி) ஊன்றி; நட்டு (550) *கல்லுங் கள்ளியுந் நாட்டி* (TASSI,1958-59,p.41-83,p.26-32.)

நாட்டியத்தார் (பெ) நடனம் ஆடுவோர் (924) *சிங்கனீலனும் நாட்டியத்தார் நிலத்துக்குக் கிழக்கும்* (SII,viii,695.)

நாட்டுக் கணக்கு (பெ) நாட்டு மன்றத்தின் கணக்கு எழுதுபவர் (1268) *இவகள் சொல்படிக்கு நாட்டுக்கணக்கு திருவரன்குள வேளான் அரன்குளப் பெருமாள் எழுத்து* (IPS,373.)

நாட்டுக் காமுண்டன் (பெ) நாட்டுக் காமுண்டு செய்யும் நிலக்கிழான் (1015) *கிழலை நாட்டு நாட்டுக் காமுண்டன் சோழவிச்சாதிர காமுண்டன் கன்மி* (EC,ix,Cp.129.)

நாட்டுக் காமுண்டு (பெ) 'நாடு' நிலப்பகுதியின் நிர்வாகப் பொறுப்பு (1039) *நாட்டுக்காமுண்டு செய்கிற விண்ணமங்கலத்து ராஜேந்த்ர சோழ காமுண்டனும்* (EC,ix,Nl.7a.)

நாட்டுக்கால் (பெ) நாட்டு மன்றத்தின் பொறுப்பிலுள்ள வாய்க்கால் (691) *வடக்கு நோக்கி நாட்டுக் காலுக்கே போன வழி* (SII,i,151;EI,xvii,22.)

நாட்டு கேடு (பெ) நாட்டுக்கு எதிரான காரியம் (1239) *ஊற்க்கேடு நாட்டுகேடு பொற்கேடு சொந்னார் உண்டாகில் கிராமத் துரோகிகளும் நாட்டுத் துரோகிகளுமாய்* (SII,vi,48.)

நாட்டு செட்டிகள் (பெ) ஒரு குறுகிய வட்டாரத்துக்குள் வியாபாரம் செய்யும் செட்டிகள் (1050) *நம்மக்கள் நாட்டுச் செட்டிகளும் திசை செட்டிகளும்* (AVNM,2,p.6-8)

நாட்டுத் துரோகி (பெ) நாட்டு மன்றத்துக்கு எதிரி (1300) *இப்படித் தவிரச் செய்தார்களாகில் கிராமத் துரோகிகளும் நாட்டுத்துரோகிகளும் ஆகவும்* (AVNM,3,p.27-28)

நாட்டு நீங்கல் (பெ) நாட்டு வரி விதிப்பு எல்லையிலிருந்து விலக்கப்படல் (852) *நாட்டு நீங்கலாய் உட்புரவாய் தேவர் தானமாக* (SII,ii,98.)

நாட்டுப் பண்டாரம் (பெ) நாடுகளில் உள்ள கருவூலம் (1014) *பண்டாரிகளுங் கரணத்தார்களும் உடையார் ஸ்ரீ ராஜராஜேச்வரம் உடையார் நாட்டுப் பண்டாரத்தே பெறவும் ஆக* (SII,ii,69.)

நாட்டுப் பண்ணிக்கெய் (பெ) ஒரு வரி (691) *நாடாழ்ச்சியுன் நாட்டுப் பண்ணிக்கெயும்* (SII,i,151;EI,xvii,22.)

நாட்டுப்பால் (பெ) நாட்டின் பகுதி (1520) *வல்ல நாட்டவரோம் எங்கள் நாட்டுப்பால் ஆன கிளிப்பயிற்றூர் நாட்டில் பாலைக்குடி களங்குடி* (IPS,733.)

நாட்டுப் புரவு (பெ) ஒரு நாடு அரசாங்கத்துக்குச் செலுத்தும் மொத்த வரி (1259) *எப்பேற்பட்டனவும் தவிர்ந்து நாட்டு புரவிலு மிறங்கட்டு* (IPS,360.)

நாட்டுபாதி (பெ) ஒரு வரி (1300) *காவேரிக் குலைதேவை குடிமை [நா]ட்டுபாதி ஆனைக் கூடம்* (SII,ii,22.)

நாட்டுமரியாதி (பெ) நாட்டின் நடைமுறைப்படி (1372) *நாட்டுமரியாதி கடமை விநிவோகம் தூரக்காசு உள்ளதும்* (SII,viii,,214)

நாட்டு மன்றாடிகள் (பெ) நாடு அளவில் உள்ள பெரிய மன்றாடிகள் மற்றும் இடையர் (927) *பஃட்டாலகர்க்கு நாட்டு மன்றாடிகள் வைத்த நொந்தாவிளக்கு* (CHEN,xxv,p.341.)

நாட்டுவகை (பெ) ஒரு வரி (753) *நாட்டுவகை இறாமயியும்* (SII,ii,73.)

நாட்டுவரி மகண்மை (பெ) ஒரு வரி (1340) *ஆசுபொதுமக்கள் பேர்க்கடமை நாட்டுவரி மகண்மை வாசல் ஒட்டு* (ARE,1919,218)

நாட்டுவித்தான் (வி) ஊன்றச் செய்தான் (1100) *இது நாட்டுவித்தான் ... மறவன்* (AVNM,3,p.13)

நாட்டு விநிவோகம் (பெ) (=நாட்டு வினியோகம்) (1421) *குறிச்சியை நோக்கி வரும் நாட்டு விநிவோகம் உட்ப்பட* (AVNM,4,p.17-18)

நாட்டு விவத்தை (பெ) நாட்டாரின் தீர்மானம் (1178) *இந்நிலத்தால் வந்த கடமை குடிமைகள் இராச நியோகமும் நாட்டு விவத்தை ஊர் விவத்தைபடியும் வந்த கடமை குடிமை எப்பேர்ப்பட்டனவும்* (SII,xvii,540.)

நாட்டு வினியோகம் (பெ) நாட்டு மன்றச் செலவுக்கான வரி (1202) *நாடாய் நாட்டு வினியோகத்தாலுள்ளதும் சேந்து உடையார்* (IPS,155.)

நாட்டுவெச்சம் (பெ) (=நாட்டு வினியோகம்) (1524) *விரிமுட்டு காணிக்கை கட்டாயம் நாட்டு வெச்சம் ஆயம்* (ARE,1918,115)

நாட்டு வேளாங் (பெ) ஒரு பட்டப் பெயர் (909) *தென்நவன் மழ நாட்டு வேளாநாயின கொற்றன் மாறன் வைத்த* (SII,xix,35.)

நாட்டோகரி (பெ) ஒரு வரி (1223) *காட்சி நாட்டோகரியும் வினியோகமும் பொன் வரியும்(ஞ்) சபா வினியோகமு* (CHEN,xi,p.264-66.)

நாட்ப் போனகம் (பெ) பகற் படையல் (996) *உள்ளாலை கஷணவதியார்கு நாட்ப் போனகம் இருநாழி தூக்குத்தல் அரிசி* (SII,vii,841.)

நாட (வி) விரும்ப (750) *காதலியர் தீய்நாட வாய் சிவந்தமின்னாடு வேன் மாறன்* (EI,xiii,10.)

நாடகசாலை (பெ) நாடகக் கொட்டகை (934) *பதி பாத மூலத்தாரும் நாடகசாலையில் இருந்து* (SII,v,721.)

நாடகம் (பெ) நாடக நூல் (1111) *பூம் புலியூர் நாடகஞ் செய் நாவலன் பெற்ற நிலம்* (SII,vii,753.)

நாடகம் (பெ) கூத்து (1192) *இயல் இசை நாடகம் எழில் பெற வளர* (SII,v,301.)

நாடக மகளிர் (பெ) கூத்தாடும் பெண்கள் (1012) *முப்பத் திருவர் பாடல் பயின்ற நாடக மகளிர்கும்* (SII,vii,863.)

நாடகமாட (வி) கூத்தாட (1058) *கோயிலில் ராஜராஜேச்வரம் நாடக மாட நித்த நெல்லு* (SII,ii,67.)

நாடகற்றி (வி) நாட்டினின்றும் போக்கி (921) *அரும்பசி நோய் நாடகற்றி* (SII,iii,206a.)

நாடமைந்த பேர் (பெ) நாட்டு மன்ற உறுப்பினர் (1697) *இது வடவகை தென் மிதி நாடமைந்த பேர்க்கு கல்வெட்டு* (kanhnhi,1968/26.)

நாடவர் (பெ) (= நாட்டார்): நாட்டுமன்ற உறுப்பினர் (1263) *அதியமானார் திருமுன் நாடவர் திரண்டு இருந்து கேட்டு* (SII,vii,402.)

நாடற்ற மரியாதி (பெ) ஒரு நாட்டு வரம்புக்குள் உண்டான வழக்கம் (1300) *உள்ள நிலத்துக்கு*

நாடற்ற மரியாதி கடமை குடிமை செய்யவும் (IPS,559.)

நாடன் (பெ) நாட்டையுடையவன் (1012) *தண்டமிழ் நாடன்* (SII,vii,863.)

நாடன் மஞ்சள் (பெ) ஒரு வகை மஞ்சள் (1127) *திருச்சுண்ணத்துக்கு [நாடன்]மஞ்சள் நாற்பதிந் பலமும்* (SII,iii,80.)

நாடாட்சி (பெ) நாட்டுமன்ற நிர்வாகச் செலவின் பொருட்டு வாங்கும் வரி (852) *பரிஹாரம் நாடாட்சியும் ஊராட்சியும்* (SII,ii,98.)

நாடாய் இசைஞ்ச நாடு ஒரு மனதாகக் கூடிய நாட்டு மன்றம் (1250) *இராஜராஜ வளநாட்டுப் பாலையூர் நாட்டு நாடாய்சைஞ்ச நாட்டவரோம்* (IPS,343.)

நாடாய் இசைந்த நாடு (பெ) ஒரு மனதாகக் கூடிய நாட்டு மன்றம் (909) *வல்ல நாட்டுக் கவிற்பா கள்ளப்பால் நாடாய் இசைந்த நாட்டோம்* (IPS,38.)

நாடாழ்ச்சி (பெ) (=நாடாட்சி) (691) *நாடாழ்ச்சியுடன் நாட்டுப் பண்ணிக்கெயும்* (SII,i,151.EI,xvii,22.)

நாடி (வி) ஆராய்ந்து (862) *கூறிய வகையானாடி நன்றமைத்த வழியறவோற்கு* (SII,xiv,45.)

நாடின் (வி) ஆராயின் (833) *நாடினோர் தமக்கில்லா மோடனியங்கு மாறனேரியும்* (SII,xiv,44.)

நாடு (பெ) தென்னிந்தியாவில் பழங்கால முதல் இருந்து வந்த அடிப்படை சமூக நிலப்பிரிவு மற்றும் நிர்வாகப்பிரிவு (550) *பெருநகரநாட்டு நாட்டார் காண்க* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

நாடு (பெ) பெரிய ஆட்சிப்பகுதியின் பொதுப்பெயர் (792) *சோழ நாட்டுத் தென்கரை ஆர்வலக் கூற்றத்து நாட்டார்* (EI,xviii,14.)

நாடு (பெ) (= நாட்டார்); நாடு என்ற நிலப்பிரிவிலுள்ள பெருநிலக்கிழார் (922) *நாட்டைக் கூட்டி நில நடப்பித்து* (SII,ii,76.)

நாடு காப்பார் (பெ) (=நாடு காப்பான்) (500) *பிரமதாயமுடையாருந் நாடுகாப்பாரும் புறங்காப்பாரும்* (AVNM,I,p.67-69)

நாடு காப்பான் (பெ) நாடு என்னும் நிலப்பிரிவின் காவலை மேற்கொள்பவன் (765) *நாடு காப்பானும் வியவனும் புகாமெயும்* (EI,xxxvi,20.)

நாடு காவல் (பெ) நாடு என்னும் பிரிவின் காவலை மேற் கொள்வதற்கான வரி (792) *நாடு காவலும் ஊடுபோக்கும்* (EI,xviii,14.)

நாடுகை (பெ) அண்டிச் செல்கை (1400) *...இந்த உதையப் பெருமா...ளிட்டாரை நாங்கள் நாடு[கையி]ல் இற்றை நாள்* (IPS,600.)

நாடுபடு குடிமை (பெ) குறித்த நாட்டுள் செலுத்தப்படவேண்டிய குடிமை (1238) *இன்நிலம் எழுமாவுக்கும் நாட்டு ஒட்டின் படி நாட்டு மரக்காலாற் கடமை அளக்கவும் நாடுபடு குடிமை இறுக்கக் கடவது* (IPS,327.)

நாடுரி (பெ) ஒரு நாழியும் ஓர் உரியும் (909) *பழவரிசி$_{0}$ நாடுரியாழாக்கரிசியும்* (SII,iv,520.)

நாடு வகை (வி) நாடு அளவில் நில வருவாய் மதிப்பீடு செய்யும் அலுவலர் (1008) *நித்தவிநோதப் பல்லவரையர் அதிகாரதில் கிழலைநாடு உள்ளிட்ட நாடு வகைசெய்கின்ற கீழாறு கிழவன் தமிழ்ப் பேரையன் கண்டராதிதன்* (EC,ix,Cp.132.)

நாடு வாழ்க்கை (பெ) நாட்டை ஆட்சி புரிகை (962) *கண்ணம் புறையன் நாடு வாழ்க்கையில் நெடியதளிபூமி* (TAS,iii,p.171-73.)

நாடு வாழுமவர் (பெ) நாட்டை ஆள்பவர் (951) *நாடு வாழுமவர்க்கு இருபத்தைங் கழஞ்சு பொன் தண்டப்படுவது* (TAS,v,p.6-7;TAS,i,p.288-89.)

நாடு வாழுமவன் (பெ) நாட்டை ஆள்பவன் (1000) *கொள்ளப் பெறார் நாடு வாழுமவனும் பணியுடையவகளும்* (SII,v,784.)

நாடேன்ற வரி (பெ) நாட்டார் தமக்காக கொள்ளும் வரி (1223) *இறை குடிமையந்தராயம் நாடேன்ற வரி கணக்கப் பேறு வார மாக்கலம்* (IPS,267.)

நாண் (பெ) மாங்கலியம் கோத்த சரடு (1001) *பிராட்டியார்க்கு சாத்தியருள தன்த மாணிக்கத்தின் நாண் இரண்டும்* (SII,v,975.)

நாணம் (பெ) பழியஞ்சும் குணம் (1134) *முத்தமிழும் அருபிறப்பிநோடொரு முதலாய் வரு நாணமும் களிக்கறியும் பருவ மாரியும்* (SII,v,645.)

நாணல் (பெ) கோரைப் புல்வகை (1545) *மலடனாறு கெட வடகரை நாணல் நடவும்* (EI,xxix,9.)

நாணாள் (பெ) ஒவ்வொரு நாளும் (1120) *எண்ணான்கு பேறறும் எண்ணியவை நாணாள் செலவமைத் தான்* (CHEN,xxiii,p.93-96.)

நாதகர் (பெ) உற்றார் உறவினர் (1232) *கடமையும் அச்சுமிறாதே போகையால் இவன் கடமைக்கு நாதகராய் இறுப்பாருண்டாகில்* (IPS,301.)

நாதிகள் (பெ) பொறுப்பான உற்றார் உறவினர் (1232) *இவநுக்கு நாதிகளாய் முன்னின்று இறுப்பார் இல்லாமையாலே* (IPS,301.)

நாந்று (வி) நாளில் (988) *உத்தர அயநம் பற்றிந ஸங்கிராந்தி நாந்று வைத்த படட்ம் மூந்றிநால் பொந் நாற்ப்பதிந் கழஞ்சு* (SII,v,672.)

நாநிலத்தோர் (பெ) பூமியிலுள்ளவர்கள் (921) *நாநிலத்தோர் விஸ்மயப்பட நாற் கடலொரு பகலாடிஉம்* (SII,iii,206a.)

நாப்பாகெல்லை (பெ) நான்கு பக்கங்களிலுமுள்ள எல்லை (1093) *செப்பியிருந்த செப்பேட்டு சாஸநம் திருக்கழுக் குன்றம் நாப்பாலெல்லையும் பார்க்க* (SII,v,473.)

நாபி₄ (பெ) கொப்பூழ் (1014) *புருஷாகராமாய் நாபி₄க்கும் கீழ் மூன்று சுருப்பேழை* (SII,ii,53.)

நாபி₄ மண்டலம் (பெ) கொப்பூழ் சுழி (905) *அழகமைநாபி₄ மண்டலத்து சோதி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நாம் (பெ) தன்மைப் பன்மைச் சொல் (875) *நாம் நீரோடு அட்டி... குடுத்த* (SII,vi,347.)

நாமகள் (பெ) சரசுவதி (771) *பூமகளும் புலமகளுந் நாமகளும்* (EI,xvii,16.)

நாமஞ் சாத்தி (வி) பேர் சூட்டி (1150) *எறிவீரந் தானமென்று நாமஞ்சாத்திக் குலத்தின் பேரிட்டு* (AVNM,9,p.33-34)

நாமம் (பெ) பெயர் (768) *பயினூர் அன்னு நாம முள்ளதனையும்* (SII,xii,34.)

நாமிசை மடந்தை (பெ) சரசுவதி (966) *பூமிசை மடந்தையும் புனை தமிழ்ப்புல..ர் நாமிசை மடந்தையும் நன்கினிதிருக்க* (SII,xiv,87.)

நாய் (பெ) விலங்கு வகை (614) *நாய் ..கள்ளனைக் கடித்துக் காத்திருந்தவாறு* (CHHS,1971/59.)

நாய்பிணம் (பெ) இழிவான சாவு (1050) *வீரதளத்து முறைமையில் அழியவிருந்தால் பன்றியில் ஒன்றாவதாகவும் நாய்பிணம்* (AVNM,2,p.6-8)

நாய்வாலம் (பெ) ஒரு வகை நில உடமை (1014) *இன்னாட்டு ஆரப்பாழ் நாய்வாலமும் மருத்துவப் பேறும் பள்ளியும் உட்பட* (SII,ii,4.)

நாயக்கத்தனம் (பெ) விஜயநகர அரசில் அடங்கிய நாயக்கர் என்ற குறுநிலத்தலைவரின் ஆட்சிப்பகுதி (1470) *வெஞ்சனத்துக்கும் நடக்கும் படிக்கும் தம்முடைய நாயக்கத்தனமான சளுக்கி பற்றில் விட்ட குசபட்டு ஊர் ஒன்று* (SII,iv,362.)

நாயக்கபாடிகள் (பெ) விஜயநகர அரசுக் காலத்து நாயக்க வீரர் (1529) *சரணாகராய் வந்ததுக்கேயுள்ள ராயணராசர் உம்மத்தூர் மல்லராசர் வெங்கடாத்திரி முதலான பாளையத்து நாயக்கபாடிகளையும் பாலித்து* (SII,vii,52.)

நாயக்கன்மார் (பெ) *[போசள நாட்டு]* வீரர் (1276) *மஹாவீரைய தண்ட நாயக்கர் நாயக்கன்மாரில் நாகைய நாயக்கனேன்* (SII,v,653.)

நாயகக் கண்டம் (பெ) அணிவகை (1232) *திருவண்ணாமலை உடைய நாயனார் சாத்தியருள இட்டபதக்க மாலை 1னால் நாயகக் கண்டம்* (SII,viii,103.)

நாயகஞ் செய்கின்ற (வி) மேற்பார்வை செய்கின்ற (1013) *..[மா]ராயார்க்காக நாயகஞ் செய்கின்ற உடையார் ஸ்ரீ ராஜராஜதே₃வர் ஸேநாபதி* (SII,v,652.)

நாயகஞ் செய்தார் (பெ) தலைமைப் பொறுப்பு வகிப்பவர் (802) *எங்குடியில் நாயகஞ் செய்தார் இயற்று வாராக அமைந்தோம்* (SII,xii,42.)

நாயகத் தூக்கம் (பெ) நகையில் நடுத் தொங்கல் (1014) *இடைக்கட்டு எட்டும் நாயகத் தூக்கம் மூன்றே நாலித் தலையில்* (SII,ii,56.)

நாயகப் பேர் (பெ) தலைமைப் பதவியில் உள்ளவர்கள் (1246) *கழுகு திருநந்தவனக் குடிகள் பெற்று வருகிற படியே நாயகப் பேர் இரண்டுக்கு கொற்றுக்கு* (SII,viii,53.)

நாயகம் (பெ) நடுவில் உள்ளது (970) *வெள்ளி ப்ரபையில் ஏறின நாயகமான மாணிக்கம் 1ம்* (TDI,i,8.)

நாயக முற்பேர் (பெ) படைத் தலைவர் (1165) *....சத்தியாச்சிரிய குலகாலர் தெரிந்த வில்லிகளில் நாயக முற்பேர் படவளவம் உள்ளிட்ட பெரும் படையும்* (TAS,vii,p.12-13.)

நாயகர் (பெ) வணங்கும் தெய்வம் (1100) *பதினெண்விஷயத்துக்கும் அக்கசாலை நாயகர்* (AVNM,3,p.45)

நாயகர் (பெ) தலைவர் (764) *மன்றாடுவார் நாயகரல்லா இளமக்கள் நாயகர்* (TAMIZ,1970,p.124.)

நாயகன் (பெ) ஒரு நகை உறுப்பு (1014) *நாயகனிற் பின்பு பொன்னிலாதது அரக்குட்பட* (SII,ii,46.)

நாயகன்மார் (பெ) தலைவர்; பெரிய குடிகள் (809) *இந்நாடாளு நாட்டு நாயகன்மார்* (SII,xiv,40.)

நாயகி (பெ) தலைவி (1134) *மூன்றுலகேத்த வருநாயகி திருமடந்தையும்* (SII,v,645.)

நாயநார் கடமை (பெ) ஒரு வரி (1268) *பொன்வரி வினியோகம் நாயநார் கடமை கீழிறையும் தரவேணுமென்று சொல்லி* (IPS,375.)

நாயற்றுக் கிழமை (பெ) வாரத்தின் முதல் நாள் (888) *கும்ப நாயிற்று நாயற்றுக்கிழமை* (SII,v,684.)

நாயற்றுபாடு (பெ) மாலை நேரம் (938) *நாயற்றுபாடு நானாழியருசியாலும்* (SII,viii,10.)

நாயறு (பெ) சூரியன் (894) *நாயறும் முள்ளளவும் எப்பேர்ப்பட்ட இறையும் காட்டாதோமாக* (SII,xiii,303.)

நாயறு (பெ) (= நாயற்றுபாடு); சாயங்காலம் (894) *பகல் இரண்டு விளக்கு நாயறு மட்டும் ஒரு சாமத்தளவும் எரிப்போமாகவும்* (SII,xii,108.)

நாயறுபாடு (பெ) (= நாயற்றுபாடு) (877) *நாயறுபாடு ஒரு விளக்குமிட்டு* (SII,vi,287.)

நாயன்மார் (பெ) சைவ அடியார்கள் (1462) *பரிவார நாயன்மாரையும் ப்ரதிஷ்டி₂த்து* (TAS,i,p.99-102.)

நாயாடிகள் (பெ) அரசாங்க அலுவலர் (?) (753) *நாயாடிகளும் தூதுவரும்..இறாமயும்* (SII,ii,73.)

நாயெழவு (பெ) இழிந்த சாவு (1150) *உத்திரத்திலழிந்து படுவாநாகில் அவன் பிணம் நாயெழவும் ஆவதாகவும்* (AVNM,9,p.33-34)

நாரத்தம்பழம் (பெ) பழ வகை (985) *கிளிகளெஞ்சிப்பழமும் நாரத்தம்பழமும் மாதளங்காயும்* (SII,xix,380.)

நாரத்தை (பெ) மர வகை (1316) *எலும்பிச்சை *நாரத்தை மற்றுமுள்ள மரங்களும் வைப்பது* (EI,vii,18.)

நாரதர் (பெ) ஒரு முனிவர் (905) *பயந்தரு தும்பு₃ரு நாரதர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நாரத₃ வசநம் (பெ) அறநூலான நாரத ஸ்மிருதி (1200) *ஸ்ம்ருதிகளில் கௌ₃தம வாசகத்தாலும் நாரத₃ வசநத்தாலும் மஸ்கர வசநத்தாலும்* (SII,xvii,603.)

நாராசம் (பெ) கிளைவாய்க்கால் (959) *சோமாசியார் தந்த பூ₄மி ஸுப்₃ரஹ்மண்ய நாராசதின் வடகு* (SII,iii,161.); (1036) *ஸ்ரீ கண்டவதிக்கு மேற்கு முதற் கண்ணாற்று உருத்திர நாராசத்துக்கு வடக்கு* (SII,xiv,153.)

நாராசம் (பெ) கம்பி (1009) *அனந்தலை விளக்கு உள்கருவும் நாராசமும் உள்பட நிறை* (SII,v,521.)

நாராய நாழி (பெ) இரும்பினால் செய்த நாழிக்கால் (867) *நாராய நாழியால் நிசதி நாழி நெய்* (SII,xiv,12a.)

நால்வர் (பெ) நான்கு பேர்கள் (813) *இந்நால்வரும் மஹா நக₃ரத்தாரயும்* (SII,iv,132.)

நால் வேதம் (பெ) ருக், யஜுர், ஸாமம், அதர்வணம் ஆகிய நான்கு வேதங்கள் (950) *ஒரு தன்மை இரு பிறப்பில் முச் செந்தீ நால்வேதத் தருமரபில்* (TASSI,1962-65,p.32-52.)

நாலத்தொன்று (பெ) நாலில் ஒரு பங்கு (1200) *தர்ம்ம கர்த்தாவுக்கு நாலத் தொன்றுக்கு வரும் ப்ரஸாதம்* (SII,viii,483.)

நாலம் (பெ) பூமி (1500) *பருமதின் பொலிந்து மலர்தலை நாலத்து மன்னுக மலிந்தேய்* (TAS,ix,p.19.)

நாலி கங்கபாடிக் கல் (பெ) கங்கபாடியில் காணப்படும் ஒரு வகை உயர்ந்த மணி (1014) *பொத்தி ஒன்றும் நாலி கங்கபாடிக்கல் ஒன்றும் உட்பட நிறை கழஞ்சேய் கால்* (SII,ii,48.)

நாலு பாதம் (பெ) வேதத்தின் நான்கு பகுதிகள் (பதம், கிரமம், ஜடை, கணம் என்பன) (866) *நாலு பாதத்திலுந் துருச்சொல்லி ஒன்பது புகவினில் அகத்தூஹத்தில் இரண்டு வாரம் அடுத்தோதுவது* (TAS,i,p.1-14.)

நாலுமா வாசி செலுத்துவதில் ஒன்றுக்கு ஐந்தில் ஒரு விழுக்காடு ஏற்றிக் கொடுத்தல் (1253) *செலவளவு மாகாணி வாசியும் நாலுமா வாசியுங் கழித்துக் கடமையும் ஆயமுங் கொள்ளக் கடவதாக* (SII,iii,63.)

நாலொபாதி (பெ) நான்கில் ஒரு பாகம் (985) *திருக்கற்றளி எடுக்கின்ற திருக்கற்றளியில் நாலொபாதி திருக்கற்றளி எடுப்பித்தார்* (SII,xix,459.)

நாவகம் (பெ) நாக்கில் (1121) *சொற்றிறம் புணர்ந்த கற்பிநளநாகி விருப்பொடு நாவகத்திருப்ப* (SII,xvii,605.)

நாவகம் (பெ) நாக்கில் (1121) *சொற்றிறம் புணர்ந்த கற்பிளநாகி விருப்பொடு நாவகத்திருப்ப* (SII,xvii,605.)

நாவல் (பெ) நாவல் மரம் (1074) *பெரு வரம் போடடைந்த நாவலுக்கு கிழக்கும்* (EC,x,Mb.105 (c).)

நாவலந்தீவு (பெ) ஏழு தீவுகளுள் ஒன்றான பரத கண்டம் (921) *ப்ரஹ்மதேயம் பலதிருத்திஉம் நாவலந்தீ வடிப் படுத்த நரபதிஉம்* (SII,iii,206a.)

நாவிசம் (பெ) நாவிதத் தொழில் (1014) *நாவிசஞ் செய்ய இருவருக்கு செயதரன் நெத்தானன் ஆன ராஜராஜப் பெரு நாவிசனுக்குப் பங்கு ஒன்றும்* (SII,ii,66.)

நாவிசர் (பெ) நாவிதத்தொழில் செய்பவர் (978) *இவ்வூர் நாவிசர் திருக்கோயிலுடையார் வசம் ஆட்டை விட்ட மிடக்கடவ காசு நாலு* (SII,iii,151-151.a.)

நாவிதக் காணம் (பெ) நாவிதர் செலுத்தும் வரி (765) *ஆட்டுக் காணமும் நாவிதக் காணமும்* (EI,xxxvi,20.)

நாவு (பெ) நாக்கு (1453) *வஞ்சக் கள்வன் மாமாயன் பாம்பணையாற்குந் தம் பாம்பு போல நாவு இரண்டுளவாய்* (CHEN,v,p.437-41.)

நாழி (பெ) ஒரு முகத்தல் அளவை (768) *திங்கள் நாழி நெய்யாகக் கொண்டு* (SII,xiv,27.)

நாழிக் குவளை (பெ) தானியம் அளக்கும் கருவி (1634) *வெள்ளாழர் விருதும் மேழிக்கொடியும் நாழிக்குவளையும்* (AVNM,7,p.75-81)

நாழிகை (பெ) 60 விநாடி கொண்ட நேரம் (771) *பகனாழிகை இறவாமை* (EI,xvii,16.)

நாள் (பெ) தினம் (765) *யாண்டு முப்பத்து மூன்று நாள் முன்னூற்று முப்பது* (EI,xxxvi,20.)

நாள் (பெ) நட்சத்திரம் (844) *தைப்ப்பூயத்தி னாள்* (TAS,ii,p.13-14.)

நாள் (பெ) பகல் (996) *கணவதியார்கு நாட்ப் போனகம் இருநாழி* (SII,vii,841.)

நாள் மலர் (பெ) அன்றலர்ந்த பூ (905) *வாச நாள் மலர் கமழ் பொழில்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நாளம் (பெ) மாணிக்க வகை (1014) *வயிரம் நாலும் மாணிக்க நாளமுங் கோமளமும் எட்டும் மரகதம் ஐஞ்சும்* (SII,ii,93.)

நாளேற்றம் (பெ) கூடுதலாகச் சேர்ந்த நாட்கள் (1000) *அமாவாதி(க்)கும் நாளேற்றதினும் செலவு சடிக் குளத்தால்* (TAS,iv,p.11-16.)

நாளை (பெ) காலம் (768) *சந்திராதித்தியர் உள்ள நாளையும்* (SII,xii,34.)

நாளொபாதி (பெ) நாள்தோறும் செலுத்த வேண்டிய பொருள் (920) *கண்ணத்தம்பாடிச் சவயார் நாளொபாதி கடவர்* (SII,vii,927.)

நாளோலை (பெ) பஞ்சாங்கக் குறிப்பு கொண்ட ஏடு (978) *கோயிலில் நாளோலை தூக்குந் திருக்களுக்கு* (SII,iii,151-151a.)

நாளோலை தூக்குந் திருக்கள் (பெ) பஞ்சாங்கம் அறிவிக்கும் சோதிடர் (978) *கோயிலில் நாளோலை தூக்குந் திருக்களுக்கு நிசதம் நானாழி யாக* (SII,iii,151-151a.)

நாற்கவி (பெ) வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா ஆகிய பாவகை (1012) *விருப்பொலி பத்தர் தம் பாடல் பயின்றது முத்தமிழ் நாவலர் நாற்கவி நவின்றது* (SII,vii,863.)

நாற்காலி பீட₂ம் (பெ) நான்கு கால்களுள்ள இருக்கை (1014) *செடியுமாகச் செய்த நாற்காலி பீட₂ம் ஒன்று* (SII,ii,48.)

நாற் சாண் கோல் (பெ) நிலம் அளக்கும் கோல் வகை (1004) *பள்ள வாக்காலினின்று இச் செ...க்குப் பாய நாற்சாண் கோலா லொரு கோலுள்ள கலத்தால்* (SII,vii,440.)

நாற்பத்து நாற்காவது (பெ) ஓர் எண் (44) (775) *யாண்டு நாற்பத்து நாற்காவது* (tasad.ch.h.s.1971/51.)

நாற்பத்தெண்ணாயிரவர் (பெ) நாற்பத்தெண்ணாயிரம் பேர்; நாடெங்கிலும் உள்ளவர் (867) *பந்மாஹேச்வரர் நாற்பத்தெண்ணாயிரவரும் இரக்ஷை* (SII,xiv,12a.)

நாற்பது (பெ) ஓர் எண் (40) (731) *போழநன்தி யாரிடை உடைய நாற்பதின் காடி நெல்லும்* (SII,viii,331.)

நாற்பாற்றிணைகள் (பெ) பலவகைக் கணக்கு அலுவலர் (500) *அத்திகோயத்தாரும் உள்மனையாருந் நாற்பாற்றிணைகளுந் தமக்கு* (AVNM,1,p.67-69)

நாற் பெரும்படை (பெ) யானை, குதிரை, காலாள், தேர் என்னும் நால்வகைப் படை (771) *நாற்பெரும் படைஉம் பாற்படப் பரப்பி* (EI,xvii,16.)

நாற்பேரெல்லை (பெ) நான்கு திசைகளிலுமுள்ள எல்லைகள் (988) *இதற்குரிய கிணறும் இன்னாற் பேரெல்லையுள் ஏகப்பட்ட நிலம்* (SII,xiii,79.)

நாற்றங்கால் (பெ) நாற்று வளரும் நிலம் (950) *வாழைக் கோட்டின் நாற்றங்கால் புகப்பாய்த புறக்காலை* (TASSI,1962-65,p.32-52.)

நாற்றிசைஓர் (பெ) உலகோர் (921) *நாற்றிசைஓர் புகழ் நீரது நானிலத்திலை* (SII,iii,206a.)

நாற்றுக்கால் (பெ) (=நாற்றங்கால்) (892) *துடவைபடும் நாற்றுக்காலு* (SII,vi,535.)

நாறு (வி) வாசனை வீசுகின்ற (911) *நாறு பூத் திருப்பள்ளித்தாமம்* (SII,viii,640.)

நாறு சாந்து (பெ) கலவைச் சந்தனம் (986) *எண்ணைக்கு பொந் எழு கழஞ்சும் ஏழுநாளைக்கு நாறு பூவும் நாறு சாந்துக்கும் பொன் இரு கழஞ்சும்* (SII,iii,128.)

நான் (பெ) தன்மை ஒருமைப் பெயர் (780) *சவையாரிடை நான் விலை கொண்டு உடைய* (SII,xiv,17.)

நான்கு (பெ) எண் (4) (550) *விண்ணபருமற்கு நான்கு* (TAMIZ,1970,p.92-93.)

நான்குதிசைப் பதிநெண்பூமி நானாதேசி (பெ) (=ஐஞ்னூற்றுவர்); பல நாடுகளைச் சேர்ந்த வாணிகர் கூட்டத்தின் பொதுப்பெயர் (1050) *இனிது நடாத்துகின்ற நான்குதிசைப் பதினெண்பூமி நானாதேசித் திசையாயிரத்தைந்நூற்றுவரும்* (AVNM,2,p.6-8)

நான்கெல்லை வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு ஆகிய நான்கு எல்லை (550) *வடபாலெல்லை பல்லாங்குழிக்காவின் தெற்க்கும் இந்நான்கெல்லையகத்தும் அகபட்ட பூமியும்* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

நான் மறை (பெ) நான்கு வேதங்கள் (905) *நான்மறை பேணி ஐவேள்வி நலம் படுத்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நான் மறையவர் (பெ) வேதம் வல்ல அந்தணர் (1047) *கூறுகொள் பொருள்களு முகந்து நான் மறையவர் முகந்துகொளக் குடுத்து* (SII,iii,28.)

நான்மை (பெ) அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கு தன்மைகள் (1012) *தென் கரையுள்ளது தீர்த்தத் துறையது மொய் வைத்தியலு முத்தமிழ் நான்மைத் தெய்வக் கவிதை* (SII,vii,863.)

நான்று (பெ) நாள்; போது (678) *கோவூர் நாட்டு கோஇல் வட்டர் வந்து தொறுக் கொண்ட நான்று* (CHHS,1971/78.)

நானாதேசியத் திசையாயிரத்தைஞ்நூற்றுவர் (பெ) (= ஐஞ்னூற்றுவர்): பல வாணிகர் குழுக்கள் சேர்ந்த ஒரு பெரிய வாணிகக் கூட்டு (985) *திருவேழ்விக் குடியொடு கூடிப்பிரியக் கடவ வளஞ்சியரும் நானாதேசியத் திசையாயிரத்தைஞ் நூற்றுவரும் மக்களுமாய்* (SII,xix,459.)

நி

நிக்கும் (வி) நிற்கும் (985) *ஊராடு கோலால் அளந்து குடுக்கக் கிணற்றுக்கு நிக்குந் துலைக்கும் காலுக்கும் உரித்தாக* (SII,xiii,99.)

நிக்ஷேபம் (பெ) நிலம் சார்ந்த எட்டுவகைப் போகங்களுள் ஒன்றான புதையல் (1222) *இன்னாள் முதலுக்கு ஜலநிதி நிக்ஷேப பாஷாண அக்ஷி....த்த ஸித்த₄ ஸாத்த்₄யங்கள் என்று சொல்லப்பட்ட* (SII,v,733.)

நிகர் (பெ) ஒப்பு (1116) *நிகரிலாக் கற்றளி நீடூர் நிலாவினாற் கமைத்த* (EI,xviii,8 (a).)

நிகர் (பெ) எதிரியின் பலம் (771) *எதிர்ந்தவரை நெடுவயல் வாய் நிகரழித்து* (EI,xvii,16.)

நிகர் கடந்து (வி) ஒத்த வலிமையை அழித்து (921) *ஒத்த வலிமையை அழித்து நிலம் பேர நிகர் கடந்தும்* (SII,iii,206a.)

நிகழ்வித்த (வி) நடைப்பெறச் செய்த (1145) *தென்கவிர நாடு தன்னில் நிகழ்வித்த நிதியாளர் தாங்கள் செல்வந்* (SII,vii,1044;IPS,120.)

நிகழும் (வி) நடைபெற்று வரும் (1056) *நெடு மகுடஞ் சூட்டிய படிமிசை நிகழுனாளினு ளிகல்வேட் டெழுந்து* (SII,v,489.)

நிகளம் (பெ) சங்கிலி (1068) *நெதிப் பிறக்கம் வரிசையிற்காட்டி ஆழியு நிகளமுங் கழற்றி யாங்கவர்* (SII,iii,30.)

நிகாந்த்யம் (பெ) பொய் (944) *ஸைப₄யோம் இதன்றென்று இற[க்]க நிகாந்த்யஞ் சொன்னோம்* (SII,iii,12.)

நிச்சயம் (பெ) (= ஏற்பாடு) (1028) *12வர்க்கு பேரால் நிச்சயம் நெல் குறுணியாக* (AVNM,10,p.22)

நிச்சயிக்கை (வி) தீர்மானிக்கை (1279) *கூடி இருந்து நிச்சயிக்கையில் மன்னனார் சேமத்தி நின்றும் பதினாலாவது கார்த்திகை* (SII,xii,254.)

நிச்சயித்து (வி) தீர்மானித்து (1191) *நிவன்தம் நிச்சயித்து குடுங்க ளென்று* (SII,xvii,595.)

நிச்சயிப்பு (பெ) நிச்சயித்த வரி (1260) *இன்னகரப்பற்று நிச்சயிப்பு இறுக்கிலும் பயிர்...* (SII,v,303.)

நிச்சல் (பெ) நாள்தோறும் (1000) *செய்து நிச்சல் முன் நாநாழியால் உரியுரி நெய்* (TAS,iii,p.173-174.)

நிச்சல்படி (பெ) ஏற்பாடு (965) *இப்படி இந்நிவந்தம் நிச்சல்படி சந்திராதித்தவற் செலுத்துவதற்கு* (SII,xiii,197.)

நிச்சனடை (பெ) நாள்தோறும் நடை பெறும் கோயிற் பூசை (944) *ஊர்க்கும் புறமாவிது இந்நிச்சனடை இத்தனை–இலும்* (SII,v,783.)

நிசதம் (பெ) ஏற்பாடு (768) *நிசதம் நெய் உரிக்கு முதல் கெடாமைப் பொலிஊட்டுக் கொண்டு என்றும் ஏற்றி* (SII,xiv,27.)

நிசதி (பெ) ஏற்பாட்டின் படி (800) *பெருமான் நிசதி உரிய் எண்ணையால் உத்தமானி என்னும் திருவிளக்கு* (SII,v,618.)

நிசல் (பெ) நாள்தோறும் (954) *இதினுக்கு நிசல் அரைக் காணங் கருப்பூரந் திரியில் இட்டெரிக்கக் கடவர்* (TAS,vii,p.169-71.)

நிசீதிகை (பெ) சமணமுனிவர் உண்ணா நோன்பு இருந்து உயிர் துறந்த இடம் (600) *சந்திரநந்தி ஆசிரிகரு நிசீதிகை* (SII,xvii,262.)

நிண்ணையம் (பெ) தீர்மானம் (1800) *னாட்டாரும் கைக்கோளர்ச் சிகலத்தில் பெறபட்டு போயி ஊர்க்கூடி ஏறாமல் யிருக்கையில் நிண்ணையம் பண்ணிநது* (SII,xvii,221.)

நிணம் (பெ) இறைச்சி (1000) *கடைவாய் நிணந்தின்ற பாவிதன்* (SII,iv,167.)

நித்த்ய நிதானம் (பெ) நாட்செலவுத் திட்டம் (1251) *தந்நகத்து நித்த்ய நிதானம் மாஸ விசேஷம் ஆட்ட விசேஷம் ஆண்டு தோறும்* (TAS,iv,p.86-89.)

நித்தப் பச்சை (பெ) ஒரு வரி (1273) *கார்த்திகைப் பச்சை எடுத்து கட்டும் பச்சை நித்தப் பச்சை பிள்ளையார் நோன்பு* (SII,vii,145.)

நித்த பூஜகன் (பெ) சிவன் (942) *நித்தபூஜகற்க்கு ஒரு திருவமிதுக்கு வைய்த்த பொன்* (SII,v,600.)

நித்த போகம் (பெ) நாள்தோறும் ஆகும் பூசைச் செலவு (1173) *சாத்துப்படிக்கும் நித்த போகத்துக்குமாக விட திருவிடையாட்டவூர்கள்* (ex,xiv,Tn.191.)

நித்தம் (பெ) (= நிசதம்): ஏற்பாடு (884) *நித்தமுட்டாமல் அளக்கக் கடவ* (SII,xii,66.)

நித்த மண்டபம் (பெ) நடன மண்டபம் (1800) *திருமண்டபமும் நித்த மண்டபமும் தென் வாயூர் வட தொழுவூர் உடையான் பதையா மாலன் அழகிய சோழ நாடாவான் தன்மம்* (IPS,1097.)

நித்தல்லழிவு (பெ) நாள் தோறும் ஆகும் செலவு (970) *ஆக நித்தல்லழிவுக்கும் ஸம்கிராந்தி 12நுக்கும்* (SII,iii,149.)

நித்த ஹோமம் (பெ) நாடோறும் செய்யும் ஓமம் (1024) *நித்த ஹோமம் பண்ணுவான் ஒருவநுக்கு தக்ஷணை* (EC,x,Kl.112 (a).)

நித்திலதம் (பெ) முத்து (1134) *குலமணி விளக்குத்திருந்து நித்திலத மணிமுறுவற் தெரிவை* (SII,v,645.)

நித்திலம் (பெ) முத்துக்கள் (1024) *பெண்டிர் பண்டாரமும் நித்தில நெடுங் கடலுத்திரலாடமும்* (SII,i,68.)

நித்யம் (பெ) நாள் தோறும் (755) *நித்யமுந்நாழி அரிசி* (SII,vi,356.)

நித்யோற்ஸவம் (பெ) நாள்தொறும் நடக்கும் திருவிழா (1125) *இதேவற்க்கு நித்யோற்ஸவத்துக்கு விட்ட நிலம்* (SII,vii,443.)

நிதி (பெ) செல்வம் (905) *நிதி வழங்கு கொடையாலும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நிந்தை (பெ) பழிதூற்றல் (1284) *தன் தாயை அநியாய நிந்தை சொன்நபடி* (EC,x,Kl.138.)

நிமாகிய நீர் (பெ) பூசித்துக் கழித்த நீர் (1100) *திருமெழுக்கிட்டு நிந்மாநிய நீர் போகட்டுவார் இருவற்கு பேரால்* (SII,viii,235.)

நிபந்தக் கட்டு (பெ) கோயில் செலவுத்திட்டம் (1213) *சித்திரை மாச முதல் நிபந்தக்கட்டாக விடக் கடவதாகவும்* (TMPL,vi,p.267-68.)

நிப₃த்₃த₄ம் (பெ) (=நிவந்தம்): செலவுத் திட்டம் (994) *...த் தேவற்குச் சுட்டின நிப₃த்₃த₄ம்* (SII,xiii,203.)

நிப₃ந்த₄ம் (பெ) செலவுத் திட்டம் (956) *இந்நிலம் நிப₃ந்த₄ஞ் செய்த பரிதாவது உவச்சு எட்டாள் கொண்டு கொட்டுவாராக* (SII,vii,499.)

நிபுணர் (பெ) வல்லவர் (921) *கார்ய்த்தில் நிபுணராய் ஆசாரம் உடையரானாரையேய்* (ARASI,1904-05,p.131f.)

நிபுணன் (பெ) வல்லமையுள்ளவன் (1006) *கலையுரியு மதி நிபுணன் வண்கிழான்* (SII,i,66.)

நிம்போளம் (பெ) முத்து வகை (1014) *முத்தில்கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும் ஒப்புமுத்துங் நிம்போளமும்* (SII,ii,3.)

நிம்மித்தவன் (பெ) செய்தவன் (905) *நற்பரசு நிம்மித்தவன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நிமந்தக் கட்டு (பெ) கோயில் செலவுத்திட்டம் (1188) *திருப்பலித் தாமந்தொடுப்பாற்கு முன்பு*

நிமந்தக்கட்டுப் பெற்று வருகிற நெல்லு குறுணியும் (SII,vii,919.)

நிமந்தக் காறர் (பெ) கோயிலில் நிவந்தங்களை நிறைவேற்றுவோர் (1009) *இத் தேவர்களுக்கு வேண்டும் நிவந்தங்களுக்கு பலபணி நிமந்தக் காறர்க்கும் யாண்டு இருபத்து நாலாவது பசான முதல்* (SII,viii,223.)

நிமந்தப் புறம் (பெ) கோயிற் செலவுத் திட்டத்துக்கு விட்ட நிலம் (1200) *இக் கோயிலுக்கு நிமந்தப் புறமாக விட்ட நிலந் தணக்க மூலையில் உவச்சற்கு நிலம்* (SII,v,281.)

நிமந்தம் (பெ) செலவுத் திட்டம் (884) *ஸபையார் செய்யக் கடவ நிமந்தம்* (SII,xii,66.)

நிமம் செய்கின்ற (பெ) (நாடு) வகை செய்கின்ற (992) *[நா]டாக நிமம் செய்கின்ற பராந்தகந் குஞ்சிரமல்லனான* (IPS,26.)

நிமிர்ந்து (வி) உயர்ந்திருந்து (905) *பாயல் மீமிசை நிமிர்ந்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நியதம் (பெ) ஏற்பாட்டின் படி (870) *நியதம் பால் பத்து நாழியும்* (SII,xiv,8.)

நியதி (பெ) (=நியதம்) (768) *திருநந்தாவிளக்கு ஒன்றினுக்கு நியதி நெய் உரி ஆக* (SII,xiv,27.)

நியதி மடை (பெ) ஒரு முகத்தல் கால் (1196) *வெள்ளித் திருவனுக்கத்துடியுங் கொடுத்து நியதி மடையால் இருநாழிச் செய்தரி* (TAS,iii,p.46-52.)

நியமித்து (வி) வகைப்படுத்தி (1420) *சீபாதமே வேறு ஒன்றும் கொள்ளக் கடவதல்ல என்று நாடாக நியமித்து விட்டோம்* (SII,viii,275.)

நியாயத்தார் (பெ) குறித்த வேலைக்காக அமர்த்தப்பட்ட ஆட்கள் தொகுதி (1014) *அடுத்த முறை கடவாரின்றி யொழியில் அந்த [நியா]யத்தாரே யோக்யரா [யி]ருப்பாரை* (SII,ii,65.)

நியாயதம் (பெ) ஒரு நகை உறுப்பு (?) (1014) *பாசமலை கீழ் நியாயதத்து ஒன்றிற் கோத்த தாலி பதினேழும்* (SII,ii,56.)

நியாயம் (பெ) முறை (817) *நியாயத்தால் கொள்ள உடைய பொன்* (SII,vi,344;EI,xxiv,7a.)

நியாயம் (பெ) படை (1171) *கோயில்கொத்தும் ஆவர்க் குதிரை அகம்படி நியாயம் உள்ளிட்ட துறைகளுக்கும்* (EI,xxi,31.)

நியோகம் (பெ) ஆணை (983) *மஹாதேவர் நிலங்கள் பெரிய திருமஞ்சனப் பித்தர் நியோகப்படி நிவந்தஞ் செய்த* (SII,xix,322.)

நியோகி (பெ) ஆணை ஓலை (1249) *தானத்தார் கணக்குப்படியே குடுப்பதாக நாங்கள் நியோகி எழுதிகுடுத்து* (SII,viii,193.)

நிர்த்தப் பேரையன் (பெ) நட்டுவனுக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பட்டம் (1014) *குமரன் வடவாயில் ஆன மும்மடி சோழ நிர்த்தப்பேரையனுக்குப் பங்கு* (SII,ii,66.)

நிர்த்த மாராயன் (பெ) நட்டுவனாருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பட்டம் (1014) *நட்டவம் ஒன்றுக்கு அரையன் சுந்தரசோழன் ஆன மும்மடி சோழ நிர்த்த மாராயனுக்கு* (SII,ii,66.)

நிர்ந்நயம் (பெ) தீர்மானம் (1442) *ஸ்ரீமந் இராய ஸாளுவ திப்பயதேவ மஹா இராஜா நிர்ந்நயம் பண்ணிநபடி* (SII,xvii,751.)

நிர்ம்மலன் (பெ) மாசற்றவன்; கடவுள் (907) *நிர்ம்மலன் கோயிற் குடதிசை* (SII,xii,93.)

நிர்மாலியம் (பெ) பூசித்துக் கழித்த பொருள் (1196) *பலநாளும் நிர் மாலிய சாங்கரியமாய் இராநின்ற தெந்று அறிவித்தமையில்* (SII,vii,1041.)

நிர்மூலமாடி (வி) பாழாகச் செய்து (1232) *மஹர ராஜ்ய நிர்மூலமாடி* (EI,vii,23.)

நிர்மூலித்து (வி) பாழ்படுத்தி (1173) *அதியமானை நிர்மூலித்து தழைக்காடு கொண்டு* (EC,xiv,Tn.191.)

நிர்வாகம் (பெ) பொறுப்பு (1492) *பாடிய் வேட்டைனாள் ஸ்தானத்தாற்கு நிர்வாகம் ஒன்றுக்குப் பணம் ஒன்றாகப் பணம் பன்னிரண்டும்* (TDI,ii,97.)

நிர்வாஹகர் (பெ) நிர்வாகிகள் (1225) *முன்னாளில் கோயிலுக்கு நிர்வாஹகராய் பதினமு செய்து போந்த பத்துப் பேருமாக* (SII,iv,500.)

நிர்வாஹம் (பெ) பங்கு (1389) *தானத்தார் திருப்பதி ஸ்ரீவைஷ்ணவர்கள் நிர்வாஹம் நாலும் திருச்சுகனூர் சபையார் நிர்வாஹம் மூன்றும்* (TDI,i,187.)

நிரக்க (இ) போதுமான அளவு (952) *தக்கிசும் இறைய்வுக் காலும் நிரக்கக்குத்தி வயக்கி மண்டு நீர் பாயப் பண்ணினமையில்* (TAS,iv,p.118.)

நிரந்த (வி) கூட்டமாகக் கூடிய (1088) *வேளாபுரத்து நிரந்த தேசித்திசைவிளங்கு ஆயிரத்தைஞ் ஞூற்று வரோம்* (AVNM, 4, p.118-19.)

நிரந்தர மிருந்து (வி) நிலையாக இருந்து (1016) *720 குழி போ௲க முண்டு நமூரிலே நிரந்தர மிருந்து ஓதுவிப்பாராக* (SII,vi,312.)

நிரப்புவன (பெ) நீர் பாய்வன (929) *வெள்ளப்பக் காலால் நிரப்புவன முன்பே* (SII,xix,419.)

நிரம்ப (இ) முழுமையாக (919) *முந்நூற்றறுபது நாளும் நிரம்ப வாரியம் ஒழிஞ்ச அனந்தடம் இடும் வாரியங்கள்* (ARASI,1904-05,p.131.)

நிரம்பச் செய்து (வி) முழுமையாகச் செய்து (921) *மூன்னூற்று அறுபது நாளும் நிரம்பச் செய்து* (ARASI,1904-05,p.131.)

நிரம்பினார் (பெ) முழுத் தகுதி பெற்றவர் (986) *ஸ்ரீ கோயிலுக்கு ஸ்ரீ கோயில் நம்பாய் நிரம்பினாரைப் பிறாது விடில்* (SII,iii,128.)

நிரவடி புடவை (பெ) விரிப்புத் துணி (1076) *கலசம் சுற்றுப் புடவை பதிநெட்டும் நி[ர]வடி புடவையும் பாவாடைப் புடவை மூன்றுக்கும் காசு₂* (SII,iv,813.)

நிரவி (வி) சராசரி ஆக்கி (1133) *குழி ஒன்றுக்கு ஆள் மூன்றும் குழிஒன்றுக்கு ஆள் நாலும்...ஐஞ்சும்..ஆறும் ஆக சீ ரீமாஹேச் ௴வரும் கரணத்தாநுமறிய நிரவி விழுக்காடு குழி ஒன்றுக்கு ஆள் நாலாக* (SII,iii,79;SII,v,642.)

நிரவி (பெ) கூட்டம் [*பார்:* பெருநிரவி]

நிராயிட்டு (வி) நிரவி விட்டது: குழி மூடிவிட்டது (924) *பரமேச்௴ரவதி நிராயிட்டு காலியுங்க் கன்றும் உள்ளிட்டு* (SII,vi,292.)

நிருத்த மண்டபம் (பெ) நடன மண்டபம் (1175) *உடையார் திருப்பெருமானாண்டார் கோயிலில் திருமுந்பில் நிருத்த மண்டபம் செய்தான்* (IPS,105.)

நிருபச் சம்படி (பெ) அரசு ஓலை கொண்டு செல்லுவோர் பொருட்டு செலுத்தும் ஒரு வரி (1448) *நாங்கள் வாங்கு முதல் கட்டிகை மேர்வை நிருபச்சம்படி மற்றும்* (ARE,1923,370)

நிருபம் (பெ) ஆணையைத் தெரிவிக்கும் கடிதம் (1364) *ஆயிரமுடைய நாயநார் கோயில் தானத்தாற்க்கு நிருபம்* (SII,i,86.)

நிருபர் (பெ) அரசர் (1220) *நிருபர் குலம் பெலம்பட_ர* (CHEN,p.362-64.)

நிரை (பெ) வரிசை (771) *நிரைஉறு மலர் மணி நீண்முடி* (EI,xvii,16.)

நிரை (பெ) கூட்டம் (871) *காளமுங் களிற்று நிரையும்* (SII,iii,89.)

நிரைகள் (பெ) கூட்டங்கள் (1054) *குதிரையும் ஒட்டக நிரைகளும்* (SII,vii,827.)

நிரைத்த (வி) கோத்த (1279) *உமையவள் தனக்குப் பருமணி நிரைத்த திருவுடையாடையும்* (SII,viii,69.)

நிரைத்து (வி) நிரப்பி (1128) *திறை நிரைத்துக் குவித்த செம்பொற் குவையால்* (SII,vii,773.)

நில்லாது (வி) நிலைக்காது (971) *இவனுமடை நில்லாது போக இவனுக்காராச்சிக்கும்* (SII,xiii,260.)

நில்லாதேய் (வி) நிற்காமல் (805) *காதல் செய்து நில்லாதேய்* (SII,xii,40;EI,xi,15.)

நிலக்கடக் கால் (பெ) நிலவரி தானியம் அளக்கும் மரக்கால் (928) *நிலக்கடக் காலால் 30 முக்குறுணியும்* (SII,xix,414;IPS,63.)

நிலக் கடம் (பெ) நிலவரி (800) *நிலக்கடமுன் அட்டின நிலமெழுதியது* (IPS,237.)

நிலக் கடமை (பெ) நிலவரி (1235) *திரு நுந்தா விளக்கு இரண்டுக்கு நிலக்கடமை கொண்டு* (SII,vii,93.)

நிலக் கடன் (பெ) நிலவரி (952) *அய்யன் தந்பேர்க் கீழ்க்கிடக்கும் நிலக்கடந் இருநூற்றுக் கல நிலக் கடன்* (SII,xiii,19.)

நிலக் காணம் (பெ) ஒரு வரி (1000) *நிலக்காணம் காற் செய்யால்* (EI,xxxiii,33.)

நிலக் காணி (பெ) நில உரிமை (1278) *ஆண்டு போதுகிற நிலக்காணிகளும் நத்தக் காவல் காணிகளும்* (AVNM,6,p.33)

நிலக் கிழத்தி (பெ) பூ தேவி (1135) *பூ மன்னுபாவை காமுற்று முயங்க இருநிலக் கிழத்தியைத் திருமணம் புணந்து* (SII,vii,43.)

நிலக் கூலி (பெ) இடத்துக்கு வாடகை (1269) *இவூரில் உப்பு விற்ப்பார் நிலக்கூலியாக முன்பிலாண்டுகளும் இட்டு வருங் காசு நீக்கி* (SII,v,627.)

நிலங் கலந்த வண்ணம் பலதர நிலங்கள் கலந்த படி (1003) *இவ்வூர்களில் கொல்லை நிலங்களில் உவச்சர்களுக்கு னிலங் கலந்த வண்ணம் இரண்டாயிரங் குழிநீக்கி* (SII,xvii,243.)

நிலங் கலந்த வாறு (வி) பல தர நிலங்கள் சேர்ந்த படி (1003) *பட்டியில் உகைச்சர்களுக்கு நிலங் கலந்தவாறு ஐஞ்சு பட்டி நிலம் நீக்கி* (SII,xvii,243.)

நிலங் காவற் றொழில் (பெ) ஆட்சி (1220) *நிலங்காவற் றொழில் பூண்டு செருவலியில் முருகனென்றும்* (CHEN,xiv,p.362-64.)

நில ஜீவிதம் (பெ) வாழ்நாள் முழுக்க அனுபவிக்கும் உரிமை கொண்ட நிலம் (1142) *பாண்காணியும் நிலஜீவிதமும்(ந்) ஆக அடைத்து முந்பு பாணர் குடியிருப்பாந மனையும்* (SII,v,705.)

நிலத்தவர் (பெ) மக்கள் (1012) *மற்றக் கண்ணுதற்காக நிலத்தவர் உவந்த நிவந்தம்* (SII,vii,863.)

நிலத்திறப்புக் கடமை (பெ) ஒரு வரி (1260) *தாப்படி அரிசி தூணி நிலத்திறப்புக் கடமை செக்கு கடமை* (SII,xii,202.)

நிலத் தொகை (பெ) நிலத்தின் மொத்தக் கணக்கு (1012) *இலுப்பைக் கால் இரண்டும் நெல்லாலித்தெழும் புல்லாலிப் புறமஞ்சோடுங் கூட்டி ஆகிய நிலத் தொகை* (SII,vii,863.)

நில தெண்டம் (பெ) நிலமாகச் செலுத்தும் அபராதம் (1202) *இக்கல்[வெட்டி]ல் மேல்பட்ட நிலதெண்டம் விட கடவதாகவும்* (IPS,156.)

நிலப் பகிர்ச்சி (பெ) நிலத்தைப் பகிர்ந்து கொடுத்தல் (1524) *பிச்சர் காளத்தினாதர் உள்ளிட்டாரும் இவ்வனைவரும்மோம் எம்மிலிசைந்து நிலப்பகிர்ச்சி ஓலை குடுத்தபடி* (SII,xvii,684a.)

நிலப் பயன் (பெ) நிலத்தின் மூலம் வருமானம் (1100) *புரையிடம் உண்ணிலம் ஒழிவின்றியே நிலப் பயனும் மரப்பயன் உள்ப்பட அட்டில்ப்பேறு கொடுத்து* (TAS,iii,p.52-56.)

நிலப் பரிவர்த்தனை (பெ) நிலங்களை மாற்றிக் கொள்ளுதல் (1120) *திரிபுவந சக்கரவர்த்திகள் நிலப்பரிவர்த்தனை பண்ணிந பரிசாவது* (SII,xvii,660.)

நிலப் பாவை (பெ) பூமிதேவி (1080) *பொன்நியாடை நன் நிலப் பாவையுந் தனிமையுந் தவிர* (EC,x,Mb.47.)

நிலப் பாழ் (பெ) விளையாத பாழ் நிலம் (1009) *திருப்பாராய்த்துறை நிலப்பாழில் ...இவன் நிலம் கல்லி வயக்கின நிலம்* (SII,viii,584.)

நிலப் பெண் (பெ) பூமிதேவி (921) *தெவ்வருடலுகுத்த செந்நீர் நிலப்பெண்ணிற் காங்கராகமென நிவப்பாணி தந்தும்* (SII,iii,206a.)

நிலம் (பெ) விளை நிலம் முதலியவை (550) *நிலம் நீர் நிலமும் புன்செய்யும்* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

நிலம் (பெ) உலகம் (800) *எறி விசும்பும் இரு நிலமாய்த் தென்ப* (EI,xiii,10.)

நிலமகள் (பெ) பூமிதேவி (1045) *நிலமகள் நிலவ மலர்மகட் புணர்ந்து* (SII,iv,537.)

நில மடந்தை (பெ) பூமிதேவி (1018) *இரு நில மடந்தையும் போர்ச்சயப் பாவையும்* (SII,iii,205.)

நிலமளந்து (வி) நிலப்பரப்பு அளந்து கணக்கிட்டு (895) *நிலமளந்து இறை கொள்க* (SII,xiii,309.)

நிலமாறு (பெ) மாற்று நிலம் (910) *பொன்னுக்கு நிலமாறாக எழுதி குடுத்த நிலம் கால்* (SII,xix,50.)

நிலமும் நாயறும் உள்ள அளவும் நெடுங்காலம் (879) *நிலமும் நாயறும் உள்ள அளவும் ஊட்டுவோமானோம்* (SII,iii,8.)

நிலவ (வி) தங்கியிருக்க (1045) *வெண்குடை நிழற்கீழ் நிலமகள் நிலவ மலர்மகட் புணர்ந்து* (SII,iv,537.)

நிலவடைப்பு (பெ) உழுது பயிரிட நிலத்தைக் கொடுத்தல் (1524) *ஊரிலுள்ள நில...கோயிலனைத்துக் கொத்துப் பரிகரத்துக்கும் நிலவடைப்பாகச் சேர்க்கும் படிக்கும் கட்டளையிட்டு* (SII,xvii,684a.)

நில வண்ணம் (பெ) கோலம் (?) (1009) *நிலவண்ணம் இட உம்மரப் பிண்டிக்கு நிசதம் நெல்லு நாழியும் நிலவண்ணமிடுவாருக்கு நிசதம் நெல்லு* (CHEN,xxi,p.425-428.)

நிலவரவு கூட்டப் பெருமக்கள் (பெ) மூலபருடை என்ற பிராமண ஊர் மன்றத்தின் ஓர் உட்குழு (1253) *நிலவரவு கூட்டப் பெருமக்களும் கண்காணிக்குக் கடவாரும்* (SII,xii,159.)

நில வரைப்பு (பெ) உலகம் (1192) *திரு நிலவு சொரிந்த விருநிலவரைப்பின் வெங்கலி கடின்து* (SII,v,301.)

நிலவழி அரசுபேறு (பெ) நிலத்தின் பேரில் வாங்கும் அரசுபேறு என்ற வரி (1509) *தெய்வஸ்தாநங்கள்ளுக்கு ஜோடிகள் சூலவரி நிலவழி அரசுபேறு மற்றும் பல பிறவரிகளும்* (SII,viii,597.)

நிலவி (வி) நிலைத்து (833) *இருப்பைக்குடி கிழவனென நிலவித் தன் பியர் நிற்ப* (SII,xiv,44.)

நிலவி (பெ) பௌர்ணமி (863) *திருவாதிரையுந் தலையுவாவும் திங்கள் நிலவியும்* (SII,xii,53.)

நிலவிலை யாவணம் (பெ) நிலத்தை விற்பதற்கான எழுத்துச் சான்று (885) *திருவொற்றியூர்ப்புறத்து மணலி ஸபையோம் நிலவிலையாவணம் எம்மூர் யாங்கள் விற்கின்ற நிலத்திற்கு* (SII,xii,105.)

நில விழுக்காடு (பெ) ஒருவருடைய நிலத்தின் அளவுப் படி (1178) *பிராத்திகளால் பெறுவாரும் நில விழுக் காட்டுப் படியே ஏற்றி இறுக்கக்கடவராக செதுகுடுத்து* (SII,xvii,540.)

நிலவு (வி) நிலைத்திருக்கின்ற (1102) *நிலவு புகள் வாள் அடையற்கி யாண்டு* (TAS,iv,p.130-31.)

நிலவுலகம் (பெ) பூமி (921) *மணிமுடிஒடு சங்க வெள் வளைத்தரத்தும் நிலவுலகம் வலஞ் செய்தும்* (SII,iii,206a.)

நிலவொபாதி (பெ) நிலத்தின் விழுக்காட்டுப்படி (946) *இ குடும்பின் வழிய் நிலவொபாதி நீருண்பதாகவும்* (SII,vii,35.)

நிலாப் பரப்ப (வி) குளிர்ந்த ஒளியைப் வீச (1134) *வெண்குடை நீடுழிகள் நிலாப்பரப்பக் கோடாத தனிச் செங்கோல்* (SII,v,645.)

நிலாவிநான் (பெ) நிலைத்திருக்கச் செய்தவன் (1108) *மருமான் காரிகை குளத்தூர்க் காவல் நிலாவிநான்* (EI,xviii,8b.)

நிலாவின (வி) தங்கியிருந்த (1108) *நீடியநீடூர் உமையொடு நிலாவின பெருமாற்கு வந்து* (EI,xviii,8b.)

நிலுவை (பெ) பாக்கி (1547) *கடை விக்கிறபேர் குடுக்கும் ரேகை பொன் 12ஆக ரேகை பொன் 52 முன்னாள் கல்வெட்டுப்படி நிலுவை ரேகை பொன் 70* (TDI,v,100.)

நிலெக்களத்தார் (பெ) (=நிலைக்களம்): திணைக்களம் (?) (753) *நிலெக்களத்தாரும் அதிகாரரும் வாயில் கேட்பாரும்* (SII,ii,73.)

நிலை (பெ) அடுக்கு (1095) *நாலு நிலை உள்ள திருக்குத்து விளக்கு இரண்டினால் உள்க்கரு* (CHEN,xiv,p.208.)

நிலை (பெ) நிற்கும் தரை (1220) *நிலை பேரிலும் பேராத நெஞ்சுடைய செஞ்சேகவன்* (CHEN,xiv,p.362-64.)

நிலை (பெ) துலை நிற்கும் இடம் (1246) *இறைக்க உடைய துலையும் நிலையும் மற்றுமூல ஓலைப்படிகளாலும்* (SII,viii,709.)

நிலை (பெ) உறுதி (771) *நிலையமை நெடுவரை* (EI,xvii,16.)

நிலை (இ) மாறாத (887) *ஸங்கிராந்தி தோறும் முட்டாமை நிலைப் பொலியூட்டாக* (SII,xii,70.)

நிலைக்க (வி) நிலை பெற்றிருக்க (1100) *பொலிசைக் கொத்துக்கல் நிலைக்க* (SII,viii,186.)

நிலைக் கண்ணாடி (பெ) முகம் பார்க்கும் கண்ணாடி (1008) *இரு பறை நிலைக் கண்ணாடி* (SII,v,638.)

நிலைக்கல் (பெ) கதவு நிலை (1300) *திருநிலைக் கல்லும் படியும் ஐஞ்னூற்றுவர் தந்மம்* (IPS,576.)

நிலைக்களம் (பெ) புரவுவரித் திணைக்களம் (?) (850) *உண்டிகையும் பட்டிகையும் காட்டாமேய் நிலைக் களத்து முன்பு நிற்கவேய்* (SII,vii,80.)

நிலைகள் (பெ) நிலையான படைவீடுகள் (1085) *கோட்டாறுட்ப்பட நெறிகளில் நிலைகளிட்டருளி* (SII,ii,58.)

நிலை கெட (வி) அழிய (1077) *தென்னவர் நிலைகெட மீனவர் குலைதர* (SII,v,1356.)

நிலை கொள்விக்க (வி) ஆற்றுவிக்க (796) *நீ வருந்தேல் என்று நிலை கொள்விக்க* (MASI,lxiii,p.54-59.)

நிலை நில்லாது (வி) ஊரில் இருக்கமாட்டாமல் (1148) *கோயிலிலே கடமைபட்டு நிலைநில்லாதே ஓடிப்போன புணைப்பட்ட கவினித் தேவகள் தேவபட்டனும்* (SII,vii,944.)

நிலைநிற்க (வி) நிலைத்திருக்க (1145) *நீர் போக்கிய நெடுமதகு நிலைநிற்கச் செய்தமைத்து* (SII,vii,1044;IPS,120.)

நிலை நிற்ப (வி) நிலைபெற்றிருக்க (1220) *நீதிதரு குலநான்கும் நிலைநான்கு நிலைநிற்ப ஆதியுகங் குடிபுகுத* (CHEN,xiv,p.362-64.)

நிலை நிறுத்துவார் (வி) காப்பாற்றுவார் (1100) *இத் தர்ம்மம் அழிவு வாராமல் நிலைநிறுத்துவாராக* (EZ,iv,24,p.191-96.)

நிலை நின்ற (வி) எஞ்சி நின்ற (1138) *நிலத்தில் மாறிந நிலம் நீக்கி நிலை நின்ற நிலம் பன்நிரு வேலியும் ஸ்ரீகோயிலும்* (SII,xiv,236.)

நிலைப் படை (பெ) ஓரிடத்தில் நிலையாக வைக்கப்பட்ட படை (1109) *திருநுந்தா விளக்கு ஒன்றுக்குக் கோட்டாற்று நிலைப்படை தரணி விச்சாதிரத் தறும்பில் படையிலாந் தமிழன் மாணிக்கன்* (TAS,i,246-47.)

நிலை பந்தம் (பெ) தொடர்ந்து ஒளிரும் தீவட்டி (1313) *நாயனாற்க்கு திருநாளுக்கு வாசல் பந்தம் நிலை பந்தமாக தனதாம் வாசலிலே தங்கள் ளெண்ணை வாத்து* (IPS,437.)

நிலை பெறுத்தி (வி) காத்து (1264) *ஸமயங்களும் வேண்டும் வகையே நிலைபெறுத்தி பூமி தேவி இனி திருத்தி* (SII,vi,439.)

நிலைபெறுத்து (வி) நிலைபெறச் செய்து (905) *ப்ரஹ்மதேயஸ்தி₂தி₂ வழாவகை ப்ரதி₂வியின்கண் ணிலை பெறுத்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நிலைபெறும் (வி) நீடித்திருக்கும் (1012) *தலை மகற் பிரியாத் தையல் நிலை பெறுந் தூண்டா விளக்கு* (SII,vii,863.)

நிலை மாயேசுரர் (பெ) உள்ளூரில் வாழும் சிவனடியார் (1393) *தனி மாயேசுரரும் உள்ளூரில்....நிலை மாயேசுரரும்* (SII,viii,254.)

நிலைமைத் தீட்டு (பெ) (இரு குறுநில அரசுகள் செய்து கொள்ளும்) அன்று உள்ள நிலைமையை மதித்து நடப்பதாகச் செய்யும் ஒப்பந்தம் (1191) *13வது ஆனிமாதத்து நடுவிற் பத்திற் செய்த நிலைமைத் தீட்டின்படியே இவற்குப் பிழையாதே நிற்கக் கடவோமாகவும்* (SII,xvii,245.)

நிலை யமை (வி) நிலையாகவுள்ள (771) *நிலையமை நெடுவரை* (EI,xvii,16.)

நிலையாணி (பெ) திருகு இல்லாத ஆணி (1014) *பொன்னின் கறண்டிகைச் சொப்பு பொ...லும் ஓடாணியும் நிலையாணியும் உள்பட ஒன்று* (SII,ii,2.)

நிலையாய் (இ) எப்பொழுதும் (1014) *பிடாரர்கள் நாற்பத் தெண்மரும் இவர்களிலே நிலையாய் உடுக்கை வாசிப்பான் ஒருவனும்* (SII,ii,65.)

நிலையாள் (பெ) பொதுக் காரியங்களுக்கு கட்டாயமாக உழைப்பு செய்யும் ஆள்வகை (1225) *ஒட்டுக்காசு கூட்டிக் குடுக்கையாலும் நிலையாள் என்று கூட்டி திருவிடையாட்டங்களில் நெல்லை எடுத்து ஒட்டர்கு குடுக்கையாலும்* (SII,iv,500.)

நிலையாள் அமஞ்சி (பெ) நிலையாள் செய்யும் கட்டாய உழைப்பு (1523) *குசமும் வேட்டத்துறையும் நிலையாளமஞ்சியும்*

எப்பேற்பட்ட அனைத்தாயங்களும் (AVNM,4,p.41-42)

நிலை யிறை (பெ) மாறாமல் ஒரே அளவில் இறுக்கும் வரி (985) *.ஆட்டை வட்டம் நிலையிறை தாலச் செம்மை பொன்* (SII,xix,378.)

நிலை யுரிமை (பெ) நிற்கும் இடத்தின் உரிமை (986) *துலையுரிமையு நிலையுரிமையும் ஏத்தக் காலில் நிலையுரிமையும் நீரோடு காலுரிமையும்* (SII,xix,404.)

நிலையுரு (பெ) நிலையாக உள்ள உருப்படிகள் (1018) *ஸ்ரீ பண்டாரப் பொத்தகப் படி நிலையுருக் கண்டு முன்பு கல்வெட்டில்லாதன கல்வெட்டுவித்தபடி* (SII,vii,891.)

நிலையேழு கோபுரத் திருவாசல் (பெ) ஏழு அடுக்குகளாக அமைந்த கோபுர வாசல் (1296) *மேலைத் திரு மாளிகையில் நிலையேழு கோபுரத் திருவாசல் புறவாசல் தென்பக்கத்து எழுந்தருளி இருந்து* (SII,iv,229.)

நிலை வரிசை (பெ) மாறாத வரி விகிதம் (1274) *நெல்லுப் பன்னிருகலமும் இதன் னெதிரா மாண்டு முதல் நிலைவரிசை மாத்தால் நெல்லு* (SII,iv,371.)

நிலைவிலையாவணக் கையெழுத்து (பெ) (= நில விலையாவணம்) (1016) *காலியூர் கோட்டத்துத் தன் கூற்று உக்கலாகிய விக்கிர மாபரணச் சதுர்வேதிமங்கலத்து மஹாஸபையோம் நிலை விலையாவணக் கையெழுத்து* (SII,iii,10.)

நிலை விளக்கு (பெ) குத்து விளக்கு (800) *நிலைவிளக்கு ஒன்று* (TAS,iii,p.65-66.)

நிலை அம்பலம் (பெ) நிலையாகவுள்ள மண்டபம் (988) *மூவாயிரத்தறுநூற்றுவனான நிலையம்பலத்து தண்ணீர் அட்டும்* (EI,xxi,27.)

நிலை அற்ற (வி) தொடர்ந்த (?) (1419) *நரசிஙகதேவர் நாள் அளவாக உற்று நிலை அற்ற வினோதப் பகையாய் அங்கும் இஞ்கும் நால்பது நூறு மனித்தரும் பட்டு* (IPS,698.)

நிவ்வஹிக்க (வி) ஆட்சி செய்ய (796) *ராஜ்யம் உத்ஸந்நமாயது நிவ்வஹிக்க மாட்டாது* (SII,iv,135;MASI,lxiii,p.54-59.)

நிவ (இ) உயர்ந்த (921) *செந்நீர் நிலப்பெண்ணிற்கங்கராகமென நிவப் பாணி தந்தும்* (SII,iii,206a.)

நிவந்தக் காறர் (பெ) நிவந்தங்களுக்கென்று அமர்த்தப்பட்ட ஊழியர் (991) *நந்தவானக் குடிகள் மூவர் தேவர் நிவந்தக் காறர் அன்றி தேவர் மனையிற் குடி இருப்பார்* (SII,v,610.)

நிவந்தப் பணி (பெ) நிவந்தப்படி செய்ய வேண்டிய கோயில் வேலை (1009) *இத்தேவர் ஸ்ரீ கோயிலுக்கு நிவந்தப் பணி செய்யக் கடவாரை* (SII,vii,988.)

நிவந்தம் (பெ) பூசைச் செலவுத்திட்டம் (850) *இப்பரிசு நிவந்தமாகச் செய்து குடுத்தோம்* (SII,iii,43.)

நிவப் பாணி (பெ) உயிரை மேலனுப்பல் (?) (921) *தெவ்வருடலுகுத்த செந்நீர் நிலப்பெண்ணிற் கங்கராகமென நிவப் பாணி தந்தும்* (SII,iii,206a.)

நிவற்கு (இ) ஒத்த (1070) *குலமுதற் பருதியிந் வலநேர்பு நிவற்கு ஒற்றையாழி யுலாவ* (SII,iii,57.)

நிவேத்தியம் (பெ) கடவுளுக்குப் படைக்கும் அமுது (950) *நிவேத்தியம் விடுப்பிதாவிது* (TAS,iii,p.189-91.)

நிவேதிக்க (வி) படைக்க (878) *கும்மாயத்துக்கு பயற்றுப் பருப்புரி நிவேதிக்க பசுவின் னறு நெய் உழக்கு* (SII,xiv,13.)

நிழல் (பெ) வெயிலிருந்து பாதுகாப்பு (771) *வெண்குடைநிழற்றங் கொளி* (EI,xvii,16.)

நிழல் (பெ) (சேரநாட்டில்) அணுக்கப்படை தொகுதி (1008) *நிழலும் பணியும் கூடிய் அட்டி கொடுத்தார்* (IA,xx,p.290-91.)

நிழலோர் (பெ) அணுக்கப் படையினர் (1000) *பணியுடையவகளும் அறு நூற்றுவருந் நிழலோரும் பாட்டாற் செய்த* (SII,v,784.)

நிற்க்க (வி) நிலைத்திருக்க (852) *விழுப் பேரரையன் சாத்தன் மற்றவன் புகழ் நிற்க்க* (SII,xii,48.)

நிற்க்க மாட்டாது (வி) நிலைத்து வாழ முடியாமல் (817) *குடிபலவும் நிற்க்கமாட்டாது போனமையில்* (SII,vi,344;EI,xxiv,7a.)

நிற்கும் (வி) நிலைபெற்றிருக்கும் (985) *சந்த்ராதித்யவற் நிற்கும் வண்ணம் இப்பொன் முதல் அழியாமேய்* (SII,xix,383.)

நிற்செயிப்பு (பெ) வரி விதிப்பு (1501) *திருநாமத்துக்காணி ஆக ப்ராமணம் பண்ணிக் குடுத்து முன்னாள் அற்ற நிற்செயிப்பு அன்றி காணிக்கை பூண்ட இலக்கத்துக்கு* (IPS,835.)

நிற்ப்பார் (பெ) உள்ளவர் (894) *இத்தந்மத்துக்கு பிழைய்க்க நிற்ப்பார்* (SII,xiii,302.)

நிற்பது (வி) நிலைபெறுவது (916) *சந்திராதித் தவல் நிற்பதாக வைத்தது* (SII,xiv,56.)

நிற்பார் (பெ) இருப்பார் (800) *தேவகருமிகளாய் நிற்பாரும் எரிப்பிப்பது* (TAS,iii,p.65-66.)

நிற்பானாக (வி) நிலைத்திருப்பானாக (768) *சந்த்ராதித்யர் ருள்ளதனையும் நரகத்தி னிற்பானாகவும்* (SII,xii,34.)

நிற்மாநியம் (பெ) பூசை செய்து கழித்த பொருள் (985) *விளக்கு 40க்கு எண்ணை நிற்மாநியம் போக அட்டுவானுக்கு நெல்* (SII,xix,380.)

நிற்வாக இலக்கை (பெ) நிர்வாகம் செய்பவரின் தங்கல் வசதி (1539) *பண்ண்யார சுவந்தரம் மாஸம் ஒன்றுக்கு நாள் இரண்டு நிற்வாக இலக்கை மாஸம் ஒன்றுக்கு பணம்* (SII,v,1403.)

நிற்றிறை (பெ) மாறாத வரி (1047) *ஆட்டாண்டு தோறும் நிற்றிறையாய் இறுப்பதாக தேவதாநமாக வரியிலிட்டுக் குடுத்து* (SII,v,978.)

நிற (பெ) எடை (1225) *இரவி கோர்த்தனுக்கு பற கொண்டளந்து நிறகொண்டு தூக்கி* (EI,iv,41.)

நிறீ (வி) நிலை நிறுத்தி (921) *பஞ்சவனெனும் பெயர் நிறீஉம்* (SII,iii,206a.)

நிறீ (வி) நிறுவி (862) *மண்டகங் கல்லாலேய் நிறீ இ* (SII,xiv,45.)

நிறுத்தி (வி) தேக்கி (883) *மணலட்டி நீர் நிறுத்தி ஆனையால் மிதிப்பிச்சு* (SII,viii,633.)

நிறுத்துவாராக (வி) நிலைபெறச் செய்வாராக (896) *இப்பரிசு வ்யவஸ்தை₂ நிறுத்துவாராகவும்* (SII,xiii,312.)

நிறுப்பன (பெ) எடையால் நிறுத்துக் கொடுக்கப்படுவன (873) *நிறுப்பன நிறையால் ஒரு பலங் கொள்ளப் பெறுவதாகவும்* (SII,iii,90.)

நிறுப்பிச்சு (வி) எடையால் நிறுக்கச் செய்து (911) *ஆதித்த படாரியார்ரிடை நிறுப்பிச்சுக் கொண்டு* (SII,viii,621.)

நிறுப்பித்து (வி) எடையால் நிறுக்கச் செய்து (985) *நிறுப்பித்துக் கைக்கொண்டு இப்பொன்னுக்கு* (SII,xix,159.)

நிறை (பெ) எடை (879) *நிறை குறையா பழங்காசு* (SII,xiv,15.)

நிறை (வி) நிரம்பிய (905) *திசை நிறை பெரும்புகழாளன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நிறைக்கூலி (பெ) நிறுக்கப்படும் சரக்குகளின் மேலுள்ள வரி (885) *நெறுத்து நிறைக்கூலி பள்ளிக்கு குடுக்கக் கடவர்* (TAS,ii,p.80-82.)

நிறைகுறையாப் பழங்காசு (பெ) சரியான நிறையுடைய பழைய நாணய வகை (874) *நிறை குறையாப் பழங்காசு பதினைந்து* (SII,xiv,15.)

நிறைச்சளவு (பெ) முழுவதும் (1008) *நெல்லுப் பதிநெண் கலநே இருதூணிக் குறுணியும் நிறைச்சளவு தூய நெல்* (EC,ix,Cp.128.)

நிறைந்த (வி) நிரம்பிய (771) *வெண்குடை நிழற்றங் கொளி நிறைந்த* (EI,xvii,16.)

நிறைத்தளவு (பெ) முழு அளவு (941) *பூண்டும்பி னால் நிறைத்தளவு தூநெல்* (SII,viii,529.)

நிறை புகழ் (பெ) மிகுந்த புகழ் (1076) *திருப்புகலூர் தென்திருவனைய புகழ் நிறைபுகழ் புவனமுழுதுடையாளோடும்* (SII,vii,137.)

நிறை மதி (பெ) முழு நிலவு (1176) *தள்ளுண்பன பூங்கொடியே கறைபடுவது நிறைமதியே* (SII,xvii,585.)

நிறைவது (பெ) நிரம்பியிருப்பது (1012) *முக் கண்ணவனுறைவது கடவுளர் நிறைவது மண்ணவர் தொழுவது* (SII,vii,863.)

நிறைவு (பெ) முழுமை (1012) *நெஞ்சார நிறைவொடு குறையாப் பஞ்சாசாரியப் பகுதியோற்கும்* (SII,vii,863.)

நிறை எடுத்தன (பெ) நிறுக்கப்பட்டன (1014) *தக்ஷிணமேரு விடங்கந் என்னுங் காசு கல்லால் நிறை எடுத்தன* (SII,ii,3.)

நின்மாலிய நீர் (பெ) பூசித்துக் கழித்த நீர் (1009) *நின்மாலிய நீர் போகட்டுவானுக்கு நிசதம் நெல்லு முந்நாழியும்* (CHEN,xxi,p.425-428.)

நின்ற (வி) எஞ்சிய (691) *நின்ற இருபது பங்கும்* (SII,i,151;EI,xvii,22.)

நின்ற (வி) நிலைபெற்ற (905) *நின்ற பெரும் புகழாலும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நின்ற நிலம் (பெ) மீதியுள்ள நிலம் (917) *கோயில் நிலம் நின்ற நிலம் அரைக்கால்* (SII,viii,645.)

நின்றயம் (பெ) (= நிர்ணயம்): தீர்மானம் (1465) *நிலம் அய்வேலிக்கும் விலை நின்றயம் பண்ணின பணம் 200* (SII,xvii,531;TDI,ii,23.)

நின்றருளின (வி) எழுந்தருளின (768) *திருச்சாலைத்துறை நின்றருளின பெருமானடிகளுக்கு நொந்தாவிளக்கு* (SII,xiv,27.)

நின்றருளுகின்ற (வி) இருக்கின்ற (864) *விஷ்ணுக்ருஹத்து நின்றருளுகின்ற பெருமானடிகளுக்கு* (SII,xii,54.)

நின்றவர் (பெ) தங்கியிருந்தவர் (771) *கூடற்பாடு நின்றவர் ஆக்ரோதிக்க* (EI,xvii,16.)

நின்றார் (பெ) எஞ்சியவர் (1002) *பணிசெய் காணி யொழிய நின்றார்* (SII,v,1409.)

நின்றிடத்து (பெ) இருந்தவிடத்து (1204) *இந்நிலத்திலே கடமை பெறவேணும் என்று நின்றிடத்து பலரும்* (CHEN,xx,p.242-43.)

நின்றிறை மாறாத வரி (1018) *யாண்டு ஆறாவது முதல் ஆட்டாண்டுதொறும் நின்றிறையாய் இறுப்பதாக இறை கட்டி* (SII,iii,205.)

நின்று (இ) இருந்து (771) *வேள்வி சாலைமுன்பு நின்று* (EI,xvii,16.)

நின்றும் (இ) ஐந்தனுருபு (691) *மேல் பால் எல்லை ஊர் புகுவழி நின்றும் வடக்கு* (SII,i,151;EI,xvii,22.)

நின்றெரிய (வி) நிலையாக எரிய (908) *திருவிளக்கு நின்றெரிய* (SII,xiv,48.)

நின்றெரிவது (வி) நிலைத்து எரிவது (936) *சந்திராதித்தவல் நின்றெரிவதாகஸ்* (TDI,i,12.)

நின்றையம் (பெ) தீர்மானம் (1400) *படியும் கற்பித்து விட்ட அளவுக்கு இந்த நின்றையத்திலே* (SII,iv,528.)

நினைத்த (வி) எண்ணிய (907) *நினைத்த நெல் வரும் பனிச்சைப் புலமும்* (SII,xii,93.)

நினைத்தாங் (பெ) எண்ணினவன் (885) *இதனை தீங்கு நினைத்தாந்* (SII,iii,92.)

நினைந்த (வி) எண்ணிய (1012) *நிலத்தவர் நினைந்த தெற்றிக் கண்ணும்* (SII,vii,863.)

நினைப்பிட்டது (வி) அரச ஆணை பெற்றது (1252) *தாங்கள் ஒட்டுக் குடலாக நினைப்பிட்ட தென்று இக்காசு நற்க்காசு கருவுகலத்தே ஒடுக்க வேணுமென்று* (SII,xvii,452.)

நினைப்பிலன் (பெ) எண்ணமில்லாதவன் (811) *மனத்து ணினைப்பிலன் என்றோ* (SII,xiv,41.)

நினைப்பு (பெ) கற்பனை (1012) *வீரட்டான மனைத்தினு மனாதியாயது நினைப்பினு முணர் தற்கரியது* (SII,vii,863.)

நினைப்பு (பெ) அரச ஆணை (1174) *யாண்டு பதிநொன்றாவது நாள் 182னால் இட்ட நினைப்பின் படித் தண்ட* (SII,vi,438.)

நினைப்பு வினைவோகம் (பெ) அரசச் செய்தி சொல்பவர் பொருட்டு ஒரு வரி (1288) *வாசல் வினியோகம் ஓலை எழுத்து வினியோகம் நினைப்பு வினைவோகம் அவிஷேகக் கைகாணி* (SII,vii,795.)

நினையாது (வி) எண்ணாது (1012) *நித்த வினோதன் காரியமல்லதோர் காரிய நினையாதாராண்டலைமை* (SII,vii,863.)

நினையில் (வி) எண்ணுங்கால் (1012) *நிவந்தத் தன்மை நினையில் உவந்து நஞ்சுண்டவருக் கமுதுண* (SII,vii,863.)

நிச்$_0$சயித்த ஒபாதி (பெ) குறைத்து நிர்ணயித்த மொத்த வரி (1125) *நிலவொபாதிப் பழவிறை நெல்லு இருபத்தறு கலநே தூணிப்பதக்கு நாநாழி நிச்$_0$சயித்த ஒபாதி நெல்லு இருபத்திரு கலனே* (SII,v,703.)

நீ

நீ (பெ) முன்னிலை ஒருமைச் சொல் (771) *நீ கொள்கவென்ன* (EI,xvii,16.)

நீக்கி (வி) அகற்றி (550) *கோவும் பொறியும் மாற்றி குடி நீக்கி* (TASSI,1958-59,p.41-83.)

நீக்கிய் நின்ற (வி) மீதமுள்ள (877) *கிழக்கடைய நாலு கோலும் நீக்கிய் நின்ற ஒரு கோலும்* (SII,vi,290.)

நீக்கிய (வி) தவிர்ந்த (875) *இரண்டாம் பாடகநீக்கிய மனையும்* (SII,vi,347.)

நீங்க (வி) ஒழிய (1171) *தாரணியோர் பிணி நீங்க* (SII,xvii,592.)

நீங்கல் (பெ) ஒன்றின் பொறுப்பிலிருந்து நீக்கப்படல் (852) *நாட்டு நீங்கலாய் உட்புரவாய்* (SII,ii,98.)

நீங்கல் (பெ) வரிவிதிப்பிலிருந்து நீக்கப்பட்ட நிலம் (1008) *ஆனைமங்கலம் பள்ளிச்சந்தம் இறங்கலுள்பட அளந்தபடி நீங்கல் நீக்கி நிலன்* (EI,xxii,34.)

நீங்கள் (பெ) முன்னிலைப் பன்மை (796) *அவர் நீங்கள் போந்தவாறெனென* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

நீங்கிய (வி) ஒழிந்த (1012) *காநிவந்தங் களைந்து நீங்கிய* (SII,vii,863.)

நீங்கிய (வி) அதிகார எல்லைக்குப் புறம்பான (960) *அண்டாட்டு கூற்றத்து நீங்கிய தேவதாநம்* (SII,vi,18.)

நீங்கும் (வி) தவிரும் (1001) *நூற்றுத் தொண்ணூற்று நாலு எருத்துக்கு எருத்துக் கூலி நீங்கு னெல்லு முப்பத்திருகலனே* (SII,xvii,222.)

நீட்ட (வி) குறுக்கே நீட்ட (1091) *நக்கன் ஏழ் வயசுளான் கைநீட்டக் கையிலேய் அரிவாட் பட்டுச் செத்தமையில்* (SII,vii,850.)

நீட்டு (வி) செய்தி ஓலை (1447) *சோறும் குடுத்துப் போருகவென்று தானத்தாற்கு அருளிச் செயற்படி நீட்டுக் கொண்டு வந்து குடுக்கையில்* (TAS,ix, p.29.)

நீட்டு (பெ) திருமுகவோலை (1558) *36 வருஷம் மார்கழி மாதம் 6 தேதி அருளிச் செயல் நீட்டின் படி* (TAS,vi,86.)

நீடி (வி) பெருகி; பரந்து (1100) *அன்பிலவர்கள் நீடி அழகெதி முப்பொழுதுங்கண்டு போற்ற* (SII,viii,187.)

நீடிய (வி) நிலைத்த (900) *நீடிய சீர் பலவமாராயன்* (EI,vii,5.)

நீடு (இ) நீண்ட (771) *நீடுபுக்தி துத்தபின்* (EI,xvii,16.)

நீடு (இ) இடையறாத (862) *நீடொளி விளக்கி நெய்ப்புறமாகென* (SII,xiv,45.)

நீடுவித்தான் (வி) செழிக்கச் செய்தான் (1120) *வாள் கூத்தன் மண்ணில்லறம் தாநடத்தில் நீடுவித்தான் தான்* (SII,iv,225.)

நீடூழி (பெ) மிக நீண்ட காலம் (1006) *வையகை மலைக்கு நீடூழி இரு மருங்கும் நெல் விளையக் கண்டோன்* (SII,i,66.)

நீண்டு வர (வி) நீட்டிக்க (1243) *நெடிய கங்குல் ஊழி யென நீண்டு வர* (EI,xxiii,27.)

நீதி (பெ) முறைமை (1061) *மாதேவியர்களாக நீதியுள் நிகழு நாளிநுள் இகல் வேட்டெழுந்து* (SII,v,647.)

நீதி நூல் (பெ) தரும சாத்திரம் (966) *தமிழ்கள் மூன்றும் வரிசையில் அமைந்த வடநூல் வகையு நீதி நூலையு* (SII,xiv,87.)

நீதியறம் (பெ) நியாய முறைமை (1142) *ஜாதி யொழுக்கமும் நீதியறமும் பிழறாது நிகழ பாவும்* (SII,v,705.)

நீய்க்கி (வி) விலக்கி (879) *மேற்கடைய அரையே ஒரு மா நீய்க்கி* (SII,xiii,187.)

நீர்க்கிசைந்த வண்ணம் (பெ) (=நீர்க்கீய்ந்த வண்ணம்) (1028) *இகணையூரான் கால்வழி நீர்க்கிசைந்த வண்ணம்* (AVNM,10,p.22)

நீர்க்கீய்ந்த வண்ணம் நீர்ப்பங்கீட்டு முறைப்படி (1070) *இந்நிலத்துக்கு நீர்க்கீய்ந்த வண்ணம் நீர் பாச்சிக்கொள்ள* (SII,viii,754.)

நீர்க்கீய் விலை (வி) (= நீர் விலை) (1016) *மேநீரும் கீணீரும் நீர்க்கீய் விலையும்* (SII,iii,54.)

நீர்க் கூலி (பெ) (=நீர் விலை) (978) *வால் மஞ்சாடியும் உல்கும் ஓடக்கூலியும் நீர்க் கூலியும் ஈழம் பூட்சியுமிடைப்பாட்டமும்* (SII,iii,151-151a.)

நீர்க் கோப்பு (பெ) நீர் தேங்கும் நிலப்பரப்பு (993) *இக்குளத்து நீர்க் கோப்புக்கு மேக்கும்* (SII,xiii,182.)

நீர்க் கோவை (பெ) (=நீர்க்கோப்பு) (961) *இக்குளத்தால் நீர்க்கோவையும்* (SII,iii,213.)

நீர் கொள் வாய் (பெ) நீரைக் கொணரும் வாய்க்கால் (1100) *புதுக்குளத்து அய்யந் கோயிலுக்கும் இக் குளத்து நீர் கொள் வாய்க்கு மேற்கும்* (SII,iii,73;TAS,i,p.243-46;TAS,vi,11.)

நீர் கொள்ளி (பெ) நீர் தங்கும் பள்ளம் (1125) *விளக்கன் குழி நீர் கொள்ளியும் இரட்டை கிணறும்* (TAS,i,p.21f.)

நீர் கோள் (பெ) நீர்ப்பிடிப்பு (905) *குளத்தில் சால நீர் கோளுக்கும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நீர்த்தளித்தான் (வி) புண்ணிய நீராட்டினான் (815) *முகமண்டமஞ் செய்து நீர்த்தளித்தான்* (SII,xiv,2;EI,viii,33 (ii).)

நீர் நக்கல் (பெ) நீர்த் தேக்கத்தின் விளிம்பு (982) *திருக்கதவுடைய பெருமான் திருக்குறைக்கு பாயும் னீர்நக்கலுக்கு கிழக்கும்* (SII,xix,309.)

நீர் நாடு (பெ) வளமுள்ள நாடு (771) *பழனக்கிடக்கை நீர் நாட்டுச் சொற்கண்ணாளர்* (EI,xvii,16.)

நீர்நிலம் (பெ) நன்செய் (550) *நீர் நிலமும் புன்செய்யும்* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

நீர்நிலன் (பெ) நன்செய் (500) *கொண்டாளுந் நீர்நிலனும் புன்...நிலனும்* (AVNM,1,p.67-69)

நீர் நிலை (பெ) குளம், ஏரி முதலியன (1176) *கோட் படுவன இளங்கமுகே அலைபடுவன நீர்நிலையே* (SII,xvii,585.)

நீர் படுவன (பெ) நீர் பாய்ச்சப்படுவன (809) *வேள்விக் குமிழியால் நீர்படுவன* (SII,xiv,40.)

நீர் பாய்ச்சல் (பெ) நீர் பாய்கின்ற இடம் (1220) *கீணோக்கின கிணறும் நீரும் நீர் பாய்ச்சலும் வழியும் வழிப்போக்கும்* (SII,vii,430.)

நீர்பூசி (வி) நீர் பாய்ச்சி (877) *காடுங்களரும் ஓடையும் உடைப்பும் உள்ளிட்டு நீர்பூசி நெடும் பரம்பெறிந்து* (EI,xviii,2.)

நீர் பெறுவது (பெ) தண்ணீர் பாய்ச்சப் பெறுவது (772) *இக் கூற்றோடு நீர் பெறுவதாகக் கிடந்த சவைப் பொதுக் கீழெல்லை* (SII,xiv,19.)

நீர் வழக்காடு (பெ) நீரைக் குறித்துத் தகராறு (1156) *எங்களுடன் நீர் வழக்காட்டுச் சுட்டி பிணக்கின இடது* (SII,vii,432.)

நீர் விலை (பெ) பாசன நீருக்கான வரி (985) *இவ்வூர் இறையிலியும் தேவதானப் பள்ளிச் சந்தங்களில் நீர் விலையால் வந்த பொன்னும் நெல்லும்* (CHEN,i,p.86-87.)

நீர்விலைக்கூலி (பெ) (=நீர்விலை) (1008) *அண்ணாவந் திருவிக்கிரமநுக்கு இந் நிலத்துக்கு நீர்விலைக்கூலியும் சொல்ல பெறாதோமாநோம் ஸபை,யோம்* (SII,vii,142.)

நீர்வீழ் தாழ்வு (பெ) தண்ணீர் வடிந்து தங்கும் பள்ளம் (1125) *மேற்கு நோக்கின நீர்வீழ் தாழ்வும் விளக்கன்குழி நீர் கொள்ளியும்* (TAS,i,p.21f.)

நீர் அட்டு (வி) நீர் பாய்ச்சி (811) *நீர் அட்டு நெல் விளைவன* (SII,xiv,41.)

நீரட்டுவான் (வி) தண்ணீர் வார்ப்பவன் (941) *நீரட்டுவானுக்கு நெல்லுப் பதின் காடியும்* (SII,viii,529.)

நீரது (பெ) தன்மையுடையது (921) *நாற்றிசைஓர் புகழ் நீரது* (SII,iii,206a.)

நீரறை (பெ) தண்ணீர் வைத்திருக்கும் அறை (1607) *திருமாளிகைப்பத்தியும் திருமடப்பள்ளியும் நீரறையும் அகத்து தளவிசையும்* (TAS,i,p.175-180.)

நீராகரம் (பெ) பழஞ் சோற்றில் கலந்த நீர் (1664) *திருபெருனாம பரதேசி நீராகரத்துக்கும்* (TAS,v,p.128-134.)

நீராட்டு பள்ளி (பெ) நீராடும் இடம் (1000) *நீராட்டுபள்ளி பந்திரு குடந் நீர் கொண்டு நீராட்டுபள்ளி ஆவிது* (TAS,ii,p.173-207.)

நீராணி (பெ) நீர்ப்பாசனம் மேற்பார்ப்பவர் பொருட்டு ஒரு வரி (1265) *மாவடை குளவடை நீராணி புன்பயிர்க்கடமை பொன்வரி அந்தராயம் காணிக்கை* (SII,xvii,127.)

நீராணி வரி (பெ) (=நீராணி) (1432) *கரணிகெ ஜோடி₃ நீராணிவரி நாட்டு கணக்கு வரி அங்க₃ஸாலெ வரி* (EI,xviii,17.)

நீராரம்பம் (பெ) நன்செய் (1051) *மண்ணைநாடு நீராரம்பம் ஐஞ்சிலிரண்டும் காட்டாரம்பம் நாலிலொன்று* (EC,ix,Nl.25.)

நீராழி மண்டபம் (பெ) நீரால் சூழப்பட்ட மண்டபம் (1506) *திருக்கோயிலுக்குள்ளில் திருமடப்பள்ளி வாசலில் தாம் கட்டுவித்த நீராழி மண்டபத்தில்* (TDI,iii,9.)

நீரிலி நிலம் (பெ) புன் செய் (1219) *இவ்வூர்களில் நீரிலி நிலமாய் வரிசைப்படி இறுத்து வருகிற* (IPS,250.)

நீரிறைத்து (வி) நீர்ப் பாய்ச்சி (1008) *திருநந்த வாநத்துக்குப் பணிசெய்து நீரிறைத்து* (SII,xvii,234.)

நீருண்டு (வி) நீர் பாய்ச்சப்பட்டு (1003) *நீருண்டு நெல்லு விளைவதாக* (TAS,vi,103.)

நீருண்பதாக (வி) நீர் பாய்ச்சப் பெறுவதாக (946) *இகுடும்பின் வழிய் நிலவொபாதி நீருண்பதாகவும்* (SII,vii,35.)

நீருரிமை (பெ) பாசனத்துக்கு நீர் இறைக்கும் உரிமை (986) *துரவு கிணற்று நிலவொபாதி நீருரிமையும் துலையுரிமையும்* (SII,xix,404.)

நீரேத்தம் (பெ) நீர்த் தேக்க அளவு (1280) *இக்குளத்தில் கரை தமக்குள் யுயற்றிக் கொண்டு நீரேத்தம் பாத்து முன் குளத்தே கல் நாட்டிக் கொள்வராகவும்* (IPS,421.)

நீரேற்கும் (வி) நீர் கொள்ளும் (1018) *இவ்வூரேரி நீரேற்கும் அளவும் ஏற்று* (SII,iii,205.)

நீரேற்ற (வி) கொடையாகப் பெற்ற (885) *இந்நகரம் கண்டு நீரேற்ற மருவான் ஸபீரீஸோ செய்விச்ச தெரிஸ்ஸாப் பள்ளிக்கு குடுத்த பூமியாவது* (TAS,ii, p.80-82.)

நீரேற்றார் (பெ) கொடையாகப் பெற்றவர் (885) *இந்நகரத்துக்குக் காராளராக நீரேற்றார்* (TAS,ii,p.80-82.)

நீரேற்றும் (வி) நீர் பாய்ச்சும் (1145) *ஆலவயல் சிவற்களிக்க நீரேற்றுக் குளங்கல்லிக் கரைகட்டிபித்து* (SII,vii,1044;IPS,120.)

நீரோடு கால் (பெ) பாசன வாய்க்கால் (885) *நீருந் நீரோடு காலும் பெறுவதாக* (SII,xii,105.)

நீரோடு காலுரிமை (பெ) பாசன வாய்க்காலைப் பயன் படுத்தும் உரிமை (986) *ஏத்தக் காலில் நிலையுரிமையும் நீரோடு காலுரிமையும் விற்று விலையாவணஞ் செய்து குடுத்து* (SII,xix,404.)

நீலகந்தி (பெ) மாணிக்க வகை (1015) *கோமளம் நாற்ப்பத்தொன்றும் நீலகந்தி பதிநொன்றும் தளம் பத்தும் ஆக* (SII,ii,7.)

நீலங் கோமளம் (பெ) மாணிக்கவகை (1014) *கண்ட நாண் ஒன்றிற் கோத்த நீலங் கோமளம் ஒன்றும்* (SII,ii,93.)

நீலத்திந்நுழுத்து (பெ) ஒரு நகை (1009) *மேற்படியார் சாத்தும் நீலத்திந்நுழுத் தோரணையிநால் பொந் கழஞ்சரையும்* (SII,v,521.)

நீலம் (பெ) நவமணிகளுள் ஒன்று (1009) *மேற் படியில் நீல மிரண்டும் ஸப்ரயோக மஞ்சும்* (SII,v,521.)

நீலம் (பெ) நீல நிறம் (833) *நீலப் பெருங்கற்பிளந்து* (SII,xiv,44.)

நீழல் (பெ) நிழல் (1214) *வீரஸிம்ஹாஸனத்துக் கற்பக நீழற் கலைவலோர் புகழ* (EI,xxv,11.)

நீள் (இ) உயர்ந்த (771) *மலர் மணி நீண்முடி* (EI,xvii,16.)

நீளத்தன (பெ) நீளமுடையன (879) *இருமுழநீளத்தன* (SII,xiv,15.)

நீளம் (பெ) நீட்டலளவை (937) *எண்சா நீளத்து இட்ட* (SII,vii,517.)

நீற்கூலி (பெ) (=நீர்க்கூலி) (1505) *இன்நிலத்தை நோக்கி ஆள் அமஞ்சி நீற்கூலி உண்டாநதெல்லாம்* (ARE,1912,395)

நீற்றமுது (பெ) சுண்ணாம்பு (1246) *பலவரவை நீற்றமுது சங்கடுவானுக்கு* (SII,viii,50.)

நீறு (பெ) விபூதி (1000) *பால் வண்ண நீற்றெம்பரன் சிராப்பள்ளிப் பரஞ்சுடர் தன்* (SII,iv,167.)

நீறு (பெ) புழுதி (800) *நெடுமாமதிலிடிந்த நீறு* (EI,xiii,10.)

நீரோடு கால் (பெ) பாசனக் கால்வாய் (1028) *நீரும் நீரோடுகாலும் துலையு துலைவாயும்* (AVNM,10,p.22)

நு

நுகர் (வி) குடிக்கும் (905) *வரி வண்டு மது நுகர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நுங்கள் (பெ) உங்கள் (896) *வேள்ளார் வந்துநுங்களுக்கு எப்பேர்ப்பட்ட கரணங்களும்* (SII,xiii,312.)

நுதி (பெ) நுனி (939) *கொதி நுதிவேல் வளவந்* (SII,xvii,501.)

நுந்தா விளக்கு (பெ) (= நந்தா விளக்கு) (988) *அம்பலவன் கண்டராதித்தனார் ...நுந்தா விளக்கு ஒன்று* (SII,xiii,54.)

நும் (பெ) உங்கள் (771) *என்னேய் நுங்குறை* (EI,xvii,16.)

நுமர் (பெ) உம்மைச் சார்ந்தவர் (1000) *சிராமலை யுள்ளலர் போல் வருஞ்சிலையோர் நுமராகின்* (SII,iv,167.)

நுன் (பெ) உன் (796) *நுன் மகநுடைய* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

நூ

நூல் (பெ) அறிவு நூல் (905) *நூற்கடலைக் கரை கண்டு* (TASSI,1962-65,p.1-31.)

நூல் சரடு (பெ) நூற் கயிறு (1060) *கொக்குவாயும் படுகண்ணும் கோத்த நூல் சரடு உள்பட* (SII,v,644.)

நூல் திரி (பெ) விளக்குத் திரி (1500) *உரிநெய் வட்டுவிது நூல்திரி இடுவிது* (TAS,vi,68.)

நூல் பொதி (பெ) நூல் மூட்டை (1300) *நூல் பொதி ஒன்றுக்குக் காசு ஐஞ்சும்* (SII,viii,442.)

நூலாயம் (பெ) தறி போன்ற கருவிகள் மீதான வரி (1340) *அங்காடிப்பாட்டம் பட்டடை ஆயம் நூலாயம்* (ARE,1934,059)

நூல் இழை (பெ) பஞ்சுதிரி (935) *நூல் இழை இட்டு எரிப்பதாக* (SII,viii,566.)

நூல் உண்டிகை (பெ) நூல்கட்டு மீதான வரி (?) (1547) *மேல் குடிஏறிகுடி இருக்கும் செட்டிகளுக்கும் கடமை வலங்கை தரகு நூல் உண்டிகை கருஞ்சரக்கு மருத்துப்பாட்டம் அளக்க நிறுக்கப்பட்டதும்* (TAS,ix, p.16-18.)

நூற்றமிது (பெ) சுண்ணாம்பு (887) *நூற்றமிது வேண்டுவதிடுவது* (SII,xiv,16a.)

நூற்றிருபது (பெ) ஓர் எண் (120) (772) *கழஞ்சு நூற்றிருபதும்* (SII,xiv,19.)

நூற்றுக் கால் மண்டபம் (பெ) நூறு தூண்களையுடைய கல் மண்டபம் (1120) *மன் மல்லக்குலவரையால் நூற்றுக்கால் மண்டபத்தே தில்லைப்பிரானுக்கு செய்தமைத்தான்* (SII,iv,225.)

நூற்றுவர் (பெ) நூறு பேர் (849) *அரிசி உள் இருநூற்று நாழி நூற்றுவர்க்கு* (IPS,15;SII,xii,46.)

நூற்றொருபது (பெ) ஓர் எண் (110) (800) *நூற்றொருபது பாப்பார்க்கு* (IPS,8.)

நூற (வி) அழிக்க (1257) *மலைநாடு நூறப் பருமா மரபிற் பொருதிறல்* (SII,v,459.)

நூறாயிரம் (பெ) லக்ஷம் (100,000) (849) *பல நூறாயிரத்தாண்டும்* (TAS,ii,p.67-68.)

நூறி (வி) அழித்து (1055) *தண்டபாலரைத் தறைப்பட நூறி* (SII,v,512.)

நூறு (பெ) சுண்ணாம்பு (878) *வெள்ளிலை ஈரடுக்கு அடைக்காய் பத்து நூறு ஒரு செவிட்டு ஆக நிசதி நான்கு பொழுதைக்கு வேண்டுவன* (SII,xiv,13.)

நூறு (பெ) ஓர் எண் (100) (764) *நூறு கழஞ்சு பொன்* (TAMIZ,1970,p.124.)

நூன் முறை (பெ) ஆகமநூல் விதி முறை (1012) *நான் மறை தெரிந்து நூன் முறையுணர்ந்தாங் கருச்சனா விதியொடு தெரிச்ச* (SII,vii,863.)

நெ

நெஞ்சம் (பெ) உள்ளம் (800) *நாகங்கண்டஞ்சவன் நெஞ்சம்* (EI,xiii,10.)

நெட்டலகை (பெ) பேய் (1209) *.....ந்தறுத்துக் களமாடி நெட்டலகைக் குலம்....* (IPS,163.)

நெட (வி) பயிரிட (1200) *கட்டி லேறவும் பூமி நெடவும்* (SII,v,772.)

நெடிது (பெ) நீண்டது (1018) *நெடிதியலூழியுள் இடைதுறைநாடும்* (SII,iii,205.)

நெடுங் கடல் (பெ) ஆழ்ந்தகன்ற கடல் (1024) *நித்தில நெடுங் கடல் உத்திர லாடமும்* (SII,i,68.)

நெடுங்கால் (பெ) நீண்ட காலம் (1245) *பிணங்கி நெடுங்கால் தடைகிடந்து கீழாண்டு உள்ள நாளில் இடையில்* (IPS,340.)

நெடுங்காலம் (பெ) நீண்ட காலம் (878) *நெடுங்காலமுஞ் செலுத்துவதாக* (SII,xiv,13.)

நெடுஞ்சாங் கிடக்கை (பெ) உடல் முழுவதும் நீட்டி பூமியிற் கிடக்கை (1186) *புனற் சொரிந்தன வரசரை நெடுஞ்சாங் கிடக்கை கை கொண்டன* (SII,xii,263.)

நெடு நாள் பட நீண்ட நாட்களாக (1225) *அன்னியாயகாரிகளாய் போந்த இவர்கள் நெடுநாள்பட காணிபோல செய்து* (SII,iv,500.)

நெடும் புறெ (பெ) ஒரு வரி (753) *கையாளும் நெடும்புறெயும் பனம்பாக்கும்* (SII,ii,73.)

நெடு மடல் (பெ) திரு நீறு வைக்கும் கலம் (1014) *நெடு மடல் ஒன்று வெள்ளி நூற்று எண்பத் தெண் கழஞ்சேய்* (SII,ii,91.)

நெடு மாடம் (பெ) பெரிய மாளிகை (785) *கொடி அணி மணி நெடுமாடக் கூடல்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

நெடுவேல் (பெ) நீண்ட வேல் (1150) *வெய்யசுடர் நெடுவேல் வீரவளஞ்செயர் பதினெட்டு பட்டினமும்* (AVNM,9,p.33-34)

நெத்தல்பட்டி (பெ) உயிரைத் தியாகம் செய்த வீரர் பொருட்டு விட்ட நிலம் (900) *இவநுக்கு ஊருங் கோவு நான்று அரசஞ்செறு நெத்தல் பட்டி அட்டித்து* (AVNM,6,p.13)

நெதி (பெ) ஆறு (1176) *பொன்னி நதியும் பொய்யாது புயலும் புனல் கரவாது மன்னிய நெதிவளம் பெருக்க* (SII,xvii,585.)

நெதியம் (பெ) செல்வம் (1266) *நல் வேழமும் நெதியமும் காட்டி பூவிரி சோலை* (IPS,366.)

நெம்பு (பெ) ஒரு நகை உறுப்பு (1014) *பொன்னின் நெம்பு இரண்டும் மூன்றொன்றாக அடுத்து விளக்கின தாளிம்பம் இரண்டும்* (SII,ii,42.)

நெய் (பெ) பசுவின் நெய் (861) *ஒரு துடவு நெயும் பயறும்* (TAS,ii,p.85-86.)

நெய்கிற (வி) நெசவு செய்கிற (1300) *திருமடை விளாகத்திருந்து நெய்கிற கைக்கோளர் பேரில்* (IPS,572.)

நெய்த்தீர்வை (பெ) நெய் மீது விற்பனை வரி (1533) *நெல்லுப்பொதி அரிசிப்பொதி உள்ளிட்ட பல தானியவற்கத் தீர்வையும் நெய்த்தீர்வையும்* (SII,xvii,264)

நெய் தாங்கி (பெ) விளக்குத் தண்டு (1008) *தராக்கால் 1 நிறை 36 பலம் 3 1/2ச் சாணீளத்து நெய்தாங்கியும்* (SII,v,638.)

நெய்ப்புறம் (பெ) நெய் விளக்கிடுவதற்குக் குடுத்த நிலம் (862) *நீடொளி விளக்கி நெய்ப்புறமாகென* (SII,xiv,45.)

நெய் முட்டை (பெ) நெய்க் கரண்டி (1014) *நெய் முட்டை ஒன்று வெள்ளி இருபத்தறு கழஞ்சு* (SII,ii,91.)

நெய்யமுது (பெ) நெய்யுணவு (910) *நெய்யமுது சேவிப்பதற்கு* (SII,xix,67.)

நெய்யாடி (வி) நெய் அபிஷேகம் செய்து (1173) *மார்கழித் திருவாதிரை நெய்யாடி அமுது செய்ய* (SII,viii,36.)

நெய்யாடுவான் (பெ) நெய்க்காப்பு இடும் பொருட்டு (1000) *எருமைத் தானத்து வாழ்க்கையால் நெய்யாடுவான் நூற்று நாழி* (TAS,ii,p.173-207.)

நெய்யும் (வி) நெசவு செய்யும் (1100) *இவ்வூர் நெய்யுந் தறிகளில் தறியால்* (SII,iv,1412.)

நெய்விலை (பெ) கால்நடை மீது ஒரு வரி (753) *அரிகொழியும் நெய்விலையும்* (SII,ii,73.)

நெயமிது (பெ) நெய்யுணவு (929) *நெயமிது உரியினால்னெல் பதக்கும்* (SII,viii,627.)

நெய் எண்ணை (பெ) ஒரு வரி (1492) *கொள்ளுப்பயறு நெய் எண்ணை இனவரி புல்வரி* (ARE,1916,235)

நெரியாஸம் (பெ) தூப வர்க்கம் ஆன ஒரு வகைப் பிசின் (1003) *சிதாரிக்கு அகிலும் சந்தனமும் நெரியாஸம் முன் செந்றால் அசைஞ்சு புகைக்க* (SII,xvii,243.)

நெருங்கிய (வி) செறிந்த (1279) *சுரர் தரு நெருங்கிய சோலையு* (SII,viii,69.)

நெருஞ்சிப் பூச்செயல் (பெ) ஒரு நகை (1014) *பொன்னின் நெருஞ்சிப் பூச்செயல் பதினாறும் உட்பட நிறை நாற்கழஞ்சேய்* (SII,ii,39.)

நெருப்பு (பெ) தீ (1015) *நீரும் நெருப்பும் புகாமைத் தடுத்தும்* (EC,ix,Cp.129.)

நெல் (பெ) நெல் தானியம் (731) *கலம் நெல் முப்பதின்* (SII,viii,331.)

நெல் நிவந்தங்கள் (பெ) நெல் கொண்டு செய்யும் செலவுத் திட்டம் (1009) *ஸாஸநத்தில் செய்த நில நிவந்தங்களும் நெல் நிவந்தங்களும் ஒலோகமாதேவி ஈச்வரத்துக் கல்லில் வெட்டுவிக்க* (CHEN,xxi,p.425-28.)

நெல்ப்பாடு (பெ) ஒரு வரி (1443) *காசுபாடு புடவைப்பாடு நெல்ப்பாடு முளைக்கூலி* (ARE,1916,230)

நெல் முதல் (பெ) தானியமாகச் செலுத்தும் வரிகள் (1462) *பத்தில் அஞ்சில் உண்டான நெல்முதல் தானியமுதல் பொன்முதலும்* (IPS,711)

நெல்லாயம் (பெ) (= நெல் முதல்) (1210) *காசாயம் பொன்னாயம் நெல்லாயம் உட்பட விட்டேன்* (SII,xvii,696.)

நெல்லிக் கனி (பெ) பழவகை (1000) *கைத்தலைக் கராமலை நெல்லிக்கனி போல்* (SII,iv,167.)

நெல்லிக்காய் முத்து (பெ) ஒரு வகை முத்து (1191) *ஏகாவல்லிவடம் ஒன்றினால் நெல்லிக்காய் முத்து நூறும்* (SII,viii,121.)

நெல்லிறை (பெ) (= நெல் முதல்) (1230) *வீர நாரசிங்க தேவப் புத்தேரி கிழலம் புறப்பட்ட நெல்லிறையும் பொன்னிறையும்* (TDI,i,38.)

நெல்லு (பெ) நெல் (887) *வந்த நெல்லு நூற்றுத் தொண்ணூற்று முக்கலனேய்* (SII,xiv,16a.)

நெல்லுப் பொதி (பெ) நெல் மூட்டை மீது வரி (1532) *பூர்வ்வம் நடந்து வருகிற தீர்வை நெல்லுப் பொதி அரிசிப் பொதி உள்ளிட்ட பல தானியவற்கத் தீர்வையும்* (SII,xvii,264.)

நெற் கட்டாயம் (பெ) தானிய விற்பனை மீது ஒரு வரி (1494) *காசுபாடு நெற்கட்டாயம் மகமை வழிச்சாரி* (ARE,1913,074)

நெற் கடமை (பெ) நெல்லாகக் கொடுக்க வேண்டிய வரி (1046) *ஸபையார் கடவ நெற்கடமைக்கு செலவு பெற இடக்கடவ* (SII,viii,3.)

நெற் குறுசாலை (பெ) நெல் குத்துமிடம் (1234) *நாயனாற்கு நெற் குறுசாலைக்கு நெற்குறக் கொண்டு விட்ட பெரிய நாச்சியையும்* (SII,iv,558.)

நெற்குறுவாள் (பெ) நெல் குத்தும் பெண் (1046) *மெழுகுவாற்கும் நெற் குறுவாளுக்கும்* (SII,xiv,191.)

நெற்பாக்கம் (பெ) மூட்டை வகை: அரைப் பொதி (1300) *நெற் பொதி ஒன்றுக்குக் காசு ஒன்றும் நெற்பாக்கம் ஒன்றுக்குக் காசு அரையும்* (SII,viii,442.)

நெற்றி (பெ) மேடு (1264) *ஆயத்தாங் கழியாய்க் கிடந்த இடத்து நெடு நெடு நெற்றிப் பட திருத்தி* (SII,xvii,171.)

நெற்றி (பெ) செலவு (1264) *நாம் செய்கிற திருமண்டபத்துக்கு வேண்டும் நெற்றிகளுக்கும்* (SII,vi,439.)

நெற்றி (பெ) முகத்தில் ஓர் உறுப்பு (800) *நெடு மேரு நெற்றிப் பொன் போல்* (EI,xiii,10.)

நெற்றிக் கண் (பெ) சிவபெருமானின் மூன்றாவது கண் (1012) *விரிசடைக் கடவுள் நெற்றிக் கண்ணும்* (SII,vii,863.)

நெற்றி சென்ற (வி) படை முன் வரிசையில் நின்று தாக்கிய (919) *சென்னிப்பேரரையர் தாம் நெற்றி சென்ற இடத்துப் பட்ட சேவகர்* (SII,iii,99.)

நெற்றிப்பொன் (பெ) நெற்றியிலணியும் பட்டம் (800) *நெடுமேரு நெற்றிப் பொன் போல் பசுங்கதிராயிரம் வீசும்* (EI,xiii,10.)

நெறி (பெ) பெரு வழி (1085) *குறுகலர் குலையக் கோட்டாறுட்ப்பட நெறிகளில் நிலைகள் இட்டருளி* (SII,ii,58.)

நெறுத்து (வி) எடையிட்டு (845) *நெறுத்து நிறைக் கூலி பள்ளிக்கு குடுக்கக் கடவர்* (TAS,ii,p.80-82.)

நென் புடவை (பெ) துணி வகை (1300) *நென் புடவைப் பாக்கத்துக்குக் காசு ஐஞ்சும்* (SII,viii,442.)

நென்மேநி நற்பணம் (வி) நாணய வகை (1433) *விலைப்பொருள் அன்றாடு நடக்கும் வாசிப்படாத நென்மேநி நற்பணம் 1500 ஆக* (TDI,i,205.)

நே

நேத்ரம் (பெ) கண்மலர் (991) *மரகதம் இருபத்தொன்று நேத்ரத்திந் பொற் தாணிச்ச பட்டிகை 1* (SII,xiii,144.)

நேமி (பெ) ஆணைச் சக்கரம் (1075) *அகழ் சூழ்ந்த புவியில் பொன் நேமியளவுந் தன் நேமி நடாத்தி* (SII,iii,68.)

நேர் (பெ) ஒழுக்கம் (1449) *நின்றயம் பண்ணின நேர் தவறாமல் நினைத்த காரியத்தை நினைத்து* (IPS,462.)

நேர் (பெ) ஒப்புமை (833) *நாடினோர் தமக்கில்லா மோடனியங்கு மாறனேரியும்* (SII,xiv,44.)

நேர் குலைந்து (வி) சீர் குலைந்து (1381) *திருமண்டபமதில் கர நாளிலே நேர் குலைந்து இற்று போகையில்* (SII,v,552.)

நேர்ந்து (வி) அளவிட்டு (1014) *ஒரு போதைக்கு ஆடவல்லானால் குறுணி இருநாழி நெல் நேர்ந்து ஊட்டுதற்க்கு* (SII,ii,28.)

நேர் முத்து (பெ) முத்து வகை (970) *மாணிக்கம் 3ம் பருமுத்து 11ம் நேர்முத்து பலவும் இட்டுக் கட்டின மாலை* (TDI,i,8.)

நேர்வாயம் (பெ) ஒரு வரி (890) *இந்நிலத்தால் பஞ்சவாரமும் எச்சோறும் நேர்வாயமும் வெட்டி வேதினையும்* (SII,v,572.)

நேரலர் (பெ) பகைவர் (1120) *நேரலரைத் தன் யானைக் கோடுழக் காண் கூத்தன்* (CHEN,xxiii,p.93-96.)

நேர் ஆக்குகை (பெ) குறையைச் சரியாக்கல் (1300) *தம்முடைய கையில் காசு நேர் ஆக்குகையாலும்* (IPS,482.)

நேராக (பெ) சரியாக (1009) *கடமை நேராகக் கொண்ட பொன்னும்* (SII,vii,988.)

நேரிய (இ) நேர்மையான (771) *நீண்முடி நேரியகோன்* (EI,xvii,16.)

நேரியன் (பெ) சோழரின் குலப் பெயர்களுள் ஒன்று (1012) *நேரியன் அருமொழி நித்த விநோதன்* (SII,vii,863.)

நேரியன (பெ) ஒழுங்காயுள்ளவை (1015) *ப்ரஹாரமும் வெஜ்ஜமும் ...கற்பற்றும் உடையன உட்படப் பரியனவும் நேரியனவும் ஆக* (SII,ii,7.)

நை

நைமித்திகம் (பெ) சிறப்பாக நிகழும் திருவிழா முதலியன (1450) *தென்காசிப் பெருங் கோயில் செய்து நல்லாகம வழி நைமித்திகமுடன் எல்லாப் பூசையும்* (TAS,i,p.89-94.)

நைய்யாதேய் (வி) மனம் வருந்தாமல் (805) *பரமன் படைத்த நாள் பார்த்து நின்று நைய்யாதேய்* (SII,xii,40;EI,xi,15.)

நைய (வி) தளர்ந்த (1046) *நாடு வளம் படுத்தும் நைய குடிபோம்பி* (EI,xxx,19 (vi).)

நைவேத்திய அமுதுபடி (பெ) கடவுளுக்குப் படைக்கும் உணவுக்கான செலவு (1216) *யிந்நாயனாருக்கு நைவேத்திய அமுதுபடிக்கும் திருவிளக்கும் திருமேனிப் பூச்சுக்கும்* (EC,x,Kl.130.)

நொ

நொக்கி மாடை (பெ) ஒரு சாளுக்கியர் நாணயம் (1177) *குழி இரு நூற்றைம்பதுக்கு ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கின நொக்கிமாடை 1 ஒன்றும்* (SII,iv,861.)

நொதுமலர் (பெ) அயலார் (1012) *புதுமலர் வாகை புனைந்து நொதுமலர் கங்கபாடி கவ்வி* (SII,vii,863.)

நொந்தா விளக்கு (பெ) இடையறாது எரியும் விளக்கு (768) *திருச்சாலைத் துறை நின்றருளின பெருமானடிகளுக்கு நொந்தாவிளக்கு ஒன்றினுக்கு நிசதம் நெய் உரிக்கு* (SII,xiv,27.)

நோ

நோக்கத்து (பெ) குறித்து (850) *மலைமேற்ப் படாரரை நோக்கத் தெல்லா நெல்லும்* (SII,vii,80.)

நோக்கி (வி) பார்த்து (691) *வடக்கு நோக்கி நாட்டுக் காலுக்கே போன வழி* (SII,i,151; EI,xvii,22.)

நோக்கி வரும் (வி) (மேல்) விதிக்கப்படும் (1514) *இந்த கிறாமத்தை நோக்கிவரும் உரக்க தாந்யம் உள்ளது ஸ்ரீ பண்டாரத்திலே செலுத்திக் கொண்டு* (TDI,iii,70.)

நோக்குவான் (பெ) பாதுகாப்பவன் (1008) *விளக்கு நோக்குவானுக்கும்* (TAS,iii,p.79.)

நோக்குவோம் (வி) பாதுகாப்போம் (1218) *திருப்பதியில் நாலு வாரத்துக்குள்ளு இருந்த குடிமக்களை நோக்குவோமாகவும்* (IPS,176.)

நோட்டம் பணம் (பெ) நாணயம் பரிசோதிப்பவர் பொருட்டு வாங்கும் வரி (1512) *சந்திரகிரி*

முகப்பில் நோட்டம் பணம் இறுநூறு ஆக (ARE,1941,092)

நோட்ட வத்தினை (பெ) (= நோட்டம் பணம்) (1482) *அதிகாரி வற்த்தினை வாங்கினபடியாலும் நோட்டவத்தினை கொண்டபடியாலும்* (ARE,1918,103)

நோங் பகடு (பெ) வலிமை கொண்ட யானை (905) *நோந்பகடாயிரம் வழங்கியும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

நோங்பு (பெ) விழா (1215) *ஆடிப்பூரம் திருநோந்பு நோற்று* (SII,v,277.)

நோய் (பெ) துன்பம் (921) *அடும்பசி நோய் நாடகற்றி* (SII,iii,206a.)

நோவு (பெ) நோய் (1635) *நாட்டின்னு நோவு நொம்பிலம் ஒண்டாய் மங்கலமுதல் மணக்குடி வரை* (TAS,v,p.208.)

நோற்ற (வி) விரதம் பூண்ட (600) *அனசனந் நோற்ற சந்திரநந்தி* (SII,xvii,262.)

நோற்று (வி) விழா சாற்றி (1215) *திருப்பள்ளியறை நாச்சியாற்கு ஆடிபூரம் திருநோந்பு நோற்று ஊரில் எழுந்தருள* (SII,v,277.)

ப்

ப்ரக்ருதி (பெ) பெருங்குடிகள் (845) *ப்ரக்ருதியும் அறுநூற்றுவரும்* (TAS,ii,p.80-82.)

ப்ரகாரம் (பெ) விதம் (1176) *இப்ரகாரத்துக்கு சிலாஸாஸநம் பண்ணிக் குடுத்தோம்* (EC,ix,Cp.89.)

ப்ரத₂மேஷ்டி (பெ) முதல் யாகம் (883) *ஆனையால் மிதிப்பிச்சு ப்ரத₂மேஷ்டி* (SII,viii,633.)

ப்ரதா₄னர் (பெ) தலைமை அலுவலர் (1321) *என் ப்ரதா₄நரில் தழைசியராயனும் விருதர் கோவநான கங்காதராயநும் சி₂லாலேகை* (EC,x,Kl.77.)

ப்ரதா₄நி ஜோடி (பெ) (= பிரதானி சோடி) (1455) *தங்கள் அகராங்களுக்கு அவதர வத்தனை ராஜஸ வற்த்தனை ப்ரதா₄நி ஜோடி கரணிக்க சோடி தலையாரிக்கம் மாவடை மரவடை குளவடை மற்றும்* (SII,ii,23.)

ப்ரதி (பெ) ஒவ்வொரு (894) *ச₂ரீரம் ப்ரதி ஆழாக்கு நெய்யும்...ஊட்டுவதாக* (SII,iii,1.)

ப்ரதிக் கிறயம் (பெ) மறு விற்பனை (1539) *ப்ராமணருக்கு யிந்த மனையள் விற்று ஒற்றி ப்ரதிக்கிறய தாயதாநங்களுக்கு மற்றும் எப்பேற்பட்ட சகல சமுதாய ப்ராதிக்கும்* (TDI,iv,123.)

ப்ரதி க்ரயம் (பெ) மறு விற்பனை (1172) *இவநுக்கும் இவன் வம்ச₂த்தார்க்கும் விற்றொற்றி ப்ரதிக்ரயத்துக் குரித்தாவதாக விற்றுக் கொடுத்தோம்* (SII,v,1358.)

ப்ரதி க்₃ரஹம் (பெ) தானம் பெறுகை (804) *விலையும் ப்ரதிக்₃ரஹமும்* (SII,xiv,37.)

ப்ரதிக்₃ரஹித்த (வி) தானம் பெற்ற (1547) *சதாசிவராய மஹாராயர் கயில் தாராபூர்வகமாக தாம்பிற ஸாச₂நந்தமாக ப்ரதிக்₃ரஹித்த ஜெக₃தாபி₄குத்திச் சீர்மையில்* (TDI,v,92.)

ப்ரதிஜ்ஞை (பெ) சபதம் (985) *கெ₃ங்கா₃ஸேது பர்யந்தத்திடைப் பாவஞ் செய்தார் பட்டது படுவான் ப்ரதிஜ்ஞை பண்ணி இத்₃த₄ர்மம் செய்தோம்* (CHEN,i,p.86-87.)

ப்ரதி பதம் (பெ) நல்ல நிகழ்ச்சி (896) *உவாவும் ப்ரதிபதமும் கரணங்களும்* (SII,xiii,312.)

ப்ரதிமங்கள் (பெ) படிமங்கள் (1014) *யாண்டு இருபத்தொன்பதாவது வரை எழுந்தருளுவித்த செப்பு ப்ரதிமங்கள் உடையார் கோயிலில் முழத்தால் அளந்தும்* (SII,ii,38.)

ப்ரதிமா சித்ரங்கள் (பெ) உருவப் படங்கள் (1344) *இந்த மந்திரி சி₂ரேஷ்டன் அநேக ரூபம் ப்ரதிமா சித்ரங்களாலே அநேக ப்ரகாரம் ஆன இந்த த₄ர்மம்* (UCR,xviii,p.16-23.)

ப்ரதிலோமர் (பெ) உயர் குலப் பெண்ணுக்கும் தாழ்ந்த குல ஆணுக்கும் பிறந்தோராகக் கருதப்படுவோர் (1200) *ப்ரதிலோமராந ஜாதிகளில் இழிதொழில் செய்யோமாகவும் என்று சொன்னார்* (SII,xvii,603.)

ப்ரதினாமம் (பெ) பெற்று (1544) *கிராமம் 3க்கு ரேகை பொன் 150க்கு ப்ரதினாமம் ஆக ராமப்பயர் விட்ட நெடுனாடு யீச்சம்பாடிக்கு* (TDI,v,17.)

ப்ரதிஷ்டாசாரியன் (பெ) நிலை நிறுத்திய தலைவன் (1232) *சோழ மண்டல ப்ரதிஷ்டாசாரியன் என்னும் கீர்த்தி நிலை நிறுத்தி* (EI,vii,23.)

ப்ரதிஷ்டிச்ச (வி) வைத்த (1098) *அப்பன் ப்ரதிஷ்டிச்ச ராம லக்ஷ்மணர்ஹளுக்கு* (MAR,1944,p.11.)

ப்ரதிஷ்டி$_2$த்த (வி) நிறுவிய (1070) *... ளூர் ப்ரதிஷ்டி$_2$த்த சி$_0$வ த$_4$ர்ம்மமடம் சி$_0$வப$_4$க்தராலயத்து* (SII,viii,754.)

ப்ரதிஷ்டை$_2$ (வி) கோயிலில் கடவுளுருவத்தை வைத்தல் (812) *திருவாலத்தூர் மலைதளியாக குடைந்து ப$_4$ட்டாரரை ப்ரதிஷ்டை$_2$ செய்து* (IPS,18.)

ப்ரதி$_2$வி (பெ) பூமி (905) *ப்$_4$ரஹ்மதே$_3$யஸ்தி$_2$தி வழாவகைப் ப்ரதி$_2$வியின் கண்ணிலை பெறுத்து* (TASSI,1962-65,pp.1-31; PNDCP,p.95-115.)

ப்ரப$_4$வ (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1207) *ப்ரப$_4$வ ஸம்வற்ஸரத்து புரட்டாசி மாதத்துச் செவ்வாய்க் கிழமையில்* (EC,ix,Kn.43.)

ப்ரபா$_4$கரம் வக்காணிப்பார் (பெ) பிரபாகர மீமாம்சைத் தத்துவங்களை எடுத்துச் சொல்பவர்கள் (959) *ப்ரபா$_4$கரம் வக்காணிப்பார்க்கு ப$_4$ட்ட வ்ருத்தியாக இவ்வூரிலே விற்றுக் குடுத்த நிலம்* (SII,iii,200.)

ப்ரபை$_4$ (பெ) திருவாசி (983) *க$_3$ணபதியாரும் பீடமும் ப்ரபை$_4$யும் ஆக நிறை* (SII,xix,327.)

ப்ரமாணம் செய்த (வி) உண்டாக்கிய (700) *குணஸேண ப்ரமாணஞ் செய்த வித்$_4$யா பரிவாதி$_3$நி கற்* (IPS,4-5.)

ப்ரமாதப்பட்டமை (வி) இறந்து போனமை (1156) *பிணக்கின இடது இம்மங்....லங்கிழாந் ப்ரமாதப் பட்டமையில் இதுக்கு ப்ராயச் சித்தம் விதி$_3$தபடிக்கு* (SII,vii,432.)

ப்ரமாதம் (பெ) சாவு (1098) *ஒகந்தூர் மன்றாடி சாமி தீத்தனுக்கு ப்ரமாதம் விளைந்தமையில்* (SII,vii,840.)

ப்ரமாதி (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1193) *ப்ரமாதி ஸம்வத்ஸரத்து திருபுவநச்சக்ரவர்த்திகள்* (NI,G.50.)

ப்ரவேசச் சீட்டு (பெ) நுழைவுச் சீட்டு (1462) *சாலையிலே அளந்து சீயர் எழுத்து இட்ட ப்ரவேசச் சீட்டு வாங்கிக் கொண்டு சுகத்திலே இருக்கவும்* (TDI,ii,12.)

ப்ரவேச$_0$கம் (பெ) உள் அனுமதித்தல் (866) *ப்ரவேச$_0$கஞ் செய்யும் பரிசு* (TAS,i,p.1-14.)

ப்ரச$_0$ஸ்தி (பெ) பட்டயம் அல்லது கல்வெட்டுத் தொடக்கத்தில் அரசன் பெருமையைப் புகழ்ந்து பாடும் பகுதி (771) *இப் ப்ரச$_0$ஸ்தி பாடின சேனாதிபதி* (EI,xvii,16.)

ப்ரஸாதக்காணி (பெ) கொடையாக அளிக்கப்பட்ட காணி (1200) *பலற்கு ப்ரஸாதக் காணியாக இட்டிருக்கிறபடியும் தவிர்ந்து* (CHEN,i,p.122.)

ப்ரஸாதஞ் செய்ய (வி) கடவுள் அருள் புரிய (985) *ஸ்ரீ பரமேச்$_0$வரன் த$_3$ரிச$_0$னத்திலேறிடு என்று ப்ரஸாதஞ் செய்ய* (SII,xvii,717.)

ப்ரஸாதப்பட்டு (வி) தொழுது (996) *ஸ்ரீமுக அருளச்செய்துவர ஸ்ரீமுகம் கண்டு ப்ரஸாதப்பட்டு ஸபை$_4$யோமும் வாரியமிட்டு* (SII,vii,411.)

ப்ரஸாத$_3$ம் செய்வார்களாக நிறைவேற்றுவார்களாக (879) *குழிவாயில் அட்டுவித்து ப்ரஸாத$_3$ம் செய்வார்களாக* (SII,vi,294.)

ப்ரஸாதி$_3$க்க வேணும் (வி) கொடுக்க வேண்டும் (976) *புத நாடப் பாடி ஒதியம்பள்ளம் இறையிலி தேவதானமாக ப்ரஸாதி$_3$க்க வேணும் என்று* (SII,xix,169.)

ப்ரஸாதி$_3$கை (பெ) பிரசாதமாகக் கொடுத்தல் (1140) *இத்திருப்பலம் வழிநடை ஸ்ரீவைஷ்ணவர்க்கு ப்ரஸாதி$_3$கைக்கும்* (SII,vii,136.)

ப்ரஹ்மாணியார் (பெ) ஏழு கன்னிமாரில் ஒரு தெய்வம் (1072) *ப்ரஹ்மாணியார்க்கு ஸந்தி ஒன்றுக்கு* (EC,x,Kl.108.)

ப்ரஹரம் (பெ) மாணிக்கவகை (1014) *கோத்த மாணிக்கம் ப....குழிவும் ப்ரஹரமும் வெஜ்ஜமுங் கோமளமும் உடையது ஒன்றும்* (SII,ii,42.)

ப்ராணஹானி (பெ) உயிர்க்கேடு (1245) *நாட்டு த்$_3$ரோஹிகளுமாய் ஜந்ம ஹானியும் ப்ராண ஹானியும் பட்டு* (IPS,340.)

ப்ராணாந்திகம் உயிர் உள்ள வரை (921) *அவ்வவர் ப்ராணாந்திகம் வாரியத்துக்குக் குடவோலையெழுதி* (ARASI,1904-05, p.131.)

ப்ராணோபகாரன் (பெ) வைத்தியன் (1307) *தட்டான் இறையிலி நிலம் 3/4ம் ப்ராணோபகார நிலம் 1/20ம்* (IPS,544.)

ப்ராதுர்பா$_4$வம் அவதாரம் (700) *குலமணி ப்ரதீபனாய் ப்ராது$_3$ர்பா$_4$வஞ் செய்து* (EI,xxxviii,4.)

ப்ராப்தம் (பெ) உரிய அளவு (1246) *கடமை வரிக் கொள்ளுமிடத்து ப்ராப்தமாநடடிக்கு மேற்பட்ட* (ARE,1931-32,p.57-58.)

ப்ராப்தி (பெ) உரிமை (1386) *மடுவடை சாரடை மற்றும் யுள்ள ஸமஸ்த ப்ராப்தியும்* (ARE,1918,409)

ப்ராயச்$_0$சித்தம் (பெ) பாவசாந்தி; கழுவாய் (921) *ஸம்ஸர்க்$_3$க$_3$பதிதரை ப்ராயச்$_0$சித்தஞ் செய்யும் அளவும் குடவோலை இடாததாகவும்* (ARASI,1904-05, p.131.)

ப்ரார்த்$_3$த$_3$வஞ் செய்தான் (வி) தோன்றியுள்ளான் (796) *மஹாவிஷ்ணுவய் ப்ரார்த்$_2$த$_3$வஞ் செய்தான்* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

ப்ராஹ்மணிவத$_4$ம் (பெ) பிராமணரைக் கொலை செய்தல் (1168) *பித்ருவதமும் மாத்ருவதமும் ப்$_3$ராஹ்மணி வத$_4$மும் சி$_0$வத்$_3$ரோஹமும் பண்ணிநார்* (SII,vi,456.)

ப்ரீதி (பெ) அன்பளிப்பு (1374) *நிலமும் மனையும் சிறுப்பல வெள்ளாட்டிகளும் புலை அடியாரையும் ப்ரீதியாக குடுத்து* (SII,viii,590.)

ப்ரீதிகை ப்ரமாணம் (பெ) அன்பளிப்பு ஆவணம் (1374) *புலை அடியாரையும் ப்ரீதியாக குடுத்து ப்ரீதிகை ப்ரமாணம் பண்ணிக் குடுத்தேன்* (SII,vii,590.)

ப்ருதிவி (பெ) பூமி (845) *ப்ருதிவிராஜ்யஞ் செய்ய* (EI,xiv,22b.)

ப்ருஷ்ட கண்டிகை (பெ) புட்டத்தில் அணியும் ஓர் அணி (1014) *ப்ருஷ்டகண்டிகைஒன்றிற் கட்டின வயிரம் நாலும்* (SII,ii,93 .)

ப்ருஹஸ்பதி வாரம் (பெ) வியாழக்கிழமை (1185) *ஐப்பசி மாஸத்து பௌர்ணமியும் ப்ருஹஸ்பதி வாரமும் பெற்ற அச்$_0$வதி நக்ஷத்திரத்து நாள்* (EC,x,Mb.45.)

ப்லவங்க (பெ) அறுபது ஆண்டுகளுள் ஒன்று (1247) *ப்லவங்க சங்கச்சரத்து சித்திரை மாதம்* (EC,ix,Bn.68.)

ப

பக்கத்தார் (வி) ஒரு கூட்டம் அல்லது குழு (1214) *கோலால் நீக்கிப் பக்கத்தார் பற்றாயுள்ள நிலமும்* (EI,xxv,11.)

பக்கம் (பெ) சேர்ந்த நிலம் (954) *தண்டுறைப் பக்கத்து ஒரு மாவரைக்கும் கீழச்சேரிப் பக்கத்து மருதம்பாடி எழுமாவுக்கும்* (SII,xiii,117.)

பக்கம் (பெ) நிலப் பகுதி (957) *திருக்கற்றளியின் தென் பக்கத்து ஆடி அருளுகின்ற கூத்தப்பெருமாளுக்கு* (SII,xix,15.)

பக்கல் (பெ) ஏழாம் வேற்றுமை உருபு (755) *யானிவர் பக்கல் விலைக்குக் கொண்டுடையன* (SII,vi,356.)

பக்க வாத்$_3$யர் (பெ) வாய்ப்பாட்டுக்குத் துணையாக இசைக் கருவிகள் வாசிப்பவர் (1014) *பக்கவாத்$_3$யர் அழகிய சோழத் தெரிந்த* (SII,ii,66.)

பக்கிணம் (பெ) பணியாரம் (1614) *கறியமுதுக்குந் தேங்காய் 2 பணிமாறவும் பக்கிணத்துக்கும் நெய்* (TAS,v,p.157-59.)

பக்கு (பெ) பை (1000) *இல்லிபட்ட நெடும் பக்கனைய நிலையா உடலை* (SII,iv,167.)

பக்ஷம் (பெ) பதினைந்து திதி கொண்ட காலம் (996) *இவ்வாட்டை மிதுநநாயற்று அபரபக்ஷத்து நாயற்றுக்கிழமை பெற்ற காத்திகை நான்று* (SII,vii,805.)

பகட்டின (வி) பொலிவு பெறச் செய்த (995) *கோத்த முத்து 700ம் வட்ட மழுவி பகட்டின மாணிக்கம் 3ம்* (SII,iv,542.)

பகடு (பெ) ஆண்யானை (800) *செங்கட் கரும்பகடு* (EI,xiii,10.)

பகர் (வி) வெளி விடும் (921) *மடைப்பகர் நீர்த் தஞ்சையர் கோன்* (SII,iii,206a.)

பகர்ந்த (வி) கூறிய (1044) *முன் பகர்ந்த அணி திகழ் தென் புறம்பியத்துளானுக்காக* (TAMIZ,xviii,p.293.)

பகர்ந்து (வி) பிரித்து (1000) *அகலபறால் நூற்றுக்கலமும் ஆறோராண்டில் பகர்ந்து படுவிது* (TAS,ii,p.173-207.)

பகர்ந்து (வி) பிரிந்து (1100) *இளமை ஆன துடியிலும் பகர்ந்து படும் பதின் தூணிப் பாடும்* (SII,vii,172.)

பகல் (பெ) சூரியன் (1120) *பரியெழுப்புந் தூளி பகல் மறைப்பச் சென்றாங் கெரியெழுப்புந் தொண்டையாரேறு* (CHEN,xxiii,p.93-96.)

பகல் (பெ) பகற்பொழுது (771) *பகல் நாழிகை இறவாமல்* (EI,xvii,16.)

பகல் விளக்கு (பெ) பகற்பொழுதில் ஏற்றும் விளக்கு (800) *பகல் விளக்கு ஒன்றும்* (SII,vi,448.)

பகலவன் (பெ) சூரியன் (785) *பகலவனும் அகலவோடும்* (IA,xxii,pp.57-75; PNDCP,p.52-62.)

பகலிருக்கை (பெ) அரண்மனையில் பகலில் தங்கும் ஒரு பகுதி (1038) *மதுரையின் வடபக்கத்துப் பகலிருக்கை நந்தவானம் புத்தனில் சித்திர கூடத்து* (SII,xiv,161.)

பகவர்கள் (பெ) திருமாலடியவர்களான முனிவர் (1453) *விஷ்ணு சித்தன் கோதைக்கு நாம் வரக்காட்டின ப்ரணய பத்ரிகை பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய் முனிவர்களும்* (CHEN,v,pp.437-41.)

பகவு (பெ) சிறுதுண்டு (1279) *போர் மன்னர்க்கினி புவியில் எப் பகவன்ன பகையில்லை* (SII,xii,265.)

பகற் சோறு (பெ) நண்பகல் உணவு (1150) *இவருக்கு பகற்சோறு பெறுவதாகவும்* (AVNM,9,p.33-34)

பகனாழிகை (பெ) பகல் ஒரு நாழிகைப் போது (771) *புரிசைம்மதிற் புலி ஊர்ப் பகனாழிகை* (EI,xvii,16.)

பகாப்பிடுகு (பெ) பேரிடி; (பல்லவ அரசர்களது ஒரு பட்டப்பெயர்) (580) *பகாப்பிடுகுலளிதாங்குரன்* (SII,ii,72.)

பகிர்ந்து (வி) பங்கிட்டு (1120) *மாறுபடுத்தார் உடலம் வன்பேய் பகிர்ந்துண்ணக் கூறு படுத்தான்* (CHEN,xxiii,p.93-96.)

பகுத்து (வி) பங்கிட்டு (1200) *இருபத்தொரு கல நெல் கொண்டு பகுத்து கொள்ளக் கடவர்* (TAS,vi,140.)

பகுதி (பெ) ஒரு பாகம் (1501) *காணிக்கை பூண்ட இலக்கத்துக்கு பகுதி முட்டுக்கு வாங்கிக் குடுப்பித்த சக்கரம் பணம் 250* (IPS,835.)

பகுதி (பெ) அணிவகுப்பு (1012) *கைம்மணிப் பகுதியு முருடியல் திமிலை முழக்கமும் கரடிகைத் தொகுதியும்* (SII,vii,863.)

பகுதியோன் (பெ) பகுப்பைச் சேர்ந்தவன் (1012) *நிறைவொடு குறையாப் பஞ்சாசாரியப் பகுதியோற்கும்* (SII,vii,863.)

பகுதி சா₀ஸநம் (பெ) ஒரு பாகத்து உரிமைக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் (1312) *செம்பாதி பகுத்துக் கொள்ளக் கடவராகக் குடுத்த பகுதி சா₀ஸநம்* (EC,iii,ml.122.)

பகை (பெ) விரோதம் (1139) *விக்கிரம சோழப் பெரியயனைப் பகை துடர* (ARE,1932-33, p.66.)

பகை கொள்ளுதல் (பெ) விரோதம் செய்தல் (1198) *இராஜராஜ அதிகமானாருடன் உறவு பண்ணுதல் பகை கொள்ளுதல் செய்யு மிடத்து* (SII,vii,127.)

பகைத்து (வி) எதிர் கொண்டு (1036) *கதிர் முடித்தலை தடிந்து முனைவயிற் பகைத்து* (SII,iv,223.)

பகைப் பூபர் (பெ) எதிரிமன்னர் (815) *பகைப் பூபர் தலைபனிப்ப* (SII,iii,206b.)

பகைமர் (பெ) எதிரி (1050) *வளஞ்சிய பகைமரை ஒறுக்க கலிநாயனான* (AVNM,2,p.6-8)

பகைவ்வர் (பெ) எதிரி (1100) *இவ்வறத்துத் தீயார் நசுக்கும் பகைவ்வராயுங் கூலிச்சேவகரால் வர நிற்கிலும்* (AVNM,7,p.24)

பகை ஒருக்கம் (பெ) உட்பகைகள் (1419) *ஊரவற்குப் பகை ஒருக்கம் தீந்து கல்வெட்டிக் குடுத்தபடி* (IPS,698.)

பங்கயம் (பெ) தாமரைப்பூ (800) *பேரிலைப் பங்கயங் கூம்ப* (EI,xiii,10.)

பங்களர் (பெ) ஒரு குறுநில அரசு (1047) *ஐய்யணர் சிங்களர் பங்களர் அந்திரர் முதலியவரை* (SII,iii,28.)

பங்காளன் (பெ) பங்குடையவன் (1400) *இக் கோயில் பங்காளற்கு மூன்றில் ஒரு கூறுமாக* (SII,viii,167.)

பங்கிட்டு (வி) பங்குவழியால் பகிர்ந்து (691) *பங்கிட்டுண்பாராகவும்* (SII,i,151; EI,xvii,22.)

பங்கீடுகள் (பெ) பங்கிட்டுக் கொடுக்கப்பட்ட நிலங்கள் (1000) *கிழக்கும் வடபாற் கெல்லை பங்கீடுகள் தெற்கும்* (SII,v,873.)

பங்கு (பெ) பாகம் (691) *இருபத்தெயிந்து பங்காயி* (SII,i,151; EI,xii,22.)

பங்கு (பெ) ஊர் விளை நிலத்தில் கூறிட்ட பகுதி (753) *த்ரிவேதியார் பங்கின் வழி முதலிட்டு* (SII,vi,356.)

பங்கு (பெ) பிராமண ஊர் விளை நிலங்களில் ஒருவரின் உடைமை (960) *ஸோமாஜியேன் விற்றுக் குடுத்த பங்கு விலையாவணம்* (SII,v,574.)

பங்கு செய்தவர் (பெ) உதவுபவர் (932) *இவை உழுவாரும் விலக்குவாரும் பறிப்போரும் பறிப்போர்க்கு பங்கு செய்தவரும்* (SII,vii,173.)

பங்குனி (பெ) ஒரு மாதம் (866) *பங்குனி வியாகம் ஆறாடுவதாகவும்* (TAS,i,p.1-14.)

பங்குனித் திருவோணம் (பெ) பங்குனி மாதத்துத் திருவோண நட்சத்திரம் (923) *கணபதியார்க்கு பங்குனித் திருவோணத்தி னான்று* (SII,xix,406.)

பங்குனி வியாகம் (பெ) பங்குனியில் விசாசக நட்சத்திரம் உள்ள நாள் (866) *ஏழு நாடிரு விழாச் செய்து பங்குனி வியாகம் ஆறாடுவதாகவும்* (TAS,i,p.1-14.)

பங்குனி உத்திரம் (பெ) பங்குனி மாதத்து உத்திர நட்சத்திர நாள் (898) *பங்குனி உத்திரம் முதலாகக் காத்திகைக் காத்திகையளவும்* (SII,vi,360.)

பங்கேருகம் (பெ) தாமரை (1250) *வளைக்கை யரிவைய ரோடும் அடியுங் கையும் பங்கேருக மன்ன பல்லவன்* (SII,xii,125.)

பங்கொபாதி (பெ) பங்கு விழுக்காடு (1099) *சாவா மூவாப்பேராடாக இசைந்து எங்கள் பங்கொபாதி கைக்கொண்டு* (SII,v,1000.)

பச்சடிக்காரர் (பெ) கோயில் பணியாளரில் ஒருவர் (1496) *பச்சடிக்காரர் பணம் 1 திருவேங்கட பிச்சநுக்கு பணம் 1* (TDI,ii,135.)

பச்ச வடம் (பெ) விரிப்பு, திரை முதலியவற்றுக்கான நீண்ட துணி (1330) *அடிமை ஒன்றுக்கு காசு இரண்டு பச்ச வடத்து இரண்டு காசும்* (EC,x,Kl.70.)

பச்சிலைப் பயன் மரங்கள் (பெ) காய்க்கும் மரங்கள் (994) *ஓமம் தெங்கும் புளியும் முட்பட பச்சிலைப் பயன் மரங்களு* (SII,xiii,203.)

பச்சை (பெ) மரகதம் (1014) *தடவிக் கட்டின மாணிக்கங் கோமளம் ஒன்றும் பச்சை ஒன்றுங் கோத்த மாணிக்கம்* (SII,ii,42.)

பச்சை (பெ) காணிக்கை (1446) *வேண்டுகோள் வினியோகமும் வெட்டி முட்டி வேகரி ஆளமஞ்சி பச்சை மாக்கலம்* (IPS,789.)

பச்சை நெல் (பெ) அவியாத நெல் (1209) *பச்சை அரிசிக்கு அஞ்சிரண்டால் பதினாழி பச்சை நெல்லு ஏற்றிக் குத்த* (KANDT,1968/150.)

பச்சைப் பாட்டம் (பெ) ஒரு வரி (1465) *சேனை அங்காடி பச்சைப் பாட்டம் ஒலி வண்ணார்ப்பாறை கொடியாயம்* (TAS,vi,82.)

பச்சைபட்டு (பெ) பட்டில் ஒரு வகை (1290) *பொடை போடுமிடத்துப் பச்சை பட்டுப் புலியூர் பட்டுப் பட்டாவளப் பட்டு* (SII,v,283.)

பச்சை பணம் (பெ) கோயில் செலுத்தும் ஒரு வரி (1421) *இக் கோயில் பச்சை பணமாக ஆண்டொன்றுக்கு இறுக்கும் வாளால் வழி திறந்தான் குளிகை பணம் 150 கழித்து* (IPS,699.)

பச்சை மிளகு (பெ) உலராத மிளகு (1300) *கோயிலங்காடியார் வந்து கொள்ளும் பச்சை மிளகும் கூடைக்கும்* (SII,xvii,141.)

பச்சை வடம் (பெ) (=பச்சவடம்); துணி மீது ஒரு வரி (1388) *இருப்புக் கட்டின் குவட்டு பச்சைவடம் மற்றும் கிறையமாக கொள்ளும் முதல்களும்* (SII,viii,156.)

பச்சை விநியோகம் (பெ) விழாவின் பொருட்டுத் தண்டும் ஒரு வரி (1300) *இவ்வூர்களில் வெட்டி முட்டாவாள் பச்சை விநியோகம் மற்றும் எப்பேற்பட்டனவும் இறையிலி* (JOR,xx,Appx,p.22.)

பசகள் (பெ) ஏவலாட்கள் (1376) *மாவலி வாணாதராயன் பள்ளர் பசகள் ஓடிப்போ... நெருஞ்சிக் குடியிலே இருக்கையில்* (IPS,960-61.)

பசலை மரம் (பெ) மரவகை (1518) *ஆற்றுக் கால் கரை மேடும் பசலைமரமுள்பட மனைபோந்தது குழி முற்றும்* (SII,iv,368.)

பசறு (பெ) பயறு (1000) *எண்பறை பசற்றினு இருபறையரை வாகைப் பொடி இருநாழி* (TAS,ii,pp.173-207.)

பசாநக் காசு (பெ) பெரும் போக அறுவடை மீதான ஒரு வரி (1118) *ஒரு பூக்காசும் பசாநக்காசும் ஆண்டாசறுதியாக நேராக இறுக்கக் கடவோமாகவும்* (SII,vi,57.)

பசாநம் (பெ) பெரும் அறுவடைப் போகத்தின் பெயர் (970) *இப்பதிநாலாமாண்டு பசாநம் நட்டுக் கிடந்த போகத்தோடேய்* (SII,xiii,251.)

பசான் (பெ) (=பசாநம், பிசானம்) (1014) *ஸபையார் யாண்டு இருபத்தெட்டாவது பசான் முதல் காசு* (SII,ii,6.)

பசி (பெ) உணவு வேட்கை (900) *சீர் பலவ மாராயன் பசி நீக்கி* (EI,vii,5.)

பசித்து (வி) தணியாத பசி கொண்டு (922) *சிலாலேகைப்படி பிழைக்க எடுத்தோமாயில் பசித்து வாழ்வோம்* (SII,vi,295.)

பசி நோய் (பெ) பஞ்சம் (921) *தடாகங்கள் பல திருத்திஉம் அரும்பசி நோய் நாடகற்றி...* (SII,iii,206a.)

பசிபகை (பெ) பஞ்சம் (1140) *திசைதொறும் விசையஸ்தம்பம் நிற்ப பசிபகை யானது தீது நீங்க* (SII,vii,485.)

பசு (பெ) பசுமாடு (770) *இப்பசுக் கொண்ட வெட்டிக்குடி எட்டி சாத்த வேதன்* (SII,xiv,18.)

பசுங்கதிர் (பெ) இளங்கதிர் (800) *பசுங்கதிராயிரம் வீசும்* (EI,xiii,10.)

பசுங்கூடு (பெ) காரை; சுதை (1196) *நாயனார் சுதையாலே பீடமாய் இருந்தமையில் ... ... ஆட்டாண்டு தோறும் பசுங்கூட்டாலே ஜீர்ணோத்தாரம் பண்ண வேண்டுகையாலும்* (SII,vii,1041.)

பசுஞ் சாந்து (பெ) புதிய சந்தனம் (1186) *குங்குமபரிவொடு பசுஞ்சாந்தெழக் கமழ்ந்தன* (SII,xii,263.)

பசுந்தலை (பெ) இளமை வாய்ந்த தலை (1044) *உப்பளர் கொய்மலர் பசுந்தலை தாரதையில்* (SII,v,465.)

பசுந்தேந் (பெ) புதியதேன் (1145) *கமுகம் பாளை பசுந் தேந்நோழுகும் டையய்யூரே* (IPS,129.)

பசு நடை (பெ) பசுக்களான கால் நடை (1055) *முதலான பசுநடை உரு அறுபத்து மூன்றும்* (EC,x,Kl.107.)

பசு பந்தம் (பெ) ஒரு திருவிழா (1545) *ஆவணிமாசம் பவுற்ணமியில் தம்முட பசுபந்தத்தில் நாள் திருப்போனகம் 8* (TDI,v,60.)

பசும் பிணம் (பெ) துடிக்கும் பிணம் (?) (1054) *பாராது நிகழப் பசும் பிணமாக்கி அவன்* (SII,vii,827.)

பசும்புண் (பெ) புதிய காயம் (1061) *படை தடரத் தந்திருமேநியில் பசும் புண் மொழிநீர் புதம்புநலால் நீக்கிந போல்* (SII,v,647.)

பசும்பை (பெ) தோளில் தொங்கும் பை அல்லது மூட்டை (1300) *செங்கோலே முன்னாகவும் செம்பொற் பசும்பையே தெய்வமாகவும்* (AVNM,6,p.36-40)

பசுமஞ்சள் காப்பு (பெ) புதிய மஞ்சளைப் பூசிக் காப்பிடுதல் (1045) *பசு மஞ்ச[ள்] காப்புக்கும் ஆலேபன த்ரவ்யத்துக்கும்* (SII,iv,867.)

பசுவி நெய் (பெ) பசு நெய் (1068) *ஆண்டுதோறும் புராணஸர்ப்பி புதைக்கப் பசுவிநெய் பதக்குங் கொள்ளவும்* (EI,xxi,38.)

பஞ்சக்கம் (பெ) ஐவர் கூடிச் செய்த முடிவு (866) *ஐவர் சட்டரைக் கொண்டு பஞ்சக்கஞ் செய்தான்* (TAS,ii,p.80-82.)

பஞ்ச கண்டி (பெ) ஒரு மரியாதைச் சின்னம் (845) *பார்க்கோலும் பஞ்ச கண்டியும்* (TAS,ii,p.80-82.)

பஞ்சகாவ்யம் (பெ) பசுவின் பால், தயிர், நெய், மூத்திரம்,சாணம் என்ற ஐந்து பொருள்கள் (866) *பஞ்ச காவ்யந் தெளிப்பானுக்கு* (TAS,i,p.1-4.)

பஞ்ச சண்டால குலம் (பெ) நான்கு வருணத்துக்குப் புறம்பான குலம் (1344) *ஆக பஞ்ச சண்டால குலத்துக்கும் அந்தயர் ஆவார்கள்* (UCR,xviii,p.16-23.)

பஞ்ச சயனம் (பெ) உயர்ந்த மெத்தை (1464) *பஞ்ச சயனத்துக்கு ரற்றின கம்பளியும் மெத்தை மயிலிறகு கிறிஷ்ணா சேனம்ப் பட்டுச் சேலை* (TDI,ii,18.)

பஞ்சசரி (பெ) ஐந்து சரங்கொண்ட அணிவகை (1009) *மேற்படியார் சார்த்தும் பஞ்சசரி யொந்று* (SII,v,521)

பஞ்ச சரி (பெ) ஐந்து சரங் கொண்ட ஒரு நகை (982) *தாளிம்பம் இரண்டு இட்ட முத்தின் பஞ்சசரி ஒன்று* (SII,xix,302.)

பஞ்ச சலாகை அச்சு (பெ) ஒரு வகை நாணயம் (1205) *விற்றுக் குடுத்த கொண்ட பஞ்ச சலாகை அச்சு* (IPS,158; SII,xvii,390.)

பஞ்ச தாரை (பெ) சருக்கரை (1464) *பழ அமுது கறி அமுது பஞ்சதாரை 20 பலம்* (TDI,ii,18.)

பஞ்ச தீர்த்தம் (பெ) தேவர், பிதிரர், இருடிகள்,பூதம், மானிடர் என்று ஐவர் பொருட்டு ஊற்றும் நீர் (985) *மணவாட்டி கெத்தி திருவிடவந்தை ஆழ்வார்க்கு பஞ்ச தீர்த்தம் பற்றி நிற்க்க வைத்த திருநந்தாவிளக்கு* (SII,xiii,196.)

பஞ்சதே$_3$ஹ மூர்த்திகள் (பெ) ஐந்து உடம்புகளையுடைய சுவாமியின் உருவங்கள் (1014) *அளந்து கல்லில் வெட்டின பஞ்ச தேஹ மூர்த்திகளில்* (SII,ii,30.)

பஞ்சம் (பெ) வறட்சிக்காலம் (1000) *சிவனைத் தொழுது துறக்க மெய்தார் பஞ்சந் நலிய பலி திரிவார்* (SII,iv,167.)

பஞ்சமஹா பாதகம் (பெ) ஐம்பெருங் குற்றங்கள் (997) *இதற்கு அஹிதம் நினைப்பார் பஞ்சமஹா பாதகஞ் செய்தாராவார்* (TAMIZ,1970, p.126.)

பஞ்சமா பாதஹம் (பெ) கொலை முதலிய ஐம்பெரும் பாவங்கள் (1426) *பஞ்சமா பாதகதோஷமுண்டு* (SII,v,755.)

பஞ்சமா ச$_0$ப்$_3$த$_3$ம் (பெ) ஐவகைப் பறை (937) *பஞ்சமா சப்$_3$த$_3$த்துக்கு ஒன்பது ஆள் கொட்டுவதற்கு* (SII,viii,624.)

பஞ்சமி (பெ) ஐந்தாந் திதி (915) *மதி நாட் பக்கம் பஞ்சமி நாள்* (SII,viii,636.)

பஞ்சரம் (பெ) விமானத்தின் சுவரிலுள்ள மாடம் (1800) *நாயனார் திருக்கற்றளி பலகைப் படையும் பஞ்சரமும் அகவாயுஞ் செய்தான்* (IPS,1014.)

பஞ்சராத்ர ஸம்ஹிதை (பெ) வைஷ்ணவ ஆகமங்களுள் ஒன்று (1200) *சைய்வாக$_3$மங்களிலும் பஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலும் வைகாநஸ க்$_3$ரந்த$_2$ங்களிலும்* (SII,xvii,603.)

பஞ்சலோகம் (பெ) பொன், இரும்பு, செம்பு, ஈயம், வெள்ளி ஆகிய ஐந்து வகை உலோகங்கள் (1127) *ஸ்நமந த்$_3$ரவ்யங்கள் வேண்டுவநவும் பஞ்சலோகமும் பஞ்சந்நமும்* (SII,iii,80.)

பஞ்சவர் (பெ) பாண்டியர் (862) *பார்முழுதாண்ட பஞ்சவர் குலமுதல்* (SII,xiv,45.)

பஞ்ச வர்ண னூல் (பெ) பல நிறமுள்ள நூல் (1464) *பஞ்சவர்ணனூலுக்கு சிவப்பு கறுப்பு பச்சை தோய்க்க* (TDI,ii,18.)

பஞ்சவர் தூதன் (பெ) கண்ணபிரான் (1179) *பஞ்சவர் தூதன் பரனாரி புத்திரன்* (EC,x,Kl.132.)

பஞ்ச வாத்₃யம் (பெ) ஐவகை இசைக்கருவிகள் (1225) *முற்ச் சொல்லும் முன்னடெயும் பஞ்சவாத்₃யமும் சமுகும் பகல்விளக்கும்* (EI,iv,41.)

பஞ்சவாரக் கடமை (பெ) (=பஞ்சவாரம்) (962) *இக்குந்தமங்கலம் வளையிற்ச் சுற்றுமுற்றிலும் வந்த பஞ்சவாரக் கடமையும் பழநெல்லும்* (SII,xiii,151.)

பஞ்சவாரக் கால் (பெ) பஞ்சவாரம் அளக்கும் ஒரு மரக்கால் (996) *எங்களூர்ப் பஞ்ச வாரக் காலாலே பரக்கூலிபட்டு* (SII,v,1366)

பஞ்சவார நெல்லு (பெ) (=பஞ்ச வாரம்): விளைவில் ஐந்தில் ஒரு பகுதியான நிலவரி (927) *நாரணமங்கலமுடையார்க்குங் கடமை பஞ்சவார நெல்லு* (SII,xvii,643.)

பஞ்சவாரம் (பெ) பிராமண ஊர்களில் அரசுக்குச் செலுத்தும் குறைந்த வரி (இயல்பான வரியில் ஐந்தில் ஒரு விழுக்காடு) (852) *திருக்காட்டுப்பள்ளிப் பஞ்சவாரம் ஆயிரக் காடி* (SII,ii,98.)

பஞ்சவார வாரிய பெருமக்கள் (பெ) பஞ்சவாரம் தொடர்பான செயல்களுக்குப் பொறுப்பான பிராமண ஊர்ச் சபையின் ஓர் உட்குழு (959) *பஞ்சவார வாரிய பெருமக்களும் கணக்குவாரிய பெருமக்களும்* (SII,iii,156.)

பஞ்சாக தைலம் (பெ) மருந்து வகை (1068) *பஞ்சாக தைலம் தூணியும் லசுநாத்₃யேரண்டதைலந் தூணியு* (EI,xxi,38.)

பஞ்சாங்கம் (பெ) கோயில் கட்டிட உறுப்புகளுள் ஒன்று (1269) *சம்பு நாயகர் கோயிலில் பஞ்சாங்கத்தில் எழுத்து வெட்டினபடி* (EC,x,Bp.34.)

பஞ்சாசார்யர் (பெ) சிவன் கோயிலில் பூசை செய்வோர் (1008) *தேவதாநம் திருநெத்தநமுடைய பதிபாத மூலத்தோமும் பஞ்சாசாரியகளோமும்* (SII,v,603.)

பஞ்சாசாரியர் (பெ) (=பஞ்சாசர்யர்) (1015) *பதியார் முப்பத்திருவர்க்கும் பஞ்சாசாரியர் உள்ளிட்ட காந்தர்வர்க்கும்* (TAMIZ, xvii,p.155-55.)

பஞ்சாளத்தார் (பெ) கொல்லர் முதலிய ஐவகைக் கம்மாளர் (1579) *நாகலாபுரம் ஸ்தானத்தாரும் ஊரவரும் நாகலாபுரம் பஞ்சாளத்தாற்கு ஸாஸனம் குடுத்தபடி* (SII,xvii,676.)

பஞ்சு திரி (பெ) பஞ்சினாலான விளக்குத்திரி (924) *பஞ்சு திரிக்கு கழஞ்சு ஆகப் பொன்* (SII,iv,519.)

பஞ்சு பீலி (பெ) பஞ்சின் மீது இறுக்கும் வரி (1192) *வெட்டி பாட்டமும் பஞ்சுபீலி சந்து விக்கிரகப் பேறும்* (SII,v,301.)

பட்ட (வி) அடைந்த (1008) *கெங்கை இடைக் குமரி இடைய் நடுவு செய்தான் பட்ட பாவத்தைய்க் கொள்வாந்* (EC,ix,Cp.131.)

பட்ட (வி) அடங்கிய (771) *பெரு நான்கெல்லையில் பட்ட பூமி* (EI,xvii,16.)

பட்ட (வி) இறந்த (795) *எறிந்து பலரும் பட்ட இடத்து* (TAS,i,p.158-59; ARE,1958-59,471.)

பட்ட (வி) கூறப்பட்ட (804) *இக்கச்சதில் பட்ட பரிசே* (SII,xiv,37.)

பட்ட (வி) ஏற்பட்ட (877) *நிலம் சுட்டின போல பட்ட ஸாமந்துக் குடுவித்தோமானோம்* (SII,vi,370.)

பட்டக் காணிக்கை (பெ) அரசர் முடிசூட்டு நாள் நினைவாகச் செலுத்தும் ஒரு வரி (1418) *அரசுபேறு காணிஆட்சிப்பேறு பட்டக்காணிக்கை முதலான பழவரி புதுவரி* (SII,viii,276)

பட்டக்காரர் (பெ) கிறித்தவ கோயில் குருமார்கள் (1566) *பலதேசத்து பட்டக்காரெரும் இணங்கரும் கூடி* (TAS,vii,p.144-45.)

பட்ட கல் (பெ) இறந்தவர் நினைவாக நட்ட கல்; நடுகல் (550) *காக்கநிலன் பூசல் சென்று பட்ட கல்* (CHHS,1971/87.)

பட்டங் கட்டின பேர் (பெ) சிறப்புச் செய்து அளிக்கப்பட்ட பட்டப் பெயர் (970) *இவர்*

பட்டங் கட்டின பேர் ராஜகேஸரி மூவேந்த வேளார் (SII,iii,147.)

பட்டடை சிற்றாயம் (பெ) தொழிற்கூடங்கள் மீதான ஒரு வரி (1403) *இவ்வூரை நோக்கிவரும் கடமை குடிமை எற்சோறு இனிவோகம் வெட்டிமுட்டாவாள் பட்டடை சிற்றாயம் தறிக்கடமை மற்றும்* (IPS,695)

பட்டடை சுங்கம் (பெ) (=பட்டடை வரி) (1339) *ஊர்களுக்கும் அடைத்த பட்டடை சுங்கம் தறியிறை தட்டார்ப் பாட்டம் ஆசுவம் அவுலம் பல....* (EC,x,Bp.28.)

பட்டடை தண்டல் (பெ) (=பட்டடை வரி) (1463) *உள்ளூர் பல பட்டடை தண்டல் இந்த வகைக்கு* (ARE,1921,413)

பட்டடை வரி (பெ) தொழிற்கூடங்கள் மீதான வரி (1441) *நிலத்தில் ஏறும் உழவு குடி கைவினைக்குடி காசாயக்குடியிற் கொள்ளும் சிற்றாயம் காணிக்கை கட்டாயம் சுங்கம் பட்டடைவரி வண்மை நாட்டு வினியோகம்* (SII,v,257.)

பட்டடை ஆயம் (பெ) (=பட்டடை வரி) (1340) *அங்காடிப்பாட்டம் பட்டடை ஆயம் நூலாயம்* (ARE,1934,059)

பட்டணந் தோசை (பெ) பெரிய தோசை (1547) *திருவீதி எழுந்தருளி அமுது செய்தருளும் பட்டணந் தோசை* (TDI,v,99.)

பட்டணப் பகுதி (பெ) விற்பனைப்பொருள் மீதான ஒரு வரி (1300) *அடிமைச் சாரிகை தரகு மகண்மை பட்டணப்பகுதி எப்பேர்ப்பட்டதும்* (EC,ix,Ht.162.)

பட்டணம் (பெ) வாணிக ஊர்ப் பெயர்களில் பின்னொட்டுச் சொல் (900) *வித்துப்பாடு கடிகை பட்டணத்து உதாரவீரணாயின* (TAS,i,xiii,p.197-200.)

பட்டண வந்தம் (பெ) பட்டணக் குடியிருப்பிடம் (?) (1112) *நடுவுட்பட்ட நிலம் பட்டணவந்தமும் நீர்நிலமுங் கொல்லை நிலமும்* (SII,vii,776.)

பட்டது (வி) உண்டானது (1100) *இந்நிலன் பற்றாதாக செய்த நிலன் பட்டது முட்டத்து தலைமடை வேலியும்* (SII,xvii,496.)

பட்டது (வி) தோற்றது (800) *தென்னன் வேளங் களப்பட்டது* (EI,xiii,10.)

பட்டது (பெ) அனுபவிக்கும் பாவம் (985) *கெ₃ங்கா₃ஸேது பர்யந்தத் திடைய் பாவஞ் செய்தார் பட்டது படுவான்* (CHEN,i,p.86-87.)

பட்டப் பாழ் (பெ) பயிரில்லாத நிலம் (1234) *இலைக் கொடியும் பட்டப்பாழும் நன்சை புன்சை யுள்ளிட்ட கடமைகளும்* (SII,iv,850.)

பட்டப் பெருமக்கள் (பெ) நன்கு கற்ற பிராமணர் (873) *நாலூர் பட்டப் பெருமக்கள் உள்ளிட்ட பெருங்குறிப் பெருமக்களோம்* (SII,iii,90.)

பட்டபடி எழுதியுள்ளபடி (894) *இக்கற்றூண் மேல் பட்டபடி* (SII,xiii,302.)

பட்டபாதி (பெ) ஒரு வரி (1471) *முகம்பார்வை பட்டபாதி வினிபோக சோடி* (ARE,1919,118)

பட்டம் (பெ) தோளில் கட்டும் ஓர் அணி (1025) *திருத்தோளிற் கட்டின பட்டம் எட்டினாற் பொன்* (EC,x,Kl.112 (a).)

பட்டம் (பெ) நெற்றியிலணியும் பொன் தகடு (896) *பட்டமும் பொற்ப்பூவும்* (TAS,i,p.193-95.)

பட்டம் கட்டுகை (பெ) அரசனாக முடி சூடுதல் (1212) *பாண்டியன் என்று பரிமணி பட்டம் கட்டுகை சுட்டி வெஞ்சிலை வாங்கி* (IPS,166.)

பட்டம் கடத்து (பெ) போட்டியிட்டு (?) (970) *கீழ்பாதத்து ஒரு துருவும் கரைப்பறிச்சுப்பட்டம் கடத்துப் பிழையாமே சொன்னார் ஒரு காற் கொண்டாரல்லாதரை* (SII,xiii,250.)

பட்டமேனி (பெ) ஒரு வரி (1431) *நிலவழி அரிசிகாணம் பட்டமேனி குற்றத்தெண்டம்* (ARE,1934,127)

பட்டமை (வி) இறந்தமை (1009) *கர்ண வில்லெக்கத் தோளம் எய்து காரி குளிர்வாகை பட்டமையில்* (SII,v,1411.)

பட்டய காணிக்கை (பெ) ஒரு வரி (1387) *ராஜஸம் பட்டயகாணிக்கை தோரண காணிக்கை* (EI,viii,31.)

பட்டயம் (பெ) உரிமை வழங்கும் ஆவணம் (1523) *திம்மரஸர் தேவதாந பட்டயம் குடுத்த பதி* (AVNM,4,p.41-42)

பட்ட வட்டம் (பெ) ஒரு வரி (1429) *பணமுதலுக்கு கரணிக்கர் ஓலைச் சம்மாதம் பட்ட வட்டம் கண்கூலி காணிக்கை* (ARE,1914,59)

பட்ட வண்ணம் கூறப்பட்டுள்ள படி (885) *செலவு பத்திரத்தில் பட்ட வண்ணஞ் செய்து கொள்ளக் கடவர்* (TAS,ii,p.80-82.)

பட்ட விருத்தி (பெ) வேதம் பயில்வோருக்குக் கொடுத்த மானிய நிலம் (1340) *பூசைப்பாதியும் பட்ட விருத்தியும் தேவைக்கு இடும் பணமும்* (ARE,1919,218)

பட்டாங்கு (பெ) உள்ள நிலைமை (955) *ஸ்ரீ பராந்தக தேவர்க்குச் சென்றுப் பட்டாங்(க்)கு விண்ணப்ப செய* (SII,viii,739.)

பட்டாசாரியம் (பெ) கோயில் பூசை (1125) *மேல்பாற் கெல்லை பட்டா சாரியம் செய்யும் சிவப்ராஹமணந்* (CHEN,i,p.83-86.)

பட்டார் (பெ) அடைந்தவர் (996) *இதிநுக்கு விரோத நின்றோம் கெங்கா கந்யாந்தரத்திடைப் பட்டார் பாவத்திற் படுவோம்* (SII,v,1366.)

பட்டார் (பெ) இறந்தார் (800) *செருவில் மறங்கூர் வாய்ப்பட்டாருடல் குடைந்து* (EI,xiii,10.)

பட்டாரகர் (பெ) தெய்வம் (800) *திருவல்லவாழ் பட்டாரகர்க்கு* (TAS,iii,p.203-05.)

பட்டாரு (பெ) இறந்தவர் (594) *பொன் பானன்னாரோடெறிந்து பட்டாரு கல்* (CHHS,1971/113.)

பட்டாலகி (பெ) துர்கை (1020) *குவளாலத்து பட்டாலகிக்கு திருசுது ...* (EC,xvii,Kl.266.)

பட்டாவளப் பட்டு (பெ) பட்டுத் துணியில் ஒரு வகை (1290) *பொடை போடுமிடத்துப் பச்சைப் பட்டுச் புலியூர் பட்டுப் பட்டா வளப்பட்டுக் கட்டிக் கொள்ளப் பெறுவர்களாகவும்* (SII,v,283.)

பட்டி (பெ) ஒரு நில அளவு (989) *ஆயிரங் குழி கொண்டது ஒரு பட்டியாக விலை குடுத்து* (SII,viii,521)

பட்டி (பெ) ஒரு நில அளவு (550) *பதினாறரைப் பட்டி நிலங்கொடுத்தோம்* (TASSI,1958-59, pp.41-83)

பட்டி (பெ) பசுக் கொட்டில் (1000) *பட்டிப் பசுமுள் படரத் துடர்ந்து* (SII,iv,167.)

பட்டி (பெ) விளைநிலப் பொதுப்பெயர் (1031) *கீழ் அண்ணாத்து நாலாடிக் கிணறுப்பட கீழைப்பட்டியும் நடுவிற்பட்டியும் மேலைப்பட்டியும் ஆலையேத்தப் பட்டியும் ஆகப் பட்டி நாலுக்கும்* (SII,viii,66.)

பட்டிக் காசு (பெ) ஒரு பட்டி நிலத்துக்கு ஒரு காசாகச் செலுத்தும் வரி (1111) *இந்நிலத்தால் வந்த இறை நெல்லும் பட்டிக் காசும் மற்றும்....* (SII,xvii,292.)

பட்டிக் காடி (பெ) ஒரு பட்டி நிலத்துக்கு ஒரு காடி வீதம் இறுக்கும் வரி (962) *எருமைப் பொன்னுந் தண்டங் குற்றம் உள்ளிட்டுப் பட்டிக் காடி ஒழிய* (SII,vi,324.)

பட்டி குற்றம் (பெ) ஒரு வரி (1180) *ஆயமும் பட்டி குற்றமும் ஸ்ரீகாரிய பேறும் உள்ளிட்ட அனைத்தாயங்களும்* (SII,vi,256..)

பட்டிகை (பெ) அரைக்கச்சை (1000) *சிராமலையான் பைத்தலைப் பாம்பு கண்டீர் அரைமேற் கொண்ட பட்டிகையே* (SII,iv,167.)

பட்டிகை (பெ) எழுத்துச் சான்று (802) *உண்டிகையும் பட்டிகையும்* (SII,xii,42.)

பட்டிகை (பெ) கட்டிட உறுப்புகளில் ஒன்று (932) *நமன மண்டபத்துள் தென்மாட்டி ஜகதிஇலும் பட்டிகைஇன் மேலும் பட்டிகைஇலுங் கண்டத்திலும்* (SII,v,588.)

பட்டிகைக் காணம் (பெ) ஒரு வரி (753) *புட்டகவிலையும் பட்டிகைக் காணமும்* (SII,ii,73.)

பட்டிடைகளில் ஆயம் (பெ) (= பட்டடை வரி) (1517) *தறிக்கடமை பேற்க்கடமை ஸகல பட்டிடைகளிலாயம் எப்பேர்பட்ட ஸகலபிராத்தியும் உள்பட* (SII,vi,70.)

பட்டிணப் பகுதி (பெ) (= பட்டணப் பகுதி) (1300) *எழுந்தருளிவிப்பதாக பட்டிணப்பகுதி கட்டிக்குடுத்த பரிசாவது* (AVNM,6,p.36-40)

பட்டித் தெண்டம் (பெ) ஒரு வரி (1387) *பிள்ளையார் நோன்பி திருவிளக் கெண்ணைத் தேவை பட்டித் தெண்டம் குற்றத் தெண்டம்* (EI,viii,31.)

பட்டிப் பொன் (பெ) ஒரு வரி (1244) *நன்செய் புன்செய் கடமையும் பட்டிப் பொன்னும் இனவரி* (SII,iv,647.)

பட்டிறை (பெ) செலுத்த இயலாத வரிகள் (1420) *நாட்டுக்கு பட்டிறை படர்வரி வந்தாலும் இவ்வூர்க்கு வருஷம் தோறும் கொள்ள நிச்சயித்த பணம் பத்து* (SII,viii,275.)

பட்டின சேரி (பெ) மீன் பிடிப்போர் செலுத்தும் வரி (?) (852) *குசக்காணமும் பாறைக் காணம் பட்டின சேரியும் மற்றுமிவ்வூரெல்லைஉளகப்பட்டது* (SII,ii,98.)

பட்டினவர் (பெ) மீன்பிடிப்போர்; மீன் வாணிகர் (1036) *குணமே நகை புரத்து ஏறின வியாபாரிகளும் வெள்ளாளரும் சங்கரப் பாடியாரும் சாலியரும் பட்டினவரும் உள்ளிட்ட குடிகளும்* (SII,iv,223.)

பட்டு (பெ) அரசு அலுவல் மேற்பார்வை செய்யும் ப$_4$ட்டன் தொழில் (1008) *இப்பரிசுப் பட்டாய் நின்று பிடி நடப்பித்து அறவோலை செய்வித்தேன் ...ஸ்ரீதர ப$_4$ட்டனேன்* (EI,xxii,34.)

பட்டு (பெ) ஊரின் பொதுப்பெயர் (1270) *சோழன் பட்டும் களனிகளமும் பிராய்பட்டும் முன்கை பட்டும்* (SII,vii,63.)

பட்டு (வி) தோய்ந்து (1296) *குருதிப் பெருக்கிற் செல்வாறு பட்டோட வல்வாறு சென்றப்போர் வென்று* (SII,iv,228.)

பட்டுக் கெட்டமை (வி) தொலைந்து போனமை (961) *இவ்வோலைப் பட்டுக் கெட்டமையில் இவ்வோலை மேற்றோன்றப்படில் அவ்வோலை சாவோலையாக* (SII,iii,175.)

பட்டுக (வி) இறந்து விழ (1044) *கரியோடும் பரியோடும் பட்டுக பொருத* (SII,v,465.)

பட்டுச் சுவந்திரம் (பெ) பட்டாடை உடுத்தும் உரிமை (1147) *கல்யாணத்திரு கெட்டி கூறையும் பட்டுச் சுவந்திரவும் பற்றி* (TAS,viii,p.7-8.)

பட்டுடைக் காணி (பெ) பட்டுடையார் பெறும் பூசைக் காணியாட்சி (989) *கோயில் பட்டுடைக் காணி யாவதெல்லாம்* (SII,xiii,98.)

பட்டுடைத் தேவகன்மிகள் (பெ) (=பட்டுடையார்) (985) *பதிபாதமூலத்தோமும் பட்டுடைத் தேவகன்மிகளோமு இது பன்மாஹேச்வர ரக்ஷை* (SII,xix,193.)

பட்டுடையார் (பெ) சிவன் கோயில் பூசை செய்வோரில் ஒரு வகை (947) *இவ்வூர்ப் பட்டுடையார் கோசிகன் அரங்கன் ஆனைக்காவனும்* (SII,viii,698.)

பட்டு திருப்பரிவட்டம் (பெ) சுவாமிக்கு அணியும் பட்டாடை (1542) *...திருவாதிரை நக்ஷத்ரம் தோறும் அமுது செய்தருளும் ...எதிர் கொண்டருளும் பட்டு திருப்பரிவட்டம் ...* (TDI,iv,206.)

பட்டுப் பட்டாவளம் (பெ) பட்டுவகை (1300) *பட்டுப் பட்டாவளச் சுமை ஒன்றுக்கு காசு முப்பதும்* (SII,viii,442.)

பட்டுவர (வி) பொறுப்பாக (971) *எங்களோடெப் பிறந்த நாராயணன் ஸ்ரீ மாதவன் தண்ட காணம் பட்டு வர இவனும் அடை நில்லாது போக* (SII,xiii,260.)

பட்டை (பெ) தகடு (1014) *பொன்னின் பட்டை மேற் குண்டு வைய்த்து விளக்கின வளை* (SII,ii,46.)

பட்டைக் காறை (பெ) கழுத்தணி வகை (1014) *நங்கை பரவையார்க்குக் குடுத்தன திருவொன்றுட்படப் பட்டைக்காறை ஒன்று பொன் முக்காலே* (SII,ii,38.)

பட்டை வளையில் (பெ) வளையல் வகை (1018) *பட்டை வளையிலாறினால் நிறை பொன் பதின் முக்கழஞ்சே* (SII,vii,891.)

பட்டோலை (பெ) புரவுவரிக் கணக்கு எழுதும் ஓலை அல்லது அதற்குப் பொறுப்பான அலுவலர் (978) *வரியிலிடு சூரனணியனும் பட்டோலை கணபுரவனும் இருந்து* (SII,iii,151-151a.)

பட்டோலைக் காசு (பெ) ஒரு வரி (1239) *வகைந்த காசு பட்டோலைக் காசு மற்று மெய்பேற்பட்ட பல காசாயங்களும்* (SII,i,61.)

பட்டோலை பணம் (பெ) ஒரு வரி (1350) *ஆசுவப் பொன்வரி பட்டோலைபணம் நல்லெருது வாசல் ஒட்டு* (ARE,1916,214)

பட (வி) மறைய (1012) *கங்குற் குழம்பு படுபேரிருட் பிழம்பு பட வுருட்டிய செஞ்சுடர் மௌலி* (SII,vii,863.)

பட (வி) வற்ற (1200) *வாரிபட வேல் எறிந்த வார்த்தையிலும்* (SII,viii,145.)

பட (வி) குத்த (815) *தூணி பலபடத் தோளோச்சி* (SII,iii,206b.)

பட (வி) விதிக்கப்பட (883) *நாற்பத்தெட்டுக் காணம் அன்றென்றாரே பட* (SII,vii,420.)

படக் கொண்ட (வி) சேரக் கொண்ட (1100) *கிடையத்துள் படக் கொண்ட பூமி* (SII,vii,172.)

படகம் (பெ) ஒரு வாத்தியம் (987) *கரடிகை ஒன்றும் தாளம் ஒரணையும் படகம் ஒன்றும் சேகண்டிகை ஒன்றும்* (SII,xiii,3.)

படகாரம் (பெ) ஒரு நில அளவு (1000) *சித்திரை விழுவு முதலாய் இருபது படகாரம் ஒரோ படகாரத்தால் பதினெட்டு பங்கு* (TAS,ii,pp.173-207.)

படகு (பெ) ஒருவகை நீர்க் கலம் (885) *வெடியிலும் படகிலும் போக்கிலும் வரத்திலும்* (TAS,ii,p.80-82.)

படப்பு (பெ) வீட்டுத்தோட்டம் (550) *மனையும் மனைப்படப்பும் உடும்போடி ஆமை தவழ்ந்ததெல்லாம்* (TASSI,1958-59,pp.41-83; PLCP,p.26-32.)

படப்பை (பெ) பரந்த இடம் (907) *கடற் படப்பை ஒற்றி மூதூர்* (SII,xii,93.)

படம் (பெ) விரிதல் (1242) *விழாக் கொடி படந்தொறு மெடுப்பக் கருங்கலிக் கனல்கெட* (SII,viii,404.)

படர் (வி) பரவும் (800) *விண்படர் வான்செய் நாடு* (EI,xiii,10.)

படர்ந்து (வி) பரவி (1118) *தென்கண்டம் அரிபடர்ந்து திடலும் குழியுமாய்* (SII,xvii,624.)

படர் புகழ் (பெ) பரந்த கீர்த்தி (1047) *படர் புகழ் ஆங்கவர்க்கவர் நாடளி பாங்குறு* (SII,iii,28.)

படர்வது (பெ) பரவுதல் (1088) *வடகடல் தெந்கடல் படர்வது போல* (SII,iii,70.)

படர (வி) நீங்க (1220) *நிருபர் குலம் பெலம்படர* (CHEN,xiv,p.362-64.)

படரெரி (வி) படர்ந்து சூழும் நெருப்பு (1050) *பருமாளிகை படரெரி பரப்பி* (SII,v,520.)

படலம் (பெ) பந்தல் (1000) *இருளின் படல மிவை கார் முகில்லை வென்னின் மருளும்* (SII,iv,167.)

படலிகை (பெ) கூடை (1002) *வெற்றிலை படலிகையால் ஒரு பற்று வெற்றிலையும்* (SII,iii,6.)

படவளவம் (பெ) படைவீரர் தொகுதி (?) (1165) *சோழ நல்லூரில் நிற்கு நிலைப்படை அரிகுலகேஸரித் தெரிந்த வில்லிகளில் நாயக முற்பேர் படவளவம் உள்ளிட்ட பெரும்படையும்* (TAS,vii,p.12-13.)

படவு (பெ) படகு (1175) *ஊர்களிலே படைகளும் புகுதவிட்டு படவுகளுஞ் செய்விக்கிறபடி* (EI,xxii,14.)

படவு கூலி (பெ) படகுக்கு இறுக்கும் கூலி (1287) *திருக்கற்ச் சாத்த வாங்கி கோவளத்து கல்லடிப்பிக்கவும் படவு கூலிக்கும் போக விட்டோம்* (SII,xvii,561.)

படவும் (வி) அனுபவிக்கவும் (887) *கங்கைஇடைக் குமரி இடைச் செய்தார் செய்த பாவம் படவும்* (SII,vii,421.)

படா (வி) கலக்கப்படாத (998) *சிறுகாலை ஸந்தியிலாடியருள னீர்படா தரதுப் பால் நித்தப்படி நாழி* (SII,viii,748.)

படாகாரம் (பெ) ஒரு நில அளவு (771) *ஸைவஒடொத்தது நான்கரைப் படாகாரம் உடையன்* (EI,xvii,16.)

படாகை (பெ) பெரிய ஊருக்குச் சேர்ந்த சிற்றூர் (550) *படாகை நடந்து* (TASSI,1958-59, pp.41-83; PLCP,p.26-32.)

படாகை நடந்து (வி) எல்லைகளைக் குறிக்க ஊர்ப்பகுதிகளைச் சுற்றி நடந்து (550) *படாகை*

நடந்து கல்லுங் கள்ளியுந் நாட்டி (TASSI,1958-59,pp.41-83; PLCP,p.26-32.)

படாகை வலஞ் செய்து (வி) (=படாகை நடந்து) (753) *எல்லெ போயி படாகை வலஞ் செய்து* (SII,ii,73.)

படாங்கழி (பெ) ஒரு வரி (753) *படாங்கழியும் கையாளும் நெடும்புறெயும்* (SII,ii,73.)

படாது (வி) வளராது (745) *இப்பொன் றட்டார்க் குலம் படாது* (TAMIZ,1970,p.122.)

படாரர் (பெ) துறவிகளின் பெயரொட்டு (888) *பெண்ணாகடத்து ஸிம்ஹநந்தி படாரர்க்கு* (AVNM,7,p.18)

படாரர் (பெ) கடவுள் (768) *திருமூலத்தானத்துப்படாரர்க்கு நந்தாவிளக்கு* (SII,xiv,27.)

படார அதிகாரிகள் (பெ) கோயில் அதிகாரிகள் (954) *படார அதிகாரிகள் இப்பூமி பாட்டமாண்டு* (TAS,iii,p.169-71.)

படாரியார் (பெ) துர்க்கை (889) *நியமமாகாளத்துப் படாரியார்க்கு* (SII,vi,449.)

படாவரி (பெ) (=பாடாவரி) (1420) *நாட்டுக்கு பட்டிறை படாவரி வந்தாலும் இவ்வூற்கு வருஷம் தோறும் கொள்ள நிச்சயித்த பணம் பத்து* (SII,viii,275.)

படி (பெ) பூமி (1056) *நெடு மகுடஞ் சூட்டிப் படிமிசை நிகழுனாளினுள் இகல்வேட் டெழுந்து* (SII,v,489.)

படி (பெ) வாசற் படி (1123) *கோயிலில் படி கடந்து புகுவார் எரிக்க கடவராக ஸம்மதித்து* (SII,vii,806.)

படி (பெ) நகல் (1245) *ஸ்ரீ வை..வர்கள் படி எடுத்துக்கொண்டு தங்கள் கோயிலிலே கல்வெட்டிக் கொள்வர்களாகவும்* (IPS,341.)

படி (பெ) நாட் செலவுக்காகக் கொடுக்கும் பொருள் (866) *ஏழு நாளும் படி இரட்டி ஆணியம் பெறுவதாகவும்* (TAS,i,p.1-14.)

படிக்கட்டு (பெ) வாசற்படிகள் (978) *மஹாதேவ பட்டாரகர் பழைய ஸ்ரீவிமாநத்துப் படிக்கட்டில் வெட்டிந எழுத்து* (SII,iii,133; SII,xix,200.)

படிக்கம் (பெ) சுவாமியின் முன் வைக்கும் பூசைக் கலம் (1014) *நாளதினாலேய் குடுத்த பொன்னின் படிக்கம் ஒன்று கால் மூன்றும் வளையில் இரண்டும் உள்பட* (SII,ii,1.)

படிஞ்ஞாயிற்று திருவடி (பெ) கோயிலில் மேற்குப் பக்கத்தில் வைக்கப்பட்டுள்ள திருமால் உருவம் (1000) *கிழக்கின் திருவடிக் கொன்று படிஞ் ஞாயிற்று திருவடிக்கரை சாத்திரர்க்கு* (TAS,ii,pp.173-207.)

படிஞ்ஞாயிறு (பெ) மேற்கு (885) *படிஞ்ஞாயிறு கடலே யெல்லையாகவும்* (TAS,ii,p.80-82.)

படிந்து (வி) குளித்து (1209) *....நீர் படிந்தாடி ஓடை மதிக்களிறேறி* (IPS,163.)

படிப்புரை (பெ) படிக்கட்டுள்ள இடம் (1438) *சிரிகோயிலும் மண்டபவுமைச்சு படிப்புரையும் செம்பு மேவிச்சு* (TAS,i,p.299.)

படி புகழ் (வி) பூமியிலுள்ளார் புகழ்கின்ற (1057) *கழல் வீர சோழனை படி புகழ் கரிகால சோழனென்றும்* (IPS,112.)

படிமம் (பெ) சிலை வடிவம் (781) *பொன் னியக்கியார் படிமம் கொட்டுவித்தான்* (EI,iv,14a.)

படிமாற்று (பெ) கோயில் பூசை முதலிய செலவிற்கு வழக்கமாகக் கொடுக்கப்படும் பொருள் (960) *படிமாற்று கேட்டு படிமாற்றில் நூற்று அறுபதின் கலமே* (SII,iii,203.)

படியாரி மேர்வை (பெ) ஒரு வரி (1333) *வாசல்ப் பணம் தலைப்பணம் நிச்சையிப்பு முகம் பார்வை படியாரி மேர்வை முகம் பார்வை* (TDI,i,100.)

படியாள் (பெ) ஏவல் வீரர் (?) (1214) *சோளத் திருக்காளத்தி தேவர்ப் படியார்களில் படியாள் வயிரப்ப நாயக்கன் மகன்* (ni.r,8.)

படியெடுத்து (வி) நகல் எழுதி (1273) *வரியிலிட்ட ஊர்களுக்கு ஐஞ்சாவது வைகாசி மாஸம் படி யெடுத்துக் கொடு வந்து காட்டின கல்வெட்டுப்படி* (SII,viii,398.)

படு (வி) ஒலிக்கும் (771) *படுகடன் முளைத்த பருதி போல* (EI,xvii,16.)

படுக்கும் (வி) விளைக்கும் (1137) *இவ்வூர் உப்புப் படுக்கும் அளம் தொண்ணூற்றிலும்* (SII,viii,31.)

படுகண் (பெ) ஒரு நகை உறுப்பு (1009) *மூன்றொன்றாக அடிக்கி விளக்கின தாளிம்பம் இரண்டும் படுகண் ஒன்றும்* (SII,v,521.)

படுகர் (பெ) மருத நிலம் (905) *செங்கழு நீர் மல படுகர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

படுகால் (பெ) இயற்கையான வாய்க்கால் (905) *கூற்றன் குழி மீப் குழியேய் போயின படுகாலுக்கும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

படுகாலப்பட்டு (வி) கெட்டு (921) *மாறும் பட்டன் இவ்வூர்ப் படுகாலப்பட்டு இன்றி விட* (SII,xiv,65.)

படு கூறு (பெ) வாரிசு முறையில் கிடைக்கும் பங்கு (983) *இப்பங்கு 1ம் சுட்டி வந்த அகமனையும் ஸ்ரீராவணையும் இடு கூறும் படுகூறு புன் செய்யும்* (SII,xix,335.)

படுகை (பெ) ஆற்றோரத்து நிலம் (1000) *வண்ணானுக்கு கால் செய்யால் ஒரு படுகையும் களப்பேறும்* (EI,xxxiii,33.)

படுகை திடர் (பெ) (=படுகை) (1533) *உள்பட்ட நஞ்செ புஞ்செ நத்தம் படுகை திடர் மாவடை* (SII,xxiv,409)

படுகை இறைத்தல் (பெ) நீர் இறைத்துப் பாயும் ஆற்றோரத்து நிலம் (1300) *பொத்தகப் படி படுகை இறைத்தல் வரம்பிறை உட்பட* (SII,ii,22.)

படுத்த (வி) விழுந்த (887) *கஜத் தீண்டிப் படுத்த வரகுண மஹாராஜனுக்கு* (EI,xxxii,31b.)

படுத்து (வி) அமைத்து (700) *வைகை சொன்மதகு படுத்து* (EI,xxxviii,4.)

படுத்து (இ) பேரில் (962) *எப்பேர்ப்பட்டதும் ஊர்ப் படுத்தும் சேரிப் படுத்தும் வருமிறை* (SII,xiii,151.)

படுத்து (வி) அமைத்துக்கட்டி (833) *பெருங்குளத்து வெட்டிமடை கற்படுத்தும் பொன்னாண்மடை* (SII,xiv,44.)

படுதறை (பெ) கட்டாந்தரை (1187) *அறுகெழுந்த படுதறையும்* (SII,v,990.)

படுப்பான் (பெ) உடம்பில் பூசுபவன் (?) (1000) *அன்று மதிலகத்து எண்ணை வேண்டுமவர்க்கு படுப்பான் இடங்கழியால் அஞ்ஞாழி* (TAS,ii,pp.173-207.)

படும் (வி) உண்டாகும் (885) *அன்றன்று படுமுல்கு அஞ்சு வண்ணமும் மணிக் கிராமமும்* (TAS,ii,p.80-82.)

படும் (வி) சேரும் (905) *களக்குடி நாடதனிற் படுங்கிடக்கை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

படுமரம் (பெ) தானே முளைத்து வளரும் மரம் (1328) *திடல் திட்டுக்களும் சுற்றுத் தரிசுகளும் ஊரணிகளு இடுமரம் படுமரங்களும்* (SII,viii,178.)

படுவது (பெ) சேர்ந்தது (771) *பாகனூர்க் கூற்றத்துப் படுவது* (EI,xvii,16.)

படுவது (வி) தண்டம் படுவது (959) *இதிற்றிறம்பில் தர்மாஸநத்தில் நிசதம் ஊராக நூற்றெட்டுக் காணம் படுவதாகவும்* (SII,vii,73.)

படுவம் (பெ) வயலின் பொதுப்பெயர் (1000) *பாலைத்தானத்து கரியும் பிள்ளன் படுவமுங் காஞ்ஞரத்தினால் ஓடியும் பறையன் புறாயுமாய்* (TAS,ii,pp.173-207.)

படுவார் (வி) அடைவார் (845) *வாராணாசி அழித்தான் பாவத்துப் படுவார்* (EI,xi,22b.)

படுவான் (வி) உள்ளாவான் (793) *கொன்றபாவத்து படுவான்* (SII,iii,42.)

படைஇலார் முறைமை (பெ) ஒரு வரி (1300) *வாசல் விநியோகம் படை இலார் முறைமை கூற்றிலக்கை விடைப்பேர்* (SII,ii,22.)

படை (பெ) ஆயுதம் (1076) *கொட்டியானையும் யானுமென் கைய்யில் துலங்கு பொற்ப் படையுமேய் துணையென்றருளி* (SII,vii,137.)

படை (பெ) சேனை (600) *கொங்கணி அரைசரு படைஒடு* (CHHS,1971/100.)

படை (பெ) ஆயுதம் (905) *கார் வண்ணன்றிண்படைமால் ஸ்ரீ பூபதி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

படை (பெ) சுவரில் கல் வரிசை (965) *நமிநக்கன் சங்கரன் இப்படைக்கு வைச்ச கல்லு நாலு* (SII,vii,799.)

படைக்க (வி) உண்ணக் கொடுக்க (1127) *அமுதில் படைக்க சற்கரை* (SII,iii,80.)

படைக்கலம் (பெ) ஆயுதம் (866) *படைக்கலத்தால் புண் செய்தான்* (TAS,i,p.1-14.)

படைஞர் (பெ) படை வீரர் (1044) *புலிக்கொடி படைஞரோட்ட வரிவாரணக்கடல்* (SII,v,465.)

படைத்த (வி) உண்டாக்கிய (805) *பண்டேய் பரமன் படைத்த நாள் பார்த்து* (SII,xii,40; EI,xi,15.)

படைத் தலைவன் (பெ) இடையன் (809) *படைத் தலைவன் குணவம்பல தேவன் வழி அடுத்த சாவா மூவாப்பேராடு* (SII,xiv,40.)

படைத்தனன் (பெ) பெற்றுள்ளவன் (1142) *செவ்வாய்ப் பவளச் சேயொளிப் படைத்தனனியாநென* (SII,xvii,598.)

படைத்துடைய (வி) பரம்பரையாய்ப் பெற்றுள்ள (879) *எமப்பனார் படைத்துடைய பங்கின் வழி* (SII,vi,294.)

படை நாயகம் (பெ) சேனைத் தலைமை (1258) *பிள்ளை முதலிகளும் தனியாட்களும் படைநாயகஞ் செய்வார்களும் தனியாள் முதலிகளும்* (SII,vii,118.)

படை நிலை (பெ) படைகள் தங்கி யிருக்கு மிடம் (1175) *இவன் தன் படை நிலையான ஊராத்துறை புலைச்சேரி மாதோட்டம் வல்லிகாமம் மட்டி வாழ் உள்ளிட்ட ஊர்களிலே* (EI,xxii,14.)

படைப் பகையன் (பெ) படைக்குத் துரோகி (1113) *மாதந்திரத்துக்குப் பிழைத்த படைப் பகையன் பஞ்ச மஹா பாதகஞ் செய்தானும்* (EI,xviii,38; EZ,ii,pp.242-55; SII,iv,1396.)

படைப் படையால் (பெ) ஒவ்வொரு படைக்கும் (1113) *அறங்காவலுக்கு படைப் படையால் ஓரோ சேவகரையும் ஓரோ வேலி நிலமும் இட்டுத் குடுத்து* (EI,xviii,38; SII,iv,1396; EZ,ii, pp.242.)

படைப் பரிசாரம் (பெ) படை மரியாதை; தோல்வி (921) *தஞ்சையர் கோன் தானைவரை நைப்பூரிற்படைப் பரிசாரந் தந்து* (SII,206a.)

படைப்பற்றார் (பெ) படைப்பற்று ஊர்களைச் சேர்ந்தவர் (1449) *நமக்கு இவர்களே வழிபட்டவர்கள் என்கிறது இது கொண்டு படைப்பற்றார் செய்துபோதுகிற ஊழியத்துக்கு* (IPS,462.)

படைப் பற்று (பெ) படைப் பற்று ஊர்களைச் சேர்ந்தவர்கள் (1228) *சோழ வளநாட்டு நாடும் நகரமும் கிராமங்களும் வன்னியர்களும் படைப் பற்றுக்களும்* (IPS,285.)

படைப் பற்று (பெ) படையைச் சார்ந்தவர்க்குக் கொடுக்கப்பட்ட ஊர் அல்லது நிலம் (1252) *திருவிடை ஆட்டமும் பள்ளிசன்தமும் அகரபற்றும் வன்னிய பற்றும் சீவித பற்றும் படைப்பற்றும் ஊற்பட தண்டி* (SII,xvii,714.)

படை முகம் (பெ) படை அணிவகுப்பு (1171) *அங்கய நாயக்கந் குதிரையையுங் குதிரை யாழையுங் குத்திப் படை முகத்தைக் கெடுத்து* (EC,ix,Kn.44.)

படைய்த்தும் (வி) சாஸனம் மூலம் அடைந்தும் (985) *தெங்கு கறிநிலிலும் அடைய்த்தும் படைய்த்துமுடைய நிலந்கீழ் தெங்கு அரையும்* (SII,xix,379.)

படையார் (பெ) சேனை (953) *நாங்கள் பாண்டி படையார்க்கு* (SII,xiii,46.)

படையிலார் வாரியப் பேறு (பெ) படைக்கணக்கு பொருட்டு செலுத்தும் ஒரு வரி (1258) *தறி...பாட்டமும் தனப்பேறும் படையிலார் வாரியப் பேறும்* (SII,viii,462.)

படையேவிய (வி) பகுதியாகச் சேர்ந்த (921) *தரம்பற்றூர்னாட்டு படை யேவிய பிரமதேயம்* (SII,viii,604.)

படை வள்ளுவன் (பெ) படையில் செய்தி அறிவிப்பவன் (958) *...கருள் குஞ்சிரரில் படைவள்ளுவற் காடன் ஆச்சனுக்கு* (SII,xix,6.)

படை வீடுகள் (பெ) பாசறை (1384) *....ட்டிணம் படைவீடுகளில் சந்தைகள் கடைகளில் அள்ளுள்ளதும்* (SII,i,142.)

பண் (பெ) இசை (862) *பண்ணமர் கோஇல்* (SII,xiv,45.)

பண்டம் (பெ) தானியம், பணம் முதலிய பொருள் (1239) *திருமுகத் தேவையாய் வரும் ஆளும் பண்டமும் ஊணொபாதி படவும்* (SII,vi,58.)

பண்ட வெட்டி (பெ) கட்டாய உழைப்புக்கு மாற்றாகக் கொடுக்கும் பொருள் (1066) *இவ்வூர்கள் ளிடக்கடவ பந்மையாலும் பண்ட வெட்டியாலும் ஆள்ளொந்றுக்கு காசு பத்தாக* (SII,v,976.)

பண்டாடு பழநடை (பெ) நீண்ட காலமாக நடந்து வரும் வழக்கம் (1122) *இக் குளத்துக்கு பண்டாடு பழநடை பாயவும் வாரவும்* (SII,xvii,609.)

பண்டாரக்கல் (பெ) கருவூலத்தில் பயன்படுத்தும் எடைக்கல் (924) *பொன் செம்மை பண்டாரக் கல்லால்* (SII,iv,519.)

பண்டாரப் பாதி (பெ) ஒரு வரி (1260) *நன்சை புன்சை கடமையும் ஸ்ரீபண்டாரப்பாதி உள்பட* (SII,xii,202.)

பண்டாரப் பொத்தகம் (பெ) கருவூலக்கணக்கு வேலை (967) *விக்கிரம பாண்டிய மூவேந்த வேளான் ஆயின கட்டி நக்கன் இரணன் பண்டாரப் பொத்தகமாகவும்* (SII,xiv,95; EI,xxv,6.)

பண்டாரம் (பெ) கருவூலம்: நாணயம், நகை முதலியன சேர்த்து வைக்கும் இடம் (850) *மாணிக்கப் பண்டாரங் காப்பான்* (SII,vi,453.); (869) *இத்தேவர் பண்டாரத்து சூல நாழியால்* (SII,xiv,5.)

பண்டாரம் செய (வி) கருவூல நிர்வாகஞ் செய்ய (1001) *திருக்கோவலூர் திருவீரட்டான பண்டாரம் செயவுங் முதலும் சிலவு அறியவு* (SII,vii,858.)

பண்டார வாடை (பெ) அரசுக்கு வரி செலுத்தும் நாட்டுப்பகுதி (1437) *எளு க்ஷ்ராமவனு காணிஆட்சிப்பேறு நம்ம பண்டாரவாடை யாகி* (SII,viii,160.)

பண்டாரவாடைகாறர் (பெ) அரசு வரி வசூலிப்பவர்: அரசு அலுவலர் (1544) *இரண்டுகிறாமமும் பூறுவம் கோயிற் பற்றாக நடக்கயிலே அன்னாளிலே பண்டாரவாடைகாறர் கட்டிக்கொண்டு பண்டாரவாடை ஆகப் போகையில்* (SII,v,704.)

பண்டார வாரிகர் (பெ) கோயில் பண்டாரத்துக்குப் பொறுப்பான வாரியர் (985) *இதிற்றிறம்பில் அடுத்த பண்டார வாரிகரையும் அடை எழுதின* (SII,iv,516.)

பண்டார வாரியம் (பெ) கோயில் பண்டாரத்துக்குப் பொறுப்பான குழு (946) *பண்டார வாரியத்திலும் வுயிரில் கீர்த்தி ஏனாதி தளியதிகாரத்திலும்* (TAS,i,p.293-94.)

பண்டார உள்ளிருப்பு (பெ) கருவூலப் பணி செய்பவர் (1218) *பண்டார உள்ளிருப்பு மாங்நாட்டு கோத கோவிந்தனும்* (TAS,i,p.289-91.)

பண்டாரி (பெ) கருவூலக் காப்பாளன் (1001) *இத்தேவர் பண்டாரத்துக்கு பண்டாரியாக திருக்கோவலூர் ஸபையார்* (SII,vii,858.)

பண்டாரி (பெ) பண்டாரக் கணக்குகளைக் கவனிப்பவர் (961) *ஸபையார் இட்ட பண்டாரி ஒருவனுக்கு ஜீவிதம்* (SII,xxiii,255.)

பண்டி (பெ) கோலம் (?) (992) *சாலை துகுத்து மெழுகி பண்டி அட்டுவாள் ளொருத்திக்கு நிசதம் நெல்லு* (SII,xix,357.)

பண்டித தா₃ஸன் (பெ) புலவருக்கடிமை (905) *மாமுனி மனுவழி வந்தோன் பாமரு பண்டித தா₃ஸந்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பண்டிதர் (பெ) புலவர் (921) *ஒண்டமிழும் வடமொழிஉம் பழுதறத் தானாராய்ந்து பண்டிதரில் மேந் தோன்றிஉம்* (SII,iii,206a.)

பண்டில்லாதது (பெ) முன்னே வழக்கில் இல்லாதது (1000) *பொன் பண்டில்லாதது கொள்ள வேண்டாதென்றொழிஞ்சார்* (SII,v,784.)

பண்டி₃த வத்ஸலந் (பெ) புலவர்களிடம் பற்றுள்ளவன் (771) *கார்முக₂பார்த்த₂ந் பராந்தகந் பண்டி₃தவத்ஸலந்* (EI,xvii,16.)

பண்டு (பெ) பழைய காலம் (1012) *மண்டலமுங் கொண்டு தண்டருளிப் பண்டு தங்கடிருக் குலத்தோர்* (SII,vii,863.)

பண்டு (பெ) இதற்கு முன்பு (765) *பண்டுண்ணும் நீர்க்குரித்தாகவும்* (EI,xxxvi,20.)

பண்டு உடையான் (பெ) முன்பு நிலக்கிழமை பெற்றவர் (1486) *பசான் முதலுக்கு கரமும் காராண்மையும் உட்பட தேவதானம் ஆக விட்டு குடுத்த வண்ணமே பண்டு உடையானையும் பழம் பேரையும் தவிர்த்து* (TAS,ix,25-26.)

பண்டேய் (பெ) முன்பே (805) *பண்டேய் பரமன் படைத்த* (SII,xii,40; EI,xi,15.)

பண்டை (இ) பழைய (956) *பண்டை நந்திபுர மற்றாதியே* (SII,xiii,344.)

பண்ணாதவன் (பெ) செய்யாதவன் (1000) *பெறார் இவ்வமஞ்சுது பண்ணாதவன் பெருமானடிகள்க்கு* (TAS,ii,pp.173-207.)

பண்ணி (வி) செய்து (753) *குற்றேத்தம் பண்ணியும் கொண்டுண்டார்* (SII,ii,73.)

பண்ணிக்கக்கூலி (பெ) ஒரு வரி (1168) *நிலம் வெள்ளை வாரி பண்ணிக்கக் கூலி தறியிறை தட்டார் பாட்டம் அந்தராயம் பாட்டமுட்பட* (SII,vi,456.)

பண்ணிச்சது (வி) ஏற்படுத்தியது (1000) *நாடுவாழ்க்கை யிளதுருத்திக் கோதை கேரளன் பண்ணிச்சது* (TAS,iii,pp.174-175.)

பண்ணியாரம் (பெ) ஒரு தின்பண்டம் (1223) *திருப் பண்ணியாரத்துக்கு அப்ப அமுதுக்கு* (JOR,xx,Appx, p.19-20.)

பண்ணிவித்தல் (பெ) செய்வித்தல் (1096) *பண்டாரத்தில் புகாமல் விக்நம் பண்ணுதல் பண்ணிவித்தல் செய்தா நுண்டாகில்* (SII,viii,75.)

பண்ணின (வி) செய்த (1278) *பிடிபாடு பண்ணின பரிசாவது* (AVNM,6,p.33)

பண்ணினமை (வி) செய்தமை (952) *நீர் பாயப்பண்ணினமையில்* (TAS,iv,p.118.)

பண்ணுச்சு (வி) பண்ணுவித்து (952) *அமரபுசங்கப் பெருமாளுக்கு திருமுடியும் திருவாபரணமும் பண்ணுச்சு* (TAS,iv,p.118.)

பண்ணுதல் (பெ) செய்தல் (1198) *அதிகமானாருடன் உறவு பண்ணுதல் பகைகொள்ளுதல்* (SII,vii,127.)

பண்ணுப்பால் எடுப்பார் (பெ) (இலங்கையில்) ஓர் அரசு அலுவலர் (?) (753) *கணிகாரத்திகளும் பண்ணுப்பாலெடுப்பாரும்* (SII,ii,73.)

பண்ணும் (வி) செய்யும் (1000) *அவனது பண்ணுமளவு நாளும் அவன் படகாரம் கொண்டு* (TAS,ii,pp.173-207.)

பண்ணை (பெ) நீர் நிலை (950) *துலாசெய்க் கிறைக்கும் தேயாற பண்ணையினின்றும் தெற்கு நோக்கி* (TASSI,1962-65,p.32-52.)

பண்ணை செய்வான் (பெ) குத்தகைதாரன் (?) (1439) *சேரவன்மாதேவியில் பதிநேழாம் பண்ணை செய்வான் வீட்டில் நாம் வீடாயிருக்க* (TAS,viii,p.3-5.)

பண்ணைப் பேறு (பெ) ஒரு வரி (1547) *கணக்கிலக்கை பாட்டம் பண்ணைப்பேறு மற்றும் நாங் கொள்ளுங் கோமுறைபாடு* (TAS,ix,p.26-27.)

பண்பாட (வி) இசைபாட (1179) *சோலை வயல் தொறுஞ் சுரும்பினங்கள் பண்பாட* (EC,x,Ct.83.)

பணக் கொத்து (பெ) ஒரு வரி (1289) *சித்திரைக்கார் வெட்டி னிலை ஆள் காத்திகைப் பொன் வரி பணக் கொத்துப் பாடி காவல் கணக்கப் பேறு காணியாளப் பேறு* (SII,viii,751.)

பணம் (பெ) நாணயம் (1421) *பச்சை பணமாக இறுக்கும் வாளால் வழி திறந்தாந் குளிகை பணம் நூற்று அன்பதும் கழித்து* (IPS,699.)

பணம்பு (பெ) பாலம்; நீர்த்தூம்பு (?) (832) *கற்பிளந்த குளவாயில் அமைப்பித்த இற்பணம்பும்* (SII,xiv,44.)

பண முதல் (பெ) பணமாகச் செலுத்தும் வரிகள் (1429) *பணமுதலுக்கு கரணிக்கர் ஓலைச் சம்மாதம் பட்ட வட்டம் கண்கூலி காணிக்கை* (ARE,1914,59)

பணயம் (பெ) ஈடு (1396) *போஜநம் பண்ணிவிக்கக் குடுத்த பூமி பணயமாக வைத்துத் தநிசு வாங்கிந மாடை* (EI,xxxii,29.)

பண வட்டம் (பெ) ஒரு வரி (1312) *நிலத்துக்கு குடிமை கூட்டுவது தவிரவும் மாப்பணம் மனைப் பணம் பணவட்டம் வேலிப் பணம் நாட்டு சம்மாதம் மற்றும்* (SII,viii,251.)

பண வற்கம் (பெ) (=பணமுதல்) (1344) *பொன்வரி சூலவரி உள்ளிட்ட பணவற்கமும் அரிசிகாணமும்* (ARE,1905,425)

பண வாசி (பெ) ஒரு வரி (1340) *ஈழெம்புஞ்சை யணிஇடுவான் வரி நத்தவரி பணவாசி கண்கூலி மற்றும்* (SII,iv,415.)

பண இடை (பெ) ஒரு தங்க எடை (1447) *பெரிய பட்டம் ஒன்று எட்டரை மாறி பொன் தூக்கம் ஒன்றுக்கு பண இடை பத்தாக தூக்கம் இருபது* (SII,ii,699.)

பணி (பெ) வேலை (1000) *ஒரணைக் கைத்தாளமு மிரண்டு தாளமும் இரண்டு காகாளமும் ஒன்பது பணி யமைச்சான்* (TAS,ii,pp.173-207.)

பணி (பெ) (சேர நாட்டில்) படைவீரர் (1021) *மூத்த கூற்றிக் கமைஞ்ச நிழலும் பணியுந் நாடுமிட வகையு பிரகிதியும்* (EI,xvi,27.)

பணி (பெ) ஆணை; ஏவற் கட்டளை (700) *அவன் பணியால்* (ARE,1959-60.358.); (914) *இது குறி உள்ளிருந்து பணி கேட்டு எழுதினேன்* (SII,xix,179.)

பணி (வி) தொண்டு (937) *திருக்கோயில்லில் பணி செய கடவ* (SII,xvii,639.)

பணிக்க (வி) கட்டளையிட (768) *சவை பணிக்க எழுதினேன்* (SII,xiv,27.)

பணிக்காறர் (பெ) தொழிலாளர் (1200) *கெருப்பு போதகமும் கருங்கல் பணிக்காறருட வளிபாடு சுவாமிக்கு* (SII,v,771.)

பணிக்குரியார் (பெ) வேலை செய்வதற்கு உரியவர் (1000) *அட்டில் பள்ளியார் பணிக்குரியார் ஆறாடுநாள் ரோத்தர் கலநெல் பெறுவது* (EI,xxxiii,33.)

பணிக் கொத்து (பெ) ஒரு வரி (1262) *வெட்டி நிலையாள் பணிக் கொத்துப் பாடிகாவல் மரவடை மாவடை குளவடை* (SII,viii,753.)

பணி கடவியர் (பெ) வேலைப் பொறுப்புடையவர் (934) *பணிகடவியர் ஒரி பணி முட்டில்* (TAS,viii,p.43-45. EI,xxviii,37.)

பணிச்சு (வி) ஆணையிட்டு (929) *நிற்பதாகப் பணிச்சுக் குடுத்தோ* (SII,xiv,74.)

பணிசெ மகன் (பெ) கோயில் பூசை செய்பவன் (985) *இரண்டு தளி தேவக்கும் ஆராதிக்கடவ பணிசெ மகன் வைகானஸரும்* (SII,vi,376.)

பணி செய் காணி (பெ) நிலக்கிழாருக்குக் கீழ் ஏவல்வேலை செய்வோருக்குக் கொடுக்கப்பட்ட நில உரிமை (1002) *காணிகளில் பணி செய் மக்கள் பணி செய் காணி யொழிய நின்றார் காணி* (SII,v,1409.)

பணி செய்து (வி) உழைத்து (1008) *திருநந்த வாநத்துக்குப் பணி செய்து* (SII,xvii,234.)

பணிசெய் மக்கள் (பெ) ஊழியர்கள் (869) *அடிகள் மாரும் பணிசெய் மக்களும் உண்பதாக வைத்தேன்* (SII,vii,525.)

பணி செய்வது (வி) வேலை செய்வது (1000) *மன்றாடிகளும் குடியில் மூத்தான் பணி செய்வது இச்சேரி குடிகள்* (EI,xxxiii,33.)

பணி செய்விச்சு (வி) பழுது பார்த்து (1218) *விமானமும் அவிக்கிணறும் விளக்கும் மாடமும் பணி செய்விச்சு திருக் கலசம் முடிச்சருளிய* (TAS,i,p.289-91.)

பணிசை மக்கள் (பெ) ஏவல் பணியாட்கள் (1050) *திசைசெட்டிகளும் நம்மக்கள் பதினெண்பூமி பணிசைமக்களும்* (AVNM,2,p.6-8)

பணித்த (வி) கட்டளையிட்ட (955) *பணித்த ஸபை உடனிருந்தாரையும்* (SII,xiii,110.)

பணித்தருள (வி) கேட்க (771) *என்னேய் நுங்குறை என்று முன்னாகப் பணித்தருள* (EI,xvii,16.)

பணித்தான் (வி) கட்டளையிட்டவன் (956) *இன்னிலம் இறை காட்டப் பணித்தானையும்* (SII,iv,549.)

பணித்து (வி) கட்டளையிட்டு (759) *மக்களே அர்ச்சனை செய்துண்ணப் பணித்துக் குடுத்தேன்* (SII,iv,827.)

பணித்தேம் (வி) கட்டளையிட்டோம் (753) *இவ்வுள்ளிட்ட ஸர்வ்வ பரிசாரம் உள்ளாகப் பணித்தேம்* (SII,ii,73.); (746) *சளுக்கிஅரசர் ஆணத்தியாகப் பணித்தோம்* (NI,G.54; TASSI,1959-60, p.18-19.)

பணிந்த (வி) ஏவல்பணி செய்த (1050) *குடுத்த பரிசாவது பணிந்த வீரபாவாடை மேநடை* (AVNM,2,p.6-8)

பணிந்து (வி) வணங்கி (771) *பசுபதியது பந்மபாதமும் பணிந்தேத்தி* (EI,xvii,16.)

பணிந் தொழுகும் (வி) வணங்கி நடக்கும் (1051) *தன் கழல் பணிந் தொழுகும் அரைசர்களோடு* (SII,vii,1046.)

பணிப்ப (வி) ஆணையிட (875) *ஸபையோம் ஸபையிருந்து பணிப்ப* (SII,vi,347.)

பணிப்பணியால் பணித்து சபையார் ஒவ்வொரு வராகப் பணித்து (919) *ஸபையாரும் பணிப்பணியால் பணித்துக் குடுக்க* (SII,viii,641.); (1005) *மடப்புறம்மாகப் பணிப்பணி எடுத்தி பணித்து ஸபை ஸ்ரீமுகம் இட்டு* (SII,vii,34.)

பணிப்பதாக (வி) அனுமதிப்பதாக (804) *ஸபரிசிஷ்டம் பரீக்ஷை தந்தார்க்கே ச்ராவணை பணிப்பதாகவும்* (SII,xiv,37.)

பணிப்பார் (பெ) உத்தரவிடுவார் (817) *மீளப் பணிப்பாருளராகில்* (SII,vi,344; EI,xxiv,7a.)

பணிப்பிது (பெ) கட்டளையிடுவது (877) *இது விற்பிது ஆதல் பணிப்பிது ஆதல் செய்தார்* (SII,vi,290.)

பணி மக்கள் (பெ) ஊழியர்கள் (844) *பணிமக்கள் முட்டிப்பார் மெய் வேற்று வகையாலுரியக் கொளி* (TAS,ii,p.13-14.)

பணிமகன் (பெ) சோழ அரசாங்கத்தில் ஒரு பதவி (1000) *கோயில் கேரளாந்தகன் எடுபித்த உடையார் பணிமகன் பெரும் புலியூருடையான்* (SII,xvii,509.)

பணி மாற (வி) தொண்டு செய்ய (1241) *திருநந்தவனஞ் செய்து திருப்பள்ளித்தாமம் பறித்துத் திருமாலை எடுத்துப் பணிமாறக் கடவதாகவும்* (SII,iv,515.)

பணி மாற (வி) தொழில் செய்ய (1465) *திருச் சின்னம் பணிமாறத் திங்கள் திவதத்துக்கு நகரத்தாற்கும் செழியதரையற்கும் ஒடுக்கும் குடுத்து* (IPS,802.)

பணி மாறுகை (பெ) தொண்டு செய்கை (1400) *திருமுன் பணிமாறுகையில் வாற்க்கும் நெயிக்கு* (SII,xvii,728.)

பணி மானிடம் (பெ) பணியாட்கள் (988) *இத் தண்டமே படுவிது பணி மானிடம் ஒற்றி....* (TAS,v,p.178-80; TAS,ii,p.40.)

பணி முறை (பெ) பணியாளர் (1506) *தேவையாட்கள் அப்பம் மூன்று சிங்க முறையான் அப்பம் ஒன்று பணிமுறை அப்பம் ஒன்று கைகோளர் அப்பம் அஞ்சும்* (TDI,iii,7.)

பணி மூப்பிமார் (பெ) தேவரடியார் (1218) *முதல் பிரகாரத்து மேலை திரு மாளிகையில் பணிமூப்பிமாரில் ராஜராஜேச்வரத்துப் பதியிலாரில்* (SII,v,707.)

பணியறுத்து (வி) தொழில் செய்து (1524) *அக்ரஹாரமாகவுங் கட்டளையிட்டு இவ்வூர் நத்தம் பணியறுத்துத் திருப்பதியாக்கி* (SII,xvii,684.)

பணியறுத்து (வி) சீர்திருத்தி (1524) *இவ்வூர் நத்தம் பணியறுத்துத் திருப்பதியாக்கித் திருனாமத்துக்காணியாகக் கட்டளையிட்ட* (SII,xvii,684.)

பணியாண்டு (வி) ஏவிப் பணி செய்வித்து; ஏவல் கொண்டு (815) *பூதகணம் பணியாண்டும்* (SII,iii,206.)

பணியுடைய நாயன் (பெ) படை வீரன் (1021) *மூத்த கூற்றில் எழுநூற்றுவரும் பணியுடைய நாயனும் ஊரு ஊரிட வகை வெள்ளாளரும்* (EI,xvi,27.)

பணியுடையவகள் (பெ) படை வீரர்கள் (1000) *இராம வளநாடு வாண்ண பாலியத்து கண்ணங் கண்டனும் பணியுடையவகளும் அறுநூற்றுவருந் நிழலோரும்* (SII,v,784.)

பணியுடையவர் (பெ) அலுவலர்கள் (1000) *பொதுவாண்ம்மார் இபாரிசு கொடிக்களத்து யக்கங் கோவிந்நநும் பணியுடையவர் இருவரும் அறுநூற்றுவருங் கூடி அட்டிக் கொடுத்தார்* (TAS,ii,pp.173-207.)

பணியுற்று (வி) ஏவல் செய்து (1050) *அழக்கியபாண்திய பெருநிரவிக்கு பணியுற்று நிந்ற பணிசெமக்கள்ளே* (AVNM,2,p.6-8)

பணி வழி (பெ) ஊழியம் (1100) *ஆள் கோயில்க்கு ஐம்பதின் கழைஞ்சு தேவர்க்கு ஐம்பதின் கழஞ்சு பணி வழி விருத்தியும்* (SII,vii,171.)

பணை (பெ) வயல் (800) *தண்பணைதோறும்* (EI,xiii,10.)

பணை (பெ) ஒரு பறை (921) *படைப்பிரிசாரந் தந்து போகத் தன் பணைமுழக்கி உம்* (SII,iii,206a.)

பணைக்கை மா (பெ) யானை (1136) *பாவும் பழனப்பாயும் பணைக்கை மாவும் அல்லது வன்றலைப்படுதல்* (SII,vii,1038.)

பணையம் (பெ) ஈடு; ஜாமீன் (975) *இவ்வூரும் பணையமாய்* (TAS,ii,p.38-40.)

பத்தர் (பெ) அடியார்கள் (1012) *விருப்பொலி பத்தர்தம் பாடல் பயின்றது* (SII,vii,863.)

பத்தாயம் (பெ) தானியக் களஞ்சியம் (1092) *இதினுக் கமைஞ்ச பூமியும் புரையிடமும் பத்தாயமும் விடுவ்விதாக* (TAS,v,p.172-76.)

பத்தி (பெ) கட்டிட உறுப்பு (1114) *திருவெதிரம்பலத்து திருக்கல் சரத்தில் திருமுன் பத்திக்கு மேலைப் பத்தியிலே வைத்து* (EI,v,13 (c).)

பத்திரம் (பெ) வெற்றிலை (985) *அகலில் பத்திரம் சந்தனம் ஸ்ரீ கண்டமும்* (SII,xiii,35.)

பத்தி வரி (பெ) ஒரு வரி (1329) *வேண்டுகோள் வரி மலை அமஞ்சியும் அமஞ்சி தச்சத் துலாம் வெட்டி புயல் இருப்புக் கட்டி பத்திவரி இவை நாலு வரியும்* (SII,iv,287.)

பத்து (பெ) (=பற்று); உரிமை நிலம் (1061) *வட பாற் கெல்லை ஸபை,யோம் சிக்கருடையாந் பத்துக்கு தெற்கும்* (SII,xvii,579.)

பத்து (பெ) மூலம் (1202) *திருவடி நிலைக்கு மேகடுக்குகைய்க்கு பத்துக்குப் போத செம்பொன் அறுகழஞ்சு* (SII,viii,151.)

பத்து (பெ) ஓர் எண் (10) (701) *கோவிசைய நரசிங்க பருமற்கு யாண்டு பத்தாவது* (CHHS,1971/73.)

பத்துக்கு இரண்டு காணிக்கை (பெ) ஒரு வரி (1494) *அவதர வத்தனை ...ணிக்கை தினசரி காணிக்கை பத்துக்கு இரண்டு காணிக்கை* (ARE,1913,074)

பத்தூர்ச் சாற்று (பெ) ஒரு வரி (753) *பத்தூர்ச் சாற்றும் உழையவயப் பள்ளி வத்துவும்* (SII,ii,73.)

பத்தெட்டுக் குத்தல் (பெ) பன்முறை குற்றித் தீட்டிய அரிசி (871) *கலவரை அரிசி பத்தெட்டுக்குத்தல்* (SII,xii,61.)

பத்தெண் குத்தல் (பெ) நன்றாகக் குத்தித் தீட்டிய அரிசி (1012) *பத்தெண் குத்தல் பழ நெல்லரிசி* (SII,vii,863.)

பத்ம பீட$_2$ம் (பெ) தாமரை வடிவாகச் செய்யப்பட்ட பீடம் (1014) *சம சதுரத்து பத்ம பீட$_2$ம் ஒன்று* (SII,ii,30.)

பத்மாஸநம் (பெ) தாமரை போன்ற இருக்கை (1014) *அரைக்கால் முழச்சுற்றில் பத்மாஸநம் ஒன்று* (SII,ii,53.)

பத்மாஸந ஸ்ரீப$_3$லித்தாலம் (பெ) தாமரை போன்ற அடிப்பாகத்தை யுடைய படையல் தட்டு (1014) *நாளதினாலேய் குடுத்த பொன்னின் பத்மாஸந ஸ்ரீ ப$_3$லித்தாலம் ஒன்று* (SII,ii,1.)

பதக்கம் (பெ) ஒரு கழுத்தணி (1014) *பதக்கம் ஒன்றிற் கட்டின குருவிந்தம் ஒன்றும் உட்பட* (SII,ii,93.)

பதக்க மாலை (பெ) கழுத்தணி வகை (1232) *திருவண்ணாமலை உடைய நாயனார் சாத்தியருள இட்ட பதக்க மாலை 1னால்* (SII,viii,103.)

பதக்கு (பெ) இரண்டு மரக்கால் கொண்ட முகத்தலளவு (815) *பதக்கு நெல்* (SII,xiv,26.)

பதம் (பெ) பேர் (1068) *பின்னை சார்த்தின வுறையுஞ் சளுக்கி பதம் பெற்ற பூத்தின மார்வொடும்* (SII,iii,30.)

பதர் (பெ) உள்ளீடற்ற நெல் (963) *குட்டை நெல்லும் பங்குநி சித்திரையுமகப்பட ஈரமும் பதரும் நீக்கி* (SII,iii,186.)

பதவாரம் (பெ) வருவாயில் பத்தில் ஒரு பகுதி (844) *இந்நெற் பதவாரம் சாந்திப்புறம் ஒன்பது கூறும்* (TAS,ii,p.13-14.)

பதவி (பெ) நிலை (1270) *சந்திர சூரியர் தம்பதவி மாற்றிலு மாற்றா சோழர்* (EC,x,Kl.171.)

பதனாரம் (பெ) (=பதவாரம்) (944) *தேவருடைய பதனாரம் அழிப்பிதாக* (SII,v,783.)

பதஂம் (பெ) பதவி (815) *அநுஜந் உத்தரமந்த்ர பதஂம் எய்தின* (SII,xiv,2; EI,viii,33 (ii).)

பதாகை (பெ) விருதுக் கொடி (1012) *வளங்கொள் மதிற் பதாகைத் தேற்றுங்கொழு நிழல் சிவபுரத்தாற்கு* (SII,vii,863.)

பதார்த்தம் (பெ) கறி முதலிய உணவுப் பொருள் (1076) *பதார்த்தம் பண்ணுவார் 25வர்க்கு காசு இரண்டும்* (SII,iv,813.)

பதி (பெ) ஊர் (771) *வேள்விகுடி என்றப் பதியை* (EI,xvii,16.)

பதி (பெ) சேர நாட்டில் ஊர்த் தலைவர்கள் (849) *அஞ்சுவண்ணமும் புன்னைத்தலைப் பதியும் முள் வைத்து* (TAS,ii,p.67-68.)

பதி (பெ) தலைமைப் பூசாரி (967) *எம்பெருமாள் பழவூர் இரண்டு தளிப் பதியும் பாத மூலமும்* (SII,xiii,215.)

பதிஞ்ஞ (வி) பதிக்கப்பெற்ற (961) *குறை பதிஞ்ஞ கல்பிச்சு வைய்த்தளியாழ்வானும் அமைஞ்ஞ வண்ணம் செலுத்தாதே* (TAS,viii,p.43-44.)

பதித்தான் (பெ) எழுத்துப் பொறித்தான் (1000) *சிராமலை மேற் கற் பதித்தான் சொன்ன கவி* (SII,iv,167.)

பதிந்த குடி (பெ) ஊரில் குடியேற்றப்பட்டவர்கள் (1500) *இதுக்கு பதிந்த குடி சறுவமாநியமாக அனுபவித்துக் கொள்ளவும்* (SII,viii,439.)

பதிந்து கொள்ள (வி) எழுதிக் கொள்ள (1515) *இந்த ஊரில் ஒன்று பாதி நிலம் நயினாற்குப் பாட்டம் பதிந்து கொள்ள வென்றும்* (SII,viii,395.)

பதிநாலடி விலக்கடிக் கோல் (பெ) ஒரு நில அளவு கோல் (1200) *தென் காலில் திருத்தி பதிநாலடி விலக்கடிக் கோலால் இறையிலியாக விட்டதடி நாலிநால் குழி 1500* (SII,vii,1021.)

பதிநெட்டு நாட்டார் (பெ) பல இடத்துமிருந்து வந்தவர் (961) *மதிலகத்திருந்த பதிநெட்டு நாட்டாரைக் கூட்டி அரி உலவ் வைய்ப்பிச்சு* (TAS,viii,p.43-44.)

பதிநெட்டு நாட்டு (வி) பல இடத்தைச் சேர்ந்த (952) *இதேவர் கர்ம்மிகளோம் பதிநெட்டு நாட்டு பந்மாஹேச்வர ரக்ஷை* (SII,xiii,2.)

பதிநெண்பூமி வீரர் (பெ) அஞ்ஞூற்றுவர் வாணிகக்கூட்டத்தைச் சேர்ந்த காவல் வீரர் (1150) *கண்டியமுத்தர் உள்ளிட்ட பதிநெண்பூமி (வி)வீரரோம்* (AVNM,9,p.33-34)

பதினெண்விஷயம் (பெ) (= அஞ்ஞூற்றுவர்) (1300) *பல நகரங்களும் நான்குதிசைப் பதினெண்விஷயத்தோமும் பதினெண்விஷயம் பெருநிரவியாரோமும்* (AVNM,6,p.36-40)

பதினெண்விஷயம் பெருநிரவியார் (பெ) அஞ்ஞூற்றுவரின் பெருங்கூட்டம் (1300) *பல நகரங்களும் நான்குதிசைப் பதினெண்விஷயத்தோமும் பதினெண் விஷயம் பெருநிரவியாரோமும்* (AVNM,6,p.36-40)

பதிப் பதவாரம் (பெ) ஊர் மன்றத்துக்குச் சேர வேண்டிய பத்தில் ஒரு பங்கு வருவாய் (885) *கோப்பதவாரங் கோயில் கொண்டு பதிப்பதவாரம் அஞ்சுவண்ணமும் மணிக்கிராமமுங் கொள்வதாக* (TAS,ii,p.80-82.)

பதிபாத மூலத்தார் (பெ) சிவன் கோயில் பூசை செய்வோர் (800) *பதிபாத மூலத்தாரும் பந்மாஹேச்வரரும் ரக்ஷை* (SII,v,618.)

பதியம் (பெ) தேவாரப் பதிகம்; சிவன் மீது பாடப்பட்ட பத்துப் பத்துச் செய்யுட்கள் கொண்ட பாமாலை (800) *திருப்பதியம் பாடுவாருள்ளிட்ட* (SII,iii,43.)

பதியார் (பெ) (=பதியிலார்) (1015) *பதியார் முப்பத்திருவர்க்கும் பஞ்சாசாரியர் உள்ளிட்ட காந்தர்வர்க்கும்* (TAMIZ,xviii,pp.151-55.)

பதியார் (பெ) சிவன் கோயில் பூசாரிகளுள் ஒரு வகை (929) *அகநாழிகையாரும் பதியாரும் பஞ்சாசார்ய்யரும்* (SII,xiv,74.)

பதியிலார் (பெ) தேவதாசிப் பெண்களில் ஒரு வகையினர் (1009) *திருக்களுக்குப் பங்கு அரையும் பதியிலார் ஒருத்திக்குப் பங்கு ஒன்றரையாக* (CHEN,xxi,p.425-428.)

பதியிலாள் (பெ) தேவதாசிப் பெண் (1015) *பதியிலாள் ஒருத்திக்கு நிலன் முக்காலே மூன்று மாவாகப் பதியிலாள் முப்பத்திருவர்க்கு நிலன்* (TAMIZ,xviii,p.151-55.)

பதின் காடி (பெ) பத்துக் காடி (731) *இந்நெல் முதலால் பதின் காடியால்* (SII,viii,331.)

பதின்மர் (பெ) பத்துப்பேர் (771) *படாரர் உள்ளிட்டுப் பதின்மர்* (SII,v,405.)

பதின் அஞ்காடி (பெ) பதினைந்து காடி (731) *பதின் அஞ்காடி நெல்லும் பொலி ஊட்டுவதாகவும்* (SII,viii,331.)

பதினாழிக் கால் (பெ) பத்து நாழி கொண்ட முகத்தலளவை (866) *பதினாழிக்காலால் எண்கல வித்துப்பாடும்* (TAS,i,p.1-14.)

பதினாற் காடி (பெ) பதினான்கு காடி (731) *நெற் பதினாற் காடியும்* (SII,viii,331.)

பதினான்கு (பெ) ஓர் எண் (14) (564) *சிங்க விண்ணபருமற்குப் பதினான்காவது* (CHHS,1971/86.)

பதின் எட்டு (பெ) ஓர் எண் (18) (598) *மயீந்திரபருமற்கு பதினெட்டாவது* (CHHS,1971/77.)

பதினெட்டு நாட்டு (பெ) எல்லா இடத்திலுமுள்ள (952) *இதேவர் கா்ம்மிகளோம் பதினெட்டு நாட்டு பம்மாஹேச்வர....* (SII,xiii,2.)

பதினெட்டு பட்டணம் (பெ) அஞ்ஞூற்றுவர் வாணிகக்குழுவினர் செயல்படும் பல பட்டணங்கள் (1300) *தேவர்பதி தட்டோங்கு மாடவீதிப் பதிநெட்டு பட்டணமும்* (AVNM,6,p.36-40)

பதினெண் சாண் கோல் (பெ) நிலம் அளக்கும் ஒரு கோல் (1003) *நீர் நிலம் பதினெண் சாண் கோலால் ஆயிரம் குழி கொண்டது பட்டியாக* (SII,xvii,243.)

பதினேழு (பெ) ஓர் எண் (17) (686) *ஈச்சுவர பருமற்கி யாண்டு பதினேழ்ழாவதன்* (EI,vii,4 (ii).)

பதினைந்து (பெ) ஓர் எண் (15) (746) *நந்திப் போத்தரசர்க்குப் பதினைந்தாவது* (NI,G.54; TASSI,1959-60, p.18-19.)

பதினொரு நிலைக் கோபுரம் (பெ) பதினொரு மாடி கோபுரம் (1517) *திருமலைதேவி அம்மன் சமுத்திரம் பதினொரு நிலைக் கோபுரம் ஏழாந்திருநாள்* (SII,viii,165.)

பதினொன்று (பெ) ஓர் எண் (591) *யாண்டு பதினொன்றாவது* (CHHS,1971/96.)

பதுமம் (பெ) தாமரை (1142) *பூமந்நு பதுமம் பூத்த ஏழுலகும் தாமுந் செய் தவத்தால் பருதி வழித் தோன்றி* (SII,v,705.)

பதுவாய்க்காறர் (பெ) பண்டகசாலைக் காவலர்(?) (1547) *பதுவாய்க்காறர் வருஷம் 1க்கு ரேகைப் பொன் 10 கொத்த பாளையம் கைகோளர் வருஷம் 1க்கு ரேகைப் பொன் 6* (TDI,v,89.)

பதுவாரம் (பெ) நில வருவாயில் பத்தில் ஒரு பங்கு (967) *தேவர் பதுவாரம் ஏழிலொன்று* (SII,xiv,95; EI,xxv,6.)

பந்த கூலி (பெ) தீவட்டி பிடிக்கக் கூலி (1528) *திருவீதிப் பந்தத்துக்கு நெல்லெண்ணை 60 நாழி பந்த கூலிக்கு பணம் 4* (TDI,iii,175.)

பந்தடிந்து (வி) பந்து விளையாடி (1044) *உப்பளர் கொய்மலர் பசுந்தலை தராதலையில் பந்தடிந்து முன் கொண்டு* (SII,v,465.)

பந்தம் (பெ) தீவட்டி (1474) *திருமுன் பந்தத்துக்கு எண்ணை சாத்துப்படி இலை அமுது* (SII,viii,444.)

பந்தல் (பெ) தட்டையான கூரை (1252) *விக்கிரம சோழன் பெரிய திரு மண்டபத்து புகழாபரணன் திருமுத்துப் பந்தல்க் கீழ்* (SII,iv,511.)

பந்தல் (பெ) தண்ணீர்ப் பந்தல் (809) *இப் பந்தலுக்கு அடுப்பித்த கிணறு* (SII,xiv,40.)

பந்தஸாரம் (பெ) வயிர வகை (1015) *மட்டதாரைச் சப்படி ஐய்ம்பத்து மூன்றும் பந்த ஸாரம் நாலும் சப்படி ஐஞ்சும்* (SII,ii,7.)

பந்தீறடி (பெ) காலம் அளக்கும் பன்னிரண்டடி நிழல் (861) *உச்ச அக.து பந்தீறடி துடங்கி* (TAS,ii,p.85-86.)

பந்துக்கள் (பெ) உறவினர்கள் (919) *பெரு மக்குழக்கு அணிய பந்துக்கள் அல்லாதாரை* (ARASI,1904-05,p.131.)

பந்நாள் (பெ) பல நாட்கள் (1012) *சிவபுரத் தாற்குப் பந்நாணிலை பெற முந்நாளூரவோன் செய்த* (SII,vii,863.)

பந்நாளீட்டம் (பெ) பலகாலம் சேர்த்த பொருள் (1090) *தந்நாடுகந்து தாநும் தாஹையும் பந்நாளீட்டமும் பல பல முதும் பயந்தெதிர் மாறிய* (SII,iii,71.)

பந்நிருவர் (பெ) பன்னிரண்டு பேர் (849) *நாலு குடி ஈழவரும் மக்குடிக்கேறும் மீழக்கையர் எண்மரும் மிவகள் பந்நிருவரும் ஒரு வண்ணாரக்குடியும்* (TAS,ii,p.67-68.)

பந்நீரடி (பெ) பன்னிரண்டு அடி நிழல் கொண்ட முற்பகற் பொழுது (1014) *இருநாழிச் செய்து நெய்யுங்கொண்டு அகத்து பந்நீரடியில் முன்வந்நு திருவமிர்து* (TAS,ii,p.46-48.)

பந்நீரடிக் கோல் (பெ) ஒரு நில அளவு கோல் (1195) *2ம் கூறும் 3ம் கூறும் உட்படப் பந்நீரடிக் கோலால் குழி 22 மா* (SII,vii,942.)

பந்மபாதம் (பெ) தாமரை போன்ற அடி (771) *பந்மபாதம் பணிந்தேத்தி* (EI,xvii,16.)

பந்மாஹேச்வரர் (பெ) சிவனடியார் கூட்டம் (731) *ஸபையும் பந்மாஹேச்வரரும்* (SII,viii,331.)

பந்மை (பெ) ஒரு வரி (1066) *திங்கள் [மேரா]மும் இவ்வூர்கள் ளிடக்கடவ பந்மையாலும் பண்ட வெட்டியாலும்* (SII,v,976.)

பயதிமரம் (பெ) காய்க்கும் மரம் (894) *கரைமேல் நின்ற பயதிமரத்தில்* (SII,xiii,302.)

பயந்த (பெ) பெற்ற (1012) *ராஜ ஸர்வஞ்ஞனெனும் புலியைப் பயந்த பொன்மான்* (SII,vii,863.)

பயந்த (பெ) பெற்றெடுத்த (905) *சீர்மறையோன் மகள் பயந்த திருமருசீர்ச் சிரீமாதவந்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பயந்து (வி) கொடுத்து (815) *அவனிமண்டலமுட னோம்பி அருள் பயந்து* (SII,iii,206b.)

பயப்பட்டமை (பெ) அஞ்சினமை (1168) *னாட்டுக் களிலுமுள்ள ஜநங்களெல்லாம் பயப்பட்டமையைக் கேட்டு* (SII,vi,456.)

பயம் (பெ) அச்சம் (1014) *செம் பொற்றிருத்தகு முடியும் பயங்கொடு பழிமிக முயங்கியில் முதுகிட் டொளித்த* (EC,ix,Cp.88.)

பயம் (பெ) இன்பம் (905) *பொங்கணை மீப்மிசைப் பயந்தரு தும்புரு நாரதர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பயமரம் (பெ) காய்த்துப் பயன் தரும் மரம் (877) *பூமரமுள்ளிட்ட பயமரமும்* (SII,vii,288.)

பயரேறாது (வி) பயிர் செய்யாது (1115) *அறுபதெழுவது ஸம்வத்ஸரத்தின் உத்தேசம் பயரேறாது பாழ் கிடந்த* (ALB,vii,p.263-65.)

பயற்றம் பாக்கம் (பெ) பயற்று மூட்டை (1300) *பயற்றம் பாக்கம் பொதி ஒன்றுக்குக் காசு ஒன்றும்* (SII,viii,442.)

பயற்றுப் பருப்பு (பெ) பச்சைப் பயிறு (878) *பயற்றுப் பருப்பிரு நாழி* (SII,xiv,13.)

பயற்றுப் போனகம் (பெ) பாசிப் பயற்று உணவு (929) *பயற்றுப் போனகத்துக்கு பதக்காறுகுத்தல்* (SII,viii,627.)

பயறு (பெ) பாசிப் பயறு (861) *துடவினால் ஒரு துடவு நெயும் பயறும்* (TAS,ii,p.85-86.)

பயன் (பெ) உறுதிப் பொருள் (833) *மூன்றென்னும் பயன் மற்றுண் முதலாகிய தர்ம்மத்தை* (SII,xiv,44.)

பயன் படு மரம் (பெ) காய்க்கும் மரம் (1049) *சுற்று மடைத்து மற்றும் பயன்படு மரமும் வைத்துக் கொள்வராக* (TAS,i,p.168-69.)

பயன் மரம் (பெ) காய்க்கும் மரம் (891) *பல்லுருவிற் பயன் மரத்தொடும்* (SII,viii,634.)

பயிட்டம் (பெ) முத்து வகை (1014) *முத்து வட்டமும் ... நிம்போளமும் பயிட்டமும்* (SII,ii,3.)

பயிர்க் கடமை (பெ) ஒரு வரி (1262) *காசு கடமை கழுகு கடமை பயிர்க் கடமை புன்செய்க் கடமை* (SII,viii,753.)

பயிர் சென்றறியாத நிலம் (பெ) பயிர் விளையாத நிலம் (1013) *இளாள் வரையிலுஞ் செல்லப் பயிர் சென்றறியாத நிலத்தில்* (IPS,92.)

பயிர்த் தட்டு (பெ) பயிர் முளைக்காது தடைப்பட்டுப் போதல் (1300) *வெள்ளச் சாவி வறச்சாவி பயிர்த்தட்டுப் பயிர்பாத்துக் கொள்ளக்கடவார்கள் ஆகவும்* (IPS,533.)

பயிர் தீட்டி (வி) விளைந்த பயிரை மதிப்பிட்டு (1269) *பயிர் தீட்டிக் கடமை கொள்ளும் ஆண்டுக்கு தீட்டின பயிருக்கு* (SII,xvii,727.)

பயிர் நிலம் (பெ) விளைச்சல் நிலம் (1090) *பயிர் நிலமாக திருத்திவிட* (SII,viii,138.)

பயிர் நிலைநின்ற (வி) பயிர் விளைந்த (1300) *புரவரியார் தந்த துகைப்படி பயிர் நிலைநின்ற முதல்தரத்துக்கு* (SII,viii,454.)

பயிரடைப்பு (பெ) ஒவ்வொரு நிலத்திலும் விளையும் பயிர்களின் கணக்கு (1232) *புறவூரில் உட்கிடையான நிலங்கள் உட்பட பொத்தகப் படிக்கு பயிரடைப் பின்படி கார் மறுவும் ஒரு பூவும்* (SII,iv,424.)

பயிரேற்ற (வி) பயிர் செய்ய (1040) *இருவேலியும் நாங்கள் பயிரேற்றி இறையிறுக்க மாட்டாமையில் எங்களால்ப் பயிரேற்றவும்* (SII,xiv,164.)

பயிரேற்றி (வி) பயிர் விளைத்து (997) *சிவப் ராஹ்மணரே பயிரேற்றி யிந்த போகஞ்ம் அடக்கி* (SII,vii,809.)

பயிரேற்றுவிச்சு (வி) பயிர் செய்வித்து (1040) *தாங்களே குடிகாத்துக் குடுத்துப் பயிரேற்றுவிச்சுக் கொள்ளப் பெறுவாராகவும்* (SII,xiv,164.)

பயிர் ஏறாது (வி) பயிர் செய்யாது (944) *ஆறேழாட்டைக் கால் பயிர் ஏறாதே பாழ் கிடக்க* (SII,viii,689.)

பயில் (வி) நடமாடும் (833) *களியன்னங் கிளைபயிற்புனல் வெளியன் குடி* (SII,xiv,44.)

பயில் (வி) பொருந்திய (905) *கொடை பயில் கற்பகசீலன் சாத்தம் படாரனென* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பயில் (வி) நடமாடும் (978) *மீன் பயில் பள்ளமும் தேன் பயில் பொதும்பும்* (SII,iii,151-151a.)

பயிற்செயல் குடி (பெ) உழுகுடி (1634) *பயிற்செயல்குடிக்கு ஏருக்குக் காற்பணமும் பயிரிலாத குடிக்கு அரைக்காற் பணமும்* (AVNM,7,p.75-81)

பயின்ற (வி) தேர்ந்த (1012) *பாடல் பயின்ற நாடக மகளிற்கும்* (SII,vii,863.)

பயின்றது (வி) பழக்கப்பட்டது (1012) *விருப்பொலி பத்தர் தம் பாடல் பயின்றது* (SII,vii,863.)

பயின்றோர் (பெ) பழகியவர் (905) *செயல் பல பயின்றோர் முன்னோன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பர்யந்தம் (வி) வரை; முடிய (1225) *இவர்களை தவிர்ந்து ஸம்வத்ஸர பர்யந்தமாக* (SII,iv,500.)

பர்யாயம் (பெ) வரையில் (1000) *நிசதி ஒரு குழியாக ஸம்ஸர பர்யாயம்* (SII,vi,353.)

பர்வ்வதம் (பெ) மலை (1014) *நால் விரல் அகலத்துப் பன்னிரு விரல் உசரத்து பர்வ்வதம் ஒன்று* (SII,ii,50.)

பரக் கூலி (பெ) சுமை கூலி (996) *பஞ்சவாரக் காலாலே பரக்கூலி பட்டுக் கொண்டுவந்து* (SII,v,1366.)

பரசமையம் (பெ) புறமதம் (1279) *நன்னெறி படிந்த நெஞ்சினர் பர சமையங்கடனை கடிந்த வாணையர்* (SII,viii,69.)

பரசு (பெ) கோடரி (905) *நற் பரசு நிம்மித் தவனளிர் சடை மேலலங்கல்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பரடத்தி (பெ) (=பரத$_3$த்தி) (852) *யஜ்ஞேச்$_0$வரத்து மஹாதே$_3$வர்க்குத் தேவதானமாய் ஸர்வ்வபரிஹாரமாக பரடத்தி சென்றது* (SII,ii,98.)

பரடை (பெ) கோயில் நிர்வாகக் குழு (951) *தான மும் பரடையும் மூராண்ம்மைக்கு மிடையீடுங் கெட்டு* (TAS,i,p.288-89; TAS,v,p.6-7.)

பரணி (பெ) பெரு வீரனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்ட பிரபந்த வகை (1044) *...டயிற் றமிழ்ப் பரணி கொண்டொன்னார்* (SII,v,465.)

பரணி (பெ) ஒரு நட்சத்திரம் (897) *சனிக்கிழமை பெற்ற பரணி நாந்று* (SII,xiii,323.)

பரதம் (பெ) கூத்து (1279) *அதிருங் கழற் பெருமாளுக் கினமாணிக்கம் இலங்கச் செய்த பரதம் வல்ல பெருமாளென்னுந் திருவாசிகையும்* (SII,viii,69.)

பரதல் (பெ) ஒரு பாத்திரம் (?) (1014) *குற்றுடை வாள் ஆசுங்கண்டமும் பொன் கட்டிற்று ஒன்று பரதல் ஒன்று வெள்ளி நூற்று ஐங்கழஞ்சு மண்டை ஒன்று* (SII,ii,46.)

பரத$_3$த்தி (பெ) பிறரால் கொடுக்கப்பட்ட நிலதானம் (550) *பள்ளிச் சந்தமாக பரத$_3$த்தி சென்றது* (TASSI,i,1958-59, pp.41-83; PLCP,p.26-32.)

பரதெற்றிப் பேறு (பெ) பிறரால் கொடை கொடுக்கும் உரிமை (1000) *....பம்படு கூறும் ஸ்வதெற்றியும் பரதெற்றிப் பேறும் இப்பங்கு சுட்டி வந்த நிலம்* (EI,xxx,19 (ii).)

பரதெ$_3$த்தி (பெ) (=பரத$_3$த்தி) (960) *கருணாகர மங்கலம் என்னும் பியரால் ஏகபோ$_4$க$_3$ ப்$_3$ரஹ்மதேயமாப் பரதெ$_3$த்தி சென்றது* (EI,xv,5.)

பரதேசி$_0$கள் (பெ) அயல் நாட்டு வாணிகர் (1200) *பலதுறைகளில் பரதேசிகள் வந்து நந்துறையிலே கூட வேணுமென்றும்* (UCR,xxi,pp.63-70.)

பரதே$_3$சி (பெ) வெளிஊரிலிருந்து வந்தவர் (1636) *ஸ்ரீ வைஷ்ணவர்கள் பரதே$_3$சி பக்ஷமாக பிறஸாதிக்கும் தோ$_3$சைப்படி 1* (TDI,vi,22.)

பரதே$_3$சி$_0$கள் (பெ) அயலூர்களிலிருந்து வருவோர் (1103) *பலபடி நிமந்தக் காறரையும் தேவரடியாரையும் பரதே$_3$சி$_0$களாய் இருக்கும் ப்$_3$ராஹ்மணரையும்* (EC,x,Sd.91.)

பரத்$_3$ரவ்யம் (பெ) அயலான் பொருள் (921) *பரத்$_3$ரவ்யம் அபஹரித்தானையும்* (ARASI,1904-05, p.131.)

பரந்த (வி) பரவிய (800) *செங்குருதி மண்பரந்தவூர்* (EI,xiii,10.)

பரந்தாமம் (பெ) திருமால் (1220) *பனித்துலவ நறுந்தாமப் பரந்தாமமென வந்து* (CHEN,xiv,p.362-64.)

பரந்து (வி) நாலா பக்கமும் பரவி (785) *பவ்வமெனப் பரந்தெழுந்து குடபாலுங் குணபாலும் மணுகவந்து* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

பரந்து (வி) அகன்று (785) *பாழி நீண்மதில் பரந்தோங்கி* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

பரந்து படுவிது (வி) பிரித்துக் கொடுப்பது (1000) *அகலபறால் நூற்றுக்கலம் ஆறோராண்டில் பரந்து படுவிது* (TAS,ii,pp.173-207.)

பர ந்ருபதி (பெ) பகை மன்னர் (877) *மஹாதேவந் பரந்ருபதி மகுட க$_4$டித சரணந்* (EI,vii,26a.)

பரப்ப (வி) பரவச் செய்ய (1134) *நீடுழிகள் நிலாப் பரப்ப* (SII,v,645.)

பரப்பி (வி) பரவச் செய்து (771) *நாற் படைஉம் பாற்படப் பரப்பி* (EI,xvii,16.)

பரப்பு (பெ) தரமிடாத, சாதாரண நிலம் (1086) *பரப்பு நிலம் பத்தொன்பது மாக்காணி அரைக்காணிக் கீழ் இரண்டு மா முக்காணியும்* (SII,vii,1032.)

பரப்புக் காசு (பெ) தரமிடாத நிலங்கள் மீதான ஒருவரி (1262) *புறவுடலுக்குத் தண்டும் பரப்புக்காசு தேவை குடிமை ஊர் வினியோகமும்* (SII,xii,216.)

பரம் (வி) பொறுப்பு (1130) *...களுக்கே பரமாவதாகவும் இப்படி வாடாக் கடமையா இறுத்து* (SII,xiv,221.)

பரம்பட்டு (வி) பொறுப்பேற்று (967) *இருபதின் கல நெல்லும் தூயவாக்கி கூலிப்பரம்பட்டு* (EI,vii,20h.)

பரம்பர் (பெ) ஒரு ஜாதி (1288) *வெள்ளாழர் அளவர் பள்ளிகள் பரம்பர் உட்பட உழுது இறுத்து* (SII,vii,759.)

பரம்பரை (பெ) தலைமுறை (950) *பாண்ட்$_3$ய பரமேச்$_0$வரராள் பரம்பரையிந் வந்து* (TASSI,1962-65,p.32-52 .)

பரம்பு (பெ) வயலைச் சமப்படுத்தும் பலகை (1008) *நீர்பூசி நெடும் பரம் பெறிந்து உடும் போடியாமை தவழ்ந்த தெவகைப் பட்டதும்* (EI,xxii,34.)

பரம்பு (பெ) உழுத கழனியைச் சமப்படுத்தும் பலகை (792) *நீர் பூசி நெடும் பரம்பெறிந்து* (EI,xviii,14.)

பரம்பு (பெ) கரை (925) *காலநேரிக் குளத்தினிடை பரம்பே போய்* (TAS,i,p.187-93.)

பரமண்டலங்களில் இறந்த வீரசே$_0$ஷை (பெ) போரில் இறந்த வீரர் பொருட்டு வாங்கும் வரி (1070) *இடங்கை வலங்கை மகழ்மையும் பரமண்டலங்களில் இறந்த வீரசே$_0$ஷைகளு தண்டக்குற்றமும்* (SII,xvii,301.)

பரம வைஷ்ணவன் (பெ) சிறந்த விஷ்ணு பக்தன் (785) *பராந்தகந் பரம வைஷ்ணவன்* (IA,xxii,pp.57-75; PNDCP,p.55-62.)

பரமன் (பெ) இறைவன் (805) *பண்டேய் பரமன் படைத்த* (SII,xii,40; EI,xi,15.)

பரமேச்$_0$வரர் (பெ) பெரிய அரசர் (950) *திறல் செய்த பாண்ட்$_3$ய பரமேச்$_0$வரராள் பரம்பரையிந் வந்து* (TASSI,1962-65,p.32-52.)

பரமேச்$_0$வரன் (பெ) தன்னேரில்லாத் தலைவன் (771) *பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பரமேச்$_0$வரனால்* (EI,xvii,16.)

பரராசர் (பெ) வேற்றரசர் (1552) *காசியிலே விளங்க வணிமவுலி தரித்தனன் பரராசர் பணிந்தனரே* (TAS,i,p.104.)

பரலோகம் (பெ) மேல் உலகம் (1552) *பர லோகத்திலும் இருப்பத்தொரு தலைமுறை பித்ருவர்க் க$_3$த்துடநே அர்த்த பதத்திலே இருப்பாகள்* (SII,xvii,680.)

பரவ (வி) புகழ (905) *கற்றறிந்தோர் திறல் பரவ* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பரவசம் (பெ) தெய்வமேறுகையால் தன் வசமிழத்தல் (985) *ஆயிரவன் படையாளன் பரவசமாய் கிடந்து ஸ்ரீ பலி எழுந்தருள குடுத்த* (SII,xiii,145.)

பரவர் (பெ) ஓர் இனம் (771) *பரவரைப் பாழ்படுத்தி* (EI,xvii,16.)

பரவை (பெ) கடல் (1000) *முதிரும் பரவை முகந்த கொண்மூ முகடேறி முன்னிய* (SII,iv,167.)

பரசி$_0$ஷ்யர் (பெ) சீடர்களின் சீடர் (1032) *இவ்வுடையார் சிஷ்யரும் பரசி$_0$ஷ்யரும் ஆய் ஆர்ய்ய தே$_0$ச$_0$த்தும்* (SII,ii,20.)

பராக்ரமம் (பெ) வீரம் (1250) *பழுதியலாத் தனிச் செங்கோல் நடாத்திப் பராக்ரமஞ் சென்றெழுதிய* (SII,xii,125.)

பராந்தகந் (பெ) பகைவர்களுக்கு எமன் (771) *கார்யத$_3$க்ஷிணந் கார்முக$_2$ பார்த்த$_2$ந் பராந்தகந்* (EI,xvii,16.)

பராவனிப குலம் (பெ) பிற மன்னர் கூட்டம் (815) *பராவனிப குலமிறஞ்ச* (SII,iii,206b.)

பராவி (வி) வணங்கி (957) *மாதேவடிகளுக்குப் பராவி வைத்த பொன்* (SII,viii,742.)

பராறெத்திப் பேறு (பெ) பிறரிடம் தானம் மூலம் கிடைத்த உரிமை (983) *படு கூறு புன்செய்யும் மென்செய்யும் பராறெத்திப் பேறும் மற்றும் இவ்வொரு பங்கு சுட்டிவந்த* (SII,xix,335.)

பரி (பெ) நீரின் போக்கை மாற்றிச் செலுத்துவதற்கு இடும் மரக்குதிரை (1396) *பரிகட்டுகையில் இவ்வேரி கீழோடு குடங்கை ஆலத்தாற்றில்* (EC,x,Mb.34.)

பரி (பெ) குதிரை (771) *கொடும்பாளூர்க் கூடார் கடும்பரிஉங் கருங்களிறும்* (EI,xvii,16.)

பரிக்காறர் (பெ) குதிரை வீரர் (1014) *மும்மடிசோழத் தெரிந்த பரிக்காறரில்* (SII,ii,66.)

பரிக்கிரகம் (பெ) கொடையாகக் கொடுத்தல் (1232) *இவருக்கு சந்திராதித்த வரையும்*

காணியாய் விற்றொற்றிப் பரிக்கிரகஞ் செல்லக் கடவதாகவும் (SII,viii,74.)

பரிகரத்தார் (பெ) வேலையாட்கள் (1313) *....பெருங்கருணையாளர் மடமும் பரிகரத்தார் இருக்கும் மனையும்* (SII,viii,173.)

பரிகலத்தார் (பெ) பரிவாரத்தார் (?) (1014) *திருப்பரிகலத்தார் வேளத்து இருக்கும் இடையன்* (SII,ii,63,94.)

பரிகலத்தார் (பெ) பரிவாரத்தார் (1461) *நம் பரிகலத்தாருக்கு காத்த மரியாதியும் கல்ப்பித்து* (TAS,viii,p.9-11.)

பரிகல பரிச்சிங்நங்கள் (பெ) கடவுளுக்கு வேண்டிய உணவுக் கலங்கள், சின்னங்கள் (1280) *இக் கோயிலுக்கு வேண்டுந் திருமேநிகளும் எழுந்தருளுவித்துப் பரிகல பரிச்சிந்நங்களுந்* (EC,x,Bp.38 (a).)

பரிகலம் (பெ) கடவுளுக்கு முன் வைத்த உண்கலங்கள் (973) *பரிகலங்கள் மாற்றிப் பூசக்கடவான்* (SII,xix,62.)

பரிகல மண்டபம் (பெ) ஓலக்க மண்டபம் (?) (1113) *திருப்பரிகல மண்டபம் செய்வித்தார்* (SII,viii,219.)

பரிகாரர் (பெ) வேலைக்காரார் (1213) *மடத்துப் பரிகாரர்களுக்குந் தங்களுக்குக் கொற்றுக்கும்* (SII,viii,219.)

பரிகாரி (பெ) வைத்தியன் (1191) *இக் கோயில் பரிகாரி ஆக்கின தெங்கு உள்ளிட்ட மாவிருக்ஷம்* (SII,xvii,595.)

பரிக்₃ரஹம் (பெ) காவலுடைய இடம் (1125) *ப்ரஹமேந்த்ரர் பரிக்ரஹத்து அமுது பெங்கியேனும் மேற்படி பரிக்ரஹத்து பெற்றாள்* (SII,vii,443.)

பரிக்₃ரஹம் (பெ) மனைவி (844) *மாத்ரு பரிக்ரஹமுஞ் செய்தாராவது* (TAS,ii,p.13-14.)

பரிச்சட்டம் (பெ) விக்கிரத்துக்குச் சாத்தும் ஆடை (970) *ஸம்கிராந்தி 12நுக்கும் பரிச்சட்டம் ஈரணையினுக்கும்* (SII,iii,149.)

பரிச்சந்தம் (பெ) அரசச் சின்னங்கள் (1056) *பரிகளும் ஒட்டக நிரைகளும் வராக வெல் கொடி முதல் ராஜ பரிச்சந்தமும்* (SII,iii,29.)

பரிச்சிங்நம் (பெ) கடவுள், அரசர் முதலியவர்க்கு உரிய சின்னம் (1095) *....பரிகல பரிச்சிந்நங்களால் உருக்களால் எடை 60இல்* (CHEN,xiv,p.208.)

பரிசட்டங் கழுவுவான் (பெ) பரிசட்டம் வெளுப்பவன் (1013) *திருப்பரிசட்டங் கழுவுவான் நிலத்துக்கு மேற்கு* (IPS,90.)

பரிசட்டங் கொள்ளி (பெ) பரிசட்டங்களை வெளுப்பவன் (1001) *திருப்பரிசட்டங்கள் உட்ப்பட மற்றும் பரிசட்டங் கழுவவேண்டுவன கழுவும் பரிசட்டங் கொள்ளிக்கு* (SII,xvii,222.)

பரிசமிட்டார் (வி) கலியாணம் நிச்சயித்தார் (1000) *படக் கோநிலமன்னர் பாவையைப் பேசிப் பரிசமிட்டார்* (SII,iv,167.)

பரிசரிப்பான் (பெ) தூய்மையாக வைத்திருப்பவன் (973) *திருமேனிகளையெல்லாம் அர்ச்சிப்பான் ஒருவநும் இவ்வகெ பரிசரிப்பான் ஒருவனும்* (SII,xix,62.)

பரிசரிப்போம் (வி) காப்போம் (1300) *மற்றொன்றும் வாராமற்ப் பரிசரிப்போமாகவும்* (IPS,568.)

பரிசாயம் (பெ) விதம் (1200) *ஒரு நாளைக்கு அதினுள் மிக்கது இப்பரிசாயத்தாற் கொள்க இதற்கறிவு இப்பாதமூலம்* (SII,vii,167.)

பரிசாரக் காணி (பெ) வேலையாளுக்கு விடப்பட்ட நில உரிமை (1191) *இக் கோயில் பரிசாரக்காணி உடைய மஹாவிரதி பாரதாயன் திருச்சிற்றம்பலம் உடையன்* (SII,xvii,595.)

பரிசாரகம் (பெ) ஏவல் தொழில் (1003) *பரிசாரகஞ் செய்யும் மாணி ஒன்றுக்கு* (SII,xvii,243.)

பரிசாரகம் (பெ) கோயிலில் ஏவல் தொழில் (986) *பரிசாரகஞ் செய்யு மாணி ஒருவனுக்கு நெல் அறு நாழியும்* (SII,iii,128.)

பரிசாரக வெச்சம் (பெ) உதவிப் பூசாரிகள் பொருட்டான செலவு (1520) *திருமாலை திருப்பரிவட்டம் கோயிற்தான வெச்சம் பரிசாரக வெச்சம் கோயிற் கொத்து வெச்சம்* (SII,xvii,680.)

பரிசாரகன் (பெ) பணியாள் (984) *அர்த்தயாம நாநாழி இய் பரிசாரகன் எட்டுக்கு அந்தியம் போது* (SII,xix,358.)

பரிசாரம் (பெ) (=பரிஹாரம்): வரி முதலியவைகளிலிருந்து விலக்கு (753) *இவ்வூர் பெற்ற பரிசாரம் செக்கும்* (SII,ii,73.)

பரிசாரிகை (பெ) வேலைக்காரி (1266) *...பெரிய பிராட்டிக்கும் இம்மட பரிசாரிகையாய் போதுகிற வெள்ளாட்டிக்கும்* (SII,vi,59.)

பரிசிரித்து (வி) முயன்று (?) (1274) *பொன்னப்ப அனுக்கவன் தொண்ட வயிராகியையும் புண்பரிசிரித்து இவன் திருக் கொடுங்குன்றத்திலே* (IPS,380.)

பரிசு (பெ) விதம் (731) *பொலியூட்டு வைத்த பரிசாவது* (SII,viii,331.)

பரிடையார் (பெ) (=மூலபருடை) (852) *திருவெள்ளறை பரிடையார்* (SII,xii,48.)

பரித் தரங்கம் (பெ) கடல் போன்ற குதிரைப்படை (1084) *பாண்டி மண்டலந் திருவுளத் தடைத்து வெள்ளி வரு பரித் தரங்கமும் தந்திர வாரியு முடைத்தாய் வந்து* (SII,vii,551.)

பரித்திவரி (பெ) பருத்திக்கு இறுக்கும் வரி (1525) *சறுவ மானியமாக அனுபவித்துக் கொண்டு அரசு பேறு அவதரவத்தினை பரித்திவரி பிடாரிவரி ஆளமஞ்சி மற்றுண்டானது* (SII,vi,71.)

பரித் தேர் (பெ) குதிரை பூட்டிய ரதம் (905) *விரை பரித்தேர் வீர நாரணன் முன்பிறந்த வேல் வேந்தனை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பரிது (பெ) (=பரிசு): விதம் (894) *செப்புப் பத்திரத்தில் பட்ட பரிது* (TAS,ii,p.67-68.)

பரிந்து (வி) விரும்பி, துன்புற்று (1176) *பரிந்தாற்றுவ பரியாகமே* (SII,xvii,585.)

பரிப்பு (பெ) கரையின் சாய்வான பக்கம் (1125) *வாய்க்காலை ஏறி பரிப்பை வலித்து வைச்சு இடத்தே மேற்கு* (SII,xiv,205.)

பரிபவம் (பெ) அவமானம் (1036) *கதிர் முனைவயிற் பகைத்து வந்திழி சளுக்கியங்கெய்தின பரிபவ மின்ன நாளில் இகலமர் செய்து நீங்குவதென்று* (SII,iv,223.)

பரிபாரம் (பெ) பரிவாரம்: சிறு தேவதைகள் (869) *தயிர் ஐஞ்ஞாழிச் செய்தும் பரிபார மடங்க திருவமிர்தரிசி பதக்கு நானாழி* (SII,vii,525.)

பரிபாராலயம் (பெ) (=பரிவாராலயம்) (1014) *ஸ்ரீ ராஜராஜீச்வரம் உடையார் கோயிலில் பரிபாராலயத்துப் பிள்ளையார்* (SII,ii,36.)

பரிபாலநம் (பெ) காப்பாற்றுகை (1155) *சிஷ்ட பரிபாலநமும் பண்ணி* (EC,x,Bp.9.)

பரிபாலனம் (பெ) ஆட்சி (1468) *சென்னய தேவ மஹாஅரசுகள் பரிபாலனத்து* (SII,v,867.)

பரிபாலிக்கின்ற (வி) ஆள்கின்ற (1058) *ராஜேந்த்ர தேவர் திருவாய் மொழிந்தருள... பரிபாலிக்கின்ற நம்பி கொட்டி அதிராத்த்ரயாஜியாரும்* (SII,xvii,249.)

பரிபூர்ண்ணந் (பெ) எல்லாம் நிறைந்தவன் (771) *பராந்தகந் பண்டி தவத்ஸலந் பரிபூர்ண்ணந்* (EI,xvii,16.)

பரிமளதளம் (பெ) மிக்க மணமுள்ள சாந்து (1186) *பரிமளதளந்தான் சமைத்த குங்கும பரிவொடு* (SII,xii,263.)

பரிமாற்றம் (பெ) நடைமுறை (1288) *கோப்பெருஞ்சிங்கர் நாளிலும் நிலக்கூலித் தண்டிப் போந்தபடிக்குக் கோயில் பரிமாற்றங் காட்டின படியாலும்* (SII,vii,759.)

பரிமாறி (வி) வாணிகத் தொழில் செய்து (1106) *திருநலக் குன்றத்திலேய் இருந்து பரிமாறித் திருநலக் குன்றமுடையார்க்குப் படியாலுள்ளது செலுத்தக் கடவர்களாகவும்* (IPS,125.)

பரிமாறும் (வி) செலாவணியாகும் (922) *எம்மூரில் பரிமாறும் பொன் ஸமஞ்ஜஸங் காண்பதற்கு* (SII,vi,295.)

பரிமாறுவார் (பெ) வியாபாரஞ் செய்பவர் (1168) *ஆளால் குறுணி நெல்லு மாலைகட்டி பரிமாறுவார் ஆளுக்கு ஐஞ்சு காசு இடக் கடவர்களாகவும்* (SII,viii,291.)

பரிய (இ) பெரிய (1186) *பத்துத் திசையும் பரியமுத்தக் குடை அளவிட்ட திரிசுடர்* (SII,xii,263.)

பரியட்டம் (பெ) (=பரிசட்டம்) (957) *சாத்தியருளும் பரியட்டத்துக்கு வைத்த காசு பத்து* (SII,xix,15.)

பரியன (பெ) பருமையுள்ளன (1015) *த்ராஸமும் கற்பற்றும் உடையன உட்படப் பரியனவும் நேரியனவும்* (SII,ii,7.)

பரியாகம் (பெ) அசுவ மேதயாகம் (1176) *பரிந்தாற்றுவ பரியாகமே* (SII,xvii,585.)

பரியாரம் (பெ) தூய்மை வேலை (?) (1001) *திரு உண்ணாழிய்யை பரியாரஞ் செயு மாணியள் இருவருக்கு* (SII,xvii,222.)

பரிவத்தனை (பெ) ஒன்றுக்கு இன்னொன்றை மாற்றிக்கொள்ளல் (974) *அல்லூர் ஊராற்க்குக் குடுத்து அதின் தலைமாறு ஊராரிடைப் பரிவத்தனை செய்து கொண்டு* (SII,viii,692.)

பரிவர்த்தனை (பெ) (= பரிவத்தனை) (979) *அறுதிப்பரிவர்த்தனையாற் கொண்டு இதற்கு தலைமாறு ஆக... குடுத்த நிலமாவது* (SII,xix,222.)

பரிவாதி$_3$னி (பெ) ஏழு தந்திகளுள்ள இசைக்கருவி (700) *குணஸேண ப்ரமாணஞ் செய்த வித்$_3$யா பரிவாதி$_3$னி* (IPS,4-5.)

பரிவாரக் கொந்தம் (பெ) வேளைக்காறப் படையில் ஒரு பிரிவு (1113) *வடுகர் மலையாளர் பரிவாரக் கொந்தம் பல கலனையுமுள்ளிட்ட திருவேளைக்காறரோம்* (EI,xviii,38; SII,iv,1396; EZ,ii,pp.242-55.)

பரிவாரக் கோயில் (பெ) சிறு தேவதைகளுக்கான கோயில் (982) *ஸ்நபந மண்ட$_3$பமும் கோ$_3$புரமும் சுற்றாலையும் பரிவாரக் கோயில்களும் எடுப்பிக்கப்பட்டன* (SII,xix,302.)

பரிவாரத்தார் (பெ) சோழர் படைப் பிரிவுகளில் ஒன்று (1014) *மும்முடி சோழத் தெரிந்த பரிவாரத்தார்* (SII,ii,64,95.)

பரிவாரம் (பெ) ஒரு வரி (1257) *வெட்டி பரிவாரம் ஊர் கணக்க சீவிதத்தால்* (SII,vi,35.)

பரிவாரம் (பெ) பணியாட்கள் (759) *இத்தளி பரிவாரமும் தளியும்* (SII,iv,827.)

பரிவாரம் (பெ) படை அல்லது தொகுதி ஏவலாளர் (955) *ராஜாதித்த தேவர் பரிவாரத்து அய்யனியக்க* (SII,vii,961.)

பரிவாராலயம் (பெ) சிறுதெய்வங்கள் உள்ள சுற்றுக்கோயில்கள் (1014) *ஸ்ரீ ராஜராஜீச்$_3$வரம் உடையார் கோயிலில் பரிவாராலயத்துப் பிள்ளையார் க$_3$ணபதியார்க்கு* (SII,ii,86.)

பரிவு (பெ) பக்குவம் (1186) *பரிமளதளந்தான் சமைத்த குங்கும பரிவொடு பசுஞ்சாந் தெழக் கமழ்ந்தன* (SII,xii,263.)

பரிவேட்டை (பெ) குதிரை மேற் சென்று ஆடும் வேட்டை (1142) *செல்வப் பேரரையந் பரிவேட்டை போநவனை* (SII,vi,327.)

பரிச்$_0$சந்தம் (பெ) அரசர் சின்னங்கள் (905) *ஹரிச்$_0$சந்த்$_3$ரன் னகரழித்தவன் பரிச்$_0$சந்தம் பல கவர்ந்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பரிஹரிக்க (வி) போற்றுக (1069) *அறமறவற்க அறமல்லது துணையில்லை ப்ராணி பரிஹரிக்க* (EI,xxv,25.)

பரிஹாரம் (பெ) வரி நீங்குகை போன்ற விலக்கு (750) *குடுத்த பரிஹாரமாவன* (EI,v,8.)

பரீக்ஷை கொண்டு (வி) தேர்ச்சி பெற்று (985) *மூன்று ஸம்வத்ஸரத்தில் பரீக்ஷை கொண்டு அபூர்விகளுக்கேய் பணிப்பதாகவும்* (SII,vi,322.)

பரீக்ஷை தந்தார் (பெ) தேறியவர் (804) *ஸபரிசிஷ்டம் பரீக்ஷை தந்தார்க்கே ச்$_3$ராவணை பணிப்பதாகவும்* (SII,xiv,37.)

பருகவும் (வி) உண்ணவும் (1122) *கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்* (SII,xvii,607.)

பருகும் (வி) குடிக்கும் (905) *அவன் கண்ணிலிருள் பருகும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பருங்கல் (பெ) பெரிய கல் (922) *பருங்கல்லில் உரையாதே பொன்னறிந்தனையே உரைப்பதாக* (SII,vi,295.)

பருடை (பெ) (= மூல பருடை) (910) *பருடை நிலத்தைய் நீரோடு அட்டிகுடுத்த* (SII,viii,630.)

பருடையார் (பெ) (= மூலபருடை) (1008) *ப்$_3$ரஹமதே$_3$யம் மணலூர் பருடையாருள் கௌசிகந் அண்ணாவந் திருவிக்கிரமந்* (SII,vii,142.)

பருத்தி புடவை (பெ) ஒரு வரி (1110) *கார் வரகு கும்மறிக் கடமை பருத்திப் புடவை தறிப் புடவை ஏற்காசு வீடுமாடு* (EC,ix,Nl.3.)

பருத்தி வண்டி (பெ) பருத்திப் பொதி ஏற்றிய வண்டி (1300) *பருத்தி வண்டி ஒன்றுக்குக் காசு பத்தும்* (SII,viii,442.)

பருதி (பெ) சூரியன் (771) *படுகடன் முளைத்த பருதி போல* (EI,xvii,16.)

பருதி (பெ) வட்டவடிவம் (905) *பகல் செய்யும் பருதி ஞாயிறும்* (TASSI,19622-65,p.1-31; PNDCP,p.95-115.)

பருதி குலபதி (பெ) சூரிய குலத் தலைவன் (1199) *பாரறிய வாழ்வருளி பரிகலத்தில முதளித்து பருதிகுலபதி யென்று திருநாமந்தரித்த பாண்டியற்கு* (SII,vii,797.)

பருதி மண்டலம் (பெ) சூரிய வட்டம் (1270) *பருமணிக் குடையங்கு வந்தெழு பருதிமண்டலம் ஒக்குமே* (SII,iv,619.)

பருதி வழி (பெ) சூரிய வம்சம் (1137) *தாம் முன் செய் தவத்தாற் பருதிவழித் தோன்றி நெடுமாலிவநெந* (SII,viii,30.)

பருந்தலைத்து (வி) பருந்துகளால் உருட்டப் பெற்று (1075) *தெந்நவந் அருந்தலை பருந்தலைத்துக் கிடப்ப* (SII,iii,68.)

பருந்து (பெ) பறவை வகை (800) *பருந்து சாராவேய் அருந்துறங்க* (EI,xiii,10.)

பருப்பமிர்து (பெ) பருப்புணவு (1003) *மிளகு பொடி ஒன்றும் பருப்பமிர்து போது உரியாக* (SII,xvii,243.)

பருப்பு (பெ) பயற்றம்பருப்பு (871) *பருப்பு உழக்கினுக்கு* (SII,viii,581.)

பருப்புவியல் (பெ) பருப்பு கலந்த கறியமுது (1504) *பருப்புவியல் 2 அடைக்காயமுது 50* (TDI,ii,140.)

பரும் புடவை (பெ) ஆடை வகை (1300) *பரும்புடைவைப் பொதி ஒன்றுக்குக் காசு பத்தும்* (SII,viii,442.)

பருமணி (பெ) பெரிய இரத்தினக்கற்கள் (1044) *மாநாபரணந் பொந்முடிப் பருமணிப் பசுந்தலை பொருகளத்தரிந்து* (SII,v,633.)

பரு முத்து (பெ) முத்து வகை (970) *மாணிக்கம் 3ம் பருமுத்து 12ம் நேர்முத்து பலவும்* (TDI,i,8.)

பருவம் (பெ) காலம் (800) *பால் கொண்ட செவ்வாய் விளையாமொழிப் பருவத்து* (EI,xiii,10.)

பருவம் (பெ) உற்ற நேரம் (975) *இது வாண்டிது திங்களிது பக்கமதிது பொழுதிது பருவமாக* (SII,xix,131.)

பருவமாரி (பெ) பருவ காலத்துப் பெய்யும் மழை (1134) *வருநாணமும் களிக்கறியும் பருவமாரியும் பலவிளைவும்* (SII,v,645.)

பருஷையர் (பெ) பக்தர் குழு (1012) *ஏவலில் அருஷையோ டரஹர வெனக் குனித் தடிமை செய் பருஷையர் பஹுவிதம் பயின்றது* (SII,vii,863.)

பல் (பெ) ஓர் உடல் உறுப்பு (1000) *கொடும்பற் றுயங்கிக் குழி கண்ணிடுங்கிக் குரணடுங்கி* (SII,iv,167.)

பல் (இ) பல (811) *அந்தமில் பல் குணத்தாதி* (SII,xiv,41.)

பல்லக்கு (பெ) ஆட்கள் தூக்கிச் செல்லும் வாகன வகை (1147) *காணி குறையும் தீர்த்து பல்லக்கேறி* (TAS,viii,p.7-8.)

பல்லவரையன் (பெ) உயர் அரச அலுவலர் பட்டங்களில் ஒன்று (780) *கொற்றம் புல்லன்குடிப் பஞ்சவன் பல்லவரையனாயின வேள் செந்தில்* (SII,xiv,17.)

பல்லவ வம்சம் (பெ) பல்லவர் குலம் (796) *பல்லவவம்சத்துள் பரமேச்வர போத்தரயர்* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

பல்லவன் (பெ) பல்லவ அரசன் (771) *கூடாத பல்லவனை* (EI,xvii,16.)

பல்லியங்கள் (பெ) பல்வகை வாத்தியங்கள் (1179) *சொல்லரிய பராசிவன் பம்மநுக்குப் பல்லியங்கள் வாசிக்க* (EC,x,Ct.83.)

பல்லுண்டி (பெ) பலவகையான உணவு (905) *பாயல் மீ மிசை நிமிர்ந்து பல்லுண்டி விருப்புற்றும்* (TASSI,1962-65,pp.1-31; PNDCP,p.95-115.)

பல்வேறு (இ) பலவேறுபட்ட (1136) *வரநெதிப் புடையிலும் பல்வேறு புள்ளினமல்லது சிறையெநப் படுதலன்றி* (SII,vii,1038.)

பல (பெ) பல (771) *கொல்யானை பலவோட்டி* (EI,xvii,16.)

பலகணி (பெ) சன்னல் (1014) *பெரிய மண்டபத்தில் முன்பில் திருப் பலகணியும் திருக்கதவும் நிலையும் படியும்* (SII,xix,4.)

பலகணி மாலைகள் (பெ) ஒரு வரி (1300) *செக்காயம் வண்ணார் கற்காசு பலகணி மாலைகளும் உப்புவழிச் சாரிகை* (SII,viii,245.)

பலகாயம் (பெ) மிளகு, கடுகு, போன்று கறிக்கு உதவும் பண்டங்கள் (871) *கறி அமிதுக்கு நாழி பலகாயத்துக்கும்* (SII,viii,581.)

பலகை (பெ) எழுத்துப் பொறித்த கல் (1150) *இப்பரிசு சமைந்து கல்லும் பலகையும் நாட்டிநோம்* (AVNM,9,p.33-34)

பலகை (பெ) எழுது பலகை (833) *தண்டமிழ்க் கூடற் கன்மாத் திண்பலகை மிசை முன்னெழுதிய* (SII,xiv,44.)

பலகை (பெ) தகடு (982) *பொன்னின் பலகை வெள்ளியினிடைக் கட்டு இட்ட முத்தின் பஞ்சசரி* (SII,xix,302.)

பலகைத் தலை (பெ) சேர நாட்டில் கோயிலின் ஒரு பகுதி (975) *உச்சியகத்து பந்தீரடியின் முன்ன கொண்டு வந்து பலகைத்தலை அளக்கக் கடவியந்* (TAS,ii,p.38-40.)

பலசனம் (பெ) பலவகை மக்கள் கூட்டம் (1258) *நாட்டு முதலிகளும் உள்ளுப்பட்ட பலசனத்தோமும் அடிவாரத்து மலையாளரும்* (SII,vii,118.)

பலதநம் (பெ) பல வகையான செல்வம் (1015) *விளைய் அமர்க்களத்துக் கிளையோடும் பிடித்து பலதநத்தொடு* (SII,xvii,329.)

பலப்பை (பெ) வலிமை (1266) *தருமையாண்மையும் பலப்பை புரவியும் கண் மணித்தேரும்* (IPS,366.)

பல பட்டடை (பெ) உழவு தவிர மற்ற தொழில் செய்யும் சாதியினர் (1300) *மார்கழி மாதமுதல் ஏற்றிக் கொள்ளும் செட்டிகள் பலபட்டடையும் தறி இறை தட்டார்பாட்டம்* (SII,viii,245.)

பலபட்டடைக் குடி (பெ) பல தொழில் சாதிக் குடிமக்கள் (1420) *உழவுகுடி காசாயக்குடி பலபட்டடைக்குடி செக்குக் கடமை மற்றும் பல குடிக்கும்* (SII,viii,275.)

பல படித்த பல்லாயிரவர் (பெ) கற்றவர் யாவரும் (973) *இது பலபடித்த பல்லாயிரவர் ரக்ஷை* (SII,xiii,281a.)

பலம் (பெ) படை (800) *நுளம்பன் பலத்தோடே துணிந்து நாடு பாவிநார்* (SII,vii,581.)

பலம் (பெ) ஓர் எடை (869) *இதனிறைய் னூற்றிருபதின் பலம்* (SII,xiv,5.)

பலம் (பெ) வலிமை (921) *வாம் புரவி பலங் காட்டிஉம்* (SII,iii,206a.)

பலமண்டலச் சரக்கு (பெ) பலநாட்டுப் பகுதிகளில் இருந்தும் வரும் பண்டம் (1270) *...ப் பணமும் பலமண்டலச் சரக்குக்கும் இப்படியே ஒரு ஆட் சுமைக்கு ஒரு மாப் பணம்* (SII,viii,405.)

பலயை (பெ) உதவி (947) *பரடையர் தாங்கள் விலக்கப்பெறார் விலக்கு மவர்கட்கு பலயை செய்யப் பெறார்* (TAS,vi,52.)

பலர் (பெ) பல பேர் (795) *பலரும் பட்ட இடத்து* (TAS,i,p.158-59; ARE,1958-59,471.)

பலவற்கத்துக் கறி (பெ) பலவகைக் காய்கறிகள் (1127) *பருப்பு பதகிருநாழி உரியும் பலவற்கத்துக் கறி நிறை எண்ணூற்றிருபத் தைம்பலமும்* (SII,iii,80.)

பல விளைவு (பெ) பலவகைத் தானிய விளைச்சல் (1134) *களிக்கறியும் பருவமாரியும் பலவிளைவும் பழுதின்றி* (SII,v,645.)

பலன் (பெ) பயன் (845) *அச்வமேதஞ் செய்த பலன் பெறுவார்* (EI,xi,22b.)

பலனம் வற்தினை (பெ) ஒரு வரி (1464) *அதிகாரி வற்தினை பலனம் வற்தினை கொள்ளு...* (ARE,1913,423)

பலா (பெ) பழமர வகை (1008) *செண்பகமுஞ் செங்கழுநீரும் மாவும் பலாவுங் கமுகும் பனையும்* (EI,xxii,34.)

பலாசு (பெ) பலா (1000) *அசோகும் பலாசு துடராதெழுந் திட்டழலின்* (SII,iv,167.)

பலாறு (பெ) கிளைப் பாசன வாய்க்கால் (956) *இரண்டாங் கண்ணாற்று பலாற்றுக்கு தெற்கு* (SII,iv,549.)

பலி (பெ) பூசைக்குப் படைக்கப்படும் பொருள் (800) *பலி ஸ்வஸ்தி ஸ்ரீ யரிக்கும்* (TAS,iii,p.203-05.)

பலி (பெ) நிவேதனம்; படையல் (844) *முட்டாப் பலி விலக்குவார்* (TAS,ii,p.13-14.)

பலிச் சரு (பெ) ஸ்ரீபலியின் பொருட்டு சமைத்த உணவு (1024) *பலிச்சருவுக்கு ஸந்தி ஒன்றுக்கு அரிசி இருநாழியாக* (EC,x,Kl.112 (a).)

பலிச்சோறு (பெ) (= பலிச்சரு) (1000) *திருப்பலிச் சோற்றுக் கிரண்டு போழ்தைக் கரிசி* (SII,viii,647.)

பலிசை (பெ) வட்டி (862) *இதன் பலிசை கழஞ்சிற் பேர்த்திது* (SII,vii,925; EI,xxxii,10.)

பலிசை ஊட்டு (பெ) வட்டி வருவாய் (864) *இப்பொன் கொண்டு பலிசை ஊட்டினால்* (SII,vii,503.)

பலித் தாலம் (பெ) சுவாமிக்கு உணவு படைக்கும் தட்டு (800) *ஓராயிரம் பொன் பலித்தாலம்* (SII,iv,131.)

பலி திரிவார் (பெ) பிச்சை எடுப்பார் (1000) *சிவனைத் தொழுது துறக்க மெய்தார் பஞ்சந் நலியப் பலி திரிவார்* (SII,iv,167)

பலிப் பீடம் (பெ) பலி படைக்கும் மேடை (876) *இஷவக்கொட்டிலும் பலிப்பீடமும்* (SII,xii,63.)

பலிப் புறம் (பெ) நிவேதனப் பொருள்களுக்காக கோயிலில் விட்ட நிலம் (844) *பலிப்புறமாவது இத்தண்டந் தைய்ப் பூயத்தினாள் உச்சிப்பலிஇன் முன் குடுப்பது* (TAS,ii,p.13-14.)

பலி ஊட்டு (பெ) நிவேதனங்கள் படைத்தல் (995) *திருச் செந்நெல் நடைக்கும் திருப்பலி ஊட்டுகளுக்கும்* (SII,vii,1017.)

பவ்வம் (பெ) கடல் (785) *பவ்வமெனப் பரந்தெழுந்து* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

பவழ கடகம் (பெ) பவழம் பதித்த கங்கணம் (1014) *பவழ கடகம் ஒன்றிற் கட்டின பவழம் பத்தும் உட்பட நிறை* (SII,ii,93.)

பவழம் (பெ) நவ மணியுள் ஒன்று (991) *ஏகாவல்லி வட மிரண்டு முத்து இருபத்தெட்டு பவழம் இரண்டு* (SII,xiii,144.)

பவழம் (பெ) நவமணியுள் ஒன்று (970) *பவழத்தின் கொப்பு ஒன்றும்* (TDI,i,8.)

பவளக் குஞ்சம் (பெ) பவளங் கோத்த ஈயோட்டி (1366) *முத்துக் குஞ்சவும் பவளக் குஞ்சவும் தவளச் சங்கும்* (TAS,viii,p.20-22.)

பவிழியக் கிடை புறம் (பெ) இருக்கு வேத ஆசிரியருக்குக் கொடுத்த நிலம் (1016) *பவிழியக் கிடை புறத்துக்கு வைத்த பூமி ஆவது* (SII,vi,312.)

பவிழியம் (பெ) இருக்கு வேதப் பிரிவு (866) *பவிழிய சரணத்தார்* (TAS,i,p.1-14.)

பழ (இ) முன்பிருந்த (992) *பழ நிவந்த மடைத்து மிக்க நிலம்* (SII,xiii,170.)

பழக்காப்பு (பெ) விக்கிரகத்துக்குப் பழத்தால் காப்புச் செய்தல் (1599) *சூடி குடுத்த நாச்சியார் திருணாளுக்கு பழக்காப்பு பிளிபலம் 5* (SII,viii,534.)

பழகி (வி) பழையதாகி (1058) *ஆழ்வார் ஸ்ரீ விமாநம் முன்பு இஷ்டகைப் படையாய் பழகிப் பிழந்தமை கண்டு* (EI,vii,20 (k).)

பழங்கரை (பெ) முன்னிருந்த கரை (831) *பழங்கரை இழித்து* (SII,xiv,43.)

பழங் காசு (பெ) குறிப்பிட்ட காலத்துக்கு முன்பிருந்து வழங்கி வரும் காசு (768) *நிறை குறையாதன பழங்காசு பதினைந்து* (SII,xiv,27.)

பழஞ்சி (பெ) நிலப்பெயர் (925) *போயின இடுவைக்குங் கோற்புளிப் பழஞ்சிக்கு மேக்கு கிடந்த இறவைக்கு தெற்கு* (TAS,i,pp.187-93.)

பழத்தேவை (பெ) ஒரு வரி (1265) *ஆனைச்சாலை குதிரைப் பந்தி ஆண்டு எழுத்துத் தேவை பழத்தேவை வெட்டி நிலையாள்* (SII,xvii,143.)

பழ நடை (பெ) முந்திய வழக்கம் (938) *பழநடை நிசதம் போழ்து முன்னாழி நெல்லால்* (SII,viii,10.)

பழ நிலம் (பெ) முன்னுள்ள விளை நிலம் (1006) *ஸ்ரீராஜராஜ தேவர்க்கு யாண்டு பதிநாறாவது முதல் அளந்தபடி பழநிலம் உள்பட நிலம்* (SII,viii,222.)

பழ நெல் (பெ) பழைய நெல் (897) *பழ நெல் சென்னடைக் காலால் நூற்றிருபதின் கலமும்* (SII,iv,517.)

பழ நெல் (பெ) ஒரு வரி (962) *பஞ்சவாரக் கடமையும் பழநெல்லும் பொன்னிறுக்கில்(ப்) பொன்னும்* (SII,xiii,151.)

பழ நெல்லரிசி (பெ) நாட்பட்ட அரிசி (1012) *பத்தெண் குத்தல் பழ நெல்லரிசி பன்னிரு நாழிக்கு* (SII,vii,863.)

பழபட்டாரகி (பெ) துர்கை(?): வாணிகரின் குலதெய்வம் (1050) *அய்யபொழில் புர பரமேசுவரிக்கு மக்களாகி ஸ்ரீ பழபட்டாரகிக்குத் துணைவராகி* (AVNM,2,p.6-8)

பழம் புள்ளிமாடை (பெ) நாணய வகை (1272) *இப் பரிமேலழகிய பெருமாள் தாதர்க்கு விலை நிச்செயித்துக் குடுத்த பழம்புள்ளிமாடை 30* (SII,iv,854.)

பழம் பேர் (பெ) முன் வழங்கி வந்த பெயர் (785) *பண்டைத் தன் பழம்பேர் நீக்கி* (IA,xxii,pp.57-75; PNDCP,p.55-62.)

பழம் பொத்தகம் (பெ) ஊரின் நிலக் கணக்குக் கொண்ட பழைய குறிப்பேடு (978) *இத்திருநல்லம் பழம் பொத்தகப்படி நிலன் எழுபதிற்று வேலி* (SII,iii,151-151a.)

பழ மரம் (பெ) பழங்கள் தரும் மரம் (1014) *கூறடைந்த நிலங்களில் நின்ற பல்லுருவில் பழ மரங்கள் அவ்வவ் கூறுடையானே* (SII,i,40.)

பழமரவு காசு (பெ) பழங் காசு (985) *காசு பழமரவு காசு 13 இக்காசு பதின் மூன்றுங் கொண்டு* (SII,xix,376.)

பழ முத்து (பெ) முத்து வகை (1014) *முத்து வட்டம் அனுவட்டமும் ... பழமுத்தும் ஆக முத்து* (SII,ii,3.)

பழமை (பெ) பழைய உரிமை (771) *நாட்டானின் பழமை யாதல் காட்டி* (EI,xvii,16.)

பழமொழி (பெ) மந்திரம் (1453) *விஷ்ணுசித்தன் கோதைக்கு நாம் வரக்காட்டின ப்ரணய பத்ரிகை பத்தர்களும் பகவர்களும் பழமொழி வாய் முனிவர்களும்* (CHEN,v,pp.437-41.)

பழய (வி) முன்புள்ள (877) *பழயவறமும் ப்ரஹ்ம்தேயமும்* (EI,xviii,2.)

பழவஜ்ரம் (பெ) ஒரு வகை வைரம் (1513) *பச்சை 160க்கு ரதீ$_2$ 108 பழ வஜ்ரம் 423க்கு மஞ்சாடி 65 1/4* (TDI,iii,35.)

பழ வரவு (பெ) முன்பு வரப் பெற்ற தொகை (985) *திருநாவுக்கரையன் கைய்யால் யாங்கள் கொண்டு கடவ ஈழக்காசு பழவரவு முதல் 12 இக்காசு பன்னிரண்டுங் கொண்ட பரிசாவது* (SII,xiii,254.)

பழவரிசி (பெ) குத்திப் பல நாள் வைக்கப் பட்டிருந்த அரிசி (887) *செந்நெற் குத்தற் பழவரிசி* (SII,xii,70.)

பழவிறை (பெ) முன்பு விதிக்கப்பட்டு வந்த வரி (911) *முதலும் பழவிறையும் தவிர்ந்து* (SII,xix,92.)

பழனக் கிடக்கை (பெ) வயல் பரப்பு (771) *பாகனூர்க் கூற்றம் என்னும் பழனக் கிடக்கை நீர் நாட்டு* (EI,xvii,16.)

பழனப் பரப்பு (பெ) வயல் (1137) *நீதியறமும் பிறழாது நிற்ப்ப பாவும் பழனப் பரப்பும் பணைக்கைமாவு மல்லது* (SII,viii,30.)

பழாரர் திருவடி (பெ) தெய்வம் (1000) *சாந்தி யடிகள் படுமது பழாரர் திருவடி கொள்வது* (TAS,ii,pp.173-207.)

பழி (பெ) அவமானம் (1014) *பயங்கொடு பழி மிக முயங்கியில் முதுகிட் டொளித்த சயசிங்ஙந்* (EC,ix,Cp.88.)

பழிக் காரியம் (பெ) குற்றம் (1300) *நாட்டாரை ஆச்ரித்து இப்பழிக்காரிய தீத்து தரவேணும் மென்று சொல்லுகையால்* (IPS,481.)

பழி நீக்கி (வி) கெட்ட பெயரைப் போக்கி (1069) *தேர் வேந்தரடி வணங்க பழி நீக்கி உலகாண்ட வீரன்* (EI,xxv,25.)

பழிப்பட்டு (வி) விரோதப்பட்டு (1350) *எங்கள் தகப்பன் மராள.....ட்டிப் பகையாயிரண்டிகும் பழிப்பட்டுக் கிடக்கும் பகையை* (IPS,618.)

பழிப்பு (பெ) பழிக்குற்றம் (771) *பழிப்பின்றி வழித் தோன்றி* (EI,xvii,16.)

பழி போருகை (பெ) பழிசுமத்துகை (1300) *இந்த பெரிய நாயனார் மேலே பழி போருகைஇல்* (IPS,481.)

பழியிலி ஐஞ்ஞூற்றுவர் (பெ) வாணிகர் குழுவின் ஒரு படை (1106) *இந் நாட்டுப் படை பழியிலி ஐஞ்ஞூற்றுவருமே இது நிலைநிறுத்தக் கடவோமாக* (IPS,125.)

பழி விழுந்தது (பெ) பழி ஏற்படல் (1300) *ஏறி யருளப் பண்ணினாரென்று மாறாடி சொல்லி இதுக்குப்பழி விழுந்ததுக்கு* (IPS,611.)

பழுக்கற (வி) குற்றமின்றி (862) *பழுக்கற முறையால் வழி படுவானுக்கு* (SII,xiv,45.)

பழுதியலா (வி) குற்றம் நேராத (1250) *கழுதியலக் கண்ட காவலன் பல்லவன் காசினிமேற் பழுதியலாத் தனிச் செங்கோல் நடாத்தி* (SII,xii,125.)

பழுதிலா (வி) குற்றம் இல்லாத (1150) *பழுதிலாத் தொழில் வல்ல கழுதை மேவ...* (AVNM,9,p.33-34)

பழுதின்றி (வி) குற்றமில்லாமல் (1134) *பருவமாரியும் பலவிளைவும் பழுதின்றி முழுதுமாகக் கடலிடையெழு சுடரன்னம்* (SII,v,645.)

பழுது (பெ) குற்றம் (921) *பழுதறத் தானாராய்ந்து பண்டிதரில் மேந்தோன்றியும்* (SII,iii,206a.)

பழுதை (பெ) வைக்கோற்புரி (1283) *சித்திரைக் குறுவையும் விளைந்து அரிவாளும் பழுதையும் புக்க நிலத்துக்கு மாத்தால் எழு கலனே தூணிப் பதக்கு நெல்லும்* (IPS,393.)

பள்ளடியார் (பெ) பள்ளர் சாதியைச் சேர்ந்த அடிமையாட்கள் (1369) *மலையாளனும் சிவத் தமக்கணாயனும் ஆகப்பேர் எட்டும் பள்ளடியாரில் வளத்தி மகள் மன்றியும்* (IPS,459.)

பள்ளங் ஊழியம் (பெ) பள்ளர் செய்யும் கட்டாய ஊழியம் (1494) *முக...த்த வரி பள்ளந் ஊழியம்* (ARE,1913,074)

பள்ளம் (பெ) தாழ்ந்த நிலம் (911) *மேடும் பள்ளமும் ஒப்பித்து* (SII,viii,640.)

பள்ளம் (பெ) நீர்க் குட்டை (960) *மீன்படு பள்ளமும் தேநபடு பொதும்பும்* (EI,xv,5.)

பள்ளர் வரி (பெ) பள்ளர் மீதான வரி (1497) *ஊர்வழி ஓலை வற்தனை பள்ளர் பறையர் வரி இளவெள்ளாழர் வரி* (ARE,1963,666)

பள்ளவாய் (பெ) குட்டை (1014) *சிறு முன்னியூர் ஏரியில் நீர் கோத்துப் பள்ளவாயாக கிடந்த நிலமும்* (SII,ii,5.)

பள்ளற் (பெ) (=பள்ளர்): ஒரு சாதியினர் (1300) *....புறஞ் சேரியில் பள்ளற்க்கும் பிடாகைகளில் இருக்கும் பள்ளற்க்கும்* (IPS,550.)

பள்ளி (பெ) உழவுத்தொழில் மேற்கொண்ட ஒரு ஒரு சாதியினர் (1057) *அறிவேன் பரமண்டலத்து பள்ளிகள் நாடுசெவான் சித்திர்மேழி னாடு உடையானேன்* (TAMARAI,p.54-56.)

பள்ளி (பெ) சமணர்/புத்தர் ஆலயம் (1008) *கடாரத்தரையன் எடுப்பிக்கின்ற சூளாமணிப் பன்ம விஹாரத்துப் பள்ளிக்கு பள்ளிச்சந்தம்* (EI,xxii,34.)

பள்ளி (பெ) பள்ளிச்சந்தம் (1014) *அரப்பாழ் நாய்வாலமும் மருத்துவப் பேறும் பள்ளியும் உட்பட* (SII,ii,4.)

பள்ளி (பெ) சமணர் கோயில் சமணர் மடம் (745) *இப்பள்ளி உடைஆரை நீக்கி* (TAMIZ,1970,p.122.)

பள்ளி (பெ) புத்தர் அல்லது சமணர் கோயில் (833) *இருப்பைக் குடி வளநகருள் எடுப்பித்த பெரும் பள்ளியும்* (SII,xiv,44.)

பள்ளி (பெ) கிறித்தவர் கோயில் (849) *தருஸாப் பள்ளிக்கு ஐய்யனடிகடிருவடி குடுத்த வீடுபேறாவது* (TAS,ii,p.67-68.)

பள்ளிக் கட்டில் (பெ) சிங்காதனம் (798) *பள்ளிக்கட்டிலுடைய கண்டியும்* (SII,xii,39.)

பள்ளி கட்டில் மண்டபம் (பெ) ஓலக்க மண்டபம் (966) *இரணசிங்க வீரர் பள்ளிகட்டில் மண்டபத்துள் ளெழுந்தருளுவித்த கலிகை விடங்கர்க்கு* (SII,iii,190.)

பள்ளிகொண்டருளிய தேவர் (பெ) கிடந்த கோலத் திருமால் (1010) *இராஜஸிம்ஹ பல்லவ ஈச்வரத்து தேவரும் பள்ளி கொண்டருளிய தேவரும்* (SII,i,41.)

பள்ளிச் சங்கத்தார் (பெ) புத்தமதச் சங்கத்தைச் சேர்ந்தவர் (1090) *பள்ளிச்சந்தங்கள் காணியுடைய காணிஆளரைத் தவிர இப்பள்ளிச் சங்கத்தார்க்கே காணியாக* (EI,xxii,35.)

பள்ளிச்சந்தம் (பெ) புத்தர் கோயிலுக்குக் கொடுத்த நிலம் (1008) *சூளாமணிப் பன்ம விஹாரத்துப் பள்ளிக்கு பள்ளிச்சந்தம்* (EI,xxii,34.)

பள்ளிச் சந்தம் (பெ) சமணர் கோயிலுக்குக் கொடையாக விடப்பட்ட நிலம் (550) *வஜ்ரநந்திக் குரவர்க்குப் பள்ளிச் சந்தமாகக் கொடுத்தோம்* (TASSI,1958-59,pp.41-83.)

பள்ளிச் சிவிகை (பெ) உற்சவ மூர்த்தி எழுந்தருளும் பல்லக்கு (986) *தேவர் பள்ளிச் சிவிகை காவுஞ் சிவிகையார்க்கும்* (SII,iii,128.)

பள்ளித் தாமம் (பெ) கோயில் மூர்த்தி கட்குச் சாத்தப் படும் மாலை (879) *பள்ளித் தாமத்துக்கு முதலாக வைத்த* (SII,xiv,15.)

பள்ளித் தொங்கல் (பெ) குடை போன்ற அணி (991) *யாண்டு 11ஆவது குடுத்த பள்ளித் தொங்கல் 1 இதில் தச்ச மொட்டொன்று* (SII,xiii,44.)

பள்ளித்தொங்கல் உடையான் (பெ) அரசனுடைய குடையை ஏந்துபவன் (992) *உடையார் பள்ளித் தொங்கலுடையான் இளைய வகையில் அப்பூருடையான்* (SII,xiii,170.)

பள்ளி நிலை (பெ) புத்தர் பள்ளிக் கட்டிடம் உள்ள இடம் (1090) *ராஜ ராஜப் பெரும் பள்ளிக்குப் பள்ளி நிலையும் பள்ளி விளாகமும் உட்பட* (EI,xxii,35.)

பள்ளிப் பீடம் (பெ) அரச இருக்கையான சிங்காதனம் (1070) *திருமஞ்சன சாலையில் பள்ளிப்பீடத்து எழுந்தருளி இருந்து* (SII,xiv,194.)

பள்ளிப் பேறு (பெ) பள்ளிச்சந்த நிலத்தின் பேரில் செலுத்தப்படும் ஒரு வரி (1001) *ஊரார் ராஜகேஸரியால் அட்டக் கடவ பஞ்சவார நெல்லு ஆயிரங்காடிப் பள்ளிப் பேறு தொண்ணூற்று அறு காடி முக்கால்* (SII,xvii,222.)

பள்ளிபடுத்தவிடம் (பெ) இறந்தோரை புதைத்த இடம் (877) *மகுடகடூட்டித சரணந் தமப்பனாரைப் பள்ளிபடுத்த விடத்து* (EI,vii,26a.)

பள்ளி படை (பெ) இறந்தவரின் நினைவாகக் கட்டப்பட்ட கோயில் (941) *பள்ளிபடை வாகீச்வர பண்டித பட்டாரர்* (SII,viii,529.)

பள்ளியறை (பெ) அரசு கட்டில் உள்ள அறை (1144) *மதுரைக் கோயிற் கட்டணத்துப் பள்ளியறையிற் கலிங்கத்தரயன் பள்ளிப்பீடத்தில் எழுந்தருளியிருந்து* (SII,xiv,257.)

பள்ளியறைக் கூடம் (பெ) அரசிருக்கைக் கூடம் (1272) *செயங்கொண்டசோழபுரத்தில் தெற்கிற் தோப்பிற் கோயிற் பள்ளியறைக் கூடத்துக் பள்ளிப் பீடம்* (CHEN,ix,357.)

பள்ளியாள்வார் (பெ) பள்ளியில் வசிக்கும் சமணத் துறவிகள் (911) *பலிசைய்யாஸ்ப் பள்ளியாள்வாரை ஊட்டுவிக்க வைத்தோம்* (SII,iii,97; SII,xix,89.)

பள்ளியாளர் (பெ) சமணர் கோயிலைச் சேர்ந்தவர்கள் (910) *இப்பள்ளிக்கும் இச்சவையார்க்கும் பிழைத்தாராவார் இப்பள்ளியாளர்* (SII,xix,51.)

பள்ளியெழுச்சி (பெ) சுவாமியைக் காலையில் எழுந்தருளப் பண்ணும் பூசை (983) *மூன்று சந்தியும் அர்த்தயாமமும் பள்ளியெழுச்சியுங் கொட்ட கடவார்களாவும்* (SII,xix,326.)

பள்ளி விளாகம் (பெ) புத்தப் பள்ளியைச் சூழவுள்ள இடம் (1090) *ராஜராஜப்*

பெரும்பள்ளிக்குப் பள்ளி நிலையும் பள்ளி விளாகமும் உட்பட எல்லை (EI,xxii,35.)

பளிக்கு வயிரம் (பெ) வயிர வகை (1014) *பளிக்கு வயிரம் எழுபதொன்றினால் நிறை மூன்று மஞ்சாடியுங் குன்றியும்* (SII,ii,3.)

பளிங்கு (பெ) கண்ணாடி (991) *பொன் ஒன்பதிந் கழஞ்சு இதின் மேலேறிந மாணிக்கம் ஆறு பளிங்கு தடவிக் கட்டிந முப்பத்தாறு வையிரம்* (SII,xiii,144.)

பளுக்கு வாணியன் (பெ) கண்ணாடி வாணியன் (1127) *பளுக்கு வாணியன் கழுவல் குழி முன்னூறும்* (SII,vii,540.)

பற்ம முழி (பெ) தாமரை போன்ற ஒரு நகை உறுப்பு (1400) *ஸஹஸ்ரதா ரை சங்கமுழி பற்மமுழி சங்கிலிகை உட்பட எடை எண்பது* (IPS,563.)

பற்றடை (பெ) (=பட்டடை) (1470) *...க்கர வத்தனை பற்றடை சாத்தரவகையும்* (ARE,1912,487)

பற்றாக்குடி (பெ) முழுத்தகுதி பெறாத குடும்பம் (1541) *மாதம் ஒன்றுக்கு முழுக்குடிக்கு பணம் காலும் பற்றாக்குடிக்குப் பணம் அரைக்காலும் இந்த விழுக்காடு கொள்ளக் கடவோம் ஆகவும்* (SII,v,Appx,47.)

பற்றாத (வி) செலுத்த வேண்டாத (999) *கடன் பற்றாத நிலத்து* (TAS,iv,pp.127-30.)

பற்றாமை (வி) செலுத்த முடியாமை (1037) *கடமை கொள்ளக் கடன் பற்றாமையில்* (SII,xiv,154.)

பற்றாமை (வி) போதாமை (911) *இவர்களுக்கு இது பற்றாமையில் இக்காசு கொண்டு* (SII,v,709.)

பற்றாளர் (பெ) வரிவசூல் குத்தகை எடுத்தவர் (1286) *குடுத்தக் குறைவான பணத்துக்கு இப்பற்றாளர்க்கு இவரைக் காட்டிக் குடுத்தல்* (SII,viii,591.)

பற்றி (வி) கவர்ந்து (985) *புதுப்பாக்கத்து ஸபையார் பற்றியுண்டு தேவர்க்கு யிறையிறா தொழிகின்றார்கள் என்று* (SII,iii,142.)

பற்றியாள்கின்ற (வி) உரிமையாகப் பெற்று அனுபவிக்கின்ற (985) *காழிகனாராயண னாராயணன் கூட்டொற்றியாக பற்றியாள்கின்ற தோட்டத்துக்கும்* (SII,xiii,158.)

பற்றிலி (பெ) உரிமையாளர் பற்றாத நிலம் (1187) *காணியாளர் நிலை நின்று பயிர் செய்து கடமை இறாது பற்றிலியாய்* (SII,v,990.)

பற்றின (வி) பிடித்த; கவ்விய (939) *குரைகிராணம் பற்றின அன்று முதலாக* (SII,iii,106.)

பற்றினி (பெ) (=பத்தினி); மனைவி (1406) *என் கொழுந்தன் முதலியார் பற்றினி அன்புடையாச் சானியும்* (SII,iv,825.)

பற்று (பெ) ஆசை (1000) *குழலவிழப் பந்திறைஞ்சிப் பிடிப்பாளிடைக்கே சென்று பற்றுண்டதே* (SII,iv,167.)

பற்று (பெ) உரிமை நிலம் (989) *இள மக்கள் பற்று குன்றியூர் நாட்டு உப்பிலிக் குடியும்* (IPS,123.); (1192) *கீழ் கூற்றி மூர்த்தியாண்டான் பற்றாய் ஐயன் மழவராயர்க்குக் காணியாய் இவர் குடுத்த நிலமும்* (SII,v,301.)

பற்று (பெ) வரி செலுத்தும் தகுதி (1000) *இதன் மேல் பற்று பார்த்து தங்களிசைவினால் ஆண்டு வரை இடுவதாக* (SII,xvii,492.)

பற்று (பெ) வருவாய் (1003) *கல்லேரிக் குளங் கறையையும் பற்றுப் பார்த்து நிவந்தஞ் செய்து தரவேண்டும்* (SII,xvii,243.)

பற்று (பெ) புரவு நிலம் (1157) *இவ்வூர் பற்றான குடிக்காடுகளில் பூத்தவயல் குடிக்காட்டில் நீர் நிலத்துமாத்தால் அரைக்கால் பழய காசும்* (IPS,134.)

பற்று (பெ) ஒன்றுக்கு மாற்றாகக் கணக்கிடல் (1212) *பதிநாற் கோல் தறை பற்றிட்டு* (CHEN,lviii,p.20-21.)

பற்று (பெ) பெற்றுக் கொள்வது (1348) *இதுக்குப் பதினாறு வாசியாக வந்த நெல்லும் மாற்றிட்டு சாவிக்குப் பற்றிட்ட நெல்லுக்குப் பற்றிரட்டி யிறுப் போமாகவும்* (SII,viii,170.)

பற்று (பெ) 13ஆம் நூற்றாண்டிலிருந்து ஒரு சமூக மற்றும் நிர்வாக நிலப் பிரிவு (1278) *பழுவூர் பற்றினாலும் கண்டராதித்தன் பிடகையிலும் பல பற்றிலும்* (AVNM,6,p.33); (1478) *பண்ணங்குடி*

கற்குறிச்சி விக்கிரபாண்டிய நல்லூருள்ளிட்ட பற்றில் ஆண்டு ஒன்றுக்கு (TAS,ix,p.12-14.)

பற்று (பெ) வெற்றிலைக் கட்டு (873) *வெற்றிலைக் கூடையால் ஒரோபற்றும்* (SII,iii,90.)

பற்று (பெ) துணை (961) *இது இறக்குவதற்குப் பற்றானான இவன்* (SII,vii,802.)

பற்று (பெ) போதுமான அளவு (985) *நிலஞ் சுருக்கமாகப் பற்றுப் பார்த்து இப்பன்னிரண்டு மெழுக்கிலும் நிலம் போராதாக* (SII,viii,547.)

பற்று நின்ற (வி) உரிமை யாளனாக இருந்த (1204) *முன்பு பற்று நின்ற மணலூர் ஸோமீச்வரன் சந்திரசேகர பட்டனுக்கும்* (SII,v,412.)

பற்று பிடித்த (வி) நிர்வாகப் பொறுப்புப் பெற்ற (1196) *இக் கோயில் பற்று பிடித்த மணலூர் வாதுலன் ஆராவமுது மாதேவரான* (SII,vii,1041.)

பற்றுப் போக (வி) கெட்டுப்போக (1524) *காணிபணியற்று பற்றுப் போகக் காண்கையாலும்* (SII,xvii,684.)

பற்று மஞ்சள் (பெ) நிறம் பிடிக்கும் பூச்சு மஞ்சள் (887) *மேற்றோல் சிறைத்த பற்று மஞ்சள்* (SII,xiv,16a.)

பற்று முறி (பெ) ரசீது; பெற்றுக் கொண்டதற்கு ஒப்பம் (1328) *தேவகன்மிகளுக்கு இக்கூற்றத்து சேற்றூர் ஊற்க்குச் சமைந்த ஊரோம் பற்று முறி குடுத்த பரிசாவது* (SII,viii,174.)

பற்றேற்றிந (வி) கணக்கில் சேர்த்துள்ள (1068) *யாண்டு இருபத்தாறாவது முதல் பற்றேற்றிந நெல்லு நாநூற்றுக் கலமும்* (SII,iv,529.)

பற்றை கட்டி (வி) வம்பு செய்து (?) (1150) *வீருஞ் சீருமாட்டுத்தாகவும் [ப]ற்றைகட்டி ஏறாதிதாகவும்* (AVNM,9,p.33-34)

பறஞ்ஞு (வி) சொல்லி (1236) *கண்டந் திரு விக்கிரமனும் கூடிப் பறஞ்ஞு ஸபெடியடவில் இறைவரிநிலம்* (TAS,iii,p.59-63.)

பறந்தலை (பெ) போர்க்களம் (1055) *செழு நெதிப் பிறக்கமும் ...யர் குழாமும் பறந்தலை கவர்த்து மாப் பெரும்புகழ்* (SII,v,512.)

பறம்பன் (பெ) தோல் தொழில் செய்பவன் (1000) *கொல்லனும் வண்ணானும் ஈழவனும் பறம்பனும் பறையனும் ஒரோகுடி இருப்பது* (EI,xxxiii,33.)

பறம்பு (பெ) மேட்டு நிலம் (771) *வேலாழிஉம் வியன் பறம்பும்* (EI,xvii,16.)

பறமம் (பெ) ஓர் அணி (1204) *திருக் கொள்கை 1ம் இதன் மேல் பறமமும் உட்பட 8 5/8 மாறி பொன் நூற்றொரு கழஞ்சரை* (SII,iii,211.)

பறவைக் காசு (பெ) நாணய வகை (?) (1510) *பிரசாதம் 3 நாழியும் பறவைக்காசு பற்றிக் கொண்டு இவ்வகைப்படி நடத்திப் போதும்படி கற்பித்து* (TAS,iv,34.)

பறளை (பெ) தகடு (?) (991) *பள்ளித் தொங்கல் 1 இதில் தச்ச மொட்டொன்று பறளை* (SII,xiii,144.)

பறால் (பெ) வயலின் பெயர் (1000) *காவதியார் புறாய் தள்ளிப் பறால் வரகு பறால்* (TAS,ii,pp.173-207.)

பறிக் காணம் (பெ) ஒரு வரி (765) *உறிக்காணமும் பறிக்காணமும்* (EI,xxxvi,20.)

பறிக்கிற (வி) கொய்கிற (1257) *அறுகும் தாளிப் பூஞ் சாத்திப்பறிக்கிற திருத்தொண்டர்களில் நம்பியாரூரர்* (SII,v,418.)

பறி கால் (பெ) வடிநீர்க் கால் (?) (1288) *பொன்னரி வயக்கல் பறிகால்களு* (IPS,402.)

பறிச்சின (பெ) திருடப்பட்ட பொருள் (1218) *திருச்சுல....ட்டி குடுத்து பறிச்சின பிடிசின விடுவோமாகவும்* (IPS,176.)

பறிச்சு (வி) உருவி எடுத்து (919) *முடப்பது குடவோலை பறிச்சு வாரிய(ம்)ஞ் செய்கின்ற* (ARASI,1904-05,p.131.)

பறித்து (வி) கொய்து (1018) *திருப்பள்ளித்தாமம் இத்திரு நந்தவானக் குடிகள் மூவரும் பறித்தட்டக் கடவார்களாகவும்* (SII,vii,889.)

பறித்தோந் (பெ) அழித்தவன் (1179) *பண்டு வெங்கொளி பரிகலம் பறித்தோந்* (EC,x,Kl.132.)

பறிந்து (வி) விரைந்து (1056) *பின்னுற நோக்கி கால் பறிந்தோடி* (SII,iii,29.)

பறிப்பார் (பெ) (பூ) கொய்பவர் (800) *திருப்பள்ளித் தாமம் பறிப்பார்க்கும்* (SII,iii,43.)

பறிப்பான் (பெ) கொய்பவன் (1001) *திரு நன்தவானஞ் செது திருப்பள்ளித் தாமமும் பறிபானுக்கு* (SII,xvii,222.)

பறிப்போர் (பெ) வலிதிற் கவர்வார் (932) *உழுவாரும் விலக்குவாரும் பறிப்போரும் பறிப்போர்க்கு பங்கு செய்தவரும்* (SII,vii,173.)

பறை (பெ) ஒரு முகத்தல் அளவை (1102) *பதினாழிக் கொள்ளும் பறையால் நியதம் ஒரோ பறைச் செய்து* (TAS,v,p.40-46.)

பறை (பெ) ஒரு வகை வாத்தியம் (889) *எழுர்ப் பறை கொட்டி* (SII,xii,106.)

பறைகில் (வி) சொன்னால் (1300) *குடியிருக்குஞ் சூத்திரர் பிராமணரை தூர்வ்வாயகம் பறைகில்ப் பந்திரண்டு காணம் பொன் குடுப்பிது* (TAS,iii,p.194-95.)

பறைச் சுடுகாடு (பெ) பறையருக்கு உரிய சுடுகாடு (1014) *இவ்வூர் ஈழச்சேரியும் பறைச் சேரியும் வெள்ளான் சுடுகாடும் பறைச் சுடுகாடும் கற்கிடையும்* (SII,ii,5.)

பறைச் சேரி (பெ) பறைச் சாதியினர் வாழுமிடம் (960) *விளங்குடி நிலத்தில் பறைச் சேரி பத்து உள்பட* (SII,iii,202; SII,v,718.)

பறைஞ்சு (வி) சொல்லி (1021) *இச் செலவினுக்கு இடையுறு பறைஞ்சு முட்டிக்கு அவன் ஆறரைக் காண பொன்றண்டம்* (EI,xvi,27.)

பறைத் தறி (பெ) ஒரு வரி (1243) *அச்ச தறி சாலிகைத்தறி தூசகத் தறி பறைத் தறி செக்குக் கடமை* (SII,i,64.)

பறைமை (பெ) ஒரு வரி (?) (1284) *ஆதிசண்டேசுர தேவற்கு பறைமை பாடிகாவல் அரைசு கட்டு மற்று மெப்பேற்பட்ட சுதந்தரங்களும்* (IPS,395.)

பறையடிமை (பெ) அடிமை வேலை செய்யும் பறையர் (1683) *அருவயார் மகன் ஆண்டானும் பறையடிமையாவது பறைச்சி உலகுடாச்சி மகள் சாத்தியும்* (TAS,vii,p.44-47.)

பறையர் பேறு (பெ) ஒரு வரி (1280) *கம்மாளர் பேறு கணக்கப் பேறு பறையர் பேறும் ஊரில் குடி நிலங்கள் செய்த மரிசாதி பெறுவார்களாகவும்* (IPS,421.)

பறையர் வெட்டியார் வரி (பெ) ஒரு வரி (1487) *பறையர் வெட்டியார் வரி சாதிவரி* (ARE,1920,54)

பறையறை (பெ) ஒரு வரி (1415) *மாக்கலம் பாடிகாவல் பறையறை ஆள்வரி மறைநப்பணம் புல்வரி கல்வரி* (IPS,623.)

பறையுமவகள் (பெ) சொல்லுகின்றவர்கள் (951) *விலக்குமவகள்க் கனுபந்தம் பறையுமவகளும் இத்தண்டமே படுவது* (TAS,i,p.288-89; TAS,v,p.6-7.)

பறைவிது (வி) சொல்லுவது (992) *விரோத பண்ணுவிதும் பறைவிதுஞ் செய்து முட்டிக்கு மவர்* (TAS,ii,pp.34-37.)

பறை இறை (பெ) ஒரு வரி (1224) *பட்டி பொன் மேராழி பறை இறை அதிகாரப் பொன்* (SII,iv,648.)

பறை உறய் (பெ) பறையர் நெற்களத்தில் வரியாகச் செலுத்தும் தானியம் (1355) *தேவதானப் பற்றுக்கு பறையன் அளப்பதான பறை உறய் முதலான நெல்லு முதல்* (IPS,591.)

பன்நிரண்டு கலனை (பெ) பன்னிரு வகை (தொழில் செய்யும்) சாதியினர் (967) *பழவூர் இரண்டு தளிப் பதியும்ப் பாதமூலமும் இரண்டு நகரமும் பன்நிரண்டு கலனையும் மற்றும்* (SII,xiii,215.)

பன் மருந்து (பெ) பல் வலி மருந்து (936) *பிள்ளையார் இராஜாதித்த தே$_3$வர்க்கு பன்மருந்திடும் சேநன் கோயில்* (SII,vii,954.)

பன்மாயேச்$_0$வரர் (பெ) சிவனடியார் கூட்டம் (985) *தேவகன்மிகளும் உண்ணாழிகையுடையாரும் பன்மாயேச்$_0$வரரும் வந்து* (SII,iii,142.)

பன்மை பண்டை வெட்டி (பெ) ஒரு வரி (1090) *வீர சே$_0$ஷையும் பன்மை பண்டை வெட்டியும் குந்தாலியும் சுங்க மேராழும்* (EI,xxii,35.)

பன்மையார் (பெ) ஒரு வீரர் குழு (900) *இவர்கள் மக்கள் வாள்களாரும் பன்மையாரும் ரக்ஷை* (AVNM,10,p.16-17)

பன்றி (பெ) (1050) *வீரதளத்து முறைமையில் அழியவிருந்தால் பன்றியில் ஒன்றாவதாகவும் நாய்பிணம்* (AVNM,2,p.6-8)

பன்றிக்குறங்கு விலை (பெ) ஒரு வரி (1485) *காடுகாவல்ப் பன்றிக் குறங்கு விலை ஏரிமீன் விலை* (ARE,1916,238)

பன்றி விலை (பெ) ஒரு வரி (1423) *கரணிக்கு சோடி காடுகாவல் பன்றிவிலை சலத்தர வகை* (ARE,1929,247)

பன்னான்கெல்லை (பெ) எல்லை முழுவதும் (909) *இவ்விசைத்த பன்னான்கெல்லை யகப்பட நிலமூன்று மாவும்* (SII,xix,26.)

பன்னி (பெ) பன்றி (1204) *குராற்பசுவை பன்னியாய் நினைத்தான்* (SII,v,494; NI,N.72.)

பன்னிய (வி) சொன்ன (1012) ....*ஜய ஜய வென்று மொழி பன்னிய* (SII,vii,863.)

பன்னிரண்டு (பெ) ஓர் எண் (12) (681) *ஈச்சுவர பருமற்கி பன்னிரண்டாவது* (EI,vii,4 (iii).)

பன்னிரு சாண் கோல் (பெ) பன்னிரண்டு சாண் நீளமுள்ள அளவு கோல் (885) *பன்னிரு சாண் கோலால்* (SII,xii,105.)

பன்னிருவர் (பெ) பன்னிரண்டு பேர் (759) *பன்னிருவர் கூத்திகளை மெய்து குடுத்தேன்* (SII,iv,827.)

பன்னீரட்டைக் கறை (பெ) ஒரு வரி (765) *கமுகும் இட்டன கால் கோட்டிறாமையும் பன்னீராட்டைக் கறை இறாமையும்* (EI,xxxvi,20.)

பன்னீராயிரம் (பெ) ஓர் எண் (12,000) (793) *வடுகவழி பன்னீராயிரமும்* (SII,iii,42.)

பனந்தூம்பின் கால் (பெ) பனைமரத்தைக் குடைந்து செய்த மடை (1016) *பனந் தூம்பிந் கால் வழி ஸ்ரீயாரூர் கழனியில் ஸபைபுப் பொதுவாய்க் கிடந்த* (SII,iii,10.)

பனம்பாக்கு (பெ) ஒரு வரி (753) *நெடும்புறெயும் பனம்பாக்கும்* (SII,ii,73.)

பனி (பெ) குளிர்ந்த (905) *இரவுச் செய்யும் பனி மதிஉம்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பனி நீர் (பெ) பன்னீர் (1250) *திருப்பரிவட்டங்களுக்கும் திருமேற்பூச்சுக் கற்பூரம் பனி நீர் உள்ளிட்டனத்துக்கும்* (SII,iv,814.)

பனிப்ப (வி) வேர்த்து நடுங்க (905) *பகைப் பூபர் தலை பனிப்ப வந்து தோன்றிய* (TASSI,1962-65,p.1-31; PNDCP, p.95-115.)

பனுவல் (பெ) பாடல் (905) *தும்புரு நாரதர் பனுவனரப்பிசை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பனுவல் (பெ) நூல் (966) *வட நூல் வகையு நீதி நூலையு மேதகு புராணமும் பாதஞ்சல முதற் பனுவற் பயன்களும்* (SII,xiv,87.)

பனை (பெ) பனைமரம் (764) *முதுகாட்டகப்பட்ட பனைய் நிலம் இத்தனையும்* (TAMIZ,1970, p.124.)

பச்$_0$சிம தி$_3$க்கு (பெ) மேற்குத் திசை (883) *இவ்வூரில் பச்$_0$சிம தி$_3$க்கிலேய்* (SII,vii,633.)

பசு$_0$பதி (பெ) சிவ பெருமான் (771) *பசு$_0$பதியது பந்$_0$மபாத$_3$ம் பணிந்தேத்தி* (EI,xvii,16.)

பா

பா (பெ) காவல் (771) *வேலை சூழ்ந்த வியலிடத்துக் கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கி* (EI,xvii,16.)

பா (பெ) பாடல் (905) *தமிழின் பாத்தொகு பொருள் பயனுணர்வோன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பாக்கம் (பெ) சிறு மூட்டை (1300) *உப்புப் பாக்கத்துக்கு காசு அரையும் உப்புத் தலைச்சுமை ஒன்றுக்கு* (SII,viii,442.)

பாக்கு (பெ) அடைக்காய் (870) *அட்டுவனவும் பாக்கும்* (SII,xix,163.)

பாக்கு கட்டாயம் (பெ) ஒரு வரி (1463) *தங்கள் பேற்கு காணிக்கை கட்டாயம் பாக்கு கட்டாயம் தலையாரிக்கம்* (ARE,1921,413)

பாக்குத் தரகு (பெ) பாக்குக்கான வரி (1465) *உண்டிகை நூல்தரகு பாக்குத்தரகு பீடிகைகூலி செக்கிறை தறிக்கடமை* (TAS,vi,82.)

பாக்குப் பொதி (பெ) பாக்கு மூட்டை (1300) *பாக்கு பொதி ஒன்றுக்கு காசு (நா)லும்* (SII,viii,442.)

பாகம் (பெ) பங்கு (765) *சேயாற்றுள்பாகம் பெறவும்* (EI,xxxvi,20.)

பாக சா$_0$ஸநன் (பெ) இந்திரன் (921) *பாக சா$_0$ஸநன் ஆரம் வவ்விஉஞ் செம்மணிப் பூணொடு* (SII,iii,206a.)

பாகு (பெ) பாக்கு (1000) *அன்று பாகிடுவான் பதினாயிரம் வெற்றிலைக்கு* (TAS,ii,pp.173-207.)

பாகு (பெ) இளகக்காய்ச்சிய வெல்லம் (985) *மாவில் குழைக்க முப்பலமும் பாகுக்கு சற்கரை அமுது ஒரு பலம்* (SII,viii,547.)

பாகு வலையம் (பெ) தோள் வளை (1233) *திருப்பிறை பாகுவலையம் இரண்டும் திருக்கைச் சரி இரண்டும்* (SII,xvii,455.)

பாங்கு (பெ) தோழமை (785) *பல்லவனுங் கேரளனு மாங்கவற்குப் பாங்காகி* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

பாங்கு (பெ) அழகு (862) *பண்ணமர் கோ இல் பாங்குறச் செய்வித்து* (SII,xiv,45.)

பாங்ஙு பறைய (வி) ஒத்துச் சொல்ல (1000) *விலக்கவும் விலக்குமவனு பாங்ஙு பறையவும் பெறார்* (TAS,ii,pp.173-207.)

பாச்சிக் கொள்ள (வி) நீரைப் பாய்ச்சிக்கொள்ள (926) *சென்நீர் வெட்டி செய்யாதேய் அன்நீர் கொண்டு பாச்சிக் கொள்ளப் பெறுவதாக* (SII,viii,688.)

பாச மாலை (பெ) கழுத்தணி வகை (1014) *இவர்க்குக் குடுத்தன பாசமாலை கீழ்* (SII,ii,56.)

பாசி (பெ) மீன் (1369) *குளங்களில் நீரும் பாசியு மற்றும் எப்பேற்பட்ட* (IPS,459.)

பாசி (பெ) நீர்ப்பாசம் (1453) *பாசி தூத்துக் கிடந்த பார் மகட்குப் பண்டொரு நாள் மாசுடம்பில் நீர்வார மானமிலாப் பன்றியான தேசுடை தேவர்* (CHEN,v,pp.437-41.)

பாசிப் பாட்டம் (பெ) ஒரு வரி (1268) *இவ்விழுக்காடு பாசிப்பாட்டமும் இந்நிலத்து மேனோக்கின மரமும் கீணோக்கின கிணறும்* (IPS,375.)

பாசி பற்று (பெ) மீன் பிடித்தல் மூலம் வரும் வருவாய் (1042) *குளத்தில் பாசிபற்றுக் கொண்டு சங்கிரண்டுதுவாராகவும்* (SII,v,726.)

பாசு (வி) பசுமை (1024) *வெஞ்சிலை வீரர் பஞ்சப் பள்ளியும் பாசுடைப் பழநன் மாசுணி தேசமு* (SII,i,68.)

பாசுபதம் (பெ) சிவமதத்தில் ஒரு பிரிவு (922) *பாசுபதப் பெருமக்களோ... இருந்து* (SII,xiv,66.)

பாசு வலை (பெ) மீன்பிடி உரிமை (1646) *ஊத்த பாட்டும் உலாவுகாச்செயும் பாசுவலையும் மற்றும் எப்பேபட்டதும்* (TAS,iv,p.152-60.)

பாஞ்ச (வி) (நீர்) பாய்ந்த (986) *பள்ள மதகாறு பாஞ்ச நிலத்துள்* (SII,iii,128.)

பாஞ்சாள் (வி) புகுந்தாள் (1069) *மணவாட்டிப் பிள்ளை பொன்நக்கன் உடநே தீயில் பாஞ்சாள்* (EC,x,Ct.161.)

பாட்டஞ் செய்து (வி) வளர்த்து (1015) *இவ்வாடு தொண்ணூற்றாறுங் கொண்டு பாட்டஞ் செய்து நிசதம் உழக்கு* (SII,viii,745.)

பாட்டஞ் செய கடவான் (வி) பராமரிப்பான் (1022) *ஆடு தொண்ணூறைஞ்சு இவை கைக்கொண்டு பாட்டஞ் செய கடவான் வழுதவூரிருக்கு மன்றாடி* (SII,xvii,186.)

பாட்டத்தாளன் (பெ) குத்தகை எடுத்தவன் (1014) *ஆடு மூன்றாக வைத்த காசில் பாட்டத்தாளன் கலியன் பரதன் கொண்ட காசு* (SII,ii,6.)

பாட்ட நெல் (பெ) உழுகுடிகள் நிலக்கிழாருக்கு செலுத்தும் நெல் (880) *முழப்பட்டி பாட்ட நெல்லிருபதின் காடியும்* (SII,xii,103.)

பாட்டப் பற்று (பெ) விளைநிலம் (?) (1272) *கோயில் வாய்க்காலால் நீர் பாஞ்சு னெல் விளையும் பாட்டப்பற்றாய் இறையிலியாய் போந்த நிலம்* (IPS,392.)

பாட்டம் (பெ) வரியைக் குறிக்கும் ஒரு பின்னொட்டுச் சொல் (789) *ஈழம்பூட்சியும் மிடைப்பூட்சியுங் கூலமும் தரகு பாட்டமும்* (SII,ii,99.)

பாட்டம் (பெ) குத்தகை (985) *வாணகப் பாடியும் [மேரா] முஞ் சுங்கமும் பாட்டத்துக்கு ஆழ்கின்ற* (SII,xix,351.)

பாட்டம் பதிந்து (வி) குத்தகை எழுதி (1515) *திருவிடையாட்டமாகக் கையாண்டு இந்த ஊரில் ஒன்று பாதி நிலம் நயினாற்குப் பாட்டம் பதிந்து கொள்ள வென்றும்* (SII,viii,395.)

பாட்டமார் (பெ) தாய்தந்தையரின் அப்பாக்கள் (1247) *அவிநாசி சாந்தாரைக் காபாநும் இவர்கள் பாட்டமாரும் தவப்பநும்* (AVNM,7,p.36-37)

பாட்டம் ஆள (வி) குத்தகைக்கு நிலத்தை உழுது பயிர் செய்ய (960) *அவகள்க்கு சார்ந்நவர்களாக பாட்டமாளப் பெறார்* (TAS,iii,p.159-69.)

பாட்டம் ஆளன் (பெ) குத்தகைக்கு நிலத்தைப் பயிர் செய்யும் உரிமையுடையவன் (960) *இச்செலவு முட்டுகில் முட்டிரட்டி செலுத்த கடவியர் பாட்டமாளன்* (TAS,iii,p.159-69.)

பாட்ட வரிசை (பெ) வரிவீதம் (1474) *குளத்தில் ஆண்டு ஒன்றுக்குப் பாட்ட வரிசைப் படி முதலாகிற கோட்டை நூற்று எண்பத்து* (SII,viii,444.)

பாட்டன் (பெ) பெற்றோரின் தந்தை (1321) *நாயனாற்குச் சென்நெற்படிக்கு என் பாட்டன் போதே தேவதானமாய் வருகிற* (EC,x,Kl.77.)

பாட்டால் (பெ) ஒரு மனதாக (?) (1000) *கண்ணாங்கண்டனும் பணியுடையவகளும் அறுநூற்றுவருந் நிழலோடும் பாட்டாற் செய்த காரிஇமாவது* (SII,v,784.)

பாட்டிமையினாள் (பெ) முதல் திதி (1537) *புரட்டாசி மாஸத்தில் வியச தெசமிப் படியாய் பாட்டிமையினாள் மலைகுநிய நின்ற பெருமாளும் னாச்சிமாரும்* (TDI,iv,100.)

பாட்டுவிக்க (வி) பாட்டுக் கற்பிக்க (1142) *தேவரடியாரைப் பாட்டுவிக்கவும்* (SII,v,705.)

பாட்டொலி (பெ) பாடும் இசை (1012) *பாட்டொலிக் கருங்கைக் கடையர்* (SII,vii,863.)

பாடகம் (பெ) காலில் அணியும் ஒரு நகை (1012) *முப்புரி நூலோர் பிரியாத் தன்மைப் பெருந்திருவுடையது பாடகச் சீறடி* (SII,vii,863.)

பாடகம் (பெ) ஒரு நில அளவு (755) *பங்கின் வழி முதலிட்டு நாலாம் பாடகமும்* (SII,vi,356.)

பாடவியன் (பெ) பாடவியம் என்னும் ஒரு வகை வாத்தியம் வாசிப்பவன் (1072) *நெல் நூற்றைங்கலம் அகப்பட பாடவியன் ஒருவனுக்கு* (EC,x,Kl.106 (d).)

பாடாரர் (பெ) (=படாரர்); மூல விக்கிரகம் (925) *திரு மூலபாதத்து பாடாரர்க் கட்டிகுடுத்த* (TAS,i,p.187-93.)

பாடாவரி (பெ) நெருக்கடி காலத்தில் வசூலிக்கும் ஒரு வரி (1443) *நாட்டுவினிவோகம் பட்டிறை பாடாவரி பழவரி புதுவரி* (ARE,1929,250)

பாடாவிரி (பெ) (= பாடாவரி) (1421) *இப்பணம் அஞ்சும் ஒழிந்து பட்டிறை பாடாவிரி ஆளமஞ்சி வந்தாலும்* (AVNM,4,p.17-18)

பாடி (வி) புகழ்ந்து (800) *தஞ்சைத் திறம் பாடி நின்றார்* (EI,xiii,10.)

பாடி காப்பார் (பெ) பாடிகாவல் தொழில் செய்வோர் (964) *மத்யஸ்தர்களையும் பாடிகாப்பார்களையும் உள்ளிட்ட ஸபைபுப் பணி செய்தார்* (SII,vi,362.)

பாடிகாவல் (பெ) ஊர், நாடு முதலியவற்றைக் காத்தல்; அதன் பொருட்டுத் தண்டும் வரி (1168) *நின்ற நிலத்துக்கு மர மஞ்சாடி பாடி காவலும் வேண்டுகோளும்* (SII,vii,890.)

பாடிகாவல் கூலி (பெ) நாட்டுப் பகுதிகளைக் காத்தலுக்குண்டான வரி (1056) *காலளவு பாட்டமும் பாடிகாவல் கூலியும் கால் கூலியும்* (TAS,i,p.164-68.)

பாடிகாவல் சுவந்தரம் (பெ) பாடிகாவல் ஊழியம் பொருட்டு பெறும் உரிமைகள் (1374) *ஊரவரும்*

பாடிகாவல் சுவந்தரம் பண்ணிக்குடுத்த பரிசாவது (IPS,681)

பாடிகாவலர் (பெ) பாடி காவல் வேலை செய்பவர் (1225) *ஊரவரும் பாடிகாவலரும் பெருக ஊரவரும்* (TDI,i,36.)

பாடிகாவற் கூலி (பெ) காவல் பொருட்டு செலுத்தும் வரி (985) *கொண்டு வரும் பாடி காவற் கூலி இக்கோயில் திரு அலகு திருமெழுக்கு இடுவார்க்கு* (SII,viii,719.)

பாடின (வி) பாடலாக இயற்றிய (771) *இப்ப்ரச$_{0}$ஸ்தி பாடின சேனாபதி* (EI,xvii,16.)

பாடினார் (பெ) (பாடலாக)இயற்றியவர்கள் (800) *பாடினார் பேர்களும்* (EI,xiii,10.)

பாடினோன் (பெ) பாடலாக இயற்றியவன் (905) *இதற்குச் செழுந் தமிழ் பாடினோன்றாதை நிருபசே$_{0}$கரப் பெருங்கொல்லன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பாடு (பெ) குறிபிட்ட விதை கொள்ளக்கூடிய நிலம் (932) *நாற் கலப்பாடு இளங்கண்டு முப்பதின் துணிப்பாடு* (SII,vii,173.)

பாடு (பெ) அளவு (1000) *குளா வறையி இறைவரி முக்குறுணிப் பாடும் இது செலுத்துவது* (TAS,ii,p.79.)

பாடு (வி) பக்கம் (1000) *நாரணமங்கலத்து மேல் பாடே போடின முள்ளி வாயின்* (TASSI,1958-59, p.84.)

பாடு (பெ) பரப்பளவு (1100) *புது மண்ணிற் கலப்பாடு குச மண்ணாலியால் பதின்றுணிப் பாடும்* (SII,vii,172.)

பாடு (இ) ஏழாம் வேற்றுமை உருபு (771) *கூடற்பாடு நின்றவர்* (EI,xvii,16.)

பாடு (பெ) பக்கம் (953) *எங்களூரின் றென் பாடே யெங்கள் பொது நிலத்துக்கு கீழ்பாற் கெல்லை* (SII,xiii,51.)

பாடுகிற (வி) இசை பாடும் (1009) *உடுக்கை வாசிக்கற பாவை யொன்று பாடுகிற பாவை யொன்று* (SII,v,521.)

பாடு தாங்குமவன் (பெ) துணை நிற்பவன் (973) *அவன்கு பாடு தாங்குமவனும் இப்பரிசே தண்டப்படுவிது* (EI,ix,32; TAS,iv,p.1-11.)

பாடு தாங்ஙிமவர் (பெ) துணை நிற்பவர் (992) *பொன்றண்டப்படக் கடவியர் பாடு தாங்ஙிமவரையு* (TAS,ii, pp.34-37.)

பாடு தாங்ஙுமவன் (பெ) துணை நிற்பவன் (976) *பாடு தாங்ஙுமவநுமித் தண்டம் படக் கடவியன்* (TAS,v,p.176-78; TAS,ii,p.33.)

பாடு தாங்ஙுவிது (வி) துணை நிற்பது (1092) *பூமியும் புரையிடமும் பத்தாயமும் விடுவ்விதாக பாடுதாங்ஙுவிதாக செய்தவனும்* (TAS,v,p.172-76.)

பாடுவார் (பெ) ஓதுபவர்கள் (850) *திருப்பதியம் பாடுவார்* (SII,iii,43.)

பாண்டங்கர் (பெ) பண்டாரம் பொறுப்புடையவர் (?) (500) *செயும் பாண்டங்கரும் சேவுக்கரும் விருமச்சாரிகள்ளும்* (AVNM,1,p.67-69)

பாண்டி நாடு (பெ) பாண்டிய அரச குலத்தின் உரிமையான நாடு (500) *பண்டிநாட்டுங் கொங்குநாட்டும் மவரு காராணக்கிழமையும்* (AVNM,1,p.67-69)

பாண்டியர் (பெ) பாண்டிய மனனர்கள் (833) *பாண்டியர் பலர் கழிந்த பின்னை* (SII,xiv,44.)

பாண்டி வரி (பெ) ஒரு வரி (1330) *கடமை ஆயம் உள்ளிட்ட பல தானிய வர்க்கமும் பாண்டிவரி பலவரி காணிக்கை வேண்டுகோள்வரி மலை அமஞ்சியும்* (TDI,i,99.)

பாண்ட்$_{3}$ய நாத$_{2}$ந் (பெ) பாண்டிய அரசன் (785) *பாண்ட்$_{3}$ய நாத$_{2}$ந் பண்டி$_{3}$த வத்ஸலந்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

பாண்ட்$_{3}$ய வம்ச$_{0}$ம் (பெ) பாண்டியர் குலம் (815) *பாண்ட்$_{3}$ய வம்ச$_{0}$த் தொலோக நாத$_{2}$ர் பலர்* (SII,iii,206b.)

பாண்ட்$_{3}$யாதி$_{4}$ராஜன் (பெ) பாண்டியப் பேரரசன் (771) *பல்யாக முதுகுடுமிப் பெருவழுதி என்னும் பாண்ட்$_{3}$யாதி$_{4}$ராஜனானாக* (EI,xvii,16.)

பாண் மகன் (பெ) பாணன் (800) *பாண்மகனேய் பண்டெலாம்* (EI,xiii,10.)

பாண காணி (பெ) பாணர் தொழில் செய்யும் உரிமை (1142) *தேவதாநமாந ஊர்கள்ளில்லே பாணகாணியும் நில ஜீவிதமுமாக அடைத்து* (SII,v,705.)

பாண பேறு (பெ) பாணர் தம் தொழிலுக்காகத் துய்க்கும் உரிமை (1142) *இக் கோயிலில் பாண பேறாக முன்பு பெற்று வரும் காசும் நெல்லும்* (SII,v,705.)

பாணர் (பெ) இசை பாடும் ஒரு சாதியினர் (1134) *பெரும் புலவரும் அருங்கவிஞரு நாட்புறு நல்லிசைப் பாணரும் கோடியவரும்* (siiv,645.)

பாணன் (பெ) பாண் சாதியைச் சேர்ந்தவன் (1014) *பாணன் உத்தமன் சுற்றியான அரிகுலகேஸரிச் சாக்கைக்கு* (SII,ii,66.)

பாணி [*பார்.* நிவப்பாணி]

பாணி (பெ) நாடு (1080) *கங்க மண்டலமுஞ் சிங்கண வென்னும் பாணியிரண்டும் ஒருவிசைக் கைக்கொண்டாரமுந்* (EC,x,Mb.47.)

பாணிச் சாய் (பெ) முத்துவகை (1014) *ஒப்புமுத்துங் குறுமுத்துஞ் சப்பத்தியுஞ் சக்கத்துங் கறடும் நிம்பொளமும் பயிட்டமும் பாணிச்சாய்ந் தோல் தேய்ந்தனவுந் தோலிடந் தனவுஞ்* (SII,ii,34.)

பாணிச்சாய் (பெ) முத்து வகை (1014) *சக்கத்துங் கறடும் நிம்போளமும் பயிட்டமும் பாணிச்சாயுந் தோல் தேய்ந்தனவுந்* (SII,ii,34.)

பாத்தருளி (வி) பார்த்து (1250) *சோழ மண்டலம் பாத்தருளிக் காவேரி ஆற்றுக்குத் தென் கரையே கிழக்கு நோக்கி எழுந்தருளி* (SII,xii,129.)

பாத்தி (பெ) விளை நிலத்தைக் குறிக்கும் பொதுச் சொல் (987) *என்னுடைய கமுகம் பாத்திக்கு எல்லைய்* (SII,xiii,12.)

பாத்தி (பெ) ஒரு நில அளவு (891) *நூறுபாத்தியின் உத்தேசமும் மிகுதிக்குறைமை உள்ளடங்க* (SII,viii,634.)

பாத்திர சேஷம் (பெ) சமைத்த பாத்திரத்தில் மீதமுள்ள சோறு (1223) *திருவத்தயமத்துக்கு நாள் ஒன்றுக்குப் பாத்திரசேஷம் உள்பட இருதூம்பிருநாழி அரிசியும்* (TDI,i,35.)

பாத்திரம் (பெ) கலம் (1009) *தூப்பாத்திர ஒன்றின் நிறை* (SII,v,521.)

பாதகம் (பெ) பெரும் பாவம் (884) *ஆயிரங்குரலாக் கொன்ற பாதகமெய்துவானான்* (SII,vi,325.)

பாதகர் (பெ) பாவியர் (1073) *குராலும் வாரணவாஸியும் அழித்தவந்து மஹா பாதகராவர்* (EC,x,Mb.119.)

பாதகாரி (பெ) கோத்திரப் பெயர் (910) *பாரதாயன் நக்கன் சாத்தன் உள்ளிட்டாரும் பாதகாரி மருதஞ் சேந்தனும்* (SII,viii,630.)

பாதச் சுற்று (பெ) ஒரு நகை (1007) *நாற் சாண் உசரத்து அஞ்சாண் பாதச் சுற்றில் மேற்படி உள்க் கருவும்* (TAMIZ,xviii,p.100-101.)

பாத சாயலம் (பெ) காலில் அணியும் ஒரு நகை (970) *பொன்னின் மணியும் பவழமும் முத்தும் ஆக 2552 பாதசாயலம் 2ம்* (TDI,i,8.)

பாதசிவர் (பெ) (=பாரசிவர்): துர்கை கோயில் பூசாரி (985) *பிரானதி... வழிபடும் பாதசிவர்க்கு ச்ஙிலாலேகை* (SII,xiii,343.)

பாதஞ்சலம் (பெ) பதஞ்சலி யோக நூல் (966) *வரிசையிலமைந்த வட நூல் வகையு நீதி நூலையு மேதகு புராணமும் பாதஞ்சலமுதல்* (SII,xiv,87.)

பாத தூளி (பெ) கால்த் தூசு (818) *தர்ம்மம் ரக்ஷித்தார் பாததூளி என் தலை மேலன* (SII,xiii,322.)

பாத பீடம் (பெ) விக்கிரகத்தின் அடிகளை தாங்கும் ஆசனம் (986) *செந்தரா பாதபீடம் நிறை* (SII,xix,399.)

பாதம் (பெ) காலின் அடி (849) *ரக்ஷித்தார் ஸ்ரீ பாதம் என்றலைய் மேலது* (SII,xii,47.)

பாதம் (பெ) இருக்கு முதலிய வேதங்கள் ஓதும் வகை (866) *நாலு பாதத்திலுந் துருச் சொல்லி* (TAS,i,p.1-14.)

பாதமூலம் (பெ) சிவன் கோயில் பூசாரிகளில் தலைமையானவர் (873) *சிற்றம்பர் பதியும்*

பாதமூலத்தோமும் இது பந்மாஹேச்$_{0}$வரர் ரக்ஷை (SII,xiv,10.)

பாதமூலி (பெ) கால் (861) *பாதமூலிகளில் நடந்து சேற்து கொள்வார்க்கு* (TAS,ii,p.85-86.)

பாதரி (பெ) பூ மர வகை (1120) *மல்லிகை கிஞ்சுக மஞ்சரி பாதரி புன்னை* (EC,x,Sd.9.)

பாதன் (பெ) பாதங்களை உடையவன் (1006) *குலைபுரியும் படை அரைசர் கொண்டாடும் பாதன் குணவீர மாமுநிவன்* (SII,i,66.)

பாத$_3$ பாச$_0$ம் (பெ) காணிக்கை (985) *மாகாளத்து பர்மேச்$_0$வரி பெற்ற அவியும் அர்ச்சனா போகமும் பிடியும் பீடிலிகை வாரியும் பாத$_3$பாச$_0$மும்* (SII,v,589.)

பாத$_3$ பூஜை (பெ) பெரியவர்கள் திருவடிகளை மலர் முதலிய இட்டு வழி படுகை (1162) *ஸ்ரீநாரஸிம்ஹ தே$_3$வநுக்கு நாந் பாத$_3$ பூஜை இட்டு* (EC,xiv,sr.235.)

பாத$_3$ம் (பெ) அடி (771) *பந்மபாத$_3$ம் பணிந்தேத்தி* (EI,xviii,16.)

பாத$_3$ ரக்ஷை (பெ) செருப்பு (1300) *புறப்பட வேண்டும் இடங்களுக்கு பாத$_3$ ரக்ஷை கோத்துக் கொள்ளவும்* (SII,iii,25.)

பாத$_3$ சா$_0$யலம் (பெ) காலணி வகை (1014) *பாத$_3$சா$_0$யலம் ஒரணை பொன் நூற்று ஒன்பதின்* (SII,ii,2.)

பாத$_3$சி$_0$வ ஆசார்ய்யன் (பெ) (= பாரசிவன்): காளி கோயில் பூசாரி (985) *ராஜகேசரி மாகாளத்து பரமேச்$_0$வரி பெற்ற அவியும் ... பாத$_3$சிவ ஆசார்ய்யன் அகோ$_4$ரேச்$_0$வரன் திரு மேற்றளி* (SII,v,589.)

பாத$_3$ ஸ்பர்ச$_0$னை (பெ) அடிவருடல் (905) *பூமகள் பாத$_3$ஸ்பர்ச$_0$னை செய்ய* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பாதி (பெ) அரைப் பகுதி (1021) *பாதி பிராமணர் அமிர்தி செய்விது பாதிச் சோறுந் நீராட்டுப் பள்ளிக்கு* (EI,xvi,27.)

பாதி (பெ) அரைப்பாகம் (894) *பயமரத்தில் பாதியும்* (SII,xiii,302.)

பாதிகாவல் (பெ) (= பாடிகாவல்) (1798) *யிந்தப் பாதிகாவல் கிராமங்களில் யெப்பேர்ப்பட்ட குத்தங்களிருந்தாலும்* (IPS,763)

பாதி பாடு (பெ) பாதிப்பாகம் (1209) *நானாழி அரிசியும் குடுத்து திருபோதும் செய்து பாதிபாடு சோறு கொண்டு* (KANDT,1968/150.)

பாதுகாவல் (பெ) (= பாடிகாவல்) (1518) *காரையூற் பறையன் என்று பட்டமுங் கட்டிப் பாதுகாவல் சுவந்திரமும் பண்ணி* (IPS,843)

பாதை (பெ) பெருவழி (?) (1100) *நாட்டுக்கு இசங்கும் பாதைகளால் இரண்டு விட்டமு பீடிலிகை வாரியும்* (SII,iv,1412.)

பாந்த (வி) (நீர்) பாய்ந்த (992) *குசவன் பட்டிக்குப் பாந்த வாய்க்காலுக்கு வடக்கும்* (SII,iii,50.)

பாந்தல் (பெ) சிறிய நீர் நிலை (1205) *நாற்பால் எல்லைக்குள் ஏந்தல் பாந்தல் உள்பட நன்சை புன்சை நிலமும்* (SII,viii,149.)

பாநீய வ்ருத்தி (பெ) நீர் வழங்கும் பணிக்காக விட்ட நிலம் (1346) *முன்னாள் ளாந் இவர் பக்கல் பாநீய வ்ருத்திக்கு கொண்டுவிட்ட நிலம்* (SII,iv,353.)

பாப்பார் (பெ) அரசத்தூதுப் பணி செய்த பிராமணர் (1213) *நம் பாப்பாரை போதக் கூட்டச் சொன்னோம்* (AVNM,7,p.52-53)

பாப்பார் (பெ) பிராமணர் (765) *நல்கூர் நற்பாப்பார்* (EI,xxxvi.20.)

பாப்பார் சான்றார் (பெ) அந்தணகுல பெருமக்கள் (809) *பெரும் பழஞ்சிப் பாப்பார் சான்றாரேய் காத்துட்டுவதாக* (SII,xiv,40.)

பாப்பான் பட்டி (பெ) பிராமணருக்குக் கொடுத்த மானிய நிலம் (880) *வைஜ்ய போ$_4$க$_3$மும் பாப்பான் பட்டியும்* (SII,xii,102.)

பாபகர்ம்மாக்கள் (பெ) பாவிகள் (1344) *வலாற்காரத்தாலே யாதல் பறித்துக் கொண்ட*

பாபகர்ம்மாக்கள் நூற்று முப்பத்தாறு நரகங்களிலும் வெந்து (UCR,xviii,p.16-23.)

பாப பலம் (பெ) தீவினையின் விளைவு (1000) *இதர்ம்மத்துக்கு விரோதம் வேண்டிநார் கெங்கா கந்யாந்தஞ் செய்தார் செய்த பாபபலம் அநுபவிப்பாராகவும்* (SII,v,873.)

பாப பீ₄ரு (பெ) தீமைகள் செய்ய அஞ்சுபவன் (771) *பண்டி₃த வத்ஸலந் பரிபூர்ண்ணந் பாபபீ₄ரு* (EI,xvii,16.)

பாபம் (பெ) தீச்செயலின் பயன் (805) *பணியும் பிழைத் தறமிறக்கின பாபமும் படுவார்* (SII,vi,359.)

பாமாலை (பெ) பாட்டுத் தொகுதி (1122) *பாமாலை மலிந்த பருமணித் திரள் புயத் திருநில மடந்தை* (SII,xvii,607.)

பாய் (பெ) கோரை முதலியவற்றால் முடைந்த விரிப்பு வகை (1355) *முறம் பெரும்பாய் கூடை கூனும் திருநாள்கள் தோறும் ஸ்ரீ பண்டாரத்திலே விட்டுப் போதக் கடவதாகவும்* (TDI,i,16.)

பாய் (வி) தாவிச் செல்லும் (1200) *தெவ்வர் பாய் பரித்தானை கலக்குவதே* (SII,vii,123.)

பாய் (வி) புகும் (905) *காயல் பாய் கடல் போல* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பாய்ச்சல் (பெ) நீர்ப் பாசனம் (1034) *இரு பூ ஆறு பாய்ச்சல் நில ஆறு வேலியும்* (SII,xiv,144; EI,xi,30.)

பாய்த்த (வி) நீர் பாய்ச்ச (789) *கூற்றன் பாய் மீதேய் உவன்றி செய்து நீர் கொண்டு போந்து பாய்த்தப் பெறுவதாகவும்* (SII,ii,99.)

பாய்ந்த (வி) நீர் சென்ற (890) *அந்தனூர் பாய்ந்த தியாமுக வாய்க்கால்* (SII,v,537.)

பாய்ந்து (வி) வேகமாய்ச் சென்று (1012) *குறிஞ்சி யுங் கோகுடியு முகடுயர் குன்றிற் பறிந்துடன் விழப் பாய்ந்து* (SII,vii,863.)

பாய் விரிந்து (வி) நிழல் தந்து (?) (700) *மண்ணா ருலகளவும் பாய்விரிந்து வானுரிஞ்சிற்றறிதாரம் போல்* (AVNM,7,p.13-14)

பாயதம் (பெ) பாயசம் (1506) *பாயதத்தின் வகைக்கமுதுபடி நெல் சற்கரை* (TAS,vi,115.)

பாயப் பாகாடி (பெ) (இலங்கையில்) ஒரு வரி (1014) *நிலன்...பத்தொன்பதே காலிநால் பாவு மனைத்தும் பாயப்பாகாடி தறாண்டுவச்சால் உட்பட இறை கட்டின காணிக்கடன்* (SII,ii,92.)

பாயல் (பெ) பரந்த இடம் (771) *காயலுட் கமலம் மலரும் பாயலுள் வட பாலை* (EI,xvii,16.)

பாயல் (பெ) படுக்கை (905) *பாயல் மீமிசை நிமிர்ந்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பாயல் (பெ) போர்க்களம் (921) *போர்க் குன்றாயிரம் மீசிஉம் பாழியம் பாயலினிமிர்ந்தும் பஞ்சவனெனும் பெயர் நிறீஉம்* (SII,iii,206a.)

பாயாஸ அரிவாணம் (பெ) பாயசப் பிரசாதம் (1464) *பாயஸத்தில் சமைக்கிற பாயஸ அரிவாணம் ஒன்றுக்கு அமுதுபடி ஒரு மரக்காலும்* (TDI,ii,18.)

பாயும் (வி) நீர் செல்லும் (962) *வாய்த்தலையாறு பண்டு பாயும் பரிசே நீர் பாயப் பெறுவதாகவும்* (SII,xiii,151.)

பாயும் வழி (பெ) நீர் செல்லும் வழி (1006) *காராண்மை மீகாட்சியும் புகுவழி புகவும் போருவழி போதவும் பாயும்வழி பாயவும்* (SII,v,518.)

பார் (பெ) உலகம் (771) *பாரளவுந் தனிச் செங்கோல்* (EI,xvii,16.)

பார்க்கோல் (பெ) ஒரு மரியாதைச் சின்னம் (849) *பார்க் கோலுங் கப்பானும் பைஞ்சக் கண்டியும்* (TAS,ii, p.67-68.)

பார்காவல் (பெ) உலகை ஆளல் (905) *பார் வேந்தரேனைப் பலரும் பார்காவல் பூண்டுத்* (TASSI,1962-65,pp.1-31; PNDCP,p.95-115.)

பார்த்தி (பெ) ஒரு நில அளவு (985) *இறை இறுத்துப்போந்த நிலம் இவ்வூர் வடசேரி மேடு பார்த்தியுஞ் செறுவு பார்த்தியுமான பார்த்தி* (SII,xix,370.)

பார்த்திவ (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1225) *பார்த்திவ சம்மற்சரத்து* (EC,x,Mb.53.)

பார்த்திவர் (பெ) அரசர் (1036) *பொற்கள வனத்துப் பார்த்திவர் ரானார் முன்னருஞ் செய்தறியாது* (SII,iv,223.)

பார்த்து நின்று (வி) எதிர்பார்த்திருந்து (805) *பரமன் படைத்த நாள் பார்த்து நின்று* (SII,xii,40; EI,xi,15.)

பார் மங்கை (பெ) பூமிதேவி (900) *பார் மங்கை தன் விரும்பும் பல்லவமாராயன்* (EI,vii,5.)

பார்வை (பெ) சோதித்துப் பார்த்தமைக்குச் சாட்சி (1431) *குளிகைபணம் 176 தட்டான் குறும்பன் பார்வையாக ... குடுத்து* (ARE,1934,127)

பாரகலம் (பெ) உலகம் (815) *பராவனிப குலமிறஞ்சப் பாரகலம் பொது நீக்கி* (SII,iii,206b.)

பார கூலி (பெ) தூக்கிச் செல்ல ஆகும் செலவு (997) *பார கூலியும் சுங்கமும் பட்டு* (SII,i,146.)

பாரசிவர்கள் (பெ) சிவன் கோயில் பூசாரிகளில் ஒரு வகை (1400) *இக் கோயிற் காணி உடைய பாரசிவர்கள் இவ்வூர் நன்மைத் தீன்மைகள் அனுதரிக்கும்* (SII,vii,765.)

பாரதம் (பெ) மகாபாரதம் (691) *இம்மண்டகத்தே பாரதம் வாசிப்பதற்கு* (SII,i,151; EI,xvii,22.)

பாரதம் (பெ) பாரதப் போர் (921) *மாரதர் மலை களத்தவியப் பாரதத்திற் பகடோட்டிஉம்* (SII,iii,206a.)

பாரதாயன் (பெ) பாரத்வாஜ கோத்திரத்தைச் சேர்ந்தவன் (944) *இவ்வூர்த் திருக்கோயிலுடையான் பாரதாயன் சிங்கன் தேவனும்* (SII,v,711.)

பாரம்பரியம் (பெ) பரம்பரையாக வரும் சொத்து (1344) *தம்முடைய பாரம்பரியமான ஊராலிடுவித்த* (UCR,xvii,p.16-23.)

பாராயண மார்க்ககம் (பெ) சமய நூல்களை நியமமாக ஓதுதல் (800) *பாராயண மார்க்கமும் வேதமும் வல்லனா யுக்தனாகிய* (SII,vi,355.)

பாராயண விருத்தி (பெ) பாராயணம் செய்பவர்க்கு விட்ட நிலம் (1000) *முதுபாலையூர்ப் பாராயண விருத்திக்கு பாட்ட நெல் நூறு பறை* (TAS,ii, pp.173-207.)

பாரி (பெ) கடையெழு வள்ளல்களில் ஒருவன் (1012) *மூரி வண்டடக்கைப் பாரி* (SII,vii,863.)

பாரிக்க (வி) வளர (1168) *அறுசமையமும் ஐம் பூதமும் நெறியில் வந்து பாரிக்க* (SII,vi,456.)

பாரிகை (பெ) மனைவி (1238) *சாத்தனுடையான் சிவதவனவப் பல்லவரையன் பாரிகை திருமாலை சொன்றாளும்* (SII,v,984.)

பாரிசம் (பெ) பக்கம் (1218) *திருக் கோயிலில் தவன மண்டபத்து வடபாரிசத்து செகதியிலும் குமுதகத்திலும்* (IPS,248.)

பாரிசைவர் (பெ) (=பாரசிவர்) (1631) *திருநாள்ச் செலவு வகைக்கு காராண்மையாக மேற்படி கோயிலில் பாரிசைவரில் குப்பையாண்....* (KANDT,1968/203.)

பாரித்த (வி) விரித்துரைத்த (1000) *சிராமலை மேலெல்லுங் கனைகழலின் குணம் பாரித்த வென் கவியே* (SII,iv,167.)

பாரியை (பெ) மனைவி (1217) *உத்தம சோழன் பிள்ளைவேளான் பாரியை ஆண்டாள்ளேந்* (SII,viii,215.)

பாருசம் (பெ) (=பாரிசம்) (1125) *தென் எல்லை கிழக்குப் பாருசமே போந்து* (TAS,i,p.21f.)

பால் (பெ) பகுதி (992) *நிலம் இவ்வூர்ப் பால் கடை வயலை உத்தம சீல மங்கலம் மென்று* (IPS,26.)

பால் (பெ) பகுதி (771) *நாற்பெரும்படைஉம் பாற்படப் பரப்பி* (EI,xvii,16.)

பால் (பெ) பக்கம் (785) *கீழ்பாலெல்லை ஏந்தலேரியின்* (TASSI,1958-59, pp.41-83; PLCP,p.26-32.)

பால் (பெ) தாய்ப்பால் (800) *பால் கொண்ட செவ்வாய்* (EI,xiii,10.)

பால் (பெ) பசுவின்பால் (869) *நெய் பால் தயிர் ஐஞ்ஞாழி செதும்* (SII,vii,523.)

பால் குழம்பு (பெ) உணவு வகை (1469) *பருப்பு அமுது உரியும் பால் குழம்பு உரியும் பஞ்சதாரை உரியும் பழ அமுது இருபதும்* (TDI,ii,40.)

பால் பசு (பெ) கறவைப் பசு (1161) *காக்கு ணாயகனான திருவேகம்பக் கோனேந் கைக்கொண்ட பால் பசு பத்தும்* (SII,iv,822.)

பால் போனகம் (பெ) பால் சோறு (1140) *பால் போனகத்துக்கு போனகப்பழ அரிசி* (SII,vii,485.)

பால் மறி (பெ) பாலாடு (1219) *சுள்ளி சுடி பால்மறி இரட்டைக் கன்றின் றனவு* (EC,x,Kl.120.)

பால் வண்ணன் (பெ) சிவபெருமான் (1000) *சூழ் சடையின் படரிடையாத்த பரமன் சிராமலைப் பால்வண்ணனே* (SII,iv,167.)

பாலங் (பெ) பையன் (796) *பந்நிரண்டு வயத்தற் பாலஙை* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

பாலாசிரியன் (பெ) பாராசரிய கோதிரத்தைச் சேர்ந்தவன் (961) *ஆதனூர் பாலாசிரியன் படீட்டன் சிவன் கூத்தன்* (SII,xiii,109.)

பாலிக்கும் (வி) காப்பாற்றும் (1014) *பாலிக்கும் கோவலூர் சிற்றிங்கூர் மருதூர்* (SII,vii,880.)

பாலிக்கை (வி) அளிக்கை (1523) *க்ருஷ்ணராய மஹாராயர் தா,ராபூர்வமாகக் குடுத்து ராயஸம் பாலிக்கையில்* (SII,iv,303.)

பாலிகை (பெ) ஒரு வகைத் காதணி (1014) *பாலிகையில் படுகண் ஒன்றுங் கொக்குவாய் ஒன்றும் உடையது* (SII,ii,51.)

பாலிகை (பெ) முளைக்காக நவதானியங்கள் விதைக்குந் தாழி (985) *அதிவாஸனைக்கு பாலிகைக்கு கீழட்ட முளையட்ட பயறும்* (SII,xix,380.)

பாலித்தருளின (வி) உரிமை வழங்கப்பட்ட (1570) *நமக்கு ராமராசர் அய்யன் அவர்கள் அமரமாகணையாக பாலித்தருளின மதுரை மண்டலம்* (AVNM,7,p.68-70)

பாலித்து (வி) உரிமை வழங்கி (1487) *நரஸிம்ஹ ராய உடையார் பாலித்து நடந்து வரும் கச்சிப்பேட்டுச் சீர்மையில்* (TDI,ii,87.)

பாலு (பெ) பால் (990) *சீகாட்டி ஆவாற்கு ஆடியருளப் பாலு இரு நாழிக்கு நிசதம் நெல்லு* (SII,xiii,124.)

பாலேடு குழம்பு (பெ) உணவு வகை (1514) *நாள் வழி திருவொத்த சாமத்திலெ அமுது செய்தருளும் பாலேடு குழம்பு நாழியும்* (TDI,iii,88.)

பாலை பழம் (பெ) பழ வகை (1547) *முறோளம் பழம் 600க்கு பணம் 6 பாலை பழம் 3 மரக்காலுக்கு பணம் 1* (TDI,v,92.)

பாவ (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1155) *பாவ ஸம்வத்ஸரத்து பங்கிநி மாஸத்து* (EC,x,Kl.169.)

பாவடி (பெ) பெரிய பாதம் (1012) *சேரன் மலைஞாட்டுத் தாவடிக் குவட்டின் பாவடிச் சுவட்டு* (SII,vii,863.)

பாவத்தில் படுவான் (வி) பாவத்தின் பலனை அனு பவிப்பான் (896) *கங்கை யிடை குமரியிடைச் செய்தான் பாவத்தில் படுவான்* (AVNM,7,p.19-20)

பாவம் (பெ) தீவினைப்பயன் (745) *காமக் கோட்ட மழித்த பாவமாக* (TAMIZ,1970,p.122.)

பாவலர்கள் (பெ) புலவர்கள் (1120) *பாவலர்கள் எல்லாம் புகுங் குடையான்* (CHEN,xxiii,p.93-96.)

பாவாடை (பெ) உடுக்கும் துணி (1150) *பகற்சோறு பெறுவதாகவும் பாவாடை மேநடை நாலு காசு பெறுவதாகவும்* (AVNM,9,p.33-34)

பாவாடை (பெ) விக்கிரகம் அணியும் ஆடை (887) *ஒலியலும் பாவாடையும்* (SII,xiv,16a.)

பாவாடை பணம் (பெ) ஆடைக்காகக் கொடுக்கும் பணம் (1375) *...வற்பணம் பாவாடைபணம் கொள்ளக்கடவதல்லவாகவும்* (ARE,1919,294)

பாவாடை வீரன் (பெ) சிறப்பு செய்யப்பெற்ற வீரன் (1150) *ஆவணக்காறனு...வீரனும் பாவாடை வீரனும்* (AVNM,9,p.33-34)

பாவி (பெ) பாவத்தையுடையவன் (1000) *கடைவாய் நிணந் தின்ற பாவி* (SII,iv,167.)

பாவிநார் (வி) விரிவு படுத்தினார் (800) *நாடு பாவிநார் சங்கரகுட்டியார்* (SII,vii,581.)

பாவிய் (வி) விரிவுபடுத்தி (637) *வாணகோ முத்தரைசர் நாடு பாவிய் தஞ் சிற்றப்படிகள்* (CHHS,1971/68.)

பாவின (வி) அடிப்படுத்தின (871) *தொண்டை நாடுபாவின சோழன்* (SII,iii,89.)

பாவை (பெ) பெண் பொம்மை (1009) *செம்பில் மேற் பொந்கடுக்கின பாவை கண்ணாடியில் ஆடுகிற பாவை ஒன்று* (SII,v,521.)

பாவை (பெ) பதுமை (862) *திருவேற்றஞ் செய் பாவை* (SII,xiv,45.)

பாவை (பெ) பெண் (950) *சேரலன்றன் மடப்பாவை* (TASSI,1962-65,pp.32-52.)

பாழ் (பெ) தரிசு நிலம் (550) *களரும் கன்றும் மேய் பாழும்* (TASSI,1958-59, pp.41-83; PLCP,p.26-32.)

பாழ் பட (வி) நாசம் ஆக (1050) *களிரைத் துண்ணெனப் பிடிபித் தேழரை இலக்கமும் பாழ் படச் சினவில்* (SII,v,520.)

பாழ்படுத்து (வி) அழித்து (771) *பரவரைப் பாழ்படுத்து* (EI,xvii,16.)

பாழகம் (பெ) நரகம் (?) (1300) *இத் தன்மம் யிறக்குவான் கெங்கை இடை குமரி இடை குராற்பசு கொன்றான் பாழகத்து படுவான்* (SII,xii,756.)

பாழாய் (வி) கெட்டு (1300) *நீரும் பற்றாதாய் நாடு பாழாய் இறந்து பட்டுக் கிடக்கையில்* (IPS,475.)

பாழாரர் (பெ) தெய்வம் (962) *நிலமும் துறையும் பாழாரர்க்கு அட்டி கொடுத்தான்* (TAS,v,p.190.)

பாழி (பெ) அகழி (785) *பாழி நீண்மதில் பரந்தோங்கி* (IA,xxii,pp.57-75; PNDCP, p.55-62.)

பாழி (பெ) சமணர் இருக்கை (875) *முகமண்டகம் எடுப்பித்து பாழி புதுக்கி யக்கா படாரி திருக்கோயில் லெடுப்பித்து* (TAMIZ,1970,p.125.)

பாழிப் படை (பெ) வலிய ஆயுதம் (1134) *வீணைக் கொடிச் சிங்களரும் பாழிப்படைப் பறமன்னரும்* (SII,v,645.)

பாழ் ஏற்றம் (பெ) தரிசு நிலத்தைப் பயிராக்கல் (?) (1389) *தான்றிப் பள்ளத்துக்கு பணம் 10மாக பணம் 25ம் பாழ் ஏற்றத்துக்கு முதலாக செலவாக்கவும்* (SII,viii,72.)

பாளையம் (பெ) சேனை தங்கி இருக்குமிடம் (1723) *ஈத்தங்காட்டு வெளியில் அப்பய்யனும் வந்து பாளையஞ் செய்து இரிக்கயில்* (TAS,v,p.221.)

பாற் கடல் (பெ) ஏழு கடல்களுள் ஒன்று (1220) *தடங்கரைப் பாற்கடல் பிரிந்த பனித்துளவ நறுந்தாமப் பரந்தாம மென வந்து* (CHEN,xiv,362-64.)

பாற் சாத்து (பெ) ஒருவரிடம் ஒப்படைப்பு (765) *ப்ரஹ்மதேயமாயித்து இப்படியாலே பாற்சாத்தும் பரதத்தியுஞ் செல்வதாக* (EI,xxxvi,20.)

பாற்பசு (பெ) கறவைப் பசு (937) *பரமேச்வர்க்கு ஆடி அருளுவதற்கு வைத்த பாற்பசு பதினாலுக்கு* (SII,viii,546.)

பாற்பட்டார் (பெ) துறவியர் (944) *திருப்பறங் கோட்டு பரடைமாரும் பாற்பட்டாரும் ஆள் கோயிலும் பொதுவாளும்* (SII,v,783.)

பாற்பட்டு (வி) முறையே (785) *ராஜ்யவர்ஷம் பதினேழாவது பாற்பட்டுச் செல்லாநிற்க* (IA,xxii,pp.57-75; PNDCP,p.55-62.)

பாற்பட (வி) முறையாக (771) *நாற்பெரும் படைஉம் பாற்படப் பரப்பி* (EI,xvii,16.)

பாற்படுத்து (வி) பங்கிட்டு (967) *குடிநீங்காத் தேவதான ஆக குடுத்தோம் தாங்களும் இது கண்டு பாற்படுத்துக் குடுக்க* (SII,xiv,95; EI,xxv,6.)

பாற்போகம் (பெ) பாலாக வரும் வருவாய் (1021) *இவையிற்றில் பாற்போகம் கொண்டு நிசதம் உழக்கு நெய்யால்* (SII,iv,393.)

பாற கூலி (பெ) சுமந்து செல்ல செலவு (1023) *கல் பதர் செத்தல் சாவி நெல்முளை மடி நீக்கி உல்கும் பாற கூலியும் நாங்களே பட்டு* (CHEN,xix,p.206-08.)

பாறை (பெ) கற்பாறை (800) *சுனையச் சுனை மணிப்பாறை அப்பாறை* (EI,xiii,10.)

பாறைக் காணம் (பெ) வண்ணார் மீதான வரி (852) *பாறைக் காணம் பட்டின சேரி* (SII,ii,98.)

பான்முறை (பெ) ஒழுங்கு முறை (771) *குரவராற் பான்முறைஇன் வழுவாமை* (EI,xvii,16.)

பானகம் (பெ) வெல்லம் ஏலம் முதலியன கலந்த குடிநீர் (1493) *அமுது செய்தருளும் பானகத்துக்கு ப்ஞ்ச தாரை வீசை இரெண்டும்* (TDI,ii,109.)

பானச்சன் (பெ) பானச்ச கோத்திரத்தைச் சேர்ந்தவன் (937) *பானச்சன் நாராயணஞ் சேந்தன் முதுகணாக* (SII,xvii,640.)

பானை (பெ) சோற்றுக்கலம் (976) *மணுடையான் நிசதம் ஒரு திருவமுது பானையும் கறிச் சட்டியும் குடமும் கடாம் கலசமும்* (SII,xix,169.)

பானைக் கால் (பெ) பானையை வைக்கும் அடிப்பாகம் (1009) *ஆக்கு பானைக்கால் ஒன்று நிறைய் எண்பத்தே...பலம்* (SII,v,521.)

பாச₀ம் (பெ) கயிறு வடிவான ஆயுதம் (1014) *நால ஸ்ரீஹஸ்தத்திலும் பிடிச்சருளிந சூலமும் கபாலமும் பாசமும்* (SII,ii,1.)

பாஷாணம் (பெ) நிலத்தின் எட்டு உரிமைகளில் ஒன்றான கற்கள் (1222) *ஜல நிதி நிக்ஷேப பாஷாண அக்ஷி...* (SII,v,733.)

பாஷை (பெ) வாய்ச் சொல் (1346) *அரிராய விபாடன் பாஷைக்கு தப்புவராயர கண்டன்* (EC,ix,Bn.59.)

பி

பிங்காளம் (பெ) ஒரு வகைப் பாத்திரம் (980) *சோழமாதேவியார் வைத்த பிங்காளம் எழுபதெழுகழஞ்சேய் முக்கால்* (SII,xix,260.)

பிச்ச வேஷம் (பெ) சிவனுடைய பிச்சாடண உருவம் (1300) *திருச்சாந்துச் சாத்தி அருளி பிச்ச வேஷங் கண்டருளி* (SII,v,233.)

பிச்சை (பெ) தருமம் (745) *தவசிகளுக்குப் பிச்சை எழுகழஞ்சு பொன்* (TAMIZ,1970,p.122.)

பிச்சை பண்ணுவிது (வி) பிச்சையிட வேண்டியது (1200) *மிக்க அரிமடை இருநாழியும் ஒரு...டாரகள் பிச்சை பண்ணுவிது*(TAS,iii,p.21-25.)

பிசகு (பெ) தவறு (1373) *....உண்ணுமாறும் இதின்னு முடக்கம் பிசகில்* (TAS,i,p.297-99.)

பிசானம் (பெ) பெரும் போகம் (910) *பிசானம் பங்குனி அகபட பதின்கலமும் ஆக நெல்* (SII,iii,96.)

பிசைந்தன (வி) உராய்ந்தன (1186) *சிறந்தொளிர் வயிரமும் இசைந்தாங்கிடப் பிசைந்தன* (SII,xii,263.)

பிஞ்சு (பெ) சில்லு (?) (1014) *ரத்நத்தின் திருவாபரணங்கள் சரடுஞ் சட்டமும் நீக்கி அரக்கும் பிஞ்சும் உட்பட* (SII,ii,3.)

பிட்டமுது (பெ) சிற்றுண்டி வகை (1136) *மஹாதேவற்கு நித்த நிவந்தஞ் சந்திராதிதவற் பிட்டமுது செய்தருளுகைக்கு* (SII,xiv,235.)

பிடவை (பெ) புடவை (1300) *இன்னாயனார் திருநாள்களுக்கு திருக்கொடி பிடவை திருக்காரொளி திருவாசிகை* (SII,vii,901.)

பிடா (பெ) ஒரு வகைப் பாத்திரம் (982) *கூத்தன் வைத்த அன்தோளகத் தண்டும் பிடாயும் கடிகையும்* (SII,xix,303.)

பிடாகை (பெ) (= படாகை) (793) *மஹாவலிவாணராயர் பிடாகை வலஞ் செய்து கொடுத்தார்* (SII,ii,42.)

பிடாகை நடந்த (வி) ஊர் எல்லைகளைக் குறிக்க வலம் வந்த (988) *ஸ்ரீ உத்தமசோழர் தே₃வதானமாக பிடாகை நடந்த நில மூலக்குடி அருளன்* (SII,xiii,52.)

பிடாகை வரி (பெ) ஒரு வரி (1115) *நிலத்துக்கும் மனைக்கும் பிடாகை வரியுமுப்புக் காசும் மற்றும் எப்பேர்பட்டதும்* (ALB,vii,p.263-65.)

பிடாரம் (பெ) கோயில்காரியங்களை சோதனியிடும் அரசு அலுவலர் (1057) *இநாடு பிடாரஞ் சேகிற ராஜராஜ பிடாரர் இனட்டு வரியிற் தேவதானங்கள் பாட்டன்கொள்வாரும்* (TAMARAI,p.2-3.)

பிடாரர் (பெ) பிடாரஞ் செய்கிற அலுவலரின் பட்டம் (1057) *இநாடு பிடாரஞ் சேகிற ராஜராஜ பிடாரர்* (TAMARAI,p.2-3.)

பிடாரர்கள் (பெ) இசைத்துப் பாடுவர்கள் (1014) *திருப்பதியம் விண்ணப்பஞ் செய்ய உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் குடுத்த பிடாரர்கள் நாற்பத்தெண்மரும்* (SII,ii,65.)

பிடாரி (பெ) துர்க்கை (800) *சுவரன் மாறன் அவனெடுப்பித்த பிடாரி கோயில்* (EI,xiii,10.)

பிடாரி பட்டி (பெ) பிடாரி கோயிலுக்குச் சேர்ந்த மானிய நிலம் (1181) *கீழ் பாற்கெல்லை பிடாரி பட்டிக்கும் பிடாரியார் கோயிலுக்கும் மேற்க்கும்* (SII,vii,853.)

பிடாரி பாத்தி (பெ) (= பிடாரி பட்டி) (1400) *திருவுடையாட்டம் அய்யன்போகம் பிடாரிபாத்தி நீங்கலா* (SII,viii,210.)

பிடாரியார் (பெ) துர்க்கை (858) *தெள்ளாற்று எறிஞ்ச நந்திப் போத்தரையர் நியம மாகாளத்து பிடாரியார்க்கு* (SII,vi.447.)

பிடாரி வரி (பெ) பிடாரி கோயிலுக்கு இறுக்கும் வரி (1525) *அரசு பேறு அவதரவத்தினை பரித்தி வரி பிடாரிவரி ஆளமஞ்சி மற்றுண்டானது* (SII,vi,71.)

பிடி (பெ) கைப்பிடி அளவு (885) *அரிசியும் ஒரு பிடி நெய்யும்* (SII,xii,69.)

பிடிக்கக் கடவகள் (வி) கையில் ஏந்திப் பிடிக்கக் கடவார்கள் (992) *திருப்பலிக்குக் கைவிளக்குப் பிடிக்கக் கடவகளாக* (SII,xiii,170.)

பிடிக்கவும் (வி) ஏந்தவும் (978) *பணி செய்யவும் விதாநம் பிடிக்கவும் வேண்டும் மாணி ஐஞ்சினுக்குத்* (SII,iii,151-151a.)

பிடி குடுக்கும் பணம் (பெ) ஊதியப்பணம் (1539) *திருக் கொடித் திருனாள் ப்ரதிமை தெக்ஷிணையில் பிடி குடுக்கும் பணம் 25 ஊமாற்சினையில் பிடிகுடுக்கும் பணம் 20* (TDI,iv,138.)

பிடி சூழ்ந்தான் (வி) பெண்யானையின் மீது சென்று எல்லையைக் குறித்தான் (785) *மன்னவனது பணியினால் வடிவமைய பிடி சூழ்ந்தான்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.); (866) *இந்நிலம் பிடிசூழ்ந்து ஸ்ரீ கோயில் எடுத்து* (TAS,i,p.1-14.)

பிடித்து (வி) கைப்பற்றி (991) *சோழகோன் சீப்புலிநாடும் பாக்கை நாடும் எறிந்து பிடித்து கொடு வந்த ஆடு* (SII,xiii,149.)

பிடித்து (வி) தாங்கி (866) *சட்டர் படைக்கலம் பிடித்துக் குட்டத்துக்கு செல்லப் பெறார்* (TAS,i,p.1-14.)

பிடித்துக் கொள்ள (வி) வசூலித்துக் கொள்ள (873) *இக்கூலி சந்த்ராதித்யவற் பிடித்துக் கொள்ளப்பெறுவதாக* (SII,iii,90.)

பிடி நடத்தி (வி) எல்லையைச் சுற்றி பெண் யானையை நடக்கச் செய்து (885) *நான்கெல்லைக்கும் அகப்பட்ட பூமிபிடி நடத்தி* (TAS,ii,p.80-82.); (1008) *இப்பரிசுப் பட்டாய் நின்று பிடி நடப்பித்து அறவோலை செய்வித்தேன்* (EI,xxii,34.)

பிடிப்பார் (பெ) பிடிக்கப்பட வேண்டியவர்கள் (1175) *மநிச்சரா யிருந்தாரில் கொல்வாரையும் கொன்று பிடிப்பாரையும் பிடித்து இவர்களையும் சரக்காய் கைக்கொண்டளவும்* (EI,xxii,14.)

பிடிப்பார் (பெ) ஏந்துபவர் (986) *திருவிழாவுக்கு விளக்கு பிடிப்பாரும் கொடி எடுப்பாரும்* (SII,iii,128.)

பிடிப்பான் (பெ) தாங்குபவன் (944) *படாரரைப் பிடிப்பானும்* (SII,v,783.)

பிடிப்பித்து (வி) பிடிக்கச் செய்து (1051) *வீரவல்ல மற்றவர் வரவிடு மொற்றரைப் பிடிப்பித்து* (SII,vii,1046.)

பிடிபாடு (பெ) ஆணைச் சீட்டு (1002) *இப்பிடிபாடருளிச் செய்ய எழுதினேன்* (SII,v,1409.)

பிடி விளக்கு (பெ) பிடியையுடைய விளக்கு (990) *இருப்பு பிடிவிளக்கு முப்பதினுக்கு நிசதம் எண்ணைய் நாழி* (SII,v,625.)

பிடிவிளக்கு (பெ) கைப்பிடியுள்ள தீபம் (959) *ஸ்ரீ பலிக்கு பிடிவிளக்கு இரண்டும்* (SII,vii,50.)

பிணக்கின (வி) பூசலிட்ட (1156) *எங்களுடன் நீர் வழக்காட்டுச் சுட்டி பிணக்கின இடது* (SII,vii,432.)

பிணங்கி (வி) சண்டையிட்டு (883) *பின்பு சென்று பிணங்கி* (CHHS,1971/46.)

பிணங்கினமை (பெ) சண்டையிட்டமை (1200) *சாத்தன் தனிப் பிணக்கு முத்தன் அரங்கனைப் பிணங்கினமையில் இவனைச் சாத்தி* (IPS,215.)

பிணம் (பெ) இறந்த உடல் (800) *வீரர்கள் ஊர்கின்றவிப் பிணக்குன்று* (EI,xiii,10.)

பிணவணை (பெ) பிணமாகிய ஆசனம் (1200) *சூழும் பிணவணை மேல் தோய் கழுகின் பந்தற் கீழ் விழும்* (SII,vii,123.)

பிணாக்கள் (பெ) பெண்கள் (985) *காளமெட்டுங் கவரிப் பிணாக்கள் இருபத்து நால்வர்க்கு* (SII,iii,143.)

பிணி (பெ) நோய் (1171) *தாரணியோர் பிணி நீங்க* (SII,xvii,592.)

பிணிப்பு (வி) விலங்கு (1171) *மறுவாணை தனி நடாத்திய பாடியானையே பிணிப்புண்பன* (SII,xvii,592.)

பிணை (பெ) ஆள் ஜாமீன் (1239) *பிணை உண்டார்க்குப் படையிலார் பேற்றுக் காசு கொள்ளுமிடத்து* (SII,vi,58.)

பிணையுழச்சல் (பெ) உழவு (?) (1044) *கணவதியாரையுங் ப்ரதிஷ்டித்து பூட்டேருங் பிணையுழச்சலுங் ...த் தாநமுங் குடுத்து* (EC,ix,ht.142.)

பித்தளை (பெ) ஓர் உலோகம் (1095) *பரிகல பரிச் சிந்நங் களால் உருக்களால் எடை 60இல் பித்தளை தரா எடை* (CHEN,xiv,p.208.)

பித்தளை விளக்கு (பெ) பித்தளை உலோகத்தால் செய்த விளக்கு (1008) *நெய் தாங்கியும் அடியும் உட்பட பித்தளை விளக்கு* (SII,v,638.)

பித்து (பெ) பயித்தியம்; மிக்க ஈடுபாடு (1000) *முழுதும் பித்தமைத்தாய் சிந்தை நொந்து* (SII,iv,167.)

பித்ரு வதம் (பெ) தந்தையைக் கொலை செய்தல் (1168) *பித்ருவதமும் மாத்ருவதமும் ப்ராஹ்மணி வதமும்* (SII,vi,456.)

பிதா (பெ) தந்தை (960) *சாமெகுடி என் பிதா* (SII,v,574.)

பிதா நாழி (பெ) ஒரு வரி (967) *இவ்வூரிற் கண்ணாலக் காணமும் ஊர்ப் பதின் காடியும் பிதா நாழியும்* (EI,xxviii,43b.)

பிந்தி (இ) அதன் பின் (1200) *தீய்ந்து பொழிலாகா பிந்தி நகராகா* (CHEN,iii,p.423-432.)

பிந்தை (இ) அதற்குப் பிறகு (970) *மன்றின பொநமறையிலி இறுத்தும் பிந்தையும் இந்நிலம் இறை காத்துக் குடுப்போமாநோம்* (SII,iii,150.)

பிந்நை (இ) அதற்குப் பிறகு (861) *தண்டமும் பட்டு பிந்நையும் விளைக்கப் பெறாதிதாகவும்* (SII,xiv,78.)

பிநாக பாணி (பெ) சிவபெருமான் (905) *பிள்ளைப் பிறைசடைக் கணிந்த பிநாகபாணி* (TASSI,1962-65,p.1-31.95-115.)

பியர் (பெ) பெயர் (700) *அரிகேஸரியானெனப் பியரிட்டு* (EI,xxxviii,4.)

பிரகாரம் (பெ) விதம் (1366) *கைச் சோத்தியம் வந்து போய பிரகாரம் பரைஞ்ஞு கேள்க்க கொண்டு* (TAS,viii,p.20-22.)

பிரகிருதி (பெ) பெருங்குடிகள் (849) *அதிகாரரும் பிரகிருதியும்* (TAS,ii,p.67-68.)

பிரசத்தி (பெ) ஆவணம் (1188) *தேவத்துவம் பிரம்மத்துவ மதின்னும் பண்ணித் தந்த பிரசத்தி ஜீர்ண்ணிச்சு* (TAS,iv,p.22-65.)

பிரசாதக் காணிக்கை (பெ) அரசன் திருமுகத்தின் பொருட்டு செலுத்தும் ஒரு வரி (1524) *திருவதிக்கு அற்ற பிரசாதக் காணிக்கை கட்டாயம் அரசுபேறு வாசல்வரி* (SII,vi,072)

பிரட்டர் (பெ) பொய்யர் (1068) *போர்ப்பெரும் பழிப் பிரட்டராக வென்றி யாவருமறிய* (SII,iii,30.)

பிரட்டாதி (பெ) புரட்டாசி மாதம் (897) *சித்திரையும் பிரட்டாதி ஓணமும்* (SII,xiii,317.)

பிரத்தயம் (பெ) தண்டனை (?) (1255) *அங்கு விதித்தபடி பிரத்தயம் பண்ணுங்கோள் என்று விட்டோம்* (IPS,601.)

பிரதாந கும்பம் (பெ) முக்கிய கும்பக்கலசம் (1024) *பிரதான கும்பஞ்சூழ புடவை ஒன்றுக் காசு அரைக்காலுக்கு நெல் தூணி* (EC,ix,Kl.112a.)

பிரதாநிகள் (பெ) முதன்மை அரச அலுவலர்கள் (1115) *ஸ்ரீ பராந்தக தேவர் பிரதாநிகள் ராஜேந்த்ர சோழவுசவரையந் விற்று* (SII,iv,1285.)

பிரதானி சோடி (= பிறதானி சோடி)

பிரதி பத்தம் (பெ) பிரதமை (1250) *துலா ஞாயிற்று அபர பக்ஷம் பிறக்கின்ற பிரதிபத்தத்தின்னாள் பந்திரண்டினை ஊட்டு* (TAS,iii,p.207-11.)

பிரதிமுகம் (இ) எதிரில் (1000) *சங்கிராந்தி நாள் திருவல்லவாழ் அப்பன் பிரதிமுகத்து யாக மண்டபத்தில் வச்சு* (TAS,ii,pp.173-207.)

பிரம்பு (பெ) வரப்பு (885) *தகணிக்கியார் பட்டி நடுவிந் பிரம்பின் மேற்கு* (SII,xii,105.)

பிரம்பேறி (வி) பரம் படித்துச் சமப்படுத்தி (1300) *காடு வெட்டி கட்டை பறித்து பின்பட்டு பிரம்பேறிப் பயிற் செய்து போந்தமையில்* (SII,v,416.)

பிரம்மதாயக் கிழவர் (பெ) (= பிரமதேயக் கிழவர்) (500) *பிரம்மதாயத்துட் பிரம்மதாயக் கிழவரான்...* (AVNM,1,p.67-69)

பிரமத்துவம் (பெ) பிராமணர் சொத்து (1000) *திருமுன்னூர்ப் படாருடைய தேவத்துவமும் பிரமத்துவமும் அறுநுற்றுவர்க்கும் கீழீடு* (SII,v,784.)

பிரமதாயம் (பெ) பிரமதேயம் (709) *கைந் நீரிற் பெய்து பிரமதாயங் கொடுத்தோம்* (EI,iv,22a; SII,i,135.)

பிரமதேயக் கிழவர் (பெ) பிராமண நிலக்கிழார் (917) *காத்துக் குடுப்போமானோம் பிரமதேயக் கிழவரோம்* (SII,viii,623.)

பிரமதேயம் (பெ) பிராமணர்களுக்குத் தானமாகக் விட்ட நிலம் (691) *சதுர்ப்பேதி களுக்குப் பிரம தேயங் கொடுப்பதற்கும்* (SII,i,151;EI,xvii,22.)

பிரமாணம் (பெ) ஆவணம் (1036) *குணமேநகை புரம் என்றேறின நகரத்துக்குப் பிரமாணப்படி கொண்ட நிலன்* (SII,iv,223.)

பிரமாணம் (பெ) சான்று (974) *ஸ்ரீ கோயில் கற்றளி எடுப்பதற்கு முன் பொலியூட்டுக்குப் பிரமாணம்மாய் உள்ள கற்கள் எல்லாம்* (SII,iii,124; SII,xix,91.)

பிரமாதல் பட்டமை (வி) இறந்து போனமை (1072) *பிரிதி வெண்காடந் கையிலேய் பிரமாதல் பட்டமையில் அவனைச் சார்த்தி வைத்த விளக்கு அரை* (SII,vii,877.)

பிரவேசம் (பெ) வழி (1196) *உவச்சன் காமன் கிருட்டன் தந்ததிப் பிரவேசமே செகோப் பணி செய்து* (TAS,iii,p.46-52.)

பிராட்டி (பெ) பெண் தெய்வம் (1179) *பெருமாளுக்கு பிராட்டியை எழுன்தருளுவித்த* (EC,xiv,md,133.)

பிராட்டியார் (பெ) அரசகுடிப் பெண்களைக் குறிக்கும் மரியாதைச் சொல் (987) *ஸ்ரீ உத்தமசோழ தேவர்க்காக உடைய பிராட்டியார் ஸ்ரீ செம்பியன் மஹாதேவியார்* (SII,xiii,11.)

பிராண உபகாரி (பெ) வைத்தியன் (1009) *வண்ணானுக்குப் பங்கு அரையும் பிராண உபகாரிக்கு பங்கு அரையும்* (CHEN,xxi, p.425-28.)

பிராணிகள் (பெ) உயிர்கள் (1318) *சகல பிராணிகளும் விச்ரமிக்கும்படிக்கு* (EC,xvii,mr.176.)

பிராத்திகள் (பெ) உரிய பேறுகள் (1178) *பிராத்திகளால் பெறுவாரும் நில விழுக்காட்டுப் படியே ஏற்றி இருக்கக் கடவராக செது குடுத்து* (SII,xvii,540.)

பிராத்திச்சு (வி) வேண்டிக் கொண்டு (1213) *திருப்பணிக்கும் உடலாக நான் பிராத்திச்சு விடக் கடவதாந நிலத்துக்கு* (IPS,169.)

பிராமணராசக் காணம் (பெ) ஒரு வரி (753) *உல்லியக் கூலியும் பிராமணராசக் காணமும்* (SII,ii,73.)

பிராமணி (பெ) பிராமணன் மனைவி (872) *மோசி கண்டஞ் சங்கரன் பிராமணி மாறம் பட்டத்தாள்* (SII,xiv,9.)

பிராய் (பெ) மரவகை (1239) *பிராயொடு வட்ட நிலம் முக்காணியும்* (IPS,328.)

பிராயம் (பெ) வயது (919) *அறுபது பிராயத்துக்கு உள் முப்பது பிராயத்துக்கு மேல்பட்டார்* (ARASI,1904-05; p.131.)

பிராவி (வி) வேண்டுதல் செய்தல் (898) *பிராவிக் குடுத்த பொற்பட்டம்* (SII,xiii,321.)

பிராறு (பெ) வழி (925) *பிணம் போகு பிராற்றுக்கு மேக்கும்* (SII,viii,696.)

பிராறு (பெ) கிளை வாய்க்கால் (955) *இவ்வூர் நிலத்துக் கீழ் பிராறு என்னுடைய நிலம்* (SII,xvii,656a.)

பிரான் (பெ) தலைவன் (மரியாதைச் சொல்) (921) *மன்னர் பிரானிராச சிங்கனும்* (SII,iii,206a.)

பிரான் (பெ) அரசன் (985) *..ரு மக்களும் பிரானதிகாரிகள் சுரான் குடை...* (SII,xiii,342.)

பிரிச்சு (பெ) பிரிவு (1271) *திருநலக் குந்ற முத்தரையன் வெட்டிந புன்செயில் மேலை வேலி பிரிச்சுக்கு கிழக்கும்* (IPS,383.)

பிரிந்த (வி) கிளைத்த (811) *சிற்றெயிற் காலிற் பிரிந்த அருமண்ணடைக் காலால்* (SII,xiv,41.)

பிரிந்து (வி) விட்டு நீங்கி (1012) *கலியைக் கரந்து கரவாக் காரிகை சுரந்த முலைமிகப் பிரிந்து முழங்கெரி நடுவணும்* (SII,vii,863.)

பிரியக் கடவ (வி) கலையுந் தன்மையுடைய (985) *திருவேழ்விக்குடி போடு கூடிப் பிரியக் கடவ வளஞ்சியரும்* (SII,xix,459.)

பிரியாத் தன்மை (பெ) நீங்காத தன்மை (1012) *மூவெண் பெயருடைய முப்புரி நூலோர் பிரியாத் தன்மைப் பெருந்திருவுடையது* (SII,vii,863.)

பிரியாது (வி) நீங்காது (1074) *வீரமுந் தியாகமு மாநமும் கருணையும் தந்நுரிமை சுற்றம் பிரியாது தராதல நிகழ* (SII,viii,701.)

பிரிவு (பெ) பிரிந்திருத்தல் (796) *ஹர்ஷயாலு பிரிவின் ஸந்தாபத்தால்* (MASI,lxiii,p.54-59.)

பிருதி குலம் (பெ) சூரிய குலம் (1134) *பிருதி குலந்தனி விளங்கப் பாரிலெழு சந்திரோதையம்* (SII,v,645.)

பிருதிட்டைய் (பெ) விக்கிரகத்தை அமைத்தல் (1008) *ஜயங்கொண்ட சோழ விண்ணகராழ்வார்க்கு பிருதிட்டைய் செய்கிற நாள்* (EC,ix,Cp.130.)

பிலப் பேடி (பெ) புலையர் பார்வைக்கு அஞ்சுதல் (1696) *அகத்து அகப்பட்ட நாட்டில் பிலப்பேடியும் மண்ணாப் பேடியும் இல்ல* (TAS,vii,p.26-29.)

பிலம் (பெ) குகை (1196) *கொடுங்கலி நடுங்கி நெடும் பிலத் தொளிப்ப* (SII,v,302.)

பிலவாய் (பெ) குகை போன்ற வாய் (1200) *பெருகுங்குருதிப் புநல்வாய் தோறும் பிலவாய் மடுத்துப் பருகுங் கழுதுடன்* (SII,vii,123.)

பிலா (பெ) பலாப்பழம் (985) *வாழைப்பழமும் பிலாப்பழமும் மாம்பழமும்* (SII,xix,380.)

பிலாறு (பெ) கிளைக் கால்வாய் (983) *குடி நிலத்தின் கீழருகேய் போன பிலாறுப்பட பிலாற்றுக்கு கிழக்கும்* (SII,xix,321.)

பிழக்கடை (பெ) வீட்டின் பின் வாயிற்புறம் (1245) *இம் மனைகளுக்குப் பிழக்கடை வானிளத்தே இம்மனைகளில் தென்சுவர் துடங்கி* (IPS,340.)

பிழந்தமை (பெ) விரிசல் கண்டது (1058) *ஆழ்வார் ஸ்ரீ விமாநம் முன்பு இஷ்டகைப் படையாய் பழகிப் பிழந்தமை கண்டு* (EI,vii,20 (k).)

பிழய்க்க (வி) புறம்பாக (877) *க்ராமகார்ய்யம் பிழய்க்க செய்தார்* (SII,vi,290.)

பிழாரகள் (பெ) துறவிகள் (1439) *ஆனந்த வாளர் பரிஷயில் பிழாரகளில் அன்றன்று சாதுர்ம்மாஸ்ய* (TAS,viii,p.3-5.)

பிழாரி (பெ) பிடாரி; பெண் தெய்வம் (1000) *ஆதன் துருத்தி பிழாரி கோயிலுக்கு வடகிழக்கு* (TAS,ii,pp.173-207.)

பிழை (பெ) குற்றம் (849) *எவ்வகைப்பட்டாரும் மெய்பிழை சொல்லியும்* (TAS,ii,p.67-68.)

பிழைக்க (வி) தவறுதலாக (1038) *ஐவேலிக்கும் முன்பு எல்லை பிழைக்க பேசி வரியிலிட்டமையில்* (SII,xiv,161.)

பிழைக்க (வி) இழிவாக (866) *பிழைக்கப் பேசுவானாயில்* (TAS,i,p.1-14.)

பிழைக்கில் (வி) தவறினால் (1000) *இத்திருவாராதனைக்கு காலம் பிழைக்கில் சாந்தியடிகள் குறவாகில்* (TAS,ii,pp.173-207.)

பிழைக்கை (வி) தவறு செய்தல் (1453) *கல்லு இரண்டுலும் வெள்ளாழறை வெள்ள நாடர் பிழைக்கையாலே* (TAS,v,p.90-92.)

பிழைச்சார் (பெ) தவறு செய்தவர் (951) *மூழிக் களத்தொழுக்கப்படி கச்சம் பிழைச்சாராவது* (TAS,v,p.6-7; TAS,i,p.288-89.)

பிழைச்சு (வி) பகைத்து (944) *உச்சவத்தையும் பிழைச்சு தண்டமும் படக் கடவியர்* (SII,v,783.)

பிழைத்தார் (வி) எதிராகக் குற்றஞ் செய்தோர் (885) *காவலநுக்கு பிழைத்தாராவார்* (SII,iii,92.)

பிழைத்து (வி) தவறி (805) *பணியும் பிழைத்து அறமிறக்கின பாபமும்* (SII,vi,359.)

பிழைப் பிக்கில் (வி) கெடுத்தால் (985) *இது பிழைப்பிக்கில் கங்கை இடைக் குமரி இடைச் செய்தான்* (SII,v,1369.)

பிழைய்க்க (வி) கேடு செய்ய (894) *இத்தந்மத்துக்கு பிழைய்க்க நிற்பார்* (SII,xiii,302.)

பிழைய்த்த (வி) பகைத்த (887) *இதந்மத்துக்கும் க்ராமத்துக்கும் பிழைய்த்த* (SII,vi,348.)

பிழையற (வி) குற்றமின்றி (1012) *சடையோன் பெற்ற வாரம் பிழையறப் பேசில் ஐம்பதிற்றைஞ்சோடு* (SII,vii,863.)

பிழையாத (வி) தவறாத (771) *ச்ருதிமார்க்கமும் பிழையாத* (EI,xvii,16.)

பிழையாதன (பெ) வேறுபடாதன (917) *நியாயம் பிழையாதன* (TAS,iv,p.122.)

பிழையாமை (வி) கெடாமல் (900) *அறம் வேண்டு வாரிது பிழையாமைச் செய்க* (SII,xiv,128.)

பிள்ளர்கள் (பெ) கொங்கு வேளாளரில் ஒரு பிரிவு (1050) *ஆவணிபேரூரில் வெள்ளாளன் பிள்ளர்களில் சொக்கன் விக்ரமசோழியரையன்* (SII,iv,413.)

பிள்ளை (பெ) குழந்தை (800) *காத்திருந் தாண் பிள்ளைப் பெறுவதும்* (SII,vii,581.)

பிள்ளைகள் (பெ) இளைஞர்கள் (983) *இமடத்தில் பணிசெயும் பிள்ளைகளும் இதந்மமுட்டாமே ரக்ஷிப்போ ஆநோம்* (SII,xix,319.)

பிள்ளைகள் தநம் (பெ) வேளைக் காறப் படையில் ஒரு பிரிவு (1113) *வலங்கை இடங்கை சிறுதநம் பிள்ளைகள் தநம் வடுகந்..... உள்ளிட்ட திருவேளைக்காறரோம்* (EI,xviii,38.)

பிள்ளை குடுத்த (வி) (கலியாணத்துக்குப்) பெண் குடுத்த (988) *பேரப்பன்மாரிதும் இவகள் மக்களிதும் இவகளுக்குப் பிள்ளை குடுத்த மாமன்மாரிதும்* (EI,xxi,27.)

பிள்ளையார் (பெ) இளவரசர் (922) *பிள்ளையார் கோதண்டக்கு சாந்திமக்கிற முனைப் பாடி* (IPS,7b.)

பிள்ளையார் (பெ) சிறு தெய்வத்தின் பொதுப்பெயர் (960) *பிள்ளையார் கணவதியார்க்கு சிறுகாலைக்கு திரு அமுதரிசி இருநாழியும்* (SII,iii,203.)

பிள்ளையார் நோன்பு (பெ) ஒரு வரி (1273) *கார்த்திகைப் பச்சை எடுத்து கட்டும் பச்சை நித்தப் பச்சை பிள்ளையார் நோன்பு ஆண்டெழுத்துத் தேவை* (SII,vii,145.)

பிள்ளையார் நோன்புத் தேவை (பெ) ஒரு வரி (1300) *பிள்ளையார் நோன்புத் தேவை ஆநைச் சாலை குதிரைப் பந்தி* (SII,vii,22.)

பிள்ளை வரி (பெ) கணக்கர் மீதான ஒரு வரி (1426) *பிள்ளைவரியும் காரணப் பேற்குக் கழித்து நின்ற பேற்குக் கொள்ளக் கடவோம் ஆகவோமாகவும்* (IPS,784.)

பிளந்த (வி) திறந்த (833) *கற்பிளந்த குளவாயில் அமைப்பித்த இற்பணமும்* (SII,xiv,44.)

பிளவு (பெ) ஒரு தங்க எடை (986) *திங்கள் பிளவு பொந் பலிசையாக்கி வந்த பொந்* (SII,xix,409.)

பிளி (பெ) (=புளி) (1599) *திருணாளுக்கு பழக்காப்புக்கு பிளி பலம் 5* (SII,viii,534.)

பிற்கூற (வி) ஒத்துச் சொல்ல (916) *ஒரு காலாவது இரு காலாவது முக்காலாவது கொள்வேனென்று*

பிற்கூற முற் கூறிய பேராவூர் ஸபையோம் (SII,xix,162.)

பிற்கூறிய (வி) ஒத்துச் சொல்லிய (976) *முக்காலா வதும் ...ல்லையோ வென்று முற்கூறப் பிற்கூறிய இங்கணாட்டுச் சிற்றிங்கண்ணுடையான்* (SII,xix,162.)

பிற்பக்கம் (பெ) தேய்பிறை (1179) *மிக நல்ல வடுவிகாரி புகலுமிடப நாயற்றுப் பிற்பக்கம் பொன்....திடமாந திதிகை* (EC,x,Ct.83.)

பிற்பாடு (இ) பிறகு (877) *அதீதராயின பிற்பாடு* (EI,vii,26a.)

பிற்ற நாள் (பெ) பின் வரும் நாள் (1000) *முட்டிச்ச நாளைத் தண்டம் வச்சன்றிப் பிற்ற நாளாட்டப் பெறார்* (TAS,ii,p.173-207.)

பிற்றை (இ) அடுத்து வரும் (921) *பிற்றை ஆண்டும் இவாரியங்கள் குடவோலை பறிக்கும் போது* (ARASI,1904-05, p.131.)

பிற்றை நாள் (பெ) மறு நாள் (960) *திருத்தம் ஆடின. பிற்றை நாள் துடங்கி மூன்று கூத்தாடுவதாகவும்* (SII,iii,202; SII,v,718.)

பிற்றை நான்று (பெ) மறு நாள் (1125) *.....திருநாள் விளாவதனிற் தைப்பூசப் பிற்றை நான்று* (TAS,i,p.21f.)

பிற (பெ) மற்றவை (753) *படப்பும் பிறவும்* (SII,ii,73.)

பிறக்கம் (பெ) குவியல் (1025) *கரிஒடு மகப்படுத் துரிமையில்ப் பிறக்கிய பெருநெதிப் பிறக்கமும்* (EI,ix,Cp.84.)

பிறக்கிய (வி) அடுக்கிய (1015) *கிடாரத்தரையநை வாகையம் பொற்...த்துரிமையில் பிறக்கிய பெருநெதிப் பிறக்கமும்* (SII,xvii,329.)

பிறகிட்டு (வி) தோற்கடித்து (1211) *வடதிசையில் போந தண்டு மஹாமேருவைப் பிறகிட்டு அடலெழும் புகழ் பரப்பி* (SII,v,632.)

பிறதானி சோடி (பெ) (= பிரதானி சோடி) (1460) *ஊர் தலைஆரிக்கம் புல்வரி பிறதானி சோடி அதிகாரி சோடிக் கணக்கர் சோடி கல்லணை காடுவெட்டு மற்றும்* (SII,vi,4.)

பிறதிமை (பெ) உருவம் (1464) *சோம கும்பத்துக்கும் பிறதிமைக்கும்திரு வஞ்ஞோபவித்துக்கும் பணம்* (TDI,ii,18.)

பிறதோஷம் (பெ) சிவபிரானை வழிபடும் திரயோதசி நாள் (1600) *சுவாமி திருமூலநாதர் பிறதோஷ கட்டளைக்கு* (TAS,v,p.194-95.)

பிறந்த (வி) உலகில் தோன்றிய (895) *நியமமனன் பிறந்த நாளான அவிட்டத்தினான்று* (SII,viii,580.)

பிறந்து (வி) உலகில் தோன்றி (949) *கங்கமாதேவியார் வயிற்றுட் பிறந்து* (EI,vii,26c.)

பிறந்துடைய (வி) கிடைத்துள்ள; பெற்றுள்ள (973) *தம்பிமாரும் காவிதிக் காணியால் பிறந்துடைய இம்மூன்று மாவிலே* (SII,xix,63.)

பிறப்பு (பெ) உலகில் தோன்றல் (950) *ஒரு தன்மை இரு பிறப்பில் முச்செந்தீ நால் வேதத் தருமரபில்* (TASSI,1962-65,p.32-52.)

பிறபுடாகள் (பெ) பிரபுக்கள் (1634) *அவர்களிலே பல்லக்கு பிறபுடாகளுக்கு பத்துப் பணமும் தண்டிகைப் பிறபுடாளுக்கு அஞ்சு பணமும்* (AVNM,7,p.75-81)

பிறர் (பெ) மற்றவர்கள் (771) *தரணிமங்கையைப் பிறர் பாலுரிமை திறவிதினீக்கி* (EI,xvii,16.)

பிறவரி வினியோகம் (பெ) ஒரு வரி (1462) *சம்மாதம் பிறவரி வினியோகம் மற்றும் பல உபாதியும்* (ARE,1916,252)

பிறவா (வி) தோன்றா (800) *போலரைசு பிறவா* (EI,xiii,10.)

பிறவாதான் (பெ) பிறக்காதவன் (1213) *ஒருவனுக்கு மொருத்திக்கும் பிறவாதானுமாய்* (SII,vii,148.)

பிறழ்ழாது (வி) தவறாது (1136) *சாதி ஒருக்கமும் நீதியறம் பிறழ்ழாது நிகழ* (SII,vii,1038.)

பிறாண காணி (பெ) உயிர்ச் சேதம் (1437) *நமக்கு வரும் அத்தகானி பிறாணகானித் தமதாங்கத்து நோக்கிப் போதக் கடவர்களாகவும்* (IPS,704.)

பிறாதது (வி) (துணைவினை) (880) *இக்காணம் சென்று நின்றுப் புள்ளி குத்த பிறாததாகவும்*

இத்தண்டப் பட்டும் மேற்சொன்ன பரிசேய் செய்வதாகவும் (SII,xii,102.)

பிராது (வி) கிடைக்காது (986) *நிரம்பினாரைப் பிராது விடில் வேதம் வலப் ராஹ்மணனையே* (SII,iii,128.)

பிராப்தி ஆளர் (பெ) உரியவர் (1374) *இந்த சிவத்துரோகத்துக்கு இவனுடையவும் இவன் பிராப்திஆளர் உடையவும் ஆன மனையும்* (SII,iv,351.)

பிறித்து (வி) பிரித்து (1125) *புரவரி விளாக மென்னும் பியரால் வேறு பிறித்து* (SII,v,295.)

பிறிவு (பெ) விழுக்காட்டுப் பாகம் (1520) *சுவாமி நரசா நாயக்கர் கடமைக்குப் பிறிவு வந்த பொன்னுக்கு இம்மூன்று ஊர் வெள்ளாழற்கும்* (IPS,733.)

பிறீதி தானம் (பெ) அன்பின் அடையாளமாகக் கொடுத்தது (1374) *மழவதரையரேன் பிறீதிதானம் பண்ணிக் குடுத்த பரிசாவது* (SII,viii,590.)

பிறுத்விராஜ்யம் (பெ) ஆட்சி (1523) *கிருஷ்ணதேவ மஹாராயர் பிறுத்விராஜ்யம் பண்ணி* (AVNM,4,p.41-42)

பிறும வதை (பெ) பிராமணரைக் கொலை செய்தல் (1462) *கெங்கைக் கரையில் கோவதை பிறுமவதை பண்ணினவகள் பெற்ற பலன் பெற* (IPS,711.)

பிறை (பெ) பிறைச் சந்திரன் (800) *பேரிலைப் பங்கயங்கூம்பப் பிறையின்* (EI,xiii,10.)

பிறை (பெ) ஒரு நகை உறுப்பு (897) *இருபத்தறு கழஞ்சரைக் கல் பிறையுடைய நயபாளம்* (SII,xiii,319.)

பின் (இ) பிறகு (771) *நீரோடட்டிக் கொடுத்தமையா னீடு புக்தி துத்த பின்னளவரிய* (EI,xvii,16.)

பின்பு (இ) பிறகு (800) *பின்பு பகட்டினத் தோர்* (EI,xiii,10.)

பின்னரும் (இ) இதற்குப் பின்பும் (1036) *பொற்கள வனத்துப் பார்த்திவரானார் முன்னருஞ் செய்தறியாது பின்னருஞ் செய்தும் என்றெண்ணி* (SII,iv,223.)

பின்னிரண்டு மொழியாத (வி) கொடுத்த சொல் மாறாத (1300) *பின்னிரண்டு மொழியாத பன்னிரண்டு நகரமிவை பழசாக* (AVNM,6,p.36-40)

பின்னின்றும் (வி) புறமுதுகு கண்டும் (905) *காடவனைக் கடலானூர்ப் பீடழியப் பின்னின்றும்* (TASSI,1962-65; PNDCP,p.95-115.)

பின்னுக் கோவைத் தலை (பெ) ஒரு நகை உறுப்பு (1014) *தானைத்தூக்கம் பின்னுக் கோவைத் தலையில் மொட்டு ஒன்றில் தடவிக் கட்டின பளிங்கு* (SII,ii,51.)

பின்னை (இ) இதற்குப்பின்பு (785) *பின்னையுந் தர்ம்மமேய் தனக்கென்று* (IA,xxii,pp.57-75; PNDCP,p.55-62.)

பின்னோன் (பெ) வாரிசு (905) *தொழில் செய்து வந்தவர் பின்னோன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பீ

பீடம் (பெ) விக்கிரகத்தின் இருக்கை (983) *திருவிழா எழுந்தருள அட்டுவித்த கணபதியாரும் பீடமும் ப்ரபையும்* (SII,xix,327.)

பீடலிகை (பெ) தெய்வச் சிலைகளுக்கு முன்னால் உள்ள பலி மேடை (889) *படாரிக்கு நவக் கண்டங் குடுத்து குன்றகத் தலை அறுத்துப் பீடலிகை மேல் வைத்தானுக்கு* (SII,xii,106.)

பீடலிகை வாரி (பெ) தெய்வ பீடத்தின் முன்னிடும் உண்டியல் (995) *இதுக்கு முன்பும் அந்தராயமும் பீடலிகை வாரி பத்துமாப் பொன்* (SII,vi,21.)

பீட₂ பூஜை (பெ) விக்கிரக பீடத்திற்குச் செய்யும் பூசை (1007) *திருமறைக் காடுடைய மஹா*

தேவற்கு பீடபூஜை செய்வதற்கு நிவந்தம் செய்ய (SII,xvii,470.)

பீடிகை (பெ) பொருள்களை வைத்து விற்கும் மேடை (1043) *வாணிகர்க்கு ஊரார் அவிரோதத்தாற் பீடிகை கட்டுவான் அமைத்த இடம்* (IA,lviii,pp.158-59.)

பீடிகை கூலி (பெ) ஒரு விற்பனை வரி (1465) *நூல் தரகு பாக்குத் தரகு பீடிகை கூலி செக்கிறை தறிக்கடமை* (TAS,vi,82.)

பீடிலிகை (பெ) திட்டு (550) *காடும் பீடிலிகையும் கிடங்கும்* (TASSI,1958-59, pp.41-83; PLCP,p.26-32.)

பீடிலிகை வாரி (பெ) பீடிலிகையில் காணிக்கையாகச் சேரும் பொருள் (985) *ராஜகேசரி மாகாளத்து பரமேச்வரி பெற்ற அவியும் அர்ச்சனா போகமும் பிடியும் பீடிலிகை வாரியும்* (SII,v,589.)

பீடு (பெ) பெருமை (771) *பெரியலூர்ப் பீடழித்தும்* (EI,xvii,16.)

பீதாம்பரம் (பெ) உயர்ந்த விரிப்பு (1532) *பீதாம்பரம் 1க்கு கட்டு 1க்கு சிறகு 2க்கு சுற்றுக்கோத்த பூ 54க்கு* (SII,vii,53)

பீதி (பெ) திகைப்பு (796) *ஹிரண்யவர்ம்ம மஹாராஜர்க்குச் சொல்ல அவர் பீதி விடு இடம் இது* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

பீலி (பெ) மலை (800) *முகிலி வளர் பீலி உந்த* (EI,xiii,10.)

பு

புக்க (வி) உண்டான (1008) *மதுராந்தக மூவேந்த வேளானும் ஒப்பினாலும் புக்க நந் தீட்டின் படியே வரியிலிட்டு கொள்கவென்று* (EI,xxii,34.)

புக்க (வி) தரவேண்டிய (867) *தான் வேண்டு கோவினுக்கு புக்க 216 இருநூற்றுப் பதினாறு காணம்* (SII,xiv,12a.)

புக்க (வி) மனைவியாக அடைந்த (876) *மல்லன் அனந்தனுக்குப் புக்க பழியிலி சிறிய நங்கை* (SII,xii,63.)

புக்கமய் (வி) சேர்ந்தமை (910) *எண்கழஞ்சும் வாங்கி ஸ்ரீ பண்டாரம் புக்கமயால்* (SII,xix,67.)

புக்கருளின (வி) ஏறியருளின (1014) *திருவிசலூர் மஹாதேவர் ஸ்ரீகோயிலிலே துலாபாரம் புக்கருளின அன்று நம்பிராட்டியார்* (CHEN,xv,p.174-76.)

புக்கார் (பெ) அடைந்தவர் (800) *இப்பரிசு புக்கார் புக்கார்க்கு மூன்று யாண்ட வதியாக* (SII,vi,355.)

புக்கு (வி) உட்சென்று; புகுந்து (785) *காஞ்சி வாய்ப் பேரூர் புக்கு* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

புக (வி) நுழைய (1012) *உதைகை வேந்தைக் கடல் புக வெகுண்டு* (SII,iv,167.)

புகர் முகம் (பெ) யானை (1058) *புகர்முக செவியலங்கல் சோழ கேரளனை* (SII,viii,1.)

புகல் (பெ) பொறுப்பு (1009) *இவ்வாட்டுக்குப் புகல் இவ்வூர் மன்றாடி நீலன் வடுகன்* (SII,viii,747.)

புகழாளன் (பெ) புகழை உடையவன் (800) *தஞ்சை நற்புகழாளன்* (EI,xiii,10.)

புகழும் (வி) பாராட்டும் (833) *ஞாலங்களிற் புகழுஞ் சீராலங்குடி* (SII,xiv,44.)

புகழோன் (பெ) கீர்த்தியை உடையவன் (1012) *தெற்றிக் கண்ணுஞ் சிந்தாமணியும் போலப் பிறந்த புகழோன்* (SII,vii,863.)

புகன்று (வி) ஆர்ப்பரித்து (771) *பூர்வ்வராஜர் புகன்றெழுந்து* (EI,xvii,16.)

புகாமெய் (பெ) நுழையாமை (765) *நாடு காப்பானும் வியவனும் புகாமெய்யும் இவர்கள்செயப்பாலன* (EI,xxxvi,20.)

புகாமை (பெ) நுழையாமை (1015) *நீரும் நெருப்பும் புகாமைத் தடுத்தும்* (EC,ix,Cp.129.)

புகில் (வி) உட்படில் (1021) *சிறைதளை சங்கிலி புகிலும்* (SII,iii,18.)

புகு (வி) நுழையும் (691) *ஊர் புகு வழியின் வடக்கு* (SII,i,151; EI,xvii,22.)

புகு (வி) சேரும் (800) *தொண்டைக் கனி புகு தூமதி யோன்* (EI,xiii,10.)

புகுத்தி (வி) ஊன்றி (765) *கல்நாட்டி கூகை புகுத்தி* (EI,xxxvi,20.)

புகுதாமை (பெ) நுழையாமை (1168) *ஈழப்படை சோழ மண்டலத்தில் புகுதாமைக்கும் பூசலிலே பட்டு ஓடிப் போகைக்கு* (SII,vi,456.)

புகுதி (வி) புகுந்து செல்வாய் (800) *வெற்புப் புகுதி கண்டாய்* (EI,xiii,10.)

புகுதில் (வி) உண்டானால் (1119) *கோக்குற்றக் குடிக் குற்றக்கால் விரோதம் புகுதில் விரோதஞ் செய்தாரை* (SII,vii,785.)

புகுந்த (வி) (பதிவு) செய்த (997) *இறுப்பதாக தேவதானமாக புகுந்த கேழ்வி வரியிலிட்டபடி* (EC,x,Kl.106 (c).)

புகுந்த (வி) நடந்த (985) *விழாவெழுந்தருளி புகுந்தகால் அமுதுசெய வைத்த அரிசி* (SII,xix,317.)

புகுந்து (வி) நுழைந்து (800) *தாநாகிப் பிள்ளைய் கொண்டுள் புகுந்து வஞ்சித்து* (SII,vii,581.)

புகும் (வி) (உள்ளே) நுழையும் (994) *இந்நந்தவானமும் நந்...வானத்துக்குப் புகும் வழியும்* (SII,xiii,203.)

புகுவதாக (வி) அடைவதாக (870) *மஹா நரகம் புகுவதாகவும்* (SII,xix,163.)

புகுவான் (வி) அடைவான் (895) *ஏழா நரகம் புகுவான்* (ARE,1935-35, p.73.)

புகுவிக்கவும் (வி) (உள்ளே) செலுத்தவும் (992) *இவன்னே சாலை உண் வெண்கல நூறும் எண்ணி புகுவிக்கவு போத வைப்பிக்கவு கடவர்* (SII,xix,357.)

புகுவோம் (வி) சேர்வோம் (895) *கீழா நரகம் புகுவோம்* (SII,iii,93.)

புகை (பெ) தூபம் (944) *சந்தனத்தினுக்குந் திருப்புகைக்கும்* (SII,v,783.)

புங்கு (பெ) மர வகை (1304) *இலுப்பை வாகை வேம்பு புங்கு புளி ஆத்தி ஆவிரை* (SII,viii,172.)

புச்சா$_2$தி$_2$ பணாந்தம் (பெ) (பாம்பின்) வால் முதல் தலை வரை (1014) *புச்சா$_2$தி$_2$பணாந்தம் அறுவிரல் உசரத்துக் கனமாகச் செய்த பாம்பு ஒன்று* (SII,ii,50.)

புச்சா$_2$தி$_3$ சி$_0$கா$_2$ந்தம் (பெ) வால் முதல் தலை வரை (1014) *பர்வ்வதத்திற் கிடந்த புச்சா$_2$தி$_3$ சி$_0$கா$_2$ந்தம் ஐய்விரலரை நீளத்துக் கனமாகச் செய்த புலி ஒன்று* (SII,ii,50.)

புசபெல மாடை (பெ) ஒரு நாணயம் (1205) *பொலியூட்டாக நாங்கள் கைக் கொண்ட புசபெல மாடை 33* (SII,v,1361.)

புசல் (பெ) மேகம் (800) *தாழும் புசற் றிங்களூர்* (EI,xiii,10.)

புஜிபான் (பெ) உண்பான் (1233) *கோமாங்கிசத்தை புஜிபானுமாய்* (SII,viii,80.)

புஞ்ச முத்து (பெ) முத்து வகை (1014) *ஒப்பு முத்துக் குறுமுத்தும் புஞ்ச முத்து ஆக முத்து* (SII,ii,3.)

புஞ்செத் திருத்தல் (பெ) புஞ்செய் நிலத்தை நஞ்செயாக்கல் (1228) *விற்ற புஞ்செத் திருத்தலான தறை திருத்தி ஏற்றச் சுருக்கம் உட்பட* (IPS,283.)

புஞ்செய் கடமை (பெ) புன்செய்ப் பயிர் மீதான நிலவரி (1505) *வெற்றிலைக் கடமையும் நஞ்செய் நிலப் புஞ்செய்க் கடமையும் புஞ்செய்க் கடமை மற்றும்* (ARE,1912,354)

புஞ்சை (பெ) புன்செய் (984) *புஞ்சை விளை நிலம் மார்த்து மாலை கொல்லையுட்பட* (SII,iii,141.)

புட்கரணி (பெ) கோயிலையடுத்த வாவி (1120) *புட்கரணி கல் சாத்து வித்தான்* (SII,iv,225.)

புட்டக விலை (பெ) ஒரு வரி (765) *பறிக்காணமும் வீரதுக்கக் காணமும் புட்டக விலையும்* (EI,xxxvi.20.)

புட்டில் (பெ) அம்பு வைக்கும் கூடு (815) *தூணி பலபடத் தோளோச்சி* (SII,iii,206b.)

புடவை (பெ) ஒரு முகத்தல் அளவு (?) (1073) *வேடர் கும்மரி விளைந்த நிலம் ஆயிரத்தைஞ்னூறு குழிக் கொரு புடவை கொள்வதாகவும்* (EC,x,Mb.49 (a).)

புடவை (பெ) ஆடை (950) *சோறும் புடவையும் உட்பட நிசதிபதக்கு நெல்லாக* (SII,viii,652.); (887) *மேற்கட்டிக்குப் புடவை இணை இரண்டரைக் காணம் பெற்றன* (SII,xiv,16a.)

புடவைக் கட்டு (பெ) (1300) *புடவைக்கட்டு ஒன்றுக்குக்குப் பணம் ஒரு மாவும் நூல்பொதி ஒன்றுக்குப் பணம் இரண்டு மாவும்* (AVNM,6,p.36-40)

புடவைப் பாடு (பெ) ஒரு வரி (1443) *காசுபாடு புடவைப்பாடு நெல்ப்பாடு முளைக்கூலி* (ARE,1916,230)

புடவை முதல் (பெ) ஆடைக்கான மூலதனம் (956) *புடவை முதலுக்காட்டை வட்ட நெல்லு முப்பதின் கலமும்* (SII,xiv,86.)

புடை (வி) பக்கத்தில் பொருந்திய (1000) *திங்கட் கரைக் கங்கை நீரலைக்குஞ் சிறைப்புடைச் செஞ்சடையன் உறை கோயில் சிராப்பள்ளியே* (SII,iv,167.)

புடை (பெ) ஒலி செய்தல் (771) *அறுகாலினம் புடை திளைக்கும்* (EI,xvii,16.)

புடை (பெ) பக்கம் (921) *வட கரை இற் பொழில் புடை சூழ் மதிள்* (SII,iii,206a.)

புடை சுற்றிய (வி) சூழ்ந்துள்ள (950) *பொழில் புடை சுற்றிய முது நிலத்தில்* (TASSI,1962-65,p.32-52; .)

புடைத்தது (வி) தாக்கியது (1300) *கதிர் முடி மேலிந்திரனைப் புடைத்தது முன் கடல் போய் வற்ற* (IPS,653.)

புண் (பெ) காயம் (800) *விழிகட் பேய் புண்ணலைந்து* (EI,xiii,10.)

புண் செய்தான் (பெ) காயப் படுத்தினவன் (866) *படைக்கலத்தால் புண் செய்தான்* (TAS,i,p.1-14.)

புண்ணியம் (பெ) நல்வினைப் பயன் (985) *இவை ...டைக் குமரியிடை.. செத புண்ணியம் பெறுவார்* (SII,xix,80.)

புண்ணியன் (பெ) இறைவன் (1000) *திருமலைப் புண்ணியனேப் புண்ணியன் வேத முதல்வன்* (SII,iv,167.)

புண்ணியாகம் (பெ) புண்ணிய வேள்வி (1200) *வெள்ளவி குன்றத்து நாராயணனும் புண்ணியாகஞ் செய்த இக் காட்டு கானேற்ற வழி* (SII,v,774.)

புண்ணீர் (பெ) இரத்தம் (1270) *சேனையெதிர் பட்டொழுக வெழுந்த புண்ணீர் விண்பட்டலைய* (SII,iv,618.)

புண்யகணத்து பெருமக்கள் (பெ) புண்ணியச் செயல்களை மேற்பார்க்கும் குழு (966) *வாகூர் ஸ்ரீ மூலஸ்தானத்து புண்யகணத்துப் பெருமக்களோம்* (SII,vii,810.)

புண்ய கந்மார்க்கள் (பெ) நல்வினைகள் புரிந்தவர் (1344) *சகாயப்பட்டு இதனை ரக்ஷித்த புண்ய கந்மார்க்களானவர்கள்* (UCR,xviii,p.16-23.)

புண்ய கர்மா (பெ) நற்செயல் புரிந்தவன் (1265) *இத₄ர்மத்தைப் போற்றிநார் புண்யகர்மாவாம்* (EC,x,Ct.96.)

புண்ய பலம் (பெ) நல்வினையின் பயன் (1000) *கொங்காகந்யா நதத்து செய்தார் செய்த புண்யபலம் பெறுவாராகவும்* (SII,v,873.)

புண்யம் (பெ) நல்வினைப்பயன் (914) *கெங்கையிடை குமரியிடை செய்தார் செத புண்யத்தைப் பெறுவாராகவும்* (SII,xix,179.)

புண்யாக₃ த₃க்ஷணை (பெ) புண்ணிய யாகத்தின் பொருட்டு செய்யும் கொடை (1127) *புண்யாக₃ த₃க்ஷணைக்கு அரிசி அறுநாழி உழக்கும்* (SII,iii,80.)

புண்யாஹம் (பெ) ஒரு வைதிகச் சடங்கு (970) *புண்யாஹ செயும் ப்₃ராஹ்மண....* (SII,iii,149.)

புணர்தம் (பெ) புனர்பூசம் நட்சத்திரம் (1235) *மீன ஞாயிற்றில் சதைய முந்தனு ஞாயிற்று புணர்தமும்* (TAS,vii,p.65-66.)

புணர்தற்கு (வி) சேர்வதற்கு (1012) *யோகி களுள்ளது புணர்தற்கினியது பொய்கைக் கரையது* (SII,vii,863.)

புணரி (பெ) கடல் (1099) *...ழ்ந்த புணரி அகழ் சூழ்ந்த புவியில்* (SII,vi;1144.)

புணருத்தான் (வி) இயற்றினான் (400) *எழுத்தும் புணருத்தான் மலைய் வண்ணக்கன் தேவன்* (ARE,1961-62.280-82.)

புணை (பெ) ஆள் ஜாமீன் (770) *இவனுக்குப் புணை இவ்வூர் வெட்டிக்குடிமான நடை மாதேவன்* (SII,xiv,18.)

புணைக் கழியாத படியால் (வி) புணைப் பொறுப்பு நீங்காத படியால் (1316) *தங்கள் பேராலுள்ள பணம் சிலவறுத்த அளவில் சென்று புனைக்கழியாத படியாலேயும்* (SII,viii,247.)

புணைக் கொள்ள (வி) புணையாக நிற்க (924) *ஆடு அடுக்கவும் புணைக் கொள்ளவுங் குடுத்தேன்* (SII,viii,726.)

புணைப்பட்டோம் (வி) புணைப்பொறுப்பு ஏற்றோம் (873) *புணைப்பட்டோம் சிற்றம்பர் பதியும் பாதமூலத்தோமும்* (SII,xiv,10.); (1279) *இவர் அநு.....கடமை இறுத்து போந்த நிலத்துக்கு எங்களை புணைபடுத்த கடமை நேராக இறாதே போகையில்* (SII,xii,258.)

புணையிட (வி) பொறுப்பாக்க (1290) *தேவற்குச் சுமந்த தண்டத்துப் பொன்னுக்குப் புணையிடப் புக* (EC,xn,Yl.56; EC,xiv,Yl.56.)

புணை விலை (பெ) புணை பட்டவர் யாருக்காக புணை நின்றாரோ அவருடைய நிலத்தை விற்றல் (1279) *எப் பேற்பட்ட உரிமைகளும் அகப்பட்ட புணைவிலையாக விற்றுக் குடுத்தோம்* (SII,xii,258.)

புத்தக்கம் (பெ) ஒரு சிறு நாணயம் (939) *ஈழக்காசுக்குப் புத்தக்கம் ஏழரை ஆக* (SII,iii,106.)

புத்தமுது (பெ) (1340) *கார்த்திகைப்பச்சை புத்தமுது சூலவரி* (ARE,1919,218)

புத்தர் ஆஞ்ஞை (பெ) புத்தர் மீது ஆணை (1196) *ஒரு விக்கஞ் செயல் என்றுள நாகில் புத்தராஞ்ஞை வல்லரையன் சூளுறவு* (UCR,xx,p.12-14 (ii).)

புத்தாட்சி நெய் (பெ) ஒரு வரி (1562) *இவர்கள் யிறுக்கும் புல்வரி புத்தாட்சி நெய் கிடாய் சில்லறை விராடம் யிறுக்கும்* (ARE,1941,45)

புத்தாட்சி ஆடு மாடு (பெ) ஒரு வரி (1500) *கட்டாயம் காணிக்கை புத்தாட்சி ஆடு மாடு நல் எருது* (ARE,1969,189)

புத்திர பௌத்ராதிகள் (பெ) மக்கள் மக்கள் வரிசை (877) *தாமோதிர பட்டனுடைய புத்திர பௌத்ராதிகளுக்கே* (SII,vi,287.)

புத்திறை (பெ) ஒரு வரி (1290) *புத்திறை புதுக் காணிக்கை இன்னாயனாற் கடைத்த தேவதாநத்தில் லொந்று கொண்டவந்* (EC,x,Ct.84.)

புத்தேள் (பெ) வானுலகு (905) *புத்தேள் மாருதம் கனல்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

புத்ர பௌத்ராதி (பெ) மக்கள் மக்கள் வழி (1016) *கங்காதர பட்டந் புத்ர பௌத்ராதி சந்திராதித்தவற் அர்ச்சிப்பாநாக* (SII,vi,336.)

புத்ர லாபம் (பெ) மக்கட் பேறு (1264) *புகழும் புத்ரலாபமும் சத்ரு நாசமும்* (SII,vi,439.)

புத்ரன் (பெ) மகன் (771) *கோச்சடையன் மற்றவற்கு புத்ரனாய்* (EI,xvii,16.)

புதவம் (பெ) வாயில் (1012) *சுதைமதிற் சூழகழ்ப் புளகப் புதவக் களகக் கோபுரவாயின்* (SII,vii,863.)

புதன் (பெ) சந்திரனின் மகன் (905) *மாமுனி அத்ரி அருமரபிற் இந்துகிரணந் வெளிப்பட்டனன் மற்றவற்கு மகனாகிய மணி நீள்முடிப்புதனுக்கு* (TASSI,1962-65,pp.1-31.)

புதா நாழி (பெ) ஒரு வரி (789) *கடையடைக்காயும் புதாநாழியும்* (SII,ii,99.)

புதாப்பு நெய் (பெ) ஒரு வரி (975) *சிறு குடி மஞ்சாடியும் திங்கட் சோறும் புதாப்பு நெயுமட்டி இறுப்பதாகவும்* (SII,xvii,260.)

புதியிது (பெ) புதிதாகச் சமைத்த உணவு (1009) *நெல்லு பதினாறு கலத்துக்கும் புதியிது அமுது செய்தருள* (CHEN,xxi,p.425-428.)

புதுக்க (வி) பழுது பார்க்க (992) *ஸ்ரீ விமானமும் மண்டபமு முள்ளிட்டன புதுக்க புதுக்குப் புறமும்* (SII,xiii,170.)

புதுக் காசு (பெ) ஒரு நாணயம் (1204) *சந்தி விளக்கு 1 ஒன்றுக்கு கொண்ட புதுக்காசு 200* (SII,viii,35.)

புதுக் காணிக்கை (பெ) ஒரு வரி (1290) *புத்திறை புதுக்காணிக்கை இன்னாயனாற் கடைத்த தேவதாநத்தில் லொநறு கொண்டவந்* (EC,x,Ct.84.)

புதுக்கி (வி) சீர் செய்து (771) *மாடமாமதில் புதுக்கி* (EI,xvii,16.); (1200) *இராஜகேசரிநல்லூர் குமிழி புதுக்கிநான்* (AVNM,3,p.15)

புதுக்கு (பெ) புதுப்பித்த பணி (800) *பெரும்பிடுகு பெருந்தேவி புதுக்கு* (IPS,13.)

புதுக்குதிகை (பெ) பொது அம்பலங்களுக்கு புதுக்கூரை அமைத்தல் (?) (753) *புதுக் குதிகைக்குற்றது வெயியும் புல்லும்* (SII,ii,73.)

புதுக்குப் புறம் (பெ) கட்டிடம் புதுப்பித்தலுக்காக வைத்த நிலம் (873) *கோபுரத்துக்கும் புதுக்குப்புறமாக இப்பள்ளியின் கீழை நந்தவானத்துக்கும்* (SII,iii,91.)

புதுக்குவித்து (வி) புதுப்பித்து (793) *வடசிகரக் கோயில் புதுக்குவித்து* (SII,iii,42.)

புதுக்குவிப்பது (வி) புதுப்பிப்பது (809) *புறங்காத்துப் புதுக்குவிப்பது* (SII,xiv,40.)

புதுக் குளிகை (பெ) ஒரு நாணயம் (1274) *காராண்மை காணியாக அனுபவிப்பதாக கற்பூர விலை நிச்சயித்த புதுக் குளிகை பணம் 250* (SII,iv,371.)

புதுப்பணி (பெ) புதிதாகச் செய்யும் கட்டிட வேலைகள் (1266) *கண்டகக் கொல்லையும் மற்றும் உள்ளனவும் புதுப்பணிக்கே திருப்பதிகள் ஒபாதி கூலி இடவும்* (EC,ix,Bn.10.)

புது மணம் (பெ) முதல் அனுவபம் (1075) *சக்கர கோட்டத்து விக்கிரமத் தொழில் புதுமணம் புணர்ந்தவன் களிற்றிட்ட வயிரா கரத்து* (SII,iii,68.)

புதுமதி (பெ) பிறை (1121) *அகில புவன முங் கவிப்பதோர் புதுமதிபோல வெண் குடை மேல்மிசை நிப்ப* (SII,xvii,605.)

புதுமலர் (பெ) அன்றலர்ந்த மலர் (1012) *புதுமலர் வாகை புனைந்து நொதுமலர் கங்க பாடி கவ்வி* (SII,vii,863.)

புதுமை (பெ) முன்பில்லாத புதிய முறை (1355) *மன்னனார் திருநாள் முன்பில்லாண்டு மரிகாதி ஒழிந்து புதுமை ஆக எழுந்தருளினபடி ஆலே* (SII,iv,258.)

புதுராயத வற்த்தனை (பெ) ஒரு வரி (1497) *அவதர வற்தனை காணிக்கை வற்தனை புதுராயத வற்தனை* (ARE,1963,666)

புதைக்க (வி) இட்டு மூட (1068) *ஆண்டு தோறும் புராண ஸர்ப்பி புதைக்கப் பசுவிநெய்* (EI,xxi,38.)

புந் பயிர் (பெ) புன் செய்ப் பயிர் (1218) *கீழிறை பசாநம் சிறு கோடை புந்பயிர் இவ்வூரிறுக்கும் வரிசைப் படியாலுள்ள கடமை* (IPS,549.)

புநப்பிரதிஷ்டை (பெ) புதுக்கு (1244) *கிராமத்தை புநப்பிரதிஷ்டை பண* (EC,xiv,Yl.155.)

புநஸ்காரம் (பெ) மரியாதை (1167) *தேவர்க்கும் திருப்படி மாற்றுக்கும் பூசை புநஸ்காரத்துக்கு....* (EC,x,Bp.8.)

புநிதரு (வி) தூயதான (1075) *தனிமையுந் தவிர்த்து புநிதரு திருமணி மகுட முறைமையில் சூடி* (SII,iii,68.)

புநைந்து (வி) அணிந்து (1050) *திரு மணி மௌலி வாழியல் பூவேந்திரசோழந் எநப் புநைந்து மந்நு பலூழியுள்* (SII,v,641.)

புயல் (பெ) மேகம் (1176) *களிறாரெயிற் கரங்குவிப்ப புயலாழியிற் போற்றி செய்ய புலி மேருவில் வீற்றிருப்ப* (SII,xvii,585.)

புரக்க (வி) காக்க (1220) *அறவாழியுஞ் செங்கோலு மனந்த கற்பகாலம் புரக்க* (CHEN,xiv,p.362-64.)

புரங்காவல் (பெ) ஒரு வரி (1415) *அந்தராயம் புரங்காவல் தறியிறை* (ARE,1938,409)

புரசம் (பெ) யானைக் கழுத்திலிடும் கயிறு (1068) *சுந்தரக் கண்டிகை கட்டி புரசயானை புழைக்கையிற் பிழைத் திவ்வுலக மறிய வோடிய* (SII,iii,30.)

புரட்டாதி (பெ) புரட்டாசி மாதம் (970) *புரட்டாதித் திருநாள் எழுந்தருளி* (TDI,i,8.)

புரட்டு (வி) பொய் (1070) *இரட்டகோனை புரட்டடக்கி* (SII,v,468.)

புரண்டு (வி) உருண்டு (1200) *வங்கார சிங்கந் புரண்டு வீழ* (SII,vii,123.)

புரந்தரன் (பெ) இந்திரன் (905) *புரந்தரனது நகர் போன்ற* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

புரந்தளிக்கும் (வி) காக்கும் (1220) *எண்டிசையும் புரந்தளிக்கும் இராஜராஜ துங்கன் ராஜராஜன்* (CHEN,xiv,p.362-64.)

புரமெறிவார் (பெ) சிவபெருமான் (1300) *சென்னி முன்னெ புரமெறிவார் மண் சுமக்கப் பூபாரங் காத்தான்* (IPS,652.)

புரயிடம் (பெ) வீட்டுத் தோட்டம் (1056) *பட்டவிருத்தியும் மருங்ஙாடும் தளிக்கு கிழக்கு கோயிலுக்குள்ள புரயிடம் மேழும் கூட கீழீட்டில்* (TAS,viii,p.40.)

புரவரி சிகரண நாயகம் (பெ) (= புரவு வரி திணைக்கள நாயகம்) (1160) *புரவரி சிகரண நாயகம் பழைய னூருடையான் எழுத்து* (IPS,182.)

புரவரியார் (பெ) (= புரவுவரித் திணைக்களம்) (1138) *தேவதான இறையிலியாக விட்ட நிலத்துக்குப் புரவரியாரெழுத்திட்ட உள்வரி தரச் சொன்னோம்* (SII,xiv,241.)

புரவலர் (பெ) கொடையாளர் (1134) *நாடு சென்றிரவலராய் இடும்பை நீங்கிப் புரவலராய்ப் புகழ் படைப்ப* (SII,v,645.)

புரவிரட்டாதி (பெ) பூராட்டாதி நட்சத்திரம் (999) *கன்னி நாயிற்று முப்பதாந் தியதி செவ்வாய்கிழமை பெற்ற புரவிரட்டாதி நாள்* (TAS,ii,pp.1-7.)

புரவு (பெ) நிலவரிக் கணக்குத் தொகுதி (1070) *சிவபாதசேகர நல்லூரொடுங் கூடி ஒரூராய் ஒரு புரவாய்* (SII,xiv,194.)

புரவு (பெ) நில வரி (852) *பெற்ற பரிஹாரம் நாடாட்சியும் ஊராட்சியும் புரவு பொன்னும் திருமுக்காணமும் வட்டி நாழியும்* (SII,ii,98.)

புரவு (பெ) இறை நிலம் (1203) *இத்தந்மம் காரையூர் வயல் புரவு பதினாந் வேலிக்கு உட்பட்ட நிலம் இலுப்பை வயல் புரவு வேலியும்* (IPS,157.)

புரவுகள் (பெ) அரசனால் அளிக்கப்பட்ட இறையிலி நிலங்கள் (1439) *புதுக்குளம் தேவிகுளம் நாணம் குள முட்பட்ட குளங்களுக்கும் புரவுகளுக்கும் எல்லையாவது* (TAS,viii,p.3-5.)

புரவு நெல் (பெ) நெல்லாக இறுக்கும் நிலவரி (928) *அறு நாழிக் காலலளக்க கடவ புரவு நெல் முந்நூற்றுக் காடியும்* (SII,v,1375.)

புரவுவரி சீகரண நாயகம் (பெ) (= புரவுவரி திணைக்கள நாயகம்) (1187) *புரவுவரி சீகரண நாயகம் பந்தணை நல்லூர் உடையான் எழுத்து* (SII,v,990.)

புரவுவரித் திணைக் களத்தார் (பெ) அரசாங்க வரிக்கணக்குத் துறையினர் (914) *குடுத்தோம் புரவுவரித் திணைக்களத்தார்க்கு மேற் சொல்லப்பட்ட* (SII,xix,191.)

புரவுவரி திணைக்கள நாயகம் (பெ) வருவாய்த் துறைத் தலைமை அலுவலர் (1038) *இவை புரவுவரி திணைக்கள நாயகம்...* (SII,xiv,161.)

புரவுவரி திணைக்களம் (பெ) வருவாய்த் துறை (1014) *ஸ்ரீராஜராஜ தேவர் பணிமகன் புரவுவரி திணைக்களத்து வரிப்பொத்தக நாயகன்* (SII,ii,88.)

புரள (வி) புரண்டு விழ (1054) *கந் நாடகர் விடு கடகரி புரள* (SII,iv,539.)

புராண க₃ணபதிகள் (பெ) விநாயகரில் ஒரு வகை (985) *ஸ்ரீ மூலஸ்தானத்துத் தெற்கேயெழுந்தருளி இருக்கும் புராண க₃ணபதிகளுக்கு* (SII,xiii,7.)

புராண பட்டற் (பெ) புராணங்கூறும் பிராமணர் (1464) *புராணபட்டற்கும் வேதபராயணம் பண்ணும் ப்ராமணற்கு பணம் 5ம்* (TDI,ii,18.)

புராணம் (பெ) பழங்கதை நூல்கள் (966) *நீதி நூலையு மேதகு புராணமும்* (SII,xiv,87.)

புராண வ்ருத்தி (பெ) புராணம் ஓதுபவர் வாழ்க்கைச் செலவிற்கான நிலம் (1273) *வேதவ்ருத்தி பங்கு இரண்டும் வைத்திய வ்ருத்தி பங்கு ஒன்றும் புராண வ்ருத்தி பங்கு ஒன்றும் ஆக* (SII,vii,145.)

புராண ஸர்ப்பி (பெ) ஒரு மருந்து (1068) *ஆண்டு தோறும் புராணஸர்ப்பி புதைக்கப் பசுவிநெய்* (EI,xxi,38.)

புரி (பெ) கயிறு (1012) *மூவெண் பெயருடைய முப்புரி நூலோர்* (SII,vii,863.)

புரி (பெ) வேதம் ஓதும் பரிசு (970) *மெய்க்காட்டுத் தீட்டினாரெல்லாரும் தம்மில் அஞ்சு புரியிலுஞ் சொல்லிக் கலமறுத்து* (SII,xiii,250.)

புரிக் கிணறு (பெ) உறை கிணறு (885) *புரிக் கிணற்று வடகரை* (SII,xii,105.)

புரி குழல் (பெ) சுருண்ட கூந்தல் (1121) *மங்கையர் திலதம் தியாக பதாகைப் புரிகுழல் மடப்பிடி புநித குணவநிதை* (SII,xvii,605.)

புரிசை (பெ) மதில் (771) *புரிசை மதிற் புலியூர்* (EI,xvii,16.)

புரிசை வட்டம் (பெ) சுற்று மதில் (1012) *நெடுநற் கோபுரங் கோவை குலைய மாபெரும் புரிசை வட்டம்* (SII,vii,863.)

புரிந்த (வி) செய்த (1012) *நறைப் புதுமலர் விரி நந்தவான மிறைப்புத் தொழில் புரிந்த விருந்தவத்தோற்கும்* (SII,vii,863.)

புரிந்தது (வி) செய்தது (889) *பட்டை போத்தன் மேதவம் புரிந்ததென்று படாரிக்கு* (SII,xii,106.)

புரிந்து (வி) விரும்பி (900) *எழிற் பூமங்கை தன் கோன் புரிந்து* (EI,vii,5.)

புரியா (வி) செய்யா (1200) *மகதை வேந்தன் போரொன்று புரியாமுன் பெரிய குறிச்சி யிலெழுந்த புகையே* (SII,vii,123.)

புரியும் (வி) செய்யும் (1006) *குலை புரியும் படை அரைசர்* (SII,i,66.)

புரியும் (வி) விரும்பும் (1006) *யாண்டு இருபத்தொன்றாவ தென்றுங் கலைபுரியு மதி நிபுணன் வெண் கிழாந்* (SII,i,66.)

புரி வாய் (பெ) கிணற்றின் ஓர் உறுப்பு (1259) *தெற்கில் துரவில் தென்புரிவாய் உட்பட வடக்கும்* (SII,v,483.)

புருவக் கடை (பெ) கண் புருவ நுனி (1200) *வாணன் புருவக்கடை வளையப் போம் தீய்ந்து* (SII,viii,97.)

புருழர் (பெ) ஆண்கள் (1021) *கையினால் ஏற்றுகொண்ட புருழராவோர்* (EI,xvi,27.)

புருஷர் (பெ) ஆள் (873) *தனிப் புருஷராயும் தடுத்தாரை* (SII,iii,90.)

புருஷாகாரம் (பெ) ஆண் வடிவு (1014) *நாபிக்கு மேல் புருஷாகாராமாய்* (SII,ii,53.)

புருஷோத்தமன் (பெ) ஆண்களில் சிறந்தவன் (1344) *ரக்ஷிக்கிரானந்த புருஷோத்தமந் உடைய பாதத்வயஜம்* (UCR,xviii,p.16-23.)

புரூரவர் (பெ) ஒரு புராண அரசன் (905) *வந்து தோன்றிய புரூரவர்ப்பின் பார்வேந்தரேனை* (TASSI,1962-65,pp.1-31; PNDCP,p.95-115.)

புரை (பெ) பொய் (1300) *கலி மெலியப் புகழ் பெருகப் புரை பணியத் திசை யனைத்துஞ் செவிடுபடாமல்* (SII,vii,129.)

புரையிடம் (பெ) வீட்டுத் தோட்டம் (1000) *குறுமாப் பள்ளிக் கரியாலும் ஈரைப் புரையிடத்தாலுந் செல்லும்* (TAS,ii,pp.173-207.)

புரையும் (வி) ஒக்கும் (815) *மதிபுரையுங் குடை நிழல்* (SII,iii,206b.)

புரை இடம் (பெ) வீட்டுத் தோட்டம் (844) *பீலிக் கோட்டு புரை இடமும்* (TAS,ii,p.13-14.)

புரோசிதன் (பெ) புரோகிதன் (905) *உயர்தவத்தோன் மடலவிழ் பூமலயத்து மாமுனி புரோசிதன்னாகக்கடல் கடைந்தமிர்து கொண்டும்* (TASSI,1962-65,p.1-31; pnd,p.95-115.)

புரோஹிதம் (பெ) வைதிகச் சடங்கு செய்வித்தல் (866) *மீமாயப் புரோஹிதப் புன்பாய்* (TAS,i,p.1-14.)

புரோஹிதன் (பெ) வைதிகச் சடங்கு செய்யும் குரு (921) *மீநத்ஃவயசாஸநத்தது பொருவருஞ்சீர் அகத்தியனை புரோஹிதனாகப் பெற்றது* (SII,iii,206.a)

புல் (பெ) வைக்கோல் (753) *புதிக்குதிகைக் குற்றது வெயியும் புல்லும் இறாமையும்* (SII,ii,73.)

புல்க (வி) தழுவ (1152) *கலைமாதும் புகழ்மாதும் நயந்து புல்க* (SII,vi,440.)

புல்ல கண்டம் (பெ) கண்ட சருக்கரை (1401) *நெய் அமுது ஆழாக்கு பருப்புமுது உரி புல்லகண்டம் உழக்கு* (SII,viii,491.)

புல்லாந்தி (பெ) ஒரு செடி (1018) *இவ்வெல்லையிற் புல்லாந்தியோடு நின்ற புற்றெயுற்று* (SII,iii,205.)

புல்லிகைக்கண்ட நாண் (பெ) ஒரு வகைக் கழுத்தணி (1014) *புல்லிகைக் கண்ட நாண் ஒன்றிற் கட்டின கண்டு ஒன்றும்* (SII,ii,93.)

புல்லு (பெ) தீவனப் புல் (1218) *குதிரைக்கு புல்லு இடுகிற பறையநுக்கு தந்மிணாட்டியைக் குடுப்பாந்* (SII,vii,917.)

புல்வரி (பெ) கால்நடை மீது ஒரு வரி (1387) *வாசல்ப் பணம் புல்வரி அடைப்புத் தாழ்வு உழவன் சோடி* (EI,viii,31.)

புல்வாய் (பெ) மான் (1134) *பொருபுலியும் புல்வாயும் ஒரு துறை நீருடனுண்ண* (SII,v,645.)

புலம் (பெ) விளை நிலப் பொதுப் பெயர் (709) *புன்புலமுந் நன்புலமும்* (EI,iv,22a; SII,i,135.); (879) *இவ்வூர் புறம்புலத்து வேலி* (SII,xiii,187.)

புலம்பு (பெ) வருத்தம் (785) *மைந்தர் புலம்பு எய்தும்* (IA,xxii,pp.57-75; PNDCP,p.55-62.)

புல மகள் (பெ) பூமிதேவி (771) *பூ மகளும் புலமகளுந் நாமகளும்* (EI,xvii,16.)

புல மடந்தை (பெ) பூமி (1171) *புலமடந்தை கொழுநனாகி போர் மடந்தையை மணம் புணர்ந்து* (SII,xvii,592.)

புலரி (பெ) காலைப் பொழுது (1168) *வைச்சிய தேயத்தின்னும் அரிமுந்நாழி அரியும் புலரியே திரு அமிர்திநு அரி* (TAS,v,p.63-85.)

புலரும் (வி) விடியும் (873) *திங்கட்டிருவாதிரை நான்றவ்விராப் புலருமளவும்* (SII,xiv,10.)

புலவர் (பெ) நாட்டவர் (905) *தென் கூபகர் வடபுலவர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

புலன் (பெ) வயல் (1036) *ராஜ ராஜ நல்லூர்ப் பெரிய புலன் நிலன் ஒன்றே* (SII,iv,223.)

புலி (பெ) விலங்கு வகை (612) *புலி குத்திப்பட்டான்* (CHHS,1971/89.)

புலி (பெ) சோழர் சின்னமான புலி (771) *பொதுமொழி அகற்றிச் சிலைஉம் புலிஉம் கயலுஞ் சென்று நிலையமை நெடுவரை* (EI,xvii,16.)

புலித் தண்டை (பெ) ஒரு மரியாதைச் சின்னம் (1417) *நமக்கு உண்டான வரிசை பாவாடை செமயிர் அடக்கம் நாடகசாலை பகல் விளக்கு ஏறச் சங்கு இறங்கச் சங்கு அங்கக்களரி புலித்தண்டை* (IPS,715.)

புலிப் படை (பெ) புலி போன்ற சேனை (1051) *நன்கெழுதிச் செலுத்தியப் பின்னைத் தன் புலிப்படை ஏவி* (SII,vii,1046.)

புலிப் போத்து (பெ) ஆண் புலி (1012) *தடவரை எழுதிய பொங்கு புலிப் போத்து* (SII,vii,863.)

புலி முகம் (பெ) புலியின் முகத்தை ஒத்த உரு (1234) *அபிஷேக மண்டபத்துக்கு கீழைப் புலிமுகமான சோபானத்துக்கு* (SII,iii,39.)

புலியிருத்தி (வி) புலி உருவத்தைப் பொறித்து (1070) *மேருவிற் புலியிருத்தி வீரஸிம்ஹாஸநத்து வீற்றிருந்தருளி* (SII,vii,884.)

புலியூர் பட்டு (பெ) பட்டுவகை (1290) *பொடை போடுமிடத்துப் பச்சைப் பட்டுப் புலியூர் பட்டுப் பட்டாவளப் பட்டுக் கட்டிக் கொள்ளப் பெறுவார்களாகவும்* (SII,v,283.)

புலை (பெ) புலையர் சாதியைச் சேர்ந்த குடிகள் (891) *தலைக்கரையும் புலையுங் காராண்மை மீதாட்சி உள்ளடங்க* (TAS,i,p.17.)

புலைச்சேரி நத்தம் (பெ) புலையர் குடியிருப்பு (1232) *நீக்கி நின்ற ஊர் நத்தமும் புலைச் சேரி நத்தமும் மன்றுங் கன்று நிலைப்பாழுமளவு நீங்கலும்* (SII,iv,424.)

புலை அடியார் (பெ) புலைச் சாதியினரான அடிமை யாட்கள் (1374) *புலை அடியாரில் முன்னாள் நங்கை புரத்தில் பாட்டத்தில் நின்ற புலை அடியாராய்* (SII,viii,590.)

புவனம் (பெ) உலகம் (1202) *சக்கரவாளமுஞ் சூழும் புவனமேழும் கவிப்ப* (TAS,viii,p.26-28.)

புவனி (பெ) பூமி (905) *புனல் புவனி புத்தேள் மாருதம்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

புழக்கடை (பெ) பின்புறம் (1278) *ஊர்வாஸ்துவில் புழக்கடை வாவநாத்துக்கு கிழக்கு* (SII,iv,426.)

புழுக்குக் கறி (பெ) புழுங்க வெந்த கறி (878) *புழுக்குக் கறி ஒன்று* (SII,xiv,13.)

புழுகு (பெ) புழுகுச் சட்டத்திலிருந்து எடுக்கும் வாசனைப் பண்டம் (1300) *சாந்து புழுகு சாவாது கொம்பு ஒன்றுக்குக் காசு பதினைஞ்சும்* (SII,viii,442.)

புழுகு நெய் (பெ) (= புழுகு) (1127) *கஸ்தூரி மஞ்சாடியு மிரண்டு மாவும் புழுகு நெய்யிரண்டு மஞ்சாடியு நாலு* (SII,iii,80.)

புழுகு நெய்க்காப்பு (பெ) புழுகு நெய் பூசுதல் (1266) *திருக்கார்த்திகைத் திருநாளில் பெரிய பெருமாள் புழுகு நெய்க்காப்புச் சாத்தி அருளவும்* (SII,iv,504.)

புழுகு பாடு (பெ) ஒரு வரி (1443) *பழவரி புதுவரி புழுகுபாடு பொற்பாடு காசுபாடு* (ARE,1916,230)

புழுகு வரி (பெ) ஒருவரி (1224) *அதிகாரப் பொன் புழுகுவரி முள்ளிடி உள்ளிட்ட எப்பேர்ப்பட்ட பொன் ஆயங்களும்* (SII,iv,648.)

புழுதி (பெ) தூர் எடுத்த மண் (883) *நிலத்தேய்ப் புழுதி அட்டப் பெறுவதாக* (SII,xiii,222.)

புழுதிபாடு (பெ) தூர் மண் போடும் கரையோர நிலம் (691) *பெரும்பிடுகு காலிந் புழுதி பாடும்* (SII,i,151; EI,xvii,22.)

புழுவாவார் (வி) புழுப் போல் துன்பப் படுவார் (1100) *ஸ்ரீ கேசரி அரசி பிச்சை ஒன்று இது விலக்குவார் கரி குடிகைப் புழுவாவார்* (SII,iv,1400.)

புழைக்கை (பெ) துதிக்கை (1068) *புரச யானை புழைக்கையிற் பிழைத் திவ்வுலகமறிய* (SII,iii,30.)

புள் (பெ) பறவை (800) *புறங் கூர்வாய்க் கொண்டெழுந்த புள்* (EI,xiii,10.)

புள்ளடிக் கல் (பெ) எல்லைக்கல் (1006) *நாற்கோல் திருவிழா வீதி விட்டு நாட்டின புள்ளடிக் கல்லி நின்றும்* (SII,v,518.)

புள்ளி (பெ) மதிப்பீட்டுக் கணக்கு (792) *ஊர்க் கூறு புள்ளி வழியாற் மனையும் மனைப்படப்பும்* (EI,xviii,14.)

புள்ளி (பெ) விளைச்சல் மதிப்பீடு; விளைச்சல் மதிப்பீடு செய்யப்பட்ட நிலத்தொகுதி (1441) *பசானமுதலாக புள்ளி(வ்) வந்த பேர்க்குப் புள்ளி ஒன்றுக்கு ஆண்டு ஒன்றுக்கு* (SII,v,736.)

புள்ளிக் கணக்கு (பெ) விளைச்சலை மதிப்பிடும் கணக்கன் (1218) *கோத கோவிந்தனும் புள்ளிக் கணக்கு நந்தாமனைச் சேரி இராமன் இரவியும்* (TAS,i,p.289-91.)

புள்ளிக் குளிகை வராகன் (பெ) நாணய வகை (1300) *எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு வழங்கிய புள்ளிக் குளிகை வராகன் பணம் 150* (IPS,589.)

புள்ளி குத்த (வி) நிறுத்திவிட (880) *நாற்ப்பத்தெட்டுக் காணம் தண்டப்படுவதாகவும் இக்காணம் சென்று நின்றும் புள்ளி குத்தப் பிறாததாகவும்* (SII,xii,102.)

புள்ளிச் சோறு (பெ) மதிப்பிட்ட நிலவிழுக்காட்டின் படி ஊழியர்க்கு ஊட்ட வேண்டிய சோறு (1235) *புள்ளிச் சோற்றுக்குத் தூணி நெல்லும் அந்தராயத்துகு அரைத்திரமமும் இறுப்பதா...* (IPS,305.)

புள்ளி பாஞ்னு (பெ) மதிப்பிட்டு பார்த்து (1236) *கடமை அளந்நால் வரி புள்ளி பாஞ்னு திருமாறும் கரணமெழுதின்றவாள் கைய்யால்* (TAS,iii,p.59-63.)

புள்ளினம் (பெ) பறவை சாதி (1136) *வராநதிப் புடையிலும் பல்வேறு புள்ளினமல்லது சிறையநப் படுதலன்றி* (SII,vii,1038.)

புளகம் (பெ) கண்ணாடி (966) *கன்னி நன்னாட்டு புளக வாசற் போரரும் புரிசைக் கனக மாளிகை* (SII,xiv,87.)

புளி (பெ) புளியம் பழம் (946) *முந்நூற்றறுபது தேங்காயும் இருதுலாம் புளியும்* (TAS,i,p.293-94.)

புளிங் கறி (பெ) புளிச் சாறிட்டுச் சமைத்த கறி (878) *புளிங்கறி இரண்டு* (SII,xiv,13.)

புளிப் பழவடை (பெ) புளிச் சிப்பம் (941) *புளிப்பழவடை 7க்கு நெல்லு ஒரு காடியாக ஏழு காடியும்* (SII,viii,529.)

புளியிட்டடுங் கறியமிது (பெ) புளி சேர்த்துச் சமைக்கும் கறியுணவு (1014) *புளிங்கறியமிதுக்கு மிளகுமுக்காற் செவிடும் புளியிட்டடுங் கறியமிதுக்கு மிளகு முக்காற் செவிடும்* (SII,ii,26.)

புற்று (பெ) கறையான் புற்று (916) *புற்று தெற்றியுமாய்க் கிடந்த பாழ்* (SII,xiv,56.)

புறக்கடித்தோம் (வி) ஒதுக்கி விட்டோம் (1258) *கூட்டத்தில் ஒன்றாகப் புறக்கடித்தோம்* (SII,vii,118.)

புறக் கலனை (பெ) பல தொழில் செய்யும் சாதிகள்; அவர்கள் மீதான வரி (1234) *காசாய நெல்லாய முள்ளிட்ட அனைத்தாயங்களும் புறக் கலனையும் திருநாட் படிகளுக்கும் கண்டகோபாலன் சந்திக்கும்* (SII,iv,850.)

புறக் கலனைக் கடமை (பெ) புறக்கலனை சாதிகள் மீதான ஒரு வரி (1183) *ஆசுவிகன் பேராற் கடமையும் புறக்கலனைக் கடமையும் உட்படக் கொடுத்தோம்* (SII,v,861.)

புறக்கலனையார் பேர்கடமை (பெ) (=புறக் கலனைக் கடமை) (1374) *கொல்லை நிலம் கடமை ஆயம் புறக்கலனையார் பேர் கடமை பட்டடை நூலாயம்* (ARE,1911,324)

புறக்கால் (பெ) வெளிவாய்க் கால் (950) *நாற்றங்கால் புகப்பாய் புறக்காலை நணகவந்து* (TASSI,1962-65,p.32-52.)

புறக்கிட்டோட (வி) முதுகுப் புறங்காட்டி யோட (1057) *ஆஹவமலன் புறக்கிட்டோட அவன் ஆனையுங் குதிரையும்* (SII,i,127.)

புறக்குடி (பெ) வெளியூரிலிருந்து வந்து குடியேறும் குடிகள் (1439) *குடியிருக்கும் புறக்குடியாக இருக்கும் பேற்க்கு குடியிருப்புக்கும்* (TAS,iii,p.3-5.)

புறக்குடி காரியம் (பெ) புறக்குடிகள் மீதான வரி (1449) *நல் எருது மாதவழி முறி புறக்குடி காரியம் காணிக்கை விநியோகம் மற்றும்* (IPS,791.)

புறக்குடுப்ப (வி) முதுகு காட்டி தோற்றோட (1058) *ஆஹவமல்லன் அமர் புறக்குடுப்ப* (SII,vii,886.)

புறகு (பெ) முதுகு (1150) *பணியும் செடியும் ஒடுக்கி முட்டும் புறகும் அடிக்கப் பெறுவதாகவும்* (AVNM,9,p.33-34)

புறங் கண்ட (வி) தோற்றோடச் செய்த (921) *பல்லவனைஉம் புறங்கண்ட பராங்குசன்* (SII,iii,206a.)

புறங் கண்டு (வி) முறியடித்து (771) *எதிரேய் வந்தவரைப் பூவலூர்ப் புறங்கண்டு* (EI,xii,16.)

புறங் காத்து (வி) பாதுகாத்து (809) *புறங்காத்துப் புதுக்குவிப்பது* (SII,xiv,40.); (1046) *கோவீற்றிருந்து குடி புறங் காத்துப் பெற்ற குழவிக் குற்ற நற்றாய் போல* (EI,xxx,19 (vi).)

புறங் காப்பார் (பெ) உள்ளூர்க் காவலர் (500) *பிரமதாயமுடையாருந் நாடுகாப்பாரும் புறங்காப்பாரும்* (AVNM,1,p.67-69)

புறங் காவல் (பெ) காவல் பொருட்டு வழங்கும் வரி (815) *இதன் புறங் காவல் எண்பத்தைங் கலம்* (SII,iii,206b.)

புறச் சாரணை (பெ) சுவரின் வெளிப் பற்று (1182) *திருமலை ஜீர்ணித்து இருக்கையாலே ...இத் திருமலை புறச்சாரணை சாத்திவிக்க வேணுமென்று* (SII,viii,261.)

புறஞ் சாய் (வி) ஒரு பக்கஞ் சார்ந்த (1120) *பொராப் புறஞ்சாய் கண்டருக்குத் தான் கொடுத்த* (CHEN,xxiii,p.93-96.)

புறணி (பெ) புன்செய் (997) *விலைகொண்டு உடைய பூமி புறணி இவ்வூர் சாவான்திபூதன் சோமநார் பேரால்* (SII,v,667.)

புறணி நாடுகள் (பெ) அண்டை நாடுகள் (1009) *சோணாட்டும் சோணாட்டுப் படும் புறணி நாடுகளிலும்* (SII,iii,9.)

புறத்தன் (பெ) மாறுபட்டவன் (866) *அறத்துக்குப் புறத்தனாவது* (TAS,i,p.1-14.)

புறத்தார் (பெ) மாறுபட்டவர் (991) *வெவேற்று வகை திருவாணை புறத்தார் படும் தண்டம் பட* (SII,xiii,131.)

புறத் திருச்சுற்றாலை (பெ) வெளிப் பிரகாரச் சுவர் (1006) *திருவையாறுடையார் ஸ்ரீ கோயிலிற் பெரிய புறத் திருச்சுற்றாலையில்* (SII,v,518.)

புறத் திருமெய் (பெ) கோயிலின் வெளிப்புறம் (1100) *புறத் திருமெய்காக்கும் தலைவாயநுக்கு நித்தம் ஒருவனுக்கு நெல்லுக் குறுணியும்* (SII,viii,235.)

புறத்துடர் (பெ) ஒரு நகை (1014) *புறத்துடர் படுகண்ணுங் கள்ளிப் பூவுங் கொக்குவாயும் உட்பட ஒன்று* (SII,ii,2.)

புறத்து நின்று வெளியே இருந்து (986) *இச் சேரிக்கு புறத்து நின்று வந்தேறின குடிகளை* (SII,iii,128.)

புற நாடு (பெ) வெளி நாடு (961) *புறநாட்டிநின்று வந்து இஞ்ஞாட்டிற் கட்டிலேறு மன்றாடி வசம் ஒரு ஆடு குடுப்பதாகவும்* (SII,vii,804.)

புற நின்று பக்கத்தேயிருந்து (800) *ஊராருங் கைகாவலாய் புறநின்று ரக்ஷிப்பது* (TAS,iii,pp.65-66.)

புறப் பகை (பெ) அயல் நாட்டார் பகை (1232) *நன்றாற்றுந் திறம் பொறாது கடி திழைத்த உட்பகையும் புறப்பகையுமறக் கடிந்து* (SII,iv,424.)

புறப்பட (வி) சேர்க்க (1300) *கறிபுளி வெஞ்சனங்களும் பண்டாரத்திலே புறப்படக்கடவதாகவும்* (AVNM,6,p.36-40)

புறப்பட (வி) எதிர் செல்ல (800) *பல்லவன் சேனைக் கன்று புறப்பட* (EI,xiii,10.)

புறப்பாடு (வி) புடைப்பு (1014) *இத நெற்றியில் இரண்டிலும் ஐவிரலே ஆறு தோரைப் புறப்பாட்டு நால் விரலரை* (SII,ii,46.)

புறப் பொதுவாள் (பெ) கோயிலின் வெளி நிர்வாகங்களைக் கவனிப்பவர் (1188) *புறப் பொதுவாள் விருத்தி இலவமண்ணில் பலாவறைக்கு கொள்ளுந் நெல்* (TAS,iv,p.22-65.)

புற படி (பெ) கோயிலில் கருவறை தவிர்ந்த மற்ற செலவு (?) (1300) *திருவுத்திரியமும் உட்படி புறபடியும் திருவோலக்கத்துக்கு* (IPS,610.)

புறம் (பெ) கோயில் பூசை முதலிய அறங்களுக்கான இறையிலி நிலம் (668) *பெருமான்னடிகளுக்கு வழிபாட்டுப் புறமாக* (ARE,1932-33,p.55; SII,xii,16.)

புறம் (பெ) வெளியிடம்; பக்கம் (800) *வீழ்குடர்கள்..ரந்து சிந்தும் புறம்* (EI,xiii,10.)

புறம் (பெ) பெரிய ஊரின் பகுதியாக உள்ள ஊர் (887) *திருவொற்றியூர்ப் புறத்து மணலி ஸபையோம்* (SII,xiii,70.)

புறம்படி (பெ) நகரின் புறப்பகுதி (909) *புறம்படி கருந்திட்டைகுடி* (SII,v,1412.); (1014) *தஞ்சாவூர்ப் புறம்படித் திரிபுவனமாதேவிப் பேரங்காடிப் பெருநகரத்தார்* (SII,ii,24.)

புறம்பு (பெ) எதிரி (1369) *பஞ்சாழத்துகும் பறையகும் பதிநெட்டு நாட்டுக்கும் புறம்பு* (EC,ix,Ht.103 (a).)

புறம்பு (பெ) வெளியிடம் (862) *உள்ளோடு புறம்பால் ஒளி மிகப்போக்கி* (SII,xiv,45.)

புறம் போகல் (பெ) வேறிடத்துக்குப் போதல் (1000) *பொற்குன்றனைக் கண்டு கொண்டேன் இனிப் புறம் போகல் ஒட்டேன்* (SII,iv,167.)

புற மடிகை (பெ) ஊருக்கு வெளியே உள்ள கடைத் தெரு (1344) *புற மடிகையாலும் உள் மடிகையாலும் ஒன்பது துறையாலும் பதினெட்டு தேசத்தில் நின்றும் வந்த வாணியங்களாலும்* (UCR,xviii,p.16-23.)

புற மண்டலங்கள் (பெ) (சோழ மண்டலத்துக்குப்) புறத்தே உள்ள மண்டலங்கள் (1014) *தேவதானமாக சோழமண்டலத்தும் புறமண்டலங்களிலும்* (SII,ii,4.)

புறமாவிது (பெ) தள்ளி வைக்கப்படுவது (984) *தவரனூர்க் கச்சமும் பிழைச்சு ஊர்க்கும் புறமாவிது* (SII,v,783.)

புற மாறாட்டு (பெ) ஒரு விற்பனை வரி (1346) *தறியிறை தட்டார்ப் பாட்டம் ஆசுவம் அவலம்பலம் உள் மாறாட்டுப் புறமாறாட்டு தப்புத் தகுதி உட்பட* (EC,x,Sd.67.)

புற முதல் (பெ) ஒரு வரி (1363) *வாணியர் பேர்க்கடமை செக்காயம் புறமுதல்* (ARE,1918,184)

புறவகை ஆதாயம் (பெ) ஒரு வரி (1534) *சங்கரசய்யன் புறவகை ஆதாயம் ஆக வாங்கி* (SII,24,412)

புறவடை (பெ) விளை நிலத்தின் ஒரு வகை (1340) *நஞ்செய் புஞ்செய் புறவடை தோட்டப்பற்று மற்றும்* (ARE,1934,059)

புறவரவு (பெ) வெளியூரிலிருந்து வருதல் (1009) *சிற்றூராட்சியால் வந்த மீத வட்டி புறவரவா வந்து வட்டி வாணியஞ் செய்வாரையும்* (SII,xvii,235.)

புறவரி (பெ) ஒரு வரி (1381) *உட்பட்ட பல வகையிலும் புறவரி காணிக்கை ... அழித்துக்கொண்ட முதல்* (SII,xxiii,494)

புறவரி வினியோகம் (பெ) ஒரு வரி (1485) *இறுத்து வந்த புறவரி வினியோகம் குதிரைக் காணிக்கை* (ARE,1916,238)

புறவாய் (பெ) வெளிவாய்க்கால் (956) *இவன் வைத்த நிலமாவன இவ்வூர்ப்புறவாய் ஸ்ரீ கண்டவாய்க்காலுக்கு மேற்க்கு* (SII,iv,549.)

புறவாய் (பெ) வெளிப்பக்கம் (986) *பின்மேல் அகவாயும் புறவாயும் மகுடமும் பொன் ஆசித்து* (SII,xix,390.)

புறவாய்க்கரை (பெ) கரையின் வெளிப்புறம் (1018) *பழையனூர் ஐநநாதப் புத்தேரிப் புறவாய்க்கரை வெள்ளம் போகாமே* (SII,iii,205.)

புறவிறை (பெ) மற்ற வரிகள் (890) *எப்பேர்ப்பட்ட புறவிறையும் மனைப் பொன்னும்* (SII,vi,369.)

புறவு (பெ) காடு (785) *தேம்புனற் குறட்டிப் பொன் மலர் புறவில் வெள்ளூர் விண்ணஞ் செழியக்குடி* (IA,xxii,pp.57-75; PNDCP,p.55-62.)

புறவு (பெ) முல்லைக் கொடி (800) *கோவங்கள் ஊர்கின்ற தாள் புறவேய்* (EI,xiii,10.)

புறவூர் (பெ) வெளியூர் (873) *புறவூர் நின்று நெல்லும் அரிசியும்* (SII,iii,90.)

புற வெட்டி (பெ) ஒரு வரி (1312) *கூட்டும் வற்க்கத்துக்கு மாக்கலம் புறவெட்டி கோட்டை கூலி உள்ப்பட கார் மறுவும்* (SII,viii,251.)

புற உடல் (பெ) ஒரு வரி (1238) *எங்கள் பேர் காணிக் கடமை புற உடல் பொற்காசு திருமுன்பு காழ்ச்சிக்கும் நினைப்பிட்டு* (SII,v,984.)

புறாய் (பெ) வயலின் பெயர் (1000) *பறையன் புறாயுமாய் மேலோடியால்ச் செல்லும்* (TAS,ii, pp.173-207.)

புன் கடமை (பெ) புன்செய்ப் பயிர் மீதான நிலவரி (1504) *ஏற்கடமை பேற்கடமை புன்க்கடமை* (ARE,1918,118)

புன்கண் (பெ) துன்பம் (1243) *நெடிய கங்குலூழியென நீண்டு வர உலகிற் புன்கண் மருண் மாலையிது* (EI,xxiii,27.)

புன்செத் திடல் (பெ) (=புன்செய்த்திடல்) (955) *விளைஞ் சறியாப் புன்செத் திடலை விலைக்குக் கொண்டு வயக்கி* (SII,viii,699.)

புன்செய் (பெ) பாசனம் பெறாது விளையும் நிலம் (550) *நிலம் நீர் நிலமும் புன்செய்யும்* (TASSI,1958-59, pp.41-83; PLCP,p.26-32.)

புன்செய்க் கடமை (பெ) (=புன் கடமை) (1262) *கமுகு கடமை பயிர்க்கடமை புன்செய்க் கடமை ஏரி மீன் பாட்டம்....* (SII,viii,753.)

புன்செய்த்திடல் (பெ) புன்செய்ப் பயிர் செய்வதற்கேற்ற மேட்டு நிலம் (910) *புன்செய்த்திடல் கல்லி அகழி திருத்தி* (SII,v,533.)

புன்செய் திருத்து (பெ) பண்படுத்தப்பட்ட புன்செய் நிலம் (1236) *திருநாமத்துக் காணியாகக் கொடுத்த விளை நிலமும் புன்செய்யும் புன்செய்த் திருத்தும்* (TAMIZ,vi,265-67.)

புன்சை (பெ) புன்செய் (892) *புன்சை மரமுதலும் உண்ணிலம்* (SII,xiii,295.)

புன் பயிர் (பெ) மானாவாரிப் பயிர் (1174) *கொடியாலும் புன்பயிராலும் காசு* (SII,vi,438.)

புன் பயிர்க் கடமை (பெ) (= புன் கடமை) (1265) *மாவடை குளவடை நீராணி புன்பயிர்க்கடமை பொன்வரி அந்தராயம் காணிக்கை* (SII,xvii,127.)

புன் புலம் (பெ) புன்செய் (709) *புன்புலமுந் நன்புலமும்* (EI,iv,22a; SII,i,135.)

புன்னை (பெ) மரவகை (1120) *மல்லிகை கிஞ்சுக மஞ்சரி பாதரி புன்னை பாரரையார மகிழ சிதலை மௌவல் செருந்தி* (EC,x,Sd.9.)

புனக் காடு (பெ) நஞ்செய் (?) (1125) *செம்பாதி மாடையால் வந்த புன்செய் புனக்காடும் வரியிலிட...* (KANDT,1968/14.)

புனநாடு (பெ) சோழநாடு (1237) *பின்னொருநாள் காவலனது புனநா டெனுங் களியா லேவலெதிர் செல்லா திறை மறுத்த சென்னி விடு தூசியும்* (SII,v,431; EI,xxii,10.)

புனம் (பெ) வயலின் பெயர் (1000) *புளி வேலிப் புனம் நாறு வாவழி பனைமண் குளப்பள்ளிவளால்* (TAS,ii,pp.173-207.)

புனல் (பெ) மழை நீர் (1176) *புயலும் புனல்கரவாது* (SII,xvii,585.)

புனல் (பெ) நீர் (771) *பூவிரிஉம் புனற் கழனி* (EI,xvii,16.)

புனல் (பெ) நீர் (785) *தேம்புனற் குறட்டி* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

புனலாட்டி (வி) நீராட்டி (1044) *துறை மூன்றிலும் உள் புனலாட்டி* (SII,v,465.)

புனற் கழனி (பெ) நன்செய் நிலம் (771) *பூவிரிஉம் புனற் கழனிக் காவிரியின்* (EI,xvii,16.)

புனை (வி) அலங்கரிக்கும் (966) *பூமிசை மடந்தையும் புனை தமிழ்* (SII,xiv,87.)

புனைந்தருளி (வி) அணிந்து (1168) *வருங் கதிரின் வெயில் விரிக்கும் மணி மகுடம் புனைந்தருளி* (SII,vii,890.)

புஷ்கரபத்தி மடல் (பெ) தாமரை போன்ற திருநீற்று மடல் (1014) *நாளதினாலேய் குடுத்த பொன்னின் புஷ்கர பத்தி மடல் அடையோடும் ஒன்று* (SII,ii,2.)

புஷ்ப யாகம் (பெ) ஒரு வகை வேள்வி (1225) *பெரிய திருநாள் ஸ்ரீ புஷ்பயாகஞ் சமைந்தவாறே பதினெட்டு மண்டலமும் கூடி* (SII,iv,500.)

புஷ்யராகம் (பெ) நவமணியில் ஒன்று (1014) *நவரத்ந மோதிரம் ஒன்றிற் கட்டின வயிரம் ஒன்றும் நீலம் ஒன்றும் முத்து ஒன்றும் புஷ்யராகமும் ஒன்றும்* (SII,ii,93.)

புஸ்தக கச்சம் (பெ) சமண சங்கத்தில் ஒரு பிரிவு (1044) *ஸ்ரீ ராஜேந்த்ர....ஜிநாலயம் தேஸிக்கணம் பஸதிபுஸ்தக கச்சம்* (EC,iv,Yd.21.)

பூ

பூ (பெ) மலர் (785) *பூஞ்சோலை அணிபுறவில்* (IA,xxii,pp.57-75; PNDCP,p.55-62.)

பூ (பெ) விளைச்சல் பருவம்; போகம் (869) *பூவில் கழஞ்சின் அரைக்கால் பொன்னாக வந்த பலிசை* (SII,vii,525.)

பூகம் (பெ) கமுகு (1120) *ஐயொருபதாயிரமாம் பூகம் அதிகையிலே மைவிரவு* (CHEN,xxiii,p.93-96.)

பூங்கழல் (பெ) அழகிய கழலையணிந்த பாதம் (1044) *ஆங்கது மிழக்க மாட்டாது தந் பூங்கழல் சரணென* (SII,v,465.)

பூச்சன்தெ வேட்டுவர் (பெ) வேட்டுவரில் ஒரு தாயாதிக்கூட்டம் (1555) *மோடமங்கலத்து பூச்சன்தெ வேட்டுவரில் பெரிய பெருமாள்* (AVNM,7,p.35)

பூச்சி யாள (வி) உரிமை கொண்டாட (985) *இவ்வூர் பிறந்தார் தேவதானமும் பூந்தோட்டம் பூச்சியாளவுமுளைப்படவும் பெறாதாராகவும்* (SII,iv,516.)

பூச்சுபடி (பெ) மூர்த்திகளுக்கு வாசனைப் பூச்சுக்களுக்கான செலவு (1192) *திருமஞ்சனம்*

திருவிக்கு சாத்துப்படி பூச்சுபடி உள்ளிட்ட விஞ்சனங்கள் (SII,viii,432.)

பூச (வி) பற்றுத் தேய்க்க (994) *திருமஞ்சனம் புகவும் பரிகலம் பூசவும் புளி ஒரு பலத்துக்கு* (SII,viii,653.)

பூசக் கடவான் (பெ) கழுவுபவன் (973) *பரிகலங்கள் மாற்றிப் பூசக் கடவான் ஒருவனுமாக* (SII,xix,62.)

பூசகர் (பெ) கோயில் பூசை செய்வோர் (1383) *இக் கோயிலுக்குப் பூசகராய் நின்ற* (SII,viii,259.)

பூசகள் (பெ) கொங்கு வெள்ளாளரில் ஒரு பிரிவு (1218) *இவூர் வெள்ளாழந் பூசகளில் அரையந் சிறியாநாந* (SII,v,264.)

பூசணி (பெ) ஒரு கொடிப் பயிர் (1273) *வழுதலை பூசணி இட்ட நிலத்துக்கு* (IPS,386.)

பூசல் (பெ) சண்டை (550) *முதுட்க்காட்டி பூசலுட் பட்ட* (CHHS,1971/85.)

பூசல்லோடி (வி) சண்டைக்குப் போய் (875) *எருமை கொன்ற நான்று பூசல்லோடி மேல் வேணாட்டு மணிக்கல வடவூரில் முட்டி* (CHHS,1971/57.)

பூசனை (பெ) வழிபாடு (850) *பட்டி...லவர்க்கு பூசனை செய்யக் கொடுத்தாந* (SII,vi,282.)

பூசி (வி) பாய்ச்சி (994) *எங்கள் அரையன் ஏரியும் நீர் பூசி நெல் விளைவித்த நிலமும் இறையிலி ஆக சேதோம் வாதவூர் ஊரோம்* (SII,xiii,199.)

பூசி (வி) (நீர்) பாய்ச்சி (792) *நீர் பூசி நெடும் பரம் பெறிந்து* (EI,xviii,14.)

பூசிக்கும் (வி) பூஜை செய்யும் (1222) *ஐஞ்ஞூறு வட்டியும் இதில் பூசிக்கு நம்பிமார்க்கு நெல்லு அய்பது வட்டியும்* (SII,viii,488.)

பூசித்தார் (வி) வழிபட்டார் (1151) *அபூர்வ்வர்கள் பூசித்தார்க்கு இடக் கடவோமாக ஸம்மதித்து* (SII,viii,27.)

பூசித்து (வி) வணங்கி (1169) *தேவரை த்ரிஸந்திகளும் பூசித்து* (SII,viii,29.)

பூசும் (வி) தடவும் (887) *திருமேனி பூசுந் திருச்சந்தனத்தோடு* (SII,xiv,16a.)

பூசுரர் (பெ) பிராமணர் (1000) *பட்டாரகரை பூசுரர் மதிலகம் புக கடவியர்* (TAS,iii,pp.174-175.)

பூசை (பெ) பூமாலை (959) *பூசை கட்டுவான் ஒருவனுக்குந் திருமெழுக்கிடுவார்* (EI,xxvii,47.)

பூசைத் தட்டு (பெ) பூசை நடப்பதில் தடங்கல் (1109) *நாயநார் கோயில் பூசைத் தட்டு உண்டெந்றும் திருநாள் காணவேணுமெந்றும்* (SII,vii,538.)

பூசைப் பாதி (பெ) பூசை செய்யும் உரிமை (1344) *ஊரவர் கண்டு தங்களூர் பலதளி பூசைப்பாதியும்* (ARE,1905,424)

பூஜகர் (பெ) பூசை செய்பவர் (1125) *கந்யாதீர்த்த மாட்டிவரும் நித்த பூஜகரும்* (KANDT,1968/14.)

பூஜாங்கம் (பெ) பூசைக்குரிய உறுப்புகள் (1462) *இன்னாயனார்க்கும் நாச்சிமார்க்கும் மற்றுள்ள நாயன்மார்க்கும் பூஜாங்கத்துக்கும் வேண்டும் அனைத்தும் கொத்திலுள்ளரையுங் கற்பித்து* (TAS,i,p.99-102.)

பூஜிக்க (வி) வழிபாடு செய்ய (1090) *கோயில்கள் மூன்றும் சிவப்பிராமணர் பூஜிக்க வேணுமென்று ஆண்டார் அதியமானார்குச் சொல்ல* (SII,vii,533.)

பூஜியாதார் (பெ) வணங்காதார் (1200) *இத் தேவரைப் பூஜியாதர் திருவிராக்கலி நாற்பத்தெண்ணாயிரவர் ஆணை* (SII,vi,554.)

பூஜை (பெ) வழிபாடு (923) *ஆட்டை பூஜை அரைக் கழைஞ்சும்* (SII,iii,11.)

பூட்சி பாட்டம் (பெ) சோழ அரசாங்கத்தில் புரவுவரி திணைக்களத்தில் ஓர் அலுவலர் (1068) *பட்டோலை எழுதின பூட்சிபாட்டம் அதிராஜராஜ வளநாட்டு...* (SII,iv,529.)

பூட்டிய (வி) அணிந்த (1202) *இந்திரன் பூட்டிய ஆரமும் அலங்கலும் அழகுடன் திகழ* (TAS,viii,p.26-28.)

பூட்டு (பெ) வில்லின் நாண் ஏற்றல் (785) *கொடுஞ்சிலை பூட்டிழிவித்து* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

பூட்டுகை (பெ) பொறுப்பேற்றுதல் (1321) *புரட்டாதி மாதவரைக் கடமை இவரைப்*

பூட்டுகையில் இப்படி புணைப்பட்ட நான் இறுக்கப் பாத்தால் (IPS,447.)

பூட்டேர் (பெ) (உழுவதற்கு) பூட்டிய ஏர்(?) (1044) *துர்க்கையுங் கேத்திரபாலருங் கணவதியாரையுங் ப்ரதிஷ்டித்து பூட்டேருங் பிணையுழச்சலுங் ...த்தாநமுங் குடுத்து* (EC,ix,Ht.142.)

பூட்டை (பெ) ஏற்ற மரம் (1056) *வெட்டியுள் திருத்தியும் பூட்டை இட்டும் ஏரி கட்டியும்* (SII,v,489.)

பூட்டை (பெ) ஏற்றம் (1260) *திருனந்தவனத்திலே பூட்டையிட்டு நீர் பாச்சிக் கொள்ளவும்* (TDI,i,90.)

பூண் (பெ) நகை (833) *செந்நன் மாலையுந் திகழ்ந் திலங்கு மணிப்பூணும்* (SII,xiv,44.)

பூண் (வி) அணியும் (905) *பூண் மணி மார்பன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பூண்கை (வி) உடைத்தாதல் (1314) *தேவதானமாய் இது கடமை தவித்து இறை பூண்கையில் பின்பு இறையிலியாக* (SII,viii,166.)

பூண்ட (வி) அணிந்த (1068) *மீண்டு விட்ட கலியும் பூண்ட ஜயத்திருவொடுங் கங்காபுரி புகுந்தருளி* (EI,xxi,38.)

பூண்டமை (பெ) கொண்டமை (995) *தனக்கேயுரிமை பூண்டமை மனக்கொள* (CHEN,xxv,p.341-42.)

பூண்டருள (வி) அணிந்தருள (897) *மஹாதேவர்க்குச் சந்த்ராதித்தவற் பூண்டருள* (SII,xiii,319.)

பூண்டவந் (பெ) மேற் கொண்டவன் (1292) *அறத்தின் பொருளிதனாலிதனைக் காதலுற்றக் கடம் பூண்டவந்* (EC,x,Ct.15.)

பூண்டு (வி) அணிந்து (815) *ஹரிஹயநது ஹாரம் பூண்டு* (SII,iii,206b.)

பூண்டு (வி) ஏற்று (905) *பார் காவல் பூண்டுய்த்த பின்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பூண்டும்பு (பெ) பூண் பிடித்த மரக்கால் (941) *வாகீச்வர பண்டிதனென்னும் பூண்டும்பினால் நிறைத்தளவு தூ நெல்* (SII,viii,529.)

பூண் நூல் (பெ) முப்புரி நூல் (1014) *பூண் நூல் ஒன்று பொன் அறுகழஞ்சேய்* (SII,ii,46.)

பூண (வி) அணிய (1000) *நெடும் பொழில்கள் சலமரு வெள்வடம் பூண* (SII,iv,167.)

பூணாரம் (பெ) அணிகின்ற மாலை (1220) *பூணாரமென விளங்கிய புவனமுழுதுடையாளும்* (CHEN,xiv,p.362-64..)

பூணி (பெ) ஆண் கன்று (1221) *பால் எருமை ஒன்றும் இதிந் கன்று பூணி ஒன்றும்* (SII,vii,794.)

பூத்த (வி) மலர்ந்த (1142) *பூமந்து பதுமம் பூத்த ஏழுலகும்* (SII,v,705.)

பூத் தொண்டர் (பெ) பூப்பறித்துத் தொடுக்கும் பணியாளர் (1300) *சீபண்டாரத்திலெ ஒடுக்கி கொண்டு பூதொண்டர்க்கு படிக்கு நாயனார்க்கு அமுதுபடிக்கு* (IPS,567.)

பூத பலி (பெ) பூதங்கட்குக் கொடுக்கும் படையல் (861) *நானாழி அரிசி கொண்டு பூதபலி ஊட* (TAS,ii,p.85-86.)

பூதம் (பெ) சிறு தெய்வம் (921) *தடம் பூதம் பணி கொண்டு* (SII,iii,206a.)

பூதமுதைத்து (வி) பூதங்களை மகிழ்வித்து (1258) *செவ்வாய்க்கிழமை நாள் ஆடுவெட்டிப் பூதமுதைத்து நிலைமை பண்ணி* (SII,vii,118.)

பூதர் (பெ) பதினெண்கணத்துள் ஒரு சாரார் (1113) *பஞ்ச மஹா பாதகஞ் செய்தானும் தேவர் பூதர் மாதவத்தோர்க்குக் குடுத்தன* (EI,xviii,38; EZ,ii,pp.242-55; SII,iv,1396.)

பூதல மகள் (பெ) பூமி தேவி (905) *பூதல மகளொடு பூமகள்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பூந் தாது (பெ) பூவின் மகரந்தப் பொடி (1296) *சிவந்த தெம்மன்னருச்சி கொண்ட பூந்தா துறைத்து* (CHEN,iv,p.492-94.)

பூ நந்தவானம் (பெ) பூந்தோட்டம் (909) *பூநந்தவானஞ் செய்யவும் வச்சது* (SII,xix,25.)

பூ பாலர் (பெ) அரசர் (1090) *வார் கடல் தீவாந்தரத்து பூபாலர் திறைவிடுத்த கலஞ்சொரி* (SII,iii,71.)

பூமங்கை (பெ) திருமகள் (900) *எழிற் பூமங்கை தன் கோன்புரிந்து* (EI,vii,5.)

பூமரம் (பெ) பூக்கள் தரும் மரம் (877) *பூமர முள்ளிட்ட பய.மரமும்* (SII,vi,288.)

பூமலராள் (பெ) திருமகள் (800) *பூமலராள் வாளுந் தடவளைத் தோணெடு* (EI,xiii,10.)

பூமாந் (பெ) அரசன் (1200) *விந்தமாந முடி நாகர் சென்னிப் பூமாந் விரும்பும் புகழ்* (SII,viii,145.)

பூமி (பெ) நிலம் (550) *இந் நான்கெல்லையகத்தும் அகப்பட்ட பூமியும்* (TASSI,1958-59, pp.41-83; PLCP,p.26-32.)

பூமிசை மடந்தை (பெ) இலக்குமி (966) *என்றும் பூம்போதவற்கு பூமிசை மடந்தையும்* (SII,xiv,87.)

பூ முள்ளி (பெ) ஒரு செடி (925) *தென்னெல்லை நாடும் பூ முள்ளியும் படு நிலனீக்கி* (TAS,i,p.187-93.)

பூமேல் அரிவை (பெ) திருமகள் (1076) *ஸ்வஸ்தி ஸ்ரீ பூமேலரிவையும் போற் செயப் பாவையும்* (SII,vii,137.)

பூயம் (பெ) பூச நட்சத்திரம் (844) *இத்தண்டந் தைய்ப்பூயத்தினாள்* (TAS,ii,p.13-14.)

பூர்ண்ண கும்பம் (பெ) அலங்கரித்த மங்கலக் குடம் (1046) *கலசம் ஒன்பதுக்கும்(ப்) பூர்ண்ணகும்பம் ஒன்றுக்கு விலை* (SII,xiv,192.)

பூர்வ்வ பக்ஷம் (பெ) வளர்பிறைப் பருவம் (989) *இவ்வாண்டு மிதுன நாயிற்று பூர்வ்வபக்ஷத்து ஸப்தமியும்* (SII,xiii,83.)

பூர்வ்வ புருஷஹள் (பெ) முன்னோர் (1215) *திருநுந்தாவிளக்கு எரிப்பதாக எங்கள் பூர்வ்வ புருஷஹள் பலர் பக்கலு பொன் கொண்டு* (SII,vi,350.)

பூர்வ்வ மர்ஜ்ஜாதி (பெ) பழைய வழக்கப்படி (986) *இவ்வேலாக்கைய்யர் பூர்வ்வ மர்ஜ்ஜாதி இறை இறுக்க கடவரல்லாமையில்* (SII,iii,128.)

பூர்வ்வ ராஜர் (பெ) முன்னிருந்த அரசர் (771) *பூர்வ்வராஜர் புகன்றெழுந்து* (EI,xvii,16.); (898) *பூர்வ்வராஜாக்கள் வைத்தபடியே வைத்தேன்* (EI,iii,38a.)

பூர்வ்வாஹ்ணம் (பெ) முற்பகல் (877) *பூர்வ்வாஹணத் தொரு திருவமிர்தும்* (SII,vi,287.)

பூர்வகள் (பெ) முன்னோர் (1215) *எங்கள் பூர்வகள் பலபக்கலும் பொன் கொண்டு* (SII,xii,96.)

பூர்வ மரியாதி (பெ) பழைய வழக்கப்படி (1232) *குடுத்து இவநுக்கு பூர்வ மரியாதி குடங்கை குய்யல் செறு* (EC,ix,Cp.112.)

பூர்வர் முறை (பெ) முன்னோர் வழக்கம் (1258) *பிள்ளைகள் பூர்வர் முறையிலே இராச்சியம் பண்ணக் கடவர்களாகவும்* (SII,vii,118.)

பூர்வாசாரம் (பெ) இறைகாவல் பொருள் (923) *மணி நாகன் பக்கல் பூர்(வ்)வாசாரங் கொண்டு இறையிலியாக வைத்த பூமி* (SII,vi,317.)

பூர்வாஜாரம் (பெ) (= பூர்வாசாரம்) (959) *நுளம்ப மாயிலட்டியார் பக்கல் பூர்வாஜாரம் கொண்டு இறையிலியாக பணித்தோம்* (SII,iii,155.)

பூர்வாண்ஹ ஸந்தி (பெ) முற் பகலில் நடக்கும் சந்தி பூசை (1068) *இத்தேவர்க்கு பூர்வாண்ஹ ஸந்தி ஒன்றின்க்கு* (SII,viii,16.)

பூரட்டாதி (பெ) ஒரு நட்சத்திரம் (929) *திரு நக்கத்திகையான பூரட்டாதி நான்று நறு நெய் ஆடி அருள* (SII,viii,627.)

பூரண பொற்குடம் (பெ) பொன்னாலான நிறை குடம் (1058) *ஸ்ரீ விமாநமும் மண்டபமும் எடுப்பித்து பூரண பொற்குடம் ஐஞ்சு வைப்பித்து* (EI,vii,20 (k).)

பூரி (பெ) மட்டை நெல் (984) *ஆகக் குத்தல் பூரி பதிநாழியும் மூன்றுஸந்திக்குமாக நெயமுதொரு பிடியும்* (SII,xix,348.)

பூரிக் குத்தலரிசி (பெ) சரியாகத் தீட்டாத அரிசி (965) *இராவைக்குப் பூரிக்குத்தலரிசி இரு நாழியும்* (SII,xiii,197.)

பூரி நெல் (பெ) கலப்பு நெல் (926) *அளக்கக்கடவ பூரி நெல் 310 கலம்* (SII,viii,668.)

பூரி அரிசி (பெ) பூரி நெல் அரிசி (1168) *தண்டுவாருக்கு புக்க வூரில் வெள்ளை அரிசி தூணிப் பதக்கும் பூரி அரிசி கலமும்* (SII,viii,291.)

பூலுவன் பெரும்பற்றார் (பெ) கொங்கு வேளாளரில் ஒரு பிரிவு (1300) *பந்தரந்தையில் பூலுவன் பெரும்பற்றாரில் கூத்தன் உடையானான ஆனந்தக் கூத்தற்கு* (SII,v,244.)

பூலோக ராஜ்யஞ் சேகிற (வி) பூமியை ஆளுகிற (1123) *நம் ஏவலால் பூலோக ராஜ்யஞ் சேகிற ஸூர்யபுத்ரந் மநு* (SII,v,456.)

பூவர் (பெ) அரசர் (1075) *ஆழ்கடற்றீவாந்தரத்து பூவர் திறைவிடுத்த கலன்* (SII,iii,68.)

பூ வரி (பெ) ஒரு வரி (1191) *மீன் காசு பொன்வரி பூவரி மற்று எப்போற்பட்ட இறையும் இழந்து* (SII,vii,117.)

பூ வலயம் (பெ) மண்ணுலகம் (1200) *நாவலரைக் காவலரை நல்லோரைப் பூவலயம் உள்ளத் தகும்* (CHEN,iv,p.251-252.)

பூ வழி (பெ) போகம் ஒவ்வொன்றிலும் (999) *பூவழி முக்கலனேய் தூணியும்* (TAS,iv,pp.127-30.)

பூவை (பெ) பெண் (800) *தன முதலாயமும் பூவையும்* (EI,xiii,10.)

பூன் தோட்டம் (பெ) நந்தவனம் (891) *நன்தவநமான பூன்தோட்டத்துக்கு* (SII,v,550.)

பூ இடுவான் (பெ) பூமாலை வழங்குபவன் (866) *பூ இடுவான் குணந்த பூ இண்டையுமாலையும்* (TAS,i,p.1-14.)

பெ

பெட்டகம் (பெ) பெட்டி (1015) *தராப் பெட்டகம் ஒன்று நிறை நூற்று பலம்* (SII,ii,85.)

பெட்டிலு பா₄ணம் (பெ) வாண வெடி (1547) *பெட்டிலு பா₄ணம் ரேகை பொன் 1* (TDI,v,92.)

பெடை (பெ) பெண் பறவை (1220) *விளையாடும் பெடையன்னம்* (CHEN,xiv,p.362-64.)

பெண்டாட்டி (பெ) வேலைக்காரி (946) *வல்லவன் மாதேவியார் பெண்டாட்டி நக்கன் விக்கிரமா பரணி* (SII,iii,110.)

பெண்டிர் (பெ) வேலைக்காரப் பெண்கள் (922) *கோதண்ட மடைப்பள்ளிப் பெண்டிர் பன்றியூர் நாட்டு மங்கல வாசல் குடியன் காடு காள்* (SII,iii,101.)

பெண்டுகள் (பெ) மனைவிமார் (1009) *நம் பெண்டுகளில் தந்திசத்தி விடங்கியாந உலோக மாதேவி* (SII,viii,223.)

பெண்டுகள் போனவள் (பெ) மனைவியாக வாழ்க்கைப் பட்டுப் போனவள் (1258) *இவர்கள் பக்கல் பெண்டுகள் போனவள் குடியாக இப்படி ஆகச் செய்ய கடவோமாகவும்* (SII,vii,118.)

பெண்ணடிமை (பெ) அடிமை நிலையில் உள்ள பெண் (1344) *இவர் தம்முடைய கல்லியாண அடிமையாயும் காசிட்டுக் கொண்டு இடுவித்த ஆணடிமை பெண்ணடிமையால் இருனூறு அடிமையும்* (UCR,xvii,p.16-23.)

பெண்ணடியார்கள்மார் (பெ) பெண்பக்தர்கள் (985) *இரண்டு கூறு பெண்ணடியார்கள்மார் உண்பதாக* (SII,xiii,218.)

பெண்ணுடை (பெ) பெண்கள் உடுக்கும் ஆடை (1044) *ஒருவனை பெண்ணுடை உடுத்தி ஒருவனை அஞ்சு சிகை பட சிரைப்பித்து* (SII,v,465.)

பெண் பள்ளி (பெ) சமணப் பெண் துறவிகள் தங்குமிடம் (945) *இம்மனையும் இக்கிணறும் பெண்பள்ளி யாவதாகவும்* (SII,vii,56.)

பெண் பள்ளி (பெ) பெண் துறவிகள் வாழும் புத்தப் பள்ளி (1014) *இவ்வூரோடும் ஏறின பெண்பள்ளியும் ஆக* (SII,ii,4.)

பெண் மக்கள் (பெ) புதல்வியர் (1000) *இவன் ஸந்ததி ஆண் மக்கள்க்கும் பெண் மக்கள்க்கும் இவன் மருமக்கள்க்கும்* (EI,iii,11.)

பெண் வழி (பெ) பெண் சந்ததி (1164) *அமுது செய்வித்து வருகிற ஆண்டார்களில் ஆண்வழி அற்று பெண்வழியான கொத்துக்கு* (SII,iii,120.)

பொலி பா₄ணம் (பெ) வாண வெடி (1583) *11ம் திருநாள் பெரிய மண்டபத்துக்கு வகை 4 1/2க்கு*

பணம் பெநலிபா ணத்துக்கு ரேகை பொன் 20 (TDI,vi,5.)

பெய் (வி) அணிந்த (1237) *வஞ்சிமுதலாய பெய் வளையார்* (SII,v,431; EI,xxii,10.)

பெய்த (வி) கொடுத்த (764) *ஏரிக்குப் பெய்த அறம்* (TAMIZ,1970, p.124.)

பெய்து (வி) வார்த்து (709) *கைந் நீரிற் பெய்து* (EI,iv,22a; SII,i,135.)

பெய்ப்பட்ட (வி) கொடுக்கப்பட்ட (500) *அவற்றுக்குப் பெயப்பட்ட அறப்புறந் நடையாட்டுவதூஞ் செயும்* (AVNM,1,p.67-69)

பெயர்த்து (வி) நீக்கி (1056) *மீதொளி வெண்குடையுயத்து திண் கலி பெயர்த்து* (SII,iii,29.)

பெயரிய (வி) பெயரையுடைய (905) *பெருந்தூவெள்ளி எனப் பெயரிய* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பெயிதான் (வி) கொடுத்தான் (796) *பொன்கன்றுமே கழனிக்கு பெயிதான்* (MASI,xxvi,p.10-11.)

பெரிது (வி) மிகவும் (905) *பெரிதரிதின் பொறுக்கின்ற பெரும் பொறை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பெரிய (இ) மூத்த (894) *பெரிய ஸ்ரீதரக்ரமவித்தன்னேன்* (SII,xii,109.)

பெரிய (இ) பெரிதான (944) *இவர் முன்னுடைய பெரிய நந்தவானமுட்டட* (SII,iii,12.)

பெரியநாடு (பெ) (=சித்திரமேழி பெரியநாடு) (1057) *விதித்தோம் பெருக்காளரோம் இதினை அன்றெ[ன்]று எடுத்துக்கட்டுவான் பெரியநாட்டுக்குப் பிழைத்தான் இவை சித்திர்மேழிநாட்டுப்பட்டனேன்* (TAMARAI,p.54-56.)

பெருக்க (வி) வளர்க்க (1176) *புயலும் புனல் கரவாது மன்னிய நெதி வளம் பெருக்க* (SII,xvii,585.)

பெருக்காண்மை (பெ) நிறைந்த வலிமை (1238) *...அகஸ்த்ய மஹர்ஷி உன் பெருக்காண்மை போல் இருந்தது காண்* (CHEN,xii,p.499.)

பெருக்காளர் (பெ) வெள்ளாளர்/உழவுத்தொழில் செய்வோர் (1157) *சித்திரமேழி தம்மம் இனிது நடாத்துகின்ற ஸ்ரீராஜேந்தர் சித்ரமேளிப் பெருக்காளரோம்* (TAMARAI,p.54-57)

பெருக்கி (வி) மிகச் செய்து (862) *கடிவளம் பெருக்கி* (SII,xiv,45.)

பெருக (வி) நீர்மிக (1075) *தொந்நில வேந்தர் சூடப் பொன்நிமதுவாறு பெருக கலியாறு வறப்ப* (SII,iii,68.)

பெருகி (வி) வெள்ளப் பெருக்கெடுத்து (944) *அல்லூர் ஊரின் வடக்கிழக்கின்னிலம் காவிரி பெருகிக் குலை உடைத்து* (SII,viii,689.)

பெருகினால் (வி) தடைப்பட்டால் (965) *முட்டாமை எரிப்போம் ஆனோம் விளக்குப் பெருகினால் படி இரட்டி எரிப்போம் ஆனோம்* (SII,xiii,200.)

பெருகு (வி) மிகுகின்ற (973) *பெருகு திறல் சென்னிப் பேரரையன்* (SII,xix,39.)

பெருகொளி (பெ) மிகுகின்ற ஒளி (1120) *திருவுருவமான திருக்கோலம் பெருகொளியால் காட்டினான்* (SII,iv,225.)

பெருங்கார் (பெ) ஒரு அறுவடைப் போகம் (1300) *பொந் கழஞ்சுக்கு உபயம் முக்கலம் ஆக ஒரு பெருங்காரிலே அறுகலநே இருதூணிக் குறுணியும்* (SII,v,233.)

பெருங் காவிதி (பெ) கணக்கரின் ஒரு பட்டப் பெயர் (852) *பெருங்காவிதி சடையன் பள்ளி* (SII,xii,48.)

பெருங் குசவன் (பெ) உயர்ந்த குசவருக்குக் கொடுக்கப்பட்ட பட்டம் (979) *பழுவூர் வேட்கோவன் பசுவதி நகரத்தானான கருவிடை பெருங் குசவனுக்கும்* (SII,xix,238.)

பெருங் குறி (பெ) பிராமண ஊர்ச் சபையின் கூட்டம் (803) *ஸபையோம் பெருங்குறி சாற்றி* (SII,xiv,37.)

பெருங்குறி கொட்டி (வி) சபைக் கூட்டம் கூடுவதை பறை கொட்டி யறிவித்து (1118) *மாவிந் கீழ்ப் தர்ம்மியூதி பெருங்குறி கொட்டிக் கூட்டங் குறைவறக் குடியிருந்து* (SII,vi,57.)

பெருங்குறிப் பெருமக்கள் (பெ) பிராமண ஊர்ச் சபைக் கூட்ட உறுப்பினர் (873) *பட்டப்*

பெருமக்களுள்ளிட்ட பெருங்குறிப்பெருமக்களோம் (SII,iii,90.)

பெருங்குறி ஸபை₄ (பெ) பிராமண ஊர் சபைக் கூட்ட உறுப்பினர் (803) *த₃ந்திவர்ம்மர்க்கு யாண்டேழாவது பெருங்குறி ஸபை₄யோம் எழுத்து* (SII,vi,365.)

பெருங் கேடு (பெ) மிகுந்த துன்பம் (1430) *பட்டிறை பாடாவிரி அருங்கேடு பெருங்கேடு உண்டானாலும்* (AVNM,4,p.18-19)

பெருங் கை (பெ) நீண்ட கை (1012) *கருங்கைக் கடையர் பெருங்கைக் கடவாள் பசுந்தாட்டியும்* (SII,vii,863.)

பெருங் கொல்லன் (பெ) உயர்ந்த பொற்கொல்லருக்குக் கொடுக்கப்பட்ட பட்டம் (905) *பாண்டிய மாராயப் பெருங்கொல்லனாகிய சிரீ வல்லவன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பெருங்கோ வேளான் (பெ) உயர்ந்த வேளார் (குயவர்) பெற்ற பட்டப் பெயர் (900) *சிலன் காவிதியான தென்னவன் திருநெச்சுறத்துப் பெருங்கோ வேளானுக்கு* (SII,v,361.)

பெருஞ் செக்கு (பெ) பெரிய எண்ணெய்ச் செக்கு (852) *துரவு கிணறிழித்தப் பெறுவதாகவும் பெருஞ் செக்கிடப் பெறுவதாகவும்* (SII,ii,98.)

பெருஞ் செண்பகம் (பெ) செண்பகப் பூ வகை (911) *மல்லிகையும் பெருஞ்செண்பகமும் சிறுசெண்பகமும் இருவாச்சியு* (SII,viii,640.)

பெருஞ் சோதி (பெ) மிக்க ஒளி (905) *கண்ணிலிருள் பருகும் பெருஞ்சோதி இந்து₃ கிரணந்* (TASSI,1962-65,pp.1-31.)

பெருந்தகைமை (பெ) கொடைசெய்தல் (1220) *பெருகொளியிற் பருதியென்றும் பெருந்தமைமையிற் றரும னென்றும்* (CHEN,xiv,p.362-64.)

பெருந்தகைஓன் (பெ) பெருமையுள்ளவன் (905) *மாயானம்பி பட்டற்குச் சிறுவனாகிய பெருந்தகைஓன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பெருந் தச்சன் (பெ) உயர்ந்த தச்சர்களுக்குக் கொடுக்கப்பட்ட பட்டப் பெயர் (792) *கச்சிப்பேட் டைம்பனைச்சேரி விடேல்விடுகு பல்லவப் பெருந்தச்சன் மகன் ஸ்ரீ த₃ண்டி₃யேன்* (EI,xviii,14.)

பெருந்தநம் (வி) சோழ அரசாங்க உயர் அலுவலர்களின் வகை (917) *பெருந்தநத்துப் பேராநந் வீரநாராயண நான* (SII,iii,98; SII,xix,249.)

பெருந் தரம் (பெ) (= பெருந்தநம்) (963) *பிள்ளையார் அரிகுலகேஸரி தே₃வர் பெருந்தரத்து தப்பில்தர்மப் பல்லவரையன்* (SII,iii,iii.)

பெருந்தன்மை (பெ) தாராளம்; கொடை வண்மை (905) *சுருங்காத பெருந்தன்மையும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பெருந்தனம் (பெ) (= பெருந்தரம்) (1012) *ஸ்ரீ ராஜராஜ தேவர் பெருந்தனஞ் சோழமண்டலத்து ... நியமங்கிழான் அடிகள் நக்கனும்* (SII,xvii,313.)

பெருந் திணை (பெ) கணக்கருக்கு அளிக்கப்பட்ட ஒரு பட்டம் (500) *கேட்டார் உலவியப் பெருந்திணை நல்லங்கிழான் எஇநங்குமானும்* (AVNM,1,p.67-69); (993) *குந்றநாட்டு கண்ட பெருந்திணையார் சிறு பழுவூர் திருவாலந்துறை மாஹாதேவக்கு* (SII,v,682.)

பெருந் திருவமுது (பெ) பெரிய அளவில் செய்யும் படையல் (1001) *மற்றுஞ் சால்களும் குடங்களும் பெருந்திருவமுதுக்கு பானைகளும்* (SII,xvii,222.)

பெருந்திறம் (பெ) (= பெருந்தரம்) (995) *பழுவேட்டரையர் கண்டன் மறவநார் பெருந்திறத்தரையந் சுந்திரசோழநேந்* (SII,v,667.)

பெருந் தெய்வம் (பெ) பெரிய தெய்வம் (833) *சந்திராதித்தர் வழித் தோன்றீண்டிய பெருந்தெய்வத்திறல்* (SII,xiv,44.)

பெருந் தெரு (பெ) கடைத்தெரு (950) *தஞ்சாவூர்க் கிழாக.. விச்சாதிரப் பெருந்தெருவில் கிழானடிகள் வேளத்துப் பெண்டாட்டி காரி சாத்தி* (SII,xvii,530.)

பெரு நகரம் (பெ) வாணிக ஊர் மன்றம் (873) *குமரமாத்தாண்ட புரத்து பெருநகரத்தோம்* (SII,iii,91.)

பெருநாட்டு வேளாளர் (பெ) பல நாடுகளைச் சேர்ந்த வேளாளரின் பெருங்கூட்டம் (1634) *காணியாளர் துளுவர் முதலான பெருநாட்டு வேளாளர்* (AVNM,7,p.75-81)

பெருநாள் (பெ) நெடுங்காலம் (1134) *பெருநாண் முதற்கும் பிறப்புடன் முன் மூன்றுலகேத்த* (SII,v,645.)

பெருநிரவி (பெ) (வாணிகரின்) பெருங்கூட்டம் (1050) *அஞ்ஞூற்றுவன் புளி கீழ் கூடி ... அழகிய பாண்டியப் பெருநிரவி திசையாயிரத்தைந் நூற்றுவரோம்* (AVNM,2,p.6-8)

பெருப்பு (பெ) மலை (?) (771) *காயலுட் கமலம் மலரும் பாயலுள் வடபாலைப் பெருப்பிற்குத் தெற்கும்* (EI,xvii,16.)

பெரும் (இ) பெரிய (550) *இன்னும் வடபாலெல்லை பெருங் கொல்லையின் றெற்கு* (TASSI,1958-59,pp.41-83.)

பெரும் படைத்தலைவன் (பெ) படைத்தலவரின் ஒரு பட்டம் (500) *வேள் மருகண் மகன் கடலகப் பெரும்படைத்தலைவன் எங்குமான்* (AVNM,1,p.67-69)

பெரும் படைநாயகர் (பெ) படைத்தலைவரில் ஒரு வகை (943) *பெரும்படை நாயகர் மலை நாட்டு நந்திக்கரைப் புத்தூர் வெள்ளங் குமரன்* (ARASI,1905-06, p.171-84.)

பெரும் பணைக்காரன் (பெ) எழுத்தர் அல்லது கணக்கருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பட்டம் (771) *இய்தெழுதின சுத்தகேசரிப் பெரும்பணைக் காரனுக்கு* (EI,xvii,16.)

பெரும் பணைகன் (பெ) உயர்ந்த கொல்லருக்குக் கொடுக்கப்பட்ட ஒரு பட்டம் (900) *கோக் கருநந்தடக்கற்கு ஆயுதங்கள் செய்வான் விழிஞத்து ஸ்ரீ வல்லவப் பெரும்பணைகனாயின அவியலன்றடக்கன்* (TAS,i,p.197-200.)

பெரும் பள்ளி (பெ) புத்தர் ஆலயம் (1090) *அக்கசாலைப் பெரும்பள்ளி ஆழ்வார் கோயிலுக்கு* (AVNM,3,p.45)

பெரும் பாடிகாவல் (பெ) பெரிய நிலப்பகுதியைக் காவல்புரிபவர் பொருட்டுச் செலுத்தும் வரி (1145) *புன்சை உட்பட்ட பெரும் பாடி காவலும் மற்றெப்பேற்பட்ட பெரும்பாடி காவலும்* (SII,viii,319.)

பெரும் பூ (பெ) ஆண்டின் முக்கிய அறுவடைப் போகம் (1199) *தேவதான இறையிலியாக ஒன்பதாவது பெரும்பூ முதலிட்டு* (SII,v,293.)

பெரும் பூதம் (பெ) ஆகாயம் (1446) *பிணி கொண்ட காரையு முன்னீரையும் பெரும் பூதத்தையும் பணிகொண்ட செண்பக தென்னா பராக்கிரம பாண்டியனே* (TAS,i,p.95-98.)

பெரு மக்கள் (பெ) பிராமண ஊர் மன்ற உறுப்பினர்கள் (771) *பெருமக்கள் அருளாற் பெற்றது* (EI,xvii,16.)

பெருமணி (பெ) கோயில் மணி (875) *திருக்கோயில் லெடுப்பித்து இப்பள்ளிக்கிட்ட பெருமணி ஒன்று ஊட்டுத்தாள்* (TAMIZ,1970,p.125.)

பெருமாள் (பெ) திருமால் (935) *திருவீரட்டானத்துப் பெருமாளுக்கு* (EI,vii,20e.)

பெருமாள் (பெ) அரசன் (951) *விலக்கும் ஊராளர் வெவ்வேற்று வகையால் பெருமாள்க்கு ஐம்பத்திரு கழைஞ்சு பொன் தண்டப்படுவது* (TAS,i,p.288-89; TAS,v,p.6-7.)

பெருமான் (பெ) தலைவன் (1012) *திண்டிறற் கண்டன் செம்பியர் பெருமான்* (SII,vii,863.)

பெருமானடிகள் (பெ) (கோயிலில்) மூலவர் (668) *திருக்கழுக்குன்றத்து பெருமான்னடிகள்ளுக்கு* (ARE,1932-33, p.55; SII,xii,16.)

பெரு முதியன் (பெ) சேரநாட்டில் கோயில் ஊழியர்களுள் ஒருவன் (960) *உள்பாடனும் பெரு முதியனு* (TAS,iii,p.159-69.)

பெரு மூத்தவன் (பெ) (= பெரு முதியன்) (1010) *கால்கரை நாடு வாணநாரே [உள்]பாடனும் பெரு மூத்தவனுங் கூடியிருந்து* (TAS,ii,p.42-44.)

பெருமை (பெ) புகழ் (1144) *இருநிலமும் பெருமையெய்தி எண்டிசையுங் குடை நிழற்ற* (SII,xiv,257.)

பெரு வரி (பெ) வரி வகை (1044) *பெருவரி எப்பேர்ப்பட்டிதும் தேவர்கந்மிகள் இறுக்கடவாராகவும்* (SII,v,633.)

பெரு வலி (பெ) மிக்க பலம் (1068) *அவர்விட்ட தாங்கரும் பெருவலித் தண்டு கெடத் தாக்கி* (EI,xxi,38.)

பெரு வழி (பெ) நெடுஞ்சாலை (993) *மதிரைப் பெருவழி நீக்கி விற்றுக்குடுத்தோம்* (SII,xiii,182.)

பெரு வார்த்தை (பெ) புகழ்ச் சொல் (1270) *போரேற்று நின்ற பெருவார்த்தைய் இன்றும் புதுவார்த்தையே* (SII,iv,618.)

பெரு வாழ்வு (பெ) நிரம்பிய நல்வாழ்வு (1176) *செங்கோலுந் திசையெட்டுங் காவல் கொள்ளப் பெருவாழ்வு பெற்று* (SII,xvii,585.)

பெரு விலை (பெ) ஏலத்தில் கூறப்படும் விலை (1285) *சேனாபதப் பெருவிலையாக விற்றுக் குடுத்தபடி* (IPS,398.)

பெரு விழா (பெ) திருவிழா (887) *சித்திரைத் திருவோணம் பெருவிழாவாக* (SII,vii,421.)

பெருன் திறம் (பெ) (= பெருந்தரம்) (984) *உடையார் பெருன் திறத்து குவளாலமுடையான் அம்பலவந் பழுவூர் நக்கனாந விக்ரமசோழ மகாராஜநேன்* (SII,xix,357.)

பெலம் (பெ) குகை (1148) *சிலை முறியப் புலி பெலஞ்சேர கனமால் வரைக் கயல் விளையாட* (TAS,vii,p.54-55.)

பெலிகல் (பெ) பலியிடும் பீடம் (1127) *இந்நிமந்தம் சந்திராதித்தவற் செல்வதாகப் பெலிகல்லினில் நீர்வார்த்து கல்வெட்டுவித்துக் குடுத்தோம்* (TAS,iv,p.17-18.)

பெற்ற (வி) அடைந்த (731) *தேவமுதி அங்கமணி பெற்ற செறுவின்* (SII,viii,331.)

பெற்றத்தையேறும் பெருமான் (பெ) சிவன் (1000) *பண்டு நாடறியப் பெற்றத்தையேறும் பெருமான்* (SII,iv,167.)

பெற்றது (வி) அடைந்தது (771) *பெருமக்கள் அருளாற் பெற்றது* (EI,xvii,16.)

பெற்றன (வி) விலையுடையவை (887) *புடவை இணை இரண்டரைக் காணம் பெற்றன* (SII,xiv,16a.)

பெற்றான் (வி) அடைந்தான் (771) *ஒரு புன்செயும் பெற்றான்* (EI,xvii,16.)

பெற்று (வி) அடைந்து (771) *மன்னர் கோனருளிற் பெற்றும்* (EI,xvii,16.)

பெற்றுடைய (வி) அடைந்துள்ள (866) *கீழ்குளத்து வயலுள் தான் பிரமதேயம் பெற்றுடைய நிலத்தில் அட்டின பூமி* (TAS,i,p.1-14.)

பெற்றுடையர் (பெ) உரிமையாகப் பெற்றவர் (915) *ஸ்த்ரீத₄நம் பெற்றுடையரோம்* (SII,xix,211.)

பெறக்கடவது (வி) அனுபவிப்பது (876) *சாத்தனுமிவன் வழியிலாரு பெறக்கடவ தாகவும்* (SII,xii,63.)

பெறாதாக (வி) தகுதியற்றதாக (804) *சிராவணை புகவும் பணிக்கவும் பெறாதாகவும்* (SII,xiv,37.)

பெறாதார் (வி) இயலாதார் (804) *முழுச் சிராவணை இல்லாதாரை எவ்வகைப்பட்ட வாரியமும் ஏற்றப் பெறாதாராகவும்* (SII,xiv,37.)

பெறாதார் (வி) அடையக்கூடாது (896) *ஸ்திரிகளைக் கொண்டு போந்து அம்பலத்துப் பெறாதாராகவும்* (SII,xiii,312.)

பெறாதது (பெ) நடத்தக் கூடாது (896) *உவாவும் ப்ரதிபதமும் கரணங்களும் பெறாததாகவும்* (SII,xiii,312.); (861) *தண்டமும் பட்டு பிந்நையும் விளைக்கப் பெறாதிதாகவும்* (SII,xiv,78.)

பெறாப்பேறு (பெ) அவதூறு (1526) *மூத்த கங்கன் இளையகங்கன் உள்ளிட்டாற்கு அடிபிடி அனியாயம் புன் கோசனம் பெறாப்பேறு மீன் பறிக்குதல் தவிர்த்தமைக்கு* (TAS,vi,129.)

பெறு (வி) உரிய (993) *உண்ணில மொழிவின்றி பெறுவிலைக் காணங் கிழி கைக் கொண்டு* (SII,xiii,191.)

பெறுக்கரிசி (பெ) களைய வேண்டிய அரிசி (1140) *பெறுக்கரிசி பெறுக்கிப் பருப்புமுதுள் தேய்ப்பாளுக்கு* (SII,vii,485.)

பெறுக்குவாள் (வி) அரிசியில் கல் பொறுக்கி எடுப்பவள் (1140) *பெறுக்கரிசியும் பெறுக்குவாள் ஒருத்திக்கு* (SII,vii,485.)

பெறும் (வி) அடையும் (753) *இவன் பெறு மனெயும்* (SII,ii,73.)

பெறுமாறு (வி) அடையும்படி (916) *அறு கூறினால் புரவும் ஆயதியும் பொனும் பெறுமாறு* (EI,iv,32.)

பெறுவதாக (வி) (753) *கோலகலமும் புழுதிபாடும் பெறுவதாகவும்* (SII,ii,73.)

பெறுவதும் (வி) (குழந்தை) பெற்றதும் (800) *ஆண்பிள்ளை பெறுவதும்* (SII,vii,581.)

பெறுவர் (வி) அடைவார்கள் (1200) *தாரு முடியு முரசுந் தமக்குரிய பாருமுடன் பெறுவர் பார்வேந்தர்* (SII,vii,97.); (845) *1000 அச்வ மேதஞ் செய்த பலன் பெறுவார்* (EI,xi,22b.); (919) *ரக்ஷிப்பார் சிவலோகப்ராப்தி பெறுவான்* (SII,viii,641.)

பெறுவிலை (பெ) உரியவிலை (1125) *ஸ்ரீபாதக் கோலால் குழி இரண்டாயிரமும் பெறுவிலைக் காணங் கிழி* (SII,vii,96.)

பே

பேச்சு (வி) உடன்பாடு (1301) *ச...ரதித்தவரை இப் பேச்சின்படி கடமை கொள்வோ...* (IPS,412.)

பேசி (வி) தீர்மானித்து (1014) *இடக் கடவ பொன்னும் காசும் பேசிக் கல்லில் வெட்டின* (SII,ii,4.)

பேசில் (வி) சொன்னால் (1012) *பிழையறைப் பேசில் ஐம்பதிற்றைஞ்சோடு* (SII,vii,863.)

பேசினான் (பெ) பேசினவன் (764) *இவ்வறத்து மேலன்றிப் பேசினான்* (TAMIZ,1970,p.124.)

பேண (வி) பாதுகாக்க (1066) *குவலையத் துயிர்களைப் பெற்றதாயினும் பேண* (SII,v,976.)

பேணி (வி) போற்றி (905) *நான் மறை பேணி ஐ வேள்வி நலம் படுத்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பேணிய (வி) பாதுகாத்த (1012) *பெறுவன பேணிய பழநெற் றூணியும்* (SII,vii,863.)

பேதை பாதம் (பெ) காலில் அணியும் ஒரு அணி (1279) *பைம் பொற் பலதொழிற் திருவுடையாடையுந் திருக்கழற் கீழிடும் பேதை பாதமும்* (SII,viii,69.)

பேய் (பெ) பிசாசு (800) *விழிகட் பேய்* (EI,xiii,10.)

பேர் (பெ) ஒவ்வொருவர் (987) *இறை காட்டின கரணத்தானையும் தேவகந்மிகள்ளே பேர் பொன் அய்ம்பய்ம்பது பொன் மன்றி இறுப்பித்தாலும்* (SII,xiii,76.)

பேர் (இ) பெரிய (770) *சாவாமூவாப் பேர் பசு* (SII,xiv,18.)

பேர் (பெ) பெயர் (792) *பட்டத்தாள்மங்கலம் என்னும் பேரால்* (EI,xviii,14.)

பேர்க் கடமை (பெ) தனிக்குடிகள் பேரில் வாங்கும் வரி (1302) *சேனை அங்காடிகள் கோயிலங்காடிகள் பேர்க்கடமை* (ARE,1921,454)

பேர்கலப்ப (வி) பெருமையடைய (700) *இருகால் பொலங்கருவில் பேர்கலப்பத் தோந்நிறி ஒருகாற் துலாபாரம் புக்கான்* (AVNM,7,p.13-14)

பேர்கள் (பெ) பட்டம் அல்லது சிறப்புப் பெயர்கள் (800) *அவனெறிந்த வூர்களும் அவன் பேர்களும்* (EI,xiii,10.)

பேர்த்த (வி) ஒத்த (999) *பொன் கழஞ்சிற் பேர்த்த துளைப்பொன்* (SII,vi,31.)

பேர்த்தன (வி) ஒப்பன (944) *திருவெள்ளறைக் கல்லால் கழஞ்சு பேர்த்தன முப்பதின் கழஞ்சு பொன் குடுத்த* (CHEN,iii,p.197.)

பேர்த்து (வி) சமமான (943) *தீப்போக்குச் செம்பொன் கழைஞ்சில் பேர்த்து உரையுந்துளையும் வழுவாதது* (SII,iv,547.)

பேர்ப் பொன் (பெ) ஒவ்வோர் ஆள் மீதும் தண்டும் பொன் (957) *தான் வேண்டு கோவினுக்கும் பேர்ப் பொன் இறையிலி இருபத்தைங் கழைஞ்சு* (SII,xiii,164.)

பேர் வழி (பெ) ஒவ்வோர் ஆளின் மீதும் (1246) *ஒன்றுக்கு ஐஞ்சாக வந்த காசும் பேர்வழி சிகை*

கிடன்த பேர்கள் இரட்டியாக வந்த (ARE,1931-32.p.57-58.)

பேர் வாங்கி (வி) பெயர் கொடுத்து (994) *நீலக்ரீவ மாறனைத் தண்டி இராஜராஜ நென்று பேர் வாங்கி இப்பட்டம்* (SII,v,692.)

பேர (வி) பிளக்க (921) *நிலம் பேர நிகர் கடந்தும்* (SII,iii,206a.)

பேரடைகள் (பெ) முக்கிய அரச ஊழியர் (1245) *நாயநார் கண்ட கோபாலர் பேரடைகளில் கொல்லை இருசெயந் உடையர்* (SII,viii,152.)

பேரதி அரையர் (பெ) அரசு அலுவலர் முதலியோரின் ஒரு பட்டப்பெயர் (801) *மாறப்பிருவினார் ஆயின பேரதி அரையர்கள் அடியான் வாலி வடுகன் ஆயின கலியூர்க்க இளவரையன்* (IPS,17.)

பேரப்பன் (பெ) தந்தையின் அண்ணன் (1014) *ஊரன் குன்றநும் தந் பேரப்பன் மகன் பூதி திருவன்* (SII,ii,63,94.)

பேரப்பன்மார் (பெ) தந்தையின் அண்ணன்மார் (988) *பேரப்பன்மாரிதும் இவகள் மக்களிதும் இவகளுக்குப் பிள்ளை குடுத்த மாமன்மாரிதும்* (EI,xxi,27.)

பேரயன் (பெ) (= பேரரையன்) (999) *தென்கரைச் சிறுபாலையூருடையான் மஞ்ஞானையாகிய இராசிங்கப் பேரயற்காக* (SII,vii,739.)

பேரரைசன் (பெ) உயர் அலுவலர்க்குக் கொடுக்கப்பட்ட ஒரு பட்டம் (785) *மாற்றரைசரை வலி துலைக்கும் வீரமங்கலப் பேரரைசன் ஆகிய தீரதரந் மூர்த்தி எயினன்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

பேரரையன் (பெ) (= பேரைசன்) (771) *மூவேந்த மங்கலப் பேரையனாகிய வைத்யசிகாமணி மாறங்காரி* (EI,xvii,16.)

பேரன் (பெ) மகன் அல்லது மகள் வயிற்று மகன் (1080) *இவந் பேரன் சேந்தமங்கல நாடாழ்வாந் இத் தளிகைக்கு இட்ட வெண்கலம்* (SII,vii,989.)

பேரன்மார் (பெ) மகன் அல்லது மகளின் ஆண் மக்கள் (1279) *வெட்டன் பள்ளியில் னாணி அப்பாஜயன் பேரன்மார் அனந்தயன் பயிச்சாண்டை செட்டி ஆண்டை இம் மூவருக்கும்* (EC,iii,Tn.111.)

பேராக்கி (வி) பெயர் வைத்து (1003) *முட்டமென்னும் பேர் தவிர்த்து மும்முடிச்சோழ நல்லூர் ரென்று பேராக்கி* (TAS,i,p.291-92.)

பேராத (வி) மாறாத (1220) *நிலை பேரிலும் பேராத நெஞ்சுடைய செஞ்சேவகன்* (CHEN,xiv,p.362-64.)

பேராது (வி) நிலைமாறாது (1145) *நெடு மதகு நிலைநிற்கச் செய்தமைத்து பேரா திவ்வுலகுரைக்கும்* (SII,vii,1044; IPS,120.)

பேராயச் சம்மாதம் (பெ) ஒரு வரி (1368) *எருத்து சம்மாதம் பேராயக் சம்மாதம் ஆட்டைச்சம்மாதம்* (ARE,1919,34)

பேராயம் (பெ) ஒரு வரி (1482) *பட்டடை விளாகம் பட்டடைக்குடியள் பேரில் பேராயம்* (ARE,1921,461)

பேராளர் (பெ) பெருமையுடையவர் (991) *பேராளர் வெண்காடர் தங்கோயில் மேலொரு பைஞ் பொற்குடம்* (SII,xiii,144.)

பேரி (பெ) முரசு (1066) *தாரையும் பேரியும் மேகடம்பமும்* (SII,v,976.)

பேரிகை (பெ) முரசு (1300) *இரட்டைச் சங்கும் ஊதி பேரிகை உள்ளிட்டவை கொட்டுவித்து கொள்ளவும்* (SII,iii,25.)

பேரிருள் (பெ) மிகுந்த இருள் (1012) *கங்குற் குழம்பு படு பேரிருட் பிழம்பு* (SII,vii,863.)

பேரில் (வி) நிலைமாறில் (1220) *மலைபேரிலும் வான் பேரிலும்* (CHEN,xiv,p.362-64.)

பேரிளமையார் (பெ) வெட்டி நிலையில் உள்ள உழுகுடிகள் (997) *நம்மூர் பெரியேரி நில வெட்டியார் ஆகிய நாநூற்றுவப் பொற்சாலை பேரிளமையாரே பேரால் பதக்கு நெல்லு* (SII,vii,809.)

பேரிளமையார் (பெ) உழுகுடி வெள்ளாளர் (1177) *திருக்கடவூர் மஹாஸபையோம் இவ்வூர் அம்பர்னாட்டு பேரிளமையார் இருநூற்று நாற்பதின்மற்கும் ... ... வெள்ளாளரைக் கடமைகொள்ளுமிடத்து* (ARE,1925,253.)

பேருடைச் சிறப்பு (பெ) பெயர் சூட்டு நாளன்று செய்யும் சிறப்பு (1050) *மாமணி யாழ்வார்*

திருநாமஞ் சாத்தினமையாற் பேருடைச் சிறப்பு இவனுக்கு (SII,iv,413.)

பேரூரார் (பெ) வெள்ளாள ஊர் மன்றம் (810) *திருநெச்சுறத்து பேரூரார் கைய்யில் குடுத்த கழஞ்சிரண்டு* (SII,xiv,42.)

பேரெருமை (பெ) சிறந்த எருமை (900) *நொந்தாவிளக்கு ஒன்று இதுக்கு விட்ட சாவாமூவா பேரெருமை அஞ்சு* (TAS,iii,p.75.)

பேரெல்லெ (பெ) முழு எல்லை (753) *இந்நாற் பேரெல்லெயுள்ளும் அகப்பட்ட நீர் நிலனும்* (SII,ii,73.)

பேற்கடமை (பெ) (= பேர்க் கடமை) (1495) *வாசல் வரி தறிக்கடமை பேற்கடமையிலும் கொல்லைப் பொன் வரியிலும்* (TDI,ii,133.)

பேற் சம்மாதம் (பெ) (= பேர்க் கடமை) (1482) *எருத்துச்சம்மாதம் பேற்சம்மாதமுள்பட்ட னுலாயம்* (ARE,1921,461)

பேறவை (பெ) (= பேரவை): பெரிய தாய்: தாயின் அக்கா (921) *சிற்றவைப் பேறவை மக்களையும்* (ARASI,1904-05,p.131.)

பேறாளார் (பெ) அரசு வரி வசூலிப்பவர் (1316) *எங்கள் முதலியார் சூரிய தேவரைப் புணைக் கொண்டு இவர்களையும் பேறாளருடனே காட்டிக் குடுத்து* (SII,viii,247.)

பேறாறு (பெ) கிருஷ்ணை ஆறு (1126) *கொல்லாபுரத்து ஜயஸ்தம்பமும் நாட்டி [பேறாற்ற]ங்கரை கொப்பத்து ஆகோமல்லனை* (SII,viii,224.)

பை

பை (பெ) படம் (1000) *நீலமலருஞ் செழுநீர் சிராமலையான் பைத்தலைப் பாம்பு கண்டீர்* (SII,iv,167.)

பைங்கிணறு (பெ) தற்காலிகக் கிணறு (?) (1126) *பைங்கிணற்றில் ஏரிநீர் பாயப் பெறுவதாகவும்* (SII,vii,97.)

பைஞ்சக் கண்டி (பெ) ஒரு மரியாதைச் சின்னம் (849) *பார்க்கோலுங் கப்பானும் பைஞ்சக் கண்டியும்* (TAS,ii,p.67-68.)

பைஞ் பொன் (பெ) நல்ல பொன் (991) *வெண் காடர் தங்கோயில் மேலொரு பைஞ்பொற் குடம்* (SII,xiii,144.)

பைம் பூண் (பெ) ஒரு பொன் நகை (1068) *வச்சிரப் பைம்பூண் மனுமநும்* (EI,xxi,38.)

பையிக்ஷம் (பெ) பிச்சை (1050) *நாம தேசமுங் கொடுத்து இவன் பையிக்ஷம் புக்குத் தேடி உடலாகத் தந்த காசு* (TAS,i,p.249-50.)

பைரவாலய (பெ) பைரவர் கோயில் (1461) *கோஷ்டமும் பைரவாலயவும் ருஷபாதிர் பரிவாராங்களும்* (TAS,viii,p.9-11.)

பொ

பொக்கணம் (பெ) பை (1014) *கனத்து செய்து தூக்கின பொக்கணம் ஒன்று* (SII,ii,50.)

பொக்கிஷம் (பெ) கருவூலம் (1238) *இவ்வூர் நியாயத்தாரும் தானத்தாரும் வந்த பொக்கிஷத்து முதல்களும்* (SII,viii,206.)

பொங்கு (வி) செருக்குற்ற (1012) *தங்க டிருக்குலத்தோர் தடவரை எழுதிய பொங்கு புலிப் போத்துப் புதுக்க* (SII,vii,863.)

பொங்கு (வி) கொந்தளிக்கும் (1225) *பொங்கு திரை ஞாலத்துப் பூபாலர் தோள் விளங்கும்* (SII,v,300.)

பொங்கு (வி) உயர்ந்த (1120) *பொன்னம்பலக் கூத்தன் பொங்கு சடை வெற்பினாற் சரத்தினான் வேறு* (SII,iv,225.)

பொங்கு (பெ) செழிப்பு (831) *பொங்கார்ந்த தோட்டார் கரும்பு* (SII,xiv,43.)

பொச்சை (பெ) கரிந்த காடு (1086) *வநசரர் திரியும் பொச்சை வெஞ்சுரமேற்றி கொற்ற விஜயஸ்தம்பமும் திசை தொறு நிறுத்தி* (SII,vii,1032.)

பொட்டி (பெ) ஒரு வகை முகத்தல் அளவை (1396) *மாடை 10ம், நெல் 30 பொட்டியும் தாமே ஏறட்டுக் கொண்டு* (EI,xxxii,29.)

பொட்டு (பெ) ஒரு நகை (1014) *திருக்கைப் பொட்டு ஓரணை பொன் தொண்ணூற்றுக் கழஞ்சரை* (SII,ii,2.)

பொட்டை (பெ) விளை நிலத்தின் பொதுப் பெயர் (954) *கண்ணை காலாயுடையார் பொட்டையுந் தச்சனார் பொட்டையும்* (TAS,iii,p.169-71.)

பொடி (பெ) தூசி (864) *இதத்ருமம் ரக்ஷிப்பார்...அடி பொடி என் தலை மேலது* (SII,xii,54.)

பொடிபட (வி) தூளாக (1012) *நெடுநற் கோபுரங் கோவை குலைய மாபெரும் புரிசை வட்டம் பொடிபட* (SII,vii,863.)

பொடிபடுத்தமை (வி) அழித்தமை (1050) *ஏழரை இலக்கமும் பாழ் படச் சினவில் பூண்டுர் பதியை பொடி படுத்தமையில்* (SII,v,520.)

பொடியாக்கி (வி) தூளாக்கி (1044) *தன் நகர் அரசுறை கருமாளிகை பொடியாக்கி* (SII,v,465.)

பொடை [*பார்:* போடை]

பொத்தகம் (பெ) நில வரிக்கணக்கு கொண்ட மொத்த ஏடு (927) *நம் பொத்தகத்து இழித்து இந்நிலமிறையிலி* (SII,viii,601.)

பொத்தக மாற்றின நிலம் (பெ) வரிக் கணக்கிலிருந்து விலக்கிய நிலம் (1296) *பொத்தக மாற்றின நிலத்துக்கு கரும்பும் செங்கழுநீரும் கமுகும் கொழுந்தும்* (SII,vi,36.)

பொத்தி (பெ) ஒரு வகை மணி (991) *பளிங்கு வையிரம் பத்து பொத்தி மூன்று முத்து இருநூற்றொருபத்திரண்டு* (SII,xiii,144.)

பொதாதி (பெ) (= பொது வாரி) (1317) *ஏரிநீர் வாங்க நிலமும் ஊரணி குளமும் பொதுவும் பொதாதியும் மேனோக்கின மரமும் கீழ்னோக்கின கிணறும்* (SII,iv,522.)

பொதாரி (பெ) (= பொது வாரி) (1236) *மனை படைப்பையும் பொதுவும் பொதாரியும் மன்றுங் கன்றுநிலை பாழும்* (SII,viii,336.)

பொதா வரிகள் (பெ) (= பொதுவாரி) (1319) *விழுக்காடு வரும் ஏரி கீழ் நன்செய் விளைநிலம் விழு காடு பொதுவும் பொதாவரிகளும்* (SII,iv,525.)

பொதி (பெ) 2 1/2 கலம் அளவு கொண்ட பெரிய மூட்டை (1001) *திருவக்கரைக்கு எடுத்த எருத்து கூலி பொதி ஒன்றினால் னெல்லு இருகலனேய் தூணி பதக்கு எருத்துக்கூலி பதக்காக* (SII,xvii,222.)

பொதிக் கூலி (பெ) தலைச்சுமை பொருட்டுக் கூலி (1239) *வேண்டுவது குறை வறுப்பு எடுக்கவும் அல்லாத ஆளுக்குப் பொதிக்கூலி என்று கூட்டிக் கொள்ளா தொழியவும்* (SII,vi,50.)

பொதியல் (பெ) பொதிய மலை (1084) *முத்திந் சலாபமும் முத்தமிழ்ப் பொதியலும் கந்நியும் கைக் கொண்டலங்கலும்* (SII,vii,551.)

பொது (பெ) (ஊர்க்குப்) பொதுவானது (691) *தரகும் கத்திக்காணமும் மற்றும் பொதுவிநால்லுள்ள தெல்லாம்* (SII,i,151; EI,xvii,22.)

பொதுக் கடிந்த (வி) பொதுமை நீக்கிய (1120) *முற்றத்தான் முற்று நீர் வையம் பொதுக்கடிந்த கொற்றத்தான் தொண்டையர்* (CHEN, xxiii,p.93-96.)

பொது நிலம் (பெ) ஊர்க்குப் பொதுவான நிலம் (909) *எங்களூர் மிற்றலங்குடி எங்கள் பொது நிலமான நால்மாச் செயும்* (SII,xix,25.)

பொதும்பு (பெ) சோலை (960) *மீன்படு பள்ளமும் தேந்படு பொதும்பும்* (EI,xv,5.)

பொதுமை (பெ) பொதுவாயிருக்குந் தன்மை (1069) *போர்த்தநிப் பூவையும் மதுவையிற் புணர்து பொதுமை தீர்த்து* (SII,viii,4.)

பொது மொழி (பெ) உலகம் பலர்க்கும் பொது என்ற சொல் (771) *அறை கடல் வளாகம் பொது மொழி அகற்றி* (EI,xvii,16.)

பொதுவாண்மார் (பெ) (= பொதுவாள்) (1245) *இக் கோயிலில் அதிகாரம் உடைய பொதுவாண்மார் எப்பேர்ப் பட்டாருங் கைக்*

கொண்ட புதுப் பொன் அச்சுப்பத்து (KANDT,1968/175.)

பொதுவாயின (வி) பொதுவாகவுள்ளன (885) *செருபள்ளியார்க்குங் குடி ஊர் போரூர்க்கும் பொதுவாயின* (SII,iv,346.)

பொது வாரி (பெ) பொதுவாகவுள்ள நீர் ஓடை (1232) *பாகமும் பாகாசிரியமும் பொதுவும் பொதுவாரியும் இந்னிலத்து மேனோக்கின மரமுங் கீழ் நோக்கின கிணறு* (si.iv,424.)

பொதுவாள் (பெ) கோயில் நிர்வாகம் செய்பவன் (944) *ஆள் கோயிலும் பொதுவாளும் அவிரோதத்தால் முக்கால் வட்டத்திருந்து* (SII,v,783.)

பொதுவேய் (பெ) சமமாக (880) *ஒருகாடி நெல் எரிக்காடி ஆக கோவுங் குடியும் பொதுவேய் விளைந்த நிலத்தால்* (SII,xii,102.)

பொய் (பெ) உட்டுளை (1171) *பொய்யுடையன வரை வேயேய் போர் மலைவன எழு கழனியே* (SII,xvii,592.)

பொய்கை (பெ) நீர் நிலை (1012) *பொய்கைக் கரையது சந்தன வனத்தது* (SII,vii,863.)

பொய்யாது (வி) தவறாது (1176) *பொன்னி நதியும் பொய்யாது புயலும் புனல் கரவாது* (SII,xvii,585.)

பொர (வி) போர் புரிய (771) *பொர வந்தவர் மதந்தவிர்க்கும்* (EI,xvii,16.)

பொர (வி) பந்தயம் ஆட (866) *எச்சூது முக்கால்வட்டத்திருந்து பொரப் பெறார்* (TAS,i,p.1-14.)

பொரா (வி) போர் புரியாமல் (1120) *பொராப் புறஞ்சாய் கண்டருக்குத் தான் கொடுத்த காலிங்கன்* (CHEN,xxii,p.93-96.)

பொரி (பெ) பொரித்த பொருள் (887) *பொரி நியதி உரிஇனுக்கு அளக்கக்கடவ சிறுபயறு உரி அழாக்கு* (SII,xiv,16a.)

பொரிக்கவும் (வி) பொரியச் செய்யவும் (878) *கறிதுமிக்கவும் பொரிக்கவும்* (SII,xiv,13.)

பொரிக் கறி (பெ) புளியிடாமற் சமைத்த கறி வகை (878) *பொரிக் கறி ஒன்று* (SII,xiv,13.)

பொரி விளங்காய் (பெ) இனிப்புத் திண்பண்டம் (1537) *புஷ்பயாகமும் 1க்கு ...பயறு 1 மரக்கால் பொரி விளங்காய்* (TDI,iv,98.)

பொரு (வி) மோதுகின்ற (905) *கரை பொரு புனல்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பொருகளம் (பெ) போர்க் களம் (1044) *பசுந்தலை பொருகளத் தரிந்து* (SII,v,633.)

பொரு களிறு (பெ) போர் செய்கின்ற யானை (800) *மாறு பொருகளிற்று* (EI,xiii,10.)

பொருட் சிலவு (பெ) விலைப்பணம் (803) *ஏரி தோண்டவுங் கரையட்டவும் விற்றுக் குடுத்தோம் இதனுக்கு பொருட்சிலவு மறக் கொண்டோம்* (SII,vi,365.)

பொருட் செலவோலை (பெ) விலைப்பணம் பெற்றுக் கொண்டதற்குக் கொடுக்கும் ரசீது (811) *விலைக்குற விற்றுப் பொருளறக் கொண்டு விலையாவணப் பொருட் செலவோலையாகச் செய்து குடுத்தோம்* (SII,xiv,41.)

பொருட்டு (இ) செயலுக்காக (771) *மண்மகளது பொருட்டாக* (EI,xvii,16.)

பொருதார் (பெ) போர் செய்தவர் (800) *புகழிப் பொருதார் கற்புக* (EI,xii,10.)

பொருது (வி) முட்டி (1012) *மோது மோது திரை விலகி கதுமென வன்கரை பொருது வரு புனற் பெண்ணை* (SII,vii,863.)

பொருது (வி) போர் செய்து (771) *கொற்ற வேல் வலனேந்திப் பொருது* (EI,xvii,16.)

பொரு தொழில் (பெ) போர்த்தொழில் (1056) *பொரு தொழில் வாழ் வலித் தடக்கை மதுராந்தகனை* (SII,iii,29.)

பொருந்தி (வி) உடன்பட்டு (1300) *நகரங்களுக்கும் கிராமங்களுக்கும் இசைய பொருந்தி* (IPS,472.)

பொருந்திட (வி) சேர்ந்திட (1200) *பொருள் வளரும் புவியிற் பொலிவெய்திப் பொருந்திடவே யுருவளர் தோகையின் மேல்* (SII,vii,121.)

பொருப்பு (பெ) மலை (833) *பொருப்பைத் திகழ் மணிமாளிகை* (SII,xiv,44.)

பொருவார் (பெ) பந்தயம் ஆடுவார் (866) *முக்கால் வட்டத்திலிருந்து பொரப்பெறார் பொருவார் அற்றைக் கலம் இழப்பது* (TAS,i,p.1-14.)

பொருள் (பெ) நூலின் பொருள் (905) *யாத்தொகு பொருள் பயனுணர்வோன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பொருள் (பெ) பரம் பொருள் (1200) *மறை தேடும் பொருள் பெரியம்பலக் கூத்தந்* (SII,viii,250.)

பொருள் (பெ) விலைப் பணம் (862) *பொருட் செலவறையற* (SII,xiv,45.)

பொருள் சிலவு (பெ) விலைப் பணம் (1000) *இதற்கிதுவேய் ச்ரூவணையும் பொருள் மாவறுதிப் பொருள்(ச்)சிலவும் இதுவேயாக ஒட்டி விற்று விலைச்ரூவணை செய்து குடுத்தோம்* (SII,v,873.)

பொருள் மாவறிதி ஒலை (பெ) விலைப் பொருளை நிர்ணயித்துக் கொண்டதற்கான உறுதிச் சீட்டு (877) *இதுவே பொருள் மாவறிதி ஒலையாக ஒட்டிக் குடுத்தோம்* (SII,vi,370.)

பொருள் மாவறுதி பொருள் சிலவு (பெ) விலையை நிர்ணயித்து விலைப்பொருளைச் செலுத்தி முடித்ததற்காக விற்றவர் வாங்குவோர்க்குக் கொடுக்கும் ஆவணம் (894) *விலைக்கு கொண்டு இதுவே பொருள் மாவறுதி பொருள் சிலவாகவும்* (SII,xiii,302.)

பொல்லாங்கு (பெ) கேடு (1344) *இதுக்கொரு பொல்லாங்கு மநத்தாலும் நினைய்யா தொழியவும்* (UCR,xviii,p.16-23.)

பொல்லாது (வி) கெட்டு (1129) *காலம் பொல்லாதாய் நம்மூர் அழிந்து* (SII,vii,496.)

பொல்லாப்பு (பெ) குற்றம் (1366) *கல்லு நாட்டிக் குடுத்த சிறுவெம்பிக்கு ஒரு பொல்லாப்புச் சொல்லுமவன்* (IPS,456.)

பொலங்கரு (பெ) இரணியகர்ப்பம்: வேள்வி பொருட்டு பொன்னால் செய்த தாய் வயிறு (700) *இருகால் பொலங்கருவில் பேர்கலப்பத் தோந்நறி ஒருகாற் துலாபாரம் புக்கான்* (AVNM,7,p.13-14)

பொலி (பெ) வட்டி வருவாய் (768) *இக்காசினால் பொலியால்(த்) திங்கள் நாழி நெய்யாகக் கொண்டு* (SII,xiv,27.)

பொலி கிடா (பெ) சினையாக்குதற் பொருட்டுள்ள ஆண் ஆடு (1192) *பொலி கிடா 1ம்* (SII,viii,381.)

பொலி கூலி (பெ) வட்டி (868) *பொலி கூலிக்குச் செலவாக* (SII,xii,58.)

பொலிசை (பெ) வட்டி (986) *எண்ணாழிப் பொற்காலால் ஒராட்டை நாளைக்கு அட்டக் கடவ பொலிசை நெல்லு ஐஞ்நூற்றுக் காடியும்* (SII,iii,128.)

பொலிஞ்ஞ (வி) வட்டி பெருகிய (961) *செலுத்தின முதல் பொலிஞ்ஞ வண்ணம் பாட்ட மிட்டு செலவிடுவதின் முன்னே திரிக்ககடவர்* (TAS,viii,p.43-44.)

பொலிதகர் கிடாய் (பெ) சினையாக்கற் பொருட்டு உள்ள ஆட்டுக்கிடா (1147) *சாவா மூவாச் செவ்வரியாடு நூற்றெண்பதும் பொலி தகர் கிடாய் இரண்டும்* (SII,v,643.)

பொலிந்து (வி) சிறந்து (833) *பொருப்பனைய நெடுமாடம் பொலிந்திலங்க* (SII,xiv,44.)

பொலிப்புடைத்தாக (வி) வட்டி அளிப்பதாக (887) *சங்கரப்பாடி கொண்டு பொலிப்புடைத்தாகச் சேவிப்போமானோம்* (SII,vii,421.)

பொலிப்பொன் (பெ) ஒரு வரி (849) *சான்றான் மாட்டு மேனிப் பொன்னும் பொலிப்பொன்னும்* (TAS,ii,p.67-68.)

பொலிமுறை நாகு (பெ) சினைப்படுவதற்கு ஏற்ற நிலையில் உள்ள கிடாரிக் கன்று (1235) *பலவர்க்கூத்துப் பால்ப்பசு அறுபத்து நாலும் பொலிமுறை நாகு(ம்)ஞ் சினைப் பசுவும் உரு அறுபத்து நாலும் ஆக உரு 108* (EI,xxxi,16b.)

பொலி மோத்தை (பெ) சினையாக்குவதற்கு வளர்க்கப்படும் ஆண் ஆடு (1193) *சாவாமூவாப் பேராடு 96ம் பொலிகிடா 1ம் பொலி மோத்தையும் சந்திராதித்தவற் செல்வதாக விட்டேன்* (SII,viii,381.)

பொலிய (வி) விளங்க (862) *பூரணமாலை பொலிய வோங்கி* (SII,xiv,45.)

பொலியூட்டு (பெ) வட்டி வருமானம் (731) *பொலியூட்டு வைத்த பரிசாவது* (SII,viii,331.)

பொலியூட்டுக் கடமை (பெ) வட்டியாகச் செலுத்தப்படும் தொகை (1008) *ஸ்ரீயாரூர் தேவர்க்கு கடவ பொலியூட்டுக் கடமையும் உட்பட* (SII,xvii,614.)

பொலி வந்த நெல் வட்டியாகப் பெருகிய நெல் (1116) *நெலு நாற்பத்தைங் கலத்துக்குப் பலிசை பொலி வந்த நெல்* (SII,viii,622.)

பொலிவு (பெ) அழகு (771) *பொலிவினொடு வீற்றிருந்து* (EI,xvii,16.)

பொலி உண்பதாக (வி) வட்டி வருவாய் துய்ப்பதாக (731) *அறுகால் நெல் பொலி உண்பதாகவும்* (SII,viii,331.)

பொலி ஊட்ட (வி) வட்டியாகப் பெற (808) *நாற்பத்தைங்காடி நெல் பொலி ஊட்ட* (EI,viii,29.)

பொலி ஊட்டுவது (வி) வட்டி வருவாய் தருவது (731) *முதலால் பதின் காடியால் ஒரு காடி நெல் பொலி ஊட்டுவதும்* (SII,viii,331.)

பொலி எருது (பெ) சினையாக்குதற் பொருட்டு வளர்க்கும் காளை (1167) *திரு நந்தா விளக்கு ஒன்றுக்கு விட்ட பசு 32 பொலி எருது 1* (SII,viii,117.)

பொழி (வி) கொட்டுகின்ற (700) *வேன் மன்னர் பொழிகுருதி நீரா நிகமகளை* (AVNM,7,p.13-14)

பொழி (பெ) வரப்பு (950) *குடக்கெல்லை வன்னியோடு பொழியினின்றும் குனையாமல்* (TASSI,1962-65,pp.32-52.)

பொழிதல் (பெ) பெய்தல் (815) *தர்நவர்ஷ பொழிதற்கு* (SII,iii,206b.)

பொழிந்த (வி) பெய்த (1171) *புனை நித்தலத்தாம நெடுங்குடை பொழிந்த தவள வெண்ணிலா* (SII,xvii,592.)

பொழில் (பெ) சோலை (771) *கொங்கலருந்நறும் பொழில்* (EI,xvii,16.)

பொழுது (பெ) வேளை (755) *அரிசி நெய்யுட்பட இரண்டு பொழுதுந் திருவமிருது காட்டுவானாக* (SII,vi.356.)

பொழுதைக்கு (பெ) தடவைக்கு (சந்திக்கு) (878) *ஒரு பொழுதைக்கு வேண்டுவன* (SII,xiv,13.)

பொளிச்சு (வி) திருத்தி (?) (1646) *கோவிலில் மரப்பணி பொளிச்சு கல்ப்பணி முகித்து* (TAS,iv,p.152-60.)

பொற்க்கதவு (பெ) பொன்னால் செய்த கதவு (1100) *சால திசை விளங்கு திருவாசல் பொற்க்கதவு சமைத்தான்* (SII,xvii,230.)

பொற்கால் (பெ) உலோகத்தால் செய்த முகக்கும் கால் (768) *பொற்காலால் ஆறாயிரத்து நானூற்றுக்காடி* (SII,xii,34.)

பொற் காறை (பெ) அணி வகை (1068) *இக்கோயில் ஆடவலாற்கு சாத்த இட்ட பொற்காறை இரண்டி நால் முத்தும்* (SII,viii,722.)

பொற்கேடு (பெ) பொருளழிவு (1239) *ஊற்க்கேடு நாட்டுகேடு பொற்கேடு சொந்னார் உண்டாகில் கிராமத் துரோகிகளும் நாட்டுத் துரோகிகளுமாய்* (SII,vi,48.)

பொற்கை (பெ) பொன்னாலான கைப்பிடி (1018) *சோழ மிலாடுடையார் இட்ட பொற்கை ஈச்சோப்பி ஒன்று* (SII,vii,888.)

பொற்கொடி வீரர் (பெ) வாணிகக் குழுவைச் சார்ந்த ஆயுதமேந்திகளில் ஒருசாரார் (900) *வேளூர்ப் பொற்கொடி வீரர் பேரில் இட்ட செக்கு* (AVNM,3,p.21)

பொற் கொற்ற கைக்கோளர் (பெ) கைக்கோளச் சாதியினரின் ஒரு பிரிவு (1258) *பன்னாட்டு முதலிகளும் பொற்கொற்ற கைக்கோளரும் ஆண்டார்களும்* (SII,vii,118.)

பொற்கோட்டிமையம் (பெ) பொன்னிறமான உச்சியையுடைய இமயமலை (1136) *வாழ்புரி சிமையப் பொற்கோட்டிமையப் பாவையுஞ் சிவனும் போல* (SII,vii,1038.)

பொற்கோயில் கைக்கோளப் பெரும் படையர் (பெ) கைக்கோள வீரர் கொண்ட படை (985) *இத்தர்ம்மம் மிரண்டு தலை பொற்கோயில் கைக்கோளப் பெரும்படையர்க் குடி ...சம் அளந்து* (SII,vii,112.)

பொற்சாலை நங்கை (பெ) ஒரு பெண் தெய்வம் (997) *நம்முடைய சாலை மூலைப் பொற்சாலை நங்கைக்கு திருவமுதுக்கு* (SII,vii,809.)

பொற்சுவருபம் (பெ) பொன்னால் செய்த பாத்திரம் (1495) *இற்றை நாள் முதல் திருவாபரணங்கள் பொற்சுவருபம் வெள்ளி சுவருபம்* (TDI,ii,133.)

பொற் பணி (பெ) பொன் நகைகள் (1218) *திருப்பள்ளியறை நாச்சியாற்குச் செய்வித்துக் குடுத்த பொற்பணி திருச்சரி ஓரணை* (SII,v,266.)

பொற்பாடு (பெ) ஒரு வரி (1443) *பழவரி புதுவரி புழுகுபாடு பொற்பாடு காசுபாடு* (ARE,1916,230)

பொற்பினான் (பெ) அழகுடையவன் (1120) *பாவைக் கவிஷேகம் வேளுடைய பொற்பினான் பொன்னம்பலக் கூத்தன்* (SII,iv,225.)

பொற்பு (பெ) அழகு (800) *பொற்புக வெற்ப்புகுதி கண்டாய்* (EI,xiii,10.)

பொற்றாமரை (பெ) செந்தாமரை (905) *பொற்றாமரை மலர்மிசை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பொற்றாலி (பெ) பொன்னால் செய்யப்பட்ட தாலி (982) *உமாபட்டாரகி பொற்றாலி கால் இடைக்கட்டு மூந்றும்* (SII,xix,302.)

பொற்றுமை (பெ) ஒரு வரி (1224) *அப்புவரி கணக்கப்பேறு பொற்றுமை உள்ளிட்ட எப்பேர்ப்பட்ட நெல்லாயங்க...* (SII,iv,648.)

பொற்றேர் (பெ) பொன்னாலாகிய தேர் (800) *பசுங்கதிராயிரம் வீசும் பொற்றேர்* (EI,xiii,10.)

பொற்றை (பெ) கற்பாறை (1125) *உருண்டப் பொற்றையும் ஒழுங்காக ஊசிமலையும்* (TAS,i,p,21f.)

பொறாது (வி) பொறுக்காமல் (1232) *நன்றாற்றுந் திறம் பொறாது* (SII,iv,424.)

பொறி (பெ) அரச இலச்சினை (550) *கோவும் பொறியும் மாற்றி* (TASSI,1958-59, pp.41-83.)

பொறி (பெ) ஒரு முகத்தலளவு (?) (932) *இரண்டு விளக்கு புறத்திலுமிரண்டு பொறி சாந்திப் புறத்தி கலமும் புரையிடமும் ஒழிய நாற்பது பொறி நாற் பாட்டம் பலிப்புறம்* (SII,vii,173.)

பொறிக்கறி (பெ) (= பொரிக்கறி) (959) *பொறிக் கறியும் தயிர் உரியும் நெய் ஒரு பிடியும்* (SII,xiii,44.)

பொறிச்சு (வி) அடையாளமிட்டு (1021) *நாகீன்றிந சூலம் பொறிச்சு சாவா மூவாப் பெரும் பசுவாக காத்து* (SII,iv,393.)

பொறித்து (வி) வெட்டி (905) *கயலிணை வடவரைப் பொறித்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பொறித்தோந் (பெ) வெட்டினவன் (1179) *வடதிசை மேருவில் வாரணம் பொறித்தோந்* (EC,x,Kl.132.)

பொறிப்பித்தோன் (பெ) எழுத்து வெட்டச் செய்தவன் (1044) *நாலூர் கோன்றாய னிகழ் வரியிலிருவித்து நலந்திகழ் கற் பொறிப்பித்தோன்* (TAMIZ,xviii,p.293.)

பொறிவு (பெ) புள்ளிகள் (1015) *ஆக வயிரம் பொறிவும் முறிவும்* (SII,ii,7.)

பொறுக்கின்ற (வி) தாங்குகின்ற (905) *பெரிதரிதின் பொறுக்கின்ற பெரும் பொறை* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

பொறை (பெ) பொறுமை (905) *பெரும் பொறை மண்மகளைத் தன் தொடித் தோளில்லெளிது தாங்கிய* (TASSI,1962-65,pp.1-31; PNDCP,p.95-115.)

பொறை தாங்கி (வி) பாரந்தாங்கி (921) *அவனிதலம் பொறை தாங்கி* (SII,iii,206a.)

பொன் (பெ) தங்கம் (731) *பொன் கழஞ்சும்* (SII,viii,331.)

பொன் (பெ) பொன் னிறம் (785) *தேம்புனற் குறட்டிப் பொன் மலர்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

பொன் (பெ) பொன் அல்லது நாணயமாகச் செலுத்தும் வரி (962) *பஞ்சவாரக் கடமையும் பழநெல்லும் பொன்னிறுக்கில் பொன்னும்* (SII,xiii,151.)

பொன் காணவல்லர் (பெ) பொன்னின் மாற்றுக் காண வல்லவர்கள் (922) *இறைக்குடிகளில் பொன் காண வல்லரெனப் படுவாரை நோக்கி* (SII,vi,295.)

பொன் காணிக்கை (பெ) ஒருவரி (1346) *பள்ளியில் மேற் பொன் காணிக்கை கண்டாயம்*

தெண்ட முண்டிகை தறியிறை தட்டார்ப் பாட்டம் ஆசுவக் கடமை எப்பேர்ப்பட்ட பலவரியும் (EC,x,Ct.90.)

பொன் முடி (பெ) பொன் மகுடம் (921) *சிரீ பாரந்தகன் புனைமணிப் பொன் முடி சூடி* (SII,iii,206a.)

பொன் முதல் (பெ) நாணயமாக வசூலிக்கப்படும் வரிகள் (1462) *பத்தில் அஞ்சில் உண்டான நெல்முதல் தானியமுதல் பொன்முதலும்* (IPS,711)

பொன் வரி (பெ) ஒரு வரி (1191) *மீன்காசு பொன்வரி பூவரி மற்று எப்போற்பட்ட இறையும் இழந்து* (SII,vii,117.)

பொன் வாரியம் (பெ) பொன் செலாவணியை மேற்பார்க்கும் பிராமண ஊர்ச் சபையின் உட்குழு (895) *பொன் வாரியப் பெருமக்களும் கழனிவாரியப் பெருமக்களும்* (SII,xiii,307.)

பொன்னம்பலம் (பெ) சிதம்பரத்திலுள்ள கனக சபை (1120) *தில்லையில் பொன்னம் பலத்தைச் செம் பொநால் மேந்து பொநெல்லையைப் பொந்நாக்கி* (SII,iv,225.)

பொன்னாயம் (பெ) பொன்னாக இறுக்கும் வரி (1210) *காசாயம் பொன்னாயம் நெல்லாயம் உட்பட விட்டேன்* (SII,xvii,696.)

பொன்னி (பெ) அமராவதி ஆறு (921) *புனற் பொன்னி வடகரை இற்பொழில் புடை சூழ் மதிள் வஞ்சி* (SII,iii,206a.)

பொன்னி (பெ) காவிரி ஆறு (1176) *பொன்னி நதியும் பொய்யாது புயலும் புனல் கரவாது* (SII,xvii,585.)

பொன்னி நாடு (பெ) சோழநாடு (1012) *தண்டலைத் தட நீர் நலந்தரு பொன்னி நாடு கிழவோனே* (SII,vii,863.)

பொன்னி வளநாடு (பெ) சோழ நாடு (1300) *பொன்னி வளநாடு பாணன் பெறப் புரந்தான்* (IPS,652.)

பொன்னிறை (பெ) நாணயமாகச் செலுத்தும் வரி (1230) *புறப்பட்ட நெல்லிறையும் பொன்னிறையும் திருநாளைக்கு உடலாக்கி விட்ட நிலம்* (TDI,i,38.)

போ

போக்கறுக்க (வி) செலுத்த (1161) *குடிமையும் நாங்களே கோமற்றவற்கு போக்கறுக்க கடவோமாகவும்* (IPS,190.)

போக்கறுப்பார் (வி) செலுத்துவார் (994) *அவ்வவ் ஜாதிகள் பட்ட தண்டம் அவ்வவாரே போக்கறுப்பாராகவும்* (EI,xxii,32.)

போக்கறுப்போம் (வி) தீர்த்து வைப்போம் (1229) *கோயிற்றமந் முகத்தால் நலிவு வரில் நாங்களே முன்னின்று போக்கறுப்போமாகவும்* (IPS,288.)

போக்கறுவியது (வி) செலுத்துவது (1250) *இன்னாள் முதல் இக் கோயில் தானத்தாற் கேற்க கடமை குடிமை போக்கறுவியதே* (SII,iv,814.)

போக்கிட (வி) அழித்து விட (1286) *சிறையில் வைத்து மானம் போக்கிட வேணுமென்று சொல்லுகையில்* (IPS,399.)

போக்கிய (வி) செல்லவிட்ட (1145) *தென்கவிர நாடனென்று செய்து நீர் போக்கிய நெடு மதகு நிலைநிற்கச் செய்தமைத்து* (SII,vii,1044; IPS,120.)

போக்கு (பெ) வழி (1268) *நிச்சயித்த காசுக்கு வேறு போக்கில்லாமையால்* (IPS,375.)

போக்கு (பெ) சரக்கு வெளியே போதல் (885) *வாயினம் வரு மதில் வரத்திலும் போக்கிலும்* (TAS,ii, p.80-82.)

போக்குச் செய்து (வி) விற்று (998) *விக்ரமசோழ ப்ரஹ்மாதராயன் தண்டக் காண பட்டு இவன் பங்கு போக்குச் செய்து பொன் வரக்காட்டுக* (SII,vii,414.)

போக்கேன் (பெ) அனுப்பமாட்டேன் (796) *பாலநை போக்கேனென* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

போக (வி) நீங்க (765) *அறப்புறத் தண்டமுஞ் செயிவு போகச் சிறந்த பொன்னும்* (EI,xxxvi,20.)

போகக் காட்டுதல் (பெ) அனுப்புதல் (1205) *ஆளாதல் ஓலையாதல் போகக் காட்டுதல் உறவு பண்ணுதல் அறுதி செய்தல் செய்யக்கடவோம் அல்லாதோமாகவும்* (SII,viii,106.)

போகட்டுப் போன (வி) துலைந்து போன (1245) *நாட்டுப் பொதுவாக ஓலை போகட்டுப் போன மேலைப்பாதி நிலத்தில்* (IPS,340.)

போகட்டுவான் (பெ) வெளியேற்றுபவன் (1009) *நின்மாலியநீர் போகட்டுவானுக்கு* (CHEN,xxi,p.425-28.)

போகடுவித்து (வி) செல்லச் செய்து (1175) *மதுரை வாசலிற் தைச்ச தலைகளும் வாங்கிப் போகடுவித்து* (EI,xxii,14..)

போக பூமி (பெ) சுவர்க்கம் (1176) *விளை வயலின் வளஞ் சுரக்கப் போக பூமியிது* (SII,xvii,585.)

போகம் (பெ) முதல் வருவாய் (866) *போகத்துக்கும் பொலிக்கும்* (TAS,i,p.1-14.)

போகயிடுவான் (பெ) வெளியேற்றுவான் (1202) *கழுநீர் போகயிடுவான் கடையாக* (SII,viii,151.)

போகன்றாங் (வி) போகின்றான் (796) *ஸுபுத்ரந் ராஜ்யஞ் செயப் போகன்றா நென்று* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

போகாமை (வி) செல்லாதவாறு (930) *கள்ளர் கொள்ள போகாமைப் பட்டார் தந்தையுங் மகனும்* (CHHS,1971/75.)

போகார் (வி) செல்ல முனையார் (796) *ஆரும் போகாராக* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

போகிய (வி) அளவுள்ள (935) *பதின்பலம் போகிய நூல் இழை இட்டு எரிப்பதாக* (SII,viii,566.)

போகியார் (பெ) காமக்கிழத்தி (813) *வாணகோவரையர் போகியார்* (SII,vii,931.)

போகில் (வி) வெளியூர் போனால் (1021) *இவன் சாவிலும் போகிலும் சிறைதளை சங்கிலி புகிலும்* (SII,iii,18.)

போகைக்கு (பெ) செல்லுகைக்கு (1168) *பூசலிலே பட்டு ஓடிப் போகைக்கு மீள யாவர் சிலர்* (SII,vi,456.)

போடுவித்து (வி) நட்டு (1518) *பொட்டுனூரிலெ ஜயஸ்தம்பமும் போடுவித்து சோழ மண்டலம் நடுவில் சேந்தவன் மங்கலம் உடையார்* (SII,viii,352.)

போடை (பெ) பாடை; பிணக்கட்டில் (1290) *தீமைக்குப் போடை கட்டிக்கொள்ளப் பெறுவார்களாகவும் போடை போடுமிடத்து* (SII,v,283.)

போத்தர (வி) அனுப்ப (887) *உடையாரடியாராஇன வரகுண மாராயர் போத்தர* (SII,xiv,16a.)

போத்தருவோம் (வி) நடத்துவோம் (979) *திருவாதிரை நாளாலிப்பலி போத்தருவோம் ஆனோம் நகரத்தோம்* (SII,xix,234.)

போத்து (பெ) ஆண் விலங்கு (1012) *பொங்கு புலிப் போத்துப் புதுக்கத் துங்கத்திக்கினில்* (SII,vii,863.)

போத்து (பெ) மரக்கிளை (961) *தேன்படு போத்துங் கூதமும் மற்று முடும்போடி* (SII,xiv,91.)

போத (வி) திருப்பி எடுத்துச் செல்ல (992) *இவன்னே சாலை உண் வெண்கல நூறும் எண்ணி புகுவிக்கவு போத வைப்பிக்கவு கடவர் ஆக* (SII,xix,357.)

போதக் காட்ட (வி) அனுப்ப (1149) *வரியிலாரெழுத்திட்ட உள்வரியும் நங்கேழ்வியும் போதரக் காட்டச் சொன்னோம்* (TAS,vii,p.5.)

போத கடவது (வி) நடை பெறுவது (979) *பெருந்திருப்பலி போதகடவதாகவும் ஏழுக்குமாக* (SII,xix,234.)

போதப் பண்ணி (வி) போகச் செய்து (1175) *இராஜ கம்பிர அஞ்சு கோட்டை நாடாழ்வானும் உள்ளிட்டாரை அத்துறைகளில் நின்றும் வெள்ளாற்றுக்கு வடகரையிலே போதப் பண்ணி* (EI,xxii,14.)

போதர (வி) செல்ல (800) *பொற்றேர் பருதிக் கென் போதரவிடுமோ* (EI,xiii,10.)

போதவது (பெ) நடைபெறுவது (731) *திருப்பலி போதவதற்கும் திரு அமிதுக்கும்* (SII,viii,331.)

போதவும் (வி) நடைபெறவும் (1038) *திருவாலீச்வரமுடைய மாஹாதேவர்க்குத் திருவிழாப் போதவும்* (SII,xiv,161.)

போத வைப்பிக்க (வி) வெளியே எடுத்துப் பயன்படுத்த (992) *இவன்னே சாலை உண் வெண்கல நூறும் எண்ணி புகுவிக்கவு போத வைப்பிக்கவு கடவர்* (SII,xix,357.)

போதாதாக (வி) பற்றாத தாக (1097) *நிலம் அந்நிமந்தத்துக்குப் போதாதாக* (SII,xvii,625.)

போதாது (வி) பற்றாது (1014) *இவ்விடத்து நிலம் போதாதாக இதில் குறை ராஜராஜந் திருவாசலில்* (SII,ii,70.)

போதாமை (பெ) பற்றாமை (1268) *நாங்கள் பற்றி கடமை கீழிறை யிறுத்துப் போதாமையாலே* (IPS,375.)

போதாரிக்கம் (பெ) ஒரு வரி (1485) *சாதிவரி போதாரிக்கம் இநவரி பறைவரி* (ARE,1932,160)

போதா விடில் (வி) போதியதாக இல்லாவிட்டால் (986) *போகம் போதிலும் போதாவிடிலும்* (SII,xix,400.)

போதி (பெ) அரச மரம் (1100) *போதி நிழலமர்ந்த புண்ணியன் போல* (SII,iv,1405.)

போதிகை (பெ) தூண் மேல் வைக்கும் தாங்கு கட்டை (932) *போதிகைஇலும் விற் கண்டத்திலும்* (SII,v,588.)

போதி மாதவன் (பெ) புத்தன் (1218) *உயர் தரும் போதி மாதவற்குப் பொற்பமர் கோயில் முனிவராலையம்* (UCR,xviii,p.157-162; UCR,xx,p.15-18.)

போதில் (வி) அளவாக இருந்தால் (986) *போகம் போதிலும் போதாவிடிலும்* (SII,xix.400.)

போது (பெ) பொழுது (800) *செம்புல நாட்டு வெண்கோடல் விண்ட போது* (EI,xiii,10.)

போதுகச் சேய் (பெ) (இப்படி) நடந்து வரும் பொழுது (1236) *எல்லைகளும் விட்டு கல் வெட்டிக் குடுத்துக் போதுகச்சேய்* (SII,viii,83.)

போதுகிற (வி) வருகின்ற (1223) *கடமை இறுத்து போதுகிற கத்தூரி மங்கலத்து கடமை படியிலே சிறுபடி* (JOR,xx,Appx, p.19-20.)

போதும் (வி) செல்லும் (1200) *விருந்துண்டு மீளுமவர் கைகழுவ நீர் போதுங் காவேரி* (CHEN,iv,p.251-252.)

போதுவதாயித்து (வி) நடத்துவதாயிற்று (1012) *நெல்லு கொண்டு ஆண்டுதோறும் திருவிழாப் போதுவதாயித்து* (SII,v,979.)

போது வழி (வி) ஊருக்கு வெளியில் போகும் வழி (1006) *காராண்மை மீகாட்சியும் புகுவழி புகவும் போது வழி போதவும்* (SII,v,518.)

போதுவார் (வி) போவார் (896) *ஸ்த்ரிகளைய் கொண்டு போதுவார்* (SII,xiii,312.)

போதேன் (வி) விடமாட்டேன் (950) *ஊரழியப் போதேன் என்று பட்டான்* (CHHS,1971/116.)

போதை (பெ) பொழுது (887) *ஒரு போதைக்கு நானாழியாக* (SII,xiv,16a.)

போந்த (வி) சென்ற (765) *இக்கால்கள் போந்த நிலம் போன மாற்றி* (EI,xxxvi,20.)

போந்தவாறு (பெ) வந்த காரியம் (796) *போந்தவாறெனென* (SII,iv,135.)

போந்தன (வி) கழிந்தன (870) *சகரயாண்டு எழுநூற்றுத் தொண்ணூற்றிரண்டு போந்தன* (SII,xiv,22.)

போந்து (வி) சென்று (789) *கூற்றன் வாய் மீதேய் உவன்றி செய்து நீர் கொண்டு போந்து பாய்த்தப் பெறுவதாகவும்* (SII,ii,99.)

போம் (வி) செல்லும் (1008) *கோயில்க்கு போம் ஆட்டைத்திசை கொடாத்தவகள் தடைப் படக் கடவர்* (IA,xx,p.290-96.)

போயின (வி) சென்ற (780) *தெற்கு நோக்கிப் போயின காலுக்கு* (SII,xiv,17.)

போர் (வி) மோதுகின்ற (1012) *புதுமத கிடறிப் போர்க் கலிங்கிடந்து மோது மோது திரை விலகி* (SII,vii,863.)

போர் (பெ) வைக்கோல் போர் (1171) *போர் மலைவன எழுகழனியே மைய்யுடையன நெடுவரையே* (SII,xvii,592.)

போர் (பெ) சண்டை (681) *காரோநிரி வாணராசர்ப் போரிற் சிறை நாடெறிய* (EI,vii,4 (iii).)

போர்க்க (வி) உடம்பில் போர்த்திக் கொள்ள (1290) *பட்டா வளப்பட்டுக் கட்டிக் கொள்ளப் பெறுவர்களாகவும் போட்டைப் போர்க்கப் பெறுவார்களாகவும்* (SII,v,283.)

போர்க்க (வி) உடம்பில் போர்த்திக் கொள்ள (1290) *பட்டா வளப்பட்டுக் கட்டிக் கொள்ளப் பெறுவர்களாகவும் போட்டைப் போர்க்கப் பெறுவார்களாகவும்* (SII,v,283.)

போர்ச்சயப் பாவை (பெ) வெற்றித் தெய்வம் (1018) *திருமன்னிவளர இரு நில மடந்தையும் போர்ச்சயப் பாவையும்* (SII,iii,205.)

போர்த்த (வி) மேலே மூடிய (991) *செம்பிநாற் செய்த பாதபீடத்தின் மேற் போர்த்த தகடு நாலு* (SII,xiii,144.)

போர்த்திரு (பெ) போரில் பெற்ற பொருள் (1076) *பலங்கிளர் தாராவரசர் தாமிசை கொள்ள போர்த்திருவொடும் பெரும் புகழ் நிறுத்தி* (SII,vii,137.)

போர்மகள் (பெ) வெற்றித் தெய்வம் (1135) *செல்வி தலைமையோங்கப் போர் மகள் காப்ப* (SII,iv,818.)

போர (வி) போதியதாக (954) *ஆட்டு நால்ப்பத்திரு கலந் நெல் போரக் குடுத்தார்* (TAS,iii,p.169-71.)

போராக்கால் (வி) போதாவிடில் (954) *இந்நெல் போராக் கால் குறைஞ்ஞ திட்டு செலித்தக் கடவர்* (TAS,iii,p.169-71.)

போராக்கில் (வி) போதாவிட்டால் (1000) *விக்கிரமன் நால்ப்பது பறைச்சை நெல்ப் போராக்கிலிட்டுக் கொடுக்க கடவியன்* (TAS,ii,pp.173-207.)

போருகச்சே (வி) போகும் போது (1376) *வாசலிலே படையாய் போருகச்சே சிற்றும் பலவரான நம்பு செய்வாரும்* (IPS,960-61.)

போரும் (பெ) போதும் (946) *வித்தினு போருமளவு பூமிவிடக் கடவியர்* (TAS,i,p.293-94.)

போல (இ) ஒப்ப (771) *படுகடன் முளைத்த பருதி போல* (EI,xvii,16.)

போலும் (இ) ஓர் அசைச் சொல் (800) *போர் வென்ற வேன் மாறன் கை போலும்* (EI,xiii,10.)

போவதாக (வி) செல்வதாக (924) *கீழ்க் கடை நீர் போவதாகவும்* (SII,vi,292.)

போவாராக (வி) செல்வாராக (765) *நீரீந்த வழி தோண்டிக் கொண்டு போவாராகவும்* (EI,xxxvi,20.)

போழ் கறி (பெ) ஒருவகை உணவு (1046) *யிருநாழிக்கும் போழ்கறி அஞ்சுக்கும் நெய் ஒரு பிடிக்கும்* (SII,xiv,191.)

போழ்து (பெ) காலம் (894) *பெருமானடிகள் உச்சம் போழ்து திருவமிர்து செய்வதன் முன்னம்* (SII,iii,1.)

போற்ற (வி) பாதுகாக்க (1200) *புதுவையா னில்லறத்தை யார் போற்ற வல்லாரறிந்து* (CHEN,iv,p.251-252.)

போற்றி (பெ) வணங்குதல் (1176) *களிறாரெயிற் கரங்குவிப்ப புயலாழியிற் போற்றி செய்ய புலி மேருவில் வீற்றிருப்ப* (SII,xvii,585.)

போற்றினார் (பெ) பாதுகாத்தவர் (1265) *இதர்மத்தைப் போற்றினார் புண்ய கர்மாவாம்* (EC,x,Ct.96.)

போற்றுற (வி) செம்மையாக போற்றும்படி (1012) *உலகியல் சாண் பந்நிரண்டிற் சமைந்த தனிகோல் போற்றுற வளந்த* (SII,vii,863.)

போற்றெடுப்ப (வி) துதிக்க (1220) *மன்னுலகத் திகல் வேந்தரு மறைவாணரும் போற்றெடுப்ப* (CHEN,xiv,p.362-64.)

போன்ற (இ) ஒத்த (905) *மாடப்புரந்தரனது நகர் போன்ற களக்குடி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

போன (வி) சென்ற (691) *நோக்கி நாட்டுக் காலுக்கே போன வழி* (SII,i,151; EI,xvii,22.)

போனகக் குருத்து (பெ) உணவு பரிமாறும் வாழையிலை (1014) *போனகக் குருத்து பன்னிரண்டுக்கு நெல்லு இரு நாழியும்* (SII,ii,26.)

போனகப் பருப்பு (பெ) உணவுக்குரிய பருப்பு (1014) *போனகப் பருப்பு நாழி உரியும்* (SII,ii,26.)

போனகப் பழவரிசி (பெ) படைக்கும் உணவிற்கு வேண்டிய பழைய அரிசி (961) *போனகப் பழவரிசி அறுநாழியால்* (SII,xiii,108.)

போனகம் (பெ) உணவு (808) *அரிசியால் இராப் போனகம்* (EI,viii,29.)

போனகம் (பெ) ஒரு மரியாதைச் சின்னம் (871) *போனகமுங் காளமும்* (SII,iii,89.)

போனமை (வி) வெளியேறினமை (817) *குடி பலவும் நிற்க்க மாட்டாது போனமையில்* (SII,vi,344; EI,xxiv,7a.)

போனார் (பெ) சென்றார் (1014) *அனாதேசம் போனார்க்கும்* (SII,ii,65.)

போஷித்திருவது (வி) ஊட்டுவது (927) *ப்$_3$ராஹ்மணரைத் தேடி நாங்களேய் போஷித்திருவதாகவும்* (SII,xvii,475.)

பௌ

பௌத்ரன் (பெ) பேரன் (921) *பஞ்சவர் தோன்றலும் மற்றவர்க்குப் பௌத்ரனாயின மன்னர் பிரான்* (SII,iii,206a.)

பௌங்ஙமாஸி (பெ) பௌர்ணமி; நிறைமதி நாள் (992) *ஆழ்வாரை இவ்வாட்டே அய்ப்பசித் திங்கள் பௌநந்மாஸியும் இரேவதியும் பெற்ற விஷுவில்* (SII,iii,49.)

பௌருகுத்ஸ (பெ) ஒரு கோத்திரத்தின் பெயர் (789) *பௌருகுத்ஸ கோ$_3$த்ரத்து* (SII,ii,99.)

பௌவம் (பெ) கடல் (1192) *பௌவ மானிலம் பாத்திவர் பொதுவற* (SII,v,301.)

ப$_2$

ப$_2$லித்தது (பெ) நேர்ந்தது (1168) *அத்$_3$ருஷ்டயத்நமாய் இப்படி ப$_2$லித்ததென்று விண்ணபஞ் செய்து* (SII,vi,456.)

ப்$_3$

ப்$_3$ரங்மா க்ஷத்ர குலம் (பெ) பிராமணர் என்று கருதப்பட்ட க்ஷத்திரியர் குலம் (852) *ப்$_3$ரங்மா க்ஷத்ர குலோத்$_3$ப$_4$வன் பல்லவ மஹாராஜ...* (SII,xii,48.)

ப்$_3$ரம்ம தேசம் (பெ) (= பிரமதேயம்) (880) *காக்கலூர் நாட்டு ப்$_3$ரம்மதேசம் பெருமுளைஊர் ஸபை$_4$யார்* (SII,xii,64.)

ப்$_3$ரஹ்மசாரி (பெ) மணமாகாதவன் (800) *ப்ராஹ்மணன் ப்$_3$ரஹ்மசாரி* (SII,vi,355.)

ப்$_3$ரஹ்ம க்ஷேத்ரம் (பெ) பிராமணர் ஊர் (1265) *முன்புடையாரையும் பழங்காணி யாளரையும் ப்$_3$ரஹ்ம க்ஷேத்ரமாய் வருகிறபடியும்* (SII,xvii,143.)

ப்$_3$ரஹ்மதே$_3$யக் கிழவர் (பெ) பிராமண நிலக்கிழார் (950) *மேல் வெம்ப நாட்டு நாட்டாரும் ப்$_3$ர்ஹ்மதே$_3$யக்கிழவரும்* (TASSI,1962-65,p.32-52.)

ப்$_3$ரஹ்மங் (பெ) பிரமன் (796) *ப்$_3$ரஹ்மங் ஆதி$_3$ ஆக வாரா நின்ற* (MASI,lxiii,p.54-59; SII,iv,135.)

ப்$_3$ரஹ்ம வித்வான்கள் (பெ) பிராமண அறிவாளிகள் (1272) *அருளாள தா$_3$ஸர் மடத்தில் வர்த்திக்கும் அஷ்டாத$_3$சி$_{0}$ விஷையத்து ப்$_3$ரஹமவித்வான்களுக்கும் போ$_4$ஜன முள்ளிட்டு* (CHEN, ix,p.357.)

ப்$_3$ரஹ்மஸ்வம் (பெ) பிராமணர் சொத்து (1100) *அவிரோதத்தால் செய்த தவகாரியமாவது*

அகநாழிகைச் செலவும் ப்$_3$ரஹ்மஸ்வமும் தே$_3$வஸ்வமும் (SII,vii,171.)

ப்$_3$ரஹ்ம ஸ்தா$_2$நம் (பெ) பிராமணர்கள் கூடும் மண்டபம் (957) *ப்$_3$ரஹ்ம ஸ்தா$_2$நத்தேய் த$_4$ந்மி செய்து* (SII,xiii,163.)

ப்$_3$ரஹ்மாதி$_4$ராஜர் (பெ) அரச பதவிகளில் உள்ள பிரமாணர்களின் பட்டம் (960) *ஸர்வ்வ பரிஹாரத்தால் ப்$_3$ரஹ்மாதி$_4$ராஜர்க்கு அறையோலை செய்து குடுத்தோம்* (EI,xv,5.)

ப்$_3$ராஹ்மண்யம் (பெ) பிராமணருக்குரிய ஒழுக்கம் (1425) *இராஜத$_3$ண்ட$_3$த்துக்கும் உட்பட்டு ப்$_3$ராஹ்மண்யத்துக்கும் புறம்பாகக் கடவாரென்று பண்ணிந* (SII,i,56.)

ப்$_3$ராஹ்மண தா$_3$நம் (பெ) பிராமணர்களுக்குத் தானமாகக் கொடுக்கப்பட்ட நிலம் (1115) *பெரி ஏரிகீழ் ஐங்கண்டக கழநி ப்$_3$ராஹ்மண தா$_3$நம்* (EC,ix,Nl.67.)

ப்$_3$ராஹ்மணம் (பெ) வேதப் பகுதி (921) *மந்த்ரப்$_3$ராஹ்மணம் வல்லாந் ஓதுவித்தறிய்வானை* (ARASI,1904-05, p.131.)

ப்$_3$ராஹ்மணன் (பெ) பிராமண சாதியைச் சேர்ந்தவன் (755) *ப்$_3$ராஹ்மணன் ஆராதி$_4$த்துண்பானாக* (SII,vi,356.)

ப்$_3$ராஹ்மணியார் (வி) பிராமணன் மனைவி (755) *இராயூர்த் தடக்கடியார் ப்$_3$ராஹ்மணியார் பங்கின் வழி* (SII,vi,356.)

ப்$_3$ரிந்தம் (பெ) உற்றார் உறவினர் கூட்டம் (1150) *தன் ப்$_3$ரிந்தத்தோடும் வாராநின்ற ஸமயத்...* (AVNM,9,p.37-39)

ப்$_3$ருஹஸ்பதி வாரம் (பெ) வியாழக்கிழமை (1506) *மீனநாயற்று பூர்வபக்ஷத்து ஏகாதெ$_3$தியும் ப்$_3$ருஹஸ்பதி வாரமும் பெற்ற பூசத்து நாள்* (TDI,iii,5.)

ப$_3$

ப$_3$ந்து$_4$க்கள் (பெ) உறவினர்கள் (984) *..இவன் தம்பி ஆயிரவன் குணவன்னோடு மற்றும் இவர் ப$_3$ந்து$_4$க்களோடும் திருத்தி* (SII,xix,343.)

ப$_3$ப்ப ப$_4$ட்டாரகர் (பெ) பிராமணர் (691) *தே$_3$வதமாகா நின்ற ப$_3$ப்ப ப$_4$ட்டாரகரும்* (SII,i,151; EI,xvii,22.)

ப$_3$லி (பெ) படையல் (959) *அவிட்டன் தோறும் ப$_3$லி நடப்பதற்கும்* (EI,xxvii,47.)

ப$_3$லித்$_3$ரவ்யம் (பெ) படையலுக்கு வேண்டிய உணவுப் பொருள் (1127) *ப$_3$லித்$_3$ரவ்யத்துக்கு அரிசி இருநாழி உரியும்* (SII,iii,80.)

ப$_3$ஹ்வ்ருஜந் (பெ) ருக் வேதம் கற்றவன் (785) *ஆச்$_2$வலாயந ஸூத்ரத்து ப$_3$ஹ்வ்ருஜந் ஸிஹூமிச்$_3$ரற்கு மகனாகிய* (IA,xxii,pp.57-75; PNDCP,p.55-62.)

ப$_3$ஹிர் பூ$_3$மி (பெ) கரையையொட்டி உள்ள இடம் (877) *ஏரிக்கே ப$_3$ஹிர் பூ$_3$மியாகவும்* (SII,vi,370.)

ப$_3$ஹூதானிய (பெ) அறுபது ஆண்டுகளுள் ஒன்று (1339) *ப$_3$ஹூதானிய வருஷத் தைய் மாசம்* (EC,ix,Ht.74.)

ப்$_4$

ப்$_4$ராதாக்கள் (பெ) சகோதரர்கள் (1200) *இந் நிலத்துடன் என்நுதாயும் என் ப்$_4$ராதாக்கள் பக்கல் விலை கொண்டுடையேனாயும்* (SII,xvii,631.)

ப$_3$

ப$_4$க்த ஜநங்கள் (பெ) கடவுள் அன்பர் (961) *ப$_4$க்த ஜநங்களு தேவர்களு தாநிகர் முதலாகஉம்* (SII,xiv,91.)

ப$_4$க்தர் (பெ) கடவுளடியார் (941) *ப$_4$க்தராயின பலசமை அஞ்நூற்றுவருமாக ஆயிரவர்க்கும்* (SII,viii,529.)

ப$_4$க்தாதாயம் (பெ) தானியமாகச் செலுத்தும் வரிகள் (1406) *ஸகல ஸ்வர்ந்நாதா$_3$யமும் ஸகல ப$_4$க்தாதாயமும்* (SII,i,055)

ப$_4$க்தாதா$_3$யம் (பெ) நெல்லாக இறுக்கும் தீர்வை (1387) *ஸுவர்ணாதா$_3$யம் ஸகல ப$_4$க்தாததா$_3$யம் செக்குக் கடமை வெட்டிவரி* (EI,viii,31.)

ப$_4$க்ஷித்து (வி) சாப்பிட்டு (1205) *சிவத் துரோகியுமாய் கோமாங்ஸத்தை ப$_4$க்ஷித்து சமணர்க்கு குண்டிகை எடுப்பான்* (SII,viii,150.)

ப$_4$க$_3$வதியார் (பெ) துர்க்கை (765) *திருவடிகள் பங்கு ப$_4$க$_3$வதியார் பங்கு* (EI,xxxvi,20.)

ப$_4$ட்டர் (பெ) கற்ற பிராமணர்க்குக் கொடுக்கப்பட்ட பட்டம் (750) *மாவச$_0$ர்ம்ம ப$_4$ட்டர்* (EI,v,8.)

ப$_4$ட்டர்கள் (பெ) கோயில் பூசை செய்யும் கற்ற பிராமணர் (895) *ப$_4$ட்டர்களும் விசிஷ்டர்களும்* (SII,xiii,307.)

ப$_4$ட்டவ்ருத்தி (பெ) கல்வியிற் சிறந்த பிராமணர்களுக்கு இறையிலியாக விட்ட நிலம் (959) *ப்ரபா$_4$கரம் வக்காணிப்பார்க்கு ப$_4$ட்ட வ்ருத்தியாக இவ்வூரிலே விற்றுக் குடுத்த நிலம்* (SII,iii,200.)

ப$_4$ட்ட விர்த்தி (பெ) (=ப$_4$ட்டவ்ருத்தி) (893) *ப$_4$ட்டவிர்த்தியாக இருநூற்றுக்கழஞ்* (SII,xii,76.)

ப$_4$ட்டாரர் (பெ) ஆண் தெய்வம் (812) *மலைதளியாக குடைந்து ப$_4$ட்டாரரைப் ப்ரதிஷ்டை$_2$ செய்து* (IPS,18.)

ப$_4$ட்டாரி (பெ) பெண் தெய்வம்; துர்க்கை (802) *குன்றனார் ப$_4$ட்டாரிக்கு* (SII,xii,42.)

ப$_4$த்த சனங்கள் (பெ) பக்தர்கள் (911) *ப$_4$த்தசனங்கள் சிறப்பு இட்ட பொற்பூ* (SII,xix,92.)

ப$_4$த்தாதாயம் (பெ) (= நெல்முதல்); தானியமாகச் செலுத்தும் வரிகள் (1448) *கருங்குழியில் ஸகல ஸ்வர்ணாதாயம் ஸகல ப$_4$த்தாதாயமும் அனுபவித்துக் கொண்டு* (SII,v,998.)

ப$_4$த்தாரன் (பெ) கணவன் (937) *பிராமணி காளிநீலி என்ப$_4$த்தாரன் நாராயணங் கிருஷ்ணனிடை* (SII,xvii,640.)

ப$_4$ர்த்தா (பெ) கணவன் (1100) *த$_4$ர்ம்ம பத்நியாந நாகைச்சானி தன் ப$_4$ர்த்தாவ. ள யக்ஞயக்ரமவித்தன் மரித்த பின்பு* (EZ,iv,24,p.191-96.)

ப$_4$வ (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1267) *ப$_4$வ ஸம்வத்ஸரத்து ஆடி மாஸம்* (NI,N.97.)

ப$_4$வநம் (பெ) வீடு (1113) *தேவர்களுக்கு நித்ய வாஸ ப$_4$வநமான ப்ரதம அபிஷேகத் துக்கு* (SII,iv,1396; EI,xviii,38; EZ,ii,pp.242-255.)

பா$_3$

பா$_3$லன் (பெ) குழந்தை (919) *ஏது முருவறியாத்தானொரு பா$_3$லனை குடவோலை வாங்குவித்து* (ARASI,1904-05,p.131f.)

முத்தரையன் (பெ) குறுநிலத் தலைவர் குடும்பத்தில் மூத்த மகன் பெறும் பட்டப்பெயர்; முதுநிலை அரையரின் பட்டங்களில் ஒன்று (800) *பெரும்பிடுகு முத்தரையனாயின குவாவன் மாறன்* (EI,xiii,10.)

முத்தலைச் சந்தி (பெ) மூன்று தெருக்கள் சந்திக்குமிடம் (1532) *செவ்வைக்கு வடக்கு முத்தலைச்சந்தி தெற்கோடிய தெருவுக்கு கிழக்கு* (IPS,750.)

முத்தாணி (பெ) முத்துக்களைக் கோக்கும் திருகாணி (1014) *தைய்ப்பு முத்தாணி எட்டும்* (SII,ii,51.)

முத்தாவரணம் (பெ) ஒரு வரி (1068) *வேலிக்காசுந் திங்கள் மேரமும் முத்தாவரணமும் தறிப் புடவையும்* (EI,xxi,38.)

முத்திங்கள் (பெ) மூன்று மாதம் (887) *ஒரு முறை முத்திங்களுக்கு ஈரணையாக* (SII,xiv,16a.)

முத்திங் சிலாகம் (பெ) முத்துக் குளிக்கும் இடம் (1086) *விஜயஸ்தம்பம் திசை தொறு நிறுத்தி முத்திந் சிலாகமும் முத்தமிட்ப் பொதியலும் ... கைக்கொண்டருள* (SII,vii,1032.)

முத்திங்நுழுத்து (பெ) முத்துப் பதித்த ஒரு நகை (1009) *மேற்படியார் சார்த்தும் முத்திந்நுழுத் தோரணையிநால் பொந் கழஞ்சரையே* (SII,v,521.)

முத்திங் பட்டிகை (பெ) முத்துப் பதித்த மேகலை (1009) *மேற்படியார் சாத்தும் முத்திந் பட்டிகை ஒன்றினால்* (SII,v,521.)

முத்திரைச் சங்கு (பெ) சின்னம் பொறித்த சங்கு (?) (1014) *காஞ்ந்தஶர்வ்வ துறைக் காவாலிக்குப் பங்கு ஒன்றும் முத்திரைச் சங்கு ஒன்றுதத் தயிலன் விக்கியண்ணனுக்குப் பங்கு ஒன்றும்* (SII,ii,66.)

முத்திரை மநிஷன் (பெ) மேலாண்மை செய்பவர் (1512) *முத்திரை மநிஷற்கு தெத்ஶயோதநம் 2 அக்காளி மண்டை* (TDI,iii,27.)

முத்திறத்தார் (பெ) மூன்று இயல்பையுடையவர் (1120) *முத்திறத்தாரீசன் முதற் திறத்தை பாடியவர் ஒக்கமைத்த செப்பேட்டினுள்ளின் எழுதி* (SII,iv,225.)

முத்தின் சலாபம் (பெ) முத்துக் குளிக்குமிடம் (1096) *முத்தின் சலாபமும் முத்தமிட்ப் பொதுவமும்* (SII,xvii,623.)

முத்தின் வளையல் (பெ) முத்து வளையல் (1009) *மேற்ப்படியார் சார்த்தும் முத்தின் வளையல் ஒன்றும்* (SII,v,521.)

முத்தீ (பெ) வேள்வித்தீ (905) *ஒரு முத்தீயுள்பட்டு* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

முத்து (பெ) சிப்பியில் விளையும் மணி (982) *இட்டமுத்தின் பஞ்சசரி ஒன்று* (SII,xix,302.)

முத்துக் குஞ்சம் (பெ) முத்துக்கள் கோத்த குஞ்சம் (1366) *நவரெற்றினக் குடையும் முத்துக் குஞ்சவும் பவளக் குஞ்சவும்* (TAS,viii,p.20-22.)

முத்து குடை (பெ) முத்துக்கள் கோத்த குடை (1060) *முத்து குடை ஒன்றிநில் சுழல் தூக்கல் உள்ளிட்டு* (SII,v,664.)

முத்துச் சுட்டி (பெ) முத்துக்களாலாகிய நெற்றியணி (1366) *விருந்துகளிலும் நமக்காயிட்டு தந்ததாக முத்துச்சுட்டி முசினாப்பு* (TAS,viii,p.20-22.)

முத்துப் பந்தல் (பெ) அலங்கரிக்கப்பட்ட பந்தல் (1058) *முன்பின் மண்டபமும் எடுப்பித்து முத்துப் பந்தலும் குடுத்து* (EI,vii,20 (k).)

முத்து மாத்திரை (பெ) ஒரு நகை (1014) *முத்து மாத்திரை ஒன்றிற் கோத்த முத்து சப்பத்தி ஒன்றும்* (SII,ii,79.)

முத்துவாளி (பெ) ஒரு நகை (1247) *திருமுத்துவாளி 2னால் பொன்னும்* (SII,viii,77.)

முதல் (பெ) மூலதனம் (992) *இவ்வூர் ஊர் கல்லால் மாறி முதலா எடுத்து பண்டாரத்து இருந்த பொன் 200 கழஞ்சு* (SII,xvii,617.)

முதல் (பெ) தலைமை (1125) *இக்கோயில் முதல் கணக்கு வேட்கோவந்* (SII,xvii,601.)

முதல் (பெ) மூலதனம் (731) *இன் நெல் முதலால் பதின் காடியால்* (SII,viii,331.)

முதல் (பெ) முதலிலுள்ள; முன்புள்ள (759) *முதல் முப்பதிருவரும்* (SII,iv,827.)

முதல் கணக்கு (பெ) தலைமைக் கணக்கர் (1125) *இக்கோயில் முதல் கணக்கு வேட்கோவந் திருவாரூருடையாநக் கூளி கணவதி எழுத்து* (SII,xvii,601.)

முதல்கள் (பெ) பொருள்கள் (1388) *கிறையமாகக் கொள்ளும் முதல்களும் ஊழியமாகக் கொள்ளும்* (SII,viii,156)

முதல் கெடாமை (வி) மூலதனம் அழியாமல் (768) *நிசதம் நெய் உரிக்கு முதல் கெடாமைப் பொலி ஊட்டுக் கொண்டு* (SII,xiv,27.)

முதல் மடைச் செறு (பெ) தலைமடை நீர் பாயும் நிலம் (1057) *ஊருணி ஏத்தத்தில் முதல் மடைச் செறுவில் தெற்கில் இலவங் காலிச் செறு* (SII,i,127.)

முதலடைப்பு (பெ) முதல் ஊழியம் செய்யும் உரிமை (1461) *கோயிலில் தேவடிமை சுவந்திரம் யிவள் பெற நின்றையம் பண்ணினபடி தேவடிமை முதலடைப்பு மடை விளாகத் தெருவில்* (IPS,710.)

முதலாக (இ) தொடங்கி (856) *யாண்டு பத்தாவது முதலாக* (SII,viii,309.)

முதலாகிய (இ) முதலிலிருக்கும் (833) *மூன்றென்னும் பயன் மற்றுண் முதலாகிய தர்ம்மத்தை* (SII,xiv,44.)

முதலிகள் (பெ) தலைவர் (1139) *பகை துடர இருவர்க்கு முதலிகளான எதிரிலிச் சோழச் சம்புவராயரும் இந்நாட்டு* (ARE,1932-33,p.66.)

முதலித்தரம் (பெ) ஊர்த்தலைமைப் பதவி (1131) *விசய நாராயணச் சருப்பேதி மங்கலத்து முதலித்தரஞ் செய்கிற துருத்தி மங்கலத்துச் சங்கரன்* (SII,xiv,226.)

முதலிமை (பெ) தலைமை (1259) *முதலிகளில் இவர்களுக்கு முதலிமை செய்கிற குலதீபராயரும்* (IPS,361.)

முதலினர் (பெ) முதலானோர் (1036) *திருமுடி சூட்டித் தென்னவர் இருவர் முதலினர்க்குத் தன் குலமளித்து* (SII,iv,223.)

முதலுஞ் சிலவு அறிய வரவு செலவு கணக்கு எழுத (1001) *திருவீரட்டான முடையார் பண்டாரம் செயவுங் முதலும் சிலவு அறியவு* (SII,vii,858.)

முதலே சிலவு (பெ) ஒரு வரி (1068) *வீரசேஷையும் உகவை பொன்நும் காசி பொன்னும் முதலே சிலவும் வண்ண கூலியு* (SII,vii,467.)

முதற் பத்திரம் (பெ) யானை வகை (1060) *விரு சத்துருபயங்கரக் கரபத்திர முதற் பத்திர ஜாதி பகட்டரைசநேகமும்* (SII,v,644.)

முதற் பார்வை (பெ) ஒரு வரி (1532) *பொன்வரி காணிக்கை சோடி முதற் பார்வை வாசலில் பிறக்கும் பழவரி* (ARE,1922,068)

முதற் பொன் (பெ) மூலதனம் ஆக வைத்த பொன் (1023) *அளந்து தரவு கொள்வோமாகவும் இம் முதற்பொன் கொள்க வென்று* (CHEN,xix,p.206-08.)

முதிரை (பெ) பருப்பு (892) *முதிரை விரவி நாலு கறியும்* (SII,vi,371.)

முதுக்கள் (பெ) முன்னோர் (1300) *எங்களுக்கு பாடிகாவல் முதுக்கள் குடுத்த மீகோநாட்டு திருவெறும்பூர் உடையார்* (IPS,598.)

முதுகண் (பெ) ஒருவன் அல்லது ஒருத்திக்குக் காப்பாளன் (912) *பானச்சன் நாராயணஞ் சேந்தன் முதுகணாக நீரோட்டி குடுத்தேன் நீலியேன்* (SII,xvii,640.)

முதுகண் பட்டமை (பெ) ஒரு (பெண்ணுக்கு) காப்பாளனாக இருத்தல் (1278) *ப்ரயாகைச் சிங்க பிரான் பட்டன் .... தெய்வப் புள்ளுக்கு முதுகண் பட்டமைக்கும் இவன் ஒப்பாமைக்கும்* (SII,vii,1045.)

முதுகாடு (பெ) பிணக் காடு (691) *முதுகாட்டு வழியின் மேற்கு* (SII,i,151;EI,xvii,22.)

முதுகிட்டொளித்த (வி) தோற்றோடிய (1014) *முயங்கியில் முதுகிட்டொளித்த சயசிங்கந் அளப்பெரும் புகழோடும்* (EC,ix,Cp.88.)

முதுகிட (வி) முதுகு காட்டி ஓடுமாறு (1044) *விட்டினி விடாது சென்றோட்டி முதுகிடப் பொருது* (SII,v,465.)

முதுகிடும் படி தோற்று ஓடும் படி (1182) *வீரபாண்டியன் முதுகிடும் படி தாக்கி மதுரையும் அரசுங்கொண்டு ஜயஸ்தம்ப$_4$ நாட்டி* (SII,vi,436.)

முதுகு கண்டு (வி) தோற்றோடச் செய்து (1069) *முறட் சளுக்கியை முடக்காற்றில் முதுகுகண்டு முனிவறிய* (EI,xxv,25.)

முது கூறு (பெ) (சேர அரசில்) முக்கிய ஆட்சிப் பகுதி (1008) *புறைகிழாநாடு முதுகூறு வாழுமவர் வந்து* (IA,xx,p.290.)

முதுதரிசு (பெ) வெகுநாள் பயிரிடாத தரிசு நிலம் (1217) *கரைக் கிழான் கூற்றில் முதுதரிசு நிலம் சண்பை யுடைப்புக்கு தெற்கு* (SII,viii,417.)

முதுநிலப் பாழ் (பெ) நீண்ட நாள் பயிரிடாத நிலம் (1269) *தனிவிலை கொண்ட முதுநிலப் பாழுக்கு எல்லை ஆவது* (IPS,377.)

முதுநிலம் (பெ) பாழான நிலம் (929) *முதுநிலம் விலை கொண்டு வசக்கின செய்* (SII,xiv,61.)

முதுபதி (பெ) பழைய ஊர் (750) *இலத்தைப்பாடி யென்னும் முதுபதி* (EI,v,8.)

முதுபலா (பெ) முதிர்ந்த பலா மரம் (1179) *வட வெல்லை கொழுக்கோட்டை மாவின் கல் முதுபலாவின்னு தெற்கு* (TAS,vii,p.24-26.)

முதை (பெ) வயலின் பெயர் (1000) *புதுவாய் வளால் புலையன் முதை சிறுகோல் மற்றும்* (TAS,ii,p.173-207.)

முத்$_3$ரை மநுஷ்யர் (பெ) அரச ஆணை தாங்கிய அலுவலர் (1524) *நாக$_3$லா தே$_3$வியம்மன் புரந் திருனாமக்காணியா யிருக்கவும் இராயருடைய முத்$_3$ரை மநுஷ்யர் வந்து* (SII,xvii,684a.)

முந்தி (பெ) முதலில் (1060) *அன்நீர் முந்தி யடைத்துப் பாச்சப் பெறுவதாகவும்* (SII,vii,946.)

முந்திரிகை (பெ) பின்ன எண் (1/320) (987) *கிழக்கடைய மூன்று மாக்காணி அரைக்காணி முந்திரிகையும்* (SII,xiii,3.)

முந்தினார் (பெ) முன்பு சொல்லப்பட்டவர் (894) *பந்மாஹேச்$_3$வர முந்தினாரை தண்டமிடப் பெறுவதாகவும்* (SII,xiii,302.)

முந்து (வி) மேலெழும் (1279) *பொருபடை மன்னவர் வீரமொன்றே பொரும் போர் தொலைந்தும் வருகதிர் முந்து குண திசை ஆள்வர் வடக்கிருப்பர்* (SII,vii,771.)

முந்துற்ற (வி) அன்றுள்ள (961) *முந்துற்ற கோவுக்கே தரவுக்கே வாஸித்து* (SII,vii,802.)

முந்துற்றார் (பெ) குறித்த நேரத்தில் முன்னாலிருந்து பணிபுரிவோர் (970) *பொந்நு 50ம் பொந்நு முந்துற்றாரே மன்றப் பெறுவாராகவும்* (SII,iii,150.)

முந்நம் புகுந்த (வி) முதலில் மனைவியான (897) *முந்நம் புகுந்த மூத்த தேவியார் இளங்கோந் பிச்சி* (SII,xiii,323.)

முந்நாழி (பெ) மூன்று நாழி (755) *நித்ய முந்நாழி அரிசி* (SII,vi,356.)

முந்நீடு (பெ) முதலில் நீர் பாயும் நிலம் (861) *ஸ்ரீகண்ட வாய்க்கால் கீழ் பூமி முந்நீடாய் குறுவைய் விளைந்த* (SII,xiv,78.)

முந்நீர் (பெ) கடல் (785) *ஒலி கெழு முந்நீர் உலகு* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

முந்புடையார் (பெ) முன்பு உரிமை பெற்றிருந்தவர் (1018) *அம்மைநாச்சியார்க்கு இந்நாள் முதல் முந்புடையாரையும் பழம் பேரையும் தவிர்த்து* (SII,iii,205.)

முந்வேளை (வி) தலைவனோடு முதலில் உயிர்விடச் செய்யும் சபதம் (1147) *சம்புவராயநாந கண்டர் சூரியனுக்கு முந்வேளை கொண்ட மங்கையர் நாயகியாற்கு நன்றாக* (SII,vii,846.)

முந்னொடுக்கு (பெ) முதல் மரியாதை (1403) *நயினாரான இரண்டு மலைனாட்டு பிள்ளை நரசிங்கதேவர் இக் கோயிலில் முந்னொடுக்கு பெற கடவராகவும்* (IPS,695.)

முநிவு (பெ) கோபம் (1197) *வட மன்னரைத் தறைப் படுத்தி முநிவாறக் கச்சி புக்கு முழுதாசையுந் திறை கவர்ந்து* (SII,iii,88.)

முப்படித் தோரணம் (பெ) ஒரு வகை அலங்காரத் தொங்கல் (1008) *முரைசும் முப்படித் தோரணம் நாட்டப்பெறுவதாகவும்* (EI,xxii,34.)

முப்பத்திரண்டு (பெ) ஓர் எண் (32) (612) *ம....ந்திரபருமற்கு முப்பத்திரண்டாவது* (CHHS,1971/88.)

முப்பத்து மூன்று (பெ) ஓர் எண் (33) (583) *சிங்க விண்ணபருமற்கு முப்பத்து மூன்றாவது* (CHHS,1971/30.)

முப்பத்தெட்டு (பெ) ஓர் எண் (38) (618) *மஇந்திர பருமற்கு முப்பதெட்டாவது* (CHHS,1971/50.)

முப்பத்தேழு (பெ) ஓர் எண் (37) (768) *நந்திவிக்ரமபருமற்கு யாண்டு முப்பத்தேழாவது* (SII,xii,34.)

முப்பத்தொன்பது (பெ) ஓர் எண் (39) (619) *மசீந்திர பருமற்கு முப்பத்தொன்பதாவது* (CHHS,1971/35.)

முப்பது நான்கு (பெ) ஓர் எண் (34) (614) *மயிந்திரபருமற்கு முப்பது நான்காவது* (CHHS,1971/59.)

முப்பலம் (பெ) மூன்று பலம் (887) *சந்தனம் நியதி முப்பலம்* (SII,xiv,16a.)

முப்புரி நூலோர் (பெ) அந்தணர் (1012) *மூவெண் பெயருடைய முப்புரி நூலோர்* (SII,vii,863.)

மும்மத வாரணப்பிள்ளை (பெ) வாணிக்குழுவைச் சேர்ந்த வீரரின் ஒரு பட்டம் (1150) *கூத்தன் காலநான நூறாயிரந் தசமடி மும்மத வாரணப்பிள்ளையும்* (AVNM,9,p.33-34)

மும்மூன்று (பெ) மூன்று மூன்று (922) *மும்மூன்று மாஸம் போனவாறே* (SII,vi,295.)

மும்மை (பெ) மூன்று காலம் (1168) *உத்தம நிதி உயர் பெருங்கீத்தி முத்தமிழ் மாலை மும்மையும் நிறைந்த சித்திரமேழிப் பெரிய நாட்டோமும்* (SII,viii,291.)

முயங்க (வி) தழுவ (1135) *பூ மன்னுபாவை காமுற்று முயங்க இருநிலக் கிழத்தியைத் திருமணம் புணந்து* (SII,vii,43.)

முயங்கு (வி) தழுவு (1012) *சுந்தரசோழன் மந்தர தாரன் திருப் புய முயங்குந் தேவி* (SII,vii,863.)

முயிறு (பெ) ஒரு வகைச் செடி (960) *முள்ளு முயிறு மாக கவமையும் வெட்டிக் கரிக் காட்டினோள்ள பூமி* (TAS,ii,p.159-69.)

முரட்டொழில் (பெ) போர்த்தொழில் (1008) *கொல்லமுங் கலிங்கமும் முரட்டொழிற் சிங்களர் ஈழமண்டலமும்* (EC,ix,Cp.128.)

முரண் (பெ) வலிமை (771) *முன்னின்றவர் முரணழித்து* (EI,xvii,16.)

முரம்பு (பெ) மேட்டு நிலம் (905) *வன்கள்ளி முரம்புக்கும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

முரிப்பு (பெ) வளைந்த இடம் (976) *கோயிலில் கீழை முரிப்பில் எழுந்தருளி இருக்கையில்* (SII,xix,169.)

முருக்கி (வி) அழித்து (771) *கோவுங் குறும்பும் பாவுடன் முருக்கி* (EI,xvii,16.)

முருகன் (பெ) முருகக் கடவுள் (1220) *நிலங்காவற் றொழில் பூண்டு செரு வலியில் முருகனென்றுந் திருவடிவில் மதனனென்றும்* (CHEN, xiv, p.362-64.)

முருகு (பெ) அழகு (950) *முருகூர் பொழில் புடை சுற்றிய* (TASSI,1962-65,p.32-52.)

முருடு (பெ) திரட்சி (1012) *கைம்மணிப் பகுதியு முருடியல் திமிலை* (SII,vii,863.)

முரைசு (பெ) முரசு; பறை (785) *கடிமுரைசு தன் பியரறைய* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

முல்லை (பெ) முல்லைப் பூ (800) *அக்காலந்தான் முல்லைக்கே முற்படுமோ என்றென்று* (EI,xiii,10.)

முலைவிலை (பெ) திருமணக் காலங்களில் அளிக்கப்படும் காணிக்கை (885) *முலைவிலையும் பள்ளியாரே கொள்ளப் பெறுவார்* (TAS,ii,p.80-82.)

முழக்கம் (பெ) பேரொலி (1012) *ஒலி திமிலை முழக்கம்* (SII,vii,863.)

முழக்கி (வி) ஒலி செய்து (921) *படைப் பரிசாரந்தந்து போகத்தன் பணை முழக்கிஉம்* (SII,iii,206a.)

முழக் கோல் (பெ) ஓர் அளவு கோல் (1245) *மேற்கே தச்சன் முழக்கோலாலே ஒரு முழ அகலம் சுவற்கனமாகத் திருமதிள் இடவும்* (IPS,341.)

முழங்க (வி) ஒலி செய்ய (1122) *முரைசுகள் முழங்க விஜையமும் புகழு மேல் மேல்லோங்க* (SII,v,702.)

முழங்கெரி (பெ) உக்கிரமான தீ (1012) *முலை மிகப் பிரிந்து முழங்கெரி நடுவணுந் தலைமகற் பிரியாத் தையல்* (SII,vii,863.)

முழம் (பெ) ஒரு நீட்டல் அளவு (1007) *விரலால் இருபத்து நால் விரல் கொண்டிது முழமாக இதில்ப் பாதி பந்நிரு விரல் கொண்டிது ஒரு சாண் ஆக* (TMPL,xviii,p.100-01.)

முழம் (பெ) நீட்டல் அளவு (879) *இரு முழ நீளத்தன* (SII,xiv,15.)

முழவு (பெ) மத்தளம் (1300) *முழவொலி வளர்கும் முத்தமிட் பாடலொடாடல் ஓவா* (SII,viii,442.)

முழாக்கு (பெ) மூன்று ஆழாக்கு (921) *நெய் அமிது போது உழக்காக நிசதி முழாக்கானபடி* (SII,iii,139.)

முழி (பெ) திட்டு (1125) *தாழ்வை ஏறி முழியை வலத்து வைத்து* (SII,xiv,205.)

முழு (வி) முழுமையான ஒன்று (804) *முழு சிராவணை அன்றி கால் சிராவணையும் அரைச் சிராவணையும் முக்கால் சிராவணையும்* (SII,xiv,37.)

முழுச் செந்திரிக்கப் பச்சைவடம் (பெ) ஒரு வகை உயர்ந்த போர்வை (1491) *திருக்கணா மடைத் திருவோலக்கம் இரண்டும் சாத்தியருளும் முழுச் செந்திரிக்கப் பச்சைவடம் இரண்டும்* (TDI,ii,94.)

முழுது (பெ) எல்லாம் (785) *ஒலி கெழு முந்நீருலகு முழு தளிக்கும்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

முழு மணி (பெ) குற்றமற்ற மணி (1266) *அரி ஆசனமும் முடியுங் கட்கமும் முழு மணி யாரமும் கொடியுங் குடையும்* (IPS,366.)

முழுமதி (பெ) பூரணச் சந்திரன் (1192) *செம்பொருட் சமையஞ் சீருடன் பரவ எழு பொழில் கவித்த முழுமதிக் கவிதை* (SII,v,301.)

முழுமனை (பெ) ஒரு மனை (966) *தூசியூர் நகரத்தாரை நாங்கொள்ளும் மிறை முழுமனை காலும்* (SII,iii,212ab.)

முழுமை (பெ) எல்லாம் (1235) *உத்தம நிதி உயர் பெருங் கீர்த்தி முத்தமிழ் மாலை முழுமையு நிரந்த சித்திர மேழிப் பெரிய நாட்டோமும்* (SII,viii,198.)

முழு வரிசை (பெ) நிலத் தீர்வையின் முழு அளவு (1300) *நிலம் ஒரு மாவுக்கு ஊற்காலால் முழுவரிசை எ.கல நெல்லும்* (IPS,624.)

முழை (பெ) முகத்தளவைக் கருவி (873) *பிழையா நாழியோடொக்கும் முழையால்* (SII,xiv,Appx,2.)

முழைசுனை (பெ) குகையைச் சேர்ந்த சுனை (996) *கற்குட்டம் முறைசேர் கோவல் முழைசுனை பிறை நுதலாய்* (SII,vii,857.)

முள் (பெ) முள் செடி (960) *முள்ளுமுயிறு மாக கவமையும் வெட்டிக் கரிக் காட்டி னொள்ள பூமி* (TAS,ii,p.159-69.)

முள்க்குத்தினார் (பெ) முள் செடிகளை வெட்டினவர் (877) *இக்கரையில் முள்க் குத்தினாரையும்* (SII,vi,370.)

முள்ளடி (பெ) ஒரு வரி (1193) *அரிமுக்கை எடுத்துக் கொட்டி கோயிற்றமப் பேறு முள்ளடி காத்திகைக் காணம் ஆசுவிகள் பொதுமக்கள் பேரால் வந்த கடமையும்* (SII,vii,454.)

முள்ளிடி (பெ) ஒரு வரி (1224) *அதிகாரப் பொன் புழுகு வரி முள்ளிடி உள்ளிட்ட எப்பேர்ப்பட்ட பொன் ஆயங்களும்* (SII,iv,648.)

முளிந்த (வி) உலர்ந்த (1217) *கருப்பு கட்டி கல்நெல்லி முளிந்த மஞ்சள்* (SII,xvii,178.)

முளை (பெ) முளைத்த நெல் (1015) *கற்பதர் செ...த்தல் முளை மடி நீக்கி ... தூநெல்லு* (EC,ix,Cp.129.)

முளை (பெ) முளைத்த பயிர் (800) *பிறையின் குறுமுளைப் போந்தீரிலைக் கொள்ளும்* (EI,xiii,10.)

முளைக்கூலி (பெ) ஒரு வரி (1443) *காசுபாடு புடவைப்பாடு நெல்ப்பாடு முளைக்கூலி* (ARE,1916,230)

முளைத்த (வி) தோன்றிய (771) *படுகடன் முளைத்த பருதி போல* (EI,xvii,16.)

முளைப்பட (வி) பயிரிட (985) *இவ்வூர் பிறந்தார் தேவதானமும் பூந்தோட்டம் பூச்சி யாளவு முளைப்படவும் பெறாதாராகவும்* (SII,iv,516.)

முளைப் பயறு (பெ) பயறு கொண்டு செய்யும் ஒருவகைக் கறி (1140) *முளைப் பயற்றுக்கு பயறு* (SII,vii,485.)

முளைப்பன (பெ) செடிகள் (1050) *மற்றும் எழுவன முளைப்பன தெங்கு பனையும்* (SII,vi,413.)

முளைப் பாலிகை (பெ) தானிய முளை வளர்க்கும் மண்கலம் (1127) *திருமஞ்சநத்துக்குத் திருமுளைச் சார்த்த திருமுளைப் பாலிகை முப்பத்தாறுக்கு* (SII,iii,80.)

முளையட்ட (வி) தானிய முளையுண்டாக்க (985) *பாலிகைக்கு கீழட்ட முளையட்ட பயறுங் கடுகும் எள்ளும் முதலாக வேண்டுவன எல்லாத்துக்கும்* (SII,xix,380.)

முளை விச்சு (வி) பாலிகை முளைக்கான வித்து (1014) *திருமுளை விச்சுக் கழுவப்பால் இருநாழியும்* (SII,i,149.)

முற்குடி (பெ) சிறந்த குடி (905) *முசுக் குறுச்சி முற்குடிப்பினோர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

முற்கூறிய (பெ) முதலில் கூறிய (976) *ஒரு காலாவது இருகாலாவது முக்காலாவது கொள்வேன் என்று பிற் கூற முற்கூறிய பேராவூர் ஸபை,யோம்* (SII,xix,162.)

முற்சூடு (பெ) (=முற்றூட்டு) (1050) *இக் குளத்திற் பயிர் யாதொன்றும் முற்சூட்டுன் தாநே அனுபவிப்பானாகவும்* (SII,iv,413.)

முற்படும் (வி) முந்திவிடும் (800) *காலந்தான் முல்லைக்கேய் முற்படுமோ என்றென்று* (EI,xiii,10.)

முற்பாடு (பெ) முதலில் (1289) *நாயகரும் ஏறி அருளினால் முற்பாடு திருத்திரை எடுத்தல் பதியிலார் ஆடவும் பிற்பாடு திருத்திரை எடுத்தால்* (SII,viii,333.)

முற்ற (வி) எல்லாரும் (1264) *ஊராரும் இளஞ்சிங்க வீரரு முற்றக் கூடி இருந்து கல்லில் வெட்டிச்சமைக்கு இது கல்வெட்டாகும்* (TAS,vii,p.29-31.)

முற்றம் (பெ) கோயிலின் வாசல் (891) *ஆட்டாண்டும் திருமுற்றத்துக்கே கொடு சென்றிட்டு* (SII,viii,634.)

முற்றாற்ற (வி) முழுவதும் (?) (1008) *நிழலும் பணியும் முற்றாற்றக் கூடிக் திரு நெல்லி முக்கால் வட்டத்து நின்று* (IA,xx,290.)

முற்றிய (வி) முதிர்ந்த (1012) *...யவற்றை யருக்கன் அரிச்சனை முற்றிய நான்மறை தெரிந்து* (SII,vii,863.)

முற்றுப் பெறுத்தான் (வி) முடிவடையச் செய்தான்; பூர்த்தி செய்தான் (815) *குறைப் பணி நின்றது முற்றுப் பெறுத்தான்* (SII,xiv,26.)

முற்றும் (இ) முழுவதும் (953) *பெருமக்கள் கைத்தடி மேல்ப்பட்ட நிலம் முற்றும்* (SII,v,570.)

முற்றுவிக்க (வி) பூர்த்தி செய்ய (771) *கொண்ட வேள்வி முற்றுவிக்க* (EI,xvii,16.)

முற்றுவித்த (வி) செய்து முடித்த (887) *இடவை யாத்திரை முற்றுவித்த* (EI,xxxii,31b.)

முற்றுவித்தான் (வி) முடித்தன் (887) *யாண்டு நான்காவது எடுத்துக்கொண்டு ஐந்தாவது முற்றுவித்தான்* (SII,xii,40.)

முற்றூட்டு (பெ) முழு விளைச்சல்; முழு வருவாய் (1014) *தாந் வேண்டும் பயிற் சேது முற்றூட்டும் அநுபவித்து* (EC,ix,Cp.88 (c).)

முற்றூட்டுத் தேவதானம் (பெ) சர்வமானியமாகக் கோயிலுக்கு விட்ட நிலம் அல்லது ஊர் (957) *வெண்ணாட்டுப் பெருமானார் முற்றூட்டுத் தேவதானந் திருமழலை* (SII,xix,46.)

முறம் (பெ) தானியம் புடைக்கும் கருவி (1392) *இதுக்கு கூடை முறம் பெரும்பாய் கூன் இதுகுவும்* (TDI,i,190.)

முறி (பெ) ஒரு நில அளவு (1043) *இரவி சாத்தனும் இவர்களிருவர்க்கும் இரண்டு முறிப் பீடிகையாலுந் நெய்யில்லை* (TAS,viii,p.39-40)

முறி (பெ) கையெழுத்திட்ட சீட்டு (988) *மக்களை வேட்டாரினவுமாக இவ்வனைவர் முறியும் நம்மாணைக் குரியவாறு* (EI,xxi,27.)

முறிக்கச்சம் (பெ) உடன்படிக்கைச் சீட்டு (1251) *ஆண்டொந்நிநு வரிக்கந் படு முறிக்கச்ச வகைக்கு பணம் பதிநெட்டும்* (TAS,iv,86-89.)

முறித்து (வி) ஒடித்து (1286) *சிறையில் இருந்த கத்தளை முறித்து ஓடிப் போன படியாலே* (SII,viii,591.)

முறிந்தன (வி) ஒடிந்தன (1042) *பல பொற் பூக்களும் சில பணிகளாய்க்கி தந்த பொன்னும் இற்றினவும் முறிந்தனவும் இட்டு* (SII,vi,33.)

முறிப்பான் (பெ) நோகச்செய்பவன் (?) (1465) *விட்டவன் விழுக்காடு ப்ரஸாதம் ஒன்றுக்கு முழங்கால் முறிப்பானில் தம்முடைய உடையமாக கட்டுவித்த மண்டபத்துக்கு* (TDI,ii,23.)

முறிய (வி) ஒடிய (1148) *பொற்சிலை முறியப் புலிபெலஞ்சேர கனகமால் வரைக் கயல் விளையாட* (TAS,vii,p.54-55.)

முறியக் குத்தி (வி) தோற்கடித்து (1514) *ப்ரதாபருத்ர கஜபதியை கொண்டவீடு மட்டும் முறியக் குத்தி* (SII,iv,284.)

முறிவு (பெ) விரிசல் (1015) *வயிரம் பொறிவும் முறிவும் ரக்த பிந்துவும்* (SII,ii,7.)

முறுவல் (பெ) புன்சிரிப்பு (905) *பூந்தளவ மணி முறுவல்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

முறுவலித்து (வி) நகைத்து (771) *நன்று நன்றென்று முறுவலித்து* (EI,xvii,16.)

முறை (பெ) தடவை (771) *கேரளனைப் பலமுறையும்* (EI,xvii,16.)

முறை (பெ) ஒழுங்கு (862) *பழுக்கற முறையால் வழி படுவானுக்கு* (SII,xiv,45.)

முறை (பெ) நீர் பாய்ச்சும் தடவை (900) *ஒராளி நீர் முறைதோறு மடைத்துக் கொள்வதாக வைத்தோம்* (SII,xii,114.)

முறை செய்தார் (வி) நியமமான பணி செய்தார் (1099) *இக் கோயில் திறந்து முறை செய்தாரே இத்திரு நுந்தாவிளக்கு* (SII,v,1000.)

முறை நாள் (பெ) (ஒவ்வொருவருக்கும்) ஒதுக்கப்பட்ட நாள் (985) *இத்திருகோயில் லுடையோம் எங்கள் முறைநாளால் எரிப்போமான்நோம்* (SII,vi,10.)

முறை பிடி (வி) 'வாசிக்காகச்' சேர்க்கும் பிடி நெல் (?) (999) *நிலத்தால் மாத்தால் முக்கலனே தூணி நெல்லு .லம் தர செத்தை முறைபிடி நீக்கி* (TAS,iv,p.127-30.)

முறைமுறை வரிசையாக (1176) *பெண் பெருமாள் உறையூரும் பேருரகையும் உ தகையு மதுராபுரியு முறை முறை யாண்டருளி* (SII,xvii,585.)

முறைமை (பெ) வழக்கம்; மரபு (1050) *வீரதளத்து முறைமையில் அழியவிருந்தால்* (AVNM,2,p.6-8)

முறைமை (பெ) நிவந்தத் திட்டம் (1012) *நெஞ்சில் விதித்த முறைமை மதித்து நோக்கி யின்னவை பிறவும்* (SII,vii,863.)

முறைமை (பெ) உரிமை (1074) *குலமணி மகுடம் முறைமையிற்சூடி* (SII,viii,701.)

முறைமை (பெ) விகிதங்கள் (1531) *வயலுக்கு வரும் இறை முறைமை வெட்டி முட்டாள்* (IPS,746.)

முறைமை (பெ) நியமப்படி (917) *முறைமையால் ஒரு நொந்தா விளக்கு* (SII,xix,246.)

முறை விழுக்காடு (பெ) பங்கீட்டு விகிதம் (1272) *எங்களூற் குடிக்காடு சுற்றி குளமும் வயலும் பெரிய குளத்தில் பெருங் குமிழியிலே முறை விழுக்காட்டிலே நாலு நாழிகை நீரும்* (IPS,384.)

முன் (இ) இதற்கு முன் (871) *முன்கல்மேல் வெட்டி கிடக்கும்* (SII,xiii,335.)

முன்கோற்குறி (பெ) முற்பகல் (956) *பஞ்சமி நாள் மூலங் கிழமை வெள்ளி போது முன் கோற் குறி இது நாளிது பருவமாக* (SII,viii,612.)

முன் சென்றது (வி) (தனக்கு) முன்னே போயிற்று (800) *மூட்டின சீற்றம் முன் சென்றது* (EI,xiii,10.)

முன் நீர் (பெ) கடல் (1008) *இரட்டபாடி ஏழரை இலக்கமும் முன்நீர்ப் பழந்தீவு பன்நீராயிரமும்* (EC,ix,Cp.128.)

முன் பகல் (பெ) முற்பகல் (976) *...பேராவூர் ஸபையோம் முன் பகல் நன்பகல் ஆவணத்து* (SII,xix,162.)

முன்பிலாண்டுகள் (பெ) சென்ற பல ஆண்டுகள் (1135) *திருப்பதியம் பாடுவித்துக் கொண்டு முன்பிலாண்டுகள் குருடகளுக்கு விட்டு வரும் நிவந்தப்படி* (SII,viii,749.)

முன்பு (பெ) முன்னிலையில் (771) *அந்தணாளர் முன்பு கேட்க* (EI,xvii,16.)

முன்பெற்றார் (பெ) அதற்கு முன்னமே உரிமை பெற்றிருந்தவர்கள் (753) *முன் பெற்றாரை மாற்றி* (SII,ii,73.)

முன் பெற்றோர் (பெ) முன்னால் உரிமை பெற்றிருந்தவர்கள் (765) *கோவும் பொறியுந் தீர்த்து முன்பெற்றோரை மாற்றி* (EI,xxxvi,20.)

முன் வைத்து முன்னிலையில் (849) *அஞ்சுவண்ணமும் புன்னைத்தலைப் பதியும் முன் வைத்து* (TAS,ii,p.67-68.)

முன்றில் (பெ) முற்றம் (1148) *வென்றி முரைசம் முன்றில் முழுங்கப் பொற்சிலை முறிய* (TAS,vii,p.54-55.)

முன்னம் (இ) முதலாவதாக (1000) *முதல் வட்ட முன்னம் எண்ணிக் கிரமத்தாலாட்டுவிது இரண்டாம் வட்டம் கொள்விது* (TAS,ii,p.173-207.)

முன்னம் (பெ) (இதற்கு) முன்பு (800) *முன்னம் வேல் கொண்ட* (EI,xiii,10.)

முன்னர் (பெ) இதற்கு முன்பு (1036) *இனியன பலவு முனைவையிற் கலந்து போற்கள வனத்துப் பார்த்திவரானார் முன்னருஞ் செய்தறியாது* (SII,iv,223.)

முன்னாக (பெ) முன்னிலையில் (771) *முன்னாகப் பணித்தருள* (EI,xvii,16.)

முன்னாய் (பெ) முன்னிலையில் (750) *கோயில் ஆனைக்கும் முன்னாய்* (EI,v,8.)

முன்னிலை (பெ) முன்பு (1192) *தந்தி மங்கலங்கிழான் சூரிய தேவன் திருஞானசம்பந்தனர் முன்னிலையாக இவர் பக்கல் காசு குடுத்து* (SII,v,989.)

முன்னின்றவர் (பெ) எதிர்த்து நின்றவர் (771) *மன்னிகுறிச்சியுந் திருமங்கையு முன்னின்றவர் முரணழித்து* (EI,xvii,16.)

முன்னின்று (வி) பொறுப்பேற்று (1268) *கடமைத்தான் அழகன் பேராலும் கடமை முன்னின்றிராதே* (IPS,376.)

முன்னீர் (பெ) கடல் (1072) *நிலமகள் தன்னை முன்னீர்க் குளித்தவன்னாள் திருமாலாதித் தேவுராசி* (SII,iii,64.)

முன்னுடைய (வி) இதற்கு முன்னே பெற்றிருந்த (944) *இவர் முன்னுடைய பெரிய நந்தவான முட்ட* (SII,iii,12.)

முன்னுடையார் (பெ) முன் நிலக் கிழமை உடையவர் (1014) *...முன்னுடையாரை மாற்றிக் குடிநீக்கிக் காராண்மை மீயாட்சியும்* (SII,ii,93)

முன்னூல் (பெ) பூணூல் (1192) *முன்னூல் மார்பின்* (SII,v,301.)

முன்னே (பெ) முன்பே (950) *அகத்தைப்படியில் முன்னே திருவயிர்து செய்யக் கடவியர்* (TAS,iii,189-91.)

முன்னேவல் (பெ) ஏவலாட் தொகுதி (1176) *பொன்னாசனங் சிங்கவனை பொலங் கற்பகப் பூஞ்சோலை முன்னேவல் நித்தல் முறை* (SII,xvii,585.)

முன்னோன் (பெ) முன்னோடி (950) *செயல்பல பயின்றோர் முன்னோன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

முனி (பெ) முனிவர் (905) *மாமுனி அத்ரி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

முனிந்து (வி) கோபித்து; சினந்து (1045) *மேவு புகழ் ராமகுட மூவர் கெட முனிந்து வேலை கெழு* (SII,iv,867.)

முனிவன் (பெ) ரிஷி (862) *தைவ தரிசனத் தருந்தவ முனிவனை* (SII,xiv,45.)

முனேவல் (பெ) முன்னிலையில் உள்ள ஏவலாட்கள் (1171) *எனா வரிசைகளும் முனேவல் உள்ளிட்டு முதலிகள் பெறக் கடவ ஏற்றங்களும்* (EI,xxi,31.)

முனை (பெ) வீரர் (1300) *நம்மக்கள் அறுபத்துநான்கு முனையும் முனை வீரக்கொடியாரோமும்* (AVNM,6,p.36-40)

முனை (பெ) போர் (1036) *இராச பரிச் சின்னமும் இளையன பலவு முனையையிற் கைந்து* (SII,iv,223.)

முனை (பெ) போர் முனை; பகை நாடு (800) *தென்னவன் முனையைக் கெடச் சென்ற மாறன்* (EI,xiii,10.)

முனைந்த (வி) முற்பட்ட (1012) *கூத்தொழில் கோளா தேத்தொழில் முனைந்த கண்டன் அரிசுறத் துரிசற* (SII,vii,863.)

முஹூர்த்தம் (பெ) நல்ல நேரம் (883) *அதுவேய் முஹூர்த்தமாக* (siil.viii,633.)

மூ

மூக்கரிய (வி) மூக்கை அறுக்க (1047) *காதலியோடுந் தன்றவ்வையைப் பிடித்து தாயை மூக்கரிய அங்கவமானம் நீங்குதற்காக* (SII,iii,28.)

மூக்கறுப்புண்டு (வி) அவமானம் செய்யப் பெற்று (1182) *மறப்படை பட சிங்களப் படை மூக்கறுப்புண்டு அலை கடல் புக* (SII,vi,436.)

மூக்கிழந்து (வி) அவமானப்பட்டு (1209) *விருதர் மூக்கிழந்து முகமழிய மறப்படையுடந் ஏழகப்படை* (IPS,163.)

மூக்கு (பெ) பாத்திரத்தின் வாய் (1009) *செம்பின் கை வட்டகை மூக்கிலாதிது* (SII,v,521.)

மூக்குத்தி (பெ) ஓர் அணி (1447) *மூக்குத்தி நிறை பண இடை இரண்டு* (SII,ii,71.)

மூக்குத்தி வரி (பெ) மூக்குக்குத்திச் சடங்கின் மீதான ஒரு வரி (1497) *இடங்கை வலங்கை வரி மூக்குத்தி வரி சாத்திரம் குதிரை காணிக்கை* (ARE,1963,666)

மூக்கு வட்டகை (பெ) மூக்குடன் கூடிய வட்டப் பாத்திரம் (1014) *மூக்கு வட்டகை ஒன்று வெள்ளி நானூற்று ஒரு பத்தொரு கழஞ்சு* (SII,ii,93.)

மூட்டின (வி) தூண்டிய (800) *மூட்டின சீற்றம் முன் சென்றது* (EI,xiii,10.)

மூட்டை (பெ) சரக்குக் கட்டு (1250) *...பொதிக்கு முக்குழக்கும்... டையிலெ மூட்டை அரிசியும்* (EC,x,Ct.103.)

மூத்த (வி) வயதில் மூத்த (991) *இவன் உடன்பிறந்த ....மூத்ததாழி குப்பையும் இளைய தாழி குப்பையும்* (SII,ii,63,94.)

மூத்த கூறு (பெ) (= முது கூறு) (1021) *குறும்பு நாடு மூத்த கூற்றினுக்கமைஞ்ச நிழலும் பணியும்* (EI,xvi,27.)

மூத்ததிகாரம் (பெ) தலைமைஅதிகாரம் (1218) *ஒட நாட்டின்னு மூத்ததிகாரம் செய்த* (TAS,i,p.289-91.)

மூத்த தேவியார் (பெ) மூத்த மனைவியார் (898) *மூத்த தேவியார் இளங்கோந் பிச்சி* (SII,xiii,323.)

மூத்த பரிவாரம் (பெ) சோழ அரண்மனையில் ஒரு பணியாளர் தொகுதி (992) *....இவிள உடையார் மூத்த பரிவாரத்து சாரமுடையான் அரட்டன் இகாடு தேவனும்* (SII,xiii,170.)

மூத்தவகள் (பெ) வயதிற் பெரியவர்கள் (932) *விவாஹதளி னம்பியும் மூத்தவகள் இருவருங் கண்டு செலுத்தக் கடவர்* (SII,vii,173.)

மூத்தவர்கள் (பெ) வயது முதிர்ந்தோர் (1229) *இவ்வடைவு எட்டிலும் அடைவுகளில் அன்றன்று மூத்தவர்கள் மஹாஸபடிக் கமைஞ்து* (KANDT,1968/160.)

மூத்தவன் (பெ) ஊரில் வயது முதிர்ந்தவன் (951) *மூத்தோர் இருவரும் சிறைக்கரையில் மூத்தவனுங் கூடி* (TAS,i,p.288-89;TAS,v,p.6-7.)

மூத்தவன் வழி மூத்தவன் மூத்த மகன் வாரிசாக (1500) *கணவதி ஆதிச்சன்னிற் பின்னையும் தன் தந்தானத்தில் மூத்தவன் வழி மூத்தவன் செலுத்தி வருவிது* (TAS,iv,p.217-18.)

மூத்த உடையார் (பெ) (வயதில்) பெரியவர்; காலஞ் சென்ற அரசன் (985) *மூத்த உடையார் மகளார் அறிஞ்சிகை கேணியேந்* (SII,xix,55.)

மூத்தார் (பெ) முதியவர்கள் (1200) *ஊராளர் பண்டு மூத்தார் கொள்ள....* (SII,v,775.)

மூத்தான் (பெ) வயதிற் பெரியவன் (1000) *மன்றாடிகளும் குடியில் மூத்தான் பணி செய்வது* (EI,xxxiii,33.)

மூத்து போக (வி) நாட்பட்டு அழிந்து போக (986) *இ விலக்ஷணங்கள் மூத்து போக ஸ்ரீ உத்தம சோழ தேவரான கோபரகேசரிபன்மற்கு* (SII,iii,144.)

மூதாதைகள் (பெ) குலமுன்னோர்கள் (1113) *மாதந்திரத்தோங் கூடி எங்களுக்கு மூதாதை களாயுள்ள வளஞ்செயரையும் எங்களோடு கூடவரும் நகரத்தார் உள்ளிட்டோரையும்* (SII,iv,1396; EI,xviii,38; EZ,ii,p.242-255.)

மூதூர் (பெ) பழைய ஊர் (862) *அரண்பை மூதூர்* (SII,xiv,45.)

மூப்பானவர் (பெ) வயது முதிர்ந்தவர்கள் (1500) *நகரத்தார் நின்றவர்களில் மூப்பானவர்கள் வரக்கடவார்களாகவும்* (IPS,833.)

மூப்பு (பெ) முதுமை (805) *தண்டார் மூப்பு வந்துன்னை* (SII,xii,49;EI,xii,16.)

மூர்த்திகள் (பெ) சுவாமியின் உருவங்கள் (1014) *பஞ்ச தேஹ மூர்த்திகளில்* (SII,ii,30.)

மூல்யம் (பெ) விலை (1300) *இந்நிலத்துக்கு மூல்யமாந பணம் ....* (SII,xvii,546.)

மூலச் சேதிகள் (பெ) கோயில் ஊழியர்களுள் ஒரு பிரிவு (1366) *கைக்கோளரு மூலச் சேதிகள் சீவீரபத்திரரும் பலபணி நிமந்தக்காறரும்* (EC,ix,Bn.66.)

மூலத்தானம் (பெ) கருவறை (1668) *ஸ்ரீ மலை மேல் மூலத்தானத்து பெருமான்னடிகளுக்கு* (ARE,1932-33,p.55;SII,xii,16.)

மூலப்பட்ட (வி) பொறுப்பேற்ற (867) *மூலப்பட்ட பந்மாஹேச்வரரே ஸபையாகவும்* (SII,xiv,12 (a).)

மூலப்பட்டார் (பெ) பொறுப்புடையர் (877) *அஞ்கழஞ்சு பொன் மூலப்பட்டாரயைரே தண்டிப்பாராக* (SII,vi,370.)

மூலப் பண்டாரம் (பெ) கருவூலம் (1096) *மூலப் பண்டாரமு உள்ளிட்ட பலபணி நிமந்தக்காற்க்கும்* (SII,v,753.)

மூலப் பிரமாணம் (பெ) மூல ஆவணம் (1249) *திருநாமத்துக்காணியாகத் தந்த பிரமாணமும் மூலப் பிரமாணங்களும்* (SII,xii,149.)

மூல ப்ரக்ருதி (பெ) முக்கிய குடிகள் (796) *நகரத்தாரு மூலப்ரக்ருதியு* (MASI,lxiii,p.54-59SII,iv,135.)

மூல ப்ரமாணம் (பெ) மூல ஆவணம் (1249) *திருநாமத்துக்காணியாகத் தந்த பிரமாணமும் மூலப் பிரமாணங்களும்* (SII,xii,149.)

மூலபத்திர *[ர]* (பெ) ஐஞ்ஞூற்றுவர் வாணிகரின் ஒரு குல தெய்வம் (1050) *ஸ்ரீவாஸுதேவ கண்டழி மூலபத்திரோற்பவ ஸ்ரீ அய்யபொழில்புர பரமேசுவரிக்கு மக்களாகி* (AVNM,2,p.6-8)

மூலபரிவார விட்டேறு (பெ) சோழர் படையில் ஒரு பகுதி (1014) *மூல பரிவார விட்டேறான சனனாதத் தெரிந்த பரிவாரத்தார் திருவிளக்குக்கு தந்த காசில் குடுத்த காசு ஒன்றினால்* (SII,ii,64&95.)

மூல பருடை (பெ) கோயில் நிர்வாக சபை$_3$ (875) *இரு நாழி நெய் எரிப்போமாஇனோம் மூல பருடையோம்* (SII,xiv,12.)

மூல பேரம் (பெ) கோயிலில் மூலவர் (1530) *உற்சவ பேரம் குலசேகர ஆழ்வாற்கு திருக்கணாமடை 1 மூல பேரத்தில் ஆழ்வாற்குத் திருக்கணாமடை 1* (TDI,iv,3.)

மூல ப்$_3$ருத்யன் (பெ) முக்கிய தொண்டன் (1001) *திரிபுவன பதிக்கு மூலப்$_3$ருத்(த்)யன் ஆன தண்டேச்$_2$வரப் பெருமாள் அருளால்* (SII,xvii,442.)

மூல ப்$_4$ருத்யர் (பெ) முதன்மையான தொண்டன் (943) *சோழர்க்கள் மூலப்$_4$ருத்யர் ஸ்ரீ பிராந்தக தேவரான ஸ்ரீ வீரசோழப் பெருமானடிகள்* (ARASI,1905-06,p.171-84.)

மூலம் (பெ) மூல எழுத்துச் சான்று(1288) *இப்படிக்கு ஒரு மூலம் எங்களால் காட்ட ஒண்ணாதென்றும்* (SII,vii,759.)

மூலம் (பெ) மூல நட்சத்திரம் (915) *பஞ்சமி நாள் மூலம் கிழமை வெள்ளிப் பொழுது* (SII,viii,636.)

மூல மண்டபம் (பெ) பிரதான மண்டபம் (1000) *ஸ்ரீ மூல மண்டபத்தில் ப்ரஜ்ஞாத்$_4$யக்ஷ படாரர் தன்னதியில் கூடி* (TAS,iii,p.44-45.)

மூலரத்ந பண்டாரம் (பெ) சோழர் கருவூலங்களில் ஒன்று (1014) *பாண்ட்$_4$யர்களையும் எறிந்து கொண்ட மாட்டில் மூலரத்ந பண்டாரத்தார் முதற் தந்த பவழத்து* (SII,ii,59.)

மூலஸ்தானம் (பெ) கருவறை (873) *ஸ்ரீ மூலஸ்தானத்து மஹாதே$_3$வர்க்கு* (SII,iii,90.)

மூலஸ்தா$_2$நம் (பெ) (1014) *திருவக்கரை ஸ்ரீ மூலஸ்தா$_2$நமுடைய மஹாதே$_3$வற்கு* (SII,xvii,195.): (1260) *விலைக் கொண்ட ஸாத$_4$னமும் மூலஸாத$_4$னமும் இந்நிலமும் மனைகளும்* (SII,xii,201.)

மூல ஓலைப் படிகள் (பெ) ஆதி எழுத்துச் சான்றுகள் (1254) *முற்குறித்த உடைமைகளும் உரிமைகளும் மூல ஓலைப்படிகளாலும் பொத்தகப் படியாலும் உள்ள உடைமைகளும்* (SII,xii,166.)

மூலை (பெ) கோணம் (550) *மும் மூலை ஏத்தத்தெல்லை* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

மூலை (பெ) மூலைத் திசை (978) *நிலத்தின் தென்கீழ் மூலையேயற்று* (SII,iii,151-151a.)

மூலைக் காப்புக்காறர் (பெ) கோயில் காவலர் (1506) *எம்பெருமானடியார் பணம் ஒன்று மூலைக் காப்புக்காறர் பணம் ஒன்று* (TDI,iii,7.)

மூலைவீசம் (பெ) (= மூலவீசம்): விற்ற முதலில் பதினாறில் ஒரு பங்கு (1554) *மகமை மூலைவீசம் தரகுண்டானவையும் சற்வமாந்$_2$யமாக* (TDI,v,154.)

மூவர் (பெ) மூன்று பேர் (789) *மத்$_4$யஸ்த$_2$ர் மூவர்க்கும் பங்கு மூன்றும்* (SII,ii,99.)

மூவா (வி) மூப்படையாத (770) *நியதம் ஆழாக்கு நெய் அட்டுவதாக வைச்ச சாவா மூவாப்பேர்ப்பசு பன்னிரண்டரை* (SII,xiv,18.)

மூவாயிரவர் (பெ) தில்லையந்தணர் கூட்டம் (1000) *தில்லையுட் கொற்ற மன்னர் முடிக் கட்டிய முகை சேர் கழல் மூவாயிரவர்* (SII,iv,167.)

மூவேந்த (பெ) சேர சோழ பாண்டியர் ஆயின மூவரசரை நினைவுகூரும் அரச அலுவலரின் பட்டங்களில் ஒரு முன்னொட்டுக் கூறு (771) *மாவேந்துங் கடற்றானை மூவேந்த மங்கலப் பேரரையனாகிய வைத்யசிகாமணி மாறங்காரி* (EI,xvii,16.)

மூழ்கியது (பெ) மூழ்கிக் குளித்தது (1300) *தண் காஞ்சிமுன்னுளது மும்முனிவர் மூழ்கியது* (SII,vii,399.)

மூழல் (பெ) மூடி (1014) *இலைச் செப்பு ஒன்று யாளிக்கால் நாலும் மூழலும் உட்பட* (SII,ii,1.)

மூழி (பெ) நீர் நிலை (905) *திருவிருப்பூர் மூழி நின்று* (TASSI,1962-65,p.31; PNDCP,p.95-115.)

மூழிக்களக் கச்சம் (பெ) சேரநாட்டில் மூழிக்களம் என்னும் பிராமண ஊர்மன்றத்தின் தீர்மானம்/நடைமுறை (1010) *பெரு முதியனுங் கையிலளந்து கொடுக்கடவன் நெயன்றி கொள்வோர் மூழிக் களக்(களக்) கச்சம்* (TAS,ii,p.41;TAS,iii,p.182-84.)

மூழிக்களத்து கச்சம் (பெ) (= மூழிக்களக் கச்சம்) (951) *சாத்தன் கூறு அமைச்சான் மூழிக்களத்து கச்சத்தோடொக்கும்* (TAS,i,p.289;TAS,v,p.7.)

மூழிக்களத்தொழுக்கம் (பெ) (= மூழிக்களக் கச்சம்) (951) *மூழிக் களத்தொழுக்கப்படி கச்சம் பிழைச்சாராவது* (TAS,i,p.288-89;TAS,v,p.6-7.)

மூழிக்கள வ்யவஸ்தை (பெ) (= மூழிக் களக்கச்சம்) (932) *பறிப்போர்க்கு பங்கு செய்தவரும் மூழிக்கள வ்யவஸ்தையாற் கேட்க கடவார்* (SII,vii,173.)

மூளை (பெ) மண்டையின் உள்ளீடு (1200) *வேளை நெடுங்கல்லும் வெட்டும் வீரற்கு கையு மூளை தெறிக்கு முடித்தலையு* (SII,viii,97)

மூன்றங்கம் (பெ) (சாக்கைக் கூத்தின்) மூன்று ஆட்டம் (985) *அடலையூர்ச் சாக்கைகு மூன்றங்கம் மாட நிவந்தம் செய்த பொன் கழஞ்சரை* (SII,xix,171.)

மூன்று (பெ) ஓர் எண் (3) (731) *மூன்று செறுவின்றலையுமாக* (SII,viii,331.)

மூன்று (பெ) அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பயன்கள் (833) *மூன்றென்னும் பயன் மற்றுண் முதலாகிய தர்ம்மத்தை* (SII,xiv,44.)

மூன்றுகை மாசேனை (பெ) சோழர் படையின் ஒரு பெரும் பிரிவு (1096) *அரக்கிலைச் செடி இருத்தினோ மூன்றுகை மாசேனையோம்* (SII,v,753.)

மூன்று நியாயம் (பெ) பால் கொடுப்பன, சினையடைந்தன, கன்று என்ற மூன்று (916) *சாவா மூவாப்பேராடு மூன்று நியாயத்தான் நூறு இவ்வாட்டுக்கும்* (EI,xxiii,45 (c).)

மூன்று படை (பெ) மூன்று பிரிவுகளை உடைய படை (1218) *சோழவளநாட்டு மூன்றுபடை பொற்கோயில் கைய்க்கோளரோம்* (IPS,248.)

மூன்று வினைப்பள்ளி (பெ) இரதகாறர் அல்லது கம்மாளர் இயங்குமிடங்கள் (1800) *மேலையூர் உடந்கூட்டமும் மூன்று வினைப்பள்ளி நால்வகை அறுவகைத் தொழில்* (IPS,972.)

மூன்று ஸந்தி₄ (பெ) காலை, உச்சி, மாலை என்ற மூன்று வேளை (937) *யோகி₂கள் இருவர் மூன்று ஸந்தியும் திருவாராதனஞ் செய்வார்க்கு* (SII,viii,624.)

மெ

மெக்கண்டு (= மெய்க்கண்டு) (967) *இந் நெல் தண்டுவார்க்கு மெக்கண்டு சோறு குடுப்போமானோம் நென்மலி ஸபை₄யோம்* (EI,vii,20 (h).)

மெப்பாட்டுத் தீட்டு (பெ) இசைவுத் தீட்டு (1273) *நானும் என் வங்க்ஷத்தாரும் நான் பண்டாரத் திட்ட மேப்பாட்டுத் தீட்டின் படியே நெய்யளக்கக் கடவேனாக* (SII,xii,238.)

மெய் (பெ) உண்மை (1224) *எழில் மேற்பாடி மெய்த்தவத்தால்* (SII,iv,317.)

மெய் (பெ) உடம்பு (800) *வேன் மாறன் மெய்* (EI,xiii,10.)

மெய் (பெ) ஓர் ஆள் (892) *மெய்யால் ஆழாக்குச் செய்து* (SII,vi,371.)

மெய்க்கண்டு (வி) நேரில் ஆட்களை எண்ணி (1018) *மன்றாடி அமராவன் வன்றொண்டனேன் நிசத மெய்க்கண்டு சோறு குடுப்பேனாகவும்* (SII,viii,6.)

மெய்க்காட்டி (வி) நேரில் வந்திருந்து (982) *பிராட்டியார் திருநாளான சித்திரைத் திருக்கேட்டை நாள் மெய்க்காட்டி உண்பதாக* (SII,xix,311.)

மெய்க்காட்டுத் தீட்டினார் (பெ) நேரில் வந்திருந்தவர் (970) *ஒரு காற் கொண்டாரல்லாதாரை மெய்க்காட்டுத் தீட்டினார் எல்லாரும் தம்மில்* (SII,xiii,250.)

மெய்க் கீர்த்தி (பெ) கல்வெட்டுகளில் அரசனின் புகழ் கூறும்பகுதி (1195) *பெரும்புவி விளங்க வெந்நும் சீமெய்க்கீர்த்தி முடிய எழுதிய* (SII,vii,942.)

மெய் காப்ப (வி) காவல் செய்ய (905) *நெடுங்கட் டிசை மகளிர் மெய் காப்ப* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

மெய் காப்பார் (பெ) கோயில் காவலர் (978) *திருமெய் காப்பார் மூவற்குப் புடவை முதலுட்ப்பட* (SII,iii,151,151a.)

மெய்காப்பான் (பெ) காவல் செய்பவன் (942) *எச்சபெருமான் மெய்காப்பான் கோயிநல்லூர்* (SII,iii,105.)

மெய்காப்பு (பெ) கோயில் காவல் (1001) *புதுப் பேறூர் ஒரு மெய்காப்பு மருதூர் ஒரு மெய்காப்பு* (SII,vii,858.)

மெய்து (வி) நீர் வார்த்து (759) *கூத்திகளை மெய்து குடுத்தேன்* (SII,iv,827.)

மெய்ப் பூட்டுத் தீட்டு (பெ) பொறுப்பேற்பு ஆவணம் (1259) *பெரியநாட்டுக்கோனும் இந்நால்வரோம் மெய்ப் பூட்டுத் தீட்டுக் குடுத்த பரிசாவது* (SII,v,480.)

மெய் பூச்சு (பெ) விக்கிரகத்தின் மீது பூசும் சந்தனம் முதலிய பூச்சு (942) *திருமெய் பூச்சுச் சந்தனத்துக்கும் சிதாரிக்கும்* (SII,v,713.)

மெய்ம்மட்டி (பெ) நட்டுவத்துக்கு மிருதுங்கம் அடிப்பவன் (1009) *கரணனுக்குப் பங்கு இரண்டும் மெய்ம்மட்டிக்குப் பங்கு இரண்டும்* (CHEN,xxi,p.425-28.)

மெய்ம்மை (பெ) உண்மை (966) *பனுவற் பயன்களும் மெய்ம்மையுணர்ந்...* (SII,xiv,87.)

மெய் வேற்று வகை (பெ) தனித் தனியாக (844) *பணிமக்கள் முட்டிப்பார் மெய்வேற்று வகையால்* (TAS,ii,p.13-14.)

மெய் வேறு (பெ) தனித் தனியாய் (850) *மெய் வேறாயிரங் காணமிட வொட்டிக் குடுத்தோம்* (SII,vii,80.)

மெலிவு குறை (பெ) குறைப்பாடு (1453) *மல்லாயிக்கும் பொன்னன் உள்ளிட்டாற்கும் சீ பண்டாரத்திலும் ஆக மெலிவு குறை உண்டானதும் தீர்த்து* (IPS,793.)

மெழுக்கடிகள்மார் (பெ) கோயிலைச் சாணத்தால் மெழுகுபவர் (990) *எண்ணெய் நாழி உழக்கு இவை பிடிப்பார் மெழுக்கடிகள்மார் நால்வர்* (SII,v,625.)

மெழுக்கின (வி) தூய்மைப்படுத்தின (815) *திருக்கோ இல் மெழுக்கின* (IPS,241.)

மெழுக்குப் புறம் (பெ) கோயில் தூய்மைப்படுத்தும் பணிக்கு விட்ட நிலம் (862) *மெழுக்குப் புறம் ஒரு மூன்று ம் ஆவும்* (SII,xiv,45.)

மெழுக்குவார் (பெ) சாணத்தால் மெழுகுவார் (879) *அம்பலம் மெழுக்குவார்க்கு* (SII,xiii,187.)

மெழுகு (பெ) பொன்னின் மாற்றுப் பார்க்கும் மெழுகு (932) *அற்றைக் கற்றைக்கு உரைத்த மெழுகு* (SII,vi,295.)

மெழுகுகின்ற (வி) தூய்மைசெய்கின்ற (815) *மெழுகுகின்ற தவசி* (IPS,241.)

மெழுகுவதற்கு (வி) தரையை சாணம் முதலியவற்றால் பூசுதற்கு (1005) *ஆட்டொருக்கால் அழிவு சேராது மெழுகுவதற்கும் ஆக வைத்த* (SII,vii,34.)

மெழுகுவாள் (பெ) சாணத்தால் மெழுகி சுத்தம் செய்பவள் (916) *அம்பல நகரத்தான் மெழுகுவாளுக்கு* (EI,xxiii,45 (c).)

மென்செய் (பெ) நன்செய் (911) *கீழ் எல்லையில் புன்செயும் மென்செயும் அன்றியே* (SII,viii,640.)

மென்வகைச் சுங்கம் (பெ) ஒரு விற்பனை வரி (1300) *மாறும் மென்வகைச் சுங்கம் தீரும் பண்டங்களுக்கு ஒன்றுக்கு* (AVNM,6,p.36-40)

மே

மேக்கு (பெ) மேற்கு (771) *நகரூரெல்லைக்கும் மேக்கும்* (EI,xvii,16.)

மேக்கை (பெ) மேல்பக்கம் (1245) *வடக்கு நோக்கிப் போகிற ஸபைப் பொது மேக்கையிலே வழி திறப்பாக கிடப்பதாகவும்* (IPS,341.)

மேகடம்பகம் (பெ) ஒரு வகை வாத்தியம் (1066) *தாரையும் பேரியும் மேகடம்பகமும் வெண்சாமரையுஞ் சுகரக் கோடியும்* (SII,v,976.)

மேகம் (பெ) மழை மேகம் (800) *மேகங்கொண்டான்* (EI,xiii,10.)

மேச்சு (வி) மேய்த்து (1002) *ஆடு நாற்பதைஞ்சு இவ்வாடு மேச்சு* (SII,vii,413.)

மேட ஞாயிறு (பெ) மேஷராசியில் சூரியன் இருக்கும் மாதம்: சித்திரை மாதம் (954) *மீனத்தில் வியாழந் நின்ற மேட ஞாயிற்று* (TAS,p.169-71.)

மேடு (பெ) மேட்டு நிலம் (911) *மேடும் பள்ளமும் ஒப்பித்து* (SII,viii,640.)

மேதகு (இ) சிறந்த (905) *மேதகு நடையாட்டி குளத்தில் சாலநீர் கோளுக்கும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

மேதவம் (பெ) தெய்வ வசப்படுதல் (889) *பட்டை போத்தன் மேதவம் புரிந்ததென்று படாரிக்கு நவக்கண்டங் குடுத்து* (SII,xii,106.)

மேந் தோன்றி (வி) மேலாக விளங்கி (921) *பழுதற தானாராய்ந்து பண்டிதரில் மேந் தோன்றிஉம்* (SII,iii,206 (a).)

மேநடை (பெ) இதற்கு முன் நடைமுறையிலிருந்த படி (978) *இவ் வாய்க்கால் மேநடை நீர் பாயப் பெறுவதாக* (SII,iii,151-151a.)

மேநாயகம் (பெ) மேற்பார்வை (965) *ப்ரஹ்மா திராயர் மேநாயகத்து திரைமூர் ஸபையாரும் ஊராரும் திருவிடைமருதில் நகரத்தாரும்* (SII,xiii,195.)

மேநீர் (பெ) முதல் நீர்: தலை நீர் (1016) *இன்நிலத்துக்கு முன்நுடைய மேநீரும் கீணீரும் நீர்க்கீய் விலையும்* (SII,iii,54.)

மேம்பட்ட (வி) சிறந்த (950) *வெல் வேந்தரில் மேம்பட்ட* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

மேம்படு (பெ) சிறந்த (950) *மேம்படு சீர் அரையன் விரையாச் சிலை உம்* (TASSI,1962-65,p.32-52.)

மேய்பாழ் (வி) கால்நடை உணவுக்கு மேயும் நிலம் (1550) *களரும் கன்று மேய் பாழும்* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

மேய்த்து (வி) வளர்த்து (1004) *சாவாமூவாப் பேராடு தொண்ணூறு தொண்ணூறும் சாவாமைக் கெடாமை மேய்த்து* (SII,v,854.)

மேய்ந்து (வி) கூரை வேய்ந்து (1243) *இவர் செய்த காழிக் கற்பகம் குகைகட்டி மேய்ந்து* (SII,viii,205.)

மேய்ப்பான் (பெ) கூரை வேய்வான் (849) *மனை மேய்ப்பான் கொள்ளுமிறையும்* (TAS,ii,p.67-68.)

மேய்யாட்சி (பெ) (=மீயாட்சி) (1100) *இவ்வாண்டு முதல் காராண்மை மேய்யாட்சி உட்பட தேவதான இறையிலியாக* (TAS,vi,3.)

மேர்வை (பெ) வரி (பொதுப்பெயர்) (1448) *நாங்கள் வாங்கு முதல் கட்டிகை மேர்வை நிருபச்சம்படி மற்றும்* (ARE,1923,370)

மேராம் (பெ) வரி (பொதுப்பெயர்) (985) *மிலாடும் வாணகப்பாடியும் [மேரா]முஞ் சுங்கமும் பாட்டத்துக்கு ஆழ்கின்ற* (SII,xix,351.); (1056) *குமரக் கச்சாணமு மீன் பாட்டமும் [மேரா]மும் இலை வாணியப் பாட்டமும்* (TAS,i,p.164-68.)

மேராமை (பெ) (= மேர்வை) (1600) *பாடிகாவல் தலையாரி மேராமை எப்பேர்பட்ட சகலவரிகளும் கொள்ளக்கடவது* (SII,vii,108.)

மேராழி (பெ) ஒரு வரி (1224) *பட்டிப் பொன் மேராழி பறை இறை பொன் புழுகுவரி* (SII,iv,648.)

மேரு (பெ) மேரு மலை (800) *நெடு மேரு நெற்றிப் பொன் போல்* (EI,xiii,10.)

மேல் (பெ) மேற்கு (550) *இன்னும் மேல் பாலெல்லை* (TASSI,1958-59p.41-83; PLCP,p.26-32.)

மேல் (இ) மீது (591) *கீழ் வேணாட்டுத் துடரிமேல் விலக்கு மிறையார் வந்த ஞான்று* (CHHS,1971/96.)

மேல் (இ) பேரில் (731) *மகிழரேத்தது மேல் உடைய அஞ்ஞூற்றுக் காடியும்* (SII,viii,331.)

மேல் (இ) அதிகமாக (765) *அஷ்டசதத்தின் மேல் பணியால் ஏறின பங்கு* (EI,xxxvi,20.)

மேல் (இ) இதற்கு முன்னால் (877) *பஹிபூமியாக கொண்ட நிலம் சுட்டி மேல் சொல்லப்பட்ட குரவசிரீ ராமதேவ பட்டனையும்* (SII,vi,370.)

மேல் (இ) இனிமேல் (961) *இவ்வோலைப் பட்டுக் கெட்டமையில் இவ்வோலை மேற்றோன்றுபடில்* (SII,iii,175.)

மேல்கு (பெ) மேற்கு (796) *கன்றுமே கழனியாக விற்றுக் கொண்ட நிலத்துக்கெல்லை மழியை நல்லூழார் தோட்டத்தின் மேல்கும்* (MASI,xxvi,p.10-11;SII,xii,38.)

மேல் கொண்டு (வி) ஏறி (921) *தனிரணோதைய மேல் கொண்டும்* (SII,iii,206 (a).)

மேல்ச் சாந்தி (பெ) முதன்மைப் பூசை (1000) *பொன்னினால் மேல்ச் சாந்தி செய்யின்றவரள் இருவர்க்கு* (TAS,ii,p.173-207.)

மேல்தண்டு (பெ) ஒரு வரி (1346) *வெட்டி வீடாரம் கீழ்தண்டு மேல்தண்டு பூர்வாயம் அபூர்வாயம்* (EC,x,Mr.39.)

மேல் நோக்கி (வி) நிமிர்ந்து பார்த்து (921) *விருத்தராய் இருப்பார் ஒரு நம்பி மேல் நோக்கி எல்லா(ஜ்) ஜனமுங் காணும் ஆற்றால்* (ARASI,1904-05,p.131f.)

மேல்ப்படி (வி) முன் குறித்த (930) *மேல்ப்படியேய் பழந் தேவதாநத்துக் காலும்* (SII,viii,629.)

மேல்ப்படியாள் (பெ) மேலே சொல்லப்பட்டவள் (1005) *உண்ண வைத்தேன் காதன் னாச்சத் தேவியேன் மேல்ப் படியாள் வைத்த பதியே* (SII,viii,678.)

மேல்லாண்மை (பெ) (= மீயாட்சி) (500) *கலக் கிழமையும் மேல்லாண்மை கொண்டனவும் மவருடைய காலாசமும்* (AVNM,1,p.67-69)

மேல் வந்த (வி) எதிர்த்து வந்த (550) *கங்கரைசரு மேல் வந்த* (TAMIZ,1970,p.92-93.)

மேல்வரி (பெ) வரி வகை (1068) *கூத்திகாலும் மேல்வரி முதலாய் பெருங் கடமைகளும் உள்ளிட்ட* (SII,vii,467.)

மேல் வாரம் (பெ) நில விளைச்சலில் அரசாங்கத்தின் பங்கு (1051) *நீரா நிலம் வாசியும் உறைநாழியும் மேற்றி மேல்வாரம் ஒன்றும் கீழ்வாரம் ஒன்றையும்* (EC,ix,Dv.76.)

மேல் வாரம் (பெ) நிலத்தின் விளைவில் சொந்தக்காரருக்கு உரிய பங்கு (969) *ஸ்ரீகரணப் பெருவிளாகத்து நெல் மேல்வாரம் திருச்சுற்றும்* (SII,xix,27.)

மேலன்றி தாழ்த்தி (764) *இவ்வறத்து மேலன்றிப் பேசினான்* (TAMIZ,1970,p.124.)

மேலாநார் (பெ) உயர்ந்தோர் (1278) *திருவுஞ் செயமுந் திசையனைத்துஞ் செல்ல வெருவும் பகைசெகுத்து மேலாநார் மருவ* (EC,x,Sd.110.)

மேலாறு (பெ) நல்ல வழி (1012) *மாமுப்பத்திரண்டு மேலாறுணர்ந்த நாலாறெண்பயில் அந்தணர் அனைவர்க்கு* (SII,vii,863.)

மேலெல்லை (பெ) மேற்குத் திசையிலுள்ள எல்லை (772) *வடவரம்புக்கு வடக்கும் மேலெல்லை வைகுந்த வளாகத்துக்கேய் போனவழிக்கு கிழக்கும்* (SII,xiv,19.)

மேலேய் (இ) எழாம் வேற்றுமை உருபு (833) *பதிதோறும் விளங்குக பாரின் மேலேய்* (SII,xiv,44.)

மேலேற்றம் (பெ) கூடுதல் (1039) *கணக்கெழுதி வருவான் ஒருவனுக்கு மேலேற்றம் கணக்கெழுதுவான் ஒருவனுக்கு* (SII,viii,68.)

மேலை (இ) மேற்கிலுள்ள (870) *கிடந்தாழியின் மேலை அரைமாவுமாக* (SII,xix,163.)

மேலோடி (பெ) மேல்வாரம் (1000) *எனாதிவாழ்க்கையும் வெண்ணத்தடமும் மூவாயிரக் கலமும் அருஞ்சொன்று மேலோடி கொள்விது* (TAS,ii,pp.173-207.)

மேவலோர் (பெ) பகைவர் (771) *மேவலோர் கடற்றானைஒடேற்று* (EI,xvii,16.)

மேவு (இ) மிகுதியான (1045) *வேணாட்டரசை சேணாட் டொதுக்கி மேவு புகழ் இராமகுடம் மூவர் கெட* (SII,iv,537.)

மேவு (வி) பொருந்து (833) *சீர் மேவு திருமாலேரியு* (SII,xiv,44.)

மேவுற (வி) பொருந்த (1229) *க்ராமத்தில் க்ராமாதிகாரம் உள்ளவாள்கன்றி மேவுற வொற்றியும் விலையும் கொடாப் போமாகவும்* (KANDT,1968/160.)

மேழி (பெ) உழவுத்தொழில் செய்யும் வேளாளர் (1073) *தேசமெல்லாந் திருமேழி கூடிவந்து நிரந்த* (EC,x,Mb.49 (a).)

மேழி (பெ) கலப்பை (1197) *ப்ராஹ்மணிபுர சேவகப் பற்று என்னாதே மேழி பிடித்துழக் கடவரெல்லாரும் விடக் கடவராகவும்* (SII,v,496.)

மேழித் தோரணம் (பெ) கலப்பை அடையாளம் உடைய அலங்காரத் தொங்கல் (1168) *இத்திருமுற்றத்திலெ ஸ்ரீபூமி பிராட்டியை எழுன்தருளிவித்து மேழித் தோரணம் சாத்தி* (SII,viii,291.)

மேளிக் கொடி (பெ) (= மேழிக் கொடி) (1366) *அன்னக் கொடி மேளிக் கொடி யாளிக் கொடி* (TAS,viii,p.20-22.)

மேற்கட்டி (பெ) பந்தலுக்குக் கட்டும் துணி (887) *ஸ்ரீ மடைப்பள்ளிக்கட்டு மேற்கட்டிக்குப் புடவை* (SII,xiv,16 (a).)

மேற்கட்டி வரி (பெ) ஒரு வரி (1339) *இனவரி மேற்கட்டிவரி சீவிதக் கார்த்திகைக்கு இடும் பணம்* (AVNM,7,p.60-61)

மேற்கு (பெ) சூரியன் மறையும் திசை (550) *கீழைக் கடற்றின் மேற்கும் ஓமைக் கொல்லை* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

மேற்கெழுந்தருளின (வி) இறந்து போன (957) *மேற்கெழுந்தருளின தேவர் கண்டராதித்ய தேவர்* (SII,xix,11.)

மேற் தலை (பெ) மேற்குப்பக்கம் (1000) *வீரசங்காதந் மேற்தலை யடையக் காணி அரைக்காணியும் ஆக* (EI,xxx,19 (iii).)

மேற்ப்பட்ட (வி) கூறப்பட்ட (988) *ஸ்ரீ முகத்தின் மேற்ப்பட்ட மலையனூர் ஆன பாப்பநச்சேரி* (EI,xxi,27.)

மேற்படி (பெ) மேலே கூறப்பட்ட படி (768) *நியதி நெய் உரி ஆக மேற்படி செலுத்துவதாக* (SII,xiv,27.)

மேற்படியாள் (பெ) முன் குறிக்கப்பட்டவன் (935) *மேற்படியாள் சித்திரக் கோமளம்* (EI,vii,19 (a).)

மேற் பாதம் (பெ) முன்னுள்ள செய்யுளடிகள் (970) *இராஜைஜமிநிகள் ஸாமவேதத்து மேற்பாதத்து ஒரு துருவும் கீழ் பாதது ஒரு துருவும்* (SII,xiii,250.)

மேற்பாதி (பெ) மேல்வாரம்; விளைச்சலில் நிலச் சொந்தக்காரருக்குரிய பங்கு (960) *கண்ணம் புறையன் இப்பூமி மேற்பாதியும் ....பணியுங் கொண்டு* (TAS,iii,p.159-69.)

மேற்பாதி மீதாட்சி (பெ) மேல் வாரம் (866) *மேற்பாதி மீதாட்சி உள்ளடங்க அட்டிக் குடுத்தான்* (TAS,i,p.1-14.)

மேற் புகுதக் கடவ (வி) இனிமேல் சேரக் கூடிய (1068) *அந்தராயங்களும் மேற் புகுதக் கடவ அந்தராயமும் கம்மாள மகழ்மையும்* (SII,vii,467.)

மேன்மை (பெ) சிறப்பு (1202) *வேதமும் தமிழும் மேன்மையில் விளங்க* (TAS,viii,p.26-28.)

மேனடை (பெ) பழைய வழக்கப் படி (1008) *இன்னிலத்துக்குப் பாயும் வாய்க்கால்கள் மேனடை நீர் பாயவும்* (EI,xxii,34.)

மேனாயகம் (பெ) மேற் பார்வைப் பணி (937) *ஸ்ரீகார்யம் ஆராய்கின்ற காரிய் நக்கனார் மேனாயகத்து இட்ட* (SII,xxiii,258.)

மேனாள் (பெ) முன்னாள் (771) *மேனாணின் குரவரால்* (EI,xvii,16.)

மேனி (பெ) விழுக்காடு (1238) *மாத்தால் கீழிறை பழங் காசுக்கு எழுமேனி திரமும்* (IPS,319.)

மேஷ நாயறு (பெ) சித்திரை மாதம் (969) *இவ்வாட்டை மேஷநாயறு நாயற்றுக் கிழமை பெற்ற திருவோணத்தி னான்று* (SII,xix,27.)

மை

மை (பெ) குற்றம்; கருநிறம் (1171) *மைய்யுடையன நெடு வரையே* (SII,xvii,592.)

மை (பெ) கண்ணுக்குத் தீட்டும் மை (1905) *மைப்படு கண் மட மகளிர்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

மைக்கீத்தி (பெ) மெய்க் கீர்த்தி (1168) *செய்த ப்ரமாணப்படி ஸ்ரீ மைக்கீத்தி எழுதி த்ரிபுவநச்சக்கரவத்திகள் ஸ்ரீ ராஜாதிராஜ தேவர்க்கு* (SII,viii,204.)

மைச்சுனி (பெ) மனைவியின் உடன் பிறந்தாள்; மாமன் அல்லது அத்தை மகள் (1263) *அன்னல தேவன் மைச்சுனி செல்பக்கன்* (SII,xii,218.)

மைஞ்ஞை (பெ) மயில் (1134) *படி தோற்கு மாதர் மைஞ்ஞையும் பிருதி குலந்தனி விளங்க* (SII,v,645.)

மைந்தர் (பெ) மக்கள் (1171) *தாயரில்லோர் தாயராகியு மைந்தரில் லோரு மைந்தராகியும்* (SII,xvii,592.)

மைந்தர் (பெ) இளைஞர் (785) *கண்ணம்புகளாற் பொர மைந்தர் புலம்பெய்தும்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

மைய்யச் சய்யம் (பெ) பாண்டி நாட்டிலுள்ள ஒரு மலை (?) (1094) *முத்திந் சலாபமும் முத்தமிழ்ப் பொதியினும் மத்த வெங்கரிபடு மைய்யச் சய்யமும் கந்நியுங் கைக்கொண்டு* (TDI,i,23.)

மொ

மொகலியன் (பெ) மௌத்கல்ய கோத்திரத்தைச் சேர்ந்தவன் (983) *மொகலியன் செருமன் நாராயணனுக்கும்* (SII,xix,321.)

மொட்டு (பெ) நகையின் முகப்புப் பகுதி (991) *பள்ளித்தொங்கல் 1 இதில் தச்ச மொட்டொன்று பறளை 1* (SII,xiii,144.)

மொட்டு (பெ) பூ அரும்பு (1014) *பெருஞ்செண்பக மொட்டுக்கும்* (SII,ii,24.)

மொட்டைக் கிணறு (பெ) கைப்பிடி சுவர் இல்லாத கிணறு (1018) *இவ்வெல்லையில் மொட்டைக் கிணறென்னுங் கிணற்றின் மேல் கரையே* (SII,iii,205.)

மொய் களம் (பெ) போர்க்களம் (1100) *பஞ்சவரைவர் பொருத மொய் களத்தஞ்சி* (SII,iii,73;TAS,p.244-46;TAS,vi,11.)

மொய்ம்பு (பெ) வலிமை (800) *தஞ்சைக் கோன் கோளாளி மொய்ம்பிற் கொடும்பாளூர்* (EI,xiii,10.)

மொழி (பெ) சொல் (800) *பால் கொண்ட செவ்வாய் விளையா மொழி* (EI,xiii,10.)

மொழி பொருள் (பெ) பேச்சு (1058) *வளவனென்னும் மொழி பொருள் கேட்டு* (SII,viii,1.)

மோ

மோக்ஷ சம்பத்து (பெ) முத்திப் பேறு (1344) *முடிவிலே அம்ருத மஹாநிர்வாணம் என்று சொல்லப்பட்ட மோக்ஷ சம்பத்தையும் பெறுவார்கள்* (UCR,xviii,p.16-23.)

மோடு (பெ) மேடு (905) *மோடெழுந்த முதுகொம்பர்க் கோடெழுந்து* (TASSI,1962-65,p-1031; PNDCP,p.95-115.)

மோத்தை (பெ) ஆண் ஆடு (1192) *பொலி மோத்தையும்* (SII,viii,381.)

மோதிரம் (பெ) வளையம் (1014) *ஸ்ரீ கங்கில் ஒன்றும் குழல் இரண்டும் மோதிரம் அஞ்சும் உடைய பொன்னின் காளங்கள்* (SII,ii,1.)

மோது (வி) அலைக்கும் (1012) *புது மத கிடறிப்ப் போர்க் கலிங் கிடந்து மோது மோது திரை விலகி* (SII,vii,863.)

மோர் (பெ) தயிர் கடைந்த மோர் (941) *மோர்க்கு நெல் நிசதி பதிநைங் காடியாக எழுபத்தெழு காடியும்* (SII,viii,529.)

மோர்வியம் (பெ) ஓர் இசைக்கருவி (1042) *பராந்தக தேவீச்வரத்து நட்டவக் காணியும் மெய்மட்டுக் காணியும் மோர்வியக் காணியு முன்பு காணி உடைய* (SII,v,579.)

மோர்வியன் (பெ) மோர்விய இசைக்கலைஞன் (934) *கரணனுக்கு மோர்வியனுக்குங் பதினாறு கலம்* (TAS,viii,43-44; EI,xxviii,37.)

மோவாய் (பெ) தாடை (1213) *கோமாங்சத்தை தின்றானுமாய் மோவாய்புக்கு முலையெழுந்தானுமாய்* (SII,viii,148.)

மோனம்பாட்டம் (பெ) வரிவகை (1273) *தறியிறை செக்கிறை தட்டொலி தட்டார்ப்பாட்டம் பாசிப்பாட்டம் மோனம் பாட்டம் காணிக்கை கார்த்திகைப்பச்சை* (SII,vii,145 .)

மௌ

மௌலி (பெ) மகுடம் (1012) *செஞ்சுடர் மௌலி* (SII,vii,863.)

ய

யக்கா படாரி (பெ) (=யக்ஷி) (875) *புதுக்கி யக்கா படாரி திருக்கோயில் லெடுப்பித்து* (TAMIZ,1970,p.1-25.)

யக்ஷ ப₄டாரர் (பெ) (=யக்ஷர்) (958) *வைகளூர்த் திருமலை யக்ஷப₄டாரர்க்கு* (SII,xxii,65.)

யக்ஷி (பெ) சமணரின் சிறு (பெண்) தெய்வம் (1000) *ஸ்ரீ கடைக்கோட்டூர்த் திருமலைப் பரவாதி மல்லவர் மாணாக்கர் அரிஷ்டநேமி ஆசார்ய்யர் செய்வித்த யக்ஷித் திருமேனி* (SII,i,73.)

யக்ஷர் (பெ) சமணரின் சிறு (ஆண்) தெய்வம் (1200) *அதிகைமான் எழினி செய்த த₄ர்ம்ம யக்ஷரையும் யக்ஷியாரையும் எழுந்தருளுவித்து எறமணியும் இட்டு* (EI,vi,34 (a);SII,i,75.)

யசுர்வேதி (பெ) யசுர் வேதம் ஓதி அறிந்தவன் (1024) *ஸாமவேதி ஒருவனுக்கும் யசுர்வேதி ஒருவனுக்கும் தக்ஷணைக்குப் பேரால் காசு* (EC,x,Kl.112 (a).)

யஜ்ஞ வித்₃யை (பெ) வேள்வி அறிவு (785) *யஜ்ஞ வித்₃யையெடெஞ்சாத சாஸ்த்ரங்களை* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

யஜமானன் (பெ) சிவனின் எட்டு மூர்த்திகளில் ஒன்று (905) *கனல் இரு சுடர் யஜமானன் ஆகிய திறல் அஷ்ட மூர்த்தி* (TASSI,1965-65,p.1-31; PNDCP,p.95-115.)

யஜுர் வேதம் (பெ) நான்கு வேதங்களுள் இரண்டாவதாகச் சொல்லப்படும் வேதம் (1068) *யஜுர்வேதம் ஓதும் ப்₃ராஹ்மணர் பதிநமரும்* (EI,xxi.38.)

யத்நம் (பெ) முயற்சி (1168) *அத்₃ருஷ்ட முகத்தாலே வேண்டும் யத்நம் பண்ணுகிறோம் என்றருளிச் செய்து* (SII,vi,456.)

யமநிகை (பெ) திரை (1011) *யமநிகை புடவை இரண்டுக்கு* (SII,v,724.)

யா

யாகசாலை (பெ) வேள்விச்சாலை (771) *பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி* (EI,xxiii,16.)

யாக மண்டபம் (பெ) வேள்வி செய்யும் மண்டபம் (1000) *திருவல்ல வாழப்பந் பிரதி முகத்து யாக மண்டபத்தில் வச்சு ஊரார்* (TAS,ii,p.173-207.)

யாக வேழ்வி (பெ) யாகமாகிய வேள்வி (1192) *வானவர்க் கமைத்த யாக வேழ்வி* (SII,v,301.)

யாங்கள் (பெ) நாங்கள் (768) *இந்நெல் யாங்கள் கொண்டு* (SII,xii,34.)

யாங்ஙனம் (வி) எவ்வாறு (1051) *ஆங்கவர் மார்விட ஆகவமல்லன் யாங்ஙனம் அஞ்சிந* (SII,vii,1046.)

யாண்டு (பெ) ஆட்சியாண்டு (550) *ஸிம்ஹ வர்ம்மற்கு யாண்டாறாவது* (TASSI,1958-59,p.41-83.)

யாத்திரை (பெ) படையெடுப்பு (815) *சோழநாட்டிடவை யாத்திரை செய்த* (SII,xiv,26.)

யாதானும் (பெ) எதுவும் (1070) *இந்நிலம் உழுங்குடிகளை யாதானும் ஒரு குடிமை காட்டாதொழிவிதாகவும்* (TAS,iv,p.131-34.)

யாதும் (பெ) எதுவும் (1074) *திருமாலாதிக் கேழலாகி எடுத்தந யாதும் சலியா வகையில் இனி தெடுத்த* (SII,viii,701.)

யாப்பு (பெ) கட்டு (1000) *சுற்றத்திடரிடை யாப்பவிழ்த் தென்னைப் பணி கொள்* (SII,iv,167.)

யாபிச்சு (வி) அனுபவித்து (1147) *ஆசந்த்ரதாரமே சந்ததிப்ரவேசமே கையாண்டு யாபிச்சு குறதீர்த்து நடந்து கொள்ளுமாறும்* (TAS,viii,p.7-8.)

யாம் (பெ) நாங்கள் (800) *பண்டெலாம் யாமறிதும் எங்கயர்க்கேய்* (EI,xiii,10.)

யாமம் (பெ) சாமம் (800) *அர்த்த₂த யாமத் திருவமிது* (TAS,iii,p.200-03.)

யாமளம் (பெ) சக்தி பூசையைப் பற்றிக் கூறும் ஒரு தாந்திரிக நூல் (1072) *வ்யாகரணமும் யாமளமும் வக்காணிப்பான் ஒருவநுக்கு நாள் ஒன்றுக்கு நெல் குறுணியாக* (EC,x,Kl.106d)

யாவர் (பெ) எவர் (1168) *பூசலிலே பட்டு ஓடிப் போகைக்கு மீள யாவர் சிலர்* (SII,vi,456.)

யாவர் (பெ) எவர் (808) *இத்₃தர்மத்துள்ளார் யாவரேனுங் கோச் சேவது செயிது செலுத்த வொட்டி குடுத்தோம்* (EI,viii,29.)

யாளி (பெ) யானையின் தந்தமும் துதிக்கையும் சிங்கமுகமும் உடைய ஒரு விலங்கு (1014) *இலைச் செப்பு ஒன்று யாளிக்கால் நாலும் மூழலும் உட்பட பொன் நூற்று நாற்பத்து எழு கழஞ்சு* (SII,ii,1.)

யான் (பெ) நான் (755) *யான் இவர் பக்கல் விலைக்கு கொண்டுடையன* (SII,vi,356.)

யானுடையது (பெ) நான் பெற்றுடையது (913) *நான் நாலூர் லக்ஷணத்தினால் யானுடையது* (SII,xix,161.)

யானை (பெ) ஒரு விலங்கு (771) *மற்றவன் வெளிற்பட்டுச் சூழியானை செலவுந்தி* (EI,xvii,16.)

யி

யிரத காற (பெ) (=ரதகாரர்) (1383) *அறுவகைத் தொழில் யிரதகாற சமைய சங்கேதிகளும்* (IPS,972.)

யிருசிகள் (பெ) முனிவர் (1400) *யிருசிகளையும் யிங்சை பண்ணிந தோசத்திலெ போகக்கடவர்* (NI,G.106.)

யு

யுக்தன் (பெ) அறிவாளி (800) *வேத$_{4}$ம் வல்லனா யுக்தனாகிய ப்$_{3}$ராஹமணன்* (SII,iv,355.)

யுகம் (பெ) ஊழி (1121) *வேதமும் மெய்ம்மையும் ஆதியுகம் போல் தலைத்தலை சிறப்ப* (SII,xvii,605.)

யுகாந்தரம் (பெ) ஊழி முடிவு (1122) *...தாகவும் யுகாந்தரமளவும் நிற்பதாக அருளிச் செய்ய* (EZ,iii,33 (i),p.305-6.)

யுகா$_{3}$தி (பெ) ஆண்டுப் பிறப்பு (1495) *தீபாளிகை யுகா$_{3}$தியிலும் ஸ்ரீ கருண மண்டபத்தில்* (TDI,ii,132.)

யுவ (பெ) 60 ஆண்டுகளுள் ஒன்று (1155) ... *ப்ருதி$_{2}$விராஜ்யம் பண்ணியருளா நிற்க யுவ ஸம்ஸரத்து தைமாஸத்து* (EC,iii,Sr.76.)

யெ

யெலவை (பெ) ஒரு வரி (1200) *வீர சோழ நல்லூர் குடுத்து இவ்வூரால் வந்த யிறையும் யெலவையும் உகவையும் கொள்ளாதோமாக விட்டு* (SII,iii,26.)

யோ

யோகம் (பெ) நல்ல பயன் (1000) *கழிக்கும் இது மெய்ம்மை கை கண்ட யோகங் கடலிடத்தே* (SII,iv,167.)

யோகிநி யோகேச்$_{0}$வர பூஜை (பெ) சக்தி வழிபாடுகளில் ஒன்று (1072) *நெல் நானாழி யோகிநியோகேச்$_{0}$வர பூஜைக்கு மத்தியபாநம் இருகலத்துக்கு நெல்* (EC,x,Kl.108.)

யோகியர் (பெ) கோயில் பூசை செய்யும் துறவியர் (928) *திருவாராதினை செய்யும் யோகியர்க்கு* (SII,xix,414;IPS,63.)

யோகி$_{3}$ (பெ) தவ நிலையுடைய பெரியார் (937) *யோகி$_{3}$கள் இருவர் மூன்று ஸந்தி$_{4}$யும் திருவாராதனஞ் செய்வார்க்கு* (SII,viii,624.)

யோகு (பெ) ஆழ்ந்த தியானம் (1258) *அறிவரியா அருந்தவத்தோன் யோகழிப்ப வெகுண்டெழுந்த கருப்பு வில்லி* (SII,xvii,545.)

யோக்$_{3}$யதை (பெ) நேர்மை (1016) *வேத$_{4}$ம் வல்லாநாய் யோக்$_{3}$யதை யுடையநாய் இருப்பாநொரு ப்$_{3}$ராஹ்மணநை* (SII,vi,313.)

யோக்$_{3}$யம் (வி) தகுதி (1222) *விக்கிரயங்களுக்கும் யோக்$_{3}$யமாக செம்பிலும் சிலையிலும் வெட்டிக் கையாண்டு* (SII,v,733.)

யோக்$_{3}$யர் (பெ) நேர்மை உடையவர் (1014) *அடுத்த முறைகடவார் தாந்தாம் யோக்$_{3}$யர் அல்லாது விடில்* (SII,ii,65.); (927) *வேதமும் அர்ச்சிநாவித$_{4}$மும் வல்லனாய் யோக்$_{3}$யனாய் உள்ளானொரு ப்$_{3}$ராஹ்மணரை* (SII,xvii,475.)

யோனி (பெ) பிறப்பிடம் (905) *கமழ் மலர்க் கமலயோனி* (TASSI,1962-65,p.1-31.)

ர

ரக்கிக்கக் கடவர் (வி) காப்பாற்றுவாராக (1100) *எதிரங்க வீரனும் அவன் பெண்ணு பிள்ளையும் ரக்கிக்கக் கடவர்* (TAS,v,p.34-47.)

ரக்த பிந்து₃ (பெ) சிவப்புப் புள்ளி (1015) *வயிரம் பொறிவும் முறிவும் ரக்த பிந்து₃வும் காக பிந்து₃* (SII,ii,7.)

ரக்தாக்ஷி (பெ) 60 ஆண்டுகளுள் ஒன்று (1264) *ரக்தாக்ஷி ஸம்வத்ஸரத்துச் சித்திரை மாசமுதல்* (EC,x,Mb.40.)

ரக்தித்தார் (வி) காப்பாற்றினார் (1004) *இது ரக்தித்தார் ஸ்ரீ பாத₃ம் எந்தலை மேலின* (SII,vii,440.)

ரக்ஷா போகம் (பெ) காவலுக்காகக் கொடுக்க வேண்டிய பங்கு (973) *இடையீடும் ரக்ஷிச்சு கொடுத்து ரக்ஷாபோகங் கொள்ளக் கடவியர் பொதுவாள்மார்* (EI,ix,32;TAS,iv,p.1-11.)

ரக்ஷிக்கின்ற (வி) காக்கின்ற (988) *இத₄ர்ம்மம் ரக்ஷிக்கின்ற மஹாஸபை₄யார்* (EI,xxi,27.)

ரக்ஷிச்சு (வி) காத்து (973) *அயுரூர் முக்கால் வட்டமும் பட்டாரக் கொள்ள இடையீடும் ரக்ஷிச்சு கொடுத்து* (EI,ix,32;TAS,iv,p.1-11.)

ரக்ஷித்தமை (வி) காப்பாற்றுகை (898) *அப்பரிசே ரக்ஷித்தமையில்* (EI,iii,38 (a).)

ரக்ஷித்தார் (பெ) காப்பாற்றியவர்கள் (731) *இத்தர்ம்மம் ரக்ஷித்தாரடி* (SII,viii,331.)

ரக்ஷிப்பது (வி) காப்பது (800) *கை காவலாய் புறநின்று ரக்ஷிப்பது* (TAS,iii,p.65-66.)

ரக்ஷிப்பாங் (பெ) (1090) *இது இரக்ஷிப்பாந் காலிற் பொடி எந் தலை மேலிது* (AVNM,7,p.32)

ரக்ஷை (பெ) காவல் (785) *இப்பொன் நாட்டார் ரக்ஷை* (SII,xiv,25.)

ரக்ஷைப் பட வேணும் (வி) காக்கப்பட வேண்டும் (1200) *ஊராத்துறையில் பரதேசிகள் வந்து இருக்கவேணுமென்றும் அவர்கள் ரக்ஷைப்பட வேணுமென்றும்,* (UCR,xxi,p.63-70.)

ரக்ஷைப் பொன் (பெ) காவலுக்குக் கொடுக்கப்படும் பணம் (1300) *நெல்லும் ரக்ஷைப் பொன்னும் கொண்டு* (TAS,iii,p.25-36.)

ரசாயந[ம்] (பெ) ஒரு வகை உணவு (1546) *தயிர் வட்டில் 1 ரசாயந வட்டில் 1 பால் குழம்பு வட்டில் 1 மோர் சட்டி 1* (TDI,v,78.)

ரத்ந கடகம் (பெ) இரத்தினக்கல் பதித்த கங்கணம் (1014) *ரத்ந கடகம் ஒன்றிற் கட்டின வயிரம் முப்பத்தாறும்* (SII,ii,93.)

ரத்நத் தய்யான் (பெ) மணிகளை வைத்துத் தைப்பவன் (1014) *கேரளாந்தகப் பெருந்தய்யானுக்குப் பங்கு ஒன்றும் ரத்நத்தய்யான் ஆச்சன் கருந்திட்டைக்குப் பங்கு* (SII,ii,66.)

ரத்ந த்ரயம் (பெ) புத்தம், தர்மம், சங்கம் என்ற புத்தமதத்தின் மூன்று கூறுகள் (1344) *வஸ்துவெல்லாம் அஞ்சு கூறாகப் பகர்ந்து பு₃த்த த₄ர்ம்ம சங்க₃ம் ஆகிய ரத்நத்ரயத்துக்கு மூன்று கூறும்* (UCR,xviii,p.16-23.)

ரத்ந ந்யாஸம் (பெ) இரத்தினக் கற்கள் இழைத்த கல் (1014) *திருமேனி ஒருவர் ரத்ந ந்யாஸஞ் செய்து* (SII,ii,29.)

ரத்ந பட்டிகை (பெ) இரத்தினக் கல் பதித்த அரைக் கச்சை (1014) *கண்ட நாண் நடுவு ரத்ந பட்டிகை* (SII,ii,93.)

ரத்நம் (பெ) நவ மணி (1014) *ஸ்ரீ பண்டாரத்துப் கூடி முதலான பொன்னும் ரத்நங்களும்* (SII,ii,3.)

ரத₂காரர் (பெ) கம்மாளர் (1264) *அறுவகைத் தொழில் நால்வகை ரத₂காரரோம்* (SII,vi,439.)

ரத₂காராநுலோமங் (பெ) அநுலோம ஜாதியைச் சேர்ந்த ரதகாரன் (1200) *இவ்வரிஷ்டோமாபத்தியை யுடைய ரத₂காராநுலோமநாகிய கர்ம்மாரநே இவையெல்லாஞ் செய்வாநெந்று* (SII,xvii,603.)

ரதீ$_2$ (பெ) ஒரு நகை எடை (1513) *குந்தளம் தூக்கம் 1076 1/2 சிவப்பு 2822 பச்சை 160க்கு ரதீ$_2$ 108 பழவஜ்ரம் 423க்கு மஞ்சாடி 65 1/4* (TDI,iii,35.)

ரற்றிநம் (பெ) சிவப்புக்கல் மணி (1533) *சிகரமன மேலுக்கு ரற்றிநமிட்ட குட்டம் 1 கருமுத்து 709* (TDI,iv,16.)

ரற்றின கம்பளி (பெ) உயர்ந்த வகை விரிப்பு (1464) *பஞ்ச சயனத்துக்கு ரற்றின கம்பளி* (TDI,ii,18.)

ரா

ராசகரம் (பெ) அரண்மனை; அரசாங்கம் (1366) *பசாநத்துக்கு கண்டகம் விச்சுப்பாட்டம் அளக்கக் கடவோம் நீக்கி ராசகரத்தால் வந்த காணிக்கை கட்டாயம்* (EC,ix,Bn.66.)

ராசிமைத்ர மாகை (பெ) ராசிப் பொருத்தம் ஆகை (1396) *இவருக்கும் து$_3$ர்க்$_3$கா$_3$ ப$_4$ட்டற்கும் ராசி மைத்ரம் ஆகையில் இவர் கைய்யிலே தா$_4$ராபூர்வமாக இம் மாடை 148ம்* (EI,xxxii,29.)

ராஜ்யம் (பெ) அரசாட்சி (796) *ராஜ்யம் உத்ஸந்நமாயது* (MASI,lxiii,p.54-89.)

ராஜ்ய வத்ஸலம் (பெ) ஆட்சி யாண்டு (771) *மற்றவன்றன் ராஜ்யவத்ஸலம் மூன்றாவது செலா நிற்ப* (EI,xvii,16.)

ராஜ்ய வர்ஷம் (பெ) ஆட்சி யாண்டு (774) *ஸ்ரீ கோமாறஞ் சடையற்கு ராஜ்ய வர்ஷம் ஆறாவது* (SII,xiv,3;EI,xxvi,15b.)

ராஜ காரியம் (பெ) அரசனுக்குச் செய்யும் ஊழியம் (1199) *மண்டியங்கிழான் குலோத்துங்கசோழ காடுவெட்டிகள் ராஜகாரியஞ் செய்து நாயநாரைத் திருவடித் தொழ* (SII,iv,366.)

ராஜகீயம் (பெ) அரச காரியம் (1225) *ஒட்டற்கு காலமன்றியே ராஜகீயமாய் நஞ் சாமந்தனாரே கோயிலை கைகொண்டு* (SII,iv,500.)

ராஜகேஸரி (பெ) சோழ அரசர் முடிசூட்டுப் பட்டங்களில் ஒன்று (1001) *ஸ்ரீ கோ ராஜராஜ கேஸரிபந்மற்க்கு யாண்டு* (SII,xvii,222.)

ராஜ கோமற்றுவம் (பெ) அரச அலுவலர் (1268) *கீழிறையிறுத்துப் போதாமையாலே பிந்பு ராஜ கோமற்றுவமாய் தேவர் வாணாத$_4$ராயரும்* (IPS,375.)

ராஜ த$_3$ண்ட$_3$ம் (பெ) அரசுக்குச் செலுத்தும் அபராதம் (1118) *வஸ்துக்கு...வநுக்கு திரியக் குடுப்பித்து ராஜத$_3$ண்ட$_3$மாக இவ் வஸ்துவுக்குமாக* (SII,vi,57.)

ராஜதா$_4$நி (பெ) தலைநகரம் (1514) *விஜயநக$_3$ரம் ராஜதா$_4$நிக்கு எழுந்தருளும்போது திருமலை மேலுக்கு எழுந்தருளி* (SII,iv,284.)

ராஜத்$_3$ரோஹி (பெ) அரசனுக்கு துரோகம் செய்பவன் (1155) *இதுக்கு அநிச$_4$யம் நினைத்தார் ராஜத்$_3$ரோஹி க்$_3$ராமத்$_3$ரோஹி கோ$_3$ப்$_3$ராஹ்மணரை வதைபண்ணினார்* (EC,iii,Sr.76.)

ராஜ த்$_3$வாரம் (பெ) அரச ஆணை (994) *மஹாஸபை$_4$யோம் செய்த ஜவஸ்தை$_2$ யாவது ராஜத்$_3$வாரத்தேனும் தந்மாஸநத்தென்றல் வரியில்லென்றல்* (EI,xxii,32.)

ராஜ நியோக$_3$ம் (பெ) அரச ஆணை (992) *ராஜநியோக$_3$த்தால் ஸ்ரீ கார்ய்யஞ் செய்வானுக்கு நிசதம் பதக்காக* (SII,xiii,170.)

ராஜ பரிச்சந்தம் (பெ) அரசனுக்குரிய சின்னங்கள் (1056) *ஒட்டக நிரைகளும் வராகவெல் கொடி முதல் ராஜபரிச்சந்தமும்* (SII,iii,29.)

ராஜ ப$_4$ரம் (பெ) ஆட்சிப் பொறுப்பு (796) *ஹிரண்ய வர்ம்ம மஹாராஜர டெக்க ராஜப$_4$ரம் க்$_3$ரஹக்க* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

ராஜவந்த$_4$ம் (பெ) ஒருவகை மணி (1060) *முத்து 26 பவழம் 2 ராஜவந்த$_4$ம் 2 கொக்குவாயும்* (SII,v,644.)

ராஜஸம் (பெ) (=ராயஸம்) (1259) *முதல் காணியும் இறையிலியுமாக ராஜஸம் எழுதிக்*

குடுத்து அனுபவித்து வருகிற கார்மறு நிலம் (SII,iv,422.)

ராஜ ஸர்வ்வஞ்ஞன் (பெ) எல்லாமறிந்த அரசன் (1012) *ஸ்ரீ ராஜராஜன் இந்திர ஸமானன் ராஜ ஸர்வ்வஞ்ஞன் எனும் புலியை* (SII,vii,863.)

ராஜஸ வத்தனை (பெ) ராயஸம் பொருட்டு செலுத்தும் ஒரு வரி (1455) *அகரங்களுக்கு அவதரவர்த்தனை ராஜஸவத்தனை ப்ரதா$_4$நிஜோடி கரணிக்கசோடி* (SII,ii,023)

ராஜாக்கள் (பெ) அரசர் (985) *ஸபை$_4$ நோக்கிப் பல ராஜாக்களுக்கு இறை இறுத்துப் போந்த நிலம்* (SII,xix,370.)

ராஜா வந்தம் (பெ) ஒருவகை மணி (991) *முத்து இருபத்தெட்டு பவழம் இரண்டு ராஜாவந்தம் இரண்டு* (SII,xiii,144.)

ராஜாவர்த்தம் (பெ) ஒரு வகை மணி (1014) *பவழம் இரண்டும் ராஜாவர்த்தம் இரண்டும் தாளிம்பமும்* (SII,ii,6.)

ராதிதர (பெ) கோத்திரங்களுள் ஒன்று (789) *ராதிதர கோத்தரத்து ஆவத்தம்ப சூத்திரத்து* (SII,ii,99.)

ராப்படி (பெ) இரவில் படைக்கும் நைவேத்தியம் (1546) *ராப்படியில் அமுது செய்தருளும் வெள்ளைத் திருப்போனகம் 2* (TDI,v,79.)

ராயஸம் (பெ) அரச ஆணை ஓலை (1523) *க்ருஷ்ணராய மஹாராயர் தா$_4$ரா பூர்வமாகக் குடுத்து ராயஸம் பாலிக்கையில் இந்த மனையை மடமாக கட்டுவித்து* (SII,iv,303.)

ராயஸ வர்தநெ (பெ) (= இராயச வர்த்தனை) (1432) *மாதா$_3$ர்ரிக்கெ ராயஸவர்தநெ அவஸரவர்தநே கட்டிகெ$_3$ வர்த்தநை* (EI,xviii,17.)

ராவு (பெ) இரவு (785) *நொந்தாவிளக்கினுக்கு ராவும் பகலும் நொந்தாவிளக்கினுக்கு வைத்த பொன்* (SII,xiv,25.)

ராசி$_0$ (பெ) குவியல் (771) *கநக ராசி$_0$உங் கதிர்மணிஉம்* (EI,xvii,16.)

ரு

ருத்$_3$ர க$_3$ணப் பெருமக்கள் (பெ) சிவன் கோயில் நிர்வாகஞ் செய்யும் குழு (991) *ருத்$_3$ர க$_3$ணப் பெருமக்கள் இனில திருத்திப் பெறுவாராகவும்* (SII,xiii,131.)

ருத்$_3$ராக்ஷம் (பெ) உருத்திராக்க மணி (897) *நடுவு ருத்ராக்ஷங் கட்டின* (SII,xiii,319.)

ருஷப$_3$வாஹநப் பெருமாள் (பெ) சிவபெருமான் (973) *ஸ்ரீகோயில் கூத்தப் பெருமாளையும் ருஷப$_4$வாஹநப் பெருமாளையும்* (SII,xix,62.)

ருஷப$_4$ நாயறு (பெ) இடப ராசியில் சூரியன் இருக்கும் மாதம்; வைகாசி மாதம் (973) *இப்பதின் முக்கழஞ்சரை பொன்னும் இவ்வாட்டை ருஷப$_4$நாயற்று செவ்வாய்க் கிழமை* (SII,xix,59.)

ருஷப$_4$வாஹந தே$_3$வர் (பெ) சிவபெருமான் (1014) *எழுந்தருளுவித்த ருஷப$_4$வாஹந தே$_3$வர் திருமேனி ஒன்று* (SII,ii,46.)

ருஷி வைகாநஸன் (பெ) ஒரு கோத்திரம் (?) (789) *அருவா நாட்டு அருவாகூர் ருஷி வைகாநஸன் சங்கரநாராயண பட்டன் பாங்கொன்றும்* (SII,ii,99.)

ரூ

ரூபாவதாரம் (பெ) ஒரு வடமொழி நூல் (1068) *வ்யாகரணமும் ரூபாவதாரமும் வக்காணிக்கும் ப$_4$ட்டந் ஒருவனுக்கு* (EI,xxi,38.)

ரே

ரேகை (பெ) அரசு வரியின் பொதுப்பெயர் (1510) *புதுவூற்கு பரம்பை ஊர் பற்றுக்கு அற்ற மருவாதி நத்தரேகை பற..கும் வாசல் மனை ஏற்கடமை காணிக்கை* (IPS,726.)

ரேகைபொன் (பெ) ஒரு நாணயம் (1545) *சந்தாம ரேகைபொன் 14 பணம் 2* (TDI,v,55.)

ரோ

ரோத்தர் (பெ) ஒவ்வொருவர் (1000) *அட்டில் பள்ளியார் பணிக்குரியார் ஆறாடுநாள் ரோத்தர் கலநெல் பெறுவது* (EI,xxxiii,33.)

ல

லக்ஷணம் (பெ) எழுத்துச் சான்று (986) *இத் தேவர்கு சந்திராதித்தவல் செய்தன லக்ஷணபடி கண்டு* (SII,iii,144.); (1014) *நிலமும் மனையும் கூறடைத்த பரிசே லக்ஷணஞ் செய்து குடுப்பதாகவும்* (SII,i,40.)

லக்ஷணம் (பெ) நிவந்தம்; வரையறை (1137) *இந்நாச்சியாற்கு அமுதுபடி செல்லக் கடவதாக இப்படி லக்ஷணம் பண்ணிக்குடுத்து லக்ஷணப்படி கல்வெட்டுவித்தோம்* (SII,viii,30.)

லக்ஷணம் (பெ) நல்ல தகுதி (883) *லக்ஷண ஸம்பூர்ண்ணமாக* (SII,viii,633.)

லக்ஷணம் (பெ) அடையாளம் (968) *லக்ஷணமிட்டுக் குடுக்கக் கடவோமாயிருந்த ஈழக்காசு* (SII,xiii,223.)

லக்ஷணமிட்டு (வி) ஆவணத்தில் எழுதி (968) *சண்டேச்வரர் கையால் னாங்கள் முன்பு கொண்டு லக்ஷண மிட்டுக் குடுக்கக் கடவோமாயிருந்த ஈழக்காசு* (SII,xiii,223.)

லக்ஷம் (பெ) எண் (1,00,000) (1524) *கோயிற் திருப்பணிக்கு இரண்டு லக்ஷம் பொன்னும் அப்போது குடுத்து* (SII,xvii,684)

லங்கனம் (பெ) தடை (1183) *இத்தன்மத்துக்கு லங்கனம் நினைப்பான்* (SII,v,861.)

லசு$_0$நாத்$_3$யோரண்ட தைலம் (பெ) மருந்து வகை (1068) *பஞ்சாக தைலம் தூணியும் லசு$_0$நாத்$_3$யோரண்ட தைலத் தூணியு* (EI,xxi,38.)

லா

லாஞ்சனம் (பெ) அடையாளம் (1149) *எழுத்தாணியும் லாஞ்சனமான கல்லுந் நாட்டிக் குடுத்து* (TAS,vii,p.5-6.)

லாபம் (பெ) பேறு (1264) *புகழும் புத்ர லாபமும் ச$_0$த்ரு நாசமும்* (SII,vi,439.)

லி

லிகி$_2$த்தேந் (வி) எழுதினேன் (875) *ஸபை$_4$யோம் ஸபை$_4$யிருந்து பணிப்ப லிகி$_2$த்தேந்* (SII,vi,347.)

லிங்கம் (பெ) சிவன் உருவில்லா வடிவம் (1014) *லிங்கத் தொடுங் கூடச் செய்த எழுவிரல்* (SII,ii,44.)

லே

லேகா₂ (பெ) கை எழுத்து (803) *பரமேச்வரஸ்ய லேகா₂* (SII,vi,365.)

லேகை (பெ) கை எழுத்து (835) *ஊரோ லேகை யிட்ட* (TDI,i,4.)

லோ

லோகங்கள் (பெ) உலகங்கள் (1176) *அகில லோகங்களும் அடியடைக் குலைபடுவன* (SII,xvii,585.)

லோக பெருஞ்செட்டி (பெ) இலங்கையில் வணிகர் வணங்கும் ஒரு போதிசத்துவர் (?) (1150) *அஞ்னூற்றுவன் பள்ளியில் லோக பெருஞ் செட்டியார்க்கு* (AVNM,9,p.37-39)

லோகமாதா (பெ) துர்கை: காளி (1150) *வயிச்ரா[வணரை திரு]வயுறு வாய்த்த லோகமாதாவை வீரமாகாளமென்று பேர் சாத்திநமையாலும்* (AVNM,9,p.37-39)

லோஹப் பானை (பெ) உலோகத்தால் செய்த பானை (808) *ஈழவிளக்கும் வட்டி லோஹப்பானையும்* (EI,viii,29.)

லோஹம் (பெ) உலோகம் (1212) *இக் கோயிலில் லோஹத்தால் எழுந்தருளி வித்த ஸுப்ரஹ்மண்யப் பிள்ளையார்க்கும்* (SII,v,430.)

வ்

வ்யஞ்ஜனம் (பெ) பூச்சுப் பொருள் (1215) *சாத்துப்படி போ₄க₃ த்₃ரவ்ய வ்யஞ்ஜனம் உள்ளிட்ட தேவைகளும்* (SII,vi,350.)

வ்யதிபாத₃ம் (பெ) யோகம் இருபத்தேழனுள் ஒன்று (1282) *நாயற்றுக் கிழமையும் புணர்பூசமும் த்ரியயும் வ்யதிபாத₃ம் பெற்ற சு₄ப₄திநத்தில்* (EC,ix,Dv.28.)

வ்யம் (பெ) செலவுப் பொருள் (1122) *ஸபா₄ விநியோகத்துக்கு வேறு வ்யமில்லாமையால் எங்களூரிலெ சிறிது நிலம் விற்றாகிலும்* (SII,viii,305.)

வ்யயம் (பெ) செலவுப் பொருள் (924) *பூமி விலைக்குக் கொண்டு வதிக்கு வேண்டும் வ்யயப்பட்டு* (SII,vi,292.)

வ்யவஸ்தை (பெ) தீர்மானம்: ஏற்பாடு (804) *குடி மன்றாடுவதனுக்கு செய்த வ்யவஸ்தையாவது* (SII,xiv,37.)

வ்யவஸ்தை₂ (பெ) (= வ்யவஸ்தை) (921) *ஏரிவாரியமும் இடுவதற்க்கு வ்யவஸ்தை₂ சேத பரிசாவது* (ARASI,1904-05,p.131f.)

வ்யவஸாயம் (பெ) பயிரிடல் (1316) *செங்கழுநீர் ஓடை 4க்கும் மேல் செய்யும் வ்வயஸாயத்துக்கும்* (EI,vii,18.)

வ்யவஹாரம் (பெ) காரியம் (866) *த்ரைராஜ்ய வ்யவஹாரத்துக்கு* (TAS,i,p.1-14.)

வ்யாக்யாதாக்கள் (பெ) விளக்கிச் சொல்லுபவர் (1214) *வேத₃மும் சா₂ஸ்த்ரமும் போய் வ்யாக்யாதாக்களாய் இருக்குஞ் சதுர்வ்வேதி₃ ப₄ட்டர்கள்* (EI,xxv,11.)

வ்யாகரணம் (பெ) இலக்கணம் (985) *வல்லராய் வ்யாகரணமும் மீமாம்ஸை இரண்டு த₃ர்ச₂நமும்* (SII,vi,322.)

வ்யாகரண சா$_0$ஸ்த்ரம் (பெ) இலக்கண நூல் (959) *எமூர் வ்யாகரண சா$_0$ஸ்த்ரம் வ்யாக்$_2$யாநம் செய்வார்க்கு* (SII,iii,161.)

வ்யாக்$_2$யாநம் (பெ) விரிவுரை (959) *எமூர் வ்யாகரண சா$_0$ஸ்த்ரம் வ்யாக்$_2$யாநம் செய்வார்க்கு* (SII,iii,161.)

வ்யாக்$_2$யா வ்ருத்தி (பெ) நூற்பொருளை விரித்துரைப்பவர் வாழ்க்கைச் செலவுக்குக் கொடுத்த நிலம் (959) *வ்யாகரண சா$_0$ஸ்த்ரம் வ்யாக்$_2$யாநம் செய்வார்க்கு வ்யாக்$_2$யா வ்ருத்தியாக வைத்த பூ$_4$மியாவன* (SII,iii,161.)

வ்யாக்$_2$யான மண்டபம் (பெ) சொற்பொழிவு மண்டபம் (1289) *பொன்வரி வகுப்பால் உள்ள மாடை நாட்டு தந்மமான வ்யாக்$_2$யான மண்டபத்துக்கும்* (SII,v,1355.)

வ்யாபா$_4$ரி (பெ) வியாபாரி (969) *நடுவிலங்காடி வ்யாபா$_4$ரிகள் வசம்* (SII,iii,195.)

வ்ரதம் (பெ) நோன்பு (815) *த$_4$நவர்ஷம் பொழிதற்கு வலாஹகத்தின் வ்ரதம் கொண்டு* (SII,iii,206b.)

வ்ரித்$_3$த$_4$ர் (பெ) வயதில் பெரியோர் (922) *சாலவும் வ்ரித்$_3$த$_4$ரும் பா$_3$லரும் அலாதார்* (SII,vi,295.)

வ்ருக்ஷம் (பெ) மரம் (1014) *கனமாகச் செய்த ஆல வ்ருக்ஷம் ஒன்று* (SII,ii,50.)

வ்ருத்$_3$த$_4$ர் (பெ) முதியவர் (921) *வயோ வ்ருத்$_3$த$_4$ர்களையும்* (ARASI,1904-05,p.131f.)

வ்ருத்$_3$தி$_4$ (பெ) வட்டி (898) *பொன்னாலு வந்த வ்ருத்$_3$தி$_4$ப் பொன்* (SII,vi,360.)

வ்ருச்$_0$சிக ஞாஇறு (பெ) கார்த்திகை மாதம் (875) *வ்ருச்$_0$சிக ஞாஇறு திங்கட் கிழமை* (SII,xiv,12.)

வ்ருஷப$_4$தேவர் (பெ) நந்தி (1239) *வ்ருஷ்ப$_4$தேவரையும் தம் உடைப்பத்தையும் செய்வித்தான்* (EC,iii,Tn.103.)

வ்ருஷப$_4$ லாஞ்சநம் (பெ) பல்லவரின் காளைச் சின்னம் (796) *த்$_4$வஜமு வ்ருஷ்ப$_4$ லாஞ்சநமு* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

வ்ருஷப$_4$ம் (பெ) பொலி காளை (1161) *பால் பசு பத்தும் சினைப்பசுப் பன்னிரண்டு வறள் பசு கிடாரினாகு நாலும் வ்ருஷ்ப$_4$ம் ஒன்றும் ஆக உரு முப்பத்து மூன்றும்* (SII,iv,822.)

வ்ரோதஞ்செய்தான் (வி) தடை செய்தவன் (900) *செய்த நிவந்தத்துக்கு வ்ரோதஞ் செய்தான்* (AVNM,6,p.14)

வ

வஇின் (இ) ஏழாம் வேற்றுமை உருபு (771) *நெடுவரை நெடுவஇின்* (EI,xvii,16.)

வக்காணிச்சிருக்கும் (வி) (சாத்திரம்) விளக்கஞ் செய்யும் (1000) *மதிலகத்தன்று வக்காணிச்சிருக்கும் பட்டகள்* (TAS,ii,p.173-207.)

வக்காணித்து (வி) விரித்து உரைத்து (921) *ஒரு பா$_4$ஷ்யம் வக்காணித்தறிய்வான்* (ARASI,p.104-05,p.131f.)

வக்காணிப்பார் (பெ) விரித்துரைப்பார் (959) *ப்ரபா$_4$கரம் வக்காணிப்பார்க்கு* (SII,iii,200.)

வக்கா$_2$ணிக்க வல்லார் (பெ) விரித்துக் கூற வல்லவர் (985) *ஸடீகமாக வைசே$_0$ஷிகமும் வக்கா$_2$ணிக்க வல்லார்* (SII,iv,322.)

வக்ரிப்பாதான் (பெ) மாறுபட்டு நடப்பவன் (768) *இதற்கு வக்ரிப்பாதான் சந்த்$_3$ராதித்யர் ருள்ளதனையும் நரகத்தினிற்பானாகவும்* (SII,xii,34.)

வகிசத்தார் (பெ) வமிசத்தார் (1116) *சட்டிச் சோறு செலுத்து மடத்தும் எங்கள் பக்கலும் எங்கள் வகிசத்தார் பக்கலும்* (SII,viii,622.)

வகுக்கப்பட்ட (வி) பிரித்துக் கொடுக்கப்பட்ட (785) *வகுக்கப்பட்ட சப்$_3$தாளி என்னுங் க்ராமத்துள்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

வகுத்த (வி) அணிவகுத்த (1066) *வடகடல் லென வகுத்த வத்தானையை கடற்களிறொநற்றினால் கலக்கி* (SII,v,976.)

வகுத்த (வி) படைத்த (1012) *பொழுதியல் வஞ்சியிற் காஞ்சி வகுத்த செஞ்சிலைக் கலிங்கன்* (SII,vii,863.)

வகுத்த (வி) கூறுபடுத்திய (929) *பொரோஞ்செயில் வகுத்த வரம்புக்கும்* (SII,viii,570.)

வகுத்தமைத்து (வி) முறையாகச் செய்து (1145) *பெருங் கண்ணாறும் வளர் சதிரமும் வகுத்தமைத்து கூடங்கள் பல தொட்டு* (SII,vii,1044;IPS,120.)

வகுத்து (வி) கூறுபடுத்தி (691) *மநெயும் மநெப்படப்பும் வகுத்து* (SII,i,151;EI,xvii,22.)

வகுத்து (வி) அமைத்து (921) *வள மதுரைநகர் கண்டும் மற்றதற்கு மதிள் வகுத்தும்* (SII,iii,206 (a).)

வகுப்பு (பெ) கூறு (1289) *பொன்வரி வகுப்பால் உள்ள மாடை* (SII,v,1355.)

வகைந்த காசு (பெ) ஒரு வரி (1239) *ஏரிமின் காசு இநவரி வகைந்த காசு மட்டோலைக் காசு மற்றும் எப்பேற்பட்ட* (SII,i,61.)

வகைப்பட்ட (பெ) விதமான (852) *இவ்வகைப்பட்ட வ்யவஸ்தை₃யினூடு* (SII,ii,98.)

வகைப் பேறு (பெ) நாடுவகை என்ற அலுவலர் பொருட்டுக் கொடுக்கும் வரி (1239) *கற்றைவரிக் கொண்டு இடவும் வகைப்பேறு தண்ட நாயகப் பேறென்றும்* (SII,vi,50.)

வகையறுத்து (வி) பகிர்ந்து (1399) *ஸத்யம் பண்ணாமல் எங்களில்ப் பொருந்த வகையறுத்துக்கொண்ட படி* (SII,viii,286.)

வங்கவர் (பெ) ஓர் அரச குலம் (1136) *சிங்களர் கொங்கணர் சேதியர் திரிகத்தர் வங்கவரங்கவர் வத்தவர் மத்திர கங்கர்* (SII,vii,1038.)

வங்கிசம் (பெ) (= வம்சம்) (1152) *இவந் மகநே துடங்கி அவன் வழிவந்த வங்கிசத்து தேவஸ்வம்மாக* (SII,vii,1040.)

வங்கியம் (பெ) இசைக்குழல் (1014) *வங்கியம் ஒன்றுக்கு நிகரிலி சோழத்தெரிந்த உட நிலைக் குதிரைச் சேவகரில்* (SII,ii,66.)

வங்கியன் (பெ) இசைக்குழல் ஊதுபவன் (1009) *மோரவியனுக்குப் பங்கு இரண்டும் வங்கியனுக்குப் பங்கு இரண்டும்* (CHEN,xxi,p.425-28.)

வங்கிஷம் (பெ) (= வம்சம்) (1205) *தேவதானம் ஆக விட்டுக் கல்வெட்டிக் குடுத்தேன் இது என் வங்கிஷத்தில் இறக்குவான் சிவத் துரோகியுமாய்* (SII,viii,130.)

வங்கூழ் (பெ) தென்றல் காற்று (771) *குளந்தை வங்கூழ் வந்தைசைக்கும்* (EI,xvii,16.)

வங்ச₀த்தார் (பெ) சந்ததி (984) *செம்பியன் சோழியவரையனுக்கும் இவன் வங்ச₀த்தார்க்கும் காணியாய்* (SII,xix,344.)

வங்ஸம் (பெ) சந்ததி (1100) *...காமுண்டந் வங்ஸத்தில் வீம தே₃வநாந குலோத்துங்க சோழமாத மங்கல முடையாந்* (EC,x,Ct.8.)

வச்ச (வி) வைத்த (858) *திருவமிதினுக்கும் ஒரு நொந்தாவிளக்கினுக்கும் வச்ச நிலம்* (SII,vi,447.)

வச்சருளியார் (பெ) நியமிக்கப் பட்டவர் (1100) *கீழ்ச்சாந்தி வச்சருளியார் மேல்ச் சாந்தியும் கீழ்ச் சாந்தியும்* (TAS,iv,p.145-46.)

வச்சிரம் (பெ) வயிரம் (1068) *வச்சிரப் பைம்பூண் மனுமநும்* (EI,xxi,38.)

வச்சு (வி) கொடுத்து (1000) *முட்டிச்ச நாளைத் தண்டம் வச்சன்றிப் பிற்ற நாளாட்டப் பெறார்* (TAS,ii,p.173-207.)

வச்சு (வி) வைத்து கொடுத்து (845) *பூளைக்குடிப் பதியும் உள்ப்பட வச்சு* (TAS,ii,p.80-82.)

வச்சு (வி) கொண்டு (916) *நீர் மிகுவது வச்சு நெல் விளைச்சு* (SII,xiv,56.)

வசக்கி (வி) பண்படுத்தி (916) *இறை காட்டாதிதாக விலை கொண்டு வசக்கி* (SII,xiv,56.)

வசக்கின (வி) பண்படுத்திய (929) *முது நிலம் விலைகொண்டு வசக்கின செய்* (SII,xiv,61.)

வசக்கு (வி) பண்படுத்தும் (955) *நிலம் வசக்கு விசம் மாப்பத்து வண்ணம் வசக்கு விசம் ஏற்றி* (SII,xvii,641.)

வசக்குவித்த (வி) பண்படுத்திய (1012) *வெண்ணாவல் வசக்குவித்த உடையாள் வசக்கல் நிலம் மூன்றுமாவும்* (SII,viii,681.)

வசந்தம் (பெ) வசந்த கால விழா (1238) *திருமறைக் காடுடையார்க்கு சித்திரை வசந்தத்துக்கும் திருத்தமனகப் படிக்கும்* (SII,xvii,463.)

வசந்தோற்சவ திருனாள் (பெ) ஒரு திருவிழா (1530) *வசந்தோற்சவத் திருனாள் 5க்கு படி 5* (TDI,iv,6.)

வசநம் (பெ) வாய்ப் பேச்சு (1344) *இப்படியன்றியிலே இந்த தந்மத்துக்கு வசந மாத்திரத்தால யாகிலும் சகாயப்பட்டு இதனை ரக்ஷித்த* (UCR,xviii,p.16-23.)

வசம் (பெ) இடம்; பொறுப்பில் (803) *நக்கஞ் சகல சிவனும் வசம் திருப் போத்துடையாள்வார்க்கு* (SII,xiv,36.)

வசி (பெ) வாள் வலிமை (1238) *அம்மையப்பன் தனினின்று வென்றான் தன் வசி காட்டுவான் அழகிய சோழனான* (SII,i,59.)

வசை (பெ) பழிப்பு (921) *வசைஇல் மாக் கயல் புலி சிலை வடவரை* (SII,iii,206 (a).)

வசைத் திரு (பெ) இலக்குமி (1270) *தில்லை மன்றில் வசைத் திருவுடன் செஞ்சொற் திருவை* (SII,iv,620.)

வஜ்ர கல்பம் (பெ) மருந்து வகை (1068) *வஜ்ர கல்பந் தூணிப் பதக்கும் கல்யாண லவணந் தூணிப் பதக்கும்* (EI,xxi,38.)

வஜ்ர காயம் (பெ) நல்ல உடம்பு (1152) *கல்லியாண திருமேநியாய் வஜ்ரகாயமாகைக்கு* (SII,vi,440.)

வஜ்ரம் (பெ) வைரம் (1514) *மாணிக்கம் 100ம் வஜ்ரம் 322 உட்பட தூக்கம் 275க்கு* (SII,iv,284.)

வஜ்ர மாணிக்கம் (பெ) வைரக் கல் (1514) *வஜ்ரம் 322ம் உட்பட தூக்கம் 275க்கு சிகரத்து வஜ்ரமாணிக்க கடையம் சோடு 1ம்* (TDI,iii,66.)

வஞ்சகஞ் செய்வினை (பெ) போர்ச் செயல் (1206) *படையும் குதிரையும் குறைவறக் கொண்டு புக்கு வஞ்சகஞ் செய்வினை செய்யக் கடவேநாகவு* (ARE,1934-35,p.62.)

வஞ்சத் தொழில் (பெ) கபடச் செயல் (905) *நஹுஷந் மத்விலாஸமும் வஞ்சத்தொழில் வாதாபிசீராவிபு* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வஞ்சனை (பெ) சூழ்ச்சி; தந்திரம் (1074) *திருமன்நி விளங்க இரு குவடனைய தந் தோளும் வாளும் துணை என கேளலர் வஞ்சனை கடந்து* (SII,viii,701.)

வஞ்சி (பெ) பகைவர் மேற் படையெடுத்துச் செல்லல் (1012) *பொழுதியல் வஞ்சியிற் காஞ்சி வகுத்த* (SII,vii,863.)

வஞ்சி (பெ) வஞ்சிக் கொடி (1047) *வஞ்சியம் புதுமலர் மலைந்தாங்கெஞ்சலில் வேலைகெழு காந்தளூர் சாலை* (SII,iii,28.)

வஞ்சி (பெ) சேரர் தலைநகர் ஆன கருவூர் (771) *கூடல் வஞ்சி கோழி என்னும்* (EI,xvii,16.)

வஞ்சித்து (வி) ஏமாற்றி (800) *பிள்ளை கொண்டுள் புகுந்து வஞ்சித்து* (SII,vii,581.)

வஞ்சிப் படை (பெ) நாடு பற்றும் நோக்கில் செல்லும் படை (1044) *விச்சயன் வெருநெளித் தஞ்சி ஓடத் தன் வஞ்சிப் படையால் ஆங்கவன் பிதாவை மாதாவோடு* (SII,v,465.)

வஞ்சியாது (வி) ஏமாற்றாது (922) *ஏரி வாரியப் பெருமக்கள் கைக்கே வெட்டி முதலாக வஞ்சியாதே குடுப்பதாக* (SII,vi,295.)

வட்டக் காசு (பெ) ஒரு வரி (1073) *முஞ்ஞை பூண்டியில் நாங்கொள்ளக் கடவ வட்டக் காசும் திருகுக் காசு மற்றும் எப்பேர்பட்டனவும்* (TDI,i,21.)

வட்டகை (பெ) சூழ்ந்த இடம் (1228) *இக் கோனாடு இருபத்துநாற் காத வட்டகையும் ஊர்வழி தோறும்* (IPS,285.)

வட்டகை (பெ) வட்டில்; கிண்ணம் (946) *வெள்ளித் தாலமிரண்டு வட்டகை யிரண்டும்* (TAS,i,p.293-94.)

வட்டம் (பெ) முத்தின் வகை (1014) *முத்தில் கோத்த முத்து வட்டமும் அனுவட்டமும்* (SII,ii,3.)

வட்டம் (பெ) ஒரு சிறு நாணயம் (?) (1100) *தறியால் திங்கள் அரைக்கால் அக்கமும் இறுப்பனவற்றில்*

குடுப்பானிடைத் திருவாய் ஒரு வட்டமும் கொள்வாந்னிடை ஒரு வட்டமும் கொள்வதாகவும் (SII,iv,1412.)

வட்டம் (பெ) ஒரு வரி (1343) *தறிக்கடமை மாத இரட்டி சூலவரி வட்டம் சம்படம் உட்பட* (ARE,1940,111)

வட்டம் (பெ) தடவை (909) *விற்றுக் குடுத்த நாள் திங்கள் முப்பது வட்டத்து இருபதும்* (SII,v,1412.)

வட்டம் செய்து (வி) முறைகளைப் பங்கிட்டு (1457) *பூசை முட்டு வாராமல் நம் அர்ச்சனை பேர் விட்டு பூசை நடத்த வட்டம் செய்து ஊர்வழி போய்* (SII,v,768.)

வட்டமணி (பெ) வட்ட வடிவ மணிகள் (1018) *வட்டமணி கோத்த வெள்ளி* (SII,vii,891.)

வட்ட முறை (பெ) தவணை நாள் வரும் முறை (1132) *விளக்கு திரிக்கு காசு அரையும் நாங்கள் தொண்ணூறு வட்ட முறை கைக்கொண்டு* (SII,xiv,230.)

வட்டி (பெ) ஒரு வகைக் கூடை (873) *வெற்றிலைக் கூடையால் ஓரோ பற்றும் கூடையால் லிரண்டு பாக்கும் கொள்ளப் பெறுவதாகாவும் வட்டியால் லோரோ வி...த்துக் கொள்ள* (SII,iii,90.)

வட்டி நாழி (பெ) ஒரு வட்டி (கூடை)க்கு நாழி தானியமாக செலுத்தும் விற்பனை வரி (789) *நல்லெருதும் வட்டி நாழியுங் கடையடைக்காயும்* (SII,ii,99.)

வட்டில் (பெ) ஓர் உணவுத் தட்டு (808) *ஈழவிளக்கும் வட்டி லோஹப்பானையும்* (EI,viii,29.)

வட்டில் (பெ) (1546) *மோர் வட்டில் 1 அம்புலி வட்டில் 1* (TDI,v,78.)

வட்டி வாணியஞ் செய்வார் (பெ) கூடையில் வைத்து விற்பனை செய்வோர் (1009) *புறவரவா வந்து வட்டி வாணியஞ் செய்வாரையும் உள்ளூர் இருந்து வட்டி வாணியஞ் செய்வாரையும் வட்டி யால் நாழி நெல்லாக கொண்டும்* (SII,xvii,235.)

வட்டு (பெ) கட்டி (959) *நெய் ஒரு பிடியும் சர்க்கரை வட்டு இரண்டும்* (SII,xiii,44.)

வட்டை (பெ) வாணிகர் செல்லும் வழிகள் (1300) *எட்டை வட்டை யிடை வட்டைகளிற் திசை விளங்கு* (SII,viii,442.)

வட்டை (பெ) சூழ்ந்த இடங்கள் (1300) *சமையக்கணக்கனு பல வட்டைகளிலும் தண்டிப் புகுந்த* (AVNM,6,p.36-40)

வடக்கிருந்து (வி) உண்ணாவிரதத்தை மேற்கொண்டு (1279) *தென்புலங் குறுகவும் வடதிசைத் தெலுங்கர் வடக்கிருந்தழியவும் போர் பல கடந்து* (SII,vii,69.)

வடக்கிருப்பர் (வி) உயிர் துறக்க வடக்கு நோக்கி உண்ணா நோன்பு மேற்கொண்டிருப்பர் (1279) *பொருபடை மன்னவர் வீரமொன்றே பொரும் போர் தொலைந்தும் வருகதிர் முந்து குணதிசை ஆள்வர் வடக்கிருப்பர்* (SII,vii,771.)

வடக்கு (பெ) வடக்குத் திசை (550) *வெள்வடுகன் கேணியின் வடக்கும்* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

வடகம் (பெ) பப்படம் (1545) *உழுந்து வடகம் 2ம் பொரிக்க நெய்யமுது இருநாழி* (TDI,v,55.)

வடகீழ் (பெ) வடகிழக்கு (1006) *கிழக்கு நோக்கி முப்பத்தறு கோல் சென்ற வடகீழ் மூலைய்* (SII,v,518.)

வடதிசை (பெ) வடக்குத் திசை (907) *வட திசை எடுத்து மளப் பெருஞ் சிறப்பில்* (SII,xii,93.)

வட நூல் வகை (பெ) சமஸ்கிருத மொழியிலுள்ள சாத்திரவகை (966) *தமிழ்கள் மூன்றும் வரிசையில் அமைந்த வடநூல் வகை* (SII,xiv,87.)

வடபால் (பெ) வடக்குக் பக்கம்செய்வடக்குத் திக்கு (550) *இன்னும் வடபாலெல்லை* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

வடம் (பெ) சரம்; மாலை (869) *நறும்பூ நூறு வடம் ஓரிலைச் சாந்தும்* (SII,vii,523.)

வடம் (பெ) கையில் அணியும் மாலை (982) *பட்டாரகிய திருக்கையில் சாத்து வடமிரண்டு கூத்தப்பெருமாள் திருக்கையில் சாத்துவட மூன்று* (SII,xix,302.)

வடமேல் கோடி (பெ) வட மேற்கு முனை (910) *சதுர்வ்வேதி மங்கலத்தின் வடமேல் கோடி பாசிவாக்கால்லின்* (SII,xix,44.)

வடமொழி (பெ) சமஸ்கிருதம் (921) *ஒண்டமிழும் வடமொழிஉம்* (SII,iii,206 (a).)

வடவரை (பெ) இமயமலை (785) *வடவரை யிருங்கயலாணை ஒருங்குடனடா* (IA,xii,p.57-75.)

வடவாச்சாலைப் பெருமக்களோம் (பெ) ஒரு கோயில் பணியாளர் குழு (985) *இப்பொன் கொண்டு கடவோம் வடவாச்சாலைப் பெருமக்களோம்* (SII,vi,7.)

வடவாய் (பெ) வடக்குப்பக்கம் (915) *நடுவிற் தோட்டத்தின் வடவாய் தெடக்கி வாய்க்காலுக்கும்* (SII,viii,636.)

வடவிசை (பெ) வடக்குப்பக்கம் (1198) *சீய மங்கலத்து உடையார் தூணாண்டார் கோயில் வடவிசைத் திருமாளிகை குலோத்துங்க சோழச் சம்புவராயர்* (SII,vii,65.)

வடவை (பெ) நிலத்தின் பொதுப்பெயர் (924) *பரசுராமன் வடவைக்கும் சிறியான் குணமந்த(ர)ன் வடவை(க்)கு மற்றும் ஒழிந்த நிலத்துக்கு வடக்கு* (SII,viii,695.)

வடி (இ) கூர்மை (950) *வெள்ளப்ப நாட்டு வடி நெடு வேல் கேசவங் கணபதி யோடுடந்* (TASSI,1962-65,p.32-52.)

வடிக்க (வி) வடிகட்ட (985) *ஜலபவித்ரம் வடிக்க புடவை ப்ரதாந கலசம் சுற்ற புடவைய்* (SII,xix,380.)

வடி தயிர் (பெ) கட்டித் தயிர் (1469) *திருப்போநகம் கோத்தெடுக்கைக்கு வடி தயிர் அமுதும்* (TDI,ii,38.)

வடிப்படை (பெ) கூர்மையான ஆயுதம் (905) *வடிப்படை மானாபரணன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வடிம்பு (வி) கால் விளிம்பு (1125) *வழுதியர் கோன் வடிம்பலம்ப நின்றருளிய மால் கடலை எறிந்தருளி* (TAS,i,p.21f.)

வடி (இ) அழகு (1171) *பாடியானையே பிணிப்புண்பன வடிமணிச் சிலம்பே யற்றுவன* (SII,xvii,592.)

வடிவு (பெ) அழகுருவம் (785) *நெடுமதிலை வடிவமைத்தும் ஏவமாதி விக்ரமங்களைத் துணையோ பல செய்து* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

வடு (பெ) மாம்பிஞ்சு (1171) *....மாவேய் வடுப் படுவன மாமலரேய் கடீயவாயின* (SII,xvii,592.)

வடு (பெ) தழும்பு (1469) *அடுகயலை முன்னாளில் ஆடகக் குன்றிட்ட வடு மறைந்து போயும்* (SII,iv,348a.)

வடுகப் பறை (பெ) ஒரு வகைப் பறை (1000) *குடையும் வடுகப்பறையு மகாகாளமும் இடுபடியும் தோரணமும்* (EI,iii,11.)

வடுக வழி (பெ) ஆந்திர நாட்டின் தென்பகுதி (793) *வடுகவழி பன்னீர் ராயிரமும் ஆள* (SII,iii,42.)

வடுக வாளி (பெ) ஒரு வகைக் காதணி (1014) *வடுக வாளி ஒன்றில் கோத்த முத்து குறுமுத்தும்* (SII,ii,51.)

வடுகு (பெ) வடுக நாடு: தெலுங்கு நாடு (1200) *வாணற் கிளங் கோமா னன்னாள் வடுகெறிந்த* (IPS,676.)

வடை (பெ) ஒரு பலகாரம் (1476) *நாள்வழி ஒரு திருப்போநகம் ஒரு வடைபடி ஒரு அப்பபடியும்* (TDI,ii,67.)

வண் (பெ) கொடை (1012) *மூரி வண்டடக்கைப் பாரி தன் அடைக்கலப் பெண்ணை* (SII,vii,863.)

வண் (இ) வளம் (966) *கச்சி மூதூர்க் காமக் கிழவோர் படுவண் கீர்த்தி மரபுளான்* (SII,xiv,87.)

வண்டல் (பெ) வெள்ளத்தில் படிந்த மண் (1250) *வண்டற் புனற் பெண்ணை நாடுடையான்* (SII,xii,125.)

வண்டளவம் (பெ) வளமான முல்லை (800) *வண்டளவங் காந்தளூர்* (EI,xiii,10.)

வண்டி (பெ) மாட்டு வண்டி (849) *இவ்வீழவர் தம் வண்டி குணந்தங்காடியிலும்* (TAS,ii,p.67-68.)

வண்டிச் சவடு (பெ) வண்டிப் பாதை (1311) *ஆன்குடிக்குப் போகிற வண்டிச் சவட்டுக்கு வடக்கும்* (IPS,420.)

வண்டு (பெ) பூச்சி இனம் (771) *நளிர் சினை மிசை வண்டலம்பும்* (EI,xvii,16.)

வண்ணக்கக் கூலி (பெ) நாணயம் அச்சிடல் பொருட்டுச் செலுத்தும் வரி (1068) *செலவு கணக்கிந் படி காசு மூந்றும் வண்ணக்கக் கூலிக்குக் காசு ஒன்றரையுந்* (EI,xxi,38.)

வண்ணக்க கரணத்தாந் (பெ) பொன் முதலிய நகைகளை மதிப்பிடும் கணக்கன் (1006) *திருப்பழன முடையார் வண்ணக்க கரணத்தாந் அப்பி கண்டநேந்* (SII,v,518.)

வண்ணக்கன் (பெ) மணிகளை ஆய்பவன் (?) (400) *எழுத்தும் புணருத்தான் மலைய் வண்ணக்கன் தேவன் சாத்தன்* (ARE,1961-62,p.280-88.)

வண்ணக்கு (பெ) பொன், நகை முதலியவற்றின் தரத்தை ஆய்பவன் (1042) *ஜயசிங்க குலகால விழுப்பரையர் கூட்டுவிக்கின்ற தனத்து வண்ணக்கு கங்கை கொண்ட சோழ பெருந் தெருவில் வியாபாரி* (SII,vi,33.)

வண்ணகூலி (பெ) ஒரு வரி (1068) *உகவை பொன்னும்(க்) காசி(சி) பொன்னும் முதலே சிலவும் வண்ணகூலியு மீன்(ப்)பாட்டமும்* (SII,vii,467.)

வண்ணத்தார் (பெ) துணி வெளுப்போர் (905) *வண்ணத்தார் வளாகத்தின் நன்குயர் பரம்பீட்டுக்கும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.); (978) *பரிசட்ட.... வண்ணத்தானுக்கு நிசதம் முன்னாழியாக* (SII,iii,151-151a.)

வண்ணம் (பெ) வகை (1012) *தத்துவ நெறியிலறங்கள் யாவையு மிறங்கா வண்ணம்* (SII,vii,863.)

வண்ணம் (பெ) வடிவு (1000) *செந்தாமரை வண்ணங் கண்டானங்கள் இழையே* (SII,iv,167.)

வண்ணார் (பெ) துணி வெளுக்குப்போர் (849) *ஈழவரும் மொருகுடி வண்ணாரும்* (TAS,ii,p.67-68.)

வண்ணார் கற் காசு (பெ) துணி வெளுப்போர் கல்லுக்கு இறுக்கும் வரி (1265) *வால்மஞ்சாடி கண்மாலை நாவிசர் வண்ணார்கற் காசுள்ளிட்ட கடமைகளும்* (SII,xii,221.)

வண்ணா[ர்] காணம் (பெ) வண்ணார் மீதான வரி (765) *குவளைக் காணமும் வண்ணா[ர்] காணமும்* (EI,xxxvi,20.)

வண்ணார் வரி (பெ) வண்ணார் மீதான வரி (1406) *ஏரிமீன் விற்ப்பணம் உவச்சவரி வண்ணார்வரி உட்ப்பட* (SII,i,055)

வண்ணாரச் சேரி (பெ) வண்ணார் குடியிருப்பு (892) *வண்ணாரச் சேரி நாங்கள் மயக்கிக் குடுத்த நிலத்து* (SII,vi,535.)

வண்ணாரப் பாறை (பெ) துணி வெளுப்போர் மீதான வரி (1008) *ஊராட்சியும் வட்டி நாழியும் பிதா நாழியும் கண்ணாலக் காணமும் வண்ணாறப் பாறையும் குசக் காணமு* (EI,xxi,34.)

வண்ணாரப்பாறை யிடு (வி) வீட்டை இடித்து துணி துவைக்கும் கல்லாகச் செய்தல்: இழிவு படுத்துதல் (961) *க்ரஹதாடகச்₀ சைது வண்ணாரப்பாறை யிடுவோமாகவும்* (SII,xiii,114.)

வண்ணிகைத் திருக்கொற்றக்குடை (பெ) பல நிறமுள்ள வெற்றிக்குடை (1014) *வண்ணிகைத் திருக் கொற்றக்குடை மகுடம் மொட்டு அடுத்து விளக்கின பறளையுட்பட ஒன்று* (SII,ii,1.)

வண்பதி (பெ) வளப்பம் மிக்கவூர் (905) *சோமாசி குறுச்சி என்னுங் காமர் வண்பதி காவலன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வணங்க (வி) பணிய (921) *குருதி ஆரமுங் குணந்தும் குலவர்த்₃தன ராடி வணங்க* (SII,iii,206 (a).)

வணங்கு (வி) வளையும் (1176) *மால் கொள்வன வணங்கிடையே* (SII,xvii,585.)

வணம் (இ) பொருட்டு (987) *ஆள்வார் அமுது செய்யும் வணம் ஊட்ட கொண்ட செம்பொந்* (SII,xiii,16.)

வணிகைமாதா (பெ) வாணிகரின் ஒரு சிறப்புப் பெயர் (1300) *அல்லூர் உடையான் கயிலாயன் ஆன வணிகைமாதா எழுத்து* (AVNM,6,p.36-40)

வணியன் (பெ) வியாபாரி (917) *அறுகை வணியன் கண்ணி பழஞ்சி* (TAS,ii,112.)

வத்த (வி) வைத்த (871) *பூதிகண்டன் சித்திரை விஷூ திருவிழாவுக்கு தாயாரைச் சார்த்தி வத்த பொன்* (SII,xii,61.)

வத்தவர் (பெ) வத்தவ நாட்டரசர் (1136) *சேதியர் திரிகத்தர் வங்கவராங்கவர் வத்தவர் மத்திர கங்கர்* (SII,vii,1038.)

வத்தனை (பெ) பரிவர்த்தனை (982) *கால் வத்தனையால் உடைய நிலம் இக்கமுகம் தோட்டமும்* (SII,xix,304.)

வத்தான் (வி) வைத்தான் (939) *இது வத்தான் மலையாளன்* (SII,vii,955.)

வத்தி (பெ) விளக்குத் தகழி (1249) *துடர் 1னால் இடை 18ம் வத்தி சிறுச் செப்புப்பானை அழித்துச் செய்த திருவாலத்திதட்டம்* (SII,xii,150.)

வத்தினை (பெ) வர்த்தனை: அலுவலருக்காகச் செலுத்தும் கட்டணம் (1530) *உள்ளூர் பல பட்டடை குடிமக்கள் சம்மாதம் உள்பட நம்மிட வத்தினை குமாரர் வத்தினை நம்மிட அதிகாரி சிங்கராசர் நரசையர்வத்தினை மற்றும்* (SII,vi,272.)

வதி (பெ) வடிகால் (990) *இவ்வூர் ஸ்ரீ வீர நாராயண பேரேரி கீழ் சூர சூளாமணி வதிக்கு கிழக்கு* (SII,xiii,115.)

வதி (பெ) கால்வாய் (550) *மாவேத்தத்து வதியின் கிழக்கும்* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

வதியட்டி (வி) கால் தோண்டி (924) *முக்கோல் அகலத்தால் வதியட்டி* (SII,vi,292.)

வதி$_4$த்த (வி) கொன்ற (1100) *கங்கைக் கரையிலே கோ$_3$ப்$_3$ராஹ்மணரை வதி$_4$த்த பாதகம் அனுபவிக்கக் கடவர்கள்* (EC,ix,Cp.93.)

வதி$_4$த்தவன் (பெ) கொன்றவன் (1376) *கபிலெ கங்கையிற் வதி$_4$த்தவன் பாபத்திலே போகக் கடவன்* (EC,ix,Bn,132.)

வதுவை (பெ) திருமணம் (1070) *போர்த்தநிப் பூவையும் வதுவையிபுணர்ந்து தந்நுரிமைத் தேவியராக* (SII,iii,57.)

வதை (பெ) கொலை (1155) *கோ$_3$ப்$_3$ராஹ் மணரை வதை பண்ணினாராக* (EC,iii,Sr.76.)

வத்$_3$தி$_4$ப்பதாக (வி) வளர்வதாக (921) *துஷ்டர் கெட்டு விசிஷ்டர் வத்$_3$தி$_4$ப்பதாக* (ARASI,1904-05,p.131f.)

வந்த (வி) (படையெடுத்து) வந்த (591) *விலக்கு மிறையார் வந்த ஞான்று* (CHHS,1971/96.)

வந்த (வி) சேர்ந்த (805) *வந்த எரு விலையால்* (SII,vi,359.)

வந்தது (பெ) உண்டாகியது (1006) *இந்நிலத்தால் வந்தது* (SII,v,518.)

வந்தவாறு (பெ) கணக்கிட்டு வந்தபடி (877) *ஏரி கரையின் கிழக்கு குழி வந்தவாற்றால் ஆயிரத்திருநூறு குழியும்* (SII,vi,288.)

வந்தன (பெ) நேர்ந்தன (817) *பூ$_4$மி உடைய குடிகள் பூ$_4$மி ஸாமந்துசெய்க என்று வந்தன எப்பேர்ப்பட்டனவும்* (SII,vi,344;EI,xxiv,7 (a).)

வந்தனை (பெ) (= வத்தினை) (1600) *அதிகாரி சோடி கரணிக்கர் சோடி ஓலை எழுத்து வந்தனை அரசு பேறு* (SII,viii,293.)

வந்தான் (பெ) வந்தவன் (875) *இப்பொன் கடைக்கூட்ட வந்தாற்கு* (SII,xii,99.)

வந்தித்து (வி) வணங்கி (985) *மலைஇல் தவஞ் செய்யக்கண்டு இருக்குவேள் வந்தித்து அவிப்புறஞ் செய்த பள்ளிச்சந்தம்* (IPS,9.)

வந்தீண்டி (வி) அணுகி (1154) *மன்நவர் வந்திறை தம்மை வந்தீண்டி சேவிப்ப* (SII,vii,1005.)

வநியர் (பெ) வீரர் (1515) *பாத்ரஸாமந்தரையும் வந்நியரையும் ஜீவக்$_3$ராஹமாஹ பிடித்துக் கொண்டு* (TDI,iii,78.)

வநிய வரி (பெ) வன்னிய வீரர் செலுத்தும் வரி (1459) *மந்தைவரி நஞ்சைக் காணிக்கை உசாவடிக் காணிக்கை வந்நியவரி* (ARE,1913,27)

வநசரர் (பெ) வேடர் (1084) *நாடடிப்படுத்து மற்றவர் தம்மை வநசரர் திரியும் கொற்ற வெஞ்சுரம் ஏற்றி* (SII,iii,69.)

வநம் (பெ) பெரிய காடு (796) *வநக$_3$ஹங்களைக் கழிந்து* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

வநிதை (பெ) பெண் (1121) *புநித குணவநிதை திரிபுவநமுடையாள்* (SII,xvii,605.)

வம் (வி) வருவீர் (1076) *கடும் போர் மன்னரடற் போர் வம்மென்றறை கூருள் படர் புகழ்* (SII,vii,137.)

வம்பு (பெ) ஓர் அறுவடைப் போகத்தின் பெயர் (1289) *இன்நிலம் ஒரு மாவும் காரும் பசானமும் வம்பு புன்பயிரும் உட்பட* (SII,vii,76.)

வம்ச$_0$ம் (பெ) குலம் (796) *பல்லவ வம்ச$_0$த்துள்* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

வயக்கி (வி) பண்படுத்தி (947) *புன்செய்த் திடலை சந்திராதித்தவற் இறை காவலாகக் கொண்டு வயக்கி* (SII,viii,698.)

வயக்கும் (வி) திருத்தும் (916) *இக்கூறு வயக்கும் வார்ப்பர்க்குக் குடுப்பதாகவும்* (SII,xiv,56.)

வயக்கு வித்த (வி) பண்படுத்திய (1012) *வெண்ணாவல்....ந்த நிலத்தை கல்லி நீர் நிலமாக வயக்குவித்த மா தன்றி...* (SII,viii,681.)

வயத்தன் (பெ) வயதையுடையவன் (796) *பந்தி ரண்டு வயத்தற் பாலனை* (SII,iv,135; MASI,lxiii,p.54-59.)

வயப்படை (பெ) வலிய ஆயுதம் (1056) *விண்ணகத் தேற்றி வன்னிய ரேவனும் வயப் படைத் துத்தநுங்* (SII,iii,29.)

வயப்புலவர் (பெ) வெற்றி பாடும் புலவர்கள் (?) (1363) *காளமுகில் போல் வழங்கு கம்பணனுங் கொண்டாட மண்டலிகர் ஆலிப்ப வயப் புலவர் வளம்பாட* (EI,xxviii,28 (ii).)

வயப் புலி (பெ) சிங்கம் (1012) *கலி செக மண்டல சுத்தியில் வயப்புலி வளர்த்தோன்* (SII,vii,863.)

வய மன்னர் (பெ) பகை அரசர் (833) *கூடாத வய மன்னரை விண்ணூர்ப்புக வெகுண்டு* (SII,xiv,44.)

வயல்க் காடு (பெ) நஞ்சை நிலம் (885) *கிழக்கு வயல்க் காடே யெல்லையாகவும்* (TAS,ii,p.80-82.)

வயல் பரிச்சு (பெ) வயல் சார்ந்த இடம் (1273) *பெருநான் கெல்லைக் குட்பட குளமும் குளப் பரிச்சும் வயலும் வயல் பரிச்சும் புஞ்சைப்பாடும்* (IPS,386.)

வயஸ்ஸு (பெ) வயது (1246) *செய்யுமிடத்து நாற்பது வயஸ்ஸில் தாழா தாரைப் பாத்து இடவும்* (ARE,1931-32,p.57-58.)

வயானம் (பெ) (= மயானம்): சுடுகாடு (1523) *சவத்துக்கு முன்னே வயானத்துக்குக் கூட்டிப் போகிறதும்* (IPS,847.)

வயிடூரியம் (பெ) நவமணியில் ஒன்று (1513) *பழைய வஜ்ரம் 284 சிவப்பு 822 வயிடூரியம் 91 னீலம் 6க்கும் தூக்கம் 380க்கும் கிரீடம் 3* (TDI,iii,61.)

வயிரச் செயல் (வி) வயிரக் கற்கள் பதித்துச் செய்தது (1014) *வயிரச் செயல் தாலி மணிவடம் ஒன்றில் தாலி மணி நூற்று ஐம்பத் தேழும்* (SII,ii,2.)

வயிர சாயலம் (பெ) ஒரு நகை (1014) *வயிர சாயலம் ஒன்று பொன் நூற்று இருபத்து இரு கழஞ்சேய்* (SII,ii,2.)

வயிரத் தருப்பு (பெ) தரம் குறைந்த வயிரக் கற்கள் (?) (1241) *திருப்பட்டம் 1ல் செய்த முகம் 3ல் தச்ச கோமளம் 3ம் வயிரத் தருப்பு 72ம்* (SII,xii,124.)

வயிரம் (பெ) நவமணியுள் ஒன்று (897) *இதனிற் கட்டின வயிரம்* (SII,xiii,319.)

வயிர சா$_0$யலம் (பெ) ஒரு நகை (1015) *வயிர சா$_0$யலம் ஒன்று பொன் இருபத்தேழு கழஞ்சரை* (SII,ii,8.)

வயிர உழுத்து (பெ) வயிரம் பதித்த ஒரு நகை (1014) *வயிர உழுத்து ஒன்றிற் கட்டின வயிரம் ஐஞ்சும்* (SII,ii,93.)

வயிராகிகள் (பெ) சிவன் கோயிலில் ஊழியம் புரியும் துறவிகள் (1201) *வயிராகிகள் இருவர்க்கு களச் சாத்தங்குடியில் அடைத்த நிலம்* (SII,xvii,599.)

வயிராக்$_3$யர் (பெ) கொள்கை உறுதிபூண்ட சமணத் துறவிகள் (771) *படாரர் உள்ளிட்டுப் பதின்மர் வயிராக்$_3$யர்க்கு* (SII,v,405.)

வயிற்றுதித்த (வி) பிறந்த (1198) *திருவயிற்றுதித்த துளங்கு மணித் திருமார்மன்* (EC,x,Kl.131.)

வயிறுயிர்த்த (வி) பிறந்த (905) *மஹாபந்நி வயிறுயிர்த்த சேயான திருத்தகை ஒன்* (TASSI,1962-65,p.1-31.)

வயிச$_0$ராவணர் (பெ) வாணிகர் (1150) *வயிச$_0$ரா[வணரை திரு] வயுறு வாய்த்த*

லோகமாதாவை வீரமாகாளமென்று பேர் சாத்திநமையாலும் (AVNM,9,p.37-39)

வயோவ்ருத்₃த₄ர் (பெ) முதியவர் (921) *விஜ்யாவ்ருத்₃த₄ரையும் வயோவ்ருத்₃த₄ர்களையும்* (ARASI,1904-05.)

வர்க்₃க₃த்தார் (பெ) சந்ததி (985) *இவனும் இவன் வர்க்₃க₃த்தார் இப்பணி* (SII,xiii,342.)

வர்ஜ்ஜிப்பது (வி) விடுவது; விலக்குவது (961) *அந்யோந்ய ஸஹவாஸம் வர்ஜ்ஜிப்பதாகவும்* (SII,xiii,114.)

வர்த்₃த₄மாநம் (பெ) வட்டி வருவாய் (884) *இவைத்தில் வர்த்₃த₄மாநம் கொண்டு* (SII,xii,68.)

வர்த்₃தி₄த்திடுவாராக (வி) பெருகுவாராக (919) *நம் க்₃ராமத்து துஷ்டர் கெட்டு சிஷ்டர் வர்த்₃தி₄த்திடுவாராக* (ARASI,1904-05,p.131f.)

வர்ஷம் (பெ) மழை (815) *த₄நவர்ஷ பொழிதற்கு* (SII,iii,206b.)

வர்ஷம் (பெ) ஆண்டு (943) *கலி உகவர்ஷம் நாலாயிரத்து நாற்பத்து நாலு* (ARASI,1905-06,p.171-84.)

வர்ஷ வர்த்₃த₄நம் (பெ) ஆட்சி ஏற்பட்ட ஆண்டு (808) *வர்ஷவர்த்₃த₄நம் [யா]ண்டு பன்னிரண்டாவது* (EI,viii,29.)

வர (வி) எதிர்த்துவர (795) *கரைக் கோட்டை அழிப்பான் வர* (TAS,i,158-59;ARE,1958-59,471.)

வரக் கண்டு (வி) *[நீர்]* பாய்ச்சி (833) *நீலப்பெருங்கற் பிளந்து சாலப்புனல் வரக் கண்டும்* (SII,xiv,44.)

வரக் காட்ட (வி) அனுப்ப (919) *பரகேஸரிவர்மர் ஸ்ரீமுகம் அருளிச் செய்து வரக் காட்ட ஸ்ரீ ஆஜ்ஞையினால்* (ARASI,1904-05,p.131f.)

வரக் காட்டி (வி) அனுப்பி (1444) *துக்கைப் பிள்ளை அடைக்கலங் காத்தாரான திருமலை ஆண்டானை வரக் காட்டி* (IPS,705.)

வரக்காட்டின (வி) அனுப்பின (970) *நாயற்று வரக்காட்டின திருப்பொற்கொள்கை* (SII,iii,148.)

வரக் காட்டுக (வி) அனுப்புக (998) *த₃ண்ட₃க் காண பட்டு இவந் பங்கு போக்குச் செய்து பொன் வரக்காட்டுக* (SII,vii,414.)

வரக் கூலி (பெ) போக்கு வரத்துச் செலவு (1028) *ஈரமும் பதரும் வாலும் உல்கும் வரக்கூலியும் நாங்களே பட்டு* (SII,viii,5.)

வர கொண்ட (வி) வசூலித்த (932) *நகர வாரிய கூட்டஞ் சாற்ற வாராவிட்டாரை வர கொண்ட தண்டப் பொன்* (SII,v,588.)

வரச் சாவி (பெ) வறட்சியால் சரியாக விளையாத தானியம் (1250) *சிலவறுத்து தரவு கொள்வாராகவும் வெள்ளச் சாவி வரச் சாவி பயிர் பாத்து கொள்வதாகவும்* (IPS,343.)

வரணம் செய்தார் (பெ) வாரியத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் (1119) *இய்யாடு முதல் வரணஞ் செய்யுமிடத்தில் ஓராண்டு வரணஞ்செய்தார்* (SII,xvii,627.)

வரத்து (பெ) உள்ளே கொண்டு வருகை (885) *வாயினம் வருமதில் வரத்திலும் போக்கிலும்* (TAS,ii,p.80-82.)

வரத்து (பெ) வரும் வழி (923) *வடக் கிற்றூம்பில் குமிழி வரத்தின் றெற்கடைய* (SII,xix,397.)

வரநிற்கில் (வி) உண்டானால் (1100) *இவ்வறத்துத் தீயார் நசுக்கும் பகைவ்வராயுங் கூலிச்சேவகரால் வர நிற்கிலும்* (AVNM,7,p.24)

வரப் பண்ணும் (வி) உண்டாகச் செய்யும் (1070) *கேழில் சேர் நன்மை வரப் பண்ணும் பாண்டிய விண்ணகர்* (CHEN,xx,p.243-44.)

வரப்பு (பெ) வயலைச் சுற்றிய கரை (1300) *காடுவெட்டி வரப்பு ஏறட்டுப் பயிர் செய்யும் நிலத்து* (IPS,560.)

வரம் (பெ) பக்கம்; எல்லை (1218) *இந்நாயனார் திருப்பதியில் நாலு வரத்துக்குள்ளு இருந்த குடிமக்களை நோக்குவோமாகவும்* (IPS,176.)

வரம்பழி கரம்பு (பெ) பாழ் நிலம் (1470) *திருவிடையாட்டம் கலிதீரமங்கலத்து தெற்குப் பூட்டைப் பற்று வரம்பழி கரம்பும்* (TDI,ii,47.)

வரம்பழி தருசு (பெ) பாழ் நிலம் (1262) *பருமரக்காடும் வரம்பழி தருசுமாய்க்*

கிடக்கையாலே நாயனார்க்கு முதலுமின்றி (IPS,350.)

வரம்பறுத்த (வி) எல்லை நிர்ணயம் செய்யப்பட்ட (880) *எம்மூர் வரம்பறுத்த விளை நிலமாய் இறை வயல் நிலமும்* (SII,xii,102.)

வரம்பறை (வி) வரப்பு அழிந்த நிலை (1068) *அகையாறு வரம்பறையாய்ப் பயிர் செய்யாதேய் கிடந்த நிலமும்* (SII,iv,529.)

வரம்பறை பாழ் (பெ) வரப்பில்லாத பாழ் நிலம். (1319) *நடுவுள்ப்பட்ட நன்செய் தடி பலவினால் வரம் பறைபாழ் ஆட்டைப் பாழ்* (SII,iv,525.)

வரம்பீடு (பெ) வரப்பு (905) *வண்ணத்தார் வளாகத்தின் நன்குயர் வரம்பீட்டுக்கும்* (TASSI,1962-65,p.31; PNDCP,p.95-115.)

வரம்பு (பெ) வரப்பு (772) *செய்யில் வடவரம்புக்கு வடக்கும்* (SII,xiv,19.)

வரவிடும் (வி) அனுப்பும் (1051) *வீரவல்லமற்றவர் வரவிடும் ஒற்றரைப் பிடிப்பித்து* (SII,vii,1046.)

வரவு (பெ) வருதல் (1068) *வல்லவர் கோனை வரவு காணாதவன் சொல்லிய நாளின்* (EI,xxi,38.)

வரவு (பெ) போக்கு (950) *வாநவர்க்குத் தூது சென்று மால்கடலின் வரவு மாற்றியும்* (TASSI,1962-65,p.32-52..)

வரவு (பெ) தோற்றம்; பிறப்பு (950) *கோவிந்தஸ்வாமி பட்டச் சோமாசி தன் குல வரவில் வாஸுதேவ பீதாம்பரப்பட்ட னென்ற* (TASSI,1962-65,palce,p.187-196,p.32-52.)

வரவு (பெ) தடவை (950) *மண் கொண்டு வந்து கரையில் வரவில் நூற்று நாற்பதின் கூடை* (SII,viii,652.)

வரவை (பெ) வயல் துண்டம் (950) *துடவைகளின் தென் வரவை* (TASSI,1962-65,p.32-52.)

வரன்றி (வி) அரித்துக் கொண்டு (905) *பொன் வரன்றி மணிவரன்றி* (TASSI,1962-65,p.31; PNDCP,p.95-115.)

வராகக் கொடி (பெ) பன்றிக் கொடி (1134) *காலிங்கரும் வராகக்கொடி வடவிரட்டரும் வேழிக்கொடி விறல் வேந்தரும்* (SII,v,645.)

வராகன் (பெ) ஒரு நாணயம் (1257) *ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்கின வராகன் பொன் ஆயிரத்த்தொரு நூறு* (EI,xxiv,12 (b),p.91.)

வரால் (பெ) வரால் மீன்கள் (905) *வராலுகள் புனற்பதி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வராஹ முகம் (பெ) பன்றி முகம் (1014) *வாராஹமுகத்தொடுஞ் செய்த விஷ்ணுக்கள் ஒருவர்* (SII,ii,44.)

வரி (பெ) புரவுவரித் துறை (994) *(0994) ராஜத்வாரத்தேனும் தந்மாஸநத்தென்றல் வரியில்லென்றல் மற்றுத்தானும்* (EI,xxii,32.)

வரி (பெ) அரசு இறைகளின் கணக்கு (976) *ப்ரஸாதம் பெற்றுத் தொண்டை நாட்டு வரியில் இறையிழிச்சி* (SII,xix,169.)

வரி (பெ) கோடு (800) *வாள் வரி வேங்கை* (IPS,236.)

வரிக்கற்றை (பெ) கூரை வேயும் தென்னை ஓலை (1239) *வரிக் கற்றை இடுமடத்து* (SII,vi,50.)

வரிக்கூறு (பெ) வரி நிர்ணயிக்கும் முக்கிய அதிகாரிகள் (1125) *வரிக்கூறு வீரவிச்சாதிர மூவேந்த வேளானெழுத்து* (SII,v,295.)

வரிக்கொண்டு (வி) வசூலித்து (1246) *ஸபா வினியோகம் குடிமையுடன் கூட்டாதேய் தனியெ வரிக்கொண்டு கணக்கனுக்கு நியோகம் எழுதிக் குடுத்து* (ARE,1931-32,p.57-58.)

வரிசிரை (பெ) விரிசல் கண்ட நிலம் (959) *வரிசிரையாய் கிடந்த பூமிகு* (SII,iii,156.)

வரிசிலம் (வி) விரிசல் கண்ட நிலம் (959) *ஊர் மஞ்சிகமாய் வரிசிலத்து கிடந்த பூமிக்கு கீழ்பார்கெல்லை* (SII,iii,156.)

வரிசை (பெ) மரியாதைச் சின்னம் (1524) *பிறகு தாங்கள் குதிரை குடை வரிசை கற்பித்தத்துக்கு* (SII,xvii,684a.)

வரிசை (பெ) வரி விகிதம் (898) *சூலக்காலால் நூற்றுக்கல வரிசையால் இஞ்ஞூற்றுக் கலமும் கொண்டு* (SII,viii,560.); (1000) *ஒருமாவில் ஆராதிப்பார்க்கு வேலி நூற்றுக்கல வரிசையால்* (SII,viii,552.)

வரிசை (பெ) முறைப்படி (1012) *தூநிறக் குத்தலரிசியிலான நெல்லு வரிசையிற் குறுபவள் கூலியேற்றி* (SII,vii,863.)

வரிசை (பெ) ஒழுங்கு (947) *மறை பொருட்டரிசன மாறுந் தமிழ்கள் மூன்றும் வரிசையிலமைந்த* (SII,xiv,87.)

வரிசைப்பற்று (பெ) தீர்வைக் கணக்கில் கண்ட நிலம் (1439) *வட கெல்லை கரைக்கு தெற்க்கு தடி நிலவரிசைப் பற்றுக்கும் கீழ்மெல் தோப்புக்காலுக்கும்* (TAS,vii,p.5-7.)

வரிசை விலை (பெ) வரி செலுத்தற் பொருட்டு செய்யும் நிலவிற்பனை (1322) *குடி நீங்காத தேவதானமாக வரிசை விலையாக வி.கின்ற* (IPS,448.)

வரித்தொடுப்பு (பெ) வரிவிதிப்பு (1220) *ஊரில் பிறிஞ்சு வேரு முதலாய் ஊரில் வரித்தொடுப்பு பொன்வரி வினியோகம்* (AVNM,7,p.57-58)

வரிந்த (வி) விதித்த (1142) *மல்லாவரசரு முறைமையில் வரிந்த திறை குணந்திறைந்த* (SII,v,705.)

வரிந்தது (பெ) வரியாக வசூலித்தது (759) *இந் நிலத்தால் ஊர் வரிந்ததெல்லாம்* (SII,iv,827.)

வரிப்பாடு (பெ) நிர்ணயித்த வரிகள் (914) *வாசலிற்ப் போந்த குடிமை உட்பட ஊரிடு வரிப்பாடாய்த் தெப்பேர்ப்பட்டதும்* (SII,xix,183.)

வரிப் பொத்தகக் கணக்கு (பெ) அரசு வரிப் பதிவேட்டிற்குப் பொறுப்பான கணக்கன் (1038) *வரிப் பொத்தகக் கணக்கு ராஜராஜப் பாண்டி நாடு ... காஜையிருக்கை* (SII,xiv,157.)

வரிப் பொத்தக நாயகன் (பெ) வரிக்கணக்குப் பதிவேட்டுத் துறை மேலலுவலர் (1014) *புரவு வரி திணைக்களைத்துக் வரிப் பொத்தக நாயகன் ...காமதமங்கலம் உடையான் காஞ்சன் கொண்டையன்* (SII,ii,88.)

வரிப் பொத்தகம் (பெ) அரசு வரிப்பதிவேடு: அதற்கு பொறுப்பான அலுவலர் (978) *பவ்வத்திரி கிழவனடிகள் நக்கனும் வரிப்பொத்தகத் திருநல்லூருடையான் நாழி சந்த்ரசேகரனும்* (SII,iii,151-151a.)

வரியான் யோகம் (பெ) யோகம் இருபத்தேழனுள் ஒன்று (1351) *மங்கலவாரமும் வரியான் யோகமும் பெற்ற சித்திரை நாள்* (KANDT,1968/190.)

வரியில் கழித்து (வி) அரசுவரியில் இருந்து நீக்கி (1276) *மரங்களும் இப்பட்டர்களுக்கு இறையிலியாக வரியில் கழித்து* (CHEN,xi,109.)

வரியிலார் (பெ) அரசின் வரி நிர்ணயிக்கும் அலுவலர் (1149) *இறையிலி யிட்ட நிலத்துக்கு வரியிலார் எழுத்திட்ட உள்வரியும்* (TAS,vii,p.5.)

வரியில் இட்டு (வி) அரசிறைக் கணக்கில் எழுதி (911) *இறையிலி ....வரியில் இட்டுக் குடுத்த தங்கள் ...து பிடாகை நடப்பிப்பதாக* (SII,xix,92.); (976) *தொண்டை நாட்டு வரியிலிறையிழிச்சி வரியிலி வரியிலிடுவித்து தனக்குத்தம் பாடி யுடைய* (SII,xix,169.); (1018) *யாண்டு ஏழாவது நாள் நூற்றைம்பத் தைஞ்சினால் வரியிலிட்டது* (SII,iii,205.)

வரில் (வி) வந்தால் (817) *மூயாண்டின் அகம் படி உடையான் மீள்கவரில் நியாயத்தால்* (SII,vi,344;EI,xxiv,7 (a).)

வரிவு (பெ) வரி (1276) *விச்சுப் பாட்டம் சாரிகை மற்றும் எப்பேர்பட்ட வரிவுகளும்* (EC,x,Bp.68b.)

வருகச்சிதே (வி) வருகையில் (1376) *பள்ளரையும் பிடித்துக் கொண்டு வருகச்சிதே* (IPS,960-61.)

வருகின்றமை (பெ) வருவது (796) *வருகின்றமை கேட்டு* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

வருசாபதி (பெ) ஆண்டு முடிவு (1431) *செந்ம நக்ஷத்ரநாளிலே வருசாபதிக்கு ஒரு திருநாள் எழுந்தருளுகையிலும்* (IPS,702.)

வருசை (பெ) முறை; ஒழுங்கு (1200) *விற்கொடியும் மன்னும் வருசைக் கொடைத் திருமால் மாவாலி வாணந்தன் கருடக் கொடிக் கொடியாம் காண்* (IPS,674.)

வருசை (பெ) வரி விகிதம் (1237) *ஜீவிதமாய் வருகிற நிலத்து தலைவருசை நிலத்திலே இவ்வூர் கடமை யிறுக்குங் கோலால்* (SII,v,431;EI,xxii,10.)

வருணராசன் (பெ) மழைக் கடவுள் (1300) *வரதராசன் காற்றசைப்ப வருணராசன் நீற் றெளிப்பத் தேவராசன் திசை விளக்க* (SII,vii,129.)

வருந்தேல் (வி) வருந்த வேண்டாம் (796) *சக்ரவத்தி ஆவா னீ வருந்தேலென்று* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

வரு பகை (பெ) உண்டாகும் பகை (1171) *ஒருவருடன் ஒருவற்கும் ஒன்றினுடன் ஒன்றுக்கு வருபகை யகத்தின்றி விழைந்து* (SII,xvii,592.)

வரும் (வி) உண்டாகும் (866) *இனி வருங் கல மூன்று சரணத்தார்க்கும் ஒப்பது* (TAS,i,p.1-14.)

வருமரபு (பெ) தொல் முறைமை (1127) *மன்னவர்கள் வந்திறைஞ்ச வரு மரபில் மணிமுடி சூடி தென் குமரியும் வடகங்கையும்* (SII,xiv,213.)

வருமானவரி (பெ) மேல் வரும் வருவாய் (1255) *எப்பேர்பட்ட உரிமைகளும் மற்றும் வருமானவரி இருந்தளவும் போகமும் போக விருத்தியும்* (SII,xii,179.)

வரு முறை (பெ) தொன்று தொட்டு வரும் முறை (1157) *அருமறை விதினெறி யனைத்தும் தழைப்ப வருமுறை உரிமை மணிமுடி சூடி* (EI,xxxiii,30.)

வருமை (பெ) (= வறுமை) (1225) *தாங்கள் வருமை படத் திரிகையாலும்* (SII,iv,500.)

வரை (பெ) வானுலகம் (1012) *வழுதியர் வரை புக மற்றவர்* (SII,vii,863)

வரை (பெ) முத்துத் தன்மைகளுள் ஒன்று (1015) *சிவந்த நீரும் குளிர்ந்த நீரும் வரையுங் கறையுங் குருவும் சுப்பிரமும் உடையன* (SII,ii,7.)

வரை (இ) முடிய (1222) *நெல்லே சிலவாக இற்றைவரையும்* (SII,vii,1028.)

வரை (பெ) மலை (771) *நிலையமை நெடுவரை இடவஇற் கிடாய்* (EI,xvii,16.)

வரைந்து (வி) பொறித்து (921) *வசை இல் மாக்கயல் புலி சிலை வடவரை நெற்றிஇல் வரைந்தும்* (SII,iii,206 (a).)

வரை மார்வு (பெ) மலை போன்ற அகன்ற மார்பு (1171) *மலர் மடந்தை மணியார வரை மார்விற் குடிவாழ* (SII,xvii,592.)

வரை வேய் (பெ) மலை மூங்கில் (1171) *பொய்யுடையன வரை வேயேய் போர்மலைவன எழுகழனியே* (SII,xvii,592.)

வல் (இ) வலிய (800) *வல்லரண் பல்லவன்* (EI,xiii,10.)

வல்ல (இ) திறமையுடைய (1150) *பழுதிலாத் தொழில் வல்ல கழுதை மேவ...* (AVNM,9,p.33-34)

வல்ல (இ) நன்கு கற்ற (871) *வேதம் வல்ல சிவயோகிகள்* (SII,viii,581.)

வல்லக்குற்றந்தொழில் (பெ) பெருங்குற்றம் (500) *தேவகுலத்துக்குற்றது செய்து வல்லக் குற்றந் தொழில் செய..களு..டஞ் செயவும்* (AVNM,1,p.67-69)

வல்லப₄ன் (பெ) இராட்டிரகூட அரசன் (771) *[வ]ல்லப₄னை வெண்பைவாய் ஆளமருள்ளழிந் தோட* (EI,xvii,16.)

வல்லவர் (பெ) திறமை உடையவர் (985) *இவ்வூர் பாகிக₄ள் அல்லாதார் ஒரு வேத₃ங் குறையாமே வல்லராய் வ்யாகரணமும்* (SII,vi,322.)

வல்லவரையன் (பெ) (வாதாபி) கணபதி (1145) *இத்தர்ம மழிப்பான் வல்லவரையன் ஸத்தியம் மாதா பிதாக்களுக்குப் பிழைத்தார் க₃ங்கை₃ இடை குமரி இடை* (SII,viii,319.)

வல்லவரையன் (பெ) (1181) *இத் தந்மம் அழிப்பாந் வல்லவரையந் சத்தியம் வாதாவிகளுக்கு பிழைத்தாராவார்* (SII,vii,782.)

வல்லவரையன் (பெ) இராஷ்டிரகூட அரசன் (783) *பெருமானடிகள் மேல் வல்லவரையன் படை வந்து வெண்குழிக் கோட்டை அழித்த ஞான்று* (EI,xxii,18;TASSI,1958-59,p.20.)

வல்லன் (பெ) நன்கு பயின்றவன் (800) *வேத₃ம் வல்லனா யுக்தனாகிய ப்₃ராஹ்மணன்* (SII,vi,355.)

வல்லாந் (பெ) தேர்ச்சி பெற்றவன் (921) *மந்த்ர ப்ராஹ்மணம் வல்லாந் ஓதுவித்தறிவ்வானை* (ARASI,1904-05,p.131f.)

வல்லார் (பெ) தேர்ந்தவர் (804) *மந்திரப்₃ராஹ்மணம் வல்லார் ஸுவ்ருத்தராய் இருப்பாரே* (SII,xiv,37.)

வலங்கை (பெ) வலங்கைச் சாதியார் (1449) *தொண்டை மண்ட₃லத்து படைவீட்டு ராஜ்யம் நாட்டவர் வலங்கையும் இடங்கையும் மஹாஜநமும்* (SII,i,81.)

வலங்கைத் தளம் (பெ) ஒரு சாதித் தொகுதி (1200) *அக்கைசாலையும் பள்ளியும் புகுந்து நலிவாருண்டாகில் வலங்கைத் தளத்துக்கு பிழைச்சவந்* (EC,ix,An.67.)

வலங்கை வரி (பெ) வலங்கைச் சாதியார் மீதான வரி (1494) *சமையப்படி இடங்கை வரி வலங்கை வரி கொ...மனை வரி* (ARE,1913,074)

வலங்கை வேளைக்காறர் (பெ) சோழர் படையின் ஒரு முக்கிய பிரிவு (1007) *ஸ்ரீ ராஜராஜ தேவர் படை ஜநநாதத் தெரிஞ்ச வலங்கை வேளைக்காறரில்* (SII,xvii,238.)

வலங்கை இடங்கை மகந்மை (பெ) வலங்கை இடங்கை வீரர் கொடுக்க வேண்டிய வரி (1066) *சேவகக்காசும் வலங்கை இடங்கை மகந்மையும் திங்கள் [மேரா]மும்* (SII,v,976.)

வலங்கொண்டு (வி) வெற்றி பெற்று (905) *கொங்கருடல் மடிய வெங்கதிர் வேல் வலங்கொண்டும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வலஞ் செய்து (வி) வலமாகச் சுற்றி வந்து (753) *படாகை வலஞ் செய்து கல்லுங் கண்ணியுந் நாட்டி* (SII,ii,73.)

வலநேர்பு (பெ) உலகை வலம் வரல் (1069) *குலமுதற்ப் பருதியின் வலநேர்பு னிவற்கு ஒற்றை யாழி யுலாவ* (SII,viii,4.)

வலம்புரி (பெ) வலம்புரிச் சங்கு (1446) *வரிசேர் பொழிலணி தென் காசிக் கோயில் வகுத்து வலம்புரி சேர் கடற் புவி போற்ற வைத்தேன்* (TAS,i,p.95-98.)

வலயம் (பெ) ஒரு நகை (991) *இத் தேவருடைய பாஹு வலயம் இரண்டி நாற் பொன்* (SII,xiii,144.)

வலயர் (பெ) ஒரு சாதி (1266) *வடபாற் கெல்லை வலயர் பாங்கான எல்லைக்கும்* (IPS,367.)

வலவற் (பெ) (=வலையர்); ஒரு சாதி (1547) *மேற்படியூர் வலவற்கு நின்றையம் இட்டபடிக்கு* (AVNM,8,p.24)

வலவன் (பெ) தேர்ப்பாகன் (905) *மத்தமாமலை வலவன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வலன் (வி) படை (771) *மத்தயானை செலவுந்தி மான வேல் வலனேந்திக் கடுவிசையால் எதிர்ந்தவரை* (EI,xvii,16.)

வலார தூளிகை (பெ) உயரமான உச்சி (815) *வடவரையது வலார சூளிகை மணிக்கெண்டைப் பொறிசூட்டியும்* (SII,iii,206b.)

வலாற்காரம் (பெ) பலவந்தம் (1344) *இதுக்கு விரோதஞ் சொல்லி இதில் சந்தகம் ஆன வஸ்துவை ஆசையாலே யாதல் வலாற்காரத்தாலே யாதல் பறித்துக் கொண்ட பாபகார்ம்மாக்கள்* (UCR,xviii,p.16-23.)

வலாஹகம் (பெ) மேகம் (815) *தநவர்ஷம் பொழிதற்கு வலாஹகத்தின் வ்ரதம் கொண்டு* (SII,iii,206b.)

வலி (பெ) பலம் (771) *கலி அரைசன் வலி தளர* (EI,xvii,16.)

வலிஞ்சார் (பெ) மீறினவர்கள் (994) *இதற் றிறம்பில் திருவாணை வலிஞ்சார் படும் தண்ட படுவோமாகவும்* (SII,xiii,199.)

வலிஞ்சி (வி) மீறி (1089) *கொயிற்றமர் வலிஞ்சி இறை கொள்ளில்* (ALB,viii,p.95-97.)

வலிய (இ) வன்முறையால் (866) *குடியை வலியக் கொண்ட முதல்* (TAS,i,p.1-14.)

வலியக் கொண்ட (வி) பலவந்தப் படுத்திப் பெற்றுக்கொண்ட (866) *தேவதானத்திலுங் குடியை வலியக் கொண்ட முதல் ஒன்றுக்கு* (TAS,i,p.1-14.)

வலைக் கண் (பெ) பசுவின் கன்று (?) (1206) *பூதமுமிட்டுச் சூலாடும் வெட்டி வலைக் கண்ணுங் குறோவையு மறுத்து* (ARE,1934-35,p.62.)

வலைச்சி (பெ) வலையச்சாதிப் பெண் (1523) *நம்முடைய ஊற்குள் பெண்டுகள் அல்லவானால் வலைச்சி முக்காட்டு இட்டுச் சவத்துக்கு முக்காட்டு இட்டு சவத்துக்கு முன்னே வயானத்துக்குக் கூட்டிப் போகிறதும்* (IPS,847.)

வலையம் (பெ) சூழ்ந்த இடம் (1224) *கயல்கள் விளையாட இருங்கடல் வலையத்தினிதறம் பெருகக் கருங்கலி கடிந்து* (SII,iv,372.)

வலையம் (பெ) தோள் வளை (1233) *உதர பெந்தனம் திருப்பிறை பாகுவலையம் இரண்டும்* (SII,xvii,455.)

வலையர் (பெ) ஒரு சாதி (950) *மரமிடும் வலையர்க்கு இரு கலமும்* (SII,viii,652.)

வவ்வி (வி) பற்றி (921) *பாக சாஸநனாரம் வவ்விஉம்* (SII,iii,206 (a).)

வவ்விய (வி) கவர்ந்த (771) *வாளமருளுடன் வவ்விய* (EI,xvii,16.)

வழக்கப் பரிசட்டம் (பெ) அடியாருக்கு வழங்குதலுக்குரிய துணி (1036) *திருவானித் திருநாளில் அமுது படிக்கும் வழக்கப் பரிசட்டத்துக்கும்* (SII,iv,223.)

வழக்கம் (பெ) (=திருக்கை வழக்கம்) (1036) *திருவாதிரைத் திருநாளைக்கு வேண்டும் வழக்கத்துக்கு பரிசட்டம் உள்ளிட்ட அழிவுகளுக்கு* (SII,iv,223.)

வழக்கம் (பெ) வழங்குதல் (1113) *தீர்த்த$_2$ பிரசாதத்தும் அமுது செய்தருளி அடியாற்கு வழக்கத்துக்கும் திரு அமுதரிசி* (SII,vi,19.)

வழக்காடி (வி) சண்டை செய்து (1017) *சிங்கன் குலமாணிக்கன் சிறுதநத்து இளையராஜ உத்தம தெரிந்த வலங்கை வேளைக்காறரோடு வழக்காடிப் பட்டமையில்* (SII,xvii,315.)

வழக்காடு (பெ) தகராறு (1156) *நீர் வழக்காட்டுச் சுட்டி பிணக்கின இடது* (SII,vii,432.)

வழக்கு (பெ) குறை (866) *எவ்வழக்குச் சொல்லியும்* (TAS,i,p.1-14.)

வழங்கி (வி) கொடுத்து (905) *நோந்பகடாயிரம் வழங்கியும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வழங்கியருள (வி) பங்கிட்டுக் கொடுக்க (1045) *திருவோலக்கத்துப் பலர்க்கும் வழங்கியருளச் சட்டிச்சோற்று பத்தும்* (SII,iv,867.)

வழங்கு (வி) கொடுக்கும் (905) *நிதி வழங்கு கொடையாலும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வழா (வி) தவறாத (905) *ப்ரஹ்மதேய ஸ்திதி வழாவகைப் ப்ரதிவியின் கண்ணிலை பெறுத்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வழி (பெ) பாதை (691) *முதுகாட்டு வழியின் மேற்கு* (SII,i,151;EI,xvii,22.)

வழி (பெ) விழுக்காடு (691) *இப்பங்கு இருபத்தென்தின் வழியாலே பங்கிட் டுண்பார்ராகவும்* (SII,i,151;EI,xvii,22.)

வழி (பெ) பொறுப்பில் (809) *குணவம்பல தேவன் வழி அடுத்த சாவாமூவாப் பேராடு* (SII,xiv,40.)

வழி (பெ) சந்ததி (833) *சந்திராதித்தர் வழித்தோன்றி* (SII,xiv,44.)

வழி (பெ) ஒழுக்கம் (862) *நன்றமைத்த வழி யறவோற்க்கு* (SII,xiv,45.)

வழி (பெ) நில உட்பிரிவு (924) *அருவா நாட்டு மிய் வழி* (SII,viii,726.)

வழிக்கண்ணார் (பெ) சந்ததியார் (753) *இவரும் இவர் வழிக்கண்ணாரும்* (SII,ii,73.)

வழிச் சாரி (பெ) (=வழிச் சாரியை) (1494) *காசுபாடு நெற்கட்டாயம் மகமை வழிச்சாரி* (ARE,1913,074)

வழிச் சாரியை (பெ) போக்குவரத்துப் பொருள் மீதான சுங்கம் (1300) *நம் நாட்டில் வழிச்சாரியை கொள்ளும் துறைகளிலே* (SII,xvii,141.)

வழித் தோன்றிய (வி) சந்ததி ஆன (805) *பாரத்வாஜ கோத்ரத்தின் வழித் தோன்றிய பல்லவ திலத குலோற்பவன்* (SII,xii,40;EI,xi,15.)

வழிநடைக் காணிக்கை (பெ) ஒரு வரி (1302) *காத்திகைக் காணிக்கை வழிநடைக்காணிக்கை அரிசிகாணம் ...* (ARE,1925,459a)

வழிநடைக் குடிமக்கள் (பெ) வழிப்போக்கர்கள் (1300) *எங்கள் காவல் ஆன ஊர்கள் வழி நடைக் குடி மக்கள் இடைகுடி மக்கள்* (IPS,484.)

வழிநடைக்கு இடும் பணம் (பெ) ஒரு வரி (1340) *...வாசி வழிநடைக்கு இடும் பணம் முன்னிடும் பணம்* (ARE,1919,218); (1339) *ஊர்க்கணக்கர் ஊசிவாசி வழிநடைக்கு இடும் முன்னிடும் பணம் இனவரி* (AVNM,7,p.60-61)

வழிநடை காணிக்கை (பெ) அலுவலர் வரும்பொழுது செலுத்தும் காணிக்கை (?) (1329) *குதிரைவரி நிலைக் காணிக்கை நாட்டார் வைத்த காணிக்கை வழிநடை காணிக்கை நாட்டார் மாடையில் வகுக்கும் காணிக்கை* (SII,iv,287.)

வழிப்போக்கு (பெ) வழியில் போகும் உரிமை (1220) *நீரும் நீர் பாய்ச்சலும் வழியும் வழிப் போக்கும் யாங்களுடைய படியே* (SII,vii,430.)

வழிபட (வி) பூசை செய்ய (500) *ஆராஇந்து வை-இக்கப்பட்டாரு அல்லது வழிபடப் பெறாமையும்* (AVNM,1,p.67-69)

வழிபடும் (வி) வணங்கும் (889) *இத்தேவரை வழி படும் திருப்பாசுரனுக்கும்* (SII,xii,80.)

வழிபடுவான் (பெ) பூசை செய்பவன் (862) *பழுக்கற முறையால் வழிபடுவானுக்கு* (SII,xiv,45.)

வழிபாட்டுப் புறம் (பெ) பூசனைச் செலவிற்கான இறையிலி நிலம் (668) *பெருமான்னடிகளுக்கு வழிபாட்டுப் புறமாக* (ARE,1932-33,p.55;SII,xii,16.)

வழிபாடு (பெ) பூசனை (691) *இத்தளி வழிபாடு செய்வார்க்கு இருக்கும் மநெயும்* (SII,i,151;EI,xvii,22.)

வழி முதல் (பெ) தலைமுறை (1012) *செஞ்சுடர் மௌலி வெஞ்சுடர் வானவன் வழி முதல் வந்த மஹிபதி* (SII,vii,863.)

வழியாயம் (பெ) (= வழிச்சாரி) (1465) *மணக்குடி ஊர்பதியுள்ளிட்ட பற்றில் வழியாயமும் கூட நயினாசி பண்டாரத்தில் கைய்யாண்டு கொண்டு* (TAS,vi,82.)

வழியிலார் (பெ) சந்ததியார் (876) *சாத்தனுமிவன் வழியிலாரு பெ(ற)க் (கட)வதாகவும்* (SII,xi,63.)

வழி அறுவார் (வி) சந்ததியின்றிப் போவார் (953) *தீங்கு வேண்டுவார் வழி அறுவார்* (SII,viii,694.)

வழி ஆயம் (பெ) ஒரு வரி (1300) *குளவடை ஒழுக்கு நீர்ப்பாட்டம் வழிஆயம் இநவரி இடைவரி* (SII,ii,22.)

வழி இறை (பெ) ஒரு வரி (809) *மூன்று மாவினாலும் இறை கடனும் வழி இறை வெட்டி எவ்வகைப்பட்டதும்* (SII,xiv,40.)

வழு (பெ) குறைபாடு (1142) *வழுவிலா மரக்காலால் கார்பாதி பசானம் பாதியாக இட்டு* (SII,xvii,598.)

வழுக்கை (பெ) இளந்தேங்காயின் உள்ளீடு (985) *இரண்டிளநீர் அழுக்குற வழுக்கை பற்றின சந்த்ராதித்தவல் இடுவோமானோம்* (SII,xii,38.)

வழுதலங்காய் (பெ) கத்தரிக்காய் (1497) *அரிசிபடி 2 பருப்புபடி 1/4 வழுதலங்காய் ஒன்று* (SII,v,255.)

வழுதலை (பெ) கத்தரிச் செடி (1068) *ஊர் நத்தத்து கரினையும் வழுதலையும் நடலாந் தோட்டம்* (SII,iv,529.)

வழுதியர் (பெ) பாண்டியர் (1012) *மதிமுதல் வழுதியர் வரைபுக* (SII,vii,863.)

வழுதியர் கோன் (பெ) பாண்டிய மன்னன் (1125) *மன்னர் பிரான் வழுதியர் கோன் வடிம்பலம்ப நின்றருளி* (TAS,i,p.21f.)

வழுதிலைக்காய் (பெ) கத்தரிக்காய் (1254) *இருநூறு வழுதிலைக்காயும் குலோத்துங்க சோழத் திருமடைப் பள்ளி பண்டாரத்திலே முதலிடவும்* (SII,xii,171.)

வழுவா (வி) குறையா (1012) *நயந்த வோத் தெண் வழுவாப் பத்தெண் குத்தல் பழ நெல்லரிசி* (SII,vii,863.)

வழுவாத (வி) நீதி தவறாத (905) *மநு ஸமாநன் வழுவாத செங்கோ னடவி* (TASSI,1962-65, p.1-31; PNDCP,p.95-115.)

வழுவாதது (வி) தவறாதது (943) *தீப் போக்குச் செம்பொன் கழைஞ்சில் பேர்த்து உரையுந் துளையும் வழுவாதது* (SII,iv,547.)

வழுவாமே (வி) தவறாமல் (878) *பலிசை வழுவாமே செலுத்துவோம் ஆனோம்* (SII,xii,100.)

வழுவாமை (வி) தவறா திருத்தல் (771) *பான் முறை இன் வழுவாமை* (EI,xvii,16.)

வழுவின (வி) தவறிய (941) *வைத்தமையிலிப்படி வழுவின நான்று* (SII,viii,529.)

வழுவை (பெ) இளந்தேங்காயின் உள்ளீடு (887) *இளநீர் வழுவை உட்பட* (SII,xiv,16 (a).)

வளங் கெழு (இ) செல்வம் நிறைந்த (862) *வளங்கெழு திருநகர் மதிரை ஆசிரியன்* (SII,xiv,45.)

வளஞ்சியர் (பெ) வாணிகரில் ஒரு வகை (985) *திருவேழ்விக்குடி யோடு கூடிப் பிரியக் கடவ வளஞ்சியரும் நானா தேசியத் திசையாயிரத்தைஞ்ஞூற்றுவரும்* (SII,xix,459.)

வளநாடு (பெ) சோழர் ஆட்சியில் மண்டலத்துக் கீழ் இருந்த ஆட்சி நிலப்பிரிவு (1007) *இவ்வாண்டு கேரளாந்தக வளநாடாயின கோநாட்டு அண்ணல்வாயில் கூற்றத்து கீழத்தாய நல்லூர்* (IPS,86.)

வளம் (பெ) செழுமை (833) *புனன் மல்கி நாட்டவர்க்கு வளஞ் சிறக்கும்* (SII,xiv,44.)

வளம் படுத்தும் (வி) செழிக்கச் செய்தும் (833) *தானாகியது திருத்தி வளம் படுத்தும்* (SII,xiv,44.)

வளர் (வி) நீண்ட (995) *திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட தன்னெழில் வளரூழியில் யெல்லா யாண்டுந் தொழுதகை விளங்கும்* (TMPL,i,p.191-92.)

வளர் (வி) தங்கும் (800) *முகிலி வளர் பீலி உந்த* (EI,xiii,10.)

வளர்க (வி) மிகுதிப்படுக (852) *உறுதியான் புகழ் வளர்க* (SII,xii,48.)

வளர்த்த (வி) பெருக்கிய (1055) *மாப் பெரும் புகழ் மிக வளர்த்த* (SII,v,512.)

வளர்த்து (வி) வளரச் செய்து (905) *நர்சங்கம் இரீஇத் தமிழ் வளர்த்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வளர்த்தோன் (பெ) வளரச் செய்தவந் (1012) *வயப் புலி வளர்த்தோன்* (SII,vii,863.)

வளர (வி) பெருக (771) *பதியைச் சீரோடு திருவளரச் செய்தார்* (EI,xvii,16.)

வளவன் (பெ) சோழன் (939) *கொதி நுதி வேல் வளவந் நந்குடி இடையூர்க் குரிசல்* (SII,xvii,501.)

வளாகம் (பெ) உலகம் (771) *அறைகடல் வளாகம் பொதுமொழி அகற்றி* (EI,xvii,16.)

வளால் (பெ) நிலப் பெயர் (1000) *ஆதன் றுருத்தி வளாலால்ச் செல்லுந் ...பாட்ட நெல்* (TAS,ii,p.173-207.)

வளிபாடு (பெ) (= வழிபாடு) (1200) *கெருப்பு போதகமும் கருங்கல் பணிக்காறுரு வளிபாடு சுவாமிக்கு* (SII,v,771.)

வளெ (பெ) சுற்றிடம் (691) *பரமேச்சுர மங்கலத்துள் அகப்பட்ட வளெயில் சுற்று நிலம்* (SII,i,151; EI,xvii,22.)

வளை (பெ) ஒரு வாத்தியம் (1012) *திமிலை முழக்கமும் மரு உரு வால்வளைத் துணையு* (SII,vii,863.)

வளை (பெ) சூழப்பட்ட இடம் (990) *நிலம் வளையிற் சுற்று முற்று முண்ணில மொழிவின்றியே நீர் நிலமும் புன்செயும் மென்செய்யும் கிணறும்* (SII,v,679.)

வளை (பெ) தோள் வளை (800) *தடவளைத் தோ ணெடுமாறன்* (EI,xiii,10.)

வளை (பெ) ஒரு வகை ஆயுதம் (815) *சுரிவளையவன்றிரு முடிமிசைத் தூணி பல படத் தோளோச்சியும்* (SII,iii,206 (a).)

வளைக்கும் (வி) வளையச் செய்யும் (771) *கோல் வளைக்கும் வேற்றானை* (EI,xvii,16.)

வளைஞ்செயற் (பெ) (=வளஞ்சியர்) (1020) *இப்படி திருநெல்வேலி வளைஞ்செயற்கு இத்தேவர் தேவதாநங்* (SII,v,449.)

வளைத்து (வி) வளையச் செய்து (785) *கொடிஞ்சிலை அன்று கால் வளைத்தும்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

வளையில் (பெ) வளையல் (1014) *நாளதினாலேய் குடுத்த பொன்னின் படிக்கம் ஒன்று கால் மூன்றும் வளையில் இரண்டும் உள்ப்பட மேற்ப்படி கல்லால் நிறை எண்ணூற்றிரு கழஞ்சரை* (SII,ii,1.)

வளையில் (பெ) கழுத்தில் அணியும் அணி (970) *திருச்சந்தம் 4உம் திருக்கழுத்தின் வளையில் 4உம் திருக்காலுக் கழுத்தின் காறை 2ம்* (TDI,i,8.)

வளையிற் சுற்று (பெ) சுற்று முற்றும் (944) *நன்செய்யும் புன்செய்யும் வளையிற் சுற்றும்*

உடும்போடி ஆமை தவழ்ந்த தெப்போர்ப்பட்டதும் (SII,iii,12.)

வற்க்கத்தார் (பெ) சந்ததியினர் (1233) *நாங்களும் எங்கள் வற்க்கத்தாரில் உள்ளாரும் சந்திராதித்தவரை* (SII,viii,465.)

வற்கடம் (பெ) பஞ்சம் (1450) *வற்றாவருவியும் வற்றி வற்கட முற்ற விக்காலத் துறு புனல் நல்கென வேண்டியப்போழுதே* (TAS,i,p.89-94.)

வற்கப் பகைவர் (பெ) இனத்துக்கு எதிரி (1073) *பெரும்படை மஹாஸேனைக்கும் வற்கப் பகைவராகவும்* (EC,x,Mb.119.)

வற்கம் அறுவான் (வி) சந்ததி அற்றுப் போவான் (1106) *இதுக்கு அழிவு செய்வான் வற்க மறுவான்* (IPS,125.)

வற்க₃த்தார் (பெ) சந்ததியினர் (1171) *உடன்பிறந்தாளுக்கும் இவள் மக்களுக்கும் இவர்கள் வற்க்₃த்தார்க்கும்* (EI,xxi,31.)

வற்காலம் (பெ) பஞ்ச காலம் (938) *நற்கால வற்காலம் எல்லாங் கலந்து* (SII,viii,10.)

வற்த்தினை (பெ) அலுவலர் பொருட்டு செலுத்தும் கட்டணம் (1530) *நமக்கு குடுக்கும் வற்த்தினையும் வசவப்பர் வற்தினையும் நரசயர் வற்தினையும்* (SII,vi,273)

வற்ற (வி) நீர் குறைய (1300) *கதிர்முடி மேல் இந்திரனைப் புடைத்தது முன் கடல் போய் வற்ற* (IPS,653.)

வற்றல் (பெ) உலர்த்தப்பட்ட உணவுப்பொருள் (1140) *நாடன் மஞ்சள் மாங்காய் வற்றல் 12 பலம்* (SII,vii,485.)

வற்றும் (வி) நீர் குறையும் (1296) *கார் கொண்ட நின்கையில் வேலுக்கு வற்றுங் கடலல்ல வென்பதை* (SII,iv,228.)

வறச் சாவி (பெ) நீரில்லாமல் பயிர் முற்றாது போதல் (1294) *இப்படிக்கு வெள்ளைச் சாவி வறச் சாவி..* (IPS,406.)

வறப்ப (வி) வறண்டு போக (1075) *பொன்நி மதுவாறு பெருக கலியாறு வறப்ப* (SII,iii,68.)

வறள் பசு (பெ) பால் வற்றிய பசு (1161) *பால் பசு பத்தும் சினைப் பசுப் பன்னிரண்டும் வறள் பசு ஆறும்* (SII,iv,822.)

வறுப்ப (வி) வறட்சியடைய (1084) *முன்னை மனுவாறு பெருக கலியாறு வறுப்ப* (SII,vii,551.)

வன்கணை (பெ) மரவகை (1012) *இவ்வெல்லையில் நின்ற வன்கணை யென்னு மரமே யுற்று* (SII,iii,205.)

வன்பற்று (பெ) ஒருவரைத் தண்டித்து அவருடைய நில உரிமையை அரசுடமையாக்கல் (1213) *நிலத்தை நாம் வன்பற்றாகப் பற்றி* (AVNM,7,p.52-53)

வன்மரை (பெ) மர வகை (1018) *இவ்வெல்லையில் நின்ற வன்மரை யென்னு மரமே யுற்று* (SII,iii,205.)

வன்னி (பெ) வன்னிமரம் (950) *குடக் கெல்லை வன்னியோடு பொழியினின்றும் குனையாமல் வடக்கு நோக்கிக் களறுக்கேய்* (TASSI,1962-65,p.32-52;.)

வன்னிமார் (பெ) வீரர் (1191) *இப்படிக்கு பிழைத்தோம் ஆகில் எங்கள் ஒட்டை வன்னிமார்க்குச் செருப்புங் கலசப் பானையும் எடுக்கக் கடவோமாகவும்* (SII,xvii,245.)

வன்னியப் பற்று (பெ) வன்னியர் (படைவீரர்) உரிமைநிலம் (1190) *திருவிடையாட்டம் அகரப் பற்றும் திறப்பும் வன்னியப் பற்றும் உட்பட* (SII,vii,90.)

வன்னியர் (பெ) ஒரு போர் மரபுச் சாதி (1258) *அசல் வன்னியர் குதிரைக்குப் புல்லுப் பறிக்கிற பறயற்கு* (SII,vii,118.)

வன்னியவரி (பெ) படை வீரர் இறுக்கும் வரி (1405) *வினிவோகங்களும் வன்னியவரி ஆளாமஞ்சியும்* (ARE,1913,25); (1495) *எச்சோறு உலுப்பை .....யம் மற்றும் வன்னிய வரியை நோக்கி வரும் வகை உண்டானது எல்லாம்* (SII,v,Appx,45.)

வனை (இ) அலங்கரிக்கும் (1067) *வாரனை வனைகழல் தொன்றனை* (SII,iii,20.)

வஸ்து வாஹநம் (பெ) பொருள்களும் போக்குவரத்துச் சாதனங்களும் (1066) *மாதேவியரோடு வஸ்து வாஹநங் கைக்கொண்டு* (SII,v,977.)

வஸந்தந் திருநாள் (பெ) ஒரு திருவிழா (1496) *தைய் பூசத்துக்கும் வஸந்தந் திருநாளுக்கும்* (SII,v,Appx,44.)

வஸிஷ்ட (பெ) ஒரு கோத்திரம் (789) *வஸிஷ்ட கோத்ரத்து ஆவத்தம்ப சூத்திரத்து* (SII,ii,99.)

வஸுதா₄பதி (பெ) பூமிக்கு நாயகன் (815) *வஸுதா₄பதி மாரவர்ம்மன்* (SII,iii,206b.)

வஸுசா₀பம் (பெ) அஷ்ட வசுக்களால் (அர்ச்சுன னுக்கு நேர்ந்த) சாபம் (921) *விஜயனை வஸுசா₀ப நீக்கிஉம்* (SII,iii,206 (a).)

வா

வாகநம் (பெ) சுவாமியின் ஊர்தி (1539) *எட்டு திருவீதி எழுந்தருள வாகநத்தில் எழுந்தருளப் பண்ணும் கைக்கோளற்கு* (TDI,iv,118.)

வாகை (பெ) வெற்றி (1189) *ஜயஸ்தம்பமும் நட்டபின் வாகைப் பெரு வீரக் கொடி தியாகக் கொடி உடன் எடுத்து* (SII,iii,87.)

வாகை (பெ) வெற்றிக்கு அறிகுறியான வாகைப் பூ (800) *வாளமருள் வாகைப் பூக் குஞ்சி கமழ் கண்ணி* (EI,xiii,10.)

வாங்கி (வி) பெற்று (1175) *மதுரை வாசலிற் தைச்ச தலைகளும் வாங்கிப் போகடுவித்து எல்லாத் தீமைகளும் செய்யக் கடவிதாக* (EI,xxii,14.)

வாங்கி கொண்டு (வி) கையில் பெற்று (994) *பதின் கழஞ்சும் வாங்கி கொண்டு* (SII,xiii,201.)

வாங்கு (வி) வளைகின்ற (1055) *...தர வாங்கு சிலை தர.... செஞ்சரமாரிக் குஞ்சிரக் குவட்டி* (SII,v,512.)

வாங்கு (வி) வளைந்த (1224) *மலற்சேவடி வணங்கி வாங்கு சிறையன்னந் துயிலொழிய* (SII,iv,372.)

வாங்கும் (வி) செலுத்தும் (1120) *செல்வமெலாம் வாங்க வேல் வாங்கும் குடைவேந்தர்* (SII,iv,225.)

வாங்குவித்து (வி) பிரித்தெடுக்கச் செய்து (919) *ஏது முருவறியாத்தான் ஒரு பா₃லனைக் குடவோலை வாங்குவித்து* (ARASI,1904-05,p.1-31f.)

வாச்சியங்கள் (பெ) வாத்தியங்கள் (1179) *ஒற்றைய் சாங்கும் இரட்டை தாரையும் மற்றும் பல வாச்சியங்களும்* (EC,x,Kl.132.)

வாசகம் (பெ) சொல் (1008) *அறவோலை சேது போத்தக வென்னும் வாசகத்தால்* (EI,xxii,34.)

வாசகம் (பெ) படம் (905) *செப்பேடு வாசகத்தை ஆரியம் விராய்த் தமிழ் தொடுத்த* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வாசம் (பெ) மணம் (905) *வாச நாள் மலர் கமழ் பொழில்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வாசல் (பெ) ஊர்ப் பொதுமன்று (996) *காத்திகை நான்று பகல் நம் வாசல் மரத்தேய் ஆஸபா₃லவ்ருத்₃த₄ர் நிரம்ப* (SII,vii,805.)

வாசல் (பெ) அரண்மனை (1415) *53 ஆவது முதலுக்கு நம்முடைய வாசலில் கணக்கிலும் கழித்து அனுவும் இடுவித்த அளவுக்கு* (IPS,623.)

வாசல் (பெ) கட்டிடத்தின் முகப்பு வழி (772) *தென் வாசலில் நின்று மேக்கு நோக்கி* (SII,xiv,19.)

வாசல் காணம் (பெ) ஒரு வரி (1340) *விருத்துப்படி வாசல் காணம்கைவிலைக்காணம்* (ARE,1919,218)

வாசல் காரியபேர் (பெ) அரண்மனை வாசல் அலுவலர் (1546) *சிந்ந திம்மய தேவ மஹாராஜாவிந் வாசல் காரிய பேர் ஆந ...வசி₀ஷ்டகோத்ரத்து* (TDI,v,66.)

வாசல் கேழ்வி (பெ) அரசன் ஆணையைய்க் கேட்டு எழுதும் அலுவலர் (976) *மீனவ மூவேந்திர வேளான் வாசல் கேழ்வியாலும்* (SII,xix,169.)

வாசல் நிமந்தி (பெ) ஒரு வரி (1294) *இராயச நிமந்தி கேழ்வி நிமந்தி வாசல் நிமந்தி யினாயம் செக்கிறை கடை இறை* (EC,x,Kl.18.)

வாசல் பணம் (பெ) ஒரு வரி (1302) *உள்ள முதலும் உள்ளாயம் பட்டினப்பகுதி காசாயக்குடி மக்கள் வாசல்பணம்* (ARE,1921,454)

வாசல் பந்தம் (பெ) வாசலில் வைக்கும் தீப்பந்தம் (1313) *திருநாளுக்கு வாசல் பந்தம் நிலை பந்தமாக தன்தாம் வாசலிலே தங்கள் ளெண்ணை வாத்து* (IPS,437)

வாசல் மனை (பெ) ஒரு வரி (1457) *நத்தம் வாசல்மனை பேர்கடமை தறிக்கடமை* (ARE,1922,452)

வாசல் மிதியம் (பெ) வாசல்படி (1290) *தாங்கள் வீடெடுக்குமிடத்து இரண்டு நிலமு...வாசல் மிதியமும் வைத்துச் சாந்து மிட்டுக் கொள்ள* (SII,v,283.)

வாசல் வரி (பெ) (1339) *ஓலைச் சம்பட வாசல் வரி கீற்றுவரி* (AVNM,7,p.60-61)

வாசல் வினியோகம் (பெ) ஒரு வரி (1265) *சந்திவிக்கிரமபேறு கீற்றுவரி வாசல் வினியோகம் சிறை அச்சு இலாஞ்சினைப்பேறு ஆனைச்சாலை* (SII,xvii,127.)

வாசல் இருபாலர் (பெ) கோயில் வாசலில் காவல் தெய்வங்கள் (1184) *தக்கணாமூர்த்தி திருமால் அயனும் வாசலிருபாலரும்* (IPS,144.)

வாசலிற்ப்போந்த குடிமை (பெ) உழைக்கும் குடிகள் அரண்மனைக்குச் செலுத்த வேண்டிய சிறுவரிகள் (914) *வாசலிற்ப் போந்த குடிமை உட்பட ஊரிடு வரிப்பாடாய்* (SII,xix,183.)

வாசல் ஓட்டு (பெ) ஒரு வரி (1262) *சிறை வினியோகம் வாசலொட்டு காத்திகைப் பச்சை* (SII,viii,753.)

வாசற் கடமை (பெ) வீடுகள் தோறும் செலுத்தும் வரி (?) (1505) *எப்பேற்பட்ட கடமையும் வாசற்கடமை பேற்கடமை தறிக்கடமை* (ARE,1912,354)

வாசற் கணக்கு (பெ) அரண்மனைக் கணக்கு (1469) *ஸமஸ்த ப்ராப்தியும் நம் வாசற்கணக்கிலும் கழித்து* (SII,iv,348)

வாசற் சிங்கம் (பெ) ஒரு வரி (1214) *காணிக்கையும் வாசற் சிங்நமும் தறி இறை தட்டார்ப்பாட்டமும்* (NI,G.86.)

வாசற் பணம் (பெ) ஒரு வரி (1341) *மந்தைப் பணம் வாசற்பணம் வாசல் குழி ஊர்க் கணக்கர் அசுபொதுமக்கள் பேர்க் கடமை* (SII,vii,109.)

வாசற் பேறு (பெ) ஒரு வரி (1272) *பஞ்சிபீலியும் சந்துவிக்ரஹப் பேறும் வாசற்பேறும் இலாஞ்சினை பேறும்* (CHEN,ix,p.357.)

வாசி (பெ) ஒரு பொருளில் ஏற்படும் குறைபாடு; அதை ஈடுகாட்ட செலுத்தும் கூடுதல் பொருள் (928) *வாசியேற்றி இடக்கடவ(ப்) பொன் இரு கழஞ்சரையும்* (SII,v,1375.)

வாசி (பெ) நாணயக் குறைபாடு (1002) *விலைப் பொருட்காசு ஈழக்காசு வாசிபடாமைச் செல்லுங் காசு* (SII,v,1409.)

வாசிக்கும் (வி) வாத்தியம் ஒலிக்கும் (980) *விடிவைகறை ஆட்டத்துக்கு வாசிக்கும் போது முட்டினால் தலைப்பறை உழக்கும்* (SII,xix,254.)

வாசித்தான் வரிப்பொத்தகம் (பெ) புரவுவரி திணைக்களத்தில் ஓர் அலுவலர் (1038) *வரியிலிட்டான் புரவு வரி திணைக்களம் குறிச்சி உடையானும் வாசித்தான் வரிப்பொத்தகம் கட்டி குறிச்சி உடையானும்* (SII,xiv,161.)

வாசித்து (வி) படித்து (960) *ஸ்ரீ முகங் கண்டு எதிரெழுந்து கும்பிட்டு தலையில் வைத்து வாங்கி வாசித்து* (EI,xv,5.)

வாசிதேவனாரு (பெ) சமணர் தெய்வங்களுள் ஒன்று (500) *வடபக்கத்துச் செஇவித்த தாபதப்பள்ளியுள் வாசிதேவனாரு கோட்டமும்* (AVNM,1,p.67-69)

வாசிப்பது (பெ) படிப்பது (691) *இம் மண்டகத்தே பாரதம் வாசிப்பதற்கு* (SII,i,151;EI,xvii,22.)

வாசிப்பான் (பெ) படித்து விளக்கம் சொல்பவன் (789) *பாரதம் வாசிப்பானுக்குப் பங்கொன்றும்* (SII,ii,99.)

வாசி படா (வி) குறைபாடு இல்லாத (1259) *கண்டகோபாலன் வாசிபடா புதுமாடை 5 இம்மாடை அஞ்சு* (SII,xii,190.)

வாசி ஏறு னெல் (பெ) முகத்தல் அளவு குறைவிற்காக ஈடு செய்யும் நெல் (1001) *சிவலோகன்னான மரக்காலால் கலத்து வாய் ஐய்ங்குறுணி வாசி ஏறு னெல்லு* (SII,xvii,222.)

வாஜகம் (பெ) பாடம் (865) *முன்னிவாஜகம் வெட்டிக் கிடந்த தனிக்கல்லால்* (SII,xii,55.)

வாஜி ப்₃ரந்த₃ம் (பெ) குதிரைக் கூட்டங்கள் (921) *கரிகுலமும் வாஜிப்₃ரந்த₃முங் காலாளும்* (SII,iii,206 (a).)

வாட்கை (பெ) ஆட்சி (1238) *செம்மா நுளம்ப மென்கிற நாடு வாட்கையுடைய இரணாதித்தனை* (CHEN,xii,p.499.)

வாட்டம் (பெ) குறைவு (1300) *கிள்ளையும் பொலிவொடு சூழ வாட்டமின்றிக் கூட்டம் பெருக* (SII,viii,442.)

வாட்டி (வி) குறைத்து; நீக்கி (970) *நில முதலும் பொத்தகத்தும் இறைவாட்டி* (SII,iii,150.)

வாட்டின (வி) நலியச்செய்த (1050) *செண்டுவது உள்ளிடம் வாட்டின துட்ட பெருகி அறம் வளர* (AVNM,2,p.6-8)

வாட்டும் (வி) வெளுக்கும் (1072) *பரிசட்டம் வாட்டும் ஈரங்கொள்ளி ஒருவனுக்கு* (EC,x,Kl.106d.)

வாட்டொழில் (பெ) வாள் கொண்டு போரிடல் (1047) *மாநம் நீங்குதற்காக மீட்டுவந்து வாட்டொழில் உழந்து வெங்களத்து வந்த* (SII,v,978.)

வாடல் (பெ) குளிர் காற்று (?) (1266) *வெண்கவரின் வாடலுந் தென்றலும் வேந்தர் வீச* (IPS,366.)

வாடாக் கடமை (பெ) மாறாத அளவுள்ள வரித்தொகை (1406) *இவ்வூர் என்றைக்கும் வாடாக்கடமை ஆக ஆறு பொன் இந்தக் கோயிலுக்கு சூலவரிக்குச் செல்லவுமாக* (SII,iv,,825)

வாடாக் கடன் (பெ) (=வாடாக்கடமை) (969) *காணிக்கடனாக வந்த நெல்லு....கார் பாதியும் பிசானம் பாதியும் வாடாக் கடன் எங்கள் தரவினாலேயே பசுங்குளத்துலேய் அளப்பதாகவும்* (SII,xiii,236.)

வாடாத (வி) உலராத (921) *சிங்களத்தும் விழிநத்தும் வாடாத வாகைசூடி* (SII,iii,206 (a).)

வாடாது (வி) உலராது (1279) *செழுமலர் தொடுத்த கண்ணி வாடாது* (SII,viii,69.)

வாடா மாலை (பெ) பொன் மாலை (1539) *வாடாமாலையும் புலிக்கொடியும்* (SII,vii,28.)

வாடா ஒட்டு (பெ) (=வாடாக்கடமை) (1229) *ஆண்டொன்றுக்கு வாடா ஒட்டாக பழங்கரைக் காலால்* (IPS,287.)

வாடி (வி) உடல் வருந்தி (614) *தன்னெருமைப் புறத்தே வாடி பட்டான்* (CHHS,1971/59.)

வாண்ண (வி) ஆட்சி செய்த (1000) *இராம வள நாடு வாண்ண பாலியத்து கண்ணங் கண்டனும்* (SII,v,784.)

வாண்ணருளிய (வி) ஆட்சி செய்த (1200) *ஒடநாடு வாண்ணருளிய இராமன் ஆதிச்ச வர்ம்மர் திருவடி* (TAS,vi,24.)

வாண்ணருளுகின்ற (வி) ஆள்கின்ற (1173) *வேணாட்டு இளங்குடை வாண்ணருளுகின்ற ஸ்ரீ வீர உதைய மார்த்தாண்ட வர்மந்* (TAS,vii,p.117;TAS,i,p.296.)

வாண கலசம் (பெ) நெருப்புச் சட்டி (1076) *தெற்பை ஸமிதைக்கு நெல் தூணி வாண கலசத்துக்கு நெல் தூணிப்பதக்கு* (SII,iv,813.)

வாணம் (பெ) (= துலுக்க வாணம் ?) (1493) *இவருடைய பூர்வாள் க₃ருட₃வாஹந பட்டர் நடத்தி வந்த ஆரோக்₃ய சா₂லை வாணத்திலே கி₂லமாகையில்* (EI,xxiv,12 (a).)

வாணர் (பெ) ஒரு சிற்றரசுக் குலம் (1220) *மாதிரமும் விளங்க வந்த வாணர் குல நிலைவிளக்கு* (CHEN,xiv,p.362-64.); (1200) *வள்ளி விடும் அயிராபதம் வாணன் வரவிடு நாளையே* (SII,vii,123.)

வாணாள் (பெ) ஆயுள் (1120) *வயவேந்தர் வாணாள் கவர் கூத்தன் வந்து ஆடலமர்ந்த பிரான்* (CHEN,xxiii,p.93-96.)

வாணிகம் (பெ) வியாபாரம் (864) *எல்லா வியாபாரமும் கடை ஏறி வாணிகம் செய்யப் பெறுவாராக* (MCCM,viii,p.98-104.)

வாணிகன் (பெ) வியாபாரி (768) *உழக்குணி வாணிகன் நாகன்* (SII,xii,34.)

வாணியக் குடிமக்கள் (பெ) எண்ணை வாணியர் (1296) *இவ்வூரிலிருக்கும் வாணியக் குடி மக்கள் செட்டி அரசனும்* (SII,v,225.)

வாணிய மரக்கலம் (பெ) வாணிகச் சரக்கேற்றும் நாவாய் (1200) *வாணிய மரக்கலங் கெட்ட துண்டாகில் செம்பாகம் பண்டாரத்துக்குக்*

கொண்டு செம்பாகம் உடையவனுக்கு விடக் கடவதாகவும் (UCR,xxi,pp.63,70.)

வாணியர் (பெ) வியாபாரிகள் (895) *குளத்தூர் வாணியர் சயவல்லவன்* (SII,xii,110.)

வாத்தலை (பெ) (= வாய்த்தலை) தலைமதகில் இருந்து தொடங்கும் வாய்க்கால் (987) *ஆற்றுக் குலைக்கு வடக்கும் வாத்தலைக்கு கிழக்கும் பெருவாய்க்காலுக்குத் தெற்க்கும்* (SII,xiii,3.)

வாத்தியான்மார் (பெ) புரோகிதர் (1400) *நாலச்சிநு பந்திரண்டு வாத்தியான்மார் ஊட்டு இதின்னு பத்துக்காள மூன்று சாதியுமா முப்பத்தாறு வாழைப்பழம்* (TAS,iv,p.161-66.)

வாத்ஸ (பெ) ஒரு கோத்திரம் (905) *வைய்குந்த வளநாடன் வாத்ஸ கோ₃த்ர சூடா₃மணி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வாதராசன் (பெ) காற்றுத் தெய்வம் (1300) *வாதராசன் காற்றசைப்ப* (SII,vii,129.)

வ ாதாவிகள் (பெ) கணபதி (?) (1181) *இத் தந்மம் அழிப்பாந் வல்லவரையந் சத்தியம் வாதாவிகளுக்கு பிழைத்தாராவார்* (SII,vii,782.)

வாதில் (பெ) கோட்டை வாயில் (885) *நாலு வாதிலகத்தும் விலக்கும் பூமியாக* (TAS,ii,p.80-82.)

வாதில் மாடம் (பெ) கேரளத்தில் கோயில் கட்டிடத்தில் ஒரு பகுதி (923) *வாதில் மாடமுஞ் சுற்று மண்டபமும்* (TAS,i,p.287f.)

வாதுலன் (பெ) வாதுல கோத்திரத்தைச் சேர்ந்தவன் (1213) *சதுர்வேதிமங்கலத்து வாதுலன் இக்கோயில் ஸ்ரீகாரியஞ் செய்கிற கூத்தன் வல்லவனேன்* (AVNM,7,p.52-53)

வாத்₃யம் (பெ) இசைக் கருவி (785) *வாத்₃ய கே₃ய ஸங்கீ₃தங்களான்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

வாத்₃ய மாராயன் (பெ) இசை வல்லுநருக்குக் கொடுக்கப்பட்ட பட்டம் (1014) *ஆரியம் பாடுவார் மூவர்க்கு அரையன் அம்பலநாதந் ஆன செம்பியன் வாத்₃ய மாராயனுக்கு* (SII,ii,66.)

வாந் பயிர் (பெ) மானாவாரிப் பயிர்கள் (1430) *நஞ்சை புஞ்சை வாந்பயிர் புந்பயிர் விலையாசை அறுதி வாசல்பணம் வெட்டிவரி* (SII,viii,349.)

வாந (பெ) ஒரு கோத்திரம் (905) *வடிவமை வாந கோ₃த்ரத்து பௌ₄தா₄யந கல்பத்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வாநகம் (பெ) சொர்க்கம் (1044) *தென்னவர் மூவருள் வாநகம் ஒருவனுக் கருளி* (SII,v,465.)

வாநவர் (பெ) தேவர்கள் (950) *வாநவர்க்குத் தூது சென்று* (TASSI,1962-65,p.32-52.)

வாபீ (பெ) கிணறு (1567) *நத்தம் செய்த்தலைத்திடர் வாபீ கூபம் மாவடை மரவடை* (SII,v,765.)

வாம்புரவி (பெ) தாவும் குதிரை (921) *பூம் புன னாவற் பதிஇல் வாம்புரவி பலங்காட்டி உம்* (SII,iii,206 (a).)

வாய் (இ) (ஒன்றின்) மூலம் (731) *பொன் கழஞ்சின் வாய் அறு கல நெல் பொலி உண்பதாகவும்* (SII,viii,331.)

வாய் (பெ) முனை (771) *தீ வாய் அஇலேந்தி* (EI,xvii,16.)

வாய் (பெ) பக்கம் (898) *வாய்க்காலின் தென் வாய் இரண்டு மாவும்* (SII,viii,560.)

வாய்க்க (வி) நன்கமைய (1183) *புயல் வாய்க்க வளம் பெருக* (SII,iv,226.)

வாய்க்கால் (பெ) கால்வாய் (950) *வாழைக் கோட்டிதனுக்கேய் பாய்ந்த வாய்க்கால் ஊடேய் போந்து* (TASSI,1962-65,p.32-52.)

வாய்க்கேட்பார் (பெ) அரசன் வாய் ஆணையைக் கேட்கும் அலுவலர் (753) *அதிகாரரும் வாய்க்கேட்பாரும்* (SII,ii,73.)

வாய்கட்டாத் துரவு (பெ) சுவரில்லாத பாசனக் கிணறு (1214) *வடமேலை மூலையில் வாய் கட்டாத் துரவை வலத்துவைத்து* (EI,xxv,11.)

வாய்கூறு புள்ளி (பெ) மேற்போக்கான மதிப்பீடு (1015) *..வினுடைய நிலன் பலவாய் பழம்படி வாய்கூறு புள்ளியால் வந்த நிலன்* (SII,v,723.)

வாய்கேழ்வி (பெ) அரசன் வாய்மொழி உத்தரவை கூட இருந்தெழுதும் அலுவலன் (967) *மேயூர்*

திருப்பத்தூர் ....ளாமணிக் கிழவன் வாய்கேழ்வி ஆகவும் (SII,xiv,95;EI,xxv,6.)

வாய்த்தலை (பெ) (= வாய்த்தலை யாறு) (789) *வாய்த்தலைக்கும் உவன்றிக்குமாக* (SII,ii,99.)

வாய்த்தலை யாறு (பெ) தலைமதகில் இருந்து செல்லும் வாய்க்கால் (962) *இவ் வாய்த்தலை யாறு பண்டு பாயும் பரிசே* (SII,xiii,151.)

வாய்த்து (வி) நன்கமைந்து (1171) *கோமா தறங் குளிர் தூங்க மாரி வாய்த்து வளஞ் சுரக்க* (SII xvii,592.)

வா..ப்பறை (பெ) பலருமறிய வெளிப்படுத்தல் (1200) *குதிரை வலியால் வினை வாய்ப்பறை தவிற்தொரு கோலின் வலியாலே வன்பறை தவிற்த்தொரு* (SII,vii,123.)

வாய் புதைத்து (வி) வாயைக் கைகளால் மூடி (1181) *வீர வல்லாளக் கிழலா திராய பம்மி தேவந் வாய் புதைத்து காற் மடக்கி அடிவீட்சி விண்ணப்பம் செய்த பரிசாவது* (EC,ix,Cp.167.)

வாய் வடம் (பெ) ஒரு நகை (1015) *கோத்த வடம் இரண்டும் இதன் மேல் வாய் வடம் ஒன்றுந் தனி வடம் சவி நாலும்* (SII,ii,8.)

வாய் அடக்கும் (வி) பயமுறுத்தும் (1540) *விருது உள்ளவர்களை வாய் அடக்கும் பெத்தைய தேவ மகராசாவின் குமரர்* (SII,vii,493.)

வாயில் (பெ) ஊர் வாசல் (961) *தூசியூர்த் தென்வாய் வாயிலினின்று தெற்க்கு நோக்கில்* (SII,iii,213.)

வாயில் போந்த குடிமை (பெ) அரண்மனைக்குச் செலுத்தும் குடிமை (962) *வா(ய்)யில்(ப்) போந்த குடிமை எப்பேர்ப்பட்டதும் ஊர்ப்படுத்தும்* (SII,xiii,151.)

வாயிற்க்கல் நிற்க்குமவன் (பெ) வாயில் காப்பவன் (1000) *இலையிடுமவனு நானாழி வாயிற்க்கல் நிற்க்கு மவனு நானாழி* (TAS,ii,p.173-207.)

வாயு (பெ) காற்று (1044) *சாந்து பிருதிவி அப்புத் தேயு வாயு ஆகாசமும்* (EC,iii,Tn.94.)

வாயோலை (பெ) குறித்த அடையாளத்துடன் பேர் தீட்டிய ஓலைகளைச் சுற்றிக் கட்டும் ஓலை (921) *இக் குடும்பும் வெவ்வேறேய் வாயோலை பூட்டி,..குடம்புக இடுவதாகவும்* (ARASI,1904-05,p.1-31f.)

வாயோலைக் கட்டு (பெ) மூடிப் பிணைத்த ஓலைக்கட்டு (921) *குடவோலைக்கு பேர் தீட்டி முப்பது வாயோலைக் கட்டும் புக இட்டு முப்பது குடவோலை பறித்து* (ARASI,1904-05,p.131f.)

வார் (வி) நீர் (1080) *ஒரு தநி மேருவிற் புலி விளையாட வார் கடற்றீவாந் தரத்துப் பூவர் திறை விடுதந்த* (EC,x,Mb.47.)

வார் (பெ) தோல் நாண் (771) *அழகமைந்த வார் சிலையின்* (EI,xvii,16.)

வார்க்கியன் (பெ) வார்க்கிய கோத்திரத்தைச் சேர்ந்தவன் (973) *இப்படி அறிவேன் வார்க்கியன் பாண்டன் கேசுவனேன் இப்படி யறிவேன் காப்பியன் சேந்தன் சோமனேன்* (SII,xix,63.)

வார்த்தை (பெ) செய்தி (1200) *கயல் பொறித்த வார்த்தையிலும் வாரிபட வேலெறிந்த வார்த்தையிலும்* (SII,viii,145.)

வார்திகம் (பெ) சூத்திரக் கருத்தை விளக்கும் ஒரு வகை உரை (985) *வ்யாகரணமும் வார்திக ஸஹிதமாக* (SII,vi,322.)

வார்ப்பல் (பெ) உதவி (955) *இப்பரிசு ச்ரத்₃தா₄மந்தர் த₃ண்ட₃மிட்டார்க்கும் வார்ப்பல் குடுத்தும் தாங்களேய் த₃ண்டி₃த்தும்* (SII,iii,7.)

வார்மடை (பெ) ஒழுகு மதகு (?) (1124) *வாக் காலுக்குக் கிழக்கு வார்மடைக்கு மேற்க்கு* (SII,v,673.)

வார (வி) தோண்டியெடுக்க (890) *பாயவும் வாரவு மாக வைச்ச* (SII,v,572.)

வாரக் குடிமை (பெ) நிலக்கிழார் மேல்வாரத்தின் மீது செலுத்த வேண்டிய குடிமை (1118) *ப்₃ராஹ்மணரையும் வெள்ளாரையும் வாரக் குடிமை தவிரக்கடவோமாகவும்* (SII,vi,57.)

வாரம் (பெ) விளைவில் நிலக்கிழார், உழுகுடி ஆகியோர் இடையில் பிரிக்கும் பங்கு (1008) *இந்நில முக்கண்டுகமும் இத்தேவர் கந்மிகளே சுட்டுக் கட நுக்கும் வாரத்துக்கும் அடுத்து* (EC,ix,Cp.128.)

வாரம் (பெ) வேதத்தை ஓதும் முறை (866) *வாரம் ஓதும் பரிசு* (TAS,i,p.1-14.)

வாரம் (பெ) காலம் (869) *இப்படி அறு திங்கள் வாரம் ஆராய்வதாக* (SII,vii,525.)

வார மாக்கலம் (பெ) ஒரு வரி (1222) *அந்தராயம் நாடேன்ற வரி வார மாக்கலம் கணக்கபேறு* (IPS,260.)

வாராது (வி) வராமல் (1068) *கூடலில் வாராதஞ்சினர் மன்னவர் அல்லர்கள்* (EI,xxi,38.)

வாரா நின்ற (வி) வந்துகொண்டிருக்கின்ற (796) *ப்ரஹ்மநாதி₃ ஆக வாராநின்ற* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

வாராமை (பெ) உண்டாகாமை (964) *இத் தண்டப்பட்டு இவ்வந்யாயம் வாராமைத் தீர்த்துக் குடுப்போமாநோம்* (SII,iv,362.)

வாரா விட்ட (வி) வரத் தவறிய (1005) *நம் நந்பிராட்டி வாராவிட்ட குறத்தால் தண்டம் கொண்ட பொன் காசுகல்லால் முக்கழஞ்சு* (SII,iv,391.)

வாராவிட்டார் (பெ) வரத் தவறினார் (932) *நகர வாரிய கூட்டஞ் சாற்ற வாராவிட்டாரை வர கொண்ட தண்டப் பொன்* (SII,v,588.)

வாரா விட (வி) வரத் தவற (1012) *உவசரை அழைக்க வாராவிட உவச்சன் அரங்கன்* (IPS,89.)

வாராவைகல் (பெ) ஒரு வரி (873) *நகரத்தோங் கொள்ளும் வாராவைகல்* (SII,iii,91.)

வாராஹி (பெ) ஏழு கன்னிமாரில் ஒரு தெய்வம் (1072) *வாராஹி...யமுது இரண்டு* (EC,x,Kl.108.)

வாரி (வி) மிகுதியாகக் கொண்டு (1072) *வயிராகரத்துக் குஞ்சரக் குழாம் பல வாரி யெஞ்சலில்* (SII,iii,64.)

வாரி (பெ) வருவாய் (1213) *திருக்கோயிலும் சீபீடவாரியிலும் மற்றும் எப்பேற்ப்பட்ட பல்லாயங்களிலும்* (SII,viii,148.)

வாரி (பெ) வாரியம் (961) *ஸ்ரீ கோயிலில் வாரி செய்கின்ற ஸபை,வாரியரேய்* (SII,xiii,114.)

வாரி (பெ) கடல் (921) *வரகரி குலநிரை வாரிஉம்* (SII,iii,206 (a).)

வாரிகப்பட்டோம் (பெ) நிர்வாகப் பொறுப் பேற்றவர்கள் ஆகிய நாங்கள் (802) *இயற்று வதற்க்கு வாரிகப்பட்டோம்* (SII,xii,42.)

வாரிகம் (பெ) (=வாரியம்) (987) *இப்பரிசு இசைந்து பணித்து வாரிகம் வைத்து வைக்கப்பட்ட வாரிகரும் கணக்கும்* (SII,xiii,3.)

வாரிகர் (பெ) (= வாரியர்) (987) *இப்பரிசு இசந்து வாரிகம் வைத்து வைக்கப்பட்ட வாரிகரும் கணக்கும் இருந்து* (SII,xiii,3.)

வாரியஞ் செய்தார் (பெ) வாரியத்தின் உறுப்பினராக இருந்து பணியாற்றியவர் (919) *வாரியஞ் செய்தார்க்கு பழந்துடிக்களும் சேரிகளில் அந்யோந்யம்* (ARASI,1904-05,p.131f.)

வாரியப் பெருமக்கள் (பெ) வாரியத்தின் உறுப்பினர்கள் (885) *இது ரக்ஷிப்பார் வாரியப் பெருமக்கள்* (SII,vi,346.)

வாரியம் (பெ) சபை போன்ற ஊர் மன்றங்களில் தனித்தனி பணிகளை மேற்கொள்ளும் உட்குழுக்கள் (804) *முழுச்சிராவணை இல்லாதாரை எவ்வகைப்பட்ட வாரியமும் ஏற்றப்பெறாதாராகவும்* (SII,xiv,37.)

வாரியம் இருவது (வி) வாரியம் உண்டாக்குவது அல்லது நியமிப்பது (921) *குடவோலைப் பறித்துக் கொண்டே வாரியம் இருவதாகவும்* (ARASI,1904-05,p.131f.)

வாரியர் (பெ) வாரியத்தின் உறுப்பினர் (803) *இளங்கோய்க்குடி சபை வாரியரும்* (SII,xiv,36.)

வாரியன் (பெ) மேற்பார்வையாளன் (972) *உழக்கு நெய்யட்டக் கடவோமாக வெட்டி யிலாலேகை₂ வரைய்ந்து குடுத்தோம் வாரியன் உள்ளிட்ட மன்றாடி கலனையோம்* (SII,xix,58.)

வாரு நீர் (பெ) தோண்டி யெடுக்கும் நீர் (1254) *பாயும் நீர் பாயவும் வாருநீர் வாரவும் இறைக்கு நீர் இறைக்கவும்* (SII,xii,166.)

வால் (பெ) விளையாத தானியம் (1028) *இந்நெல் இருநூற்றுக்கலமும் ஈரமு பதரும் வாலும் புழுதியுநீக்கிய் உல்கும் வரகூலியும்* (SII,viii,5.)

வால் (பெ) வெள்ளைநிறம் (1012) *திமிலை முழக்கமும் மருடரு வால் வளைத்துணையு மேல் வளைத்தணையும்* (SII,vii,863.)

வால்க் காணம் (பெ) வீட்டுமனை மீதான வரி (944) *குடிகளை வெட்டியும் வேதினையும் வால்க் காணமும் கொள்ளப் பெறாதோமாகவும்* (SII,iii,12.)

வால் பணம் (பெ) ஒரு வரி (1280) *இக்கோயிலில் சிவப்:ராம்ஹணற்க்கும் நிமந்த காறக்கும் வாலபணமும் ...?பணமும் மற்றுமுள்ள வரிவுகளும்* (EC,ix,Bp.55.)

வால் மஞ்சாடி (பெ) வீட்டு மனை மீது ஒரு வரி (1008) *நாடு காவலும் ஊடு போக்கும் விற்பிடியும் வால் மஞ்சாடியும் உல்கும்* (EI,xxii,34.)

வால்லி (பெ) நெல் வகை (?) (992) *திருமுற்றத்து அளக்ககடவ நெல்லு வால்லி நெல் கற...* (SII,xix,357.)

வால் அமஞ்சி (பெ) ஒரு கட்டய உழைப்பு (973) *ஏரிக்கு வாலமஞ்சி ஏரிக்கு செய்வதாகவும்* (SII,xiii,281b.)

வாவி (பெ) குளம் (1012) *வாவியிற் கோடேறு பழனக் காடேறு மா நில மஞ்சும்* (SII,vii,863.)

வாழ் (பெ) வாள்; நீண்ட கத்தி (957) *நொந்தா விளக்கெரிப்பதற்கு மூத்த வாழ் பெற்ற கைக்கோளரில் அரையன் வேங்கடவன் குடுத்த பொன்* (SII,xix,18.)

வாழ்க்கை (பெ) உரிமை நிலம் (?) (1000) *பெருந் நெய்தல் இரும்பூழி வாழ்க்கையால் இரு நாழி அரி* (TAS,ii,p.173-207.)

வாழ்க்கை (பெ) ஆட்சி (962) *நாட்டினும் வாழ்க்கைக்கு பணிக்குங் கொடுக்குங் கோள் குடையும் ஒழிச்சு கொடுத்தான்* (TAS,iii,p.171-73.)

வாழ்க்கை வாழுமவர் (பெ) உள்ளூர் ஆட்சித் தலைவன் (976) *நாடு வாழுமவர்க்கு பந்திரு கழைஞ்ஞே அஞ்சு காணமு வாழ்க்கை வாழுமவர்க்கு அறுகழைஞ்ஞெ இரண்டரைக் காணமும்* (TAS,v,p.176-78;TAS,ii,p.33.)

வாழ்க்கை உடையவர் (பெ) ஊரை ஆளும் அலுவலர் (988) *நாடு வாழுமவர்க்கு இருபத்து நாற்க் கழைஞும் வாழ்க்கை உடையவர்க்கு பந்நிரு கழைஞு* (TAS,v,p.178-80; TAS,ii,p.40.)

வாழ்க (வி) வியங்கோள் சொல் (1312) *வாழ்க கோயில் பொன் மேய்ந்த மகீபதி வாழ்க* (SII,vi,455.)

வாழ்கின்ற (வி) ஆள்கின்ற (849) *வேணாடு வாழ்கின்ற அய்யனடிகள்* (TAS,ii,p.67-68.)

வாழ்ந்தனம் (வி) வாழ்ந்தோம் (1171) *எல்லாருந் தநித் தனியேய் வாழ்ந்தனம் யாமென மகிழ்ன்து* (SII,xvii,592.)

வாழ்ந்து (வி) ஆண்டு (962) *பூமி எல்லாம் வாழ்ந்து கும்ப ஞாயிற்று நாட்டினும் வாழ்க்கைக்கு பணிக்கும்* (TAS,iii,p.171-73.)

வாழ்வோம் (வி) வசிப்போம் (922) *சிலாலேகைப்படி பிழைக்க எடுத்தோமாயில் பசித்து வாழ்வோமேன்று சொல்லி* (SII,vi,295.)

வாழார் (வி) இருக்க மாட்டார் (1257) *புழுத்து வாழார் ஒரு காலம்* (SII,viii,501.)

வாழிய (வி) வாழ்க (905) *வாழிய வான் றிருவிருப்பூர்* (TASSI,1962-65,p.1-131; PNDCP,p.95-115.)

வாழியர் (வி) வாழ்வாராக (921) *வாழியர் பாண்டியர் திருக்குலமிதனில்* (SII,iii,206 (a).)

வாழி வாழி (பெ) மேன்மேலும் (1128) *விஜையமும் புகழும் மேன்மேலோங்க வாழி வாழி மா நிலங்காக்க* (SII,vii,773.)

வாழின்ற (வி) ஆள்கின்ற (885) *இளங்கூறு வாழின்ற ராம திருவடியும்* (TAS,ii,p.80-82.)

வாழும் (வி) வசிக்கின்ற (768) *மாமல்லபுரத்திலிருந்து வாழும் உழக்குணி* (SII,xii,34.)

வாழும் (வி) செழித்த காலத்திலும் (946) *நிலமுதல் ஆறுதரமும் உட்பட பாழும் வாழும் நாம் இறையும்* (SII,vii,35.)

வாழுமவர் (பெ) ஆள்பவர் (1008) *முதுகூறு வாழுமவர் வந்து* (IA,xx,p.290.)

வாழைக் குருத்து (பெ) இளம் வாழையிலை (1031) *வாழைக் குருத்துக்கு நெல்லு இரு நாழியும்* (SII,viii,66.)

வாழைப்பழம் (பெ) பழவகை (861) *சருகரையும் வாழைப்பழமு* (TAS,ii,p.85-86.)

வாள் (பெ) கத்தி வகை (771) *வாள் அமருள் உடன் வவ்வி* (EI,xvii,16.)

வாள் (பெ) கொடிய (800) *வாள் வரி வேங்கை* (IPS,236.)

வாள்களார் (பெ) வாள் வீரர் (900) *இவர்கள் மக்கள் வாள்களாரும் பன்மையாரும் ரட்ஷை* (AVNM,10,p.16-17)

வாள் படை (பெ) வாள்வீரர் கொண்ட படைப்பிரிவு (873) *வீரசோழ இளங்கோவேளார் வாள்படையும் உடநிலை சேவகரும்* (AVNM,10,p.15)

வாளால் வழி திறந்தான் குளிகைபணம் (பெ) பாண்டிய அரசரின் ஒரு நாணயம் (1421) *இக்கோயில் பச்சை பணமாக ஆண்டொன்றுக்கு இறுக்கும் வாளால் வழி திறந்தான் குளிகை பணம் 150 கழித்து* (IPS,699.)

வாளி (பெ) காதணி (982) *கூத்தப்பெருமாள் முத்தின் வாளி ஒன்று* (SII,xix,302.)

வாளுறை கழித்து (வி) வாளை உருவி (1075) *அயில் முனைக் கொந்தள வரைசர் தந்தநமிரிய வாளுறை கழித்து தோள் வலி காட்டி* (SII,iii,68.)

வாளை (வி) வாளை மீன் (1145) *வாளை வயிறு நிறைய மடற்கமுகம் பாளை பசுந் தேந்நொழுகும்* (IPS,129.)

வாற்காணம் (பெ) (= வால்க்காணம்) (962) *வாற்காணமும் ஆட்டுக்கிறையும்* (SII,vi,324.)

வாற்பித்து (வி) (= வார்ப்பித்து) (1290) *ஸ்ரீ வீரநாரஸிம்ஹ தே₃வரிடுவித்து தா₄ரையும் வாற்பித்து சா₂ஸநமுங் குடுப்பித்து* (EC,xiv,Yl.56.)

வான் குடி (பெ) உயர்ந்த குடி (905) *மாசில் வான் குடித் தோன்றிய ஆசி நாட்டு நாட்டாரும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வான்சேய் நாடு (பெ) விண்ணுலகு (800) *விண்படர் வான்சேய் நாடு* (EI,xiii,10.)

வான் பயிர் (பெ) மரப் பயிர்கள் (1265) *கமுகு பலாமரம் கொழுந்து உள்ளிட்ட வான்பயிரும் மானவாரி புழுதிநெல்லும்* (SII,xvii,127.)

வான் புகழ் (பெ) பெருங் கீர்த்தி (905) *மண்ணெங்குந் நிறைந்த வான்புகழ் கண்ணங்கீரன் வயக்கல்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வானடைந்த (வி) இறந்த (921) *வானடைந்த பின் வானவன் மஹாதே₃வி என்னு மலர் மடந்தை முன் பயந்த* (SII,iii,206 (a).)

வானம் (பெ) ஆகாயம் (785) *அகல் வானத் தகடுருஞ்சும் பாழி* (IA,xxii,pp.57-75; PNDCP, p.55-62.)

வானரத்₃த்₄வஜன் (பெ) அநுமக் கொடியை உடையவன் (905) *மடைமிகு வேல் வானரத்₃த்₄வஜன் வஸுசா₂பம் அகல்வித்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வானவன் (பெ) தேவன் (1012) *செஞ்சுடர் வானவன் வழிமுதல் வந்த* (SII,vii,863.)

வானவன் (பெ) சேர அரசன் (771) *செழியன் வானவன் செங்கோற் சேந்தன்* (EI,xvii,16.)

வானவாரி (பெ) மழைநீரைக் கொண்டு விளையும் பயிர் (1324) *வள்ளுக நத்தம் கொல்லை மற்றும் வானவாரி விளைந்த நிலங்களில் தாங்களும்* (TMPL,xxxv,p.217.)

வானீளம் (பெ) வீட்டின் பின் பக்கம் (1189) *எதிரிலி சோழன் திருநந்தவனத்துக் கீழைத் திருமடை விளாகத்து மனை வானீளத்துக்கு கிழக்கும்* (SII,iii,87.)

வானுரிஞ்சிற்று (வி) மழைபெய்து (?) (700) *வானுரிஞ்சிற்றறிதாரம் போல் குளிருந் தன்மைத்தே* (AVNM,7,p.13-14)

வாஸ்த்து சேஷம் (பெ) குடியிருப்பு மூலம் வரும் வருவாய் (1570) *செய்த்தலை திடர் வாஸ்த்துசேஷம் மாவடை மரவடை* (AVNM,7,p.68-70)

வாஸ்து (பெ) வீடுகள் (1196) *உடலான நிலத்திலும் வாஸ்துவும் வாஸ்துபரிவாரமும் குளமும் கோப்பிரசார பூமியுமாக* (SII,v,708.)

வாஸ்து சா₂ஸ்த்ரம் (பெ) கட்டிடக் கலை நூல் (1200) *..குருதைக்கு இலக்கணமும் வாஸ்து சா₂ஸ்த்ரமும் சில்ப தொழில்லும்* (SII,xvii,603.)

வாஸ்து சே₂ஷம் (பெ) வீட்டைச் சேர்ந்த இடம் (1300) *தங்கள் குடியிருப்பு நத்தமான வாஸ்துவும் வாஸ்து சே₂ஷமும் ஆறாவது ஆடிமாத முதல்* (SII,vii,22.)

வாஸவன் (பெ) இந்திரன் (815) *வாஸவன் போல வீற்றிருந்தனன்* (SII,iii,206.)

வாஸா ஹரீதகீ (பெ) மருந்து வகை (1068) *வாஸாஹரீதகீப்படி யிரண்டும் த$_3$ச மூல ஹரீதகீபடி யொன்றும்* (EI,xxi,38.)

வாஹநம் (பெ) யானை, குதிரை முதலிய ஊர்தி (905) *வஸ்து வாஹநங் கொண்டும்* (TASSI,1962-65,p.1-31.)

வாஹு வலையம் (பெ) தோளணி (970) *வாஹுவலையம் 2க்கு தடவிக் கட்டின மாணிக்கம்* (TDI,i,8.)

வி

விக்கம் (பெ) இடையூறு (962) *இபூமிக்கு எம்மூராள் கோவினால் வந்த விக்கமுள்ளது தீர்த்துக் குடுப்போமானோம்* (SII,iii,187.)

விக்கிர உபாதி (பெ) ஒரு வரி (1469) *செக்கிறை தறியிறை தட்டொலி தட்டார்ப்பாட்டம் விக்கிர உபாதி பொன்வரி தருவது ஆன அச்சு* (SII,iv,348)

விக்கிறையம் (பெ) விற்பனை (1215) *இப்பெரு நான்கெல்லைக்குட்பட்டது தானாதனவ் விக்கிறையத்துக்கு உரித்தாகவும்* (IPS,170.)

விக்கினம் (பெ) இடையூறு (1040) *கொள்வோமாகிலும் உழுவாரை உழாமே விக்கினம் பண்ணுவோமாகிலும்* (SII,xiv,164.)

விக்நம் பண்ணுதல் (பெ) இடையூறு செய்தல் (1096) *இப்பொருள் பண்டாரத்தில் புகாமல் விக்நம் பண்ணுதல் பண்ணிவித்தல் செய்தாந் உண்டாகில்* (SII,viii,75.)

விக்ரமங்கள் (பெ) தீரச் செயல்கள் (700) *விக்ரமங்களால் அரைசடக்கி* (EI,xxiii,4.)

விக்ரயம் (பெ) விற்பனை (970) *தாநாதமந விக்ரயத்துக் குரித்தாக எழுதிக் குடுத்த நிலம்* (SII,xiii,251.)

விக்ருதி (பெ) அறுபது ஆண்டுகளுள் ஒன்று (1200) *விக்ருதி ஸம்வத்ஸரத்து ஆடிமாஸ ஸிம்ஹப் பெருமாளுக்கு* (EC,iii,Md.2.)

விகட வாடவன் (பெ) பெருந்தீ (921) *இராசசிங்கன் விகட வாடவனவனேய்* (SII,iii,206 (a).)

விகாதம் (பெ) எதிர்ப்பு (1524) *இந்த கல்வெட்டுப்படிக்கு விகாதம் சொன்னவந்* (IPS,737.)

விகாரி (பெ) அறுபது ஆண்டுகளுள் ஒன்று (1060) *விகாரி சம்வற்சரத்து தைமாஸம்* (EC,ix,Cp.154.)

விகுதி (பெ) ஒன்றின் விழுக்காடு (1388) *ஊழியமாகக்கொள்ளும் எடுத்தளவு விகுதி தாப்படியும் வெட்டி வீடாரம் நிமந்தம் தச்சு ஆளமஞ்சி* (SII,viii,156)

விக்$_3$க்$_4$நம் (பெ) இடையூறு (894) *இப்பரிசு ஊட்டாமே விக்$_3$க்$_4$நஞ் செய்தார்* (SII,iii,1.)

விக்$_3$நேச்$_0$வர [ர்] (பெ) விநாயகர் (921) *விக்$_3$நேச்$_0$வரக்கு சந்த்$_3$ராதி$_3$த்யவற் நொந்தாவிளக்கொன்று* (SII,xix,365.)

விக்$_4$நம் (பெ) இடையூறு (1120) *இந்நிலம் அநுப$_4$வியாமை விக்$_4$நம் பண்ணுவாரும் விக்$_4$நம் சொல்லுவாரும் விக்$_4$நம் சொல்லுவிப்பாரும்* (EC,iii,Tn.15.)

விச்சலாம் (வி) விதைத்துப் பயிர் செய்யக் கூடிய (1068) *எள்ளும் பயறும் விச்சலாம் நிலந் ஒன்றே* (SII,iv,529.)

விச்சாத்தி (பெ) கூடப் பாடுபவர் (?) (1300) *திருப்பதியம் பாடுவார்களுக்கும் சேவிக்க வந்த விச்சாத்திகளுக்கும் பலவிதத்தால் உள்ள அழிவும்* (SII,v,228.)

விச்சாதிரதோரணம் (பெ) ஒரு வகைத் தோரணம் (1026) *ஆர்த்தவன் அகநகர் போர்த்தொழில் வாசலில் விச்சாதிர தோரணமும் மொய்த் தொளிர் புனைமணிப் புதவமும்* (IPS,98 .)

விச்சி (வி) விதைத்து (1221) *கழுதைகொடுழுது கவடி விச்சி செம்பியனை* (SII,viii,394.)

விச்சு (பெ) விதை (1152) *ஊர் பயிர் ரேற்றுகைக்கு போநகப்படி நெல் விச்சும் நெல்லுங் கொள்கைக்கும் குலைகள் அட்டுகைக்கும்* (SII,vi,440.)

விச்சு கிடாய் (பெ) பொலி கிடா (985) *சாவாமூவா பேராடு நாற்பத்தைஞ்சும் விச்சு கிடாய் 1ம்* (SII,xix,103.)

விச்சுப் பாட்டம் (பெ) ஒரு வரி (1274) *இவர்கள் நத்த இருப்பும் தெண்டிறை தண்டிறை விச்சுப் பாட்டமுள்ளிட்ட அநைத்தாயமிழந்து* (EC,ix,An.46 (a).)

விசக் காணம் (பெ) ஒரு வரி (753) *கதிர்க் காணமும் விசக் காணமும்* (SII,ii,73.)

விச கணக்கு (பெ) செலவு கணக்கு எழுதுபவன் (1081) *சோழ திவாகர மூவேந்த வேளானும் விசகணக்கு உத்தம சோழத் திருவாலி நாட்டு மூவேந்த வேளானும்* (ARE,1931-32,p.51-54.)

விசதம் (பெ) செலவு (1009) *பெருந் திருவமுது செய்தருளவும் இதற்கு வேண்டும் பல விசதங்களுமாக ஆண்டுவரை நெல்* (SII,viii,571.)

விசம் (பெ) செலவு (895) *மற்றுந் திருவமிர்... வேண்டும் விசத்துக்கும்* (SII,iii,94.)

விசவந் (பெ) கணக்கன் (985) *ஊரார் சொல்ல எழுதிநேன் இவ்வூர் விசவந் அலப்படியேன் இவை எந் எழுத்து* (SII,i,84.)

விசாகம் (பெ) விசாக நட்சத்திரம் (932) *திருவிழாத் திருவிசாகம் எழு நாளும்* (SII,v,588.)

விசாரணை (பெ) ஆய்வு (1122) *பஞ்சப்ரதானிகள் பூர்வ்வாசாரம் விசாரணை பண்ணி கம்மாளர்க்கு கொட்டசளுவும் பாவாடையும்* (EZ,iii, 33 (i), p.305)

விசாரம் (பெ) கவலை (1168) *எங்ஙநேயாமோ வென்று விசாரந் தோன்றி* (SII,vi,456.)

விசாழக் கிழமை (பெ) வியாழக்கிழமை (957) *இவ்வாண்டு மகா ஞாயிற்று விசாழக்கிழமை பெற்ற மூலத்தினான்று* (SII,xiii,164.)

விசும்பு (வி) சொர்க்கம் (1061) *...விசும்பேற்றி அந்தரவானத் தரம்பையர் எதிர் கொள இந்திரலோகம்* (SII,v,647.)

விசும்பு (பெ) வானம் (785) *கங்கையொடு விசும்பு தோய்ந்து* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

விசை (பெ) பக்கம் (1198) *கோயில் வடவிசைத் திருமாளிகை* (SII,vii,65.)

விசை (பெ) பலம் (771) *கடு விசையால் எதிர்ந்தவரை* (EI,xvii,16.)

விசையபிஷேகம் (பெ) வெற்றி நீராட்டு (1036) *திருமேனியில் செம்புனல் பொழிய வீரர்களத்து விசையபிஷேகஞ் செய்து* (SII,iv,223.)

விசையம் (பெ) வெற்றி (1125) *விசையமும் புகழு மேல் மேலோங்க* (SII,v,703.)

விச்$_2$ச$_2$ம் (பெ) இடையூறு (1016) *இத்தர்மத்துக்கு விச்சஞ் செய்தார் செங்கா நரையா நறாத்த செய்தார் செய்த பாவங்கொள்வார்* (SII,iii,54.)

விஜ்ஞாப்யம் (பெ) விண்ணப்பம் (771) *நின்றவை விஜ்ஞாப்யம் செய்ய* (EI,xvii,16.)

விஜ்யா வ்ருத்$_3$த$_4$ர் (பெ) அநுபவத்தில் முதிர்ந்தோர் (921) *ஏரி வாரியமும் செய்தாரையும் விஜ்யா வ்ருத்தரையும்* (ARASI,1904-05,p.131f.)

விஜய (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1173) *விஜயஸம்வற்ஸரத்து ச்ராவணமாஸத்து பட்ட மஹோத்ஸவத்தி நான்று* (EC,xiv,Tn.192.)

விஜயபி$_4$ஷேகம் (பெ) வெற்றி நீராட்டு (1055) *பெண்டிர் பண்டாரமும் கைக்கொண்டு விஜயபிஷேகம் பண்ணி* (SII,iii,55.)

விஜயன் (பெ) அர்ச்சுனன் (921) *விஜயனை வலசாபம் நீக்கியும்* (SII,iii,206 (a).)

விஜயத்$_4$வஜம் (பெ) வெற்றிக் கொடி (921) *விஜயத்வஜம் விசும்பணவ* (SII,iii,206 (a).)

விஜைகள் (பெ) வித்தைகள்: தொழில்கள் (1200) *வாஸ்துசாஸ்த்ரமும் சிலப தொழிலும் தேர்ப்பண்ணும் இலக்கணமும் ஆகிற இந்த விஜைகள்ளாலே தந் சரீர இரக்ஷிக்கும்* (SII,xvii,603.)

விஜையம் (பெ) வெற்றி (1122) *முரைசுகள் முழங்க விஜையமும் புகழு மேல் மேல்லோங்க* (SII,v,702.)

விஞ்சம் (பெ) விந்திய மலை (905) *விஞ்சத்தின் விஜம்பணையும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

விஞ்சனம் (பெ) சமையல் பொருள்கள் (1153) *கறி விறகு உள்ளிட்ட விஞ்சனங்களுக்கு நெல் தூணிபதக்கும்* (TMPL,xviii,p.394.)

விஞ்ஞாபனம் (பெ) விண்ணப்பம் (1012) *யாவையு மிறங்காவண்ணம் விஞ்ஞாபனத்தால் மிக வெளிப்படுத்தோன்* (SII,vii,863.)

விட்ட (வி) கொடுத்த (868) *மணலிடில் வேலியாகக் கொண்டு விட்ட* (SII,xii,58.)

விட்ட (வி) முகாமிட்ட (978) *உடையார் காரைக்காட்டு பனையூர் விட்ட வீட்டுக் கோயிலினுள்ளால் மாளிகை ஆதி பூமியில்* (SII,iii,151-151a.)

விட்டன் (பெ) தடவை; முறை (927) *ஆட்டை விட்டன் அட்டுவோமாந பொலியூட்டு நெல்லு* (SII,xxiii,201.)

விட்டார் (பெ) பாய்ச்சியவர் (877) *இக்கறிகை குட்டத்து நீர் விட்டார் க்ராம கண்டகராக பிணித்தோம்* (SII,vi,370.)

விட்டிச்சு (வி) விடுவித்து (1092) *பணி உடையவகளையும் உருவதிச்சு அவகளால் விட்டிச்சுக் கொள்விது* (TAS,v,p.172-76.)

விட்டி (பெ) (= வெட்டி) (1428) *அதிகாரி சேனைபோவர் அங்கசாலைகள் விட்டி வேகாரி* (ARE,1937,113)

விட்டு (வி) திருப்பி (817) *விற்ற பூமி பொன் எல்லாம் கொண்டு விட்டுக் குடுப்பதாகவும்* (SII,vi,344;EI,xxiv,7 (a).)

விட்டு (வி) நீக்கி (953) *இருபதின் கோல் நிலம் விட்டு அதுக்குக் கிழக்கு* (SII,viii,651.)

விட்டுக் குடுப்பது (வி) திருப்பிக் கொடுப்பது (817) *விற்ற பூமி மூயாண்டின் அகம்படி உடையான் மீள்க வரில் ...விட்டுக் குடுப்பதாகவும்* (SII,vi,344;EI,xxiv,7 (a).)

விட (வி) திருப்பிக் கொடுக்க (1000) *இச்செலவின்னுடல்ப் போருமாறு பூமி கொண்டப் பொன் விடக் கடவர்* (TAS,iii,pp.186-188.)

விட (வி) அனுப்ப (550) *நாட்டார்க்குத் திருமுகம் விட* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

விடக் கடவியர் (வி) திருப்பிக் கொடுக்கக் கடமைப்பட்டவர் (946) *வித்தினு போருமளவு பூமி விடக் கடவியர்* (TAS,i,p.293-94.)

விடங்கு (பெ) நகையின் ஓர் உறுப்பு (1014) *திருப்பட்டிகை ஒன்றிற் கிம்பிரிமுகம் ஒன்றும் மட்டபூப் பத்தும் மொட்டு ஒன்றும் விடங்கு நாலும்* (SII,ii,46.)

விடாயாற்றி நாள் (பெ) பெரிய திரு விழாவை யடுத்துச் சுவாமி இளைப்பாற கோவிலுக்குள் நடைபெறும் விழா (1392) *திருப்பூ மண்டபத்தில் திருநாள்க்கள் தோறும் விடாயாற்றி நாளில் மலைகினியநின்ற பெருமாளும்* (TDI,i,190.)

விடியும் (வி) பொழுது புலரும் (1068) *இராத் திருச்சுற்று மாளிகையிலே விடியு மளவு மெரியும் விளக்கு* (EI,xxi,38.)

விடில் (வி) துணை வினை (844) *பலிஇன் முன் குடுப்பது குடாது விடில்* (TAS,ii,p.13-14.)

விடி வைகறை (பெ) விடியற் காலை (980) *விடிவைகறை ஆட்டத்துக்கு வாசிக்கும் போது* (SII,xix,254.)

விடு (வி) வெளிப்படு (771) *விடுகதிரொளி விலக விற்றிருந்து* (EI,xvii,16.)

விடுகலிர் (வி) விடுவீர் (1048) *உப்பு உறை பிடித்து விடுகலிரென்று கேட்டோம்* (TAS,i,p.162-64.)

விடுகை (வி) கொடுத்தல் (1202) *திருநுந்தாவிளக்கும் 32 பசு விடுகையாலும் ஐந்தலை மணியிடுகையாலும்* (SII,viii,151.)

விடுத்த (வி) அனுப்பிய (753) *பிரமதேயமாகப் பணித்தருளி விடுத்தத் திருமுகம்* (SII,ii,73.)

விடுத்து (வி) செலுத்தி (785) *இடறெய்தப் படை விடுத்து* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

விடுதக (வி) அனுப்புக (550) *அறையோலை செய்து கொடுத்து விடுதக* (TASSI,1958-59p.41-83;PLCP,p.26-32.)

விடுதந்த (வி) அனுப்பிய (1080) *வார் கடற்றிவாந்தரத்துப் பூவர் திறை விடுதந்த கதஞ் சொரி களிறு முறை நிற்ப* (EC,x,Mb.47.)

விடுதந்தது (பெ) அனுப்பியது (1254) *திருமாளிகைக்கூறு செய்வார்களும் கணக்கரும் கண்டு விடுதந்ததாவது* (SII,xii,172.)

விடுதர (வி) அனுப்ப (750) *திருமுகம் அருளுச்செய்து விடுதர* (EI,v,8.)

விடு தீட்டு (பெ) தானம் கொடுத்தற்கான ஓலை (1300) *நாயனார் பண்டாரத்தார்க்கு விடுதீட்டுக் குடுத்த பரிசாவது* (SII,v,287.)

விடுந்த (வி) அனுப்பிய (580) *நாட்டார் விடுந்த அறையோலைப்படி* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

விடுப்பது (பெ) விலக்குவது (885) *உல்கு விடுப்பதாகவும்* (TAS,ii,80-82.)

விடுபுடவை (பெ) ஒரு வகைத் துணி (1300) *விடுபுடவை சமக்கட்டுகளுக்கு பணங் காலும்* (AVNM,6,p.36-40)

விடுமோ (வி) அனுமதி தருமோ (800) *பொற்றேர் பருதிக் கென் போதரவிடுமோ* (EI,xiii,10.)

விடுவ்விது (வி) கொடுப்பது (1092) *இதினுக் கமைஞ்சபூமியும் புரையிடமும் பத்தாயமும் விடுவ்விதாக பாடு தாங்குவிதாக செய்தவனும்* (TAS,v,p.172-76.)

விடுவிச்சேன் (வி) மீட்டுக் கொடுத்தேன் (966) *புன்கனூர் ஊர்க்கு பொன் குடுத்து ஊவர் ஏரி விடுவிச்சேன்* (EI,xxviii,43 (a).)

விடுவித்தமை (வி) எதிரிகளிடமிருந்து மீட்டமை (1150) *ஆடி ப்புரிந்தமும் விடுவித்தமையாலும்* (AVNM,9,p.37-39)

விடுவித்தான் (வி) (தான நிலையிலிருந்து) பிரித்தவன்; மாற்றியவன் (1196) *கரிகால சோழ ஆடையூர் நாடாழ்வாநேன் இது விடுவித்தான் அமற புயங்கர பெருமாள்* (SII,viii,129.)

விடுவித்து (வி) மீட்டு (612) *தொறு விடுவித்துப் பட்டான் கல்* (CHHS,1971/88.)

விடுவேலை (பெ) ஒரு வரி (1222) *நல்ல எருது நல்லபசு விடுவேலை கோட்ட மதிள் மற்றும் நாங் கொள்ளும் கோ முறைகளும்* (SII,v,733.)

விடேல் விடுகு (பெ) பல்லவ அரசர் சிறப்புப் பெயர்; பல்லவ அரசில் அலுவலருக்கு வழங்கப்பட்ட பட்டப்பெயரில் ஒரு முன்னொட்டுக் கூறு (792) *விடேல் விடுகு பல்லவப் பெருந்தச்சன்* (EI,xviii,14.)

விடை (பெ) புறப்பட்டுச் செல்ல இசைதல் (796) *தறண்டி கொண்ட போசரும் விடை கொடுக்க* (MASI,lxiii,p.54-59.)

விடை கொள்ளுகின்ற (வி) அனுமதி பெறுகின்ற (796) *தொழுது கிடந்து விடை கொள்ளு[கி] ன்ற இடம்* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

விடைப்பாகன் (பெ) சிவபெருமான் (1000) *மத விடைப்பாகன் மதி கடிகையன் றனக்கும்* (SII,vii,863.)

விடைப்பேர் (பெ) ஒரு வரி (1273) *அச்சுக் கொற்றிலக்கை கடை கூட்டிலக்கை விடைப்பேர் மாதப்படி நாட்டு வினியோகம்* (SII,vii,145.)

விடையோன் (பெ) சிவபெருமான் (1120) *செங்கண் விடையோன் சென்னி மன்னுங் கங்கை நீரு மண்ணுங் குணர்ந்து* (EC,x,Sd.9.)

விடை அதிகாரிகள் (பெ) சோழ அதிகாரிகள் பிரிவுகளுள் ஒன்று (1034) *இவகள் ஏவினபடிய விடை அதிகாரிகள் சோழ மண்டலத்து அருமொழிதேவ வளநாட்டு....* (SII,xiv,145.)

விண் (பெ) ஆகாயம் (800) *விண்படர் வான்சேய் நாடு* (EI,xiii,10.)

விண்ட (வி) மலர்ந்த (800) *வெண்கோடல் விண்ட போது* (EI,xiii,10.)

விண்டவர் (பெ) பகைவர் (1120) *விண்டவர்கள் நாள் வாங்கச் சேயிழையார் நாண் வாங்க* (CHEN,xxiii,p.93-96.)

விண்டார் (வி) சொல்லியவர் (800) *அன்பு மென்னாகச் செய்தாள் இயக்கத்தை விண்டார்* (EI,xiii,10.)

விண்ணகர் (பெ) திருமால் கோயில் (883) *விஷ்ணு ப்ரதிஷ்டை புழலைய விண்ணகர் என்று* (SII,viii,633.)

விண்ணகரத்தவர் (பெ) திருமால் (800) *பரமேச்வர விண்ணகரத்தவர்க்கோராயிரம் பொன்* (SII,iv,131.)

விண்ணப்பம் (பெ) அரசனுக்குக் குறை எடுத்துக் கூறல்; அதைச் செய்யும் ஆள் (746) *ஆளுவ அரசர் விண்ணப்பத்தினால்* (TASSI,1959-60p.18-19;NI,G.54.); (889) *நெர்குட்டி பெருமானார்க்கு விண்ணப்பஞ் செய்து* (EI,vi,32b.)

விண்ணாள (வி) சாவ (905) *விண்ணாள வில்லவற்கு விழிஞத்து விடை குடுத்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

விண்ணூர் (பெ) சொர்க்கம் (833) *வயமன்னரை விண்ணூர்ப் புக வெகுண்டு* (SII,xiv,35.)

விண்ணோர் (பெ) தேவர்கள் (909) *மழநாட்டு வேள் வைத்தான் விண்ணோர்க்குங் காட்சி விளக்கு* (SII,xix,35.)

விண் மீன் (பெ) நட்சத்திரம் (905) *செழு மதுரக்குலம் விசைஒடு விண்மீன்னொடு போர் மிக்கெழுந்த* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வித்தகம் (பெ) சாதுரியம் (905) *சொல் வித்தகந் தனதாக்கி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வித்து (பெ) விதை (946) *பதினாழிப் பறையால் முப்பத்து முப்பறை வித்தும்* (TAS,i,293-94.)

வித்துக்கிடாய் (பெ) பொலி கிடா (976) *சாவாமூவாப் பேராடு வைய்த்த ஆடு 90 வித்துக் கிடாய் ஒன்று* (SII,xix,167.)

வித்துப்பாடு (பெ) குறிப்பிட்ட அளவுள்ள விதை விதைத்தற்குரிய பரப்புடைய நிலம் (866) *எண்கல வித்துப்பாடும்* (TAS,i,p.1-14.)

வித்து வட்டம் (பெ) நாற்றங்கால் (1300) *விளை கழனியில் வித்து வட்டத்தில் முதலான முதல் எடுத்து* (EC,iii,Md.3.)

விதரம் (பெ) மணிக்கல் வகை (1232) *பருமுத்து 790 சிறுமுத்து 360 திரள் பவழம் 291 மாந்தொட்டுப் பொத்தி 30 சிலந்தி 1 விதரம் 69.* (SII,viii,103.)

விதனம் (பெ) துன்பம் (1268) *எங்களை எல்லா விதனங்களும் பண்ணி அச்சு வேணுமென்றமையில்* (IPS,376.)

விதானம் (பெ) பந்தல் (905) *விண்ணென் பெயெரெய்திய மேகஜாலி விதானத்தின்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

விதானிக்கை (பெ) மேற்கட்டு கட்டுதல் (1239) *விதானிக்கைக்கு மிவையிற்றுக்கும் அழிவு சோர்வு வேண்டுமிவையிற்றுக்கும்* (TDI,i,86.)

விதிகிடந்தவா (பெ) முறைப்படி (950) *சா$_1$ஸந ச்$_2$லோகம் விதிகிடந்தவா செய்ய* (TASSI,1962-65,p.32-52.)

விதை (பெ) வித்து (860) *விதை மடைப்பள்ளி நாழியால்* (TAS,i,p.1-14.)

விதை முதல் (பெ) விதைப்பதற்கு ஒதுக்கப்பட்ட தானியம் (1288) *திருநாமத்துக்காணி பேசி நிலக் கூலிக்கும் விதை முதலுக்கும் எதிரடை ஓலைக் காட்டின படியாலும்* (SII,vii,759.)

வித்$_3$தா$_4$க$_3$மிகர் (பெ) கற்றறிந்தவர் (796) *வித்$_3$தா$_4$க$_3$மிகரான தறண்டி$_3$ கொண்ட$_3$ போசர்* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

வித்$_3$யா (பெ) கல்வி (700) *குணஸேண ப்ரமாணஞ் செய்த வித்$_3$யா பரிவாதி$_3$நி கற்* (IPS,4.)

வித்$_3$யா தே$_3$வதை (பெ) சரசுவதி (785) *வித்$_3$யா தே$_3$வதையால் விரும்பப்படும் பா$_4$ர்க்$_3$க$_3$வ கோ$_3$த்ர* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

வித்$_3$யா போ$_4$கம் (பெ) பாடசாலைக்காக விட்ட நிலத்தின் வருவாய் (877) *வித்$_3$யாஸ்தா$_2$னத்தார்க்கு வித்$_3$யா போக$_4$மாகப் பணித்தோம்* (EI,xviii,2.)

விநவ (வி) கேட்க (796) *என்பார்களை விநவ* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

விநவாயிருக்க (வி) கேட்க (1003) *பெருமண்டையிலே இருந்து ஊர்களை விநவாயிருக்க* (SII,xvii,243.)

விநியோக$_3$ம் (பெ) செலவு (805) *ஸபை$_4$யோமும் மற்று விநியோக$_3$ஞ் செய்யாதே* (SII,vi,359.)

விஜைய கஞ்சுகந் (பெ) அடக்கத்தை ஆடையாக உடையவன் (950) *வீர கேரளந் வீர பாண்ட்₄யந் விஜைய கஞ்சுகந்* (TASSI,9162-65,p.32-52.)

விநோதம் (பெ) வேடிக்கை (1197) *ராஜராஜந் திருமண்டபத்து திருவோலக்கஞ் செய்தருளி விநோதங் கண்டருளா நிற்க மடபதியும் தாநத்தாரும்* (SII,v,1359.)

விப்ரர் (பெ) பிராமணர் (950) *விப்ரர்க்கோர் விளக்காயின ஒரு தன்மை இரு பிறப்பில்* (TASSI,1962-65,p.32-52.)

விபரம் (பெ) விரிவுச் செய்தி (1520) *நிலமான்னியத்துக்கு விபரம் புகழற் கோட்டம் எழுமூர் னாடு* (SII,xvii,680.)

விபரீதம் (பெ) இயற்கைக்கு மாறு விரோதம் (1419) *உற்று நிலை அற்ற பகைக்கு விபரீதமாய் இருக்க வேண்டுவதில்லை என்றும்* (IPS,698.)

விப₄வம் (பெ) செல்வம் (1057) *ஆனையுங் குதிரையும் பெண்டிர் பண்டாரமும் விப₄வமும் அடங்கலுங் கைக்கொண்டு* (SII,i,127.)

விபா₄கித்து (வி) பிரித்து (1289) *இந்த அஞ்சு பேருக்கும் ஒரு வ்ருத்தி விபா₄கித்துக் கொள்ளுவது* (EI,xxxvii.32.)

விபூதி காணிக்கை (பெ) தேவதான வருமானத்தின் மீது செலுத்தும் ஒரு வரி (1428) *இந்த தானங்களில் அரைமனைக்குச் செல்லும் விபூதி காணிக்கை யொழிய* (ARE,1937,113)

விபூ₄தி (பெ) வருவாய் மீதான ஒரு வரி (1000) *வெட்டியும் உவகையும் விபூ₄தியும் மற்றும் மெப் பேற்ப்பட்ட இறைப் கோயில்வாசின்று போந்த இறையெல்லாம்* (SII,v,873.)

விபோ₄க₃ம் (பெ) சிறப்பு நிகழ்ச்சி (1317) *திருவிளக்கும் விபோ₄க₃த்துக்கும் ஸர்வமாந்யமாக விட்டேன்* (EC,xvii,Kl.334.)

விமலை (பெ) மருந்துச் சரக்கு (1068) *த்₃ரவத்தி நாழியும் விமலை இரண்டாயிரமும்* (EI,xxi,38.)

விமானம் (பெ) கருவறை (865) *ஸ்ரீ விமானத்திலே ஏற வெட்டினமையில்* (SII,xii,55.)

வியந்து (வி) அதிசயித்து (1068) *முழங்கெரி மூட்டி வெங்கதப் புலியேறி வியந்து விளையாட* (EI,xxi,38.)

வியம் (பெ) செலவு (1310) *உழக்கரிசி திருவமுது படியே இதுகு தக்க மேல் வியமும்* (EC,xiv,Yl.52.)

வியலிடம் (பெ) உலகம் (771) *வேலை சூழ்ந்த வியலிடத்து* (EI,xvii,16.)

வியவன் (பெ) கணக்கன் (753) *நாட்டு வியவன் சொல்லிய எல்லெ போயி* (SII,ii,73.)

வியன் (வி) அகன்ற (771) *வேலாழிஉம் வியன் பறம்பும்* (EI,xvii,16.)

வியாகம் (பெ) விசாக நட்சத்திர நாளில் நடைபெறும் விழா (866) *பங்குனி வியாகம் ஆறாடுவதாகவும்* (TAS,i,p.1-14.)

வியாக்₂யாதாக்கள் (பெ) நூல் விரித்துரைப்பவர்கள் (1300) *அதீ₄தவேத₃ சா₂ஸ்த்ரராய் வியாக்₂யா தாக்களா யிருக்கும் சதுர்வ்வேதி₃ ப₄ட்டர்கள்* (SII,ii,22.)

வியாதிப்பட்டு (வி) நோய் உற்று (1171) *இவர் வியாதிப்பட்டு இன்றியே ஒழிந்தமையில்* (EI,xxi,31.)

வியாபரிக்க (வி) வியாபாரம் செய்ய (849) *வண்டி குணந் தங்காடியிலும் மதிலும் வியாபரிக்கப் பெறுவர்* (TAS,ii,p.67-68.)

வியாபாரம் (பெ) பொருள்களை வாங்கல் விற்றல் தொழில் (864) *எல்லா வியாபாரமும் கடை ஏறி வாணிகம் செய்ய* (MCCM,viii,p.98-104.)

வியாபாரி (பெ) வாணிகன் (872) *கருப்பூர் வியாபாரி காரி தோட்டம்* (SII,xiii,18.)

வியாபாரிச்சி (பெ) வாணிகஞ் செய்யும் பெண்; வியாபாரியின் மனைவி (1120) *ராஜராஜ புரத்திலிருக்கும் வியாபாரிச்சி சோலமாணி தேன்நங்கைக்குச் சமைந்து* (CHEN,xvii,p.314-15.)

வியாழன் (பெ) ஒரு கிரகம் (900) *விருச்சிகத்தில் வியாழ நின்ற யாண்டு* (TAS,iii,p.198-99.)

வியைய (இ) (=விசைய); வெற்றியுடைய (583) *கோ வியைய சிங்க விண்ணபருமற்கு* (CHHS,1971/30.)

விரகற (வி) மாறுபாடு இல்லாமல் (1449) *கல்வெட்டிக்குடுத்தபடி இந்த ஊரவர்கள் நமக்கு வழிபாடு தப்பாமல் விரகற நன்றாக நடந்து போதுகையாலும்* (IPS,462.)

விரதம் (பெ) சபதம் (1068) *ஆங்கவர் வாழிய விரதமாற்றி* (SII,iii,30.)

விரதம் (பெ) நோன்பு (1061) *துன்பம் தவிரப் பல விரதம் தலை நின்று* (SII,xvii,579.)

விரல் (பெ) கைவிரல் (1007) *விரலால் இருபத்து நால் விரல் கொண்டிது முழமாக இதில்ப்பாதி பந்நிரு விரல் கொண்டிது ஒரு சாண் ஆக* (TMPL,xviii,p.100-01.)

விரவலர் (பெ) பகைவர் (921) *பாரத்வாஜாதிகளால் நேர ஸ்துதிக்கப்பட்டது விரவலர்க் கரியது* (SII,iii,20 (a).)

விரவி (வி) நட்புக் கொண்டு (771) *விரவி வந்தடையாத பரவரைப் பாழ் படுத்தும்* (EI,xvii,16.)

விரவி (வி) கலந்து (892) *முதிரை விரவி நாலு கறியும்* (SII,vi,371.)

விரவும் (வி) ஏந்திய (771) *வில் விரவுங் கடற்றானை* (EI.xvii,6.)

விராடம் (பெ) இறையிலி ஏற்பாடு (1433) *திருவிடை ஆட்ட ஊர்களிலெ நியதமாக வருஷந்தொறும் நடக்கும் படிக்கு விராடமும் இடுவித்துக் குடுத்து விராடப்படிக்கு* (TDI,i,199,200.)

விராய் (வி) கலந்து (905) *ஆரியம் விராய் தமிழ் தொடுத்த* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

விரி (வி) பரந்த (905) *விரி கடலை வேலின் மீட்டும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

விரி (வி) மலர் (771) *பூ விரிஉம் பொழிற் சோலை* (EI,xvii,16.)

விரிச்சிக ஞாயிறு (பெ) விருச்சிக ராசியில் சூரியன் இருக்கும் கார்த்திகை மாதம் (975) *இவ் ஊரும் பணையமாய் விரிச்சிக ஞாயிற்று அவிட்டத்தினாள்* (TAS,ii,p.38-40.)

விரிச்சிகம் (பெ) விருச்சிக ராசி (900) *விரிச்சிகத்தில் வியாழ நின்ற யாண்டு* (TAS,iii,p.198-99.)

விரிச்சிக விளக்கு (பெ) விளக்கு வகை (992) *விரிச்சிக விளக்கு முட்டிமவர்* (TAS,ii,p.34-37.)

விரித்து (வி) விளக்கி (771) *தெற்றென விரித்துரைப்பில்* (EI,xvii,16.)

விரிந்து (வி) மலர்ந்து (1012) *புதுமலர் விரிந்து* (SII,vii,863.)

விரிப்பன (பெ) விரித்து வைத்து விற்கப்படுவன (1300) *முகப்பன நிறுப்பன விரிப்பன மடிப்பன* (SII,viii,313.)

விரிமுட்டு (பெ) ஒரு வரி (1340) *காத்திகைப் பச்சை திருமுன் காட்சி நல்லெருது நற்பசு கோணிகை விரிமுட்டு தறி இறை* (SII,iv,415.)

விரியம் (பெ) ஒரு வரி (1502) *வெட்டி முட்டி வேகாரி உலுப்பை விரியம் எச்சோறு இனியோகம் எப்பேற்பட்டனவும் கழித்து* (IPS,720.)

விரிவு (பெ) தரஞ் செய்யப்படா நிலம் (979) *விளையும் நிலமெல்லாம் விரிவு மாத்தால் தூணிப் பதக்கு நெல்* (SII,xix,231.)

விருக்கம் (பெ) மரம் (1279) *கற்பக விருக்கமு முத்தின் பந்தலு* (SII,viii,69.)

விருக்ஷம் (பெ) மரம் (1191) *தெங்கு உள்ளிட்ட மாவிருக்ஷம்* (SII,xvii,595.)

விருகம் (பெ) விலங்கு (1139) *செல்வமுத்தரையன் எசடத்தில் விருகத்தை தப்பி புலியனை பட புலியன் பட்டவாறே* (SII,vii,85.)

விருக வேட்டை (பெ) விலங்குகளை வேட்டையாடுதல் (1199) *குலோத்துங்க சோழ தேவற்க்கு யாண்டு ஆறாவது விருகவேட்டை போநடத்தில்* (SII,vii,85.)

விருத்தி (பெ) மானிய நிலம் (809) *தண்ணீரட்டுவார்க்கு விருத்தி பெரும்பழஞ்சி வேள்விக் குமிழியால் நீர்படுவன* (SII,xiv,40.)

விருத்துப்படி (வி) ஒரு வரி (1341) *வழி நடைக்கு இடும் பணம் முன்னிடும் பணம் எடுத்தளவு விருத்துப்படி அரிசி காணம்* (SII,vii,109.)

விருத்துப்படிகை (பெ) ஒரு வரி (1374) *அரிசி காணம் ஆள் அமஞ்சி எற்சோறு எடுத்தளவு விருத்துப் படிகை விலைகாணம்* (SII,i,72.)

விருத்துப்பாடு (பெ) ஒரு வரி (1518) *விருத்துப்பாடும் உடுகறை முகம்பார்வை மற்றும்* (ARE,1912,353)

விருத்து வகை (பெ) ஒரு வரி (1330) *செக்குக் கடமை சுங்க எண்ணை இவகைகளுக்கு கொள்ளும் புறக்கலனை விருத்து வகை மாவடை மரவடை எரிமீன்பாட்டம்* (TDI,i,99.)

விருத்தூண் (பெ) ஊருக்குப் புதியவருக்கு அளிக்கப்படும் சிறப்புணவு (898) *அட்டமுத்தி வைத்த விருத்தூணுக்கும்* (SII,xiii,322.)

விருத்தூணர் (பெ) விருந்தாளி (886) *நம்பிராட்டி விருத்தூணர்க்கு வைத்த பொன்* (SII,xii,104.)

விருதர் (பெ) வீரர் (1045) *திண்டிறல் விருதர் விக்கியும் விஜையாதித்தனும்* (SII,iv,537.)

விருதாவல்லி (பெ) பட்டங்கள் வரிசை (1477) *செண்பக ராமன் வாழ்வு உகந்து தாழ்வு செய்யாதான் கற்பக வீரன் வேற்றரசர் மீகாமன் ஆக இந்த விருதாவல்லியும் பெற்று* (IPS,715.)

விருது (பெ) வெற்றிச் சின்னம் (1066) *இகல் முனை விருதோடு மலைக்கும் விக்கலன் தன்நோடு* (SII,v,976.)

விருந்தம் (பெ) மனைவிமார் (1171) *இவர் விருந்தங்களுக்கும் மக்களுக்கும் இவர்கள் விருத்தங்களுக்கும் மக்களுக்கும் பெண் மக்களுக்கும் தாயார்க்கும்* (EI,xxi,31.)

விருந்து (பெ) சிறந்த உணவு (1237) *செய்யா தொழியில் இயமக்கு வேறுவேல் விருந்தாக்குது முமையென விட்டருளி* (SII,v,431; EI,xxii,10.)

விருந்தூட்டு (பெ) சிறந்த உணவளித்து.உபசரிக்கை (879) *இவ்விருந்தூட்டு முட்டில்* (SII,iii,8.)

விருப்பு (பெ) ஆசை (1012) *திருப்புய முயங்குந் தேவி விருப்புடன் வந்துதித்தருளிய* (SII,vii,863.)

விருப்புற்று (வி) விரும்பி (905) *பாயல் மீமிசை நிமிர்ந்து பல்லுண்டி விருப்புற்றும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

விருப்புற (வி) ஆசையுற (1116) *புராண நூல் விரிக்கும் புரிசை மாளிகையும் வரிசையால் விளங்கப் பொருப்பினால் விருப்புறச் சேதோன்* (EI,xviii,8a.)

விரும்பப்படும் (வி) ஏற்கப்படும் (785) *வித்₃யாதே₃வதையால் விரும்பப்படும்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

விரும்பும் (வி) காதலிக்கும் (900) *ஒண்டமிழ்ப்பார் மங்கை தன் விரும்பும் பல்லவமாராயன்* (EI,vii,5.)

விரும்மச்சாரிகள் (பெ) (= மாணி): கோயில் ஊழியரில் ஒரு வகை (500) *செயும் பாண்டங்கரும் சேவுக்கரும் விருமச்சாரிகள்ளும்* (AVNM,1,p.67-69)

விரை (பெ) வேகம் (905) *விரை பரித்தேர் வீர நாரணன்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

விரை செயும் (வி) வாசனை வீசும் (1012) *பூழியன் விரைசெயு மாதவித் தொங்கல்* (SII,vii,863.)

விரைய (வி) வேகமாக (1266) *ஆனூர் புரிச்சு விரையச் செல்கென விடை குடுத்தருளி* (IPS,366.)

விரோதம் (பெ) பகைமை (833) *தமக்கும் இயல்லின் களவிரோதம் இன்மையின்* (SII,xiv,44.)

விரோதம் சொல்லுவான் (பெ) எதிர்ப்பவன் (991) *இத₄ர்ம்மத்தை விரோதம் சொல்லுவான் வெவ்வேற்றுவகை திருவாணைபுரற்றார் படும் தண்டம்* (SII,xiii,131.)

விரோதி (பெ) ஓர் ஆண்டின் பெயர் (1109) *விரோதி ஸம்வற்சரத்து வீரபெ.பாணராதித்தன்* (EC,x,Gd.57.)

விரோதிக்கில் (வி) முரண்படில் (944) *இதினில் விரோதிக்கில் உச்சவத்தையும் பிழைச்சு* (SII,v,783.)

வில் (பெ) சிலை (771) *விற்கைத் தடக்கை விறல் வேந்தன்* (EI,xvii,16.)

வில் பணம் (பெ) ஒரு விற்பனை வரி (1432) *உள்ளாயம் வில்பணம் மக₄மை மல்லாஇ மக₄மை* (EI,xviii,17.)

வில்லவன் (பெ) சேரன் (800) *நின்றது வில்லவன் வல்லரண்* (EI,xiii,10.)

வில்லிகள் (பெ) வில் வீரர்கள் (1022) *வலங்கை வேளைக்காறப் படைகளில் பண்டித சோழத் தெரிந்த வில்லிகள்* (SII,ii,12.)

வில்வரி (பெ) ஒரு விற்பனை வரி (1374) *செக்கு கடமை வில்வரி வாசல்வரி ஏரிமீன்பாட்டம் மாவடை* (ARE,1911,324)

வில் வாள் கொந்தவர் (பெ) பல ஆயுதங்களை உடைய வீரர் (1013) *உடையார் ஸ்ரீ ராஜராஜ தேவர் படை வில் வாள் கொந்தவரில் சோமாசி குட்ட தாழியும்* (SII,v,652.)

வில்வேலி (பெ) வில் அம்புகளால் இடப்பட்ட வேலி (771) *வில்வேலிக் கடற்றானைய* (EI,xvii,16.)

விலக்க (வி) தடுக்க (866) *சாலா போகமுந் தேவதானமும் சத்தி முகம் இன்றி விலக்கப் பெறார்* (TAS,i,p.1-14.)

விலக்கு (பெ) கிளை (1016) *ஸ்ரீதே₃வி வாய்க்காலின் வடக்கு 1 கணாற்று விலக்கு வாய்க்காலின் கிழக்கு* (SII,vi,312.)

விலக்கு (பெ) பிரிவு; கிளை (1148) *தென்னெல்லை அள்ளியூறுக்கு போன விலக்கு பெருவழிக்கு வடக்கும்* (SII,xiv,264.)

விலக்கும் (வி) ஒதுக்கப்பட்ட (885) *நாலு வாதி லகத்தும் விலக்கும் பூமியாக* (TAS,ii,p.80-82.)

விலக்கும் (வி) தடை செய்யும் (951) *விலக்கும் மவகள்க் கனுபந்தம் பறையு மவகளும் இத் தண்டமே படுவது* (TAS,i,p.288-89;TAS,v,p.6-7.)

விலக்குமவர் (பெ) தடுப்பவர் (947) *பரடையார் தாங்கள் விலக்கப் பெறார் விலக்குமவர்கட்கு பலயை செய்யப்பெறார்* (TAS,vi,52-64.)

விலக்குவார் (பெ) தடுப்பவர் (800) *இச் செலவு விலக்குவார் மூழிக்களச்ச..* (TAS,iii,p.203-05.)

விலக்குவிது (வி) தடுப்பது (947) *தேவதானத்தில் புக்கு விலக்குவிதும் பொருள் கவரவும் பெறார்* (TAS,vi,52.)

விலக்கு அடைப்பு (பெ) ஒரு வரி (1340) *மேற்கட்டி வரி கீற்றுவரி விலக்கு அடைப்பு நல் எருது* (ARE,1934,059)

விலக (வி) ஒதுங்க (771) *அவிரொளி விலக வீற்றிருந்து* (EI,xvii,16.)

விலங்கடைக்க (வி) குறுக்கே அடைக்க (1008) *இவ்வாய்க்கால்கள் அன்னியர் குறுங்கறுத்துக் குத்தவும் விலங்கடைக்கவும்* (EI,xxii,34.)

விலங்கடைய (வி) குறுக்கே அடைக்க (978) *அந்யர் குறங்கறுத்துக் குத்தவும் குற்றேத்தம் பண்ணவும் கூடை நீரிறைக்கவும் விலங்கடையப் பெறாதிதாகவும்* (SII,iii,151-151a.)

விலங்கல் (பெ) மலை (771) *விலங்கல் வேல் பொறி வேந்தர் வேந்தன்* (EI,xvii,16.)

விலங்கி (வி) தடுத்து (966) *இத்தன்ம [இடை] விலங்கி அன்றாள் கோவுக்கு நிசதம் கல் பொன் தண்டி பட ஒட்டி குடுத்தோம்* (EI,xviii,43 (a).)

விலெ (பெ) விலை (691) *விலெக்காணங் கெயிக் கொடுத்து* (SII,i,151;EI,xvii,22.)

விலை (பெ) கிரையம் (755) *யானிவர் பக்கல் விலைக்குக் கொண்டுடையன* (SII,vi,356.)

விலைக் கலம் (பெ) விலையாவணம் (1044) *விற்று விலைக் கலம்(ஞ்) செய்து குடுத்தோம்* (SII,v,307.)

விலைக் காணம் (பெ) கிரயத் தொகை (877) *இமூவர் பக்கலும் விலைக் காணங் கைச்செல்ல* (SII,vi,370.)

விலை கொண்டு (வி) வாங்கி (780) *நான் விலை கொண்டு உடைய ஒன்றரை வேலி நிலம்* (SII,xiv,17.)

விலைத்தரவு (பெ) விலைக்கான ரசீது (1246) *இன் நாயற்று தியதி பதின்மூன்றினால் நிலம் விற்று விலைத்தரவு எழுதிக் குடுத்து* (SII,viii,708.)

விலைத்துண்டம் (பெ) ஒரு வரி (1300) *ஊசி வாசி விலைத் துண்டம் நீராணி காவேரிக்குலை தேவை குடிமை* (SII,ii,22.)

விலை த்₃ரவ்யம் (பெ) விலைப் பொருள் (972) *நாநூறு குழி நிலத்துக்கும் விலைத்₃ரவ்யமும் இறைத்ரவ்யமும்* (SII,xiii,262.)

விலைப் பதுவாரம் (பெ) ஒரு வரி (1400) *கெடுபாதை யுறுபாதை மரமச்சாதி விலைப்பதுவாரங் கானாட்டு பிராத்தியும்* (SII,viii,403.)

விலைப் பொருட் காசு (பெ) விற்ற பொருளுக்கு ஈடான பொருள்/நாணயம் (1002) *விற்று விலையாவணம் செய்து குடுத்துக் கொண்ட விலைப் பொருட் காசு ஈழக்காசு வாசி படாமைச் செல்லுங் காசு* (SII,v,1409.)

விலைப் பொருட் செலவு (பெ) கிரையத் தொகை செலுத்தல் (1034) *விற்றுக் குடுத்த இப் பூமிக்கு விலைப் பொருட் செலவாவது எம்மிலிசைந்த விலைப் பொருள்* (SII,xiv,147.)

விலைபிரமாணம் (பெ) (= விலை ஆவணம்) (1213) *விலைகொண்ட விலைப் பிரமாணத்துக்குள்பட்ட நிலம்* (AVNM,7,p.52-53)

விலை மா (பெ) விலைப்பணம் (1250) *இதின்னு வேண்டும் விலைமாவுங் கைய்யிலே வீடறக் கொண்டு நீரோடு மட்டி கொடுத்தான்* (KANDT,1968/250.)

விலைய் ச்₀ராவணி (பெ) (= விலை ஆவணம்) (869) *அக்₃நிசர்ம்மன் விலைய் ச்₀ராவணியால்* (EI,xi,22 (a).)

விலையறுதி (பெ) முடிவான கிரையம் (805) *இப் பொன்னுக் கிம்மாடு விலையறுதியாய் எருவிலையால் வந்த மாடெப்பேர்ப்பட்டதும்* (SII,vi,359.)

விலையாசெறு அரசுபேறு (பெ) ஒரு வரி (1387) *ஆசு பொதுமக்கள் பேரால் கொள்ளும் விலையாசெறு அரசு பேறு பாடிகாவல் அரிசிகாணம்* (EI,viii,31.)

விலையாசை அறுதி (பெ) பொருள்களை விற்றல் பொருட்டு செலுத்தும் வரி (1430) *பொந்பயிர் புந்பயிர் விலையாசைஅறுதி வாசல் பணம் வெட்டிவரி ஏரிமீந் செட்டு இறை* (SII,viii,349.)

விலையாவணக் களம் (பெ) நிலம் விற்றல் வாங்கல் நடைபெறும் கடைத்தெரு (1232) *இக்காசு இரண்டாயிரமும் விலையாவணக்களத்தே காட்டேற்றி கைசெலப் பொருளற கொண்டு* (IPS,301.)

விலையாவணக் களரி (பெ) (= விலையாவணக் களம்) (1260) *இப்பணம் ஆயிரமும் விலையாவணக்களரியே காட்டியேற்ற கைச் செலவறக் கொண்டு* (SII,v,303.)

விலையாவணக்களி (பெ)) (= விலையாவணக் களம்) (953) *எம்மிலிசைந்த விலைப்பொருள் விலையாவணக்களியே கைச் செல்ல அறக்கொண்டு* (SII,xiii,50.)

விலையாவணச் சலாவணப் பொருள் மாவறுதிப் பொருட் செலவோலை (பெ) விற்ற பொருளும் விலைப் பொருளும் கைமாற்றியமைக்கு இறுதி எழுத்துச்சான்று (விற்போர் வாங்குவோருக்குக் கொடுப்பது) (1260) *இதுவல்லது வேறு விலையாவணச் சலாஅவணப் பொருள் மாவறுதிப் பொருட் செலவோலை காணவுங் காட்டவும்* (SII,v,303.)

விலையாவணப் பொருட் செலவோலை விற்றதற்கும், விலைப்பொருள் செலுத்தப் பட்டதற்கும் கொடுத்த எழுத்துச்சான்று (811) *விலைக்குற விற்றுப் பொருளறக் கொண்டு விலையாவணப் பொருட் செலவோலையாகச் செய்து* (SII,xiv,41.)

விலையாவணம் (பெ) (= விலையாவணப் பொருட் செலவோலை) (953) *விலைக்கற விற்றுப் பொருளறக் கொண்டு விற்று விலையாவணஞ் செய்து குடுத்தோம்* (SII,viii,651.)

விலையாவண ஓலை (பெ) (= விலையாவணப் பொருட் செலவோலை) (772) *விலைக்கறவிற்றுப் பொருளறக் கொண்டு விலையாவண ஓலை எழுதி விற்று* (SII,xiv,19.)

விலைமிட்ட (பெ) விலை நிர்ணயித்த (1043) *இவகள் சென்று விலையிட்ட சரக் கெல்லாருங் கொள்வது* (TAS,viii,p.39-40.)

விலைவிண்டுபாகம் (பெ) ஒரு விற்பனை வரி (1363) *நாட்டு வினியோகம் விலைவிண்டு பாகம் தறிக்கடமை* (ARE,1918,184)

விலை ச்₀ராவணை (பெ) (=(= விலையாவணப் பொருட் செலவோலை)) (873) *விற்று விலைச்₀ராவணை செய்து குடுத்தோம்* (SII,iii,90.)

விலை உடையன் (பெ) விலைக்கு வாங்கியவன் (780) *இப்பரிசு விலை உடையனாயிருந்த* (SII,xiv,17.)

விலை ஓலை (பெ) (= விலையாவணப் பொருட் செலவோலை) (1013) *திருவடி பணியாய் இ விலை ஓலை எழுதினேன் இவூர் மத்யஸ்தன்* (IPS,90.)

விலோபம் (பெ) எதிர்த்தல் (985) *இப்பொன்னுக்கு விலோபம் என்றோம் கெஙகை யிடைக் குமரியிடை செய்தார்* (SII,xiii,168.)

விவத்தை (பெ) தீர்மானம்; உடன்பாடு (1178) *இராச நியோகமும் நாட்டு விவத்தை ஊர் விவத்தைபடியும் வந்த கடமை குடிமை எப்பேர்ப்பட்டனவும்* (SII,xvii,640.)

விவரம் (பெ) விளக்கமான செய்தி (1570) *நான்கு எல்லைக்கும் விவரம் வடக்கு எல்லை* (AVNM,7,p.68-70)

விவரிக்கப்படுகிற (வி) விளக்கிச் சொல்லப்படுகிற (1103) *சாஸ்த்ரங்களில் விவரிக்கப்படுகிற பாஸுமத்த்யாதி சிவ தத்வ* (SII,vii,404.)

விவஸ்தா பத்ரம் (பெ) ஒப்பந்த ஆவணம் (1240) *ஜீயர் விச்வேச்வர சிவாச்சார்யற்கு ந...பண்ணிக் குடுத்த விவஸ்தாபத்ரம்* (IPS,196.)

விவஸ்தை (பெ) தீர்மானம்; உடன்பாடு (1269) *விக்கிம சோழ வளநாட்டு நாட்டாரோம் விவஸ்தை* (SII,xvii,727.)

விவாகம் (பெ) திருமணம் (1369) *இவர் உடப்பிறந்த பெண் பிள்ளை காணவினியாரை நான் விவாகம் பண்ணுகையில்* (IPS,460.)

விவாதம் (பெ) வழக்கு (953) *ஸீமா விவாதமாய்க் கிடந்த நிலம்* (SII,xiii,51.)

விவாஹ தக்ஷிணை (பெ) திருமணத்தின் போது கோயில், பிராமணர் ஆகியோருக்குச் செய்யும் கொடை (929) *பரமேச்வர்க்கு விவாஹ தக்ஷிணையாக ....உதகபூர்வ்வகஞ் செய்து குடுத்த நிலமாவது* (SII,viii,632.)

விவாஹ பணம் (பெ) திருமணத்தின் போது செலுத்தும் வரி (1471) *குழிப்பணம் விவாஹபணம் பட்டடை நூலாயம் எருத்துச்சம்மாதம்* (ARE,1921,120)

விவாஹம் (பெ) திருமணம் (970) *என் ப்ராஹமணி இளையாள் ஸ்ரீ ராமனீல கண்டியை நான் விவாஹஞ் செய்கின்றேன்* (SII,xiii,251.)

விளம்பி (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1178) *விளம்பி சம்மச்சரத்து மிதுநமாசத்து பாடிவ நாயற்று கிழமையில்* (EC,ix,Kn.35.)

விழல் (பெ) கோரைப் புல் (1118) *நடுவுபட்ட னிலம் அனேக காலம் விழலுங் காடுகோளுமாய்ப் பயிர் செய்யாதும்* (SII,iv,134.)

விழவு (பெ) திருவிழா (985) *ஸ்ரீ கோகர்ணத்து பங்குனி திருவுத்திரத்துக்கு கணவதியார் விழவுக்கு* (SII,xix,316.)

விழா (பெ) திருவிழா (833) *விழாமலியும் வியன் றெரு* (SII,xiv,44.)

விழாகம் (பெ) ஓர் எல்லைக்குட்பட்ட இடம் (1124) *பிடாகைப்பட்ட குறிச்சியான புரவரி விழாகம் நிலமாய் வந்த* (SII,v,294.)

விழாப்பலி (பெ) உற்சவத்தின் போது கோயிலில் நாடோறும் பலி பூசைக்காக எழுந்தருளப்பண்ணும் விக்கிரகம் (1100) *பந்தீரடியில் முன்னே யமிர்து செய்யிச்சு விழாப்பலி புறப்படக் கடவர்* (TAS,v,p.34-37.)

விழாப்புறம் (பெ) திருவிழா நடைபெறுவதற்கு விடப்பட்ட இறையிலி நிலம் (866) *விழாப்புறமாக ஏழு நாடிருவிழாச் செய்து* (TAS,i,p.1-14.)

விழி கண் (பெ) திறந்த கண் (800) *விழி கட் பேய் புண்ணலைந்து* (EI,xiii,10.)

விழித்து (வி) சினந்து (921) *கனற்பட விழித்தெதிர்ந்த வீரர்* (SII,iii,206 (a).)

விழு (உ) சிறந்த (785) *விழு நிதிஞெ* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

விழுக்காடு (பெ) சராசரி (1133) *ஸ்ரீமாஹேச்வரகும் கரணத்தானுமறிய நிரவி விழுக்காடு குழி ஒன்றுக்கு ஆள் நாலாக* (SII,iii,79;SII,iv,642.)

விழுத்தி (வி) நீக்கி (1089) *தேவதானமாக இறை விழுத்திக் குடுத்த விளைநிலம்* (SII,vi,269.)

விழுத்துகை (பெ) நீக்கல் (1118) *இறை விழுத்துகைக்குக் கிரயமாக* (SII,iii,31.)

விழுந்திருந்த (வி) சேர்ந்திருந்த (1523) *நரஸிம்ஹராய மஹாராயர் ஆஜ்ஞை யிடுவித்து ஸ்ரீ பண்டாரத்தில் விழுந்திருந்த ... மனை அரையும்* (SII,iv,303.)

விழுப்பம் (பெ) மேன்மை (950) *விதித்தமைத்த அநுஷ்டுப்பின் விழுப்ப நோக்கி* (TASSI,1962-65,p.32-52.)

விழுமிய (இ) சிறப்பினை உடைய (1068) *விருப்பூர் விழுமிய தேவர்க்கு திருப்பூர் விளக்கு வைத்து* (SII,iv,545.)

விழுலி (பெ) புல் முளைத்த தரிசு (962) *நம் மூர் விழுலிமாய்க் கிடந்த நிலத்தில்* (SII,iii,182.)

விழைந்து (வி) விரும்பி (1171) *வருபகை யகத்தின்றி விழைந்து காதலுடன் சேர* (SII,xvii,592.)

விளக்க (வி) துலக்க (1009) *திருமேனிகளும் திருப்பரிகலங்களும் விளக்க புளிக்கு நிசதம் நெல்லு நாழியும்* (CHEN,xxi,p.425-428.)

விளக்கிந (வி) பற்றவைத்துச் சேர்த்த (1009) *மூன்றொன்றாக அடிக்கி விளக்கிந தாளிம்பம் இரண்டும்* (SII,v,521.)

விளக்கு (பெ) தீபம் (807) *இரையனாச்சிய் வைச்ச விளக்கு ஒன்று* (SII,xiv,38.)

விளக்குநெய்ப் புறம் (பெ) விளக்கிடுவதற்கு விட்ட மானிய நிலம் (916) *துடர் விளக்கொன்றினுக்கு விளக்குநெய்ப் புறமாக* (EI,xxiii,45c.)

விளக்கு நோக்குவான் (பெ) விளக்கணையாமல் காப்பவன் (1000) *விளக்கு நோக்குவானுக்கும் நான்நாழி அரையும்* (TAS,iii,p.79.)

விளக்குப் புறம் (பெ) விளக்கெரிக்க விட்ட மானிய நிலம் (945) *இந் நிலம் விளக்குப்புறமாக விற்றுக்குடுத்து* (SII,xvii,656 (Appx,).)

விளக்கு பிடிப்பார் (பெ) விளக்குத் தூக்குபவர் (986) *திருவிழாவுக்கு விளக்கு பிடிப்பாரும் கொடி எடுப்பாரும்* (SII,iii,128.)

விளக்கு மாடம் (பெ) விளக்கு வைக்கும் சுவர்ப்புரை (1218) *ஸ்ரீ விமானமும் அவிக்கினாறும் விளக்கு மாடமும் பணி செய்விச்ச* (TAS,i,p.289-91.)

விளக்கெண்ணை (பெ) விளக்கு எரிக்கும் எண்ணெய் (879) *விளக்கெண்ணை அட்டுவானுக்கு* (SII,xiii,187.)

விளங்க (வி) சிறக்க (785) *வைத்ய குலம் விளங்கத் தோன்றி* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

விளங்கிய (வி) மிகுந்த (1145) *பரிசிலாகச் சீர்விளங்கிய ஆலையல்* (SII,vii,1044;IPS,120.)

விளங்கின (வி) சிறந்து தோன்றின (921) *பகுதி ஆற்றலோடு விளங்கின பரசக்கிர கோலாகலும்* (SII,iii,206 (a).)

விளங்குக (வி) பிரகாசிக்கவும் (833) *மதியமும் ஞாயிறும் போலப் பதிதோறும் விளங்குக* (SII,xiv,44.)

விளங்குவித்தோர் (பெ) சிறக்கச் செய்தவர் (1300) *பதியனைத்து விருப்புடன் விளங்குவித்தோர்* (AVNM,6,p.36-40)

விளப்பு (பெ) நிலப் பெயர் (866) *தெங்க நாட்டு விளப்பில் தலை விளப்பில் ...எண்கல வித்துப்பாடும்* (TAS,i,p.1-14.)

விளம்ப (வி) கூற (1070) *வீர ராஜேந்த்ரற்கி யாண்டு ஒன்று விளம்ப* (IPS,115.)

விளம்பரும் (வி) சொல்லுதற்கரிய (1044) *வெல்புரவி நுளம்பனும் காளி தானைும் விளம்பருந் தார் சாமுந்டனு* (SII,v,465.)

விளா (பெ) ஒரு மரம் (1018) *இவ் வெல்லையில் நின்ற விளாவே யற்று வடக்கிலும்* (SII,iii,205.)

விளா (பெ) (= விழா) (1125) *...திருநாள் விளாவதனிற் தைப்பூசப் பிற்றை நான்று* (TAS,i,p.21f.)

விளாகம் (பெ) சூழ்ந்துள்ள இடம் (988) *மதுராந்த விளாகத்தில் வெங்கன் கூற்றில் லொருமாவும்* (SII,xiii,52.)

விளாகம் (பெ) சூழ்ந்த இடம் (885) *நெடுவெட்டூரார்கட்கும் பொதுவாயின விளாகத்தின் றெற்கு* (SII,xii,105.)

விளிக்க (வி) அழைக்க (961) *அதிகாரியும் தளியாள்வான் விளிக்கச் செல்லா தொழியிலும்* (TAS,viii,p.43-44.)

விளிம்பு (பெ) ஓரம் (1125) *மாணாக்கன் குழிக்கீழ் விளிம்பும் நங்கைக்கிணறு* (TAS,1,p.21.f.)

விளிம்பு (பெ) ஓரம் (921) *விசும்பணவச் செங்கோறிசை விளிம்பணவ குசைமாவும்* (SII,iii,206 (a).)

விளியாது (வி) அழைக்காது (961) *விளியாதொழிவிதும் குறை பதிஞ்ஞ கல்பிச்சு* (TAS,viii,p.43-44.)

விளெ நிலம் (பெ) பயிரிடக்கூடிய நிலம் (691) *ஒழுக்கவிக்கு விளெநிலம் ஆகவும்* (SII,i,151;EI,xvii,22.)

விளை (பெ) நிலத்தின் பொதுப்பெயர் (1698) *குதிரைப் பந்தி விளையிலும் வையாழி விளையிலும்* (TAS,v,p.210-12.)

விளை (வி) பயிராகும் (905) *தாதலர் பூம் பொழிறழுவிச் சாலி விளை வயவளத்தால்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

விளைக்க (வி) பயிர் செய்ய (861) *தண்டமும் பட்டு பிந்நையும் விளைக்கப் பெறாதிதாவும்* (SII,xiv,78.)

விளைச்சறியாத நிலம் (பெ) தரிசு நிலம் (986) *வடவாய் சிறு திடலில் சந்த்ராதித்தவல் விளைச்சறியாத நிலம் கல்லி* (SII,xix,389.)

விளைச்சு (வி) விளையச் செய்து (916) *நீர் மிகுவது வச்சு நெல் விளைச்சு* (SII,xiv,56.)

விளைஞ்சறியா (வி) இதுவரை பயிராகாத (955) *விளைஞ்சறியாப் புன் செத்திடலை விலைக்குக் கொண்டு வயக்கி* (SII,viii,699.)

விளைத்த (வி) உண்டாக்கிய (833) *வென்றிகளேய் பல விளைத்த தென்னவர் கோ நெடுமாறன்* (SII,xiv,44.)

விளைத்து (வி) பயிரிட்டு (946) *இவ்வூர் நடை இரண்டொன்றாய் விளைத்து* (SII,iii,110.)

விளைந்த (வி) உண்டான (800) *அப்பாறை சொல்லென் விளைந்த வினையை* (EI,xiii,10.)

விளைந்தறியா (வி) இதுவரை பயிரிடாத (924) *பண்டு விளைந்தறியாக் களர்* (SII,viii,695.)

விளைந்தன (வி) விளைந்த நிலங்கள் (1073) *புன்செய் விளைந்தனத்துக்கு மேல்வாரம் ஐஞ்சிலொன்றும் ஏரிகீழ் நெல் விளைந்தன* (EC,x,Mb.119.)

விளை நிலம் (பெ) பயிரிடக் கூடிய நிலம் (880) *வரம்பறுத்த விளைநிலமாய்* (SII,xii,102.)

விளை பூமி (பெ) பயிரிடும் நிலம் (1015) *யானுடைய விளைபூமி* (SII,iii,53.)

விளைய (வி) பயிர் உற்பத்தியாக (953) *நீர் பாஞ்சு விளைய* (SII,xiii,36.)

விளையா (வி) முதிராத (800) *பால் கொண்ட செவ்வாய் விளையா மொழி* (EI,xiii,10.)

விளையாட (வி) வேடிக்கை செய்ய (1068) *வெங்கதப் புலியேறி வியந்து விடையாட* (EI,xxi,38.)

விளையாத (வி) பயிராகாத ஆண்டு (1132) *விளையாத ஆண்டு ஆடின கூத்துக்கு கொற்று விடுவதாக* (IPS,128.)

விளையாது (வி) பயிர் செய்யப்படாது (919) *இந்நிலமேடாய் விளையாதே கிடக்க* (SII,viii,641.)

விளையா மொழி (பெ) மழலை (800) *பால் கொண்ட செவ்வாய் விளையா மொழிப் பருவத்து* (EI,xiii,10.)

விளையும் (வி) பயிராகும் (1002) *இரு பூ விளையும் நிலம்* (SII,viii,217.)

விளைவது (பெ) பயிராவது (811) *நீரட்டு அட்டு நெல் விளைவது* (SII,xiv,41.)

விளை வயல் (பெ) பயிராகின்ற வயல் (1176) *மன்னிய நெதி வளம் பெருக்க விளை வயலின் வளஞ்சுரக்க* (SII,xvii,585.)

விளைவன (பெ) பயிரிடக் கூடியவை (811) *நெல் விளைவன இளமக்கள் செய்தடிந் நிலம்* (SII,xiv,41.)

விளைவித்த (வி) பயிர் செய்த (994) *நீர் பூசி நெல் விளைவித்த நிலமும்* (SII,xiii,199.)

விளைவு (பெ) விளைச்சல் (833) *அறை கரும்பு விளைவரு அழகமைந்த கிழவனேரியும்* (SII,xiv,44.)

விற்க (வி) விலைக்குக் கொடுக்க (877) *இம்மனைகள் ஆரும் விற்கவும்* (SII,vi,290.)

விற் கண்டம் (பெ) கட்டிட உறுப்புக்களுள் ஒன்று (932) *பொதிகைஇலும் விற்கண்டத்திலும்* (SII,v,588.)

விற்காயம் (பெ) ஒரு விற்பனை வரி (1288) *இனவரி தட்டார்ப் பாட்டம் விற்காயம் மரப்பட்டடை ஒழுக்கு நீர்ப்பாட்டம்* (SII,vii,795.)

விற்கில் (வி) கிரையம் செய்தால் (768) *நிலம் எல்லாவற்றின் மேலும் விற்கிலும்* (SII,xii,34.)

விற் சேவகன் (பெ) விற்படை வீரர் (911) *இருமடிச் சோழக் கன்னாடகக் கடுத்தலை விற்சேவகன் பிடாரன் பூத்துகனும்* (SII,xix,89;SII,iii,97.)

விற்ப்பன (பெ) விற்கப்படும் பொருள்கள் (873) *மற்றும் கிடந்து விற்ப்பன குவாலால் நாழி கொள்ளப்பெறுவதாகவும்* (SII,iii,90.)

விற்பணம் (பெ) ஒரு வரி (1374) *ஏரிமீன் விற்பணம் தளையாரிக்கம் நல்லெருது* (SII,iv,351.)

விற்பார் (பெ) விற்பனை செய்பவர் (992) *மேல்பாற்கெல்லை விற்பார்கள் நிலத்துக்கு கிழக்கும்* (SII,iii,50.)

விற்பான் (பெ) விலைக்குக் கொடுப்பவன் (764) *விற்பான் உளனாயிலும்* (TAMIZ,1970,p.124.)

விற்பிடி (பெ) ஒரு வரி (978) *நாடு காவலும் ஊடுபோக்கும் விற்பிடியும் வால்மஞ்சாடியும் உல்கும்* (SII,iii,151-151a.)

விற்பிது (பெ) விற்பது (877) *இது விற்பிது ஆதல் பணிப்பிது ஆதல் செய்தார்* (SII,vi,290.)

விற்றமை (பெ) விற்பனை செய்தமை (1218) *இறை மிகுதி பூசைக் குடலாக நிச்சயித்து விற்றமையில் இப்படி கல்லிவெட்டி வித்து குடுக்க* (SII,v,707.)

விற்றல் (பெ) விற்கும் நிலம் (909) *எங்கள் பொது நிலமான மூன்று மாவும் விற்றற் கெல்லை* (SII,xix,26.)

விற்றார் (பெ) விற்பனை செய்தவர் (873) *அளப்பன கொடு வந்து விற்றாரை* (SII,iii,90.)

விற்று (வி) விற்பனை செய்து (772) *விலையாவண ஓலை எழுதி விற்று* (SII,xiv,19.); (772) *இறையிலியாக விற்றுக்குடுத்த பூமியாவது* (SII,xiv,19.); (885) *விலைக் காணங் கையிற் கொண்டு விற்றுக் குடுத்தோம்* (SII,xii,105.); (691) *குழிப்படியால் விற்றுக் கொண்ட நிலம்* (SII,i,151;EI,xvii,22.)

விற்றொற்றி (பெ) விற்றலும் அடைமானம் வைத்தலும் (1172) *இவநுக்குமிவன் வம்சஹத்தார்க்கும் விற்றொற்றி ப்ரதிக்ரயத்துக் குரித்தாவதாக விற்றுக் கொடுத்தோம்* (SII,v,1358.)

விறகிடுவான் (பெ) விறகு கொணர்ந்து கொடுப்பவன் (941) *விறகிடுவானுக்கு நெல்லு எழுகாடியும்* (SII,viii,529.)

விறகு (பெ) எரிக்குங் கட்டை (894) *அடுவார்க்கும் விறகிடுவார்க்கும்* (SII,iii,1.)

விறல் (இ) வீரம் (771) *விற்கைத் தடக்கை விறல் வேந்தன்* (EI,xvii,16.)

விறும்ம விஷ்ணுக்கள் (பெ) தெய்வங்கள் (1634) *கரம்பை நாட்டில் விறும்ம விஷ்ணுக்களால் யெக்கியம் பண்ணப்பட்டும்* (AVNM,7,p.75-81)

விறைவித்து (வி) பயிரிடும் விதை (900) *தடி 2 விறைவித்து 400* (TAS,vi,59.)

வினவ (வி) கேட்க (796) *ஹிரண்ய வர்ம்ம மஹாராஜர் குலமல்லரயு கூவி வினவ ஆரும் போகாராக* (MASI,lxiii,p.54-59;SII,iv,135.)

வினவாவிருக்க (வி) உசாவிக் கேட்க (1002) *அருமொழி மூவேந்த வேளாரிருந்து இன்னாட்டுர்களை அழைத்து வினவா விருக்க* (SII,vii,843.)

வினவின (வி) கேட்ட (1019) *சொல்லுங்கோள் ளென்று வினவின இடத்து* (SII,v,293;TDI,i,19.)

வினாப் போக்கி (வி) விசாரித்து (966) *குறி கூடி இருந்து வினாப் போக்கி ஒத்தெழுத்திட்டு குடுத்த பரிசாவது* (SII,vii,811.)

வினாமம் கிறயம் (பெ) ஒரு வரி (1423) *அளமஞ்சி ஊழியம் வினாமம் கிறயம் நல்லெருது* (ARE,1929,247)

வினாவோலை (பெ) ஒரு வரி (1478) *காணிக்கை கட்டாயம் வினாவோலை இனி பிறக்கும் பழவரி புதுவரி உட்பட* (ARE,1935,208)

வினியோகம் (பெ) பொதுச்செலவை ஈடுகட்ட வாங்கும் வரி (1202) *நாடாய் நாட்டு வினியோகத்தாலுள்ளதும் சேந்து உடையார்* (IPS,155.)

வினிவோகம் (பெ) (= வினியோகம்) (1372) *நாட்டுமரியாதி கடமை வினிவோகம் துரக்காசு உள்ளதும்* (SII,viii,214)

வினை (பெ) தீங்கு (1403) *யிராசதலை ஒழிந்து இனக்கு ஒரு வினையுண்டானால் அம்பும் சோறும் பட்டு காத்து* (IPS,695.)

வினை (பெ) செயல் (800) *விளைந்த வினையை* (EI,xiii,10.)

வினைக் குறளை (பெ) பகை பாராட்டல் (1350) *தெற்கிலரையன் அயிலயராயன் இவர்கள் ஒருவினைக் குறளை இல் கொல்லுதல் குத்துதல் பகுதல்* (IPS,618.)

வினோத[ம்] (பெ) புதுமை (1419) *நாள் அளவாக உற்று நிலை அற்ற வினோதப் பகையாய் அங்கும் இஞ்கும் நால்பது நூறு மனித்தரும் பட்டு* (IPS,698.)

விச்$_0$ரமிக்கும் (வி) இளைப்பாறும் (1318) *ஊர் முன்னில் ஏரியும் கட்டித் தூம்பும் இடுவித்து சகலப்ராணிகளும் விச்$_0$ரமிக்கும் படிக்கு செய்த தந்மம்* (EC,xvii,Mr.176.)

விச்$_0$வகமா (பெ) கண்மாளர் பட்டப் பெயர் (1100) *அழகந் வீரசோழ விச்$_0$வகமாவும் கண்மாளரும்* (IPS,766.)

விச்$_0$வலோகம் (பெ) பெரிய உலகம் (1044) *வீர அபிஷேகம் செய்து சீர்கெழு விச்$_0$வலோகத்து விளங்கு மநுநெறி நின்றச்$_0$வமேதம்* (SII,v,465.)

விச்$_0$வாஸம் (பெ) நம்பிக்கை (905) *வீர நாரணற்கு விச்$_0$வாஸ கர்ம்மங்கட்கான* (TASSI,1962-65,p.1-31;; PNDCP,p.95-115.)

விசா$_0$ல சீ$_0$லந் (பெ) சிறந்த ஒழுக்கமுடையவன் (950) *வீர கேரளந் வீரபாண்ட்$_3$யந் விநைய கஞ்சுகந் விசா$_0$ல சீ$_0$லந்* (TASSI,1962-65,p.32-52.)

விசி$_0$ட்டர்கள் (பெ) பெரியோர்கள் (959) *ப$_4$ட்டர்களும் விசி$_0$ட்டர்களும் உள்ளிட்ட மாஹாஸபை$_4$யும்* (SII,iii,156.)

விசி$_0$ஷ்டர் (பெ) மேலோர் (921) *து$_3$ஷ்டர் கெட்டு விசி$_0$ஷ்டர் வத்$_3$தி$_4$ப்பதாக* (ARASI,1904-05,p.131f.)

விசே$_0$ஷ திவஸம் (பெ) சிறப்பு நாள் (1308) *ஸ்நப...களாலுள்ள விசே$_0$ஷ திவஸங்களுக்கு தி$_3$வஸம் ஒன்றுக்கு...லையமுது* (TDI,i,98.)

விசே$_0$ஷம் (பெ) விழா (1251) *மாஸ விசே$_0$ஷம் ஆட்ட விசே$_0$ஷம்* (TAS,iv,p.86-89.)

விசே$_0$ஷம் (பெ) சலுகை (803) *ஸந்ததியும் விசே$_0$ஷம் அநுப$_4$விக்க பெறாதாரானார்* (SII,vi,365.)

விசே$_0$ஷாதாயம் (பெ) ஒரு வரி (1386) *மகமை வாசல் ஒட்டு விசே$_0$ஷாதாயம் வெட்டிவரி* (ARE,1918,409)

விஷ்ணுக்கள் (பெ) திருமால் (1014) *கனமாக வராஹ முக$_2$த்தோடுஞ் செய்த விஷ்ணுக்கள் ஒருவர்* (SII,ii,44.)

விஷ்ணுக்$_3$ருஹம் (பெ) திருமால் கோயில் (813) *பரமேச்$_0$வர விஷ்ணுக்$_3$ருஹத்து ப$_4$டாரர்க்கு* (SII,vi,132.)

விஷ்ணுயாகம் (பெ) திருமாலைக் குறித்துச் செய்யும் வேள்வி (883) *விஷ்ணுயாகம் ஸமாப்தியாகச் செய்தேன்* (SII,viii,633.)

விஷ்ணுஸ்தாநம் (பெ) திருமால் கோயில் (1232) *தன் படையை இட்டு ராஜ்யத்தை அழித்து தேவாலையங்களும் விஷ்ணு ஸ்தாநங்களும் அழிகையாலே* (EI,vii,23.)

விஷ்வக்ஸேநந் (பெ) கருடாழ்வார் (1000) *அங்க தேவைக்கு விஷ்வக்ஸேநநு உழக்கு வைச்ூவ தேூவத்திநு உழக்கு கொள்க* (TAS,ii,p.173-207.)

விஷமம் (பெ) அவதூறு (1167) *அதிகாரிகளுக்கு விஷமஞ் சொன்னார்கள் உண்டாகில்* (EC,ix,Cp.97 (a).)

விஷமலோசநந் (பெ) சிவன் (905) *வேக வெள் விடை ஊர்தி விஷமலோசநந் மகிழ்ந்துறையும்* (TASSI,1962-65,p,1-31; PNDCP,p.95-115.)

விஷ விருத்தி (பெ) விஷ வைத்தியனுக்காக விட்ட நிலம் (1300) *வீர சோழன் மன்னறையில் விஷ விருத்தி நிலம் ஒரு மாவும்* (SII,v,260.)

விஷஹர போகம் (பெ) பாம்புக்கடி போன்றவற்றுக்கு மருத்துவஞ் செய்வாருக்கு விட்ட நிலம் (961) *எம்மூர் விஷஹர போகத்துக்கு இறையிலி ஆக* (SII,iii,177.)

விஷூ (பெ) மேஷம் அல்லது துலாத்தில் சூரியன் நுழையும் நாள் (869) *ஐப்பிகை விஷூவும்* (SII,vii,525.)

விஷூ அயனங்கள் (பெ) சித்திரை விஷூ, ஐப்பிகை விஷூ, உத்தராயனம், தக்ஷிணாயனம் ஆகிய நாட்கள் (1011) *விஷூ அயனங்களுக்கு ஸ்தபநஞ் செய்ய வேண்டும் விசத்துக்கு அக்கம் நாலே* (SII,v,724.)

விஷையம் (பெ) நாடு; நாட்டு மன்ற உறுப்பினர் (1073) *பெரிய விஷையத்துக்கும் பெரும்படை மஹாஸேனைக்கும் வற்கப் பகைவராகவும்* (EC,x,Mb.119.)

விஸ்மயம் (பெ) வியப்பு (921) *நானிலத்தோர் விஸ்மயப்பட நாற்கடலொரு பகலாடிஉம்* (SII,iii,206 (a).)

விஸனிப்போர் (பெ) கெடுதல் செய்வோர் (1227) *நெல்லின்நு ஆரானும் விஸனிப்போர் உண்டாகில் அன்றாடு செய்யின்றவாள்கு* (TAS,viii,p.37-38.)

விஹாரம் (பெ) புத்தர் ஆலயம் (1008) *கடாரத் தரையன் எடுப்பிக்கின்ற சூளாமணிப் பன்ம விஹாரத்துப் பள்ளிக்குப் பள்ளிச்சந்தம்* (EI,xxii,34.)

வீ

வீக்கிய (வி) கட்டிய (1200) *கனைகழல் வீக்கிய நாள் சீபராந்தகனில் பெருகுங் குருதிப்புநல் வாய்தோறும்* (SII,vii,123.)

வீக்கும் (வி) அடக்கும் (800) *இகல் வீக்கு மங்கைச் செருவேல்* (EI,xiii,10.)

வீசு (வி) எறிகின்ற (1147) *ஆதி அந்தணராகுதி கனலும் மீதெழு கொண்டல் வீசு தணலும் மேதினி வளமும்* (SII,v,643.)

வீசும் (வி) பரப்பும் (800) *பசுங்கதிராயிரம் வீசும்* (EI,xiii,10.)

வீசுவலைப் பாட்டம் (பெ) ஒரு வரி (1265) *ஏரிவரி இனவரி இடைவரி ஒழுக்குநீர்ப் பாட்டம் வீசுவலைப் பாட்டம் அரிசி காணம்* (SII,xvii,143.)

வீட்சி (வி) விழுந்து (1181) *வாய்புதைத்து காற்மடக்கி அடி வீட்சி விண்ணப்பம் செய்த பரிசாவது* (EC,ix,Cp.167.)

வீட்டி (பெ) திரும்ப நிலைநிறுத்தி (1000) *இப்படாரக் கடுத்த தேவகாரியவுந் தரிச்சிருக்கில் பொதுவாள் சென்று சென்றது வீட்டிக் கொடுக்ககடவர்* (SII,v,784.)

வீட்டிக் கொண்டு (வி) திரும்பப் பெற்றுக் கொண்டு (1300) *இந்நிலத்தில் முன்புள்ள ஒற்றியும் வீட்டிக்கொண்டு அனுபவிப்பதாக* (TAS,vii,p.9-11.)

வீட்டிருப்ப (வி) முகாம் அடித்திருப்ப; பாசறை அமைத்திருக்க (785) *அணுக வந்து வீட்டிருப்ப* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

வீட்டுக் கொடு (வி) முகாமிட்டு (1181) *காவேரிக்கு வடகரையில் கஞ்சனூரகரத்திலே வீட்டுக் கொடு இருந்து குறும்பெறிந்து* (SII,viii,284.)

வீட்டுத் தேவை (பெ) ஒரு வரி (1340) *காத்திகைப்பச்சை பிள்ளையார் நோன்பு ஆட்தேவை வீட்டுத்தேவை* (ARE,1934,059)

வீடற (வி) முடிவாக (1250) *விலைமாவுங் கைய்யிலே வீடறக் கொண்டு* (KANDT,1968/250.)

வீடறுத்து (வி) பகை தீர்ந்து (1382) *நடைப்பழியாக வறுதியிட்டுக் குடுத்து வீடறுத்து நாங்களிரண்டு திறத்தாரும்....பகையற்று* (IPS,683.)

வீடாரம் (பெ) ஒரு வரி (1346) *உள்மாராட்டம் வெட்டி வீடாரம் தீழ்தண்டு* (EC,x,Mr.39.)

வீடு (பெ) முகாம் (1003) *வாகூர் தாம் விட்ட வீட்டில் முன்பிற் பந்தலில்* (SII,vii,1000.)

வீடு (பெ) மோட்சம் (1012) *மினல் புகும் விசும்பின் வீடு பேறெண்ணிக் கனல் புகும் கபிலக் கல்லது* (SII,vii,863.)

வீடு (பெ) அரண்மனை (985) *கச்சிப்பேட்டு நம் வீட்டிநுள்ளால்(ப்) பொன்மாளிகை ஆதி பூமியில் நாமிருக்க* (SII,iii,142.)

வீடு கொண்டமை (வி) சிறைமீட்டமை (1150) *ஆடாங்க்காசு குடுத்து வீடுகொண்டமையாலும்* (AVNM,9,p.33-34)

வீடு பேறு (பெ) (அரசனால்) பிறர்க்குக் கொடையாக விடப்பட்ட பொருளும் உரிமைகளும் (849) *தருஸாப் பள்ளிக்கு ஐய்யனடிக டிருவடி குடுத்த வீடுபேறாவது* (TAS,ii,p.67-68.); (1000) *தோரண விதானமும் சரவும் மிக்கும் எழுபத் திரண்டு வீடு பேறும்* (EI,iii,11.)

வீடெடுக்கும் (வி) வீடு கட்டும் (1290) *குடுத்த தர்மமாவது தங்கள் வீடெடுக்கும் இடத்து* (SII,v,283.)

வீணைக்காரன் (பெ) வீணை வாசிப்பவன் (1009) *வங்கியனுக்குப் பங்கு இரண்டும் வீணைக் காரனுக்குப் பங்கு இரண்டும்* (CHEN,xxi,p.425-428.)

வீணைக் கொடி (பெ) வீணையுருவம் எழுதிய கொடி (1134) *வேழிக்கொடி விறல் வேந்தரும் வீணைக்கொடிச் சிங்களரும்* (SII,v,645.)

வீணை வாசிப்பான் (பெ) வீணை இசைப்பவன் (995) *திருத்திண்டீச்ஶ்வர தேஶ்வர்க்கு வீணை வாசிப்பானுக்கும் உடன்பாடுவான் ஒருவநுக்கும்* (SII,vii,154.)

வீணை ஆதித்தன் (பெ) வீணை வாசிப்பவரின் பட்டம் (1014) *வீணை வாசிப்பார் இருவர்க்கு ஸூப்ரஹ்மண்யந் கூத்தனான செம்பியன் வீணை ஆதித்தனுக்குப் பங்கு* (SII,ii,66.)

வீத கங்மஷங் (பெ) குற்றமற்றவன் (771) *சினச் சோழன் புனப் பூழியன் வீத கந்மஷந்* (EI,xvii,16.)

வீதி (பெ) தெரு (785) *பொன் மாட நெடுவீதி* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

வீமாம்ஸை (பெ) மீமாம்சை என்ற வேதச் சார்பு நூல் (985) *ஒரு வேதங் குறையாமே வல்லராய் வ்யாகரணமும் வீமாம்ஸை இரண்டும் தர்சநமும்* (SII,vi,322.)

வீரக் கழல் (பெ) வீரர் அணியும் காலணி (1197) *தியாக வீரக்கொடி யெடுத்து வாகை வீரக் கழல் கட்டி* (SII,iii,88.)

வீரக் கொடி (பெ) வெற்றியைக் குறிக்கும் கொடி (1054) *செண்டாடிய பொருபுலி வீரக்கொடியொடு தியாகக்கொடி யெடுத்து* (SII,vi,539.)

வீர கணத்தார் (பெ) கோயில் தொடர்பான ஒரு நிர்வாகக் குழு (955) *வீர கணத்தா ரக்ஷை* (SII,viii,301.)

வீரகல்லு (பெ) வீரமரணம் அடைந்தார் நினைவாக நடும் கல் (1200) *அவந் மக்கள் பெற்கடி கேத்து போவநு மார போவநு செய்விச்ச வீரகல்லு* (EC,xiv,Yl.10;EC,iv,Yl.10.)

வீரகாளய் (பெ) வாணிகக்குழுவைச் சேர்ந்த வீரர் பட்டங்களில் ஒன்று (1150) *கம்பன் வில்லநான சேநாபதி வீரகாளயும்* (AVNM,9,p.33-34)

வீரகொடியார் (பெ) ஐஞ்ஞூற்றுவர் வாணிகக்குழுவின் கீழ் பணிபுரிந்த வீரர் குழுக்களுலள் ஒன்று (1300) *நம்மக்கள் அறுபத்துநான்கு முனையும் முன வீரக்கொடியாரோமும்* (AVNM,6,p.36-40)

வீர சங்கம் (பெ) சமணர்களுடைய ஒரு சங்கம் (900) *ஸ்ரீ வீர சங்கத்துப் பெருமடை மல்லி சேனப் பெரியான் செயல்* (SII,xiv,113.)

வீர சுவற்கம் (பெ) இறந்த வீரர் அடைவதாகக் கருதப்படும் மேலுலகம் (1171) *அங்கய நாயக்கந் குதிரையையுங் குதிரை யாழையுங் குத்திப் படை*

முகத்தைக் கெடுத்து வீரசுவற்கம் பெற்றாந்... (EC,ix,Kn.44.)

வீர சேழை (பெ) வீரர் பொருட்டு ஒரு வரி (1068) *தசபந்தமு மாடைக் கூலியும் வீர சேழையும் உள்ளிட்ட பாட்டங்களும்* (EI,xxi,38.)

வீர சேஷை (பெ) (= வீர சேழை) (1068) *நீர் விலைக் காசும் பன்மை பண்ட வெட்டியும் வீர சேஷையும் உகவை பொன்னும்* (SII,vii,467.)

வீர சோழ அணுக்கர் (பெ) சோழர் படைப் பிரிவுகளில் ஒன்று (1014) *மேற்படி வீரசோழ அணுக்கரில் காமன் ஐயாறனுக்குப் பங்கு* (SII,ii,66.)

வீர சோழ அணுக்கன் (பெ) சோழராட்சியில் கோயில் காவலுக்காக நியமிக்கப்பட்ட வீரர் (937) *வீர சோழ அணுக்கன் காடன் மேல்வாயில் வச்ச ஈழக்காசு 100* (SII,xvii,466.)

வீரட்டம் (பெ) (= வீரட்டானம்) (1012) *வென்னியல் சீர் வீரட்டத்தி லிங்கம் ஒன்று பொன்னூற்றாற் செய்ததற்கு* (SII,vii,863.)

வீரட்டானம் (பெ) சிவபிரானது வீரம் விளங்கிய தலங்கள் (1012) *புனல் வளர் பேரெட்டான வீரெட்டான மனைத்தினு மனாதியாயது* (SII,vii,863.)

வீரணுக்க விஜயம் (பெ) திருவாரூர்க் கோயில் வீர சோழ அணுக்கரைப் புகழும் நூல் (1200) *நம்மக்கள் வீர சோழ அணுக்கரை வீரணுக்க விஜயம் பாடிந பூங்கோயில் நம்பிக்கு* (SII,xvii,593.)

வீரத்தொழிலர் (பெ) ஒரு வீரர் தொகுதி (888) *பங்களநாடுடையார் கொடுக்கர் வீரத்தொழிலர் பேரால்* (AVNM,7,p.18)

வீரதளக் கல் (பெ) எறிவீரபட்டணம் நிறுவியதற்காக ஊன்றிய கல் (1150) *அறமறவற்க வீரதளக்கல்* (AVNM,9,p.37-39)

வீரதளம் (பெ) (= எறிவீரபட்டணம்) (1050) *பநியாநாட்டை வீரதளஞ் செய்து குடுத்தோம்* (AVNM,2,p.6-8)

வீர தூக்கக் காணம் (பெ) ஒரு வரி (765) *பறிக்கானமும் வீர தூக்கக் காணமும்* (EI,xxxvi,20.)

வீர பட்டம் (பெ) ஒரு நகை (1015) *வீர பட்டத்து இரண்டருகிலுங் கோத்த வடம் இரண்டும்* (SII,ii,8.)

வீரப₄த்₃ர தேவர் (பெ) ஒரு தெய்வம் (1072) *வீர ப₄த்₃ர தேவர்கு ஸ.. ஒன்றுக்கு திருவமுதரிசி* (EC,x,Kl.108.)

வீரபாவாடை (பெ) வாணிகர் சார்ந்த வீரருக்கு அளிக்கப்படும் ஒரு மரியாதை ஆடை (1050) *குடுத்த பரிசாவது பணிந்த வீரபாவாடை மேநடை* (AVNM,2,p.6-8)

வீரபுத்திரர் (பெ) ஐஞ்னூற்றுவர் வாணிகர் குழுவைச் சார்ந்த ஒரு வீரர் குழு (1300) *தாவளத்திருந்து தன்மை வளர்க்கும் செட்டியுஞ் செட்டி வீரபுத்திரர்களும்* (AVNM,6,p.36-40)

வீர புரோகந் (பெ) வீரர்களில் முதல்வன் (771) *வீதகந்மஷந் விநயவிச்ருதந் விக்ரம பாரகந் வீரபுரோகந்* (EI,xvii,16.)

வீர போகம் (பெ) படை வீரர் பொருட்டு செலுத்தும் ஒரு வரி (1279) *இன்னிலத்துக்கு வரும் மடக்கு ஊரிலே ஏற்றிக்கொள்ளவும் கோயில் குடிமை திரு அரங்கு வீர போகம் மட அரிசி உள்ளிட்டதை* (SII,viii,44.)

வீரமாகாளம் (பெ) வீரர் பெயரில் சிறப்புப் பெற்ற துர்கை கோயில் (1150) *வயிச்ஶா[வணரை திரு]வயுறு வாய்த்த லோகமாதாவை வீரமாகாளமென்று பேர் சாத்திநமையாலும்* (AVNM,9,p.37-39)

வீர முறைமை (பெ) வீரரின் குலமரபு (1150) *இப்படிச்செய்ய வீரமுறைமை அழியச் செய்தால் பணியும் செடியும் ஒடுக்கி* (AVNM,9,p.33-34)

வீரர் (பெ) போர் வீரர்கள் (800) *வீரர்கள் ஊர்கின்ற* (EI,xiii,10.)

வீர வளஞ்செயர் (பெ) (= வளஞ்சியர்); ஐஞ்னூற்றுவர் வாணிகரில் ஒரு முக்கிய பிரிவு (1150) *வெய்யசுடர் நெடுவேல் வீரவளஞ்செயர் பதினெட்டு பட்டினமும்* (AVNM,9,p.33-34)

வீர வெண்பா மாலை (பெ) வீரர் புகழ்ச்சிப் பாடல் (1552) *புலவோர் பாடிய வீர வெண்பா மாலையை* (TAS,i,p.104.)

வீர சே$_0$ஷை (பெ) (= வீர சேழை) (1090) *பழம் படியயந்தராயமும் வீர சே$_0$ஷையும் பன்மை பண்டை வெட்டியும்* (EI,xxii,35.)

வீர அபி$_4$ஷேகம் (பெ) பகைவரை வென்ற வீரர்க்கு செய்யும் சிறப்பு (1044) *வீர அபி$_4$ஷேகம் செய்து சீர் கெழு விச்$_0$வலோகத்து* (SII,v,465.)

வீரியஞ் செய்தது (பெ) வீரம் காட்டியது (1266) *நாவிதன் புலியெறிந்து வீரியஞ்செய்தது* (EC,xiv,Yl.74.)

வீரும் சீரும் ஆட்டு (வி) வீரர் மரபின் படி ஒழுகு (1150) *வீருஞ் சீருமாட்டுத்தாகவும் [ப]ற்றைகட்டி ஏறாதிதாகவும்* (AVNM,9,p.33-34)

வீழ் (வி) அறுந்து வீழ்ந்த (800) *வீழ் குடர்கள்* (EI,xiii,10.)

வீழ்ந்து பட்டான் (வி) இறந்தான் (895) *சனன் தளரா வீழ்ந்து பட்டான்* (EI,iv,23 (a).)

வீழ (வி) குதிக்க (1012) *குன்றிற் பறிந்துடன் வீழ* (SII,vii,863.)

வீற்றிருத்தி (வி) சிறப்போடு இருக்கச் செய்து (1120) *மதிக் குடைக்கீழ் வீற்றிருத்தி உரை மகுழும் தொண்டையர்* (SII,iv,225.)

வீற்றிருந்த (வி) தங்கியிருந்த (921) *அரனவிர் சடைமுடி வீற்றிருந்த வெண்டிங்கள்* (SII,iii,206 (a).)

வீற்றிருந்தருளிய (வி) சிறப்போடு இருந்த (1012) *இரட்டை வெண்கவரி தெற்றிய வனலந் திவள வெற்றியுள் வீற்றிருந்தருளிய வேந்தன்* (SII,vii,863.)

வீற்றிருந்தனன் (வி) சிறப்போடிருந்தனன் (815) *கு$_3$ருதா$_3$னம் பல செய்து வாஸவன் போல வீற்றிருந்தனன்* (SII,iii,206b.)

வீற்றிருந்து (வி) அரியணையில் அமர்ந்து (700) *மங்க$_3$லபுரந் நக$_3$ரமாக்கி வீற்றிருந்து செங்கோந் நடாவி* (EI,xxxviii,4.)

வீறு (பெ) பொலிவு (1264) *சொல் வீறுடைமயும்* (SII,vi,439.)

வீச$_0$ (பெ) வீசம் (1/16) (1100) *ஒரு கறண்டிகையும் பணத்து...ஒரு வீச$_0$மும் கொள்ளக் கடவதாகவும்* (EC,xvii,Mr.103.)

வெ

வெகுண்டு (வி) கோபித்து (833) *மன்னரை விண்ணூர்ப் புக வெகுண்டு* (SII,xiv,44.)

வெங்கண் (பெ) சினமுற்ற கண் (800) *வெங்கட் போரும்....சேர்* (EI,xiii,10.)

வெங்கணை (பெ) கொடிய அம்பு (921) *குருதிப் பெரும் புனற் குளிப்பக் கூர்வெங்கணை தொடை ஞெகிழ்த்துப் பருதி ஆற்றலொடு விளங்கின* (SII,iii,206 (a).)

வெங்கதம் (பெ) மிகுந்த கோபம் (1068) *வெங்கதப் புலி யேறி வியந்து விளையாட* (EI,xxi,38.)

வெங்கதிர் வேல் (பெ) ஒளி வீசும் வேலாயுதம் (905) *தேனூரளவுங் குட கொங்கருடல் மடிய வெங்கதிர் வேல் வலங் கொண்டும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வெங்கரி (பெ) வலிய யானைகள் (1080) *வாளாவிட்ட மடந்தயரீட்டமு மீளாது குடுத வெங்கரி நிரையுங் கங்க மண்டலமும்* (EC,x,Mb.47.)

வெங்கலி (பெ) தீமை மலிந்த கலி காலம் (1120) *மறை வளர்க்க வெங்கலியை மாற்றி வழுவாமல் அறம் வளர்க்க* (SII,iv,225.)

வெங்காளி (பெ) சினங்கொண்ட காளி (1179) *எண்டிசை யமரரும் இயமனு நடுங்கியப் பண்டு வெங்காளி பரிகலம் பறித்தோந்* (EC,x,Kl.132.)

வெச்ச விராடம் (பெ) ஒரு வரி (1595) *ஒழுக்குநீர் பாட்டம் இறை பதிவு குடி 26க்கு பொன் 30ம் வெச்ச விராடம் பொன் 17 ஆக* (ARE,1937,136)

வெச்ச விலாடம் (பெ) ஒரு வரி (1604) *னாள்ளது முதல் வெச்சவிலாடம் காணிக்கை கட்டாயம் உள்பட* (ARE,1905,031)

வெச்ச விலாடம் (பெ) (=வெச்ச விராடம்) (1566) *...துறையிலக்கமும் வெச்ச விலாடமும்* (ARE,1922,070)

வெஜ்ஜம் (பெ) மாணிக்க வகை (1014) *மாணிக்கங் கோமளம் ஒன்றும் ... ப்ரஹாரமும் வெஜ்ஜமுங் கோமளமும் உடையது ஒன்றும்* (SII,ii,42.)

வெஞ்சநாதிகள் (பெ) சமையல் பொருள்கள் (1198) *மற்றும் பெறக்கடவாற்கும் பல வெஞ்சநாதிகள் உட்பட நெல் முப்பத்தொந்பதிந்* (SII,v,231.)

வெஞ்சமர் வளாகம் (பெ) போர்க் களம் (1024) *மஹிபாளனை வெஞ்சமர் வளாகத் தஞ்சுவித்தருள* (SII,i,68.)

வெஞ்சனங்கள் (பெ) சமையல் பொருள்கள் (1300) *கறிபுளி வெஞ்சனங்களும்* (AVNM,6,p.36-40)

வெட்ட (வி) விலக்க (985) *ச்ஏரத்தாமந்தரே வெட்ட பெறுவாராகவும்* (SII,vi,345.)

வெட்டப் பேறு (பெ) 'வெட்டி' உழைப்பு செய்பவருக்கு விட்ட நிலம் (1000) *தேவதானப் பள்ளிச்சந்தக் கணிமுற்றூட்டு வெட்டப்பேற்றிலோமுக்கும் உடையார் திருமுகம் வர* (TASSI,1985-59,p.84f.)

வெட்டி (வி) கல்லில் பொறித்து (992) *ஸ்ரீ விமானத்து வெட்டிக் கிடக்கும் பெருங்கோலால்* (SII,viii,660.)

வெட்டி (வி) அழித்து (993) *காடு வெட்டிக் கொண்டு உசர்ப்பிலி உசர்க்கவும்* (SII,xiii,182.)

வெட்டி (பெ) வாய்க்கால் (?) (1545) *திருச்சிராப்பள்ளி மண் கோட்டைக்கு வடக்கு கிருஷ்ணராய அலவந்தபுரம் உறையூர் வெட்டிக்கு கிழக்கு திருக்காவேரிக்கு தெற்கு* (EI,xxix,9.)

வெட்டி (வி) கொன்று (1480) *படையை அழைத்து வந்து நாட்டிலே இருபது ஆளையும் பட வெட்டி* (IPS,818.)

வெட்டி (வி) பொறுப்பிலிருந்து நீக்கி (817) *மீளப்பணி கேட்ட மத்யஸ்தன் உளனாயில் அவனை வெட்டிப் போக இடுவதாகவும்* (SII,vi,344;EI,xxiv,7 (a).)

வெட்டி (பெ) கட்டாய உழைப்பாகச் செலுத்தும் வரி (809) *மூன்று மாவினாலும் இறை கடனும் வழி இறை வெட்டி எவ்வகைப் பட்டதும்* (SII,xiv,40.); (991) *இந்நில சுட்டி இறையு எச்சோறு வெட்டி வேயதிகாணம் எப்போர்பட்டது* (SII,iii,27.)

வெட்டிக்குடி (பெ) ஊதியமின்றி பொது வேலை செய்யக் கடமைப்பட்ட குடி (770) *இப் பசுக் கொண்ட வெட்டிக் குடி எட்டி சாத்தவேதன்* (SII,xiv,18.)

வெட்டித்து (வி) கல்லில் பொறிக்கப்பட்டது (1032) *திருவாய்க் கேழ்விப்படி கல்லில் வெட்டித்து* (SII,ii,20.)

வெட்டித்துறை (பெ) ஒரு வரி (1455) *செக்குத்துறை இடைத்துறை வெட்டித்துறை...ம் சுங்கம் உடையமார்க்கம்* (ARE,1925,270)

வெட்டி நிலை (பெ) ஒரு வரி (1340) *வீட்டுத்தேவை வெட்டிநிலை எடுத்தளவு விருத்துப்படி* (ARE,1934,059)

வெட்டிப் பாட்டம் (பெ) ஒரு வரி (1274) *அந்தராயம் பொன்வரி வினியோகம் வெட்டிப்பாட்டம் பஞ்சு பீலி சந்தி விக்கிரகப் பேறு ஓலை எழுத்து வினியோகம்* (SII,iv,371.)

வெட்டிப் புடவை (பெ) துணியாகச் செலுத்தப்படும் வெட்டி ஊழியம் (1243) *அரிமுக்கை உள்ளிட்ட நெல்லாயங்களும் வெட்டிப் புடவை முதற்திரமம் வகைந்த காசு பட்டோலைக் காசு* (SII,i,64.)

வெட்டிப் பேறு (பெ) (= வெட்டப்பேறு): தலைவாயரின் வாழ்க்கைச் செலவுக்கு விட்ட நிலம் (944) *அல்லூர்த் தலைவாய்ச்சான்றோம் எங்கள் நிலம் வெட்டிப் பேறு அல்லூர் ஊரின் வடகிழக்கின்னிலம்* (SII,viii,689.)

வெட்டிப் போக (வி) நீங்கிச் செல்ல (817) *அவனை வெட்டிப் போக இடுவதாகவும்* (SII,vi,344;EI,xxiv,7 (a).)

வெட்டி முட்டாவாள் (பெ) (= முட்டாவாள்): கட்டாய உழைப்பில் ஒரு வகை (1233) *இ... நிலங்களுள் வன்த கடமை அன்தராயம் அதவரி*

வெட்டி முட்டாவாள் நாடேன்ற வரிகளும் (IPS,303.)

வெட்டி முட்டாள் (பெ) (= வெட்டி முட்டாவாள்) (1519) *இனியோகம் எற்சோறு கூற்று அரிசி வெட்டிமுட்டாளும் நாட்டிலே மேற்போட்டுக் கொண்டு* (IPS,733)

வெட்டி முட்டி (பெ) (= வெட்டி முட்டாவாள்) (1446) *வெட்டிமுட்டி வேகரி ஆளமஞ்சி பச்சை மாக்கலம் கீற்று...* (IPS,789)

வெட்டி முட்டை ஆள் (பெ) (= வெட்டி முட்டாவாள்) (961) *சில்லிறை சோறுமாடும் வெட்டி முட்டைஆளும் செஞ்ஞீரமஞ்சியும்* (SII,vii,64.)

வெட்டிய (வி) பொறித்த (953) *இவ்வனைவோமும் இருந்து ஏவ பேர் வெட்டியபடி* (SII,v,716.)

வெட்டியார் (பெ) கட்டாய ஊழியஞ் செய்பவர் (997) *நம்மூர் பெரியேரி நிலம் வெட்டியாராகிய நானூற்றுவப் பொற்சாலைப் பேரிளமையாரே பேரால் பதக்கு நெல்லு* (SII,vii,809.)

வெட்டியானுக்கிடும் பணம் (பெ) வெட்டியார் பொருட்டு வாங்கும் வரி (1339) *கார்த்திகைக்கு இடும் பணம் மாவடை வெட்டியானுக்கிடும் பணம்* (AVNM,7,p.60-61)

வெட்டி வரி (பெ) ஒரு வரி (1406) *செக்குகடமை வெட்டிவரி திருப்புதியிது ஏரிமீன்விற்பணம்* (SII,i,055)

வெட்டி வற்க காணிக்கை (பெ) வெட்டி ஊழியர்' செலுத்தும் காணிக்கை வரி (1431) *ஆடி காத்திகை பச்சை வெட்டிவற்க காணிக்கை கணக்கு காணிக்கை* (ARE,1934,127)

வெட்டிவித்து (வி) பொறிப்பித்து (956) *கல்லில்லே வெட்டிவித்து* (SII,xiii,344.); (861) *இவ்வாய்க் கால்க் கீழ் ....ல் வெட்டின கைச்சப் படியே* (SII,xiv,78.); (865) *ஸ்ரீ விமானத்திலே ஏற வெட்டினமையில்* (SII,xii,55.); (792)*இவ்வெழுத்து வெட்டினேன்* (EI,xviii,14.); (953) *கவிறிப் பிணாக்கள் பேர் கன் மேல் வெட்டுக* (SII,v,716.)

வெட்டுகை (பெ) தோண்டுதல் (1300) *எங்களூற் தண்ணீற்கு உமையாண்டியேரி வெட்டுகைக்கு* (IPS,478.)

வெட்டுண்டது (வி) தோற்கடிக்கப்பட்டது (1279) *உட்பகை பற்றப் புறப்பகை யோட்டுண்டு வெட்டுண்டதே* (SII,xii,265.)

வெட்டுண்ண (வி) ஒழிய (1237) *வாசியும் வாரணமும் தெரு மடற் கருவக் காலனும் வெட்டுண்ண* (SII,v,431;EI,xxii,10.)

வெடியாத (வி) பொழுது புலராத (1243) *திருபுவனத் திராசாக்கள் தம்பிரானே ஒரு நாளும் வெடியாத நெடிய கங்குல் ஊழியென நீண்டுவர* (EI,xxiii,27.)

வெண்கலம் (பெ) ஓர் உலோகம் (927) *இவனேய் குடுத்த வெண்கலக் காளாஞ்சி (கொம்பு)* (SII,viii,557.)

வெண் கவரி (பெ) வெண் சாமரை (1012) *வொற்றை வெண் குடைக் கீழிரட்டை வெண் கவரி* (SII,vii,863.)

வெண்களர் (பெ) உவர்மண் நிலம் (1115) *இலுப்பைக் குடியிற் கிழவயல் சார் விளையா வெண்களராய்க் கிடந்த நிலம்* (IPS,229.)

வெண்காயம் (பெ) வெங்காயம் (?) (1300) *வெண்காயங் கடுகு சீரகம் பொதி ஒன்றுக்குக் காசு இரண்டும்* (SII,viii,442.)

வெண்குடை (பெ) அரசர்க்குரிய கொற்றக்குடை (771) *செங்கோல் ஓச்சிய வெண்குடை நிழற்ற* (EI,xvii,16.)

வெண்கூறை (பெ) வெள்ளை நிறத் துணி (887) *வெண்கூறை பதினாறணை* (SII,xiv,16 (a).)

வெண்கோடல் (பெ) காந்தள் பூ (800) *செம்புல நாட்டு வெண் கோடல்* (EI,xiii,10.)

வெண் சாமரை (பெ) கவரிமானின் மயிர்க்கற்றை கொண்ட விசிறி (910) *இவரே வைத்த வெண் சாமரை* (SII,xix,75.)

வெண் சாமரைக் கை (பெ) (994) *தென்னவன் மூவேந்தவேளான் குடுத்த பொந்நி வெண்சாமரைக் கை 1 நிறை 19* (SII,v,611.)

வெண்ணிலம் (பெ) புது நிலம் (765) *வெண்ணிலத்துத் தெங்கும் கமுகும் இட்டன* (EI,xxxvi,20.); (1014) *எம்மூர் நீர் நிலமும்*

வெண்ணிலமும் தோட்ட நிலமும் கொல்லை நிலமும் (SII,i,40.)

வெண்ணை (பெ) பால் கொழுப்பு (1539) *சுகியன் படி 3 வெண்ணை முனாழி* (TDI,iv,129.)

வெண் தரா (பெ) ஒரு கலவை உலோகம் (1009) *வெண் தராச் சங்குக் கால் ஐம்பல வரையும்* (SII,v,521.)

வெண்பட்டு (பெ) பட்டு வகை (1545) *வெண்பட்டு பச்சைவடம் 1க்கு ரேகை பொன் 2 பணம் 2* (TDI,v,51.)

வெண்பா (பெ) நான்கு வகைச் செய்யுளிலொன்று (895) *இ வெண்பா பெருமானடிகள் தாம் பாடி அருளுத்து* (SII,xii,94.)

வெண் போநகம் (பெ) வெண் பொங்கல் உணவு (983) *வெண் போநக சென்நெலரிசி அறுநாழியும் உச்சம் போதை ஸந்திக்கு* (SII,xix,322.)

வெண்முத்து (பெ) வெண்ணிற முத்து (985) *மாணிக்கம் பதினஞ்சு வெண்முத்து அறுபத்து னாலுமாம்* (SII,xiii,86.)

வெதுப்பும் (வி) வாட்டும் (1250) *குத்தியி கோட்டெடுத்து வெங்கண் அழலில் வெதுப்புமே மங்கையர்கண்* (CHEN,iv,p.492-93.)

வெதும்பாதன (பெ) புழுங்காதவை (1015) *கற்பதர் செ...த்தல் முளைமடி நீக்கிக் கூட்டில் வெதும்பாதன நிறைச் சளவு* (EC,ix,Cp.129.)

வெந்தன (பெ) வயிர வகை (1015) *வயிரம் பொறிவும் முறிவும் ரக்தபிந்துவும் காக பிந்துவும் வெந்தனவும்* (SII,ii,7.)

வெந்து (வி) கருகி (921) *வெந்தழியச் சுரம் போகிஉம்* (SII,iii,206 (a).)

வெந்தையம் (பெ) ஒரு தானியம் (1545) *வெந்தையம் சொலகை 1/2யும்* (TDI,v,55.)

வெந்நிட (வி) தோற்றோட (1122) *கங்கர் திறையிட கந்நடர் வெந்நிட கொங்கரொதுங்க* (SII,xvii,609.)

வெம்புழக்கு (பெ) வெந்த சோறு (959) *காய்கறியும் வெம்புழக்கும் புளிங்கறியும்* (SII,xiii,44.)

வெம்மா (பெ) குதிரை (785) *மணித் தேராடல் வெம்மா அவை உடன் கவர்ந்தும்* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

வெம்முனை (பெ) போர்க்களம் (921) *வெம்முனை வேலொன்று விட்டும்* (SII,iii,206 (a).)

வெய்யசுடர் (பெ) வெம்மையான ஒளி (1150) *வெய்யசுடர் நெடுவேல் வீரவளஞ்செயர் பதினெட்டு பட்டினமும்* (AVNM,9,p.33-34)

வெயில் (பெ) வெப்பம் (1171) *தன் நடைச் சக்கரம் வெயில் எறிப்ப* (SII,xvii,592.)

வெருந்தாழை (பெ) தாழை வகை (1217) *பெருஞ் செண்பகமும் வெருந்தாழையும்* (TMPL,vii,p.502-05.)

வெருவ (வி) அச்சங் கொள்ள (1044) *ஆஹவமல்லன் பயத்தொடும் அவர் விடும் ஒற்றரை வெருவப் பிடித் தாங்கவர் மார்வில்* (SII,v,465.)

வெருவு (வி) அஞ்சும் (905) *வல்லெருமை வெருவு மீன்கள்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வெருவுற்று (வி) அச்சங்கொண்டு (1134) *பொருபுலியும் புல்வாயுமொருதுறை நீருடனுண்ண உள் வெருவுற்றுடல் நடுங்கும் புள்ளுமாவுடன் புணந்து* (SII,vi,645.)

வெல் (இ) வெற்றியுடைய (785) *வெல்படைஒடு மேற் சென்று* (IA,xxii,p.57-75.)

வெல்ல (வி) வெற்றியடைய (800) *அன்று பல்லவன் வெல்ல* (EI,xiii,10.)

வெவ்வேற்று வகை (பெ) தனித்தனியாக (804) *வெவ்வேற்று வகை ஐய்யஞ்சு காசு தண்டங் கொண்டு* (SII,xiv,37.)

வெள்விடை (பெ) சிவனுடைய வெள்ளைக் காளை (905) *வேக வெள்விடை ஊர்தி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வெள்வேல் (பெ) ஒரு மரம் (1018) *இவ்வெல்லையில் நின்ற வெள்வேலே யுற்றுக் கிழக்கின்னும்* (SII,iii,205.)

வெள்ளக் கால் (பெ) வெள்ள நீர்க் கால்வாய் (753) *ஆற்றுக்காலும் வெள்ளக் காலும் தோண்டி* (SII,ii,73.)

வெள்ளக்கான் கரை (பெ) வெள்ளத்தடுப்புக் கரை (?) (1018) *ஜநநாதப்புரத்தேரிப் புறவாய்க்*

கரை வெள்ளம் போகாமே யட்டின வெள்ளக் கான்கரையே யுற்று (SII,iii,205.)

வெள்ளச் சாய்வு (பெ) வெள்ளம் ஓடும் கால் (1260) *ஓடைகளும் வெள்ளமும் வெள்ளச்சாய்வும் இக்குளத்தில் நீர்வாரிகளும்* (SII,v,303.)

வெள்ளச்சாவி (பெ) வெள்ளத்தால் ஆன பயிர்ச் சாவி (1250) *சிலவறுத்து தரவு கொள்வாராகவும் வெள்ளச்சாவி வரச்சாவி பயிர் பாத்து கொள்வதாகவும்* (IPS,343.)

வெள்ள நாடர் (பெ) ஒரு சாதிப்பிரிவு (1453) *கல்லு இரண்டிலும் வெள்ளாழறை வெள்ள நாடர் பிழைக்கையாலே நாட்டிய கல்லினுடி எடுத்த வண்ணமே* (TAS,v,p.90-92.)

வெள்ளப் புனல் (பெ) நீர்ப் பெருக்கு (833) *வள்ளைக் குளத்திழித் தேறிய வெள்ளப்புனற் கிழவனேரியு* (SII,xiv,44.)

வெள்ளாட்டி (பெ) பணிப்பெண் (866) *சட்டர் வெள்ளாட்டிகளை மடத்தில் வைத்துக் கொள்ளப் பெறார்* (TAS,ix,p.1-14.)

வெள்ளாட்டி (பெ) வெள்ளாளப் பெண் (939) *அள நாட்டுக் கீழையில் இருந்து வாழும் வெள்ளாட்டி சாத்தன் மல்லி* (SII,xvii,528.)

வெள்ளாடு (பெ) ஆட்டின் வகை (952) *அட்டிக் குடுத்த செம்மரி பாதியும் வெள்ளாடு பாதியும்* (SII,xiii,2.)

வெள்ளாங் வெட்டி (பெ) நிலக்கிழார் செய்யும் கட்டாய ஊழியங்களுள் ஒன்று (1008) *திருவாசலில் போந்த குடிமையும் ஊர் கழஞ்சு குமர கச்சாணமும் வெள்ளாந் வெட்டியும் உள்ளிட்டு எப்பேர்ப்பட்ட இறையும்* (SII,v,638.)

வெள்ளாமை (பெ) உழவுத் தொழில் (1239) *எங்களுக்குத் தரிப்பறுதியாலே வெள்ளாமை செய்து குடி யிருக்கப் போகுதில்லையென்று நாட்டவர் வந்து சொல்லுகையாலும்* (SII,vi,50.)

வெள்ளாழ்மை (பெ) (= வெள்ளாமை) (1239) *எங்களுக்குத் தரிப்புறுதியாலே வெள்ளாழ்மை செய்து குடி இருக்கப் போகுதில்லையென்று நாட்டவர் வந்து சொல்லுகையாலும்* (SII,vi,58.)

வெள்ளாழன் (பெ) வேளாளார் குலத்தைச் சேர்ந்தவன் (991) *எயினநூர் வெள்ளாழன் நாராணனன் சாத்தன் வச்ச திரு நொந்தாவிளக்கு 1* (SII,xvii,471.)

வெள்ளாளர் (பெ) உழவுத் தொழிலை முக்கியமாகக் கொண்ட சாதியினர் (885) *பள்ளிப்பூமிய்க்கு காராழர் னாலு குடி வெள்ளாளரும்* (TAS,ii,p.80-82.)

வெள்ளாளர் (பெ) (1213) *சேந்தமங்கலத்து வெள்ளாளரில் சிலவர் பக்கலும்* (AVNM,7,p.52-53)

வெள்ளாளர் வெண்டுவன் (பெ) கொங்கு வெள்ளாளரில் ஒரு பிரிவு (1100) *நித்தவிநோதத்திருந்து வாழும் வெள்ளாளர் வெண்டுவன் திருக்குறையான்* (AVNM,7,p.33)

வெள்ளாளன் (பெ) (= வெள்ளாழன்) (883) *இவ்வூர் வெள்ளாளன் க₃ங்க₃ பெருமானடி அறிஞ்சகுடி வெள்ளாளன் புழலயனேன்* (SII,viii,633.)

வெள்ளான் குடிமை (பெ) (= வெள்ளான் வெட்டி) (1008) *இவ்வூரும் அகப்படுத்தி வந்த இறையும் எச்சோறும் வெட்டியும் வெள்ளான் குடிமையும் ஸ்ரீ யாரூர் தேவர்க்கு கடவ பொலியூட்டுக் கடமையும் உட்பட* (SII,xvii,614.)

வெள்ளான் சுடுகாடு (பெ) வெள்ளாளர் பயன்படுத்தும் சுடுகாடு (1014) *இவ்வூர் ஈழச் சேரியும் பறைச் சேரியும் வெள்ளான் சுடுகாடும் பறைச் சுடுகாடும்* (SII,ii,5.)

வெள்ளான் வகை (பெ) இயல்பான வரி செலுத்தும் நிலம்; வெள்ளாள நிலக் கிழாரின் நிலம் (1008) *இம் முஞ்சி குடி வெள்ளான் வகைக் கீழெல்லையான நிலத்துக்குக் கிழக்கும்* (EI,xxii,34.); (1014) *கருப்பூர்த் தேவதானமும் சாலாபோகமும் நீக்கி வெள்ளான் வகையாய் வருகின்ற நிலம்* (SII,ii,5.)

வெள்ளான் வரிசை நிலம் (பெ) (= வெள்ளான்வகை); இயல்பான அரசுவரி செலுத்தவேண்டிய நிலம் (1269) *திருமஞ்சநப் புறமாக விட்ட வெள்ளான் வரிசை நில காணி அரைக்காணி* (SII,v,634.)

வெள்ளான் வெட்டி (பெ) நிலக்கிழாரான வெள்ளாளர் செலுத்தும் கட்டாய உழைப்பு (1118) *வெள்ளான் வெட்டி கொள்ள விட்டு*

வெள்ளானும்....மடக்கிலே குரம்படைந்து வெட்டிக் கொள்ளக்கடவோம் (SII,vi,57.)

வெள்ளானை (பெ) வெள்ளை யானை (சின்னம்) (1800) *பள்ளர் பறையர் இருவகைப் பேருக்கும் வெள்ளானை வாழை கரும்பு உண்டில்லையென்று விபகாரம் நடக்குமிடத்தில்* (IPS,929.)

வெள்ளி (பெ) வெள்ளி உலோகம் (894) *பிரதிபதியார் குடுத்த வெள்ளிக் கெண்டி* (SII,v,1368.)

வெள்ளி (பெ) வெள்ளிக்கிழமை (915) *நாள் மூலம் கிழமை வெள்ளி* (SII,viii,636.)

வெள்ளிக் காம்பு (பெ) வெள்ளிப்பிடி (1248) *திருமாந்தளிர் பொந் இருபதிந் கழைஞ்சு மாற்று எட்டரை இது கோத்த வெள்ளிக் காம்பு ஐங்கழைஞ்சு* (SII,vii,147.)

வெள்ளிக் கோல் (பெ) நிறுக்கும் கோல் வகை (991) *கூட்டு நிறை இக்கோயிலில் வெள்ளிக் கோலால் இரண்டாயிரத்து நாற்பத்தெண் பலம்* (SII,xiii,144.)

வெள்ளி கல் (பெ) ஒரு நிறுக்கும் கல் (1015) *வெள்ளி கல்லால் நாற்பதிந் பலச் சற்கரையும் கொண்டு* (SII,vii,139.)

வெள்ளித் தாலம் (பெ) வெள்ளித் தட்டு (946) *வெள்ளித் தால மிரண்டு வட்டகையிரண்டு* (TAS,i,p.293-94.)

வெள்ளித் தாலி (பெ) வெள்ளியால் செய்த தாயத்து (1150) *வெள்ளித்தாலி செய்வித்துப் பதிநெண்பூமி எறிவீரந் தாநமென்று* (AVNM,9,p.33-34)

வெள்ளி நிலை விளக்கு (பெ) வெள்ளியினாற் செய்த குத்து விளக்கு (924) *இந்நாளாலிவனேய் வைத்த வெள்ளி நிலை விளக் கொன்று* (SII,iv,519.)

வெள்ளி ப்ரபெ (பெ) வெள்ளித் திருவாசி (970) *வெள்ளி ப்ரபெயில் ஏறின நாயகமான மாணிக்கம்* (TDI,i,8.)

வெள்ளிமலை (பெ) கைலாயமலை (1179) *வெள்ளிமலை நாதன் மிக விரும்ப* (EC,x,Ct.83.)

வெள்ளிலை (பெ) வெற்றிலை (878) *வெள்ளிலை ஈரடுக்கு அடைக்காய் பத்து நூறு* (SII,xiv,13.)

வெள்ளேற்றான் (பெ) சிவன் (500) *நிலனும் புன்செஇ வெள்ளேற்றான் மங்கலமென்...* (AVNM,1,p.67-69)

வெள்ளை (பெ) வெள்ளி நாணயம் (?) (1426) *அதிகாரிகள் சடித்தம் பண்ணி விகாரி வருஷ வரைக்கு வெள்ளை எண்ணூறு பொன்னாகச் செலுத்திக் கொண்டு வந்தார்கள்* (SII,xvii,562.)

வெள்ளைச்சாவி (பெ) வெள்ளத்தால் பயிர் சாவியாகப்போதல் (1294) *இப்படிக்கு வெள்ளைச்சாவி வறச்சாவி......ரிசைக்கு ......பயிர்பாத்து கொள்ளக் கடவோமாகவும்* (IPS,406.)

வெள்ளைத் திருப்போனகம் (பெ) வெண்பொங்கல் (1544) *நாள் வழி அமுது செய்தருளும் வெள்ளைத் திருபோனகம்* (TDI,v,24.)

வெள்ளை பணம் (பெ) வெள்ளி நாணயம் (1420) *ஸ்ரீ பண்டாரத்தில் ஒடுக்கின வெள்ளை பணம் 200 இப் பணம் இருநூறும்* (SII,viii,258.)

வெள்ளை வாசி (பெ) பதர் நெல்லை ஈடுகட்டக் கொடுக்கும் நெல் (1222) *நீக்கின்ற நெல்லுக்கு வெள்ளைவாசி ஏற்றி முதலான நெலில் மூன்றத் தொன்று* (SII,vii,1028.)

வெள்ளை வாரி (பெ) ஒரு வரி (1168) *நாற்பாற் கெல்லை உள்பட நிலம் வெள்ளைவாரி பண்ணிக்கக்கூலி தறியிறை* (SII,vi,456.)

வெளி (பெ) பரந்த விளையாட்டுக் களம் (1217) *செண்டுவெளிக்குத் தெற்கும்* (TMPL,p.502-05.)

வெளிச்செண்ணை (பெ) தேங்காய் எண்ணெய் (1510) *பணம் ஒன்றுக்கு வெளிச்செண்ணை இருநாழி ஆக எண்ணை எண்ணாழி ஆக* (TAS,vi,83.)

வெளிப்பட்டது (வி) தோன்றியது (921) *அரனவிர் சடைமுடி வீற்றிருந்த வெண்டிங்கள் முதலாக வெளிப் பட்டது* (SII,iii,206 (a).)

வெளிப்படுத்தோன் (பெ) தெரியப்படுத்தியவன் (1012) *விஞ்ஞாபனத்தால் மிக வெளிப்படுத்தோன்* (SII,vii,863.)

வெளியநெலு (பெ) நெல் வகை (1015) *இநெலு பய்யனசு வெளிய நெலு ஐம்பதின் கலமும் கோடையில் கரியநெலு ஐம்பதின் கலமும்* (EC,ix,Cp.129.)

வெளிற்பட்டு (வி) தோன்றி (771) *பாண்ட்யாதிப ராஜன் வெளிற்பட்டு விடுகதிரவிரொளி விலக* (EI,xvii,16.)

வெளுங்கு மரம் (பெ) மர வகை (1018) *இவ்வெல்லையில் நின்ற வெளுங்கு மரமே யுற்று வடக்கின்னும்* (SII,iii,205.)

வெளுத்த (வி) வெண்மையான (1000) *கெணவி விடை குறையாதே ஒரு வெளுத்த மாலை* (TAS,ii,p.173-207.)

வெளுத்தரி (பெ) பொரித்த எள் (1403) *இல்லளவினால் உணக்கல் வெளுத்தரி நானாழிக்குப் பதிநாழிக்காலால் ஆண்டு ஒன்றின்னு நெல்லு* (TAS,vi,21.)

வெற்பு (பெ) மலை (800) *பொற்புக வெற்புப் புகுதி கண்டாய்* (EI,xiii,10.)

வெற்ற (வி) வெற்றியையுடைய (785) *வெற்றத் தானை வேண் மன்னனை* (IA,xxii,p,p.57-75; PNDCP,p.55-62.)

வெற்றாள் (பெ) வேலை யில்லாத ஆள் (?) (1300) *ஆளுக்குக் குறுணி நெல்லும் வெற்றாளுட்ப்படப் பெற வைத்துக் குடுத்தோம்* (SII,vii,129.)

வெற்றிலை (பெ) தாம்பூல இலை (873) *வெற் றிலைக் கூடையால் ஒரோ பற்றும் குடையால்* (SII,iii,90.)

வெறி (பெ) நறுமணம் (1028) *வெறிமலர் தீர்த்தத் தெறிபுனற் கங்கையும்* (SII,v,464.)

வெறுங்காய் (பெ) பாக்கு (941) *வெறுங்காய் பதினாயிரத்துக்கு கழஞ்சும்* (SII,viii,529.)

வெறுமிலை (பெ) வெற்றிலை (1001) *அடைக்காயமுதுக்கு மூன்று ஸந்திக்குமாக வெறுமிலைக்கு னெலு னாழியும்* (SII,xvii,222.)

வெறுவிலை (பெ) வெற்றிலை (941) *வெறுவிலைப் பற்று முன்னூற்றுக்கு* (SII,vii,529.)

வென் கண்ட (வி) வென்ற (1069) *ஆஹவமல்லனை ஐம்மடி வென் கண்ட ராஜசேகர ராஜாச்ரய* (EI,xxv,25.)

வென்ற (வி) வெற்றி பெற்ற (800) *காரைவாய்ப் போர் வென்ற வேன் மாறன்* (EI,xiii,10.)

வென்றடு (வி) கொல்லுகின்ற (1066) *சாமந்தரை வென்றடு தூசி முன்விட்டு தந்றுணை* (SII,v,976.)

வென்றி (பெ) வெற்றி (833) *வென்றிகளேய் பல விளைத்த* (SII,xiv,44.)

வென்றி முரைசம் (பெ) வெற்றிப் பறை (1148) *பார்த்திவர் யிறைஞ்ச வென்றி முரைசம் முன்றில் முழங்கப் பொற்சிலை முறிய* (TAS,vii,p.54-55.)

வென்று (வி) வெற்றி பெற்று (771) *நெல்வேலிச் செரு வென்று* (EI,xvii,6.)

வெனுற (வி) முதுகு காட்டி (1056) *சளுக்கி குலகுல குலைந்து தலைமயிர் விரித்து வெனுற நெளித்து பின்னுற நோக்கி* (SII,iii,29.)

வே

வேகம் (பெ) விரைவு (905) *வேக வெள் விடை ஊர்தி* (TASSI,1962-65,p.31; PNDCP,p.95-115.)

வேகரி (பெ) கட்டாய உழைப்பாகச் செய்யும் ஒரு வரி (1446) *வேண்டுகோள் வினியோகமும்வெட்டி முட்டி வேகரி ஆளமஞ்சி பச்சை மாக்கலம்* (IPS,789.)

வேகாரி (பெ) (= வேகரி) (1428) *அதிகாரி சேனைபோவர் அங்கசாலைகள் விட்டி வேகாரி* (ARE,1937,113)

வேகை (வி) எரிகை (1255) *கொழுவுருவினவிடத்து ... ... ஒன்றாயிரம் செருந்தியும் ஆக இவர்கள் கை வேகையில்* (IPS,601.)

வேங்கை (பெ) புலி (800) *வாள் வரி வேங்கை* (IPS,236.)

வேட்கோவர் (பெ) குயவர் (916) *இவ்வூர் வேட்கோவர் வீர....நாயனும்* (EI,xxiii,45 (c).)

வேட்டத்துறை (பெ) ஒரு வரி (1523) *குசரும் வேட்டத்துறையும் நிலையாளமஞ்சியும் எப்பேற்பட்ட அனைத்தாயங்களும்* (AVNM,4,p.41-42)

வேட்டம் (பெ) கொலை (1296) *சீறிமிக வேட்டந் திரி களிற்று* (SII,iv,228.)

வேட்டாடும் (வி) வேண்டிப்பெறும் (1150) *உண்ணக்கடவ பணமும் வேட்டாடுந் திருவிளக்கெண்ணயும் விட்டோம்* (AVNM,9,p.37-39)

வேட்டார் (பெ) மணம் புரிந்தவர் (988) *இவகள் உடப்பிறந்த பெண்களை வேட்டாரினவுமாக* (EI,xxi,27.)

வேட்டான் (வி) திருமணம் செய்து கொண்டவன் (921) *தன்னோடுடப் பிறந்தாளை வேட்டானையு உடப்பிறந்தாள்* (ARASI,1904-05,p.131f.)

வேட்டு (வி) விரும்பி (1056) *நாளினுள் இகல் வேட்டெழுந்து* (SII,iii,29.)

வேட்டுவர் (பெ) ஓர் இனம் (600) *கடைவெண்மலைக்கோட்டு வேட்டுவரு* (AVNM,10,p.6); (1100) *பெரியவிலங்கிப் ஊராளியாகிய சுண்டை வேட்டுவன் சிலம்பன் சிறியர் ஆன* (AVNM,7,p.33)

வேட்டை (பெ) சுவாமி வேட்டையாடுவதாகக் கொண்டாடப் படுந் திருவிழா (910) *திருவேட்டை நான்று பெருந் திருமிர்துக்குமாக* (SII,xix,57.)

வேட்டைக்காறர்க் கடை (பெ) வேட்டையாடிய பொருள்களை விற்கும் கடை (1300) *சேனைக் கடை வேட்டைக்காறர்க் கடையும் குளவடை* (SII,viii,245.)

வேட்டைப்பேறு (பெ) காடுகளைக் காவல் செய்ய விட்ட நிலம் (1257) *இவ்வூர் காவற்காணி உடைய திருத்தெங்கூற் போயனுக்கு வேட்டைப் பேறாக இந்நிலம் ஒரு மாக்கும்* (SII,xvii,576.)

வேடர் (பெ) வேட்டைத்தொழில் செய்பவர்கள் (1103) *வநமடித்துக்கொடு போம் வேடர் செய்த பாபமும் அநுபவிப்போம்* (EC,x,Sd.91.)

வேடர் கும்மரி (பெ) மலைக்காட்டைத் தீமூட்டி அழித்து வேடர் செய்யும் பயிர்த்தொழில் (1073) *வேடர் கும்மரி விளைந்த நிலம் ஆயிரத்தைஞ்னூறு குழிக் கொரு புடவை* (EC,x,Mb.49 (a).)

வேண்ட (வி) விரும்பிக் கேட்க (905) *அத்புதமெனும் ஊழிக்கள் அவிர் சடை முடி அரன் வேண்ட* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வேண்டா (வி) கூடாது (958) *நீர் பாச்சாமே வேண்டா வென்றானை அன்றாழ் கோவேய் ஐங்கழைஞ்சு பொன் கொள்வதாகவும்* (SII,vii,999.)

வேண்டாது (வி) கூடாது (1000) *பண்டில்லாதது கொள்ள வேண்டாதென் றொழிஞ்சார்* (SII,v,784.)

வேண்டிக் கொள்ள (வி) பரிந்து கேட்டுக் கொள்ள (919) *திருவமிர்துக்காக வைப்பேன் என்று ஸபையோமை வேண்டிக் கொள்ள* (SII,viii,927.)

வேண்டின (வி) விரும்பிய (920) *பந்மாஹேச்வரர் வேண்டின* (SII,vii,927.)

வேண்டினார் (பெ) விரும்பியவர்கள் (768) *இதற்கு நல்லது வேண்டினார்* (SII,xii,34.)

வேண்டு (வி) விரும்பு (867) *தான் வேண்டு கோவினுக்கு புக்க* (SII,xiv,12 (a).)

வேண்டுகோள் (பெ) தண்டம் செலுத்தல் (?) (890) *வேண்டுகோள் செய்தும் இ விளக்கெரிப்பதாக ஒட்டிக்குடுத்தோம்* (SII,v,624.)

வேண்டுகோள் (பெ) ஒரு வரி (1168) *நீக்கி நின்ற நிலத்துக்கு மரமஞ்சாடி பாடி காவலும் வேண்டுகோளும்* (SII,vii,890.)

வேண்டுகோள் வரி (பெ) ஒரு வரி (1329) *பாண்டி வரி பலவரி காணிக்கை வேண்டுகோள் வரி மலைஅமஞ்சியும்* (SII, iv, 287)

வேண்டும் (வி) தேவையான (691) *இத்தளிக்கு வேண்டுந் தேவ கரும நவகருமஞ் செய்வதற்கும்* (SII,i,151;EI,xvii,22.)

வேண்டும் (வி) விரும்பும் (923) *தான் வேண்டுமிடத்தேய் 25 பொன் தண்டமிடப் பெறுவாராகவும்* (SII,vi,317.)

வேண்டுவது (பெ) தேவைப்படுவது (866) *விழாவினுக்கு வேண்டுவதுக்குமாக* (TAS,i,p.1-14.)

வேண்டுவன (பெ) வேண்டப்படும் பொருள்கள் (877) *ஸபை$_4$யோமுக்கேய் வேண்டுவன ஆதனமையயில்* (SII,vi,290.)

வேண்டுவார் (பெ) விரும்புவார் (900) *இப்பள்ளியுடை அடிகள் அறம் வேண்டுவாரிது பிழையாமை செய்க* (SII,xiv,128.)

வேத நீதி (பெ) வேதங்கள் சொல்லுமொழுக்கம் (1067) *மதகொடு செய்து வரப்பாகாச் செங்கோல் செலுத்தி வேத நீதியை விளக்கி* (SII,iii,20.)

வேத பாராயணம் (பெ) வேதம் ஓதுதல் (1433) *திருவேங்கடமுடையான் திருமுன்பே வேத பாராயணம் விண்ணப்பஞ் செய்து* (TDI,i,199,200.)

வேதனை (பெ) தொல்லை (1237) *எங்களைப் பலவேதினை செய்தடத்து வேதனைக்காற்றாது* (IPS,309.)

வேத$_3$ம் (பெ) வேத நூல்கள் (800) *பாராயண மார்க்$_3$க$_3$ம் வேத$_3$ம் வல்லனாய்* (SII,vi,355.)

வேத$_3$ம் வல்லார் (பெ) வேதப் பயிற்சியில் திறமையுடையவர்கள் (894) *வேத$_3$ம் வல்லார் உண்பதாகவும்* (SII,iii,1.)

வேத$_3$வ்ருத்தி (பெ) வேதம் ஓதுபவர் வாழ்க்கைச் செலவுக்கு விட்ட நிலம் (1273) *நாயன்மார்க்கு பங்கு இரண்டும் வேத$_3$வ்ருத்தி பங்கு இரண்டும் வைத்தியவ்ருத்தி பங்கு ஒன்றும்* (SII,vii,145.)

வேத$_3$ வித்$_3$வாங்கள் (பெ) வேதம் அறிந்த பண்டிதர்கள் (1104) *ப்ரயாகை$_3$யிலும் ஸ்ரீ வாணாரஸியிலும் வேத$_3$வித்$_3$வாந்களாய் இரு...யிர் ப்ராஹ்மணர்க்கு* (EC,xiv,Yl.146.)

வேத$_3$ வேதா$_3$ந்தங்கள் (பெ) வேதங்களும் வேதாந்த சாஸ்திரங்களும் (905) *வேத$_3$ வேதா$_3$ந்தங்களும் விவித$_4$சா$_0$ஸ்த்ரமும் தன்னோடு பிறரோதி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வேதா$_3$ந்தங்கள் (பெ) பிராமணம், உபநிடதம் போன்ற வேதச்சார்பு நூல்கள் (905) *வேத$_3$வேதா$_3$ந்தங்களும் விவித$_4$சா$_0$ஸ்த்ரமும்* (TASSI,1962-65,p.1.31.)

வேதி (பெ) வேதம் ஓதுபவன் (1024) *இருக்கு வேதி ஒருவநுக்கும்* (EC,x,Kl.112 (a).)

வேதிகை (பெ) மேடை (1024) *ச$_4$யந வேதிகை மேலட்ட* (EC,x,Kl.112 (a).)

வேதினை (பெ) தொல்லை (1001) *வந்த படையிலார் எங்களை நீரிலும் வெயிலிலும் இட்டுப் பல வேதினையுஞ் செய்ய* (SII,v,723.)

வேதினை (பெ) கட்டாய உழைப்பில் ஒரு வகை (888) *வெட்டிய் வேதினையும் செந்நீர் வெட்டியும்* (SII,v,544.)

வேந்தர் (பெ) அரசர்கள் (800) *மண்டோற்ற வேந்தர் மறம்* (EI,xiii,10.)

வேந்தர் வேந்தன் (பெ) பேரரசன் (771) *விலங்கல் வேல் பொறி வேந்தர் வேந்தன்* (EI,xvii,16.)

வேந்தன் (பெ) அரசன் (700) *தொண்டையந்தார் வேந்தன்* (EI,xii,27;SII,xii,10,11.)

வேந்து (பெ) அரசர் (905) *திறனுடைய் வேந்தழித்தும்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

வேபணம் (பெ) ஒரு வரி (1312) *சிங்கப் பிரான் பட்டர் காணித்துகை மாப்பணம் மனைப்பணம் வேபணம் பாட்டம் எப்பேற்பட்டனவும் தவிர* (SII,viii,251.)

வேம்பு (பெ) வேப்ப மரம் (1018) *தொழுகூர் வட வெல்லையில் நின்ற திருவாலங்காடன் என்னும் வேம்பேயுற்று* (SII,iii,205.)

வேய் (பெ) மூங்கில் (753) *புதுக்கு திரைக் குற்றது வேயியும் புல்லும்* (SII,ii,73.)

வேய்ந்து (வி) கூரையமைத்து (1120) *தென்னதிகை வீரட்டஞ் செம்பொனால் வேய்ந்திமையோர் பொன்னுலகை* (CHEN,xxii,p.893-96.)

வேய் நெல் (பெ) ஒரு வரி (1316) *இத்தேசத்து கீழியக்கம் கொள்ளும் ஒட்டிற் கடமையும் உவ்வியும் வேய் நெல்லும் அழகெருதும்* (TAS,iv,p.91.)

வேயதி காணம் (பெ) வரி வகை (991) *இந்நில சுட்டி இறையு எச்சோறு வெட்டி வேயதி காணம் எப்போர்பட்டது* (SII,iii,27.)

வேர் பறிந்து (வி) அடியோடு பறித்து (1068) *செங்கீரையர் குலம் வேர் பறிந்தோடி மேல் கடல் விழ* (EI,xxi,38.)

வேல் (பெ) வேல் ஆயுதம் (771) *கதிர் வேற்றென்னன்* (EI,xvii,16.)

வேல் கொடியான் (பெ) வெற்றிக் கொடியையுடையவன் (800) *வேல் கொடியான் வாண் மாறன்* (EI,xiii,10.)

வேலி (பெ) வயலின் பெயர் (1000) *சிறுகல் வேலி இருபத்தைங்கலமுமாய்க் கொள்ளும் பாட்ட நெல்* (TAS,ii,p.173-207.)

வேலி (பெ) அரண் (771) *வில் வேலிக் கடற்றானையை* (EI,xvii,16.)

வேலி (பெ) முள் கழி முதலியவற்றாலான சுற்றுத் தடுப்பு (911) *மூன்று மாநிலமும் வேலியடைத்து நீரிறைத்து* (SII,viii,640.)

வேலி (பெ) ஊரின் ஒரு பொதுப்பெயர் (954) *கீழ் பிடாகை காப்பு வேலியும் நீர்நிலமும் புன்செயும்* (SII,xiii,92.)

வேலிக்காசு (பெ) ஒரு வேலிக்கு ஒரு காசு என்று செலுத்தும் வரி (1069) *தறிப்புடவையும் வேலிக்காசும் தண்டலில் கடமையும்* (SII,vii,4.)

வேலி காலச்சு (பெ) ஒரு வேலி நிலத்துக்குக் கால் அச்சு என்று செலுத்தும் வரி (1248) *இறையிலி தேவதானமாக சில்வரி பெருவரி பொன் வரி வேலி காலச்சு மற்றும் எப்பேர்பட்டினவுந் தவிர்த்து* (IPS,342.)

வேலிப்பயறு (பெ) ஒரு வரி (1260) *சாலியத்தறி உள்ளிட்ட தறிக்கமை வேலிப்பயறு [தா]ப்படி அரிசி தூணி* (SII,xii,202.)

வேலி யொழுக்கி (வி) சுற்று வேலி அமைத்து (1008) *திருநந்தவாநத்துக்குப் பணிசெய்து நீரிறைத்துக் களை வெட்டி வேலி யொழுக்கி* (SII,xvii,234.)

வேலை (பெ) கடல் (771) *வேலை சூழ்ந்த வியலிடத்து* (EI,xvii,15.)

வேழ் குலம் (பெ) சளுக்கிய அரச குலம் (1044) *வில்லவந் வநவந் வேழ் குலச் சளுக்கியர்* (SII,v,633.)

வேழம் (பெ) யானை (700) *குலை வேழங் கைப்படுத்த கோ* (AVNM,7,p.13-14)

வேழாபுரம் (பெ) (=வேளாபுரம்) (1150) *பதினெட்டுபட்டினமும் முப்பத்திரண்டு வேழாபுரமும் அறுபத்துநான்கு கடிகைத்தாவளமும்* (AVNM,9,p.33-34)

வேள் (பெ) குறுநில அரசன் (785) *வெற்றத்தானை வேண் மன்னனை* (IA,xxii,p.57-75; PNDCP,p.55-62.)

வேள்கோ (பெ) குயவன் (929) *வேள் கோவக்கு நாடுரி அடுவாகு முந்நாழி* (SII,xvii,377,IPS,67.)

வேள்வி சாலை (பெ) யாக சாலை (771) *வேள்வி சாலை முன்பு நின்று* (EI,xvii,16.)

வேளம் (பெ) யானை (800) *தென்னன் வேளங் களப்பட்டது* (SII,xiii,10.)

வேளம் (பெ) சோழர் பணியாட்கள் தொகுதி (950) *கிழானடிகள் வேளத்துப் பெண்டாட்டி காரி சாத்தி* (SII,xvii,530.)

வேளாட்டி (பெ) வேளாளப் பெண் (985) *விளத்தூர் நாட்டு சிறு கடம்பூரிருக்கும் வேளாட்டி அரிசு காடி* (SII,xiii,56.)

வேளாபுரம் (பெ) ஐஞ்னூற்றுவர் வாணிகர் இருந்து வியாபாரம் செய்யும் துறைமுக ஊர் (1050) *பதினெட்டுப்பட்டணமும் முப்பத்திரண்டு வேளாபுரமும்* (AVNM,2,p.6-8)

வேளை (பெ) (= வேளைக்காறன்) (1200) *இவற்கு உடன் வேளையாகக் சாவக் கடவேநாகவும்* (CHEN,iii,p.255.)

வேளைக்காறர் (பெ) சோழர் படையில் ஒரு பிரிவு (1007) *ஸ்ரீ ராஜராஜ தேவர் படை ஜநநாதத் தெரிஞ்ச வலங்கை வேளைக்காறரில்* (SII,xvii,238.)

வேற்படை (பெ) வேல் வீரர் கொண்ட படை (1069) *வடி கொள் வேற்படை வீரராஜேந்த்ரன்* (EI,xxv,25.)

வேற்றானை (பெ) (= வேற்படை) (771) *ஒல்காதவேலி உடன் காத்த பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி என்னும்* (EI,xvii,16.)

வேறாக்கி (வி) துண்டித்து (1068) *முகத்தொடு மூக்கு வேறாக்கிபகைத் தெதிர்* (EI,xxi,38.)

வேறு தண்டு (பெ) ஒரு வரி (1274) *ஆளமஞ்சி தேவையும் தைச்சும் கொல்லும் குசமும் தோலொட்டும் வேறுதண்டும் செக்கிறை மனையிறை பாட்டம் உள்ளிட்டனவும்* (SII,viii,79.)

வேறு பிறிந்து (வி) தனியாகி (1260) *திருச்சிற்றம்பல மங்கல மென்னுந் திருநாமத்தால் வேறு பிறிந்து தேவதான இறையிலி ஆகவும்* (SII,viii,56.)

வேறோர் (பெ) மற்றொரு (934) *பாட்டமிடாக்கால் வேறோர்க் கண்காணி காட்டுமவர்கட் கிட்ட* (TAS,viii,p.43-45;EI,xxviii,37.)

வேனில் (பெ) கோடை காலம் (1279) *வேனிற் தென்றல்* (SII,viii,69)

வேஷ்டி (பெ) மேலாடை (1546) *னாச்சிமாருக்குச் சேலைக்கும் வேஷ்டி உத்தரியம் ரேகை பொன் 4* (TDI,v,71.)

வை

வை (வி) ஏற்பாடு செய் (993) *ஒரு நொந்தாவிளக்கு வையெந்ந வைத்த சாவாமூவாப் பேராடு தொண்ணூறு* (SII,v,670.)

வை (உ) கூர்மை (862) *ஆர் கெழுவை வேல் அவனிபசேகரன்* (SII,xiv,45.)

வைக்க (வி) கொடுக்க (1014) *பண்டாரத்து வைக்கக் கடவ காசு ஐஞ்சு* (SII,ii,25.)

வைக்க (வி) பதவியில் இருக்க (992) *சாந்தி செய்யுமவரளை மூவாண்டில் மிக வைக்கப் பெறார் ஊராளரும் பரடையாரும்* (TAS,ii,p.34-37.)

வைக்கை (பெ) உண்டாக்குகை (1300) *வைத்த வகரம் வைக்கையால் இவ்வகரத்திலிருந்த ப்$_3$ராஹ்மணர்* (SII,viii,213.)

வைக்கோல் (பெ) நெற்பயிரின் உலர்ந்த தாள் (1144) *திருக்கோசாலைச் சுரவிகளுக்கு வைக்கோல் கொண்டிடுகைக்கும் இறுப்பதாக* (SII,xvii,597.)

வைக (வி) தங்க (1134) *குரம்பை நிழலிடிம்பையின்றி யினிது வைக* (SII,v,645.)

வைகாசி விசாகம் (பெ) வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்தில் வரும் திருவிழா (978) *மார்கழித் திருவாதிரைக்கும் வைகாசி விசாகத்துக்கும் திருவிழாவிசம்* (SII,iii,151-151a.)

வைகாசி உத்திரம் (பெ) வைகாசி மாதத்து உத்தர நட்சத்திரத்தில் நடக்கும் விழா (985) *திருவுத்ஸவம் வைகாசி உத்திரத்துக்கு வந்த சிவயோகி$_3$களுக்கும்* (SII,viii,240.)

வைகாலை (பெ) விடியற் காலம் (1000) *நாழியரிக்கு வித்து முப்பதேழு பறையரை வைகாலைக்கு புலிக் கூட்டு* (TAS,ii,p.173-207.)

வைகா$_2$நஸ க்$_3$ரந்த$_2$ம் (பெ) வைஷ்ணவ ஆகமங்களுள் ஒன்று (1200) *சைய் வாக$_3$மங்களிலும் பஞ்சராத்ர ஸம்ஹிதைகளிலும் வைகா$_2$நஸ க்$_3$ரந்த$_2$ங்களிலும்* (SII,xvii,603.)

வைகா$_2$நஸன் (பெ) வைகாநச ஆகமத்தின் படி ஒழுகுபவன் (789) *அருவா நாட்டின் அருவாகூர் ருஷி வைகா$_2$நஸன் சங்கர நாராயண பட்டன் பங்கொன்றும்* (SII,ii,99.)

வைகா$_2$னஸர் (பெ) வைகானஸ ஆகமத்தை பின்பற்றும் பிராமணர் (1009) *பாப்பன ஊர்களிலும் வைகா$_2$னஸர் ஊர்களிலும் ஸவண்ணர் ஊர்களிலும்* (SII,iii,9.)

வைகுண்ட பதம் (பெ) திருமால் உலகம் (1636) *இந்தத் தன்மத்தை உண்டெனப் பண்ணினவர்கள் வைகுண்டபதம் அடைய* (IPS,761.)

வைகுந்தம் (பெ) திருமால் உலகம் (1008) *ஆயிரங் குராற்பசுத் தானம் செய்த பலன் பெறுவான் இ வைகுந்தம் பெறுவான்* (EC,ix,Cp.132.)

வைச்ச (வி) வைத்த (770) *ப்₃ரஹ்ம புரித்தேவர்க்கு வைச்ச திருவிளக்கு* (SII,xiv,18.)

வைச்சளவு (வி) ஏற்படுத்திய (950) *ஸ்ரீ மண்டபத்துள் வைச்சளவு கொடுக்கக் கடவியர்* (TAS,iii,p.189-91.)

வைச்சு (வி) வைத்து (939) *அறுதிங்களொரு புடவை வைச்சு* (SII,iii,106.)

வைஜ்யந் (பெ) வைத்தியன் (774) *வைஜ்யந் பாண்டி அமிர்த மங்கலவரையன்* (SII,xiv,3;EI,xxxvi,15b.)

வைஜ்ய பரிசாரகன் (பெ) மருத்துவன் (1257) *நிலத்தில் உதயங்கொண்டு வைஜ்ய பரிசாரகற்க்கும் ஔஷத₄த்துக்கு* (EI,xxiv,12 (b),p.91.)

வைஜ்ய போ₄க₃ம் (பெ) மருத்துவருக்குக் கொடுக்கப்பட்ட மானிய நிலம் (880) *வைஜ்ய போ₄க₃மும் பாப்பான் பட்டியும்* (SII,xii,102.)

வைடூ₃ர்ய்யம் (பெ) நவமணிகளுள் ஒன்று (1014) *மரகதம் ஒன்றும் வைடூ₃ர்ய்யம் ஒன்றும் மாணிக்கம் ஒன்றும் உட்பட* (SII,ii,93.)

வைத்த (வி) ஏற்பாடு செய்த (731) *பொலியூட்டு வைத்த பரிசாவது* (SII,viii,331.)

வைத்தது (வி) கொடுத்தது (862) *கைய்வழி வைத்தது* (SII,vii,925;EI,xxxii,10.)

வைத்தமை (வி) கொடுத்தமை (955) *இதே₃வர்க்குச் சண்டை கொட்டுவதாக வைத்தமையில்* (SII,viii,739.)

வைத்தன (வி) கொடுக்கப்பட்டன (879) *சபை₄யார் கைய்யில் வைத்தன* (SII,xiv,15.)

வைத்தாள் (வி) கொடுத்தாள் (886) *முப்பத்தறு கழஞ்சு ...ஒரு விருத்தூணர் உண்பதாக வைத்தாள்* (SII,xii,104.)

வைத்திடுக (வி) கொடுத்திடுக (919) *திருவமிர்துக்கு வைத்திடுக வென்று* (SII,viii,641.)

வைத்திய வ்ருத்தி (பெ) வைத்தியம் செய்பவரின் வாழ்க்கைச் செலவுக்கு கொடுத்த நிலம் (1273) *தே₃வ வ்ருத்தி பங்கு இரண்டும் வைத்தியவ்ருத்தி பங்கு ஒன்றும்* (SII,vii,145.)

வைத்து (வி) ஒற்றி (550) *திருமுகங் கண்டு தொழுது தலைக்கு வைத்து* (TASSI,1958-59,p.41-83;PLCP,p.26-32.)

வைத்துக் கொள்ள (வி) அமர்த்திக் கொள்ள (866) *வெள்ளாட்டிகளை மடத்தில் வைத்துக் கொள்ளப் பெறார்* (TAS,i,p.1-14.)

வைத்தேன் (வி) கொடுத்தேன் (988) *இவற்றுளே யைவர் சிவயோகி₃களுண்ணவும் வைத்தேன்* (EI,xxi,27.)

வைத்தேன் (வி) கொடுத்தேன் (879) *இப்பாடகம் வைத்தேன்* (SII,vi,294.)

வைத்தோம் (வி) கொடுத்தோம் (800) *புக்கார்க்கு மூன்று யாண்டவதி₄யாக வைத்தோம் வஸ்து* (SII,vi,355.)

வைத்₃ய குலம் (பெ) மருத்துவ குலம் (785) *வண் களந்தை வைத்₃யகுலம் விளங்க* (IA,xxii,p.57-75.)

வைத்₃ய போகம் (பெ) மருத்துவருக்கு இறையிலியாக விட்ட நிலம் (1015) *வைத்₃ய போகத்துக்கு பாந்த வாய்க்காலுக்குத் தெக்கும்* (SII,vii,139.)

வைத்₃யர் (பெ) மருத்துவர் (789) *வைத்₃யப் பங்கிரண்டும்* (SII,ii,99.)

வைத்₄ருதி (பெ) 27 யோகங்களில் ஒன்று (1376) *வெள்ளிக் கிழமையும் வைத்₄ருதி யோக₃மும் பெற்ற புணர் பூசத்து நாள்* (SII,vii,470.)

வைப்பது (பெ) கொடுப்பது (885) *மணிக்கிராமமும் இலக்கிச்சு வைப்பதாகவும்* (TAS,ii,p.80-82.)

வைப்பிச்சான் (பெ) சேர்த்தான் (994) *பேர்வாங்கி இப்பட்டம் தேவ பண்டாரத்தே வைப்பிச்சான்* (SII,v,692.)

வைப்பித்து (வி) செய்வித்து (831) *கரைசெய்து மடை வைய்ப்பித்து* (SII,xiv,43)

வைப்பித்தோம் (வி) ஏற்பாடு செய்தோம் (846) *இப்பொன்னுக்குக் கொண்டு குத்துத் திருவிளக்கு வைப்பித்தோம்* (SII,xii,43.)

வைப்பிது (வி) கொடுப்பது (997) *பதக்கு நெல்லு ஆண்டுதோறும் வைப்பிதாகவும்* (SII,vii,809.)

வைப்பு (பெ) ஏற்பாடு (1270) *திருவாசலுக்கு நானாதேசிகளோம் வைத்த வைப்பு* (SII,viii,405.)

வைப்பு (பெ) முதல் (1550) *இராமப்ப நாயக்கர் சந்தி பூசைக்கு நாள் ஒன்றுக்கு வைப்புக்கு அமுதுபடி குறுணி இருநாழி* (TAS,ix,p.22-24.)

வைப்பு (பெ) கொடுத்தல் (897) *தராநிலை விளக்கு ஒன்று இவ் வைப்பில் வல்லவரையர்* (SII,xiii,323.)

வைப்புக்கால் வெட்டு (பெ) நிலத்தின் வகை (?) (1486) *இறங்கல் முது தரிசு தோப்பு வைப்புக்கால் வெட்டு உட்பட்ட வகை நிலம்* (TAS,ix,p.25-26.)

வைபள்ளி வஸ்து (பெ) சமண மற்றும் புத்த கோயிலுக்குரிய இடம் (765) *பத்தூர்ச் சாற்றும் வைபள்ளி வஸ்துவும் அறப்புற தண்டமும்* (EI,xxxvi,20.)

வைம்மின் (வி) இடுங்கள் (805) *உலகம் மறிய வைம்மினேய்* (SII,xii,40;EI,xi,15.)

வைக்க (வி) ஏற்படுத்த (868) *திருநொந்தா விளக்கும் அமுதுபடிக்கும் உடையம் வைக்க* (SII,xii,58.)

வைகறை ஆட்டம் (பெ) காலை நீராட்டு (984) *தேவதானம் இ நாட்டு எயின் ... ... மற்றும் வைகறை ஆட்டத்துக்கு* (SII,xix,344.)

வைசாக விசாகம் (பெ) வைகாசி மாதம் விசாக நட்சத்திரத்து நாள் (985) *இவனேய் வைசாக விசாகத்து ....செய்ய வைச்ச பொன் 10 கழஞ்சு* (SII,xix,464.)

வைப்பன் (வி) கொடுப்பேன் (1001) *அடைவு குத்தினபடி நானேய் இந்நிலன் விலைக்கொண்டு காசு வைப்பன் என்ன* (SII,v,723.)

வைய்யம் (பெ) உலக மக்கள் (985) *மரகதமோர் ஐம்பதஞ்சால் வைய்யம் மெனும் எணிற் சேர் வயிரம் மோர் நால்பத்தெட்டால்* (SII,xiii,86.)

வைய்யாதேய் (வி) இடாமல் (1020) *தேவர் பண்டாரத்து வைய்யாதேய்* (SII,v,449.)

வைய்யாவி (பெ) வைகாசி மாதம் (1000) *வைய்யாவி வியாகந் தோறும்* (TAS,ii,p.173-207.)

வைய்யாளி (பெ) குதிரை யேற்றம் (1536) *எட்டாந் திருனாளில் குதிரை நம்பிரானில் வைய்யாளி எழுந்தருளும் போது* (TDI,iv,69.)

வையாகரணம் (பெ) வடமொழி இலக்கணம் (866) *ப்ரவேசகஞ் செய்யும் பரிசு வையாகரண மீமாய* (TAS,i,p.1-14.)

வையாசி (பெ) வைகாசி மாதம் (884) *வையாசி முதலாக இரண்டு திங்கள்* (SII,vi,375.)

வையிஷ்ண வாரியம் (= ஸ்ரீவையிஷ்ண வாரியம்)

வையிஷ்ணவியார் (பெ) ஏழு கன்னிமாரில் ஒரு தெய்வம் (1072) *வையிஷ்ணவியார்க்கு ஸந்தி ஒன்றுக்கு திருவமுதரிசி நாநாழியும் கறியமுது இரண்டும்* (EC,x,Kl.108.)

வைராகிகள் (பெ) துறவிகள் (1300) *இப்படிக்கு வைராகிகளும் சமையக் கணக்கனும்* (AVNM,6,p.36-40)

வைச்$_0$ய வாணிகந் (பெ) வாணிகரில் ஒரு பிரிவு (1200) *பட்டணத்து வைச்$_0$ய வாணிகந் காசதிரம் தேசாந்தரிக்கு சாலுக்கும்* (EC,ix,An.54.)

வைச்$_0$வ தே$_3$வம் (பெ) ஒரு சிறு தெய்வம் (1000) *அங்க தேவதைக்கு உரி விஷ்வக்ஸேநநு உழக்கு வைச்$_0$வதே$_3$வத்திநு உழக்கு கொள்க* (TAS,ii,p.173-207.)

வைசே$_0$ஷிகம் (பெ) கணாதர் உண்டாக்கிய தத்துவ நூல் (985) *வைசே$_0$ஷிகமும் வக்கா$_2$ணிக்க வல்லார்* (SII,vi,322.)

வைஷ்ணவர் (பெ) வைஷ்ணவ சமயத்தவர் (883) *நானூற்றொருவரும் வைஷ்ணவரும்* (SII,viii,633.)

றொ

றொக்கம் (பெ) பணம் (1514) *இந்த க்ராமத்தை நோக்கி வரும் றொக்க தா$_4$ந்யமுள்ளதும் ஸ்ரீ ப$_4$ண்டாரத்துக்குச் செலுத்திக்கொண்டு* (SII,iv,284.)

னா

னாச்சியார் திருமொழி சிறப்பு (பெ) ஆண்டாள் திருவாய்மொழி ஓதுவதற்காக ஏற்பட்ட சிறப்புக் கட்டளை (1516) *மார்கழி மாஸத்தில் பிற்பத்தில் னாலாந்திருனாள் னாச்சியார் திருமொழி சிறப்பில் அமுது செய்தருளும் திருக்கணாமடை திருவோலக்கம்* (TDI,iii,114.)

$ச்_0$

$ச்_0ரத்_3தா_4மந்த_3ர்$ (பெ) அக்கறை கொண்டவர் (887) *ச்ரத்₃தா₄மந்தரே தர்ம்மாஸனத்து நிசதம் இருபத்து* (SII,vii,421.)

$ச்_0ராவணி$ (பெ) ஆவணம் (869) *விலைய் ச்ராவணியால் விற்று கொண்டு* (EI,xi,22a.)

$ச்_0ராவணை$ (பெ) பங்கு நிலம்: அதற்கான ஆவணம் (804) *ச்ராவணை புகுவார் முழு சிராவணை அன்றி கால் சிராவணையும் அரைச்சிராவணையும்* (SII,xiv,37.)

$ச்_0ராவணை$ புகுவார் (வி) பங்குக்கு உரியவ ராவார் (804) *விலையாலும் ப்ரதிக்₃ரஹத்தாலும் ஸ்திதத₄நத்தாலும் ச்ராவணை புகுவார் முழுசிராவணையன்றி கால் சிராவணை யும் அரைச் சிராவணையும்* (SII,xiv,37.)

ஸ்ரீ (பெ) திரு (745) *ஸ்ரீ நந்திப் போத்தரைசர்க்கு* (TAMIZ,1970,p.122.)

ஸ்ரீ (பெ) செல்வம் (892) *இது காத்தானுக்கு ஆயுதும் ஸ்ரீயும் த₄ர்மமும் மாயிடுக* (SII,iv,531.)

ஸ்ரீ கண்டம் (பெ) கைப்பிடி (957) *வாள் ஸ்ரீ கண்டம் கோத்த செமுனை வாள்* (SII,xix,3.)

ஸ்ரீ கண்டம் (பெ) சந்தனக் கட்டை (985) *அகிலில் உபத்திரம் சந்தணம் ஸ்ரீ கண்டமும் கர்ப்பூரம் பீ₄மஸேணண்...* (SII,xiii,35.)

ஸ்ரீகரண நாயகம் (பெ) (=திணைக்கள நாயகம்) (1176) *மூவேந்தயரும் புரவுவரி ஸ்ரீ கரணநாயகம் கானூர் கிழவனும்* (m.SII,xvii,585.)

ஸ்ரீ கார்ய்யக் கண்காணி நாயகம் (பெ) அரசு சார்பான தலைமைக் கோயில் நிர்வாகி (1014) *உடையார் ஸ்ரீ ராஜ ராஜீச்₂வரம் உடையார்க்கு ஸ்ரீ கார்ய்யக் கண்காணி நாயகஞ் செய்கின்ற* (SII,ii,36.)

ஸ்ரீகார்ய்யம் ஆராய்வார் (பெ) அரசு சார்பாக கோயில் மேற்பார்வை செய்பவர் (957) *அவ்வவ் ஆண்டு ஸ்ரீகார்ய்யம் ஆராய்வாரேய்* (SII,xix,23.)

ஸ்ரீகார்யம் (பெ) கோயில் நிர்வாகம் (967) *இத் திருப்போத்துடைய தே₃வர்க்கு ஸ்ரீகார்யம் செய்கின்ற தேவன் கிரிணன் சொல்ல கல்மேல் எழுத்து வெட்டின படி* (SII,xiv,95;EI,xxv,6.)

ஸ்ரீ காரியக் கணக்கு (பெ) கோயில் கணக்கு எழுதுபவன் (1227) *இப்படிக் கிவை ஸ்ரீ காரியக் கணக்கு வேளான் பொதுவனான* (CHEN,xii,p.499-500.)

ஸ்ரீகோயில் வாரியம் (பெ) கோயில் நிர்வாகம் மேற்கொள்ளும் ஒரு குழு (895) *ஸ்ரீ கோயில் வாரியப் பெருமக்களும்* (SII,xiii,307.)

ஸ்ரீ கோயில் வாரியம் (வி) (978) *ஸ்ரீ கோயில் வாரியம் செய்யும் ப₃ராஹ்மணர் இருவற்கு* (SII,iii,151-151a.)

ஸ்ரீ கோயில் உடையார்கள் (பெ) கோயில் பூசாரிகள் (1013) *திருமெழுக்கும் ஸ்ரீ கோயில் உடையார்களேய் செய்யக் கடவார்களாகவும்* (IPS,90.)

ஸ்ரீதநம் (பெ) பெண்கள் தந்தையிடம் பெறும் சொத்து (910) *பிராமணி நீலன் நாகை ஸ்ரீதநம் பெற்ற நிலத்தை* (SII,viii,617.)

ஸ்ரீ துல்யம் (பெ) ஒப்பக் கையெழுத்து (1147) *சந்ததிப்ரவேச₂மே அடுக்களக் காணியாக ஸ்ரீ துல்யம் சார்த்தி பட்டயம் கொடுக்கயில்* (TAS,viii,p.7-8.)

ஸ்ரீ தூபம் (பெ) நறும்புகை (887) *ஸ்ரீ தூபம் சிதாரிலுக்கு வேண்டும் உறுப்பு* (SII,xiv,16 (a).)

ஸ்ரீ நிகேதநஂ (பெ) திருவாழ் மார்பன் (905) *செந்தமிழ்க் கோன் ஸ்ரீ நிகேதநந் ஸ்ரீ பராந்தக மஹாராஜந்* (TASSI,1962-p.1-31; PNDCP,p.95-115.)

ஸ்ரீ பண்டாரம் (பெ) கோயில் கருவூலம் (910) *எண் கழஞ்சும் வாங்கி ஸ்ரீ பண்டாரம் புக்கமயால்* (SII,xix,67.)

ஸ்ரீ பத$_3$ங்கள் (பெ) திருவடிகள் (988) *இதர்ம்மம் ரக்ஷிக்கின்ற மஹாஸபையார் ஸ்ரீ பத$_3$ங்கள் என் தலைமேலன* (EI,xxi,27.)

ஸ்ரீ பலி (பெ) விக்கிரகங்களுக்கு நாள்தோறும் வைக்கும் உணவு (850) *ஸ்ரீ பலி கொட்டுவார்க்கு நெல்லு ஐந்நூற்றுக் காடியும்* (SII,iii,43.)

ஸ்ரீ பு$_3$ண்டா$_3$ரம் (பெ) கோயில் கருவூலப் பணி (1014) *ஸ்ரீ புண்டாரஞ் செய்ய ப்ராஹ்மணரையும்* (SII,ii,69.)

ஸ்ரீ பாத$_3$புஷ்பம் (பெ) சுவாமி பாதத்துக்குப் படைக்கும் பூ (1014) *சைத்யாச்ரயனை எறிந்து எழுந்தருளி வந்து ஸ்ரீ பாத$_3$புஷ்பமாக அட்டித் திருவடி தொழுதன* (SII,ii,1.)

ஸ்ரீ பா$_3$ஹூவலயம் (பெ) தோளணி (1014) *ஸ்ரீ பாஹூவலயம் ஒன்றில்த் தடவிக் கட்டின பளிங்கு மூன்றும்* (SII,ii,38.)

ஸ்ரீ பொ$_3$லி (பெ) (=ஸ்ரீ பலி) (992) *ஸ்ரீ பொ$_3$லிக்கு பொ$_3$லி அரிசி நாழியால்* (SII,xix,357.)

ஸ்ரீ மத் (பெ) மரியாதைச் சொல் (794) *ஸ்ரீ மத் கோமாறஞ்சடைய* (SII,xiv,32.)

ஸ்ரீமதா$_3$ஹம் (பெ) ஆத்ம சாந்தி (966) *பிரதி கண்டன் சுந்தர சோழனை எங்களாச்சர் வழுத்துப்பட்ட அவர் ஸ்ரீமதா$_3$ஹத்துக்குச் சிறுபாடு* (SII,iii,212b.)

ஸ்ரீ மஹாவ்ரதி (பெ) மஹாவிரத சைவ மதத்தைச் சார்ந்த அடியார் (958) *ஸ்ரீ மஹாவ்ரதிகள் மடத்திலுக்கு விளக்கு* (SII,xiv,88.)

ஸ்ரீ மாயேச்$_2$வர கங்காணி (பெ) சிவன் அடியார்களை மேற்பார்ப்பவன் (1132) *இத்தேவர்கன்மிகளும் ஸ்ரீ மாயேச்$_2$வர கங்காணி செய்வார்களும்* (SII,xiv,230.)

ஸ்ரீ முக்குடைக் கல் (பெ) சமணர் கோயில் நிலத்தின் எல்லைக்கல் (1500) *நான் கெல்லையிலும் ஸ்ரீ முக்குடைக்கல்லும் நாட்டிக் கொள்க* (IPS,658.)

ஸ்ரீ முக (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1153) *ஸ்ரீ முக ஸம்வத்ஸரத்து* (EC,x,Kl.100 (a).)

ஸ்ரீ முடி (பெ) கோயில் மூர்த்தியின் கிரீடம் (995) *அபிஷேகஞ் செய்கின்ற ஸ்ரீமுடி 1 பொன் 149 கழஞ்சு* (SII,iv,542.)

ஸ்ரீ வடவீரநாரண பெருமக்கள் (பெ) சபை வாரியங்களுள் ஒன்று (959) *கழநி வாரிய பெருமக்களும் ஸ்ரீ வடவீர நாரண பெருமக்களும் பஞ்சவார வாரியப் பெருமக்களும்* (SII,iii,156.)

ஸ்ரீவையிஷ்ண வாரியம் (பெ) திருமால் கோயிலில் தலைமை நிர்வாகி (1088) *ஸ்ரீ காரியஞ் செய்கின்ற அதிகாரிகள் நிஷதராஜர் ஏவல்படியும் ஸ்ரீவையிஷ்ணவாரியம் திருவெழுதிநாடு தா$_3$ஸரும்* (SII,iii,70.)

ஸ்ரீவைஷ்ணவர் (பெ) வைஷ்ணவர்களில் ஒரு பிரிவு (910) *இது ஸ்ரீவைஷ்ணவர் ரக்ஷை* (SII,xix,67.)

ஸ்ரீச்$_0$ சந்த$_3$ம் (பெ) ஒரு நகை (1010) *நூற்றிருபத்திரு கழஞ்சால் செய்த ஸ்ரீச்$_0$ சந்த$_3$ம் ஒன்றினால் முகம் ஒன்றும் தகடு பந்நிரண்டும்* (SII,viii,234.)

ஸ்ரீ ஆஜ்ஞை (பெ) அரசனாணை (919) *ஸ்ரீ முகம் அருளிச் செய்து வரக் காட்ட ஸ்ரீ ஆஜ்ஞையினால்* (ARASI,1904-05,p.313f.)

ச்$_0$ருதி (பெ) வேதங்கள் (771) *ச்$_0$ருதிமார்க்$_3$கம் பிழையாத* (EI,xvii,16.)

ச்$_0$ரோத்ரிய குத்தகை (பெ) வேதம் வல்ல பிராமணருக்கு விட்ட குத்தகை நிலம் (1433) *திருமலையில் தானத்தாரில் முதலியார் திருக்கலிகன்றி தாதர் அழகனார் பேரிலே ச்$_0$ரோத்ரிய குத்தகைக் குடுத்து இருக்கும் வைகுந்தவனநாட்டில்* (TDI,i,201.)

ச்$_0$லோகம் (பெ) வடமொழிச் செய்யுள் (950) *மஹாபி$_2$ஷேக மகிழ்ந்த நாளில் மேதகு சா$_3$ஸை*

ச்ரலோகம் விதி கிடந்தவா செய்ய வல்ல (TASSI,1962-65,p.32-52.)

ச$_0$

ச$_0$க்தி பீடா$_2$லயம் (பெ) தேவி கோயில் (1462) *ஸஹஸ்ரலிங்கா$_2$லயமும் ச$_0$க்தி பீடா$_2$லயமும் செய்து* (TAS,i,p.99-102.)

ச$_0$க்திமுக$_2$ம் (பெ) கடவுள் இசைவு குறித்த ஓலை (1300) *னாயனார் திருமுகமும் மாஹேச்$_0$வர ச$_0$க்திமுக$_2$மும் கம்பாண்டார் ஓலையும்* (SII,viii,2.)

ச$_0$கண்டில (பெ) கோத்திரங்களுள் ஒன்று (765) *ச$_0$கண்டில கோ$_3$த்ரத்தாவத்தம்ப சூத்திரத்து* (EI,xxxvi,20.)

ச$_0$கர யாண்டு (பெ) கி.பி. 78லிலிருந்து கணக்கிடப்படும் கால வரிசை (953) *ஸ்வஸ்தி ஸ்ரீ ச$_0$கர யாண்டு .....மூபத்தைஞ்சாவது* (EI,vii,26 (ii).)

ச$_0$க வர்ஷம் (பெ) (= ச$_0$கர யாண்டு) (949) *ஸ்வஸ்தி ஸ்ரீ யாண்டு இரண்டு ச$_0$கவர்ஷம் எண்ணூற்றெழுபத்தொன்று* (EI,vii,26 (c).)

ச$_0$காப்$_3$த்$_3$அம் (பெ) (= ச$_0$கர யாண்டு) (1539) *ப்ரதிவிராஜ்யம் பண்ணி அருளாநின்ற ச$_0$காப்$_3$த்$_3$அம் 1460ந் மேல் செல்லாநின்ற* (TDI,iv,122.)

ச$_0$ண்டில (பெ) ஒரு கோத்திரம் (765) *ச$_0$ண்டில கோ$_3$த்ரத் தாவத்தம்ப சூத்திரத்து* (EI,xxxvi,20.)

ச$_0$த்ரு நாசம் (பெ) பகைவரழிதல் (1264) *புகழும் புத்ரலாபமும் ச$_0$த்ரு நாசமும்* (SII,vi,439.)

ச$_0$த்ரு கேசரி (பெ) பகைவர்களுக்குச் சிங்கம் போன்றவன் (800) *ஸ்ரீ மாறன் ஸ்ரீ ச$_0$த்ரு கேசரி* (EI,xiii,10.)

ச$_0$த்ரு விஜயம் (பெ) பகைவரை வெற்றி காணல் (1113) *ஸூர்ய வம்ச$_0$த்து இக்ஷ்வாகுவின் வழிவந்த அநேக ச$_0$த்ரு விஜயம் பண்ணி அநுராதபுரம் புக்கு* (EI,xviii,38;SII,iv,1396;EZ,ii,p.242-55.)

ச$_0$ப்$_3$த$_3$ம் (பெ) வாத்திய ஒலி (937) *பஞ்சமா ச$_0$ப்$_3$த$_3$த்துக்கு ஒன்பது ஆள் கொட்டுவதற்கு* (SII,viii,624.)

ச$_0$யந வேதிகை (பெ) படுக்கை மேடை (1024) *சாமுண்டாகலசம் ஒன்றும் நவகும்பங்களும் இருக்கும் ச$_0$யந வேதிகை மேலட்ட நெல் பதக்கு அரிசி* (EI,x,Kl.112 (a).)

ச$_0$ரண்யன் (பெ) அடைக்கலந் தருவோன் (815) *ச$_0$ரண்யனா யுலகளித்து* (SII,iii,206b.)

ச$_0$ரீரம் (பெ) ஆள் (894) *ச$_0$ரீரம் ப்ரதி ஆழாக்கு நெய்யும்* (SII,iii,1.)

ச$_0$ரீர அவஸானம் (பெ) மரணம் (1339) *இந்த சீயனும் ஜீயர் ச$_0$ரீர அவஸானத்தளவும் தாம் வைத்த* (TDI,i,104.)

சா$_0$

சா$_0$கை (பெ) (மரக்) கிளை (1014) *வேறாகச் செய்து தைத்த மஹா சா$_0$கை ஒன்பதும் இவற்றுள் அனு சா$_0$கை நாற்பத்திரண்டும்* (SII,ii,50.)

சா$_0$ண்டில்ய (பெ) ஒரு கோத்திரம் (905) *ஈண்டிய பெரும் புகழேடுறு சா$_0$ண்டில்ய கோ$_3$த்திரத்து* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சா$_0$ந்தி (பெ) அமைதிப் படுத்தச் செய்யும் சடங்கு (1024) *க்$_3$ரஹசா$_0$ந்திக்கும் அற்புத சா$_0$ந்திக்கும்* (EC,x,Kl.112 (a).)

சா$_0$ந்திகரம் (பெ) எல்லா மங்கலங்களையும் கொடுப்பது (955) *இக்$_3$ராமத்துக்கு ஸர்வ்வ சா$_0$ந்திகரமாய் .....இருந்தருளி* (SII,viii,654.)

சா$_0$பம் (பெ) பெரியோர் சபித்துக் கூறும் மொழி (905) *ஈச$_0$னது சா$_0$பமெய்தி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சா$_0$ர்வரி (பெ) அறுபது ஆண்டுகளில் ஒன்று (1220) *சா$_0$ர்வரி ஸம்வற்ஸரத்து* (EC,xv,Hn.186.)

சா$_0$லா போ$_4$க$_3$ம் (பெ) அறச்சாலைக்காக விட்ட நிலம் (959) *சா$_0$லாபோ$_4$க$_3$மாக விற்று குடுத்த நிலத்துகு மேற்கு* (SII,iii,200.)

சா$_0$லாவத (பெ) ஒரு கோத்திரம் (789) *சா$_0$லாவத கோத்ரத்து ஆவத்தம்ப சூத்திரத்து* (SII,ii,99.)

சா$_0$லிவாஹந சக வருஷம் (பெ) (=ச$_0$கர யாண்டு) (1518) *ஸ்வஸ்திஸ்ரீ ஜயாத்$_4$யுத$_4$ய சா$_0$லிவாஹந சக வருஷம் 1440ந் மேல் செல்லா நின்ற* (TDI,iii,81.)

சா$_0$ச்$_0$வதம் (பெ) நிரந்தரம் (913) *ஆசந்த்ர காலத்துக்கும் சா$_0$ச்$_0$வதமாக* (SII,xii,95.)

சா$_0$ச்$_0$வதியம் (பெ) என்றும் உள்ளது (961) *இந்நிலம் சா$_0$ச்$_0$வதியமாக இறை இழுச்சி சி$_0$லாலேகை$_2$ செய்து குடுத்தோம்* (SII,xiii,109.)

சா$_0$ஸ்த்ரம் (பெ) அறநூல் (785) *எஞ்சாத சா$_0$ஸ்த்ராங்களை* (IA,xxii,p.57-75;palce,p.55.62.)

சா$_0$ஸ்தா (பெ) ஐயனார் (1002) *மாஹாசா$_0$ஸ்தா வின் கோயிலே இருந்து பணித்த எழுத்து* (SII,iii,6.)

சா$_0$ஸநப$_3$த்$_3$த$_4$ச் சதுர்வேதி$_3$ ப$_4$ட்ட[ர்] (பெ) சாஸனத்தின் மூலம் நிலக்கொடை பெற்ற வேத ப்ராமணர் (985) *ஸ்ரீ வீரநாராயணச் சதுர்வெதி$_3$மங்கலத்து சா$_0$ஸநப$_3$த்$_3$த$_4$ச் சதுர்வேதி$_3$ ப$_4$ட்டப் பரும்படி ஸகஸ்ரதாநப் பெருமக்களுக்கு* (SII,xiii,146.)

சா$_0$ஸநப$_3$ந்த$_4$ம் (பெ) அரசன் சாசனத்தின் மூலம் கொடுக்கப்பட்டது (960) *ஸோமாஜியார் சா$_0$ஸநப$_3$ந்த$_4$ம்ப் பெற்ற பங்கு* (SII,v,574.)

சா$_0$ஸநம் (பெ) பட்டயம்,எழுத்து சான்று (905) *புரவெழுதிப் பிடி சூழ்ந்து நன்றாகிய சா$_0$ஸநம்* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சி$_0$

சி$_0$க$_2$ரம் (பெ) மலையுச்சி (1014) *இந்த சி$_0$க$_2$ராங்களோடுங் கூடச் செய்த* (SII,ii,50.)

சி$_0$கு$_3$ரவர் (பெ) குரு: மடாதிபதி (867) *காத்த சி$_0$கு$_3$ரவரையும் எறிந்து* (SII,xii,56;SII,xiv,5.)

சி$_0$ரஸ் (பெ) தலை (869) *ரக்ஷிப்பார் ஸ்ரீ பாத$_3$ம் என் சி$_0$ரஸ்ஸின் மேலின* (SII,xiv,5.)

சி$_0$ரோவர்த்தனை (பெ) தலைமுடி (1014) *ஸ்ரீ பாத$_3$பீட$_2$த்துக்கு மேல் சி$_0$ரோ வர்த்தனையளவுஞ் செல்ல ஒரு விரலே* (SII,ii,29.)

சி$_0$லா லேகை (பெ) கல்வெட்டு (894) *இடரிசு ஒட்டி சி$_0$லா லேகை செய்து குடுத்தோம்* (SII,iii,1.)

சி$_0$வசோகிகள் (பெ) சிவனடியார்கள் (1034) *நித்தம் இருவர் சி$_0$வசோகிகளுக்கு குத்தல் அரிசி* (SII,xvii,326.)

சி$_0$வஜோகி$_3$ (பெ) சிவனடியார் (938) *சி$_0$வஜோகி$_3$கள் சந்த்$_3$ராதித்தவல் உண்பதாக* (SII,v,540.)

சி$_0$வத$_4$ந்மி (பெ) சிவப் பிராமணர் (978) *ஸ்ரீ உத்தமசீலிச்சதுர்வேதி மங்கலத்து திருப்பாற்று துறை சி$_0$வத$_4$ந்மி காச்$_0$யபந் சேந்தன் மூர்த்தியும்* (SII,xix,199.)

சி$_0$வத$_4$ர்ம்மம் (பெ) உபபுராணம் பதினெட்டனுள் ஒன்று (1034) *சி$_0$வத$_4$ர்ம்மம் வாசிப்பான் ஒருவனுக்கும்* (SII,xiv,160.)

சி$_0$வத்$_3$ரோஹம் (பெ) சிவபெருமானுக்குத் எதிராதல் (1168) *பித்ருவதமும் மாத்ருவதமும் ப்$_3$ராஹமணிவதமும் சி$_0$வத்$_3$ரோஹமும் பண்ணிநார்* (SII,vi,456.)

சி$_0$வப்$_3$ராஹமணர் (பெ) சிவாலயங்களிற் பூசை செய்யும் பிராமணர் (850) *சி$_0$வப்$_3$ராஹமணர்க்கு நெல்லு ஐஞ்னூற்றுக் காடியும்* (SII,iii,43.)

சி$_0$வயோகி$_3$ (பெ) சிவனடியார் (871) *வேதம் வல்ல சி$_0$வயோகி$_3$கள்* (SII,viii,581.)

சி$_0$வராத்ரி (பெ) மாசி மாதத்தில் அமாவாசைக்கு முந்திய நாள் விழா (1553) *திருமல்லீச்$_0$வரமுடைய நயினார்க்கு சி$_0$வராத்ரிக்கு ஸாயம் பூசையும் நடத்தி* (TAS,vii,p.32.)

சி$_0$வலிங்கா$_3$ர்ச்சநம் (பெ) சிவலிங்க பூசை (1125) *திருவோத்தூருடையாரைக் கும்பிட்டு சி$_0$வ லிங்கா$_3$ர்ச்சநம் பண்ணியிருக்கும் தபஸ்ஸி* (SII,vii,96.)

சி$_0$வலோக ப்ராப்தி (பெ) சிவலோகஞ் சேரும் தகுதி (919) *ரக்ஷிப்பார் சி$_0$வலோக ப்ராப்தி பெறுவான்* (SII,viii,641.)

சி$_0$வன் (பெ) திருப்பதியம் ஓதும் சிவத் தொண்டர் பட்டம் (1014) *பட்டாலகன் சீருடைக் கழலான பூர்வ்வ சி$_0$வனுக்கு* (SII,ii,65.)

சி$_0$வச்$_0$ராத்$_3$த$_4$ம் (பெ) சிவனுக்கு உணவும் நீரும் அளித்தல் (991) *இவ்வாண்டே உடையார் சி$_0$வச்$_0$ராத்$_3$த$_4$ஞ் செய்ய நிலவிலையாக குடுத்த* (SII,xiii,144.)

சி$_0$ஷ்ட பரிபாலநம் (பெ) நல்லோரைக் காப்பாற்றுகை (1155) *தொம்பத்தறு ஸாஸிரமும் துஷ்ட நிக்$_3$ரஹமும் சி$_0$ஷ்ட பரிபாலநமும் பண்ணி* (EC,x,Bp.9.)

சி$_0$ஷ்டர் (பெ) நல்லவர் (919) *நம் க்$_3$ராமத்து து$_3$ஷ்டர் கொண்டு சி$_0$ஷ்டர் வர்த்$_3$தி$_4$த் திருவாராக* (ARASI,1904-05,p.131f.)

சி$_0$ஷ்யந் (பெ) சீடன் (867) *இவர் சி$_0$ஷ்யந் ஒரு ப்$_3$ராஹ்மணன்* (SII,xii,56.)

சீ$_0$

சீ$_0$லாசாரன் (பெ) ஒழுக்கமுள்ளவன் (905) *சொல் வித்தகந் தனதாக்கி சு$_0$த்த சீ$_0$லாசாரனாகி* (TASSI,1962-65,p.1-31; PNDCP,p.95-115.)

சு$_0$

சு$_0$க்ரவாரம் (பெ) வெள்ளிக்கிழமை (1504) *பூர்வபக்ஷத்து த$_3$சமியும் சு$_0$க்ரவாரமும் பெற்ற* (TDI,iii,2.)

சு$_0$த்$_3$த$_4$ந் (பெ) தூயவன் (921) *கணக்குக் காட்டி சு$_0$த்$_3$த$_4$ந் ஆச்சிதின் பின்னன்றி* (ARASI,1904-05,p.131f.)

சு$_0$ப$_3$ஸ்பரிய புண்யாஹங்கள் (பெ) நல்ல காரியங்கள் (955) *அந்யோந்ய ஸஹாவாஸமும் சு$_0$ப$_3$ஸ்பரிய புண்யாஹங்களும் செய்யாதோமாகவும்* (SII,xiii,110.)

சு$_0$னக (பெ) ஒரு கோத்திரம் (789) *சு$_0$னக கோத்ரத்து ஆவத்தம்ப சூத்திரத்து* (SII,ii,99.)

சூ$_0$

சூ$_0$லம் (பெ) சூலாயுதம் (1014) *நாலு ஸ்ரீ ஹஸ்தத்திலும் பிடிச்சருளிந சூ$_0$லமும் கபாலமும்* (SII,ii,1.)

சே$_0$

சே$_0$ஷம் (பெ) பிரசாதம் (1468) *திருத்துவாதசியில் விடும் வெள்ளைத் திருவோலக்கம் இரண்டுக்கும் மடசே$_0$ஷம் நாலுக்கும்* (TDI,ii,31.)

சை$_0$

சை$_0$வன் (பெ) சிவனை வழிபடுவோன் (985) *திருப்பராய்த்துறைப் பட்டுடையான் சை$_0$வன் காச்$_0$யபந்* (SII,viii,563.)

சை$_0$வ ஸித்தாந்தம் (பெ) சைவ சமய அறநூல் (1259) *ஸ்வாமிதேவர் சி$_0$ஷ்யர் சை$_0$வஸித்தாந்த*

வ்யாக்₄யாதாக்கள் தற்புருஷ சிவாசார்யற்கு (SII,iv,422.)

சை₀வாசார்ய்யங் (பெ) சைவ சமய குரு (1014) *உடையார் ஸ்ரீ ராஜ ராஜீச்₀வரம் உடையார் சை₀வாசார்ய்யந் பவன பிடாரன்* (SII,ii,90.)

சை₀வாசார்யம் (பெ) சைவசமயத் தலைமை (1171) *ஆதிசண்டே₃ச்₀வர தேவர் அருளால் இக்காலத்தில் சமைந்த சை₀வாசார்ய்யம் த₄ர்ம்மசிவ பண்டி₃தனும்* (SII,viii,218.)

சௌ₀

சௌ₀ச₀ம் (பெ) தூய்மை (919) *அத்த₂சௌ₀ச₀மும் ஆத்ம சௌ₀ச₀மும் உடையாராய்* (ARASI,1904-05,p.131f.)

ஸ்

ஸ்த்ரி (பெ) பெண் (896) *புருஷரையும் ஸ்த்ரிகளைக் கொண்டு போந்து* (SII,xiii,312.)

